# உயிரால் உனையே எழுதுகிறேன்...

**வெண்ணிலா சந்திரா**



நூற் குறிப்பு

- நூல் தலைப்பு — உயிரால் உனையே எழுதுகிறேன்...
- ஆசிரியர் — வெண்ணிலா சந்திரா
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — டிசம்பர், 2014
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 460
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 210.00**

வெளியிடுவோர் **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு — மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.

அச்சிட்டோர்: — கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.

# உயிரால் உனையே எழுதுகிறேன்...

## முன்னுரை

எனதன்பு வாசகர்களே...!

தொடர்ந்து நீங்கள் கொடுத்த ஆதரவின் பேரிலும், அன்பு இல்லம் பதிப்பகத்தாரின் உதவியோடும், எனது நான்காவது கதையுடன் மீண்டும் உங்கள் கையில் புத்தகமாக நான்.

'என் கண்ணாள்...' என்ற பெயரில் இணையத்தில் வெளியாகியுள்ள இக்கதை இப்போது "உயிரால் உனையே எழுதுகிறேன்..." எனப் பெயர் மாற்றப்பட்டு புத்தகமாக வெளிவந்துள்ளது.

இன்றைய நாளில், நாட்டின் பல கிராமங்கள் பல்வேறு காரணங்களுக்காக நகரமாக மாறிக் கொண்டிருக்கும் அவலத்தைக் காதல் கலந்த பொழுதுபோக்குக் கதையாக எழுதியிருக்கிறேன்.

கதையைப் பற்றிய உங்களின் மேலான கருத்துக் களையும், விமர்சனங்களையும் vennila.chandra@yahoo.in என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்காதீர்கள்.

அன்புடன்,

**- வெண்ணிலா சந்திரா**

# உயிரால் உனையே எழுதுகிறேன்...

## 1

மாலை நேரம்
மழை தூறும் காலம்
என் ஜன்னல் ஓரம் நிற்கிறேன்
நீயும் நானும் ஒரு போர்வைக்குள்ளே
சிறு மேகம் போலே மிதக்கிறேன்...

"நிகழும் மங்களகரமான ஜய வருடம், ஆவணி முப்பதாம் நாள், திங்கள் கிழமை காலை 6.15 மணி முதல் 7.15 வரையில் உள்ள திருவோண நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுப முஹூர்த்த வேளையில் கோவை பீளமேட்டைச் சேர்ந்த திருவாளர் வெங்கடராமன் - கோகிலாவின் சிரேஷ்ட புத்திரன் மகிழன் வெங்கடராமன்

அவர்களுக்கும், பல்லடத்தைச் சேர்ந்த திருவாளர் சிவசுப்ரமணியன் - ரஞ்சிதம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி அபூர்வா அவர்களுக்கும்...

மற்றும் அதே நாளில் அதே சுப முஹூர்த்த வேளையில் திருவாளர் சிவசுப்ரமணி - ரஞ்சிதம் அவர்களின் மூத்த புதல்வன் இளங்கோ அவர்களுக்கும், திருவாளர் வெங்கடராமன் - கோகிலாவின் புதல்வியும், மகிழன் வெங்கடராமின் தங்கையுமான திருநிறை செல்வி மதுரிமா அவர்களுக்கும் இருவீட்டுப் பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது..." என ஐயர் தன் கணீர்க் குரலில் அவ்வீடு அதிர திருமணப் பத்திரிகை வாசிக்க...

அதற்கடுத்து, "ரெண்டு வீட்டுப் பெரியவர்களும் எழுந்து நின்னு தட்டு மாத்திக்கோங்கோ..." என அவரின் குரலில், வெங்கடராமன் தம்பதியரும், சிவசுப்ரமணி தம்பதியினரும் தாம்பூலத் தட்டை மாற்றிக் கொண்டு, தங்கள் மக்களின் திருமணத்தை உறுதி செய்து கொண்டனர்.

அதற்கடுத்து தங்கள் மக்களின் கைகளில் நிச்சய மோதிரத்தைக் கொடுத்துத் தங்கள் இணைக்கு அணிவிக்கச் சொல்ல, இளங்கோ கையில் மோதிரத்துடன் தன் எதிரில் வெட்கத்தில் தலை குனிந்து நிற்கும் மதுரிமா வின் கைகளை மென்மையாகப் பற்றி மோதிரத்தை அணிவிக்க...

அவன் கைப்பட்ட சிலிர்ப்பிலிருந்து விடுபட முடியாமல் படபடத்த இதயத்துடன், நடுங்கிய விரல்களைக் கொண்டு இளங்கோவின் கைகளில் மோதிரத்தை அணிவித்து விட்டு, மேலும் சிவந்த முகத்தைத் தரை நோக்கிக் குனிந்து மறைக்க முயற்சி செய்து, அதில் தோற்றாள் மதுரிமா.



அவளின் நிலையறிந்து இளங்கோவின் கரங்கள் அவளை அள்ளி அணைக்க எடுத்த ஆவலைச் சபை நாகரிகம் கருதித் தன்னுள்ளே அடக்கி வைக்க அவன் பெரும் பாடுபட்டான்.

மெல்ல அவளருகில் குனிந்து, "உன் அழகில் என்னைக் கொல்ற ரீமா... எனக்கு அப்படியே உன்னை... ஹ்ம்ம்.... இன்னும் ஆறு மாசம்தான். அதுவரை என்னைக் கட்டுப்படுத்திக்கிறேன்..." என மெதுவான குரலில் உரைத்துப் பெருமூச்சை வெளியிட, மதுரிமா மெல்லிய சிரிப்பை வெளியிட்டாள்.

தங்கையின் முகத்தில் தெரிந்த பூரிப்பு மகிழனின் முகத்தில் மகிழ்ச்சியை வரவைக்க... தன் எதிரில் ஒருவித அலட்சியத்துடனும், முகத்தில் ஒரு திமிருடனும் நின்றிருந்த இளங்கோவின் தங்கை அபூர்வாவின் கைகளை வேண்டாவெறுப்பாகப் பற்றிய மகிழன் தன்னிடம் கொடுத்த மோதிரத்தை அவளின் விரல்களில் தன் விரல் தீண்டாமல் அணிவிக்க...

அபூர்வாவோ, மதுரிமாவின் முகத்திலிருந்த வெட்கத்திற்கு முற்றிலும் எதிராக மகிழனின் கைகளை இறுகப் பற்றி மோதிரத்தை அணிவித்து, அவனின் கைகளில் தன் இதழை ஒற்றி எடுக்க... அங்கிருந்த

உறவினர்கள் கூட்டத்தில் இருந்த சின்னஞ்சிறுசுகள்... "ஓ..."வென்ற குரலில் கிண்டலைத் துவங்க... மகிழன் அவளின் இந்தச் செயலில் உறுத்து விழிக்க... அவளோ கண்களில் காதலுக்குப் பதில் கர்வத்துடன் அவனை விழுங்கும் பார்வை பார்த்து வைக்க... மகிழன் அவளிட மிருந்து தன் கையைப் பிரித்தெடுத்தான்.

தங்கள் மக்களின் இந்தத் திருமண நிச்சயத்தில் பூரித்துப் போயிருந்த குடும்ப உறவினர்களும், தொழில் நண்பர்களுமான சிவாவும், வெங்கட்டும் வந்திருந்த உறவினர்களை உபசரிக்கச் செல்ல...

தன் நண்பர்களின் கேலி கிண்டலில் மூழ்கியவாறு இளங்கோ தன் முன் நின்ற கன்னியின் கண்களில் மௌன நாடகம் நடத்திக் கொண்டிருக்க... மதுரிமா அவனின் இந்தப் பார்வை வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தன்னுள் எழுந்த தடுமாற்றத்தை மறைக்கப் பெரும்பாடுபட்டுக் கொண்டிருந்தாள்.

இன்னொரு பக்கம் யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்திருந்த மகிழனின் அருகில், திருமணப் பெண்ணுக்குரிய நாணமேதுமின்றி அமர்ந்திருந்த அபூர்வா, அவள் தோழர், தோழிகளிடம் மகிழனின் அருமை பெருமைகளை விளக்கிக் கொண்டிருக்க... அவள் தன்னைப் பற்றிப் பெருமை பீற்றிக் கொள்வதை ரசிக்க முடியாமல் எரிச்சலுற்றிருந்த மகிழன் மெதுவாக அவளின் கையைத் தன் கையிலிருந்து பிரித்தெடுத்து அங்கிருந்து நகர முற்பட்டான்.



அவன் கையை விலக்கியதும் கோபமுற்ற அபூர்வா, "எங்கே போறீங்க மகிழ்... நான் உங்களைப் பற்றித்தானே என் ஃபிரெண்ட்ஸ்கிட்ட சொல்லிக்கிட்டு இருக்கேன். உட்காருங்க..." என அதட்டல் போட்டுத் தன் அருகில் அவனை அமர்த்த முயற்சி செய்ய,

அவள் பக்கம் மெல்லக் குனிந்து, "நீ உன் ஃபிரெண்ட்ஸ்கிட்ட பெருமை காட்ட நான் ஒண்ணும் ஷோ பீஸ் கிடையாது. முதல்ல என் கையை விடு..." என எதிரில் இருந்தவர்கள் கண்களை உறுத்தாதவாறு அவளிடமிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டவன், அவள் நண்பர்களிடம் ஒரு புன்னகையுடன், "நீங்க பேசிக்கிட்டு இருங்க... நான் வந்துடறேன்..." என அங்கிருந்து விடுபட்டுத் தங்கள் வீட்டுத் தோட்டத்திற்கு வந்து, தன் விரல்களால் தலையை அழுந்தக் கோதினான்.

அவனுக்கு இப்போதுதான் சீராக மூச்சு விடுவது போல் ஒரு உணர்வு... நின்ற நிலையிலிருந்து தன் வீட்டைச் சுற்றிப் பார்த்தான். சின்ன அரண்மனை போலிருந்த அவ்வீட்டின் முன் பகுதி இன்றைய நாளையொட்டி விளக்குகள், வாழை மரத் தோரணம் கட்டி அலங்கரிக்கப்பட்டிருக்க... அந்த அலங்காரம் கொடுத்த அழகில் மகிழன் மனம் லயிக்காமல் எரிச்சல்தான் அடைந் தான்.

அவனுக்கு இந்தத் திருமண நிச்சயத்தில் உடன் பாடில்லை என்றாலும், வெறுப்பும் இல்லை. இந்த ஏற்பாடு அவனைப் பொறுத்தவரை ஒரு வியாபாரம்.

இன்னமும் சொல்லப் போனால்... 'மேரேஜ் ஆஃப் கன்வீனியன்ஸ்.'

அவனுக்கு எல்லாமே வியாபாரம்தான். வாழ்க்கையில் நடக்கும் அனைத்தையும் அவன் பணமென்ற அளவுகோலில் மதிப்பிடுவான். அவனின் சிறு வயதில் வெங்கட்ராமனின் குடும்பத் தொழிலான காட்டன் மில் நலிந்த சமயம்... பணமிருந்தபோது ஒட்டி உறவாடிய உறவினர்கள் அனைவரும் தங்களுக்கு ஒரு கஷ்டம் நேர்ந்த சமயத்தில் எங்கே வந்து தங்களிடம் பணம் அல்லது உதவி கேட்டு விடுவார்களோ என ஒதுங்கித் தங்களையும் ஒதுக்கி வைக்க...

அதன் பின் வெங்கட் தன் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, தங்கள் நிலையைப் பெருக்கிக் கொண்டதும், காந்தம் போல் மீண்டும் தங்களிடம் வந்து ஒட்டிக் கொண்ட உறவுகளை நினைக்கும்போது, அவன் முகத்தில் எப்போதும் ஒரு வெறுப்பு குடிகொள்ளும்.

அது கொடுத்த வெறியோ என்னவோ.. அவன், 'பணம் பத்து என்ன... பதினொன்னு கூடச் செய்யும்...' என நம்பினான்.

மகிழுக்குச் சிறு வயது முதலே பணத்தின் மேலிருந்த மதிப்பும் ஆர்வமும் மனிதர்கள் மேலில்லை. நல்ல வழியில் (?) பணம் சம்பாதிக்க எந்த உயரம் வரையும் செல்வான்.

உதாரணத்திற்கு அவர்கள் செய்யும் காட்டன் டெக்ஸ்டைல் தொழிலுக்கு ஒருமுறை பள்ளிச் சீருடை



டெண்டர் கேட்டுப் பொது அறிவிப்பு வந்தபோது அவர்கள் போட்டி கம்பெனி இவர்கள் கோட் செய்திருந்த டெண்டர் தொகையை அவர்கள் மில்லில் வேலை செய்யும் ஒரு ஊழியரிடம் விலை பேசி அறிந்து கொண்டு, அதைக் கைப்பற்றியதை அறிந்த மகிழன் கொதித்துப் போனான்.

அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த அந்த ஊழியனைக் குடும்பத்தோடு ஊரை விட்டு விரட்டியதோடு மட்டுமல்லாமல், அந்தப் போட்டி கம்பெனியில் காட்டன் குடோனை கூலிக்கு ஆள் விட்டு எரித்து அவர்கள் கைப்பற்றிய டெண்டர் தொகையின் லாபத்தை விடவும் இரண்டு மடங்கு நஷ்டம் ஏற்படுத்தியிருந்தான்.

இது மகிழன் தான் செய்திருக்கிறான் என அக்கம்பெனி முதலாளி அறிந்திருந்தாலும், அவர்களால் அவனை எந்த அளவிலும் நெருங்க முடியவில்லை. காரணம் அவனுக்கிருக்கும் பணபலமும், ஆள் பலமும் மட்டுமல்லாது அதிகார பலமும் அவர்களை அவனிடம் நெருங்க விடாமல் தடுத்தது.

தொழிலில் அவனுக்கு ஆயிரம் எதிரிகள் இருந்தாலும், அவர்களை எளிதில் வீழ்த்திவிடும் வல்லமை கொண்டவன். இவனின் இந்த முகம் அவனைப் பெற்றவர்களையே அச்சுறுத்தும்.

வெங்கடராமன் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், அதைக் காது கொடுத்துக் கேட்காத மகிழன், கோகிலாவின் அன்புப் பார்வையில் சற்றுக் கட்டுப்படுவான். ஆனால் அவரையும் மீறிச் சில சமயங்களில் இது போன்று

காரியத்தை அவன் செய்து வரும்போது அவராலும் ஒன்றும் செய்ய இயலாது.

என்னதான் பணம் குறிக்கோளாக இருந்தாலும், தொழிலில் அதிரடியாகச் செயல்பட்டாலும், அவனுக்குள் ஒரு மென்மையான மகிழன் இருக்கிறான். தன்னைப் பெற்றவர்கள் மேலும், தன்னுடைய தங்கையின் மேலும் உயிரையே வைத்திருந்தான்.

அவர்களின் அன்பையும், பாசத்தையும் தவிர, மற்ற அனைவரும் அவனிடம் பொய் முகமூடி அணிந்திருக் கின்றார்கள் என்று நினைத்துக் கொள்வான். அந்த நினைப்பு வந்ததற்குக் காரணம் சில பல அடிகளை அவன் வாழ்க்கையில் வாங்கியிருக்கிறான். அதன் விளைவே இந்த நம்பாத் தன்மை. கோபம் எந்தளவு அவன் கண்ணை மறைக்குமோ அதே அளவு அவனின் அன்பும், பாசமும் அவனைக் குளிர வைக்கும்.

ஒருவரின் மேல் அன்பு கொண்டால் அது எந்த அளவிலும் குறையாது பார்த்துக் கொள்வான். இன்னமும் சொல்லப் போனால், 'அன்புக்கு அவன் அடிமை, அடாவடித்தனத்திற்கு அவன் முதன்மை...' என்ற புதுமொழிக்குச் சொந்தக்காரன். இதை அவனுடன் இருக்கும் அனைவரும் நன்கறிவர்.

பணத்தைக் கொண்டே வாழ்க்கையை மதிப்பிடும் மகிழனுக்கு, இந்தத் திருமணம் நடந்தால் இரு வீட்டுப் பெரியவர்களுக்கும் சந்தோஷம். மற்றும் தங்கள் வீட்டுச் சொத்து தங்களுக்குள்ளே இருக்கும் என்ற காரணம்



மட்டுமல்லாது, தன் நண்பனும், மாமன் மகனுமான இளங்கோ மற்றும் தன் தங்கை மதுரிமாவின் காதலும், அவனை இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தது. மற்றப்படி அவனுக்கு இத் திருமணத்தில் வேறு எந்த எண்ணமும் இல்லை. அதுவும் முக்கியமாக அபூர்வா மீது!

சிறு வயது முதலே அபூர்வாவின் மேல் அவனுக்குச் சிறிதும் விருப்பம் இருந்ததில்லை. அவள் அண்ணனைப் போல் இல்லாமல், அவளிடம் எப்போதும் குடியிருக்கும் அலட்சியமும், அடுத்தவரை எடுத்தெறிந்து பேசும் அவள் குணமும் அவனை எந்த வகையிலும் அவளை ரசிக்க வைத்ததில்லை. ஆனாலும் ஒரு சில காரணங்களுக்காக இத்திருமணத்திற்குச் சம்மதித்தவன்... இன்று அபூர்வாவின் செயல்கள் அவளை ரசிக்க வைத்ததற்குப் பதில் எரிச்சலடையத்தான் செய்தது.

தன்னை விட்டுச் சென்ற மகிழனின் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அபூர்வாவிற்கு மகிழின் இந்தச் செய்கை அவளை மிகுந்த கோபத்திற்குள்ளாக்கியது. தன் நண்பர்கள் முன்னர் அவன் தன்னை அவமானப்படுத்தியதாகவே அவள் கருதினாள்.

ஆனால் அவளால் அவனிடம் தன் கோபத்தைக் காட்ட முடியாதென்பதை அவள் தெரிந்திருந்தாள். அவன் நெருப்பு என்பதை அவள் அறியாதவளில்லை. ஆனால் தலையணை மந்திரம் வேலை செய்யும் என நினைத்துக் கொண்டாள். மனதிற்குள், 'இந்தத் திருமணம் மட்டும்

முடியட்டும், மகனே... அப்புறம் உன்னை என் விரல் நுனியில் வைத்து ஆட்டிப் படைக்கிறேன்... அதுவரை பொறு மனமே...' என நினைத்துக் கொண்டாள்.

இப்படி எல்லாம் இவள் நடந்து கொண்டதற்கு அவள் மகிழனைக் காதலிக்கிறாள் என்றால், அது தவறு. அபூர்வாவிற்கு மகிழின் ஆளுமை பிடிக்கும். அவனிடம் மற்றவர்கள் வைத்திருக்கும் பயம் கலந்த மரியாதை பிடிக்கும். இவனைத் திருமணம் செய்து கொண்டால் அந்த மரியாதை தனக்கும் கிடைக்கும் என நினைத்தாள்.

தங்களை விடவும் பணத்திலும், அந்தஸ்திலும் உயர்ந்த குடும்பம் வேறு. இவனை அடைந்தால் இந்த மொத்த வீட்டிற்கும் தான்தான் எஜமானி என்ற நினைப்பு வேறு கொண்டிருந்தாள்.

இவை அனைத்திற்கும் மேல் அவனின் கம்பீரத் தோற்றமும், அவனின் தாடிக்குள் மறைந்திருக்கும் வசீகர முகமும், அவனின் ஆண்மையும் அவளைக் கிறங்கடிக்கச் செய்தது. மாநிறத்தில், அடர்ந்த புருவத்திற்குக் கீழ் அவனின் தீர்க்கமான கண்களும், அவனின் கூர்மையான நாசியும்... அடர்ந்து வளர்ந்திருக்கும் தாடியைச்சீராக வெட்டித் தன் பாதி முகத்தை அதனுள் மறைத்துக் கொண்டிருந்தான்.

அவன் அகன்ற தோளின் வலிமையும், அண்ணாந்து பார்க்கும் அவனின் உயரமும் அவளை அவனிடம் அடிமையாக்கச் செய்தது. இந்த ஆணழகனைத் திருமணம் செய்து கொண்டால் தன்



நண்பர்கள் முன்னே பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம் என்ற காரணம் மட்டுமே அவனிடம் அவளை வீழ்த்தச் செய்தது.

இப்படி ஒரு ஜோடி தங்கள் திருமணத்தைப் பற்றிச் சிந்தித்திருக்க... இன்னொரு ஜோடியோ தங்கள் திருமணத்தைக் காதலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இளங்கோ - மதுரிமாவின் அழகில் மட்டுமல்லாது, அவளின் அமைதியான குணத்திலும், மென்மையான பேச்சிலும் வீழ்ந்து கிடக்க... மதுரிமா, இளங்கோவின் கண்களில் தெரிந்த காதலைத் தன்னுள் உணர்ந்து, அவனின் வாய்மொழியாகக் கேட்டுக் காதலைத் தன் வெட்கத்தால் உறுதிப்படுத்தி இன்று கல்யாணக் கனவில் மிதந்து கொண்டிருந்தாள்.

நான்கு வேறு சிந்தனைகளுடன் திருமண நிகழ்வை உறுதி செய்துகொண்ட இவர்களின் வாழ்க்கையை இறைவன் எப்படித் தீர்மானித்திருக்கிறான் என்பதை யாரும் அறியார்...!

வெளியே நின்று கொண்டிருந்த மகிழின் செல்போன், தன் குரலை எழுப்பி மகிழின் எரிச்சலை அப்போது திசை திருப்பிவிட்டிருக்க... ஸ்க்ரீனில் தெரிந்த தன் மேனேஜரின் எண்ணைப் பார்த்து அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

"சொல்லுங்க பிரபு... என்ன விஷயம்?" என்றான்.

"சார்... நாம புதுசா டையிங் ஃபாக்டரி கட்ட இடம் கேட்டு விளம்பரம் செய்திருந்தோம், இல்லையா...? அதுக்கு ரெஸ்பான்ஸ் வந்திருக்கு சார்..."

"ஓஹோ... அப்படியா! எங்கே?" என்றவனின் கேள்விக்கு,

"பேரூர் பக்கம் சார்... போளுவாம்பட்டி. நம்ம எதிர்பார்த்த மாதிரியே நல்ல இடம்..." என்றான்.

"பேரூர் பக்கமா...! ம்ம்... அப்போ நாளைக்குப் போய் முதல்ல இடத்தைப் பார்த்துட்டு வருவோம். பிடித்திருந்தால் மத்த விஷயங்களைப் பேசிடலாம், பிரபு..."

"இல்ல சார்... அதில கொஞ்சம் சிக்கல் என்னன்னா... இடத்தோட ஓனர் இன்னமும் பதினைந்து நாளில் வெளியூர் கிளம்பறாராம். அவர் சீக்கிரமே இடத்தை வந்து பார்த்துட்டு நம்ம விருப்பத்தைச் சொன்னால் நல்லாயிருக்கும்னு சொல்றார். அப்படி நமக்குப் பிடிக்கலை என்றால் அவர் வேற பார்ட்டி பார்க்க வேண்டும் என்கிறார். அதனால நம்மை இன்னிக்கே வந்து பார்க்க முடியுமான்னு கேட்டாங்க. நான் உங்ககிட்ட கேட்டுட்டுச் சொல்லலாம்னு..." என இழுத்தான் பிரபு.

அவனுக்குத் தெரியும், இன்று அவர்கள் வீட்டில் விசேஷம் என்று. ஆனால் வேலையின் அவசரம் புரிந்தமையால் அவன் தயங்கிக் கேட்க,

"அப்போ சரி பிரபு... நான் உடனே கிளம்பி ஆபீஸ் வந்து உங்களைப் பிக்அப் பண்ணிக்கிறேன். ரெண்டு பேரும் போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்..." என்றவன், இப்போது வீட்டுப் பிள்ளை பொறுப்பிலிருந்து ஒரு தொழிலதிபரின் பரிமாணத்திற்கு மாறியிருந்தான்.



உடனே வீட்டுக்குள் சென்றவன்... தன் அன்னையைக் கண்டுபிடித்துத் தான் கிளம்புவதாகச் சொல்ல, அத்தனை நேரம் மக்களின் நிச்சய விழாவில் பிரகாசமாயிருந்த கோகிலாவின் முகம் நொடியில் சூம்பிப் போனது.

"என்ன மகிழ்... இன்னிக்குமா உனக்கு வேலை? இன்னிக்கு ஒரு நாள் இதை எல்லாம் தள்ளி வைக்கக் கூடாதா? ரொம்ப முக்கியமான வேலையென்றால் அப்பாவை அனுப்பு..." என்றவரை,

"இல்லம்மா... இது நம்ம புது ஃபாக்டரி விஷயம்... இதை முழுதாக நான்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதனால் நான்தான் போயாகணும்..." என அன்னையைத் தோளோடு அணைத்துக் கொஞ்சி மிஞ்சி அனுமதி வாங்கியவன், தந்தை மற்றும் சிவா - ரஞ்சித மிடமும் முறையாக விடைபெற்று விட்டு, இளங்கோவின் கையைக் குலுக்கி விடைபெற்றவன்,

தங்கையை நெருங்கி அவள் தலையைச் செல்லமாகக் கலைத்து விட்டு, "போயிட்டு வர்றேன்டா மதி குட்டி..." என்ற சொல்லோடு நகர்ந்தவன்... அபூர்வாவைப் பேருக்குக் கூடத் திரும்பிப் பார்க்காமல் தன் காரை எடுத்துக் கொண்டு கிளம்பியே விட்டான்.

மகிழின் இந்தப் புறக்கணிப்பு அபூர்வாவைக் கோபத்தின் உச்சிக்கு உயர்த்திச் செல்ல, முகத்தில் உற்பத்தியான கோப ரேகையைத் தன் முன் இருந்த நண்பர்களின் முன் மறைக்கப் பெரும்பாடு பட்டாள்.

அவள் எரிச்சலை மேலும் அதிகப்படுத்தவென... அவள் தோழிகளில் ஒருத்தி, "ஹே என்னடி... உன் ஆள் உன்னைக் கொஞ்சம் கூடக் கண்டுக்காமல் போறார்...!" என்றாள்.

அதற்கு அவள் பதில் கூறுமுன், "இதென்னடி கேள்வி... அதெல்லாம் ரெண்டு பேரும் கண்ணுலயே பேசிப்பாங்க. இது எல்லாம் நமக்குப் புரியாது..." என நேரம் காலம் தெரியாமல் அவளை இன்னொருத்தி ஓட்ட, அவள் தனக்குள் கனன்று கொண்டிருந்த எரிச்சலை அவள் கட்டியிருந்த பட்டுச் சேலையில் ஜரிகையை முறுக்கி அதில் காட்டினாள்.

இவை ஏதுமறியாத மகிழன், பிரபுவுடன் பேரூர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தான்.

பேரூர் நெருங்கும் வேளையில் அதிகப் போக்கு வரத்து இல்லாத அச்சாலையின் ரயில்வே கேட்டில் அப்போதுதான் சிவப்பு விளக்கை மாற்ற, அந்தக் கேட் மூடும் முன் ட்ராக்கைக் கடக்க முயற்சி செய்தான் மகிழன்.

அந்த இடத்தில் இவன் வண்டியைத் தவிர வேறு ஏதும் கனரக வாகனமோ, ஆள் அரவமோ அதிகம் இல்லாத காரணத்தால் தூரத்திலிருந்தே மிகுந்த வேகத்



துடன் வந்தவன் முயற்சி வீண் என்பது போல் கேட் முழுதாக மூடப்பட்டது.

கேட்டைக் கடக்க முடியாத எரிச்சலிலும், பத்து நிமிடம் வீணாகக் காத்திருக்க வேண்டுமென்ற கோபத்திலும், வேகமாக வந்த வண்டியை சடன் பிரேக் போட்டு நிறுத்தியவன், முன்னால் நின்றிருந்த சைக்கிளைக் கவனிக்கவில்லை.

அவனின் கார் அந்தச் சைக்கிளை மெதுவாக இடித்து விட, அவன் மோதியதில் நிலை தடுமாறிக் கீழே விழுந்த அந்தச் சைக்கிளில் இருந்த பெண்ணுடன், அவள் வைத்திருந்த பால் கேனும் கீழே விழுந்து உருண்டு, பால் சிதறிக் கவிழ்ந்தது.

சில நொடிகளில் நடந்த இந்த நிகழ்வினால் மகிழன் கொஞ்சம் தடுமாற,

பிரபு, "ஹய்யோ சார்..." என்ற கூவலுடன் காரிலிருந்து இறங்கியவன், முன்னே சென்று பார்க்க... அந்தப் பெண் மேல் விழுந்திருந்த சைக்கிளை எடுத்து நிறுத்தியவன், அவளையும் எழுப்ப முயற்சி செய்ய, அதைத் தடுத்துத் தானே எழுந்து நின்றவள்... காரைப் பார்க்க, அப்போதுதான் காரை ஓட்டி வந்தவன் இன்னமும் உள்ளிருப்பதைப் பார்த்தவள் வெகுண்டு எழுந்தாள்.

அடிபட்ட காலை இழுத்து இழுத்து நடந்து வந்தவள், ஓட்டுனர் இருக்கைப் பக்கம் நின்றவள், மூடியிருந்த கதவைத் தட்டி உள்ளிருந்தவனை வெளியே வருமாறு சைகை செய்தாள்.

கண்ணில் போட்டிருந்த தனது கறுப்பு நிற சன் கிளாசை ஸ்டைலாகக் கழற்றியவாறு மகிழன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்ததும்...

"யோவ்... குருட்டு முண்டம்..." என அவள் கத்தியதில், பிரபு வாயைப் பிளந்து நிற்க...

மகிழனின் கண்களோ முழுதாக அவளின் தோற்றத்தில் பிரமித்து, பின் அவளின் வார்த்தையில் அவளை வெறியாய்ப் பார்த்தன.

ஆனால் அதை அவள் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை என்பது போல் மேலும் பேச ஆரம்பித்தாள்.

"ஏலே கிறுக்கு... கண்ணை என்ன பிடரியிலா வச்சிருக்க... முன்னாடி இருக்கிற சிவப்பு லைட்தான் உன்ற லொள்ள கண்ணுக்குத் தெரியலைன்னா.. இந்தா பெரிய உருவம் கூடவா உன்ற குருட்டுக் கண்ணுக்குத் தெரியலை..." எனக் கையைக் கையை ஆட்டி நிமிடத்தில் மகிழனை நோக்கி வார்த்தையை வீசியவளின் வார்த்தைத் தொனியில் பிரபுவிற்கு உண்டான சிரிப்பைக் கட்டுப்படுத்தப் பெரும்பாடு பட்டான்.

பின்னே மகிழன் முன்னே தன் சிரிப்பைக் காட்டினால் அவனின் வேலைக்கு ஆப்பு வைத்து விடுவானே...!

ஆனால் மகிழனின் நிலையோ... பிரபுவின் முன் இவள் தன்னை இப்படிப் பேசியதும், அவமானத்திலும் கோபத்திலும் அவன் முகம் ஜுவலித்தது.



## 2

எங்கெங்கும் இன்பம் அது கோலம் போட
என்னுள்ள வீணை ஒரு ராகம் தேட
அன்புள்ள நெஞ்சைக் காணாதோ
ஆனந்த ராகம் பாடாதோ
கண்கள் எங்கும்...
நீங்கில் தாபம் மேலும் ஏற்றும்...

**த**ன் முன் நின்றிருந்த பெண்ணின் பேச்சில்... முக்கியமாகத் தன்னை அவள், 'குருட்டு முண்டம், கிறுக்கு...' எனத் திட்டியதில் கோபத்தில் சிவந்த கண்களைச் சூழ்நிலை கருதி அமைதி காக்க... அப்பெண்ணோ அவனின் கண்களின் கனலைக் கண்டு கொள்ளாது, விழுந்ததில் உண்டான காயத்தில் வலியை மீறிப் பால் சொசைட்டிக்குக் கொண்டு செல்ல மதியம் முதல் இடுப்பு நோகக் கறந்த பாலை இவன் ஒரு நொடியில் கொட்டிக் கவிழ்த்து விட்டானே என்ற கோபத்தில் மேலும் பேச்சை விட்டாள்.

"உங்களுக்கு எல்லாம் கார்ல போனா ஃப்ளைட்ல போறது போல நினைப்பாக்கும். உங்களைத் தவிர ரோட்ல மத்த மனுஷங்க யாரும் போகக் கூடாதா...? ஆளையும், மூஞ்சியும் மொகரையும் பாருங்க..." எனப் பற்களைக் கடித்தவள், மகிழனின் கை முஷ்டி இறுகுவதையோ, அவனின் பற்கள் நறநறப்பதையோ கண்டுகொள்ளவே இல்லை.

"இதைப் பாரு... மருவாதையாக் கொட்டிக் கவுத்த என்ற பாலுக்கும், உடைஞ்ச என்ற சைக்கிளுக்கும் காசை

வெச்சுப் போட்டு இடத்தைக் காலி பண்ணு... இல்லையானா இங்கினருந்து ஒரு அடி எடுத்து வைக்க முடியாதாக்கும். பார்த்துக்கோ..." என இடுப்பில் கை வைத்துத் தோரணையாகச் சொன்னவளை, மகிழின் கண்கள் அளவெடுத்தன.

இதே வார்த்தைகள் வேறு யாரேனும் உபயோகப் படுத்தியிருந்தால், அவனின் கவனிப்பு வேறு மாதிரியாக இருந்திருக்கும். ம்... ஆனால் இன்று தன் முன்னால் இவ்வளவு தைரியமாக வாய'டிக்கும் அவளின் பேச்சு முதலில் அவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணினாலும், இப்போது அவனின் கண்கள் அவளை ஒரு வித ஆர்வத் துடன் வலம் வந்தன.

கிராமத்துப் பெண்களுக்குரிய நிறத்தைக் காட்டிலும், மாநிறத்திற்கும் சந்தன நிறத்திற்கும் இடையில் இருந் தவளின் முட்டைக் கண்கள் கவி பாட, மூக்கு நுனி கோபத்தில் சிவந்திருக்க, வாயோ அதுபாட்டுக்கு வழக் கடித்துக் கொண்டிருக்க, காற்றில் தவழ்ந்த முடியைப் புறங்கையால் ஒதுக்கியவளின் அழகு மகிழின் மனதில் மின்னலெனப் பதிந்து போனது.

அது கொடுத்த தாக்கத்தில் இருந்தவன் அவளின் இந்த நக்கல் பேச்சுக்களைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

அவனின் கண்கள் மேலும் முன்னேறி அவளின் முழு உருவத்தையும் தனக்குள் பதிய வைக்க எண்ணி உச்சந் தலையிலிருந்து பார்வையிட்டன. அவள்



கண்களில் தன்னைத் தொலைத்து, அவள் உதடுகளில் தடுமாறிக் கண்களைத் தாழ்த்த அடுத்து வந்த அவள் இடுப்பில் படிந்த அவன் பார்வை கனிவுற்றது.

விழுந்ததில் ஆங்காங்கே அவளின் உடலில் ஏற்பட்ட சிராய்ப்பு அவன் மனதிலிருந்த கோபத்தை வெகுவாகக் குறைத்திருந்ததென்றால் மேலும் அவளின் கால் முட்டியில் ஏற்பட்ட காயத்தில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது, இப்போது அவனின் கோபத்தை முற்றிலும் போக்கி, "பிரபு... டாஷ்போர்டில் ஃபர்ஸ்ட் எய்டு கிட் இருக்கும். சீக்கிரம் எடு..." என ஏவியவன், "உன் காலில் இரத்தம் வருது. அதுக்கு முதலில் ஃபர்ஸ்ட் எய்டு பண்ணணும்..." என்றவாறு அவளின் பாவாடையைத் தூக்க,

"ஹே...ஹே... என்ன பண்ற... லூசு லூசு..." என்றவள் துள்ளிக் குதித்து பின்னால் நகர்ந்தவள், இடுப்பில் செருகியிருந்த பாவாடையைத் தளர்த்தி விட்டாள்.

"ஹே... என்ன நீ... ரொம்ப வாயை விடற... முன்னபின்ன தெரியாதவங்ககிட்ட இப்படித்தான் மரியாதை இல்லாமல் பேசுவியா? பல்லை உடைக்கப் போறேன் பாரு..." என இப்போது மறைந்திருந்த கோபம் லேசாகத் தலையைத் தூக்கி வெளியே வர,

"ஓஹோ... நீ என்ற பல்லை உடைக்கிற வரை நான் என்ன தேங்கா பறிச்சிட்டு இருப்பேனாக்கும்... கல்லை விட்டு உன்ற மண்டையைப் பொளந்துட மாட்டேன்..." என

ஒரு விரல் நீட்டி மிரட்ட... அவள் மிரட்டிய விதத்தில் மகிழனுக்குச் சிரிப்புதான் வந்தது.

"உன்னைய லூசுன்னு சொல்லாம வேற என்னையா சொல்லுவாங்க... இப்படித்தான் முன்னபின்ன தெரியாத பெண்ணோட பாவாடையைத் தூக்குவியா?" என அதே கோபத்துடன் அவனுக்குத் திருப்பிக் கொடுக்க, அப்போதுதான் மகிழன் தான் செய்த காரியம் உணர்ந்தான்.

"அது... அது..." என இழுத்தவன், "உன் காலில் இரத்தம்... அதுதான்... சரி. நீயே மருந்து வச்சுக்கோ. பிரபு... அதைக் கொடு..." எனத் தடுமாற,

மகிழின் இந்தத் தடுமாற்றம் பிரபுவைப் புருவம் உயர்த்த வைத்தது.

"உங்க கரிசனத்துக்கு ரொம்பத் தேங்க்ஸ்ங்க. ஆனாலும் நீங்க வந்து மோதாமல் இருந்திருந்தால் எனக்கு இந்த அடி பட்டிருக்காது. சரி... அதை விடுங்க. முதல்ல சிந்தின என்னோட பாலுக்குப் பணத்தை வைங்க. எனக்கு நேரமாச்சு..." என அவனின் அக்கறையில் கோபம் போய், தானாக முளைத்திருந்த மரியாதையுடன் அவள் காரியத்தில் கண்ணாகக் கேட்க, இப்போது மகிழின் முகத்தில் புன்னகை சூடிக் கொண்டது.

'எங்கே... தர முடியாதென்றால், அதற்குச் சண்டைக்கு வந்துவிடுவாளோ?' என நினைத்தவன்... வழக்கம் போல் பாக்கெட்டைத் தேடித் தானாக அவன் கைகள் இடுப்பிற்குப் போக, அப்போது அவன் காலையில் அணிந்திருந்த பட்டு வேஷ்டி, சட்டையுடன் வந்திருப்பதை உணர்ந்தவன் மனது திடுக்கிட்டது.



'என்னது இது... சில மணி நேரத்திற்கு முன்னர் அங்கு ஒரு பெண்ணுடன் திருமணம் நிச்சயம் செய்துவிட்டு, இங்கே இவளை இப்படிப் பார்வையால் பருகிக் கொண்டிருக்கிறோமே...' என மூளை அவனைச் சாட, வேகமாகத் தலையை உலுக்கித் தன்னைச் சரி செய்து கொண்டவன், "ஹே... பெண்ணே... உனக்கு இப்போ என்ன வேணும்?" எனக் கடுமையான குரலைக் கொண்டு வர முயற்சி செய்து அதட்டல் போட,

இப்போது முளைத்த மரியாதை மீண்டும் காற்றில் பறந்து, "யோவ்... என்ன எகுறுற... தப்பை நீ செஞ்சுட்டுக் குரலை உயர்த்திப் பேசினா தப்பு இல்லைன்னு ஆகிடுமா... இதைப் பாரு. மருவாதையாக் காசை வெச்சுட்டு இடத்தைக் காலி பண்ணு. இல்லன்னா நடக்குறதே வேறயாக்கும்..." என்றவள், இன்னமும் அதே வீரத்துடன் அவன் முன்னே நிற்க...

மகிழனுக்கு அவளை நினைத்துச் சிரிப்பாக வந்தது. ஆள் அரவமற்ற இந்தச் சாலையில், மதியம் மூன்று மணியளவில் தங்கள் மூவரும் மட்டுமே இருக்க... தான் நினைத்தால் இப்போதே இவளை என்ன வேண்டு மானாலும் செய்து விடலாம். ஆனாலும் அதை நினைத்துப் பயந்து ஒதுங்காமல் தன்னுடன் மல்லுக்கு நிற்கும் இவளின் இந்தத் தைரியத்தில் அவனின் புருவங்கள் மேலுயர்ந்து அவளுக்கு மனதிற்குள் ஒரு சபாஷ் போட்டுக் கொண்டான்.

அவளிடம் மேலும் வம்பளக்க அவன் மனம் உந்த... வேண்டுமென்றே, "பணம் கொடுக்கலைன்னா என்ன செய்வ...?" என்க...

அங்கே சாலையில் கிடந்த ஒரு கருங்கல்லை எடுத்துத் தூக்கிப் போட்டுக் கேட்ச் பிடித்தவள், "ம்ம்... உம்மோட காருல கண்ணாடி எல்லாம் ரொம்பப் பளபளன்னு இருக்குதே... அதை உடைச்சுப் பார்க்கணும் போல என்ற கை பரபரங்குது..." என ஆர்வமாகச் சொன்னவளை... இவன் ஆர்வமாகப் பார்த்தான்.

நியாயமாக... இவளின் இந்தத் துடுக்குத் தனத்தில் அவனுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு சின்னச் சிரிப்புடன் காருக்குள் இருந்த தனது பர்சை எடுத்து, இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகளை எடுத்து அவளிடம் கொடுக்க... அதிலிருந்து ஒரு ஆயிரத்தை மட்டுமே வாங்கியவள்... "ம்ம்... அந்தப் பயம் இருக்கணும்..." என மிரட்டியவள், "பதினைஞ்சு லிட்டர் பாலுக்கு ஒரு லிட்டர் இருபத்தி ரெண்டு ரூபா கணக்குப் போட்டா முன்னூத்தி முப்பது. சைக்கிள் பெண்டு நிமித்த இருநூறு. அப்புறம் என்ற சேதாரம் ஒரு நூறு. ஆக மொத்தம் அறுநூத்தி முப்பது கொடுத்தாப் போதும். உன்றகிட்ட சில்லரை இருக்குதா...?" என,

அவனோ, அவளின் இந்தக் கணக்கில் பிரமித்துப் பின் சிரித்து, இல்லையெனத் தோள் குலுக்கினான்.

"ஐயோ... என்கிட்டயும் இல்லையே... ஏலே நெட்டைக் கொக்கா... உன்கிட்ட சில்லரை இருக்குதா?" எனப் பிரபுவிடம் கேட்க,



அத்தனை நேரம் முதலாளிக்கும், அந்தப் பெண்ணுக்கும் நடக்கும் சண்டையைச் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் தலை வேகமாக ஆடியதும்...

"அதுக்கு ஏன் பலியாடு மாதிரி மண்டையாட்டுற... ஹ்ம்ம்... இப்போ என்ன செய்ய?" என இப்போது அவளின் வீரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மீதிப் பணம் கொடுக்க வேண்டுமென்ற பொறுப்பு வந்துவிட, அவளின் இந்தப் பரிமாணம் மகிழின் அடிமனதில் அவளை நங்கூரம் போட்டு அமர வைத்தது.

அது அவனின் முகத்தில் ஒரு கனிவை உண்டு பண்ண... "பரவாயில்லை... மீதியை நீயே வச்சுக்கோ..." என்றவனின் இந்தக் கொஞ்சல் குரலை... இதுவரை அவனே கேட்டதில்லை என்றால் பிரபுவுக்கு எப்படி இருக்கும்? எப்போதுமே வேலைகளை ஏவி, அடுத்தவரை அவனின் கடினக் குரலிலே ஆட்டி வைக்கும் அவன், இப்போது இங்கே ஒரு பெண்ணின் முன் பெட்டிப் பாம்பாய் அடங்குவதைக் கண்டு அவன் வாய் தானாகப் பிளந்து பார்த்துக் கொண்டதிலே தெரிந்து போனது.

அவளோ, "ஐயோ... உழைக்காம வந்த காசு உடம்புல ஒரு நிமிஷம் கூடத் தங்காது. ஆமா... நீ ஊருக்குள்ள தானே வர்ற... வா. நான் மளிகைக் கடையில உனக்குச் சில்லரை வாங்கித் தாரேன்..." என்றவளை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரபுவின் ஆச்சரிய முகத்தையும், மகிழின் அபூர்வமான பார்வையையும் கண்டுகொள்ளாது,

மீண்டும் கால்களை இழுத்திழுத்து நடந்தவள், பிரபு எடுத்து நிறுத்திய அரசின் இலவச சைக்கிளை நெருங்கி, உருண்டு ஓடிய பால் கேனை எடுக்க அவள் குனிய... அவளுக்கு முன்னால் வந்த மகிழன் பால் கேனை எடுத்துக் கொடுக்க...

அதைச் சைக்கிள் கேரியரில் வைத்தவள் கயிறைக் கொண்டு இறுகக் கட்டி விட்டு, சைக்கிளின் ஊடே காலை விட்டு, பெடலை வாகாகத் தன் வலதுகாலுக்குத் திருப்பி விட்டு, மகிழைப் பார்த்து, "நான் முன்னால போறேன். என்ற பின்னாடியே வழிபிடிச்சு வந்துரு. சரியா...?" என அவனின் ஒப்புதலுக்காக அவன் முகம் பார்க்க...

மகிழோ ஏதோ ஸ்கூல் டீச்சர் சொல்லும் பாடத்தைக் கவனிப்பவன் போல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பின் அவள், தன் ஒப்புதலுக்காகக் காத்திருப்பதை உணர்ந்து, "ஹான்... சரி. ஆனால் உன் காலில் அடிபட்டிருக்கே... உன்னால் ஓட்ட முடியுமா? மருந்து போட்டுட்டுப் போகலாம். நான் போடல. நீயே போட்டுக்கோ. இரத்தம் வேற வருது..." என்றான், கனிவான குரலில்.

பிரபுவிற்கு இந்த மகிழன் புதிது. அவன் இன்று ஒரு பெண்ணிடம், அதுவும் அவனை இதுவரை யாரும் பேசியிராத வார்த்தைகளை எல்லாம் சொல்லி அவனைத் திட்டிக் கொண்டிருக்கும் பெண்ணிடம் அவனே வலியச் சென்று உதவியது வேறு, அவனை ஆச்சரியம் கொள்ளச் செய்தது.



ஆனால் அவளோ, "நீ என்ன லூசா..." என்பது போல் ஒரு பார்வை பார்த்து விட்டு, "அது பரவாயில்ல... சின்னக் காயம்தான். நீ வா.... எனக்கு நேரமாச்சு. சொசைட்டியில எனக்காகப் பாண்டியண்ணே காத்துக்கிட்டு இருப்பாரு. போய்ப் பால் சிந்திடுச்சுன்னு தகவல் சொல்லோணும்..." என அவளின் முக்கிய வேலையைச் சொல்ல, பத்து நிமிடம் வீண் என ரயில் போகும்வரை காத்திருக்க வேண்டும் எனக் கடுப்பாக நினைத்தவன், இப்போது வந்திருக்கும் அந்தப் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஃபாக்டரி கட்டும் இடத்தைப் பார்க்கும் வேலையை விட, இவளின் இந்தத் தகவல் சொல்லும் வேலையும், அவளிடம் மீதிச் சில்லறை வாங்கும் வேலையும் பெரிதாகப் பட... உடனே காரில் ஏறி, அவளின் வளைந்த சைக்கிளின் வேகத்திற்கு இணையாக, அவனின் ஜாகுவார் எக்ஸ்.எஃப்.ஆரைச் செலுத்தினான்.

இவர்களின் இந்த வழக்காடுதலில் ரயில் சென்று கேட் திறந்திருக்க... மெதுவாக அப்பெண்ணின் பின்னால் சென்றான் மகிழன். அந்த ஊர் டிபார்ட்மென்ட் ஸ்டோரின் முன் அவள் ஸ்டாண்ட் போட்டு நிறுத்திய சைக்கிளின் பின்னால், தன் காரை நிறுத்தி அதிலிருந்து இறங்கினான்.

அவள் அக்கடையில் இருந்தவரிடம், "அண்ணே.... ஆயிர ரூபாய்க்குச் சில்லறை வேணும்..." என அப் புத்தம் புது ஆயிரம் ரூபாய்த் தாளை நீட்ட,

அந்தக் கடைக்காரரோ அதை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு, உதட்டைப் பிதுக்கி, "இல்லையே

கண்ணு... இந்த ஊர்ல ஒரு நாளைக்கு நான் ஐந்நூறு ரூபா நோட்டைப் பார்க்கிறதே பெருசு... இதுல ஆயிரத் துக்குச் சில்லறை பிடிக்க நான் எங்கன போக..." என்றார்.

"ஹய்யோ, இல்லையாண்ணே... உம்மகிட்ட இருக்கும்னு நம்பி வந்தேன்..." என, 'ஏதோ உன்னை நம்பித்தான் கடன் கேட்க வந்தேன். நீயே என்னைக் கைவிட்டு விட்டாயே...' என்ற ரீதியில் முகம் வாடச் சொன்னவளின் முகத்தில் தெரிந்த ஏமாற்றம்... மகிழை என்னவோ செய்தது போலும்.

"ஒண்ணும் பிரச்சனை இல்லை. நான் இந்த ஊருக்கு ஒரு சின்ன வேலையா வந்திருக்கேன். அஞ்சு மணிக்கு மேலதான் கிளம்புவேன். உனக்குச் சில்லறை கிடைச்சா இங்க வந்து நில்லு. நான் அப்புறமா வாங்கிக்கிறேன். சரியா...?" என அவன் கனிவாகச் சொன்னதும்,

அரை மனதாகத் தலையாட்டி, "சரிங்க... பாண்டியண்ணே கிட்ட இருக்கும். இருந்தாக் கேட்டு வாங்கிட்டு வர்றேன்..." என்றவாறு, அவனிடமிருந்து விடைபெற்றுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றவளின் பின்னே மகிழின் மனமும் சென்றது.

அவள் சென்ற பின்னும் அவன் அப்படியே நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, அவனருகில் வந்து, "சார்... சார்..." எனப் பிரபுவின் அழைப்புக்குத் திடுக்கிட்டுத் திரும்பினான்.



பிரபுவின் அழைப்பில், அவனின் முகத்தைப் பார்த்த பின்புதான் மகிழன்... இத்தனை நேரம் தானிருந்த கனவுலகத்தின் தாக்கத்திலிருந்து விடுபட்டான்.

"சார், போகலாம்... அங்க நமக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருப்பாங்க..." எனப் பிரபு அவன் நிலையறிந்து சாதாரணமாகப் பேச...

மகிழன் ஒன்றும் பேசாமல், தன் காரின் மற்றொரு பக்கம் சென்று அமர்ந்து கொண்டு, "கார் எடு பிரபு..." எனச் சீட்டில் சாய்ந்து கொள்ள, பிரபு மௌனமாகத் தாங்கள் பார்க்க வேண்டிய நபரின் இடத்தை நோக்கி வண்டியைச் செலுத்தினான்.

அவளைப் பார்த்தது முதல் உண்டான வெவ்வேறு உணர்வுகளின் விளைவாக, சீட்டில் சாய்ந்தமர்ந்த மகிழனின் மூளைக்கும், மனதிற்கும் ஒரு பெரிய பனிப் போரே நடந்து கொண்டிருந்தது.

'என்ன பண்ணிக்கிட்டு இருக்க மகிழ்...? நீயா இப்படி ஒரு பெண்ணை வெறிச்சு வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்க... அங்கே உனக்கும் அந்த அபூர்வாவிற்கும் நிச்சயம் நடந்து முழுதாக மூன்று மணி நேரம் கூட முடியவில்லை. அதற்குள் வேறொரு பெண்ணைக் கண்டு தடுமாறுகிறாயா?" என மூளை கேட்ட கேள்விக்கு,

'இல்லை... இல்லை. இதுவரை எந்தப் பெண்ணும், ஏன்... அந்த அபூர்வா உள்பட... என்னிடம் ஏற்படுத் தாத தாக்கத்தை இந்தச் சிறுபெண் பார்த்த சில மணித்

துளிகளில் என்னுள் விதைத்து, என்னை அவள்பால் ஈர்த்து விட்டாளே! எனக்குள் உருவான இந்த மாற்றம் சாதாரணமில்லை... எப்படி இது சாத்தியம்... நானா இது?' என அவனைப் பற்றி அவனுக்குள்ளே பட்டிமன்றம் நடந்து கொண்டிருக்க, அவர்கள் வர வேண்டிய இடமும் வந்து சேர்ந்தது.

அப்போதைக்குப் பிரபுவின் அழைப்பில், மனதில் கேள்வியிலிருந்து தப்பித்து வந்த வேலையைக் கவனிக்கச் சென்றான்.

அந்த இடத்திற்குச் சொந்தக்காரரான மூர்த்தியைச் சந்தித்து, அவர்களிடம் இடத்தைப் பற்றிப் பேசிச் சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

அவன் பார்வையைப் புரிந்து கொண்டவர் போல், "சார், போய் நல்லாச் சுத்திப் பார்த்துட்டு வாங்க. இடம் உங்களுக்குத் திருப்தியானா மட்டும் மிச்சத்தைப் பற்றிப் பேச்செடுக்கலாம்..." என அனுப்பி வைத்தார்.

மகிழன் தனது வேட்டியை மடித்துக் கட்டியவாறு, மெல்ல நடை போட்டான். ஏற்கெனவே அவன் முகத்தில் எப்போதும் தெரியும் கம்பீரம் இன்று இந்த உடையில் மேலும் கூடி, அவனின் ஆணழகை இன்னமும் தூக்கிக் காட்டியது. பிரபு விளக்கம் சொல்லச் சொல்ல... மெல்ல முன்னேறினான் மகிழன்.

சுற்றிலும் தென்னை மரங்கள் வானுயர்ந்து வளர்ந்து நின்றிருந்தன. சுற்றுவட்டத்தில் ஆங்காங்கே, செங்கல் சூளைகளும் தலையைக் காட்டின. அது



விவசாய பூமி என்பதற்கு அடையாளமாக அப்போது தான் சோளம் அறுவடை செய்து உழவோட்டியிருந்தனர். சோளக் கதிர்கள் அனைத்தையும் கட்டுக் கட்டாகக் கோவில் போல் ஆங்காங்கே குவித்து வைத்திருந்தனர்.

அந்த இடத்தின் ஒரு கோடியில், பாழடைந்த கிணறு வீற்றிருந்தது. அதை எட்டிப் பார்த்தவனுக்குத் தண்ணீர் தெரியவில்லை. ஒரு கல்லை எடுத்து உள்ளே போட, சில நொடிகள் தாமதத்தில் கல் தண்ணீரில் விழும் சத்தம் கேட்க, 'ம்ம்... ரொம்பவும் ஆழம் போல...' என மனதில் நினைக்க, "சார் தள்ளி வாங்க. ரொம்பவும் ஆழம்..." என்ற பிரபுவுக்கு ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு மேலும் நடந்தான்.

அந்நிலத்தில் மறுகோடியில் வேப்ப மரத்தடியில் சின்னதாகச் சிமெண்ட் மேடை கட்டி, அதற்கு மேல் இரண்டு கற்கள் வைக்கப்பட்டு மஞ்சள், குங்குமம் வைத்திருக்க... அந்த மரத்தைச் சுற்றியும், மஞ்சள் கயிறுகள், சிவப்புத் துணிகள் கட்டப்பட்டிருந்தன.

இதைப் பார்த்ததுமே நமது மக்களின் கடவுள் நம்பிக்கையை நினைத்து, மகிழனின் உதடுகள் சிறு புன்னகை ஒன்றை உதிர்க்க... அதனுடனே நடையை எட்டிப் போட்டான். செம்மண் வாசம் காற்றில் தவழ்ந்து மகிழனின் நாசியை வருடிச் செல்ல... அது அவனின் மனதில் இனியதொரு மாற்றத்தை நிகழ்த்த, அதே உணர்வுடன் நடந்தவன்... அப்போதுதான் இந்த இடத்தை ஒட்டினாற் போல் அமைந்த ஓடையை அடைந்தான்.

பிரபுவிடம் திரும்பி, "அட... இங்க ஓடை கூட இருக்கிறதா என்ன... சூப்பர் பிரபு!" என்றான்.

"ஆமாம் சார்... நொய்யலாற்றின் ஓடை. நமக்கு வேஸ்ட் வாட்டர் வெளியிட ரொம்பவும் வசதியா இருக்கும்..." என யோசிக்காமல் ஒரே நொடியில் இயற்கை வளத்தை மாசுபடுத்தும் வேலையைச் சாதாரணமாகச் சொல்ல,

மகிழன் அவனை உணர்ச்சியற்ற பார்வை பார்த்தான்.

மகிழனின் மனதில் இயற்கை எழில் கொஞ்சும் இந்த இடத்தைப் போய் பில்டிங் கட்டி மாசுபடுத்துவதா... என்ற எண்ணம் எழ, யோசனையாகத் திரும்பி மூர்த்தி இருக்கும் இடம் நோக்கி வந்தான்.

தூரத்தில் வந்து கொண்டிருந்த மகிழன் அங்கே அவனுக்கு முதுகு காட்டியவாறு மூர்த்தியிடம் பேசிக் கொண்டிருந்த அப்பெண்ணின் வரி வடிவம் அது யாரென அவனுக்குப் பறைசாற்ற, மனதில் எழுந்த ஆர்வத்தால் வேக எட்டுகள் எடுத்து நடக்கத் தொடங்கியவன்...

அப்போதுதான் தன் பக்கத்தில் இருக்கும் பிரபுவை உணர்ந்து மனதின் பரபரப்பை அடக்கி மெதுவாக, ஆனால் வேகமாக மூர்த்தியை நோக்கி நடை போட்டான்.

அப்போது அப்பெண், "அதை ஏன் கேட்கிறீங்க மாமா? வரும் வழியில் ஒரு குருடன் என்ற வண்டியை இடிச்சித் தள்ளிட்டான்..." என அவளின் பென்ஸ் காரைத் தள்ளி விட்டது போல் அவள் சொல்ல,



"அடடே... உன்ற வண்டியை ஏத்திட்டுப் போனவனை நீ சும்மாவா விட்ட?" என்ற மூர்த்தியின் கேள்வியில்,

"சேச்சே... சும்மா விடுவேனா... நான் யாரு, முல்லைக்கொடியாக்கும்... பிடிச்சு வாங்கு வாங்குன்னு வாங்கிட்டேனில்ல... நான் மிரட்டுனதுல பய பயந்து போயிட்டான். சண்டை போட்டு... சிந்தின பாலுக்கு ஒழுங்கா மரியாதையாப் பணத்தை வை. இல்லை, நீ ஊர் போய்ச் சேர மாட்டேனு ஒரு அதட்டல் போட்டேன் பாருங்க... பய பம்மிட்டான். அப்படியே அவன்கிட்ட இருந்து காசை வசூல் பண்ணிட்டேன்ல...

"ஆனா, மாமா... அவனுக்கு நான் மீது முன்னூத்தி எழுவது ரூபா திருப்பிக் குடுக்கோணும். உங்ககிட்ட ஆயிர ரூபாய்க்குச் சில்லறை இருக்குதுங்களா...?" எனத் தற்பெருமையில் தொடங்கி, மகிழனை வாரி விட்டுத் தன் கடமையை உணர்ந்து வேண்டலில் முடித்த முல்லைக் கொடி மகிழனின் மனதில் சிம்மவாகனமிட்டு அமர்ந்து விட்டாள்.

"ஐயோ... என்றகிட்டயும் ஐந்நூறு ரூபா நோட்டாத்தான் இருக்கு முல்லை... பேசாம மீதிப் பணத்தை நீயே வெச்சுக்கோ... அவன் என்ன நம்மட வீடு தேடி வந்து கேட்கவா போறான்....?" - என மூர்த்தி சொல்ல,

"அச்சோ... இல்லீங்க மாமா... அது தப்புங்க. பணத்தைத் திருப்பிக் குடுக்கோணும்..." - என அவள் நேர்மையாகப் பதில் சொன்னாள்.

அப்போது அவர்களை நெருங்கியிருந்த மகிழன் இவர்களின், இவனைப் பற்றிய உரையாடலை முழுதாகக் கேட்டு விட்டான்.

"அடடே வாங்க சார்... முல்லை, இவங்கதான் நம்மட இடத்தைப் பார்க்க வந்திருக்காங்க. சார் டவுன்ல ரொம்பப் பெரிய ஆளு..." என முல்லையிடம் அறிமுகப்படுத்தியவர், "என்ன சார்... இடத்தைச் சுத்திப் பார்த்தீங்களா... நமக்குப் பிடிச்சுதுங்களா...?" என ஆர்வமாகக் கேட்க,

அவனின் பார்வையோ முல்லையிடமே இருக்க... அவனின் தலை மூர்த்தி கேட்ட கேள்விக்கு ஆமோதிப்பாக ஆடியது.

முல்லையோ... இவனைத் திடீரென்று இங்கே பார்ப்போம் எனச் சற்றும் எதிர்பார்க்காததால், சற்றுத் திடுக்கிட்டுப் பின் தானும், தன் மாமாவும் பேசியதை அவன் கேட்டிருப்பானோ எனச் சந்தேகம் எழ, அவன் முகத்தைப் பார்க்க... அதிலிருந்து அவளால் எதையும் கண்டுபிடிக்க முடியாமல் குழம்பி, 'ம்ம்... கேட்டிருந்தா இப்படியா பார்த்துகிட்டு இருப்பான்... அது எல்லாம் கேட்டிருக்க மாட்டான். அப்படியே அவன் கேட்டாதான் என்னவாம்....?' என மனதிற்குள் நினைத்தவளின் மனதை அவள் முகத்தில் காட்டிய உணர்ச்சியில் மகிழன் அறிந்து கொண்டான்.

அங்கே இருந்த சில நொடி அமைதி கூட முல்லையை ஏதோ செய்ய, "என்னங்க மாமா...



அதுக்குள்ள ஆளுக்குச் சொல்லிட்டீங்களா... இந்த ஊரை விட்டுப் போறதில உங்களுக்கு அம்புட்டு அவசரமோ?" என மூர்த்தியிடம் நொடித்துக் கொள்ள,

"அட, என்ன முல்லை நீ... எல்லாம் தெரிஞ்சு போட்டே இப்படிப் பேசறியே... நான் பெத்த ஒத்த மகன் இம்புட்டு நாளா சென்னையில அவன் பொண்டாட்டியோட இருந்துட்டு இப்போ திடுதிப்புன்னு வெளிநாட்டுக்குப் பறக்கப் போறேன். நீங்களும் கூட வாங்கன்னு சொல்றான். கடைசிக் காலத்தில என்னையும், உன்ற அத்தையையும் கூட வெச்சிக்கணும்னு ஆசைப் படறான்னு... பின்ன பெத்த பிள்ளையை விட்டுட்டு இங்கிருந்து இந்த இடத்தைக் கொஞ்சிக் குலாவி என்னத்த பண்ணப் போறோம்னு உன்ற அத்தைக்காரி மொகத்தை இடிக்கிறா...

"அதான் எல்லாத்தையும் வித்துப் போட்டுப் போகலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். இதையெல்லாம் உன்ற அம்மாகிட்ட நான் சொன்னேன்தானே! இந்த சார் டவுன்ல பெரிய காட்டன் மில்லு வச்சுருக்காரு... அதுக்குத்தான் இங்க சாய ஃபேக்டரி கட்ட கேட்கிறாங்க..." என அவர் பெரிய விளக்கமளிக்க...

முல்லையின் குண்டு மல்லிகைக் கண்கள் மொட்டு விட்டு விரிந்து, "என்னது, சாய ஃபாக்டரியா? என்னங்க மாமா, உங்களுக்குக் கிறுக்குப் பிடிச்சுருக்கா என்ன... விவசாய நிலத்தைப் போய் வீணாக்க நினைக்கிறீங்களே..." எனக் கோபமாகச் சீற,

"ம்ம்... முல்லை, நமக்கு இல்லைன்னாய்ப் போச்சு... அதை வாங்குறவங்க என்னத்த பண்ணினா நமக்கென்ன... நீ கொஞ்ச நேரம் சும்மா இரு, கண்ணு..." என அவளைக் கடிந்து கொண்டவர்,

"சார், அது கிடக்குது, சின்னப் புள்ள. நீங்க சொல்லுங்க... இடம் பிடிச்சிருக்குதுங்களா...? ரேட் பேசலாமா? இல்லைன்னா, இப்பவே சொல்லிடுங்க. வேற ஆளுக்குச் சொல்லணும்..." என ஆரம்பிக்க,

"ஏனுங்க மாமா... இப்படிச் செய்றீங்க... இந்த ஃபாக்டரி மட்டும் வந்துச்சு... நம்ம ஓடைத் தண்ணி எல்லாம் ஒரே மாசத்துல கெட்டுப் போயிடும் மாமா... அங்க மீன் எல்லாம் செத்துப் போயிடும். அப்புறம் ஒவ்வொரு ஞாயிறும் மீன் பிடிச்சு மீன் குழம்பு வைக்க முடியாது. அய்யய்யோ... நம்ம வேம்பம்மன்... நம்ம அம்மன் கோயிலை இடிச்சிடுவாங்களா! ஹ்ம்ம்... வேண்டாம் மாமா. இவங்களுக்குக் கொடுக்காதீங்க..." என வார்த்தைகளால் மட்டுமல்லாது கண்களால் மூர்த்தியைக் கெஞ்ச,

"ம்ச்... முல்லை... முதல்ல நீ வூட்டுக்குப் போ..." என மூர்த்தி விரட்டினார்.

மூர்த்தியிடம் தன் கெஞ்சல் செல்லாது என நினைத்தவள், இப்போது மகிழிடம் திரும்பி, "சார்... சார்... வேண்டாம் சார். இது விவசாய பூமி சார்... இந்த இடத்தில சாய ஃபாக்டரி எல்லாம் கட்ட வேண்டாம். நீங்க வேற ஊர்ல இடம் பாருங்களேன்... பக்கத்து ஊர்ல... ஹ்ம்ம்... இல்ல, வேண்டாம். அந்த ஊரும் அப்புறம் கெட்டுப் போயிடும். நீங்க ஏன் ஃபாக்டரி கட்டுறீங்க? இது கட்டவே வேண்டாம். விட்டுருங்க..." என முதலில் வேண்டாம் என்று கெஞ்சியவள், பின் அவனின் கட்டடம் கட்டும் திட்டத்தையே கைவிடச் சொல்ல... மகிழன் அவளை ஒரு ஆச்சரியப் பார்வை பார்த்து வைத்தான்.



"முல்லை... உனக்கு அப்படி அக்கறை இருந்தா நீயே இடத்தை வாங்கு. நான் என்ன உனக்குத் தர மாட்டேன்னா சொன்னேன்... சும்மா பேசி என்னைக் கோபப்படுத்தாதே முல்ல... முதல்ல நீ இடத்தைக் காலி பண்ணு..." என்ற மூர்த்தி, இடம் வாங்க வந்த பார்ட்டியிடம் இவள் வாயை விட்டு, எங்கே இவர்கள் வாங்காமல் கோபப்பட்டுத் திரும்பிச் சென்று விடுவார்களோ எனப் பயத்தை, எரிச்சலை அவளிடம் காட்ட...

"என்றகிட்ட மட்டும் பணமிருந்தா... நான் என்ன இப்படிக் கெஞ்சிட்டா இருப்பேன்... முத வேலையா இடத்தை வாங்கிப் போட்டுத்தானே மறுவேலை பார்ப்பேன். பணம் இருக்கிறவங்க கிட்ட எங்கே மனம் இருக்கப் போகுது... சே, போங்க மாமா!" என ஆதங்கத்துடன், சத்தமாக முணுமுணுத்துக் கொண்டு, மகிழனை, வேண்டாம்... என்பது போல் ஒரு கெஞ்சல் பார்வை பார்த்து விட்டுத் தன் பென்ஸை (சைக்கிளை) உருட்டிக் கொண்டு பக்கத்துத் தோட்டத்தில் இருக்கும் தனது வீட்டிற்குச் சென்றாள்.

போகும் அவளையே பார்த்தவாறு, "மிஸ்டர் மூர்த்தி... இந்த இடத்தை நாங்களே வாங்கிக்கிறோம்.

நாளைக்கு நல்ல நாள். இடத்தை அளந்து பார்த்துட்டு நாளைக்கே ரிஜிஸ்ட்ரேஷன் வச்சுக்கலாம்..." என்றவன் கணீர்க் குரல் முல்லையின் காதுகளில் தெளிவாக விழுந்தது.

அதைக் கேட்ட முல்லையின் மனம், 'ஐயோ, போச்சா...!' என வாடிப் போனது.

## 3

அழகு மிகுந்த ராஜகுமாரி
மேகமாகப் போகிறாள்...
ஜரிகை நெய்யும் சேலை கொண்டு
மலையை மூடப் பார்க்கிறாள்...
பள்ளம் சிலர் உள்ளம்
என ஏன் படைத்தான் ஆண்டவன்...
பட்டம் தரத் தேடுகின்றேன்,
எங்கே அந்த நாயகன்...
மாயன் காட்சி இறைவன் ஆட்சி...

**வீ**டு வந்து சேர்ந்த முல்லையின் மனதில் அந்த இடத்தைப் பற்றிய கவலையே அதிகமாக இருந்தது.

அங்கு மட்டும் அந்தக் கட்டடம் வந்துவிட்டால் தினமும் காலை வயலில் மயில்கள் தன் தோகை விரித்தாடாது. காலை பல் விளக்கும்போது மயில் தோகைகளைக் காட்டில் தேடி, அதைச் சேகரித்து விசிறி செய்ய முடியாது.



மூர்த்தியின் தோட்டத்தில் இருக்கும் கொய்யா மரத்தில் குயில்களுடன் சண்டையிட்டுக் கொய்யா பறித்துத் தின்ன முடியாது! ஓடைக்குச் சென்று துணி துவைத்துத் தண்ணீரில் நீச்சலடித்து, அங்கே காலைக் கொஞ்சிச் செல்லும் மீன்களைப் பிடித்து விளையாட முடியாது.

இவை அனைத்திற்கும் மேலாக அவளின் வேம்பம்மன்...

'ஹய்யோ, எல்லாம் போச்சே...' என அவள் மனம் ஏகத்திற்கும் அடித்துக் கொள்ள வாடிய முகத்துடன் அந்தத் தென்னை ஓலைப் பந்தலின் கீழ்த் தன் சைக்கிளை நிறுத்தியவளை,

"அடியே முல்லை... இது என்ன கால் எல்லாம் மண்ணாக் கிடக்குது... இன்னிக்கி எங்கடி விழுந்து எந்திருச்சு வந்த... எத்தனை வாட்டிச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைங்களோட சேர்ந்து நொண்டி விளையாடாதேன்னு..." எனத் தாயின் குரலில் திடுக்கிட்டு விழித்தவள்,

"ஹான்... இல்லம்மா... இன்னிக்கு நான் பள்ளிக் கூடத்துப் பக்கம் போகவே இல்லம்மா..." என்றவளை நெருங்கிய சின்னக்கண்ணு,

இப்போது அவளை விடுத்து, மண் ஒட்டிய பால் கேனைப் பார்த்தவர், "இது என்னது, கேன் எல்லாம் மண்ணு... பாலை ஒழுங்காக் கொண்டு சொசைட்டியில ஊத்துனியா இல்லையா...?" என மிரட்ட,

அதற்குப் பயந்தவள், "ஹான்... ஊத்திட்டேன்ம்மா... ஊத்திட்டேன்..." என அவளை அறியாமலேயே பொய்யுரைத்தாள். அது ஏனென்று அவள் யோசனை செய்யவில்லை.

"சரி... பாண்டி காசு குடுத்தானா?" எனக் கேட்க,

"ஹா... குடுத்துச்சும்மா... இந்தா..." என ஆயிரம் ரூபாய்த் தாளை நீட்ட, 'ஐயோ, இதை அம்மாகிட்ட குடுத்துட்டா நாளைக்கு அந்தாளுக்கு மீதிப் பணத்தை எப்படிக் குடுக்க...? ஹான், பாண்டியண்ணே தர காசைச் சேர்த்து வச்சுக் கொடுத்துற வேண்டியதுதான்..." என மனதில் நினைத்துக் கொண்டிருக்க, அவள் கையில் இருந்த பணத்தை வாங்கிப் பார்த்தவர்,

"இது என்னதுடி இவ்வளவு காசு....?" என அவர் வியக்க,

'அச்சோ... அம்மா கண்டுபிடிச்சிருச்சே... இது ஏதுன்னு கேட்டா என்ன சொல்ல...? ஹய்யோ! சமாளி முல்லை சமாளி...' எனத் தனக்குள்ளே பேசியவாறு, "ஹா... அதும்மா! பாண்டியண்ணன் கிட்ட சில்லறை இல்லன்னு கொடுத்துச்சு... ரெண்டு நாளைக்குச் சேர்த்துக் கொடுத்துருச்சு..." எனச் சமாளிக்க,

"என்னது... அந்தப் பிசினாரி எப்ப இருந்து பணக்காரன் ஆனான்? எப்போதும் குடுக்க வேண்டிய காசைத் தவிர அவன்கிட்ட ஒரு பைசா மேல வாங்க முடியாது. இன்னிக்கு என்ன புதுசா இத்தனை பணம் குடுத்திருக்கான்...?" என அவர் சந்தேகத்தை வெளியிட,



'ஐயோ... இந்த அம்மா என்ன... இன்னிக்கி இவ்வளவு கேள்வி கேட்குது...' என நினைத்தவள், "இப்போ என்னம்மா... உனக்கு இது வேண்டாமா! சரி குடு... நான் போய்த் திருப்பிக் கொடுத்துட்டு வர்றேன்..." என எகிற,

"சரி, சரி. விடுடி... போ... போய் கேனைக் கழுவிக் கவுத்துட்டு, நீயும் மொகத்தைக் கழுவிட்டு உட்கார்ந்து படி... நாளைக்குக் கடைசிப் பரிட்சை இருக்குல்ல... உன்ற அப்புச்சி வந்தா... உன்னைய படிக்க விடாம வேலை வாங்குறேன்னு என்னையதான் சாடுவாரு...." என மகளை அனுப்ப,

"ஆமா. அதை எத்தனை வாட்டிதான் படிக்க..." எனப் புலம்பியவாறு சென்ற மகளைப் புன்னகையுடன் பார்த்தார் சின்னக்கண்ணு.

சின்னக்கண்ணுவின் ஒரே செல்லச் சீமாட்டி முல்லைக்கொடி. இவள் பிறந்த சில வருடங்களில் மஞ்சள் காமாலை நோய் தாக்கி, அவர் கணவர் ரவீந்திரன் உயிர் பிரிந்தபோது, அவள் மாமனார் தம்பியப்பன் தான் தன் மருமகளையும், மகன் வயிற்றுப் பேத்தியையும் தன் பொறுப்பில் பேணிக் காத்தார்.

அவர் அந்தக் காலத்து பி.யூ.சி., படிப்பை முடித் திருந்ததால் அவர் அப்போதே போஸ்ட் மேன் வேலை யில் இருந்தார்.

அப்போதே கிடைத்த சம்பளத்தில் தங்களுக்கெனச் சிறு வீட்டையும், வீட்டைச் சுற்றி ஒன்றரை ஏக்கரில்

நிலத்தையும் வாங்கிப் போட்டிருந்தார். தம்பி ரிடைய ரானதும், அவருக்குக் கிடைத்த பி.எஃப். தொகையில் சிறு அளவைக் கொண்டு மேலும் சின்னாவின் சேமிப்பையும் சேர்த்து மூன்று பசு மாடுகளை வாங்கிக் கட்டித் தினமும் பால் கறந்து, அவரும் அவரால் முடிந்த மட்டும் தங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார்.

இப்போதைக்குப் பெரிய செல்வச் செழிப்பு இல்லையென்றாலும், அவர்களின் தேவை போக... மீதிப் பணத்தைத் தன் பெண்ணின் வருங்காலத்திற்குத் தாராளமாகச் சேர்த்து வைத்திருந்தார்.

தம்பி, தன் வேலை நேரங்கள் போக... மீதியிருக்கும் நேரத்தில் தங்கள் நிலத்தில் காலத்திற்கு ஏற்ற பயிர், கம்பு, சோளம் போன்று தானிய வகையில் ஏதேனும் விவசாயம் செய்வார்.

அவருடன் முல்லையும் இணைந்து விதை விதைப்பது, களை பறிப்பதென ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பாள்.

அப்போதிருந்தே அவளுக்கு விவசாயத்தின் மீது பெரிய ஆர்வமிருந்தது. தாத்தா சொல்லிக் கொடுத்த வகையில் விவசாயத்தைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்தாள். எந்த மழைக்கு எந்தப் பயிர் விதைப்பது, அதை எத்தனை நாட்களுக்குள் அறுவடை செய்வது என அனைத்தும் அவளின் தாத்தா கற்றுக் கொடுத்திருந்தார்.

ஆனால் அவளுக்குள்ளும் சிறு நெருடல் இருந்து கொண்டிருந்தது. அவர்களின் பக்கத்து நிலக்காரர்கள்



அனைவரும் மஞ்சள், வாழை மரம், திராட்சைக் கொடிகள் எனப் பயிரிட்டிருந்தனர்.

முல்லையும் ஒரு நாள் அவள் அப்புச்சியிடம், “ஏன் அப்பு... நம்மளும் பக்கத்துத் தோட்டத்துக்காரங்க மாதிரி திராட்சை வளர்க்கலாமா.... அங்க பாருங்க... மூர்த்தி மாமா தோட்டத்துல எப்படிக் கொத்துக் கொத்தா திராட்சை தொங்குதுன்னு...” என ஆசையாகக் கேட்டதற்கு,

அவர், “அவங்க எல்லாரும் ஏக்கர் கணக்குல நிலம் வச்சிருக்காங்கடா, ராசாத்தி... அதனால கிணத்தில இருந்து போர் போட்டுத் தண்ணி பாய்ச்சுறாங்க. நமக்கிருக்கிற இந்த ஒத்த ஏக்கர் நிலத்துக்குப் போர் போட்டு விவசாயம் செய்யுற நிலையிலா நாம இருக்கோம்... எனக்கும் ஆசைதான். ஆனா என்ன செய்ய...? ஹும்... ஏதோ இந்த நிலம் பட்டுப் போகக் கூடாதுன்னு இப்படி எதையாச்சும் விதைச்சு விடறேன். ஏதோ நம்மளால முடிஞ்சுது...” எனப் புலம்பிய போது, முல்லைக்கு மேலும் மேலும் விவசாயத்தின் மேல் ஈடுபாடுதான் அதிகமானது.

அது எந்த அளவிற்கென்றால், பன்னிரண்டாம் வகுப்பு முடித்ததும்... தான் விவசாயத்தைப் படிக்கப் போவதாகச் சொன்ன போது, சின்னாவுக்கும், தம்பிக்கும் ஒரே ஆச்சரியம்தான். ஆனால் சின்னாவுக்குத் தன் பெண்ணை அந்தப் படிப்பில் படிக்க வைக்க விருப்ப மில்லை.

காரணம், அவரின் அறியாமை... விவசாயப் படிப்பு படித்தால், தன் பிள்ளையும் நம்மைப் போல் காட்டிலும்

மேட்டிலும் கஷ்டப்பட எதற்கு அப்படியொரு படிப்பு! என் பெண் படித்துக் கம்ப்யூட்டர் பெட்டி முன் அமர்ந்து, கால் மேல் கால் போட்டு, இங்கிலீஷில் பேசுவதைத் தான் கண்குளிரக் கண்டு ரசிக்க வேண்டுமென விரும்பியதால், அவளை வேறு படிக்குமாறு தெரிவித்து விட்டார்.

படிப்பறிவில்லாத தன் அன்னையின் ஆசையை மனதில் கொண்டு அவர்கள் ஊருக்கு அருகிலே இருந்த கல்லூரியில் பி.எஸ்சி., பாட்டனியைத் தேர்வு செய்து படித்து வருகிறாள். அவள் நினைத்த படிப்பு இல்லையென்றாலும், வித விதமான தாவரங்களைப் பற்றிப் படிப்பதில் அவளுக்கு ஆர்வம் கூடத்தான் செய்தது. அதை ஆர்வத்துடனே ஏற்றுக் கொண்டாள்.

அவள் எப்போதும் இப்படித்தான். பெரியதாக எதற்கும் ஆசைப்பட மாட்டாள். ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்று காலை உதைத்துக் கொண்டு அடம் பிடிக்கவும் மாட்டாள். இதுதான் தங்கள் வீட்டு நிலையென்று சின்னா சொல்லிக் கொடுத்து வளர்த்ததால் உண்டான பக்குவம் இது!

இப்போது அவளின் இறுதியாண்டு கடைசிப் பரிட்சையில் இருக்கிறாள்.

அம்மா சொன்னது போல், தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு, அவளின் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டவள்... மனம் படிப்பில் லயிக்காமல் அந்த இடத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.



எப்போதும் ஒரு விஷயத்தை நினைத்து வருந்தாத இவளை இன்று மூர்த்தியின் நிலம் பாடாய்ப் படுத்தியது. சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தவள் பின் மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த தன் அன்னையை அழைத்தாள்.

"அம்மா..." என்ற அழைப்பிற்குப் பதில் இல்லாமல் போகவும், மீண்டும், "அம்மா..." என்றாள்.

"அட என்னடி... லோம்மா லோம்மான்னுட்டு... காரியத்தைச் சொல்லு..." எனச் சின்ன அதட்டல் போட,

"அம்மா, நம்மட மூர்த்தி மாமா இருக்காருல்ல..." என்றாள்.

"இருக்காரு... அவுகளுக்கு என்ன இப்போ...?"

"இல்லம்மா... மாமா இடத்தை விக்க ஆளுக்குச் சொல்லிட்டாங்க... இன்னிக்கு இடம் பார்க்க ஆள் வந்தாங்க..." என்றாள்.

"நல்ல விசயம்தானடி... அதுக்கு இப்போ என்ன...?" என்ற சின்னாவை எரிச்சலாக நோக்கி,

"ம்ச்... அந்த இடத்தில சாய ஃபாக்டரி கட்டப் போறாங்களாம்..." என்றவள், அதைத் தொடர்ந்து அந்த இடத்தைப் பற்றிச் சொல்ல,

"இதுல உனக்கென்னடி வந்துச்சு... அந்த ஆள்கிட்ட இருக்கு. அவன் விக்குறான்... அங்க என்னத்த கட்டுனா உனக்கென்ன?" என,

"என்னம்மா நீ... உனக்கு ஒண்ணுமே தெரியலை... அந்த ஃபாக்டரி மட்டும் வந்துச்சு... இப்போ இருக்கிறாப்பல இந்த இடம் இருக்காதும்மா... நிலம் எல்லாம் வீணாப் போயிடும். அப்புறம் நம்ம ஓடத் தண்ணி எல்லாம் கெட்டுப் போயிடும்..." என அதனால் இயற்கைக்கு ஏற்படும் பாதகத்தை விளக்கித் தனக்கு ஏற்படும் பாதகத்தையும் எடுத்துரைத்தாள்.

"அதுக்கு நம்மால என்ன பண்ண முடியும், முல்லை?" என மகளின் மனம் புரிந்த தாய் வாஞ்சையாகக் கேட்க,

"இல்லம்மா... மூர்த்தி மாமாகிட்ட நீ எடுத்துச் சொல்லேன். இது வேண்டாம்னு... இல்லேன்னா... அப்புச்சி கிட்ட சொல்லிச் சொல்லச் சொல்லு..." எனத் தன் கோரிக்கையை வைக்க,

"அடிங்க... அந்த ஆளு ஏதோ என்னைய பேச்சுக்குத் தங்கச்சின்னு கூப்பிடறான். அதுக்கின்னுட்டு நான் போய் அவன்ற நிலத்துக்கு உரிமை கொண்டாட முடியுமா! அவன் இடம். அவன் என்னத்த பண்ணா உனக்கென்ன முல்லை? இது மாதிரி உன்ற அப்புச்சிகிட்டயும் உளறி வைக்காதே. பேசாமப் படி..." என மகளை அதட்டிப் படிக்கச் சொல்ல,

"அடப் போம்மா..." எனத் தன் அன்னை புரிந்து கொள்ளவில்லை என்ற ஆதங்கத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு, தங்கள் வீட்டில் இருக்கும் அந்த ஒற்றைப் படுக்கையறையில் பழைய மரக் கட்டிலில் படுத்துக் கொண்டாள். இன்னமும் அவளுக்கு அந்த இடத்தைப் பற்றியே மனம் சிந்தித்துக் கொண்டிருக்க... இப்போது மூர்த்தியின் மீதிருந்த கோபம், இடத்தை வாங்கச் சம்மதித்த மகிழனின் புறம் திரும்பியது.



'தான் அத்தனை சொல்லியும், தன் பேச்சைக் கேட்காமல் இடத்தை வாங்க ஒப்புக் கொண்டானே... இவனுகளுக்குக் காசு இருக்குன்னு திமிரு. காசைக் கொட்டுனா எல்லாத்தையும் ஒரே நொடியில அழிச் சுருவானுங்க. எத்தனை காசைக் கொட்டினாலும் ஒரே நிமிஷத்துல ஒரு மரத்தை வளர்த்த முடியுமா இவனுங்களாலே... ஒரு மரம் வேண்டாம். குழியைப் பறிச்சு ஒரு செடி நடச் சொல்லு, பார்ப்போம்.

வேர்வை சிந்தி உழைக்கிற உழவனுக்குத்தான் அந்தக் கஷ்டம் புரியும். அவனை அப்பவே கல்லைக் கொண்டு மண்டையை உடைச்சிருக்கணும்...' என கறுவிக் கொண்டவள், அவன் மேலிருந்த கோபத்தில் படுத்த வாக்கிலே காலை உதற, மாலையில் கீழே விழுந்து வாரியதில் முட்டியில் பட்ட அடி இப்போது வலியெடுக்க ஆரம்பித்தது.

வலி தாங்க முடியாமல், 'ஸ்ஸ்...' எனக் கண்ணைச் சுருக்க, "அச்சோ.. அம்மாவுக்குத் தெரிஞ்சா ஏசும்..." என்றவாறு, தன் அன்னைக்குத் தெரியாமல் காலை நீர் வைத்துத் துடைத்து, முகத்தில் பூசும் பவுடரைக் காயம் பட்ட இடத்தில் வைத்தபோது, மகிழன் அவளின் பாவாடையைத் தூக்க வந்தது, இப்போது நினைக்க

அவளின் உதட்டில் புன்னகைக் கீற்றை உற்பத்தி செய்தது.

"ஆளையும் மூஞ்சியும் பாரு... யாரு என்னன்னு தெரியாது. பொண்ணோட பாவாடையைத் தூக்க வர்றான்... கிறுக்குப் பய... கிறுக்குப் பய..." என முகத்தில் புன்னகையுடனே அவனை வசைபாடிக் கொண்டிருந்தாள்.

இதற்குள் பென்ஷன் பணத்தைப் பேங்கிலிருந்து எடுத்து விட்டு அவளின் அப்புச்சி தம்பியப்பன் வீடு வந்து சேர்ந்திருந்தார்.

அவரின் அரவம் உணர்ந்து, முன் வாசல் திண்ணைக்கு வந்தவள், தன் தாத்தாவைப் பார்த்ததும், "அப்பு... ஏனுங்க அப்புச்சி இன்னிக்கு இத்தனை நேரம்...?" என அணைத்துக் கொண்டவளைத் தனது தளர்ந்த கைகளில் அணைத்துக் கொண்டவர், "பேங்க் வேலை மதியமே முடிஞ்சுதுடா. அங்க என்ற பழைய சிநேகிதனைப் பார்த்தேனா... அப்படியே பழசுதுகள பேசி நேரம் போயிடுது. ஆமா, நீ என்ன படிக்காம செல்லம் கொஞ்சிட்டு கெடக்க..." என,

"அட போங்க அப்பு... அது எல்லாம் ஏற்கெனவே படிச்சாச்சு..." என,

அதற்குள் தம்பிக்குக் குடிக்கச் செம்பில் தண்ணீர் எடுத்து வந்த சின்னா, "இதைக் குடிங்க மாமா..." என அவரிடம் கொடுத்து விட்டு, மகளிடம் திரும்பி, "இப்படியே சொல்லிச் சொல்லி நாளைக்குப் பரிட்சையில் கோட்டை



விடு... அப்புறம் உன்றகிட்ட எம்மட வாய் பேசாது... வெளக்கமாறுதான் பேசும்..." என்றார்.

"ஹா பேசும் பேசும்... போம்மா. போய் மாட்டைக் குளிப்பாட்டி, பவுடர் பூசி பொட்டு வை..." என அன்னையை விரட்டியவள், "உனக்கு உடம்புல கொழுப்புக் கூடிப் போச்சுடி ராங்கி..." என மகளைச் சாடிவிட்டு உள்ளே சென்று விட்டார்.

இப்போது, தன் பாட்டனாரின் தோளில் வாகாகச் சாய்ந்து கொண்டவள், அவரிடம் மூர்த்தியின் இடத்தைப் பற்றி விளக்க... கேட்ட அவருக்கோ, தன் பேத்தியின் பொதுநல அக்கறையை நினைத்துப் பெருமை கொண்டாலும், அடுத்தவர் நிலத்தில் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே... என ஆணையிட அவருக்கென்ன உரிமையிருக்கிறது என நிதர்சனத்தைப் பேத்திக்கு விளக்க, "அப்போ... இனி எல்லாமே போச்சா அப்புச்சி..." எனக் குரலில் வேதனையுடன் வினவ,

"இப்போ யாரு கண்ணு விவசாயம் எல்லாம் பார்க்கிறாங்க... வாழ்க்கையில் எல்லாருக்கும் எல்லாத்துக்கும் அவசரம்... கல்யாணம் பண்ண அவசரம், புள்ள பெத்துக்க அவசரம், அப்புறம் பெத்த புள்ளங்கள நல்லா வளர்க்கணும்னு அவசரம், இந்த எல்லா அவசரத்துக்கும் பணம் அவசரம் மற்றும் அவசியம்.. அதுக்கு விவசாயத்தை நம்பிட்டுக் கிடந்தாப் போதுமா... ஆறு மாசத்துக்கு முன்ன மழையை யூகிச்சுப் பயிர் விதைக்கிற காலமெல்லாம் எப்போவோ மலையேறிப் போச்சு கண்ணு...

"அப்படியே ஒரு சிலவுக விவசாயம் பண்ணினாலும் இப்போ இருக்கிற கால மாற்றத்தை நம்பிப் பணம் போடப் பயப்படறானுங்க. மழையடிச்சா வெள்ளமாப் பொழியுது. இல்லையா, வெயில் சுட்டெரிக்குது.... இதையெல்லாம் நம்பி எவனும் மெனக்கெட விரும்பல தாயி... கிடைச்ச விலைக்கு வித்துட்டு ஊருக்கு ஒதுக்குப்புறமா நாலு செண்ட்டு நிலத்தை வாங்கி வீட்டைக் கட்டி சந்தோஷமாத் தன் குடும்பம், தன் வாழ்க்கைன்னு... எல்லாம் சுயநல மாயிடுச்சு...

"அவங்களைச் சொல்லியும் குத்தமில்லை... எல்லாரும் காலம் போற ஓட்டத்துக்கு ஓடித்தானே ஆகணும். நீ இதையே நினைச்சு மனசை வருத்திக்காதே, கண்ணு..." எனப் பெரியவராய் நிதர்சனத்தை விளக்கினார்.

முற்போக்குச் சிந்தனைவாதியான தம்பி எப்போதுமே இப்படித்தான். ஆண்களை விடப் பெண் பிள்ளைக்குத் தன்னம்பிக்கை, தைரியம், படிப்பு அனைத்துமே அவசியமென்று எப்போதும் முல்லையை ஊக்குவிப்பார்... பெண்ணுக்கு அடக்கமும் அவசியம். அதே சமயம், யாரிடமும் தேவையற்று அடங்கிப் போகக் கூடாது என்பதைச் சொல்லி வளர்த்திருக்கிறார்.

முல்லைக்கு ஒரு நண்பனைப் போன்றவர். இதுவரை ஒரு நாளும் அவள் தந்தை இல்லையென்று வருந்தியதே இல்லை. தந்தை இருந்து செய்ய வேண்டிய அனைத்தையும் அவர் செய்திருக்கிறார். அதுவே அவரின் மீது அவளுக்குத் தனிப் பிரியத்தை வர வைத்தது.



அன்னை சின்னாவை விட அவள் எப்போதுமே தாத்தா செல்லம்தான். அதனால் சின்னா அவளைக் கண்டிக்கும் உரிமையைக் குத்தகைக்கு எடுத்திருந்தார்.

இப்போதும் தன் தாத்தாவின் வார்த்தைகளை உள்வாங்கிக் கொண்டவளுக்கு அப்போதைக்கு அந்த இடத்தைப் பற்றிய சிந்தனை மனதின் ஓரத்தில் தள்ளப் பட்டது.

"தாத்தனும் பேத்தியும் பேசிக்கிட்டு இருந்தா நேரம் போறதே தெரியாது... ரெண்டு பேரும் வந்து வயித்துக்கு ஆகாரத்தைப் போட்டுட்டுக் கதை பேசுங்க..." எனச் சின்னா விட்ட அதட்டலில், தம்பி பின் பக்கம் சென்று கைகால் அலம்பி வர, முல்லை தட்டை எடுத்துக் கொண்டு சாப்பிடத் தயாராக இருந்தாள்.

பேத்தியின் செயலில் சிரித்தவாறு, அவள் பக்கத்தில் அமர்ந்து இருவரும் ஊர்க் கதை, உலகக் கதை யடித்தவாறு உணவுண்டு முடித்ததும், மீண்டும் திண்ணைக்கு வந்து சிறிது நேரம் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தவள், அப்படியே மடங்கிச் சரிந்து, தன் பாட்டனின் மடியிலே தலை சாய்த்தாள்.

சமையற்கட்டில் வேலையை முடித்துக் கொண்டு வந்த சின்னா, மகள் அவளின் மாமனார் மடியில் உறங்கிக் கொண்டிருப்பதை ரசித்தவாறு, "ஏழு கழுதை வயசாச்சு... இன்னமும் வாழ்க்கையைப் புரிஞ்சுக்குதா பாருங்க, மாமா! யாரோ எவரோ இடம் வாங்குறாங்கன்னு இவ கிடந்து குதிக்கிறா..." என மகளைச் செல்லமாக வைய,

"விடு சின்னா... சின்னப் புள்ள. அதுக்கு என்ன தெரியும்... பாப்பா சொன்னதும் எனக்குள்ளேயும் இந்த ஆதங்கம் இருக்கத்தான் செஞ்சுது... ஆனாலும் நம்மளால என்னத்த செய்ய முடியும், சொல்லு... பெருசுக நாம வாய் விட்டுக் கேட்க முடியாததைச் சிறுசு கேட்டுட்டா..." எனப் பேத்திக்குப் பரிந்துரைக்க,

"ம்ம்... நீங்க எங்கே உங்க பேத்தியை விட்டுக் கொடுக்கப் போறீக...?" என மகளின் அருகில் அமர்ந்தவர், அவளின் காலைத் தன் மடியில் எடுத்து வைத்தவாறு மெல்லப் பிடித்துவிட, தெரியாமல் அவர் கை அவளின் முட்டி மேல் பட,

தூக்கத்திலே, "ஸ்...ஆ..." எனக் காலைக் குறுக்கியவளின் முகத்தைக் கவனித்தவர், சந்தேகம் வர... அவளின் பாவாடையை மெல்லத் தூக்கிப் பார்த்தவருக்கு அங்கே ரத்தம் காய்ந்த இடத்தில் பவுடர் வைத்து மறைத்திருந்த அவளின் காயம் தெரிய, "அட கழுதை... இது என்ன இத்தா பெரிய காயம்..." என வருந்தியவரை,

"என்னாச்சு சின்னா..." என்ற மாமனாரின் கேள்விக்கு,

"எனக்கு அப்பவே சந்தேகம் தானுங்க மாமா... அவ பாவாடையில மண் இருந்தப்பவே சந்தேகம் வந்துச்சு. பள்ளிக்கூடத்துக்குப் போகவே இல்லைன்னு சாதிச்சா... இங்க பாருங்க, மாமா... எங்கேயோ விழுந்து வாங்கிட்டு வந்துருக்கா..." எனத் தனக்குள் பேச ஆரம்பித்து, மாமனாரிடம் புலம்பியவாறு, எழுந்து சென்று



எண்ணெயையும் மஞ்சளையும் சேர்த்துக் குழைத்து, மகளின் காயத்தில் ஒற்றி எடுக்க,

அது கொடுத்த எரிச்சலில் மீண்டும், "ஸ...ஆ..." என முனகியவாறு, காலைச் சுருக்க.... "இப்போ முனங்கு... அடிபட்டப்பவே மருந்து வச்சிருந்தா முட்டி வீங்கி யிருக்காது. ச்சே... இவளுக்கு எப்போதான் பொறுப்பு வரப் போகுதோ?" என வழக்கம் போல் தன் புலம்பலை ஆரம்பிக்க...

தம்பி, மருமகளின் பாசத்திலும், மகளைப் பற்றிய அவளின் அக்கறையிலும் முகத்தில் புன்னகை பூத்தார்.

காலை வழக்கம் போல் ஐந்தரை மணிக்கு விழிப்புத் தட்டிவிட, சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்தவள், கண்ணைத் தேய்த்துக் கொண்டே முன்பக்கம் வர, மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்த சின்னா மகளைப் பார்த்து நேற்றுப் பொய் சொன்னதற்கு வசவு பாடத் துவங்கியதும்,

காதை மூடிக் கொண்டு, வழக்கம் போல் பேஸ்ட்டை பிரஷில் போட்டு வாயில் அடைத்துக் கொண்டு தோட் டத்துக்கு வந்தவள், அதிகாலை நேரப் பனிக் காற்றையும், சூரியனின் வரவையும் உள்வாங்கிக் கொண்டவாறு, இடத்தைச் சுற்றிப் பார்வையிட, நேற்றைய நிகழ்வுகள் மீண்டும் எழுந்தன.

ஆனாலும் அவளால் முடிந்த ஒரு பெருமூச்சை மட்டும் வெளியிட்டுத் தன் காலைக் கடன்களையும்

முடித்துக் கொண்டு தயாராகி வந்தவள், காலை உணவையும் தன் அப்புச்சியுடன் முடித்துக் கொண்டு, தன் பென்ஸை எடுக்க..

அவள் தாத்தா, "முல்லை... சைக்கிள் பெண்டு விழுந்திருக்கே... ரிப்பேரு செய்யணும்... வெச்சுட்டுப் போ... இன்னிக்கு முக்குக் கடையில விடறேன்..." என,

"இல்ல அப்பு... சைக்கிள் இல்லைன்னா நடந்து போக லேட்டாகிடும்... நானே வரும்போது விட்டுறேனுங்க..." என்றவாறு, அவரிடம் விடைபெற்று, சைக்கிளையும் உருட்டிக் கொண்டு அவர்கள் தோட்டத்தின் கடைசி மூலையும், மூர்த்தியின் தோட்டத்தின் கடைசி மூலையும் இணைக்கும் வரப்பின் ஓரத்திலிருந்த அவளின் வேம்பம்மன் கோவிலை அடைந்தாள்.

சைக்கிளை நிறுத்தி விட்டுத் தான் கையோடு கொண்டு வந்திருந்த அரளிப் பூவை, அவள் அம்மனாகப் பாவிக்கும் கடவுளுக்குச் சூடி விட்டு, மஞ்சள், குங்குமத்தை வைத்து விட்டு, அங்கே ஏற்கெனவே சிறு கூடு போலிருந்த இரண்டு மண்ணோட்டைக் குவித்து, அதனுள் இருந்த அகல் விளக்கிலிருந்த திரியை எடுத்து விட்டுப் புது எண்ணெய் ஊற்றித் திரி போட்டு, விளக்கேற்றிச் சூடம், ஊதுவத்தி ஏற்றி, தான் பரிட்சை நன்றாக எழுத வேண்டுமென்ற கோரிக்கையுடன் வேம்பம்மனிடம் இன்னொரு கோரிக்கையும் விடுத்தாள்.

"அம்மா... இந்த இடத்தை மூர்த்தி மாமா விக்கப் போறாங்களாம். சின்ன வயசிலிருந்து நான் கேட்டதெல்லாம் நீ கொடுத்திருக்கதானே... அதே போல இந்த இடத்தை அந்தத் தாடிக்காரனை வாங்க விடாதேம்மா... அவன் மட்டும் வாங்கிட்டான்... உன்னோட இடத்தையும் சேர்த்து ஆட்டைய போட்டுருவான்... அப்புறம் உனக்கு எப்படி நான் தினமும் பூஜை செய்ய முடியும்?

"ப்ளீஸ், அம்மா... அந்தத் தாடிக்காரனுக்கு இன்னிக்கி ஏதாவது வயித்து வலி, இல்லைன்னா தலை வலி வர வச்சு... அவனை இன்னிக்கு வரவிடாமப் பண்ணிடு, தாயி... உனக்கு நான் இந்த வெள்ளிக்கிழமை சுண்டல் செஞ்சு கொண்டாறேன்..." என்ற சத்தமான வேண்டுதலுடன் சின்னதாக ஒரு பூஜை செய்து முடித்து, கீழே விழுந்து கும்பிடும்வரை அனைத்தும் நன்றாகவே நடந்தது.

அவள் சாமியிடம் பேச்சு வார்த்தை முடித்து விட்டுத் திரும்பும் போது, அங்கிருந்த இன்னொரு மரத்தின் மீது சாய்ந்து கொண்டு இவளையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான் அவளின் தாடிக்காரன் என்ற மகிழன்.

முதலில் அவனை அங்கே பார்த்துத் திகைத்தவள்... பின், அவனின் தோற்றத்தில் பிரமித்தாள். நேற்றுப் பார்த்ததற்கு முற்றிலும் வேறாகக் கருப்புப் பேன்ட்டும், கோடிட்ட நீல நிற டாக்டர் காலர்ட் சட்டையில் டிப்-டாப்பாக நின்று கொண்டிருந்த மகிழனை விழியகலாமல் பார்த்துக் கொண்டிருந்தவள் மூளைக்குள் மணியடிக்க, "அச்சச்சோ... நீங்களா!" என ஆச்சரியத்துடன் விரிந்த கண்களின் அழகிலும், கையை உதறி ஒரு விரலைப் பல்லால் கடித்து

அவள் அசடு வழியும் அழகையும் கண்டு அவனுடன், அவன் மனமும் தலைகுப்புற விழுந்தது.

அவன் தான் பேசியதை அனைத்தும் கேட்டிருப்பான் என நினைத்தவள், நொடிப் பொழுதில் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு மூர்த்தியின் நிலத்தின் முன் பக்கம் அடைந்ததும்தான் அங்கிருந்த சில வாகனங் களையும், சில அதிகாரிகளையும் சுற்றிப் பார்வை யிட்டாள்.

ஒரு சிலர் இடத்தை டேப் வைத்து அளந்து கொண்டிருக்க, ஒரு சிலர் அளந்த இடத்தில் கம்பிகளை நட்டுக் குறியிட்டுக் கொண்டிருந்தார்கள். இத்தனை நேரம் தான் பேசியதை அவன் கேட்டு விட்டானே எனச் சின்ன வழிசலுடன் கூடிய வெட்கத்துடன் நடந்து வந்தவள், அப்போதுதான் அவன் வந்திருக்கும் காரணம் புரிய, மனதில் எரிச்சல் கூடிக் கொண்டது.

'சரியான சுயநலக்காரன்... சொன்னதைப் போல இன்னிக்கே நிலத்தை வாங்கப் போறான் போல... பணத் திமிரு பிடிச்சவன். சே... முல்லை, இவன்கிட்ட போய் நேத்துக் கெஞ்சினியே...' - மனதிற்குள் முடிந்த அளவிற்குத் தனக்குத் தெரிந்த கெட்ட வார்த்தைகளால் அவனை அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள்.

அவள் பின்னே வந்த மகிழனைப் பிடித்துக் கொண்ட மூர்த்தி, அவனிடம் பேசிக் கொண்டிருக்க... அவரின் பேச்சில் கவனம் செலுத்தாமல், மனதையும், மூளையையும் முல்லையின் பின்னே செல்லவிட்டான்.



கடவுளிடம், அவள் வைத்த கோரிக்கையில், தெரிந்த அவளின் குழந்தைத் தனம், தன்னைக் கண்ட திகைப்பு, பின் தன் மீது ஒரு ஆர்வப் பார்வை, அதன்பின் தன் மீது எரிச்சல் கலந்த கோபத்துடன் கூடிய இயலாமை என அவள் காட்டிய அனைத்து உணர்ச்சியிலும் நேற்று இரவு அவன் எடுத்திருந்த அனைத்து உறுதிகளும் தவிடுபொடியாகி நேற்று விதைத்த அவளின் எண்ணம், இன்று வேர் பிடித்து ஒரே நாளில் காதல் மரமாக வளர்ந்து நிற்கும் அதிசயத்தை எண்ணித் தவித்திருந்தான்.

## 4

சேலை மூடும் இளஞ்சோலை,
மாலை சூடும் மலர்மாலை...
இருபது நிலவுகள் நகமெங்கும் ஒளிவிடும்...
இளமையின் கனவுகள், விழியோரம்
துளிர் விடும்...
கைகள் இடைதனில் நெளிகையில்
இடைவெளி குறைகையில்
எரியும் விளக்கு
சிரித்துக் கண்கள் மூடும்...

**நே**ற்று மதியத்திலிருந்து மகிழனின் மனதில், முல்லை எனும் புஷ்பம் சொல்ல முடியாத உணர்வுகளை அவனுள் பரவ விட்டிருந்தாள். அவளைக் கண்ட அந்நொடி முதல் அவள் தன் கண் மறையும்வரை அவள்

காட்டிய வெவ்வேறு முகத்தினில் மகிழன் எனும் ஆண் சிங்கத்தை வென்று விட்டிருந்தாள்.

ஆம்... மகிழன் அவளைக் காதலிக்கிறான்தான். தனக்கு மனைவியாகப் போகிறவள் என இன்று அறிவிக்கப்பட்ட அபூர்வாவின் அழகில் உண்டாகாத காதல், அவளின் முத்தத்தில் வராத காதல், அவள் கண்களில் கரை புரளாத காதல்... இன்று அந்தப் பட்டிக்காட்டுப் பைங்கிளியின் 'கிறுக்கு' என்ற சொல்லில் உண்டானதை நினைத்து, அவன் உதடுகள் ஒரு மெல்லிய சிரிப்பை வரவைத்தன.

முதலில் அவள் கண்ணைச் சந்தித்த நிமிடம் அவனுக்குள் உண்டான பிரமிப்பு, அதன் பின் அவள் தன்னைத் தாக்கியபோது உண்டான கோபத்தை நொடியில் பறக்கச் செய்த அவளின் நியாயமான கோபம், பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென அவள் எடுத்த முயற்சிகள், மகிழனை வாரிய அவளின் துடுக்குத்தனம், கடைசியில் மூர்த்தியிடம் அவளின் வாதாடல் என அனைத்துமே அவனுள் அவளை நிரந்தர மாகக் குடியமர்த்தி இருந்தது.

நேற்று மாலை போளுவாம்பட்டியிலிருந்து வரும் வழியெங்கும் அவனுக்குள் ஒரு பிரளயமே வெடித்துக் கொண்டிருந்தது.

இத்தனை வருடங்களில், எந்தப் பெரிய சிக்கல் வந்தாலும், யாரின் ஆலோசனையின்றித் தானே தன் சுய முடிவில் தன் சிக்கலைப் போக்கிக் கொண்டவன், ஆனால்



இன்று இந்தக் காதல் எனும் மாயச் சிக்கலில் தான் இவ்வளவு எளிதில் மாட்டிக் கொண்டு முழிக்கப் போகிறோம் என அவன் கனவில் கூட நினைத்ததில்லை.

காதல் என்ன காரண காரியங்களுடன் தோன்றுவதா...!

அந்த உணர்வு, யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் உதயமாகலாம். இருபது வயது இளம் கன்னிகைக்கு ஐம்பது வயது முதிர் காளையுடன் கூடக் காதல் உண்டாகலாம். இவருக்கு இவர் மேல் தான் காதல் வர வேண்டும் என எந்தச் சட்ட விதி முறைகளும் காதலுக்கில்லை. மகிழன் அந்த உணர்வின் ஆதிக்கத்தில்தான் கட்டுண்டிருந்தான்.

ஆனால், இது எந்த அளவில் சாத்தியம்... 'இதோ, அரை நாளுக்கு முன்புதானே அவனுக்கும் வேறொரு பெண்ணுக்கும் நிச்சயம் முடிந்திருந்தது. அதற்குள் நான் எப்படி வேறொரு பெண்ணின் சிந்தனையில் லயித்துப் போனேன்...' என அவன் உள்மனம் கேட்ட கேள்விக்கு விடையளிக்கத்தான் அவனால் முடியவில்லை.

இதே சிந்தனையுடன் வீடு வந்தவன், தன்னிடம் விடைபெற்ற பிரபுவிடம் ஒரு தலையசைப்புடன் விடை கொடுக்க... தன் முதலாளியின் யோசனையை ஓரளவிற்கு யூகித்திருந்தவன், அவனிடம் ஒன்றும் விசாரிக்காமல் அங்கிருந்து நகர்ந்தான்.

வரவேற்பறையில் கேள்விகளுடன் காத்திருந்த பெற்றோருக்கு, "தலை வலிக்கிறது... எதுவாக இருந்

தாலும் காலையில் பேசிக்கலாம்ப்பா... சாப்பாடு வேண்டாம்மா... பால் மட்டும் அரை மணி நேரம் கழித்துக் கொடுத்து விடுங்க..." எனத் தந்தையிடமும், அன்னை யிடமும் மொழிந்தவன், விடுவிடுவென்று மாடியேறித் தன்னறைக்குச் சென்றவனை, "ஹாய் அண்ணா..." எனப் புன்னகையுடன் வரவேற்ற தங்கையின் முகத்தில் தெரிந்த பூரிப்பு, இன்றைய நிச்சயத்தை வலியுறுத்த... அது அவனுக்குள் ஏற்கெனவே மண்டிக் கொண்டிருந்த குழப்பத்தை மேலும் கிளறி விட்டிருந்தது.

தன் பதிலுக்காகக் காத்திருக்கும் தங்கைக்கு ஒரு சின்னச் சிரிப்பை உதிர்த்து விட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

இவனின் இந்த முகத்தை வீட்டினர் அனைவரும் அறிந்த ஒன்றே... அவன் எப்போதும் முக இறுக்கத் துடன், கோபக்காரனாக வலம் வரமாட்டான். அவனுக் குள்ளும் இயல்பான மகிழன் இருக்கிறான்தான். அந்த மகிழன் வீட்டில் இருக்கும் தங்கையிடமும், தாயிடமும் வம்பு வளர்த்துக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும் முகத்தில் மாறாப் புன்னகையுடன் சுற்றி வருவான்.

இவனின் இந்தப் பரிமாணம் அவன் ஏதேனும் கோபத்தில், யோசனையில், குழப்பத்தில் இருந்தால் அவன் சூடிக் கொள்ளும் முகமூடி இது... ஆனால் இப்போது மூன்றில் எந்த உணர்வு என்றுதான் அவர்களால் வரையறுக்க முடியவில்லை. இம் முகத்துடன் இருப்பவனிடம் போய்ப் பேசினால் தமக்குத் தேவையான



பதில் கிடைக்காது என்பதைக் காட்டிலும், அவன் தங்களிடம் முகத்தைக் கூடக் காட்ட மாட்டான் என்பதை அவர்கள் அறியாதவர்களா என்ன...!

"காலையில்தான் நிச்சயம் முடிந்தது... முகத்தில கொஞ்சமாச்சும் கல்யாணக் களையிருக்கா! அதுக்குள்ள வேலை இருக்குன்னு எங்கேயோ கிளம்பிப் போயிட்டு இப்போ முகத்தைத் தூக்கி வச்சுட்டு வந்திருக்கான்... இப்போ எவனை வம்புக்கு இழுத்துட்டு வந்திருக்கானோ...! ஹ்ம்ம்... எல்லாம் உங்களால்தான்..." எனப் புலம்பலில் ஆரம்பித்துக் கணவனைக் குறைகூறி முடித்தார் கோகிலா.

"அவனைப் பற்றித் தெரிந்து கொண்டே... ஏன் கோகி, என் மேல் பழியைப் போடுகிறாய். நானா அவனை இப்போது வெளியே போகச் சொன்னேன்... நானா அவனை மற்றவர்களுடன் சண்டை போடச் சொன்னேன். எல்லாம் அம்மாவோட குணம்..." எனப் பாவமாகக் கேட்டு, மனைவியைக் குறை கூறிய வெங்கடராமனை முறைத்தவாறு,

"ஆமா... ஆமா. நீங்க ரொம்ப நல்லவருதான். உங்களைப் பற்றி ஊருக்கு வேணாத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்கா தெரியாது... உங்களுடன் முப்பது வருடக் காலம் குப்பையைக் கொட்டிக் கொண்டிருப்பவள் நான்தானே..." என முகத்தை நொடிக்க,

"அப்படி என்னம்மா அப்பா செய்தாரு... அப்பாவோட முகத்தைப் பாரு, பச்சப் பிள்ளை மாதிரி... அப்பா

ரொம்ம்ம்ப... நல்லவரு மம்மி...” - என மதுரிமா அந்த ரொம்பவில் ரொம்ப அழுத்தித் தகப்பனைக் கலாய்க்க...

“மதும்மா... நீயுமா...!” என முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்ட தகப்பனின் கழுத்தைக் கட்டிக் கொண்ட மதுரிமா, “சே... சே... நோ டாடி... நான் எப்பவுமே உங்க கட்சிதான்...” எனச் செல்லம் கொஞ்ச,

“ஆமா... பெரிய கட்சி... சோத்துக் கட்சி. ரெண்டு பேரும் கொட்டிக்கிறதில்தானே கூட்டுக் கட்சி. ஏன்டி... நிச்சயமான பொண்ணு மாதிரியா நடந்துக்கிற... இன்னும் கொஞ்ச நாளில் நீதான் ஒரு குடும்பத்தைத் தனியே சமாளிக்கணும்... இன்னமும் சின்னக் குழந்தை மாதிரி, அதென்ன அப்பாகிட்ட செல்லம் கொஞ்சிக்கிட்டு இருக்க... வா. வந்து என்னுடன் நைட் டிஃபன் வேலையைக் கத்துக்கோ...” எனக் கோகிலா அதட்ட,

“விடு கோகி... இதெல்லாம் இன்னும் கொஞ்ச நாள்தானே... மெதுவாக் கத்துக்கட்டும்...” என வெங்கட் மகளுக்கு வக்காலத்து வாங்க...

“இதை எல்லாம் நான் எதுக்குச் செய்யணும்? அதான் இளா வீட்டில் ரெண்டு சமையலாள் இருக்காங்களே...” என்ற மகளை,

“நீ இப்படியே சொல்லிட்டுத் திரி... அங்கே ரஞ்சித் கிட்ட இடிபட்டாத்தான் திருந்துவ...” என்ற அன்னையை,

“ஆமாம்மா. நீங்க இப்படியே எங்களோட சண்டை பிடிச்சுகிட்டு இருங்க... இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் ஆசை மகன்... ‘அம்மா, அம்மா...’ என உச்ச டெசிபலில் ஏலம் விடப் போறார். நீங்க அண்ணனிடம் இடி வாங்குமுன்னே பால் கொண்டு போய்க் கொடுங்க...” என அன்னையை விரட்ட,



“அட ஆமா. ராசுவுக்குப் பால் கொடுத்துட்டு வந்து உங்க ரெண்டு பேரையும் வெச்சுக்கிறேன்...” என்றவாறு சென்ற கோகியை அவ்விடம் விட்டு விரட்டிய சந்தோஷத்தில் தந்தையும் மகளும் ஹை-ஃபை அடித்துக் கொண்டனர்.

மகிழனின் அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்த கோகிலா, மகன் இன்னமும் உடுத்திய துணியைக் கூட மாற்றாமல் கட்டிலில் சாய்ந்து, கண் மூடி அமர்ந்திருப்பதைக் கண்டவர், கொண்டு வந்திருந்த பாலை, சைட் டேபிளில் வைத்தவர் மகனின் தலை கோதிவிட்டார்.

அன்னையின் ஸ்பரிசத்தில் கண் திறந்த மகிழனிடம், “என்ன ராசு...” என்ற கேள்விக்கு, மகனிடமிருந்து எந்தப் பதிலும் வராது என்பதை அறிந்தவர், எப்போதும் போல், “எந்தப் பிரச்சனையா இருந்தாலும், நீ அதை ரொம்பச் சுலபமா சமாளிச்சுடுவேனு எனக்குத் தெரியும் ராசு... மனசைப் போட்டு ரொம்பவும் குழப்பிக்காதே...” என ஆறுதலாக மொழிந்தவர்,

“போப்பா... போய் முகம் கழுவி, டிரஸ் மாத்திட்டுப் பால் குடிச்சுட்டு நல்லாத் தூங்கு...” என,

அவனும் அன்னைக்குப் புன்னகையுடன் கூடிய ஒரு சரி...யை உதிர்த்து விட்டுக் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

போன மகனின் முதுகை வெறித்துப் பார்த்தவர், அவன் குணமறிந்து அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

குளியலறையிலிருந்த கண்ணாடி வழி தெரிந்த அவனின் முகத்தை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தான். என்றும் இல்லாமல் இன்று அவன் முகத்தில் தெரிந்த பூரிப்பு... காதல் வந்த அவனுக்கு ஒரு களையைக் கொடுத்திருந்தது.

அவனுக்கு அவனையே அழகனாய்க் காட்டியது. இந்த அழகு அவனுள் புதியதாய்ப் பூத்த முல்லையின் வாசத்தால் என அவன் அறிந்ததே...

ஆனால் இது... இது... நோ... இது நிச்சயம் நடக்காது. இப்போது அவன் தங்கையின் முகத்தில் அவன் கண்டது இதே காதலின் சாயல். தனக்குத் தோன்றியது போல் அவளின் முகமும், அகமும், காதலால் மேலும் அழகுற்றிருந்ததே... அது இளாவின் மேல் அவள் கொண்ட அன்பின் பிரதிபலிப்பு அல்லவா...!

அப்படியென்றால் எனக்குள் இன்று பூத்திருக்கும் காதலால் என் தங்கையின் வாழ்வு என்னவாகும்...?

'ஹோ... நோ... இது நடக்கக் கூடாது...' என அவன் மனம் கூக்குரலிட,

'எந்தப் பிரச்சனையா இருந்தாலும் நீ அதை ரொம்பச் சுலபமா சமாளிச்சுடுவேன்னு எனக்குத் தெரியும் ராசு...' - சற்று நொடி முன்னர் அவன் அன்னை சொன்ன சொல் அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.



அதன் விளைவாக அவன் எடுத்த முடிவு முல்லையை மறக்க வேண்டுமென்று... தொழிலில் எத்தனையோ சாதித்தவனுக்கு இது மிகவும் சுலபம் என்றே நினைத்தான்.

ஒரு நாளில், ஒரு பொழுதே சந்தித்த அவளை மிகவும் எளிதாக மறந்துவிடலாம் என்றும் நினைத்தான்.

கனவில் வந்த பூஞ்சோலையின் பிம்பத்தைத் தலையணைக்குள் தலையைப் புதைத்து மறைக்க நினைத்தான். கண்ணை மூடினால் தான் அவள் முகம் வருகிறதென்று கண்ணைத் திறந்து கொண்டு நள்ளிரவில் வெகு நேரம் நடை பயின்றது அவனுக்கு ஒரு அளவிற்கு அவளின் நினைவை மறக்கச் செய்து உறக்கத்தைக் கொடுக்க... அப்படியே கட்டிலில் சரிந்தான்.

பிடித்திருக்கிறதோ இல்லையோ, ஒரு பெண்ணுடன் திருமணம் என உற்றார், உறவினர் முன் ஒப்பந்தம் போடப்பட்ட பின்னர் வேறொரு மங்கையின்பால் மயங்கி இன்னொருத்தியை மனவருந்தச் செய்யக் கூடாது என அவனின் நியாய மனம் எடுத்துரைக்க, அதன் விளைவாக அவன் தனக்குள் எடுத்திருந்த முடிவு, ஏனோ காலையில் கண் விழித்ததும் தவிடுபொடியானது...

காலைச் சூரியன் தன் தலையைக் காட்டு முன்னரே விழித்தவனுக்கு முதலில் உதித்த எண்ணம்... போளுவாம் பட்டி போக வேண்டுமென்பதே...

அதற்கு அவனின் நியாயவாதி மனது, 'அதான் அவளை மறக்க வேண்டுமென்று நினைத்துவிட்டா யல்லவா... அதன் பின் எதற்கு மீண்டும் அவள் இருக்கும் இடத்திற்குச் செல்கிறாய்....?' எனக் கேட்ட கேள்விக்கு,

'ச்சே ச்சே... நான் அவளையா பார்க்கப் போகிறேன்... நான் அந்த இடத்தையல்லவா வாங்கப் போகிறேன்...' என எடுத்துரைக்க,

'நீதான் அந்த இயற்கை சூழ்ந்த இடத்தில் கட்டடம் கட்ட வேண்டாமென நினைத்து விட்டாயல்லவா... பின் எதற்கு உனக்கு அந்த இடம்...?' என்க,

'டே... உண்மையைச் சொல்....' என அவன் உள் மனது இடுப்பில் கை வைத்து, முறைத்தவாறு கேள்வி கேட்க,

'நான் உண்மையைத்தான் சொல்கிறேன். எனக்கு அந்த இடமும், அந்தச் சூழலும் மிகவும் பிடித்திருக்கிறது... மேலும் நான் மூர்த்தியிடம் இடத்தை வாங்குவதாக வாக்குக் கொடுத்து விட்டேன். கொடுத்த வாக்கை என்னால் மீற முடியாது... அதனால் தான் வாங்கப் போகிறேன்... மற்றப்படி எனக்கு வேறெந்த எண்ணமும் கிடையாது.

'நான் நேற்று எடுத்த முடிவு, முடிவுதான். நான் இனி அப்பெண்ணை நினைக்கப் போவதில்லை. எத்தனையோ மனிதர்களைச் சமாளித்த என்னால் ஒரு சிறு பெண்ணைச் சமாளிக்க முடியாதா...?' என அவனுக்குள்ளே பலமணி நேரம் கேள்வி பதில்களுடன்..



'என் மனதை ஒரு நிலைப்படுத்தி விட்டேன்...' என்ற இறுமாப்புடன் போளுவாம்பட்டி வந்தவன் தான், இப்போது அவளின் பார்வையிலும், பேச்சிலும் அழகிலும் மீண்டும் தடுமாறி விழுந்தான்.

இடத்தைச் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டிருந் தவன் ஏதோ உள்ளுணர்வு உந்த... திரும்பிப் பார்த்த வனுக்கு, கரும்பச்சையும், அடர் சிவப்பும் கலந்த சுடிதாரில், தலை குளித்து அடர்ந்து படர்ந்த சிகையை ஒரு கிளிப்புக்குள் அடக்கி, நெற்றியில் சிறிய சிவப்பு நிறப் பொட்டிற்கு மேல் அவள் வைத்திருந்த குங்குமமும், கீற்றாய் அவள் தீட்டியிருந்த கண் மையும், நேற்றைய அவளின் கள்ளிக்காட்டு அழகியை விடவும் சற்றுத் தூக்கலாகத் தெரிந்தது.

நகரத்துப் பைங்கிளி அவன் கண்ணிற்குத் தங்கத் தாரகையாய்த் தெரிய, ஏற்கெனவே அவள் வீற்றிருந்த அவனின் மனதில், மேலும் கால் மேல் கால் போட்டு ஒய்யாரமாகத் தன் இருப்பை உணர்த்தினாள்.

இதற்கு மேலும் கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்த அவன் மனம் என்ன உணர்ச்சிகளற்ற காளை மாடா...?

நியாய மனதுடன் போட்ட சண்டையெல்லாம் காற்றில் பறந்திருக்க, அவள் பின்னே வந்தவன், தொடக் கத்திலிருந்து அவள் கடவுளுக்குச் செய்த பூஜையைச் சிறு ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தவன், பின் அவளின் தன்னைப் பற்றிய வேண்டுதலில் அவனுக்குள் சிரிப்புப் பீறிட்டுக் கொண்டு வந்தது.

'என் செல்லப் பால்கோவா...' என மனதுக்குள் பூஜிக்க,

'இது என்னது புதுசா பால்கோவா...' என வழக்கம் போல் அவன் மைண்ட் வாய்ஸ் குரல் கொடுக்க,

'அது... அது வந்து... நேத்து அவள் பால் கேன் வச்சுட்டு இருந்தாள் இல்ல... அதான்...' என விளக்கம் கொடுக்க,

'த்தூ...' என அவன் மனம் காறித் துப்ப,

'தேங்க் யூ...' என முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

'அது எப்படி மச்சி காதல் வந்தால், இந்தச் சூடு, சொரணை, வெட்கம், மானமெல்லாத்தையும் செகண்ட் ஹேன்ட்ல வித்துடறீங்க...' என மீண்டும் மனம் கேட்ட கேள்விக்கு,

'ஹி...ஹி..." எனச் சிரிக்க,

'ஹய்யோ! சகிக்கல...' என மனம் முகத்தைத் திருப்பிக் கொள்ள,

'ச்சே... நீ போ... என் சுகர் கேன்டியை சைட் அடிக்க விடாமல் டிஸ்டர்ப் செய்துக்கிட்டு... நீ உன் வேலையைப் பாருடா...' என மனச்சாட்சியை மண்டையில் தட்டி அடக்கினான்.

இவன் இவனுக்குள் வழிந்து கொண்டிருக்க, அதற்குள் தன் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு



திரும்பிய முல்லையை எந்தத் தடையுத்தரவுமின்றி அவன் தனக்குள் பதித்துக் கொண்டிருந்தான்.

அந்த நிமிடம் அவனுக்குள் நேற்று நடந்த நிச்சயம், அவன் மனதிற்குள் எடுத்த முடிவுகள்... தன் மனச்சாட்சியுடன் அவனிட்ட சண்டைகள் ஏதும் ஞாபகமில்லை. செலெக்டிவ் அம்னீசியாவைப் போல் அது மட்டும் மறந்திருந்தது.

இந்த நொடி 'இவள் என்னவள்...' என்ற நினைப்பு மட்டுமே அவனுள்ளிருக்க, அந்த நொடியை மிகவும் ரசித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அதற்குள் அவளோ அசடு வழிந்தவாறு அவ்விடத்தை விட்டு நகர்ந்திருக்க, அவள் பின்னே வந்தவன்... அதன் பின் அவள் முகத்தில் தோன்றிய கோபத்தைக் கண்டு, 'அச்சோ... என் கேன்டிக்குக் கோபம் வந்துடுச்சு போல... ஹய்யோ செல்லக் குட்டி! கோபப் படாதேடா... மாமன் உன் மனசை நோகடிப்பேனா...? இந்த இடமே உனக்குத்தான்டி என் வெல்லக்கட்டி...!' என மனதினுள் செல்லம் கொஞ்ச, அவன் மூளை குரலைப் பிடிக்க முடியாமல் (அதாங்க... மைண்ட் வாய்ஸ் கேட்சிங்) அவள் அவ்விடம் விட்டு நகர்ந்திருந்தாள்.

கல்லூரிக்குத் தேர்வெழுத வந்தவள் மனமும், மூளையும் மூர்த்தியின் இடத்திலும், அதை வாங்க வந்த மகிழனிடமுமே சுற்றிக் கொண்டிருக்க, வழக்கத்தை விடவும் நேரமாகத் தேர்வை முடித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டாள்.

அவளுக்கு முன்னரே அவளின் வகுப்புத் தோழிகள் வழக்கமாக அவர்கள் சந்தித்துக் கொள்ளும் இடத்தில் குழுமியிருக்க, அவர்களை நோக்கிச் சென்றாள்.

இன்றுதான் இறுதி நாள். இதன் பின் தோழிகள் அனைவரையும் ஒன்றாகப் பார்க்க முடியாதென்ற காரணத்தினால் தங்களுக்குள் நடந்த கசப்பான சம்பவங்கள், சின்னச் சின்னச் சண்டைகளை மறந்து ஒருவரை ஒருவர் அணைத்துத் தங்கள் பிரிவினை உணர்த்திக் கொண்டிருக்க, முல்லையின் மூளையில் இதை விடவும் பெரிய கவலை அரித்துக் கொண்டிருந்தது.

அதனால் இந்த பிரிவுபச்சார நிகழ்வில் கலந்து கொள்ளாமல் ஓரமாக அமர்ந்து கொண்டாள்.

மற்றொரு பக்கம்... இதே போல் இன்னுமொரு குழு தங்களுக்குள் பிரிவாற்றிக் கொண்டிருக்க, அதில் ஒருத்தி, "ஹே புவனா... இன்னிக்குத்தான்டி கடைசி நாள். இதற்குப் பிறகு நாமெல்லாம் நினைச்சாக் கூட பார்த்துக்க முடியாது. அதனால இன்னையோட நமக்குள்ள நடந்த எல்லாப் பிரச்சனைகளையும் மறந்துட்டு ஒருத்தருக்கு ஒருத்தர் சாரி சொல்லிக்கிட்டு சந்தோஷமா பிரிவோம்டி..." என்றாள்.

"ஏன்டி ரேணு... நமக்குள்ள என்ன சண்டை... நாம தான் எப்பவுமே ஃப்ரண்ட்ஸாச்சே..." புவனா கூற,

"நான் என்னைய சொல்லலை புவி... உனக்கும் முல்லைக்கும் இருக்கும் பிரச்சனையைச் சொல்றேன்..."



என்றதும், அந்தப் புவனாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

"ரேணு... இப்போ எதுக்குப் புள்ள அந்த ராங்கிக் காரியைப் பற்றிப் பேசி என்ற எரிச்சலைக் கிளப்புற... சித்த நேரம் பேசாம இருடி..." என்றாள்.

"இதுதான் புவி, கடைசி நாள்... எதுக்குடி இன்னமும் சின்னச் சண்டைக்குப் போய் மூனு வருஷம் ரெண்டு பேரும் முகத்தைத் திருப்பிக்கிட்டு இருக்கீங்க... அன்னிக்கு உங்க ரெண்டு பேர் மேலயும் தப்பு இருந்தது. ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பேசிட்டீங்க... அதோட பிரச்சனை முடிஞ்சுதுன்னு விடாம, இதையே மூனு வருஷம் இழுத்துக்கிட்டு இருக்கீங்க... முல்லை ரொம்ப நல்ல பொண்ணு புவி... இதுக்கும் அவள் உங்க வீட்டுப் பக்கத்திலதானே இருக்கிறாள். இன்னமும் பேசாம இருந்தா நல்லாயிருக்காது புள்ள... முதல்ல போய்ப் பேசி ராசியாகுடி..." என்ற ரேணுகாவை,

"அடியே... நீ எனக்கு ஃப்ரெண்டா இல்லை அவளுக்கு ஃப்ரெண்டாடி... நம்மளால யெல்லாம் முதல்ல பேச முடியாது. அவளை வந்து முதலில் பேசச் சொல்லு. எனக்கு என்ன அவகிட்ட பேசணும்னு தேவை..." என்ற புவனா அவளின் ஈகோவை விட்டுத் தரத் தயாராக இல்லை.

"நான் ரெண்டு பேருக்கும்தான்டி ஃப்ரெண்ட்... இதோ பாரு... மன்னிக்கத் தெரிஞ்சவன் மனுஷன். மன்னிப்புக் கேட்கத் தெரிஞ்சவன் பெரிய மனுஷன்னு

நம்ம உலக நாயகனே சொல்லியிருக்காரு. நீ பெரிய மனுஷியா இரு புள்ள... அன்னிக்கு ரெண்டு பேரும் தானேடி சண்டை போட்டீங்க... இப்போ அவளுக்கு முன்னாடி நீயே சாரி கேட்டேனா அவ அவள் செஞ்ச தப்பைப் புரிஞ்சுப்பாடி..." என எப்படியெப்படியோ சமாதானம் செய்து அந்தப் புவனாவை முல்லையிடம் அனுப்பி வைத்த ரேணுகா, இன்னமும் சில நொடிகளில் அந்தப் புவனாவின் கண்கள் வழியாகப் பஸ்பமாகப் போகிறாள் என்பதை அவள் அறியவில்லை.

ஏற்கெனவே மகிழனை மனதில் வசை பாடிக் கொண்டிருக்கிறோம் என்ற சாக்கில் அவனைப் பற்றியே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்த முல்லை, புவனாவின் அழைப்பைச் சிறிதும் கண்டு கொள்ள வில்லை.

முதலில், "முல்லை..." என்ற புவனாவின் அழைப்பில், அவளிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் இருக்க, அந்தக் கோபத்தில் அவள் ரேணுவைத் திரும்பிப் பார்க்க...

அவளோ தூரத்திலிருந்து, "திரும்பப் பேசு!" என்றவாறு கையசைக்க, அவளை உள்ளுக்குள் திட்டிய வாறு மீண்டும், "முல்லை..." என்க,

அவளின் குரல் முல்லையின் செவியைத் தீண் டாமல் மகிழனின் நினைவில் ஆட்பட்டிருந்தவள் பக்கத்தில் இருந்த அவள் தோழி நளினியிடம், "நளி... நான் வீட்டுக்குப் போறேன்டி... எனக்கு ரொம்பத் தலையை



வலிக்குது..." என்றவாறு விடுவிடுவென்று அங்கிருந்து அகன்று விட,

அந்தப் புவனாவின் முகம் அவமானத்திலும், முல்லையின் உதாசீனத்திலும் கறுத்தது.

புவனா தாங்களிருக்கும் இடம் தேடி வருகிறாள் என்பதையே வியப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த முல்லையின் தோழிகள், வந்து அவள் என்ன பேசப் போகிறாள் என ஆர்வமாகக் காத்திருக்க,

இப்போது அவளே வலிய வந்து மன்னிப்புக் கேட்டும் முல்லை அவளைக் கண்டு கொள்ளாது சென்றதில் அவர்களுக்கே சற்றுக் கோபமாகத்தான் வந்தது. ஆனால் பாவம்! அவர்களுக்கு எங்கே அவள் மனம் படும் வேதனை தெரியும். அது அவளுக்கே தெரியாதபோது...!

காதல் வயப்பட்ட இருவர் மனங்களும், ஒருவரைப் பற்றி மற்றொருவர் சிந்தித்துக் கொண்டிருக்க, அச் சிந்தனை அவர்களுக்குள் காதலை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருந்ததை மகிழன் முதலில் அறிந்து கொண்டான். ஆனால் முல்லை இன்னமும் குழப்பத்தின் பிடியிலே தவித்திருந்தாள்.

அதே குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்த முல்லை யின் கண்களில் மகிழன் தன் தாத்தாவுடன் பேசிக் கொண் டிருப்பதைப் பார்த்ததும் கோபமெனும் கோவைப்பழம் அவள் கன்னங்களை நிறைத்தது...

# 5

நிழல் போல நானும் நடை போட வேண்டும்...
தொடர்கின்ற சொந்தம் நெடுங்கால பந்தம்...
கடல் வானம்கூட நிறம் மாறக் கூடும்...
மனம் கொண்ட பாசம் தடம் மாறிடாது...
நான் வாழும் வாழ்வே உனக்காகத்தானே...

பரிட்சையை முடித்துக் கொண்டு, மதியம் ஒரு மணியளவில் வீடு வந்து சேர்ந்த முல்லை, அவர்கள் வீட்டு வாசலில் கையில் செம்புடன் மகிழன், அவளின் அப்பச்சியுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டவளின் குண்டு மல்லிக் கண்கள் விரிந்து கோபத்தைப் பரப்ப, சைக்கிளைக் கோபமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு அவள் அப்பச்சியின் அருகே வந்தவள்,

"யாரு அப்பு இவங்க... எதுக்கு யாருன்னே தெரியாதவங்க கூடவெல்லாம் பேசிட்டு நிக்கறீங்க... வாங்க, வீட்டுக்குப் போகலாம்..." என அவனின் மேலிருந்த கடுப்பில் அவனை ஓரக் கண்ணால் பார்த்தவாறு பேசி வைக்க,

அவளின் இந்தப் பேச்சில் லேசாகக் கோபப்பட்ட தம்பி, "என்ன கண்ணு பேச்சுப் பழக்கம் இது..." எனச் சின்ன அதட்டல் போட,

மகிழனின் முன் தன் தாத்தா திட்டியதில் உதித்த கோபமும் மகிழனிடமே பாய்ந்தது.

ஏற்கெனவே பல குழப்பத்திலும், விவரிக்க முடியாத மனப் போராட்டத்திலுமிருந்த முல்லை, அவளின் செல்லத் தாத்தா திட்டியதில் முணுக்கென அவளின் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்ய, "போ... நீ என்னோட பேசாதே..." என இயலாமையில் கண்களைக் கசக்கிக் கொண்டு வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.



பேத்தி மூக்கைச் சுருக்கிக் கொண்டு போகவும், பாட்டனாரின் முகமும் விழுந்து விட்டது... முன்னாடி நிற்பவனை அனுப்பி விட்டுப் பேத்தியைச் சமாதானம் செய்ய வேண்டுமென நினைத்துக் கொண்டார்.

அதே நினைப்பில் தான் அவர் எதிரே இருந்த உயிரும் துடித்துக் கொண்டிருந்தது. அவளின் இந்தத் திடீர்க் கண்ணீரில் மகிழனின் மனமும் வாடிவிட, "அச்சோ மை ஸ்வீட் கேன்டி..." என அவளைச் சமாதானப்படுத்த எண்ணி அவன் கால்கள் வீட்டை நோக்கி நடை போடுவதைத் தம்பியின் முன் சிரமப்பட்டுத் தடுக்க வேண்டியதாகப் போயிற்று...

எதிரில் இருப்பவனின் மனம் தெரியாத தம்பி, விட்ட இடத்திலிருந்து பேசத் துவங்கினார்.

"ஏற்கெனவே மூர்த்தி நல்ல விதமாத்தான் தம்பி நடவு நட்டுருக்கான்... இந்த தடவைதான் பார்த்துக்க ஆளில்லைன்னு சோளத்தை விதைச்சு விட்டான்... அவங்க கிணறுல கூட தண்ணி வத்தாம இருக்கு... இன்னொரு போர் போட்டு, சுற்றிலும் வேலி போட்டு, வாழை, மஞ்சள், வெங்காயம்னு போட்டா ஆறே மாசத்துல விளைச்சல் கொழிக்கும்... உங்களுக்கு எது வசதியோ அதைச் செய்யுங்க... உங்களுக்கு எந்த

உதவியா இருந்தாலும் நம்மகிட்ட தயங்காம கேளுங்க. என்னால முடிஞ்சதைச் செய்றேன்..." என்றவரின் குரலில் மீண்டு வந்தவன், வெறுமனே தலையைத் தலையை ஆட்டி வைத்தான்.

அவனின் இந்த திடீர்த் தலையாட்டலை விநோதமாகப் பார்த்த தம்பியண்ணன், "சரிப்பா... எனக்குப் பால் கறக்குற வேலையிருக்கு... நீங்க ஆக வேண்டிய வேலையைப் பாருங்க..." என்றவர், அவன் கையில் இருக்கும் செம்புக்காகக் கை நீட்ட,

அவன் ஏதோ கனவுலகத்தில் இருந்தவன், அவரின் கையையும், முகத்தையும் மாறி மாறிப் பார்க்க, "சொம்பு தம்பி..." என்க,

"ஓஹோ... இந்தாங்க..." என அவரின் கையில் கொடுத்தவன், "அப்போ சரிங்கய்யா... நான் இனிமேல் அடிக்கடி இங்கே வருவேன். எனக்கு விவசாயத்தைப் பற்றி அவ்வளவா தெரியாது. எனக்கு எதுவா இருந்தாலும் நீங்கதான் உதவி செய்யணும்." என்றவனை,

'இப்போதானே இதை நான் சொன்னேன். இத்தனை நேரம் நல்லாத்தானே இருந்துச்சு இந்த தம்பி...' என்பது போன்று ஒரு பார்வையைப் பார்த்து வைக்க...

அவரின் பார்வையின் பொருளுணர்ந்தவன் போல், "ஹிஹி..." என ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தம்பியிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

ஆனால் அவன் காருக்குள் சென்று மறையும் வரை அவனின் கண்கள் மீண்டும் மீண்டும் முல்லையின்



தரிசனத்திற்காக ஏங்கித் தவிக்க, அந்த ஏக்கத்திற்குச் சொந்தக்காரியோ அவளின் அறையில் குப்புறக் கவிழ்ந்து யோசனையில் இருந்தாள்.

'சே... இந்த அப்பு அவன் முன்னாடி என்னைய திட்டிடுச்சே... அவன் முன்னாடி எப்படி இந்த அப்புச்சி என்ற இமேஜை டேமேஜ் பண்ணலாம்... உள்ளார வரட்டும்... வச்சுக்கிறேன்...' என வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருக்க,

இன்னொரு மனம், 'அந்தத் தாடிக்காரனுக்கு என்ன நம்ம அப்புகிட்ட பேச்சு... அதான் எடத்தை வாங் கிட்டானில்ல... பேசாம வேலையைப் பார்த்துட்டுப் போக வேண்டியதுதானே... என்னையும் பாரு, என்ற இடத்தையும் பாருன்னு பெருமை காட்ட வந்துருப்பான். பார்த்தாலே தெரியுதே... சரியான பீத்தல் கேஸ் போல..." என ஒரு பக்கம் அவனை வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருக்க,

சிறிது நேரம் கழித்து, 'ப்ச்... ஹய்யோ... இனி இந்த இடம் எப்படி இருக்கும்... செங்கலு, கல்லு, மண்ணு எல்லாம் வச்சுப் பெரிய பெரிய பில்டிங் கட்டி...' என எண்ணம் போகையில்,

'ஹே லூசு... செங்கல், மண்ணை வச்சு பில்டிங் கட்டாம, ஓலை வச்சா கட்டுவாங்க...' என அவளின் உள் மனம் நேரம் காலம் தெரியாமல் கவுன்ட்டர் கொடுத்துக் கொண்டிருந்தது.

'ப்ச்... நீ சித்த நேரம் சும்மா இரு... நானே அந்த நிலம் வீணாப் போகப் போகுதுன்னு நெனச்சு ஃபீல் பண்ணிட்டு இருக்கேன். நீ வேற...' என மைண்ட் வாய்சை அடக்கியவள் மீண்டும் தன் புலம்பலில் ஆழ்ந் தாள்.

'இந்த முசுடு மூஞ்சிக்காரன் ஏன் இப்படி எல்லாம் செய்றான். இவனுக்கு ஃபாக்டரி கட்ட இந்த இடம்தான் கிடைச்சுதா... ஊரு உலகத்துல வேற இடமே கிடைக் கலையா... இங்க வந்துட்டு நம்மளோட நிம்மதியைக் கெடுக்குறான்...' என்றவள்... நிலத்துக்காக வருத்தப் பட்டாளா, அல்லது தனக்காக வருத்தப்பட்டாளா... என அவளே அறியாள்!

**கா**ரில் சென்று கொண்டிருந்த மகிழனுக்குச் சிந்தனை முழுவதும் தன்னவளே வயப்பட்டிருந்தாள்... நேற்றுத் தான் எடுத்த முடிவென்ன... இன்று தான் நினைத்துக் கொண்டிருக்கும் சிந்தனை என்ன என்பதை அவனால் வரையறை செய்ய முடியவில்லை.

இனி நடந்த நிகழ்வுகளை மாற்றி அமைக்கச் செய்ய வேண்டிய காரியங்களை நினைத்தவன் மனம் மலைத்துப் போனது... இதை எப்படிச் செய்வது, என்ன செய்வதென்ற யோசனைதான் ஏதும் வந்தபாடாக யில்லை. இதிலிருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் அவனை மேலும் மேலும் மலைக்கச் செய்தன.

ஆனால் என்ன செய்தும் அவளைக் கண்டவுடன் தடுமாறும் தன் மனதைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தவன் மனம் தீர்க்கமாக, 'முல்லை



தான் என் மனைவி. இதை யாராலும் மாற்ற முடியாது...' என அடித்துச் சொல்லியது...

அதே சிந்தனையுடன் வீடு வந்தவன் மனம் உற்சாகத்தில் இருந்தமையால் அது அவனின் முகத்தில் புன்னகையைப் பூக்கச் செய்திருந்தது.

அதைக் கண்டவுடன் வீட்டு மக்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"ஹே ப்ரோ... என்ன முகத்துல அப்படியொரு பரவசம்..." என மதுரிமா அபூர்வாவை மனதில் வைத்துக் கிண்டலடிக்க,

"ம்ம்... மெட் மை ஏஞ்சல்..." என முல்லையை மனதில் வைத்து இவன் உணர்ந்து சொல்ல,

மது "ஓஹோ..." எனக் குதூகலிக்க,

சின்னச் சிரிப்புடன் வெங்கட்ராமன் "என்ன ராசு... அந்த நிலத்தை வாங்கிட்டியா... எப்போ வொர்க் ஸ்டார்ட் பண்ணப் போறே. எந்த கன்ஸ்ட்ரக்ஷன்க்குச் சொல்லி யிருக்க..." என விசாரித்ததில்... அவன் பேந்தப் பேந்த விழித்தான்.

"எந்த பில்டிங் ப்பா..." எனக் கேட்ட மகனின் முகத்தில் தெரிந்த பாவனையில் வெங்கட்டுக்கு வியப்பாக இருந்தது...

'இவன் என்ன சொல்கிறான்...' என நினைத்தவர், "அதான் ராசு... டையிங் ஃபாக்டரி கட்ட இப்போ நீ வாங்கிட்டு வந்துருக்கியே அந்த இடம்..." என்க,

"என்னது... ஃபாக்டரியா... நான் அந்த இடத்தில் ஃபாக்டரி கட்டப் போறேன்னு எப்போ சொன்னேன். அந்த இடத்தில் நான் விவசாயம் செய்யப் போறேன்..." எனக் கூற,

தந்தையும், மகளும் அவனின் இந்த வாக்கியத்தில் சற்று அதிர்ந்துதான் போயினர்.

மகனுக்குக் குடிக்கத் தேனீர் எடுத்து வந்த கோகிலா, "என்ன ராசு, எல்லாப் பிரச்சனையும் தீர்ந்துடுச்சா... எனக்குத் தெரியும் ராசு. நீ எதுவா இருந்தாலும் சமாளிச் சுடுவேனு..." என்று அவன் கையைப் பற்றிச் சொன்ன விதத்தில்,

அப்போதுதான் அவன் காதல் கனவிலிருந்து விழித்த மகிழன் தன் எதிரில் புன்னகை முகத்துடன் நின்ற அன்னையின் முகத்தையும், திகைப்பின் சாயலிலிருந்த தந்தை, தங்கையின் முகத்தையும் கவனிக்க, அவனின் மனம் குற்றவுணர்வில் தத்தளித்தது.

'ஹய்யோ... என்ன செய்து கொண்டிருக்கிறேன்...' என மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டவன், கேள்வியைத் தாங்கிய முகத்துடன் இருக்கும் தந்தையிடம், "அது வந்துப்பா, அந்த இடத்தை ஃபாக்டரி கட்டத்தான் பார்க்கப் போனேன். பட் இட் வாஸ் அட்மையர்ட் வித் தட் அட்மாஸ்பியர்... அதான் வாங்கிட்டேன். ஜஸ்ட் ஒரு ஃபார்ம் ஹவுஸ் மாதிரி ஏதாவது கட்டி, ஆள் போட்டு சின்ன அளவுல ஏதாவது விவசாயம் பண்ணலாம்னு..." என இழுக்க,



"என்னது... முப்பது ஏக்கர் நிலத்தில் சின்ன அளவுல விவசாயம் பண்ணப் போறீங்களா அண்ணா..." என மது இழுக்க,

"சூப்பர் ராசு... எங்க அப்பா காலத்தில் பார்த்தது... அதுக்குப் பிறகு உன்னோட அப்பாவைக் கட்டின பிறகு அது. எல்லாம் மறந்து போச்சு... உனக்காவது இது தோணுச்சே... நல்லா செய்..." எனக் கோகிலா ஊக்குவிக்க,

இதில் ஏதும் கலந்து கொள்ளாமல் வெங்கட் ராமன் மகனைத் தீர்க்கமாகப் பார்க்க, மகிழன் அவரின் பார்வையைச் சந்திக்க முடியாமல், முதல் முறை தலை குனிந்தான்.

நிச்சயமாக இந்த மகிழனை அவனே கண்டதில்லை. தப்பே செய்திருந்தாலும், 'ஆம்... நான்தான் செய்தேன், நான் செய்தது தப்பென உணர்ந்து மன்னிப்புக் கேட் கிறேன்...' என முன் வரும் என் மகன் இன்று முதல் முறையாகத் தடுமாறித் தலை குனிகிறான் என்பதைக் கவனிக்க முடியாத அளவிலில்லை வெங்கட்ராமன்.

அவனால் சாதாரணமாகத் தப்பைத் திருத்திக் கொள்ள முடிந்தது. ஆனால் இப்போது அவன் செய் திருப்பது அவனே அறியாமல் அவனுக்குள் ஏற்பட்ட உணர்ச்சி மாற்றத்தாலானது. இதற்கு அவன் பொறுப் பல்ல... அவன் மனமே பொறுப்பு. காதலின் வலையில் சிக்கித் தவிக்கும் அவன் அதிலிருந்து மீள முடியாமல் செய்திருக்கும் தப்பு. இதனால் ஒன்றல்ல, இரண்டு

பெண்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகப் போகிறது என்பதை அவன் அறிந்திருந்தான்.

அவனால் தந்தையின் பார்வையைச் சந்திக்க முடியாமல், வீட்டிலும் இருக்க முடியாமல், அன்னையிடம் மில்லுக்குப் போகிறேன் என்றவன்...

அன்னையின், "சாப்பிட்டுப் போ ராசு..." என்ற அழைப்பைக் கூட ஏற்க முடியாமல் அங்கிருந்து அகன்றான்.

அலுவலகம் வந்தவன் பாலுவிடம் தனக்கு எந்த அழைப்பு வந்தாலும் அதை அவனையே கவனிக்கச் சொல்லி விட்டு, அவனின் அறையிலிருக்கும் சோபாவில் தளர்ந்து அமர்ந்தான். அவனுக்கு நிறைய யோசிக்க வேண்டியதாக இருந்தது.

இப்போது என்ன செய்ய வேண்டுமென நினைத்தான். பார்த்து ஒரு நாளானாலும் முல்லை அவனுள் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் சாதாரணமில்லை. இதுவரை வாழ்க்கையைப் பணம் எனும் அளவுகோலில் கணித்து வந்தவன், இன்று அச்சிறு பெண்ணின் பேச்சும், அவள் அந்த இடத்தின் மேல் வைத்திருக்கும் மரியாதையும் அவனை யோசிக்க வைத்தது.

தான் சாய ஆலை கட்ட வந்திருக்கிறேன் என்றதும், அவள் மனம் அடைந்த வேதனை, தன்னிடம் வேண்டாமே என அவள் கண்களில் அவன் கண்ட இறைஞ்சல், அனைத்திலுமே அவளின் குணத்தை அறிந்து கொண்டான்.



தொழிலில் மனிதர்களை எடை போட்டுப் பழகியவன், தன் மனம் கவர்ந்தவளின் குணங்களை - அது ஒரு நாளே ஆனாலும் - கவனிக்க முடியாத ஆற்றலற்றவன் அல்லவே...!

இதில் எந்தக் குணத்தையும் அபூர்வாவிடம் அவன் கண்டதில்லை. புறத்தோற்றத்தில் முல்லையை விடவும், அபூர்வா உயர்ந்தவளாக இருந்தாலும், முல்லையின் அகத் தோற்றத்திற்கு அவளுக்கு நிகர் அவளே...

அபூர்வாவின் அழகு, அவளின் பணத்தால் வந்தது. முல்லையின் அழகு அவள் வளர்ப்பிலும், குணத்திலும் இருந்தது... என மகிழன் மனது இப்போது அபூர்வாவிற்கும், முல்லைக்கும் இருக்கும் வித்தியாசங்களை ஆராய்ந்தது.

எப்படி யோசித்தாலும், பணத்தை விடவும், குணத்தில் முல்லையே அவன் மனதில் வானுயர்ந்து நின்றாள். முதல் முறையாக மகிழனின் மனம் பணத்தைத் தவிர்த்துக் குணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது.

இனி, அவன் செய்ய வேண்டியது முதலில் அபூர்வாவிடம் பேசி, அவளிடம் தன் மனதை விளக்க வேண்டுமென்பது தான்... முதலில் அவள் சம்மதம் தெரிவித்தால் இரு வீட்டுப் பெற்றோர்களையும் மிக எளிதில் சமாளித்து விடலாம்... எனத் தப்புக் கணக்குப் போட்டான்.

அவன் நிறுத்த நினைத்தது, அவனின் திருமணத்தை மட்டும்தான். தங்கையும், இளங்கோவும், காதலில் இருப்ப

தால் அவர்களின் திருமணத்தில் எந்தச் சிக்கலும் ஏற்படாது என நினைத்துக் கொண்டான்.

நிறைய முதல் முறைகளுடன், இவனின் இந்தக் கணிப்பும் முதல் முறையாகத் தவறாகப் போகிறது என்பதை அவன் அறியவில்லை.

**வீ**ட்டில் தனியே புலம்பிக் கொண்டிருந்த முல்லையின் செல்போன் அலறியது. ஏற்கெனவே மகிழனின் மீது தீராத ஆத்திரத்தில் இருந்தவள், கோபத்துடனே அதை உயிர்ப்பித்தாள்.

"ஹலோ... யாரு...?" அழைத்த எண்ணைக் கூடப் பார்க்காமல் எரிச்சல் குரலில் கேட்கவும்,

"எதுக்குடி, இந்தக் கத்து கத்துற எருமை மாடு..." என அந்தப் பக்கம் ஒலித்த குரலுக்குச் சொந்தமானவளைக் கண்டு கொண்டவள்,

"சொல்லு நளி... என்ன விஷயம்...?" இப்போது கோபம் தளர்ந்திருந்தது அவள் குரலில்.

"ஹம்ம்... நொன்ன விஷயம்... ஏன்டி கூறுகெட்டவளே இப்படிச் செஞ்ச...?" என அவள் அறிமுகமின்றி இவளை வசை பாடத் துவங்கி விட்டாள்...

"என்ன நளி... நான் என்ன செஞ்சேன்...?" குழப்பமாகவே கேட்க,

"செய்றதையும் செஞ்சிட்டு, எதுக்கு இந்தக் கிறுக்குத்தனமான கேள்வி..." அந்தப் பக்கம் அவள் பொரிய,



அதீதக் கோபத்திலும், எரிச்சலிலுமிருந்த முல்லை, "ப்ச்... எரிச்சலைக் கிளப்பாம என்ன விஷயம்னு சொல்றதா இருந்தா சொல்லு, இல்லேன்னா போனை வைடி..." எனக் கத்தி விட்டாள்.

நளினிக்கு முகம் விழுந்து விட்டது.... முல்லையிடம் எப்போதும் ஒரு கலகலப்பு இருக்கும்... வாய்த் துடுக்கு கொஞ்சம் அதிகம் என்றாலும், இதுவரை அவளின் பேச்சு யாரின் மனதையும் புண்படுத்தியதில்லை.

புவனா விஷயத்தில் கூட முதலில் ஆரம்பித்து வைத்தவள் அவளே... அப்போதும் முடிந்தவரை இவள் அமைதியாகத்தானே இருந்தாள்.

ஆனால் இன்று இவளின் பேச்சு நளினியைக் காயப்படுத்தி விட்டது என்பது அவளின் சில நிமிட மௌனத்திலே முல்லைக்குப் புரிந்துவிட்டது.

'அய்யோ! சே... என்ன செஞ்சுட்டு இருக்க முல்லை... பாவம்... அவன் மேல் இருக்குற கோபத்துல இவள் மேல பாஞ்சா, இவள் என்ன செய்ய முடியும்...?' என மனதுக்குள் பேசிக் கொண்டிருந்தவள், மனச் சஞ்சலங்களை ஒதுக்கி வைத்துவிட்டுத் தோழியைச் சமாதானப்படுத்தும் வேலையில் இறங்கினாள்.

"ஹே... நளி... சாரிடி... அப்பு என்னைய திட்டிப் போட்டுச்சு... அதான் அது மேல இருக்கற கோபத்துல உன்னைய திட்டிட்டேன். சாரி நளி... சாரி... சாரி..." என விதவிதமாக மன்னிப்புக் கேட்க,

அவள் மனமறிந்த அவளின் உயிர்த் தோழி நளினி, "அட... அதானே பார்த்தேன்... உன்னோட செல்ல அப்புச்சி திட்டிப்போட்டாராக்கும்... அதுக்குத்தான் காலை யிலிருந்து முகத்தைத் தூக்கி வெச்சுக்கிட்டு இருந்தியா... லூசு புள்ள..." என நிமிடத்தில் சகஜ நிலைக்குத் திரும்பி னாள்.

"ம்ம்... ஆமாடி..." என மகிழனின் மேலிருந்த கோபத்தைத் தன் தாத்தாவின் பக்கம் திருப்பி விட்டவள், "சரி, சொல்லுடி... என்ன விஷயம்...?" என்க,

"ஹம்ம்... நீ இன்னிக்குக் காலேஜ்ல பண்ணி வெச்ச காரியத்தைக் கேட்கத்தான் போன் செஞ்சேன்... இப்போ தானே தெரியுது, உன்னோட மிளகா முகத்துக்குக் காரணம்..." என்றாள்.

"காலேஜ்லயா... நான் என்ன செஞ்சேன்...?" எனக் குழப்பமாகக் கேட்டவளை,

தலையிலடித்துக் கொண்டு, அவளிடம் புவனா பேச வந்ததையும், அவளை மதிக்காமல் இவள் எழுந்து சென்றதையும், அதன் பின் அந்தப் புவனாவின் முகம் கோபத்தில் சிவந்ததையும் எடுத்துச் சொல்ல,

"ஹய்யோ... அந்தப் பூனைக் கண்ணி என்னோட பேச வந்தாளா...? அச்சோ... நான் ஏதோ ஞாபகத்தில் கவனிக்கவே இல்லையே நளி... பாவம்... அந்தப் புள்ள அதுவே பேச வந்துருக்கு... நான் அதைய மதிக்காம போனா அதுக்குக் கோவம் வரத்தானே செய்யும்..." என்க,



"ஆமா... இப்போ வந்து பேசு... அப்படி என்னடி உனக்கு யோசனை... நம்மட அப்பிச்சிதானே திட்டுச்சு, அதுக்குப் போய் சுத்தி என்ன நடக்குதுன்னு கூடத் தெரியாம இருந்திருக்க. சரி சரி, விடு... போனது போகட்டும்... அந்தப் புள்ளைய உங்க வீட்டுப் பக்கம் பார்த்தியானா நீயாப் போய்ப் பேசு... ரெண்டு பேரும் பேசி ராசியாகுங்க..." என்றாள்.

"கண்டிப்பா பேசுறேன் நளி... அவளே வரும்போது நான் எதுக்கு இழுத்துப் பிடிக்கணும்... பாவம் புவி... நான் போய்ப் பேசுறேன்..." என மனம் இளகினாள்.

முல்லையின் குணம் இதுதான் என அறிந்த நளினி ஒரு செல்லச் சிரிப்புடன், "நீ இருக்கியே... ஆளு தான் வளந்திருக்க... மனசு அப்படியே கொழந்தப் புள்ள தான்டி... அப்பு திட்டினதை நெனைச்சு வருத்தப்படாத முல்ல... காரணமில்லாம அப்பு உன்மேல கோவப் படாது... நீ எப்பவும் டேக் இட் ஈசி பாலிசி தானே...

"அப்பறம் எதுக்கு சின்னச் சின்ன விஷயத்துக்குப் போய் வருத்தப்படுற... ஹம்ம்... உன்னை வெச்சுகிட்டு..." என மேலும் ஒரு சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போனை வைத்துவிட்டாள்...

நளினியுடன் பேசியவுடன் முல்லையின் மனது வெகுவாகக் குழம்பியிருந்தது...

அவளுக்குள் பல கேள்விகள் படையெடுத்துக் காத்துக் கொண்டிருந்தன... கேள்விக்கு விடை தேடி அவள் மனம் அலைபாயத் துவங்கியது....

6

அசைந்து இசைந்தது வளைக்கரம்தான்...
இசைந்து இசைந்தது புது ஸ்வரம்தான்...
சிரித்த சிரிப்பொலி சிலம்பொலிதான்...
கழுத்தில் இருப்பது வலம்புரிதான்...
இருக்கும் வரைக்கும் எடுத்துக் கொடுக்கும்...

நளினியுடன் பேசி முடித்துப் போனை அணைத்த முல்லையின் மூளையில் பல கேள்விகள் படையெடுத்துக் காத்திருந்தன...

மூர்த்தி அந்த இடத்தை யாருக்கு விற்றால் தனக் கென்ன...? அந்த இடத்தில் மகிழன் ஃபாக்டரி கட்டினால் என்ன... இல்லை, வீடு கட்டினால் தனக் கென்ன...?

தன் தாத்தாவுடன் அவன் பேசினால்... நாம் ஏன் கோபப்பட வேண்டும்...?

நாம் ஏன் அந்த இடத்திற்காக நம் இயல்புக்கு மாறாக.... பார்க்கும் அனைவரிடமும் எரிந்து விழ வேண்டும்...?

மனது கேட்ட பல கேள்விகளுக்கு அவளிடம் விடை தானில்லை...

அவளின் உள் மனது அதைக் காதலென்று உணர்ந்தாலும், அவளின் முதிராத மனது உணர வில்லை. அவளைச் சொல்லியும் குற்றமில்லை...

அவளின் வாழ்க்கை அம்மா, அப்புச்சி, பெண்கள் கல்லூரி, அவளின் இரண்டு மூன்று தோழிகளைக் கொண்ட குறுகிய வட்டம்...



கிராமத்தில் வளர்ந்த சூழல் என்பதால் இன்னமும் அங்கே காதல் ஒரு தீண்டத் தகாத வார்த்தைதான்... இவளே இப்படி என்றால் இவளின் தோழிகள் இவளைக் காட்டிலும் சிறுபிள்ளைகள். அதனால் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த உணர்வின் பெயர் காதல் என்று இவள் அறியவில்லை...

அதனால் மனது கேட்ட அனைத்துக் கேள்வி களுக்கும் உதடு பிதுக்கி, எனக்குத் தெரியாது என மானசீகமாகச் சொல்லிக் கொண்டவள், மகிழனின் மேல் கொண்ட எரிச்சலையும், அவனைப் பற்றிய குழப்பத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் பாட்டனாரிடம் சென்றாள்.

உடனே அவரிடம் சென்று விட்டால் அவள் ஈகோ இடிக்குமே...! அதனால் அவள் தாத்தாவின் கவனத்தை ஈர்க்கவெனக் கொலுசணிந்த கால்களை அழுத்தமான காலடியோசையில் நடந்து வந்து வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். (அம்மையார் கோபமாக இருக்கிறார்களாம்..)

மாட்டைக் கவனித்துக் கொண்டிருந்த அவளின் தாத்தா வாடிய பேத்தியின் முகத்தைக் கண்டு கொண்டு நொடியில் அவளிடம் வந்தார்.

"கண்ணு..." என்ற அவரின் அழைப்புக்கு, உதட்டைச் சுழித்துக் கொண்டு, அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள,

சின்னச் சிரிப்புடன், "உன்னைய விடப் பெரிய வர்களை மரியாதை இல்லாம பேசலாமா கண்ணு... அது

தப்பில்லையா... தப்புன்னா என்னைய மன்னிச்சுக்கோ பாப்பா..." என அவர் முடிப்பதற்குள்,

"அச்சோ அப்புச்சி... நீங்க என்னத்துக்கு என்கிட்ட மன்னிப்புக் கேக்கோணும்... நான்தான் மரியாதை இல்லாம பேசிப்போட்டேன்... நான் சாரி... இனிமேல் இப்படிப் பேசமாட்டேன். சரியா...?" என நொடியில் சமாதானமடைய, அவள் தலையைச் செல்லமாக வருடிக் கொடுத்தார்...

இதுதான் முல்லை... எவ்வளவுக்கு எவ்வளவு சிறு பிள்ளைத்தனம் கொண்டவளோ, அவ்வளவு அன்பும் கொண்டவள், தான் செய்தது தப்பென அவள் முதலே உணர்ந்திருந்தாலும், மகிழனின் நினைவுகள் அவளைத் தன்னிலை இழக்கச் செய்திருந்தன. இப்போது அந் நினைவுகளை ஒதுக்கி வைத்துத் தன் இயல்புக்கு மீண்டு வந்துள்ளாள்.

இப்படியாக, அடுத்த பத்து நாட்களும் எந்தத் தடுமாற்றமுமின்றி நிம்மதியாகச் சென்று கொண்டிருந்தன.

மகிழனுக்கும் அவனின் அலுவல் சுமையால் போளுவாம்பட்டிப் பயணம் தடைப்பட்டிருந்தது.

என்னதான் பகல் முழுவதும் வேலையில் மூழ்கிப் போயிருந்தாலும், இரவு படுக்கையில் சரிந்தவுடன் எழும் முல்லையின் நினைவுகளில் மகிழன் திளைத்திருந்தான்.

ஒவ்வொரு நாளும் அவள் கனவில் வரும் போதெல்லாம் தன்னுள் எழும் உணர்வுகளைக் கட்டுப் படுத்த முடியாமல் திண்டாடினான்.



முல்லையைப் பற்றி அபூர்வாவிடம் பேசிவிட வேண்டுமென்று அவன் நினைத்திருக்க, அவளோ மதுரையில் அவளின் சித்தப்பா வீட்டிற்குப் பத்து நாட்கள் விருந்துக்குச் சென்றிருக்கிறாள் என்ற தகவல்... அவன் கேட்காமலே கோகிலாவின் மூலம் அவனுக்குக் கிடைத்தது.

நிச்சயம் முடிந்தாலே பாதிக் கல்யாணம் முடிந்தது போல்... அவள் எப்போதாவது போன் செய்து பேசும் போதும் இவனிடம் கணவனென்ற உரிமையில் பேசுவது வேறு அவனுக்கு என்னவோ போலிருந்தது.

இதை இப்படியே தொடரவிட அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் இது மிகவும் முக்கியமான விஷயம். இதை போனில் பேசுவதை விட நேரில் அவளிடம் பொறுமையாக எடுத்துச் சொல்வது தான் சிறந்த வழி. அதுவரை அவளிடம் பேசி ஆசையை வளர்க்க வேண்டாமென அவன் எடுத்த முடிவின்படி, அவள் அழைக்கும் போதெல்லாம் தான் ஏதேனும் ஒரு வேலையில் பிசியாக இருப்பதாகச் சொல்லித் தவிர்த்து வந்தான்.

இப்படியாக நாட்கள் செல்ல, அன்று அவனுக்கு அலுவலகப் பணி சற்றுக் குறைந்திருந்ததால் போளுவாம் பட்டிப் பயணத்தை மேற்கொள்ள நினைத்தான்.

ஆனால் அதற்குத் தடை விதிக்கவென அபூர்வாவின் வரவிருந்தது.

அந்த சனிக்கிழமை பின்மாலை வேளையில், தன்னறையில் அலுவலகக் கோப்பைப் பார்வையிட்டுக்

கொண்டிருந்தவனை பால்கனியில் படர்ந்திருந்த முல்லை மலரின் வாசனை அவனின் நாசியை வருடியது மட்டுமல்லாமல் அவன் மனம் கவர்ந்த மங்கையின் நினைவுகள் அவன் இதயத்தை வருடிச் செல்ல, அவளைப் பார்க்க வேண்டுமென்று மனதுக்குள் ஏற்பட்ட போராட்டத்தை என்ன செய்தும் அவனால் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

இனி மேல் தாங்காது என்ற நிலையில் உடை மாற்றிக் கிளம்பினான்.

அவனைத் தடுத்துக் கோகிலா கேட்ட கேள்விக்கு, "போளுவாம்பட்டி போய்ட்டு வரேன்ம்மா... ஒரு சின்ன வேலையிருக்கு..." என விடைபெற்று அவன் வீட்டு வாசலுக்கு வர, இன்னொரு கார் போர்டிகோவில் வந்து நின்றது.

காரைப் பார்த்தவுடன் தெரிந்து விட்டது, அது யாரென்று...!

மகிழனின் மனம், 'போச்சுடா...' எனச் சோக வசனம் வாசிக்க,

காரிலிருந்து ஆர்ப்பாட்டமாக இறங்கி, "ஹாய் மகிழ்..." எனக் கையை ஆட்டிக் கொண்டு வந்த அபூர்வாவின் வரவு மகிழனை வெகுவாக ஏமாற்றியது.

அவளின் ஹாய்க்கு ஒரு புன்னகை கூட அவனிடமிருந்து பதிலில்லை என்றுணர்ந்தவள், அவனை நெருங்கி வந்து, "ஹலோ..." எனக் கத்த,



"ப்ச்... என்ன அபூர்வா... பக்கத்தில்தானே இருக்கிறேன்... எதற்கு இப்படிக் கத்துகிறாய்...?" முல்லையைப் பார்க்கப் போக முடியாது என்ற கோபத்தில் அவன் எரிந்து விழ,

அவனின் இந்தப் பேச்சில் கோபம் கொண்டாலும், அவனிடம் இவள் கோபம் செல்லாது எனப் புரிந்தவள், "நான் ஹாய் சொன்னதுக்கு உங்ககிட்ட இருந்து பதிலில்லை... அதான்... சாரி..." பாவமாகக் கிள்ளை மொழியில் சொல்ல, அவளின் அந்தக் குரல் மகிழனை மயக்கச் செய்வதற்குப் பதிலாக மேலும் எரிச்சலைத்தான் கொடுத்தது.

"சாதாரணமாப் பேசு, அபூர்வா... எதுக்கு இந்தக் கொஞ்சல்..." என முகத்திலடித்தது போல் சொல்ல, அதுவும் அவளுள் எரிந்தது.

'இருடா... என் கழுத்துல மட்டும் உன் கையால் தாலி ஏறட்டும். அப்புறம் உன் குடுமி என் கையில்தான்...' என வன்மமாக நினைத்துக் கொண்டவள்,

அதைத் தவிர்த்து, "எங்க கிளம்பிட்டீங்க மகிழ்...? அதுவும் ஈவினிங் டைம்ல... இப்போ நீங்க வீட்ல இருக்கீங்கன்னு மது சொன்னாள். அதான் ஊரிலிருந்து வந்ததும், உடனே உங்களைப் பார்க்கக் கிளம்பி வந்துட்டேன்..." என்றாள். "நான் உனக்காகத்தான் வந்திருக்கிறேன்..." என்ற மறைபொருள் இருந்ததை மகிழன் உணர வேண்டுமாம்...!

அதற்குள் கார் சத்தம் கேட்டு வெளியே வந்த கோகிலாவும், மதுவும் வாசலில் நின்றிருந்த அபூர்வா வைக் கண்டவுடன், "அடடே... வாடா அபூ... இன்று தான் ஊரிலிருந்து நீ வந்ததா அம்மா சொன்னாங்க..." என வரவேற்க,

"ஆமாம் அத்தை... ஜஸ்ட் ஒரு ஒன் ஹவர் முன்னாடிதான் வந்தேன்... வந்ததும் மாமாவைப் பார்க்க வந்துட்டேன்..." என்க,

வெகுளியான கோகிலா தன் மகன் மீது வரப் போகும் மருமகள் வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு நெகிழ்ந்து போனார்...

மதுரிமாவிற்கு அபூர்வாவின் குண நலன்களைப் பற்றித் தெரிந்து தானிருந்தது. தன் அண்ணனுக்கு இவள் எந்த வகையில் பொருத்தமானவள் என நினைத்தபோது, அவள் மனதில் எழுந்த கேள்வியை... திருமணத்திற்கு மகிழனின் சம்மதம் துடைத்தெறிந்தது... அவனுக்கே சம்மதமென்றால் அதன் பின் அவளுக்கு வேறென்ன வேண்டும்... மேலும் அபூர்வா தன் காதலனின் தங்கை எனும் போது அதற்கு மேல் அவளைப் பற்றி மதுரிமா ஆராய்ச்சி செய்யவில்லை...

ஆனால் இன்று அண்ணனின் முகத்தில் தெரிந்த கட்டுப்படுத்தப்பட்ட எரிச்சலும், அடக்கப்பட்ட கோபமும், அவளுக்கு எதையோ உணர்த்தியது....

அண்ணனிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என மனதில் குறித்துக் கொண்டாள்.



அவள் பேசும் முன் எல்லாம் கையை மீறப் போகிறது என்பதை அவள் எப்படி அறிவாள்...!

"உள்ளே வா அபூ... ஏன் வெளியவே நிக்கிற... வா வா..." எனக் கோகிலா வருங்கால மருமகளை அழைக்க,

"வரேன் அத்தை... மாமா எங்கயோ வெளியே கிளம்பிட்டார் போல..." எனப் பார்வையை மகிழனிடம் வைத்து விட்டுக் கோகிலாவிடம் விசாரிக்க...

"ஆமாம் அபூ... அதான் இப்போ நம்ம புதுசா வாங்கியிருக்கோமே தோட்டம்... அங்கேதான்..." என்க,

அவளுக்கு அது எந்த இடம், அது எப்படி இருக்கும் என்று ஏதும் தெரியாமல் மகிழனிடம், "நானும் வரேன் மகிழ்... ப்ளீஸ்..." என இப்போது அவன் கையைப் பிடித்துக் கெஞ்ச, மகிழனுக்கு என்னவோ போலிருந்தது.

அவனுக்கு இப்போது வெறுப்பு வரவில்லை... தங்களுக்குள் திருமண நிச்சயம் முடிந்த நிலையில் எந்தப் பெண்ணாக இருந்தாலும் இப்படித்தான் நடந்து கொள் வாள்... அபூர்வாவைச் சொல்லி எந்தக் குற்றமுமில்லை... நான்தான், நிச்சயம் முடிந்த அந்த நாளே, இன்னொரு பெண்ணின் பால் இசைந்து விட்டேன்... இன்னமும் சொல்லப் போனால் இப்போது அபூர்வாவை விடுத்து அவனின் மேல்தான் அவனுக்கு எரிச்சல் திரும்பியது...

அவனின் இயலாமையை நினைத்து அதுதான் கோபமாக வெளிப்பட்டது....

"அவள் கேட்கிறாள் இல்ல ராசு... எதுமே சொல்லாம என்ன யோசனையில் நிற்கிறாய்...? அபூவையும்

கூட்டிட்டுப் போப்பா..." என்ற அன்னையின் குரலில் தன்னுணர்வு பெற்றவன்,

'ஹய்யோ... இவளையா... அங்கேயா...!' என மனம் யோசிக்க,

"அம்மா... அங்கே எல்லாம் இப்போ வேண் டாம்மா..." எனத் தயக்கமாகச் சொல்ல வர,

"அதெல்லாம் ஒண்ணும் சொல்ல வேண்டாம் ராசு... அவளே பத்து நாள் கழித்து வந்திருக்கிறாள்... ரெண்டு பேரும் போயிட்டு வாங்க..." என்ற கோகிலாவிற்கு... மகனும், வருங்கால மருமகளும் ஒருவருடன் ஒருவர் பேசிப் புரிந்து கொள்ளட்டுமென்ற எண்ணம்...

இவர்கள் திருமணத்தைப் பற்றிப் பேசும் முன்பும் சரி, அதன் பின்பும் சரி... மதுவின் அளவிற்கு மகிழனின் முகத்தில் சந்தோஷம் இல்லையென்று அந்தத் தாய் உணர்ந்திருக்க மாட்டாரா என்ன...! அதன் விளைவாக இருவருக்கும் தனிமையைக் கொடுத்துத் திருமணத்திற்கு முன்பு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமென்று நினைத்துச் சொல்ல,

சற்று நேரம் யோசித்த மகிழன், "சரிம்மா..." என அபூர்வாவை அழைத்துக் கொண்டு அவர்களிடம் விடை பெற்றுக் கிளம்பினான்.

அபூர்வாவிடம் முல்லையைப் பற்றிச் சொல்ல... அவன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தான். ஆனால் அது சாத்தியமில்லை என்று அடுத்தடுத்த நிகழ்வுகள் அவனுக்கு உணர்த்தின.



அவனின் கார் வாகனம் மிகுந்த சாலையைக் கடக்கும்வரை, அவனின் கவனம் சாலையைத் தவிர வேறு எங்குமிருக்காது என்பது அவன் முகத்திலே தெரிந்தது...

அதைப் புரிந்து கொண்டவள் போல் அபூர்வா காரிலிருந்து ஸ்டீரியோவில் குத்துப் பாடல்களை ஒலிக்க விட்டுத் தன் செல்போனை நோண்டிக் கொண்டு வர, ஏற்கெனவே அதிக வாகனம் மிகுந்த சாலையைக் கடக்க வேண்டுமென்ற எரிச்சலிலிருந்த மகிழனுக்கு இந்தக் குத்துப் பாட்டு வேறு மேலும் மண்டையைக் காய வைத்தது.

'ச்சே... என்ன டேஸ்ட்டோ...' என மனதில் நினைத்துக் கொண்டு அதை அணைத்தான்...

"ப்ச்... ஏன் மகிழ் ஆஃப் பண்ணினீங்க... எவ்வளவு சூப்பர் சாங் தெரியுமா...?" என மீண்டும் அதை உயிர்ப் பிக்க,

மகிழனின் முகம் அஷ்ட கோணலாகியது...

'கடவுளே... இவள்கிட்ட யிருந்து எப்படியாவது என்னைக் காப்பாத்திடு...' எனக் கடவுளிடம் ஒரு வேண்டு தலை வைத்துவிட்டுச் சாலையில் பார்வையைப் பதித்தான்.

கார் பேரூர் ரோட்டை நெருங்கும்வரையில் மகிழன் அபூர்வாவிடம் பேச்சைத் துவங்கவில்லை... அவனுக்குத் தயக்கமென்றில்லை... ஆனால் ஏனோ அவளிடம் தான் எதற்கு முல்லையைப் பற்றிப் பேச வேண்டுமென்ற எண்ணம்...

ஆனால் அதைப் பற்றியெல்லாம் அபூர்வா கவலைப் படவில்லை. அவளுக்குப் பிடித்த விஷயங்கள்... திருமணத்திற்குப் பிறகு மகிழன் அவளிடம் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று பட்டியலிட்டுக் கொண் டிருந்தாள்.

முதலில் மகிழன் அவனின் இந்தத் தாடியை எடுக்க வேண்டுமாம்... அது அவனின் அழகைக் குறைக்கிறதாம். இந்தத் தாடியுடன் அவளின் ஃப்ரெண்ட்ஸ் முன்பு இவனை அறிமுகம் செய்ய முடியாதாம்... நிச்சயம் அன்றே அனைவரும் இவளைக் கேலி செய்தார்களாம்...

அதன் பின்பு திருமணம் முடிந்ததும் ஆர்.எஸ். புரத்தில் மகிழனுக்கு இருக்கும் இன்னொரு வீட்டிற்குக் குடிபெயர்ந்து விட வேண்டுமாம்... அப்போதுதான் இருவருக்குள்ளும் ப்ரைவசி இருக்குமாம்... இருவரும் நெருங்கிப் பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியுமாம்.

பின் தினமும் காலையில் எழுந்ததும் அவளிடம் மகிழன் குட் மார்னிங் சொல்ல வேண்டுமாம்... அதுவும் சில பல 'இச்'களுடன்...

மதியம் சரியாக ஒரு மணிக்கு வீட்டில் ஆஜராகி விட வேண்டுமாம்...

அதே போல் மாலை ஆறு மணிக்கு அலுவலக வேலையை முடித்துக் கொண்டு வீடு வந்துவிட்டு, தினமும் மாலை அவளை வெளியே ஷாப்பிங் அழைத்துச் செல்ல வேண்டுமாம். வாரம் ஒரு முறை சினிமா, அல்லது



எங்கேனும் பார்ட்டிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்... என்ற அவள் பட்டியல் நீண்டு கொண்டு போக,

கடைசியில், வார நாட்களில் வேண்டுமானால் அவனின் பெற்றோர்களைச் சந்தித்துக் கொள்ளலாம் என அவள் அனுமதியளிக்க... மகிழன் அவளை ஒரு உணர்ச்சியற்ற பார்வையைப் பார்த்து வைத்தான்...

"நாள் முழுதும் உன்னோட மடியில இருக்கணும்னு சொல்லற... அப்படித்தானே அபூர்வா...?" எனக் கேட்டு வைக்க,

"கரெக்ட் மகிழ்... ரொம்பச் சரியா சொல்லிட்டீங்க... நீங்க என் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணினாத்தானே நமக்குள்ள இருக்கிற ரிலேஷன்ஷிப் நல்ல பான்டிங்ல இருக்கும்..." எனப் பெருமையாகச் சொல்ல,

மகிழன், நா வரை எழுந்த பேச்சைக் கட்டுப் படுத்த வெகு சிரமப்பட்டான்...

இதற்கு மேல் இவளிடம் முல்லையைப் பற்றிப் பேசினால் சரி வராது... இதற்கு நாம் வேறு வழியைத் தான் யோசிக்க வேண்டும்... என அவனுள் எழுந்த முரண்பாடான பல எண்ணத்துடன் கார் போளுவாம்பட்டி வந்தடைந்தது.

அத்தனை நேரம் மகிழனுக்குள் இருந்த வேறு சிந்தனைகள் அனைத்தையும் கிடப்பில் போட்டுவிட்டு, மனது முழுவதையும் முல்லையை நிரப்பிக் கொண்டு காரை விட்டு இறங்கினான்.

வழக்கமாக வீசும் இயற்கைக் காற்றுடன், பின் மாலைப் பொழுதில் அந்த இடம் பூலோக சுவர்க்கம் போல் காட்சியளிக்க, மகிழனின் கண்கள் சுற்றிலும் மணம் வீசும் முல்லையைத் தேடின...

அவனின் தேடலைக் கண்டு கொள்ளாது காரை விட்டிறங்கிய அபூர்வா, அவளின் கால்களை அந்தச் செம்மண் பூமியில் பதிக்க, அவளின் ஹை ஹீல்ஸ் செருப்பு மண்ணில் புதையுண்டு பேடிக் க்யூர் செய்த கால்களை அழுக்காக்கி விட,

"ஷிட்... சே... என்னது இங்கே ஒரே மண்ணா இருக்கு..." என்ற அவளின் குரலை நல்ல ஹிந்துஸ்தானி இசை கேட்டுக் கொண்டிருக்கும் போது சி.டி தேய்ந்தால் வரும் இடையூறைப் போல் உணர்ந்தான்...

"விவசாய பூமியில் மண் இருக்காமல் மார்பிள் கல்லா இருக்கும்..." என மகிழன் வார்த்தைகளைக் கடித்துத் துப்ப,

"சே... போங்க மகிழ்... நீங்க இப்படி இருக்கும்னு சொல்லியிருந்தா நான் இங்கே வந்திருக்கவே மாட்டேன்..." என்க,

மீண்டும் ஒரு விவரிக்க முடியாத பார்வையை அவளிடம் வீசிவிட்டு, "ரொம்ப நல்லதாப் போச்சு... நீ இங்கயே இரு... நான் ஒருத்தரைப் பார்க்கணும்... பார்த்துட்டு வந்துடறேன்..." என அவ்விடம் விட்டுக் கிளம்ப, அபூர்வா மீண்டும் காரிலேறி அமர்ந்து கொண்டாள்...



முல்லையைத் தேடிக் கால்களை எட்டிப் போட்ட மகிழன் நேராகச் சென்றது வேம்பம்மன் கோவில்தான்... அவன் யூகம் சரி என்பது போல் முல்லை அங்கே தானிருந்தாள்.

அவள் கடவுளுக்கு மாலை நேர பூஜை செய்து கொண்டிருந்தாள்...

இன்றும் அவள் அணிந்திருந்த பாவாடையைத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டு அந்த இடத்தைச் சுத்தப்படுத்த ஆரம்பித்தபோதே அங்கே வந்திருந்த மகிழன் அன்று போல் இன்றும் மரத்தில் சாய்ந்து நின்று அவள் செய்கையை வேடிக்கை பார்க்கத் துவங்கினான்.

முல்லை முதலில் ஆற்றிலிருந்து கொண்டு வந்திருந்த நீரினால் வேம்பம்மனின் இடத்தைச் சுத்தப் படுத்தினாள்.

அதன் பிறகு நீரினை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கீழே முட்டியிட்டு அமர்ந்து ஒரு துணியால் அம்மனின் பீடத்தைத் துடைத்துவிட்டாள்.

அதன் பிறகு சந்தனம், குங்குமம், மஞ்சள் மற்றும் தன்னிடமிருந்த அரளிப் பூ, செம்பருத்தி மற்றும் வேறு சில மலர்கள் என அனைத்தையும் கொண்டு அலங்கரித்து விட்டு விளக்கேற்றி வைத்துவிட்டு, எழுந்து நின்று தனக்குள் ஏதோ முணுமுணுத்தவாறு ஏதோ வேண்டுதலை வைத்துவிட்டுத் தன்னிடமிருந்த பொருட்களை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு திரும்பும் வரையிலும் மகிழனின் நிலையில் எந்த மாற்றமுமில்லை...

கிட்டத்தட்ட அரைமணி நேரம் தன்னவளின் அழகையும், அவளின் கடவுள் பக்தியையும் ரசித்துக் கொண்டிருந்தான்...

முல்லை தான் தன் மனதை இத்தனை நாள் குடைந்து கொண்டிருந்தவனின் உருவத்தை அந் நொடியில் பார்த்ததும் வெகுவாகத் தடுமாறிப் போனாள்...

ஒரு நிமிடமோ பல நிமிடமோ இருவரின் பார்வை ஒருவரையொருவர் தீண்டிச் செல்ல, வேகமாக அடித்த காற்றினில் தன்னுணர்வு பெற்ற முல்லை, 'வேகமாக அவ்விடம் விட்டு நகரு...' என மூளை அறிவுறுத்த, தலையைக் குனிந்தவாறு இரண்டு எட்டு எடுத்து வைத்த வேளையில், எதன் மீதோ மோதி அவள் ஒரு கையில் வைத்திருந்த தட்டிலிருந்து மஞ்சள் கிண்ணம் கவிழ்ந்து எதிரில் இருந்தவரின் மீது சரிந்த பின்னே தான் முல்லை தன் பார்வையை மேல் உயர்த்தினாள்...

ஆனால் அதற்குள், "யூ இடியட்..." என ஆங்கார மான குரலுடன் கைகள் முல்லையின் கன்னத்தைப் பழுது பார்க்க வர,

"பளார்..." என்ற ஓசையில் அங்கிருந்த மூவரில் இருவர் திகைப்பின் உச்சத்தைத் தொட்டிருந்தனர்.

## 7

தன்னை மறந்து மண்ணில் விழுந்து...
இளமை மலரின் மீது கன்னி இழந்த வண்டு...
தேக சுகத்தில் கவனம்...
காட்டு வழியில் பயணம்...



கங்கை நதிக்கு மண்ணில் அணையா...
இளமையெனும் பூங்காற்று...
பாடியது ஓர் பாட்டு...

'பளார்...' என்ற சத்தத்தில் அங்கிருந்த மூவரில் இருவர் திகைத்து நின்றனர்...

முல்லை அடித்த அடியில் காந்திய கன்னங்களைப் பிடித்துக் கொண்டு திக் பிரமை பிடித்தவள் போல் நின்றாள் அபூர்வா...

தவறுதலாகச் சிந்திய மஞ்சளுக்கு முல்லை மன்னிப்புக் கேட்கும் முன்னரே, "இடியட்!" என்று திட்டியது மட்டுமில்லாமல் அடிக்கக் கையை ஓங்கினால்...

'இன்னொரு கன்னத்திலும் அடி...' எனக் காட்ட அவள் என்ன ஏசுநாதரா... நொடியில் சுதாரித்து அவள் ஓங்கிய கையை அவள் கன்னத்தில் வீசுமுன்னர் முல்லையின் கைகள் அவள் கன்னங்களில் கோடிமுத்தன.

இதுவரை தன் பெற்றோர்களே சின்ன வயதிலிருந்து அவளை அடித்ததில்லை... அப்படியிருக்க யாரோ ஒரு கிராமத்துப் பெண்... தன்னை விட வயதிலும் சிறியவளாகத் தெரியும் பெண் தன்னை, தன் வருங்காலக் கணவர் முன் அடித்ததில் உடலும் மனமும் அவமானத்தில் சிவந்தது அபூர்வாவிற்கு...

அவள் அடித்ததில் பல நிமிடங்கள் அபூர்வா அப்படியே நின்றிருக்க, முதலில் மகிழன்தான் சுதாரித்து இரு பெண்களின் அருகில் வந்தான்.

அவனுக்கு யாரை முதலில் சமாதானப் படுத்துவது என்று தெரியவில்லை...

முதலில் அபூர்வாவைச் சமாதானம் செய்தால் ஏற்கெனவே இட விசயத்தில் தன் மீது கோபமாக இருக்கும் முல்லை மேலும் அவளின் நெற்றிக் கண்ணைத் திறந்து விடுவாள்...

அப்படித் தான் முல்லையைச் சமாதானம் செய் தால் அபூர்வாவின் பார்வை கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்...

'இது ஏதடா சோதனை...'

எத்தனை மனிதர்களைத் தொழிலில் வீழ்த்திய வனுக்கு இரண்டு பெண்களைச் சமாதானம் செய்ய முடியவில்லை. தவித்தான் மகிழன்...

வேறு வழியில்லை. முதலில் அபூர்வாவை இவ் விடத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என நினைத்தவன், மெல்ல... "அபூர்வா... அபூர்வா..." வென அழைக்க, அவளோ இன்னமும் முல்லை அடித்த அதிர்ச்சியில் உறைந்திருந்தாள்.

அவனின் அழைப்புக்கு அபூர்வாவிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாமல் போக, அவளைத் தோள் பற்றப் போக... என்னவென்றே தெரியாமல் அவனின் பார்வை முல்லையிடம் சென்றது.

அவன் நினைத்ததைப் போலவே முல்லையின் தீப்பார்வையில் அவன் சுடுபட்டான்... இருந்தாலும்



கூட அபூர்வாவை இங்கிருந்து அழைத்துச் செல்வதே அவனின் முதல் தலையாய காரியம் என்பதை உணர்ந்து கண்களிலே அவளிடம் ஒரு கெஞ்சல் பார்வையைச் செலுத்தி விட்டு, "நான் நாளை வரேன்..." என விடை பெற்றுச் செல்ல எத்தனிக்க...

அவனின் குரலில் நடப்புக்கு மீண்ட அபூர்வா, இப்போது மகிழனையும் முல்லையையும் விளங்காத ஒரு பார்வை பார்க்க, அதைக் கண்டு கொள்ளும் மன மில்லாமல், "வா அபூர்வா, வீட்டுக்குப் போகலாம்..." என அவள் நகர்வதற்குக் காத்திருக்க,

தன்னுணர்வு பெற்ற அபூர்வா, "என்ன மகிழ்... இங்க இப்போ என்ன நடந்திருக்கு... நீங்கபாட்டுக்குக் கிளம்பலாம்னு கூலா சொல்றீங்க..." என ஆவேசமாகக் கத்தினாள்.

'ஐயோ... இவள் வேற நம்ம சுகர் கேண்டியைப் பத்தி தெரியாமல் எகிறுறாளே...' என மனதில் நினைத்துக் கொண்டவன்...

"அபூர்வா... வா. இப்போ கிளம்பலாம்..." எனக் காரணம் சொல்லாமல் அவன் கிளம்பச் சொன்னது வேறு அபூர்வாவின் கோபத்திற்கு மேலும் தூபம் போட,

"ப்ச்..." என்றவள், இப்போது பார்வையை மகிழனிட மிருந்து முல்லையிடம் திருப்பி, அவளை முடிந்த மட்டும் முறைக்க, முல்லையோ அவளின் முழு உயரத்திற்கு உயர்ந்து நின்று அவளின் முறைப்புக்குச் சளைக்காமல் எதிரில் நின்றிருந்தாள்...

மகிழனின் மனதில், 'ஹய்யோ... இது என்ன ரெண்டுகளும் இப்படிச் சண்டைக் கோழி மாதிரி முறைச்சு கிட்டு நிக்குதுங்க... இன்னிக்குக் குடுமிபிடி சண்டை போடாமல் இங்க இருந்து கிளம்ப மாட்டாங்க போலவே...'

"நீ யார் மேல கை வைச்சிருக்கேனு தெரியுமா...?" ஆங்காரமாக அபூர்வா கேட்ட கேள்வியில்,

"ஏன் தெரியாது... பொண்ணு மாதிரி உருவத்தில் நிக்கிற ஒரு திமிரு பிடிச்ச கழுதையை..." எனச் சளைக் காமல் பதில் சொல்ல,

மகிழன் மானசீகமாகத் தலையில் கை வைத்துக் கொண்டான்...

"அபூர்வா... எதுக்குத் தேவையில்லாத பிரச்சனை.... முதல்ல இங்கிருந்து போகலாம்... நேரமாயிடுச்சு..." என அவளைக் கிளப்புவதிலே குறியாக இருக்க,

"நீங்க என்ன மாமா என்னைக் கிளப்புவதில் குறியா இருக்கீங்க... என்னை அடிச்சது அவ... அவளை ஒரு கேள்வி கேட்காமல் இப்படி நிக்குறீங்க..." எனக் கத்தத் துவங்க, இப்போது மகிழனுக்குக் கோபம் வந்தது.

முல்லையின் மனதில் அவளின், 'மாமா...' என்ற அழைப்பு ஏதோவொரு உணர்வை ஏற்படுத்தியது.

"அபூர்வா... நீ செஞ்சது தப்புதானே... சும்மா மஞ்சள் கொட்டினதுக்கு யாரு, என்னன்னு தெரியாம இடியட்னு திட்டினது மட்டுமில்லாமல் அடிக்கக் கை ஓங்க லாமா...?" எனப் பொறுமையாகவே அவளுக்கு எடுத்துச் சொல்ல,



"என்ன மாமா... விளையாடறீங்களா...? உங்களுக்குக் கூட நான் போட்டிருக்கற இந்த அனார்கலி சுடியோட விலை தெரியாதா... இவ்ளோ விலை கொடுத்து நான் ட்ரெஸ் வாங்கிப் போட்டா... இவள் வந்து மஞ்சள் கொட்டி வெச்சிருக்கா... இந்த அன்னாடங் காய்ச்சிக்கு எல்லாம் நம்ம போடற ட்ரெஸ் பத்தி என்ன தெரியும்...? நான் செஞ்சது தப்புன்னா... இவள் மட்டும் என்ன செஞ்சிருக்கா... அவளோட அடிச்ச கையை ஒடைக்காம நான் இங்கிருந்து நகர மாட்டேன்..." எனக் கோபமாகக் கத்த,

மகிழன் மனதில் தேவதையாக வீற்றிருக்கும் முல்லையை அபூர்வா அன்னாடங்காய்ச்சி என்றதில் அவனின் கோபம் எல்லையைக் கடக்கத் தயாராக இருக்க, ஆனால் அதைப் போக்கும் வண்ணம்,

"நீ உடைக்கறவரைக்கும் உன்கிட்ட கையைக் கொடுத்துட்டு நான் என்ன படம் பார்த்துக்கிட்டு இருப்பே னாக்கும்... உன்ற இன்னொரு கன்னமும் பழுக்க வைக்க வேண்டாம்னு பார்க்கிறேன்..." என முல்லை கெத்தாகச் சொன்ன விதத்தில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவனின் முகத்தில் புன்னகையின் சாயலைக் கண்ட அபூர்வா, அதற்குக் காரணமானவளை ஒரு அடி யாவது அடிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் அவள் மீது பாயத் தயாராக, அவளைச் சுதாரித்துப் பிடித்து நிறுத்திய மகிழன், சண்டை போகிற போக்கைப் பார்த்தால் இது இப்போதைக்கு முடியும் போலத் தெரியவில்லை அவனுக்கு.

"கொடி... நீதான் கொஞ்சம் அமைதியா இரேன்... நான் உன்னை நாளைக்கு வந்து பார்க்கிறேன்... நீ வீட்டுக்குப் போ..." என முல்லையை அடக்க,

அவனின் கொடியென்ற அழைப்பிலும், உரிமை யாக நாளை வந்து சந்திக்கிறேன் என்றதிலும் இரு பெண்களும் திகைத்து நின்றனர்...

முல்லையை இதுவரை யாரும் கொடியென்று அழைத்ததில்லை... மகிழனின் பிரத்யேக அழைப்பு அவள் மனதிற்குள் இன்னதென்று வரையறுக்க முடியாத உணர்வை ஏற்படுத்தியது... ஏற்கெனவே இந்த உணர்விற்கு என்ன அர்த்தமென்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்த முல்லை மேலும் குழம்பி நின்றாள்.

அபூர்வாவிற்கோ, 'இங்க என்னங்கடா நடக்குது...' என்ற ரீதியில் முல்லையையும், மகிழனையும் பார்த்தாள்.

அவன் முதலிலிருந்தே தன்னை அடக்கியதும், முல்லையைக் கண்ட விதத்திலும் அவளுக்கு அவன் மீது கோபம்தான் எழுந்தது.

கொஞ்சம் நிதானமாக மகிழனின் பார்வையைக் கவனித்திருந்தால் அவனின் உணர்வுகளை அவளால் புரிந்திருக்க முடியும். ஆனால் அவளோ யாரோ ஒரு பெண் தன்னை அடித்த அவமானம் தாங்க முடியாமல் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு சில நிமிடப் போராட்டத்திற்குப் பின்னர் அபூர்வாவை அவ்விடம் விட்டு நகர்த்தியவன், அவளைக்



காரில் ஏற்றி முல்லையிடம் ஒரு தலையசைப்பில் விடை பெற, முல்லையின் அனுமதியில்லாமலே அவளின் தலை யும் தானாக அசைந்து அவனுக்கு விடை கொடுத்தது...

காரிலேறிய அபூர்வாவோ, "என்ன மாமா பண்ணிக் கிட்டு இருக்கீங்க... நீங்க கல்யாணம் பண்ணப் போற பொண்ணை யாரோ ஒருத்தி அடிச்சிட்டு எடுத்தெறிஞ்சு பேசறா... நீங்க என்னடான்னா அவளை நாலு வாங்கு வாங்காம என்னைச் சமாதானப்படுத்திக் கூட்டிட்டுப் போறீங்க... நீங்களா இப்படி... அப்போ என்னை யாராவது அடிச்சால் உங்களுக்கு ஒண்ணுமில்லையா...? அப்போ நான் யாரோவா...? இதுதான் நீங்கள் என் மேல் வச்சிருக் கற பாசமா...?" என முதலில் எகிறியவள், பின் மகிழனின் பார்வை மாற்றத்தை உணர்ந்து அழுகையில் முடித்தாள்.

அவளின் அழுகையில் மகிழனுக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை... மகிழனால் இந்தப் பிரச்சனையை எப்படிச் சமாளிப்பதென்றும் புரியவில்லை. இதுவே பிசினஸ் டீல் என்றால் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசி விடும் அவனால் இரண்டு அல்ல, மூன்று பெண்களின் உணர்வுகளில் விளையாட அவன் விரும்பவில்லை.

அப்படி அவன் எடுத்த எடுப்பில் செய்வதற்கு இது பணம் சம்பந்தப்பட்ட விசயம் அல்லவே...!

என்னதான் அபூர்வா குணத்தில் சற்றுக் குறைந் தவளாக இருந்தாலும், நிச்சயம் முடிந்த எந்தப் பெண்ணும் அந்த ஆண்மகனைத் தன் கணவனாக நினைக்கத் துவங்கி விடுவாள்... அபூர்வாவும் அந்த உரிமையுடனே

அவனுடன் பழகுகிறாள் என்பதை அவன் அறியாத வனில்லை...

தாய், தங்கையுடன் வளர்ந்தமையால், அவனால் அவ்வளவு எளிதாக அபூர்வாவிடம் உண்மையைச் சொல்லி அவளைப் புண்படுத்த முடியவில்லை. அவனுக்கு அவளின் உண்மையான முகம் தெரியாமல் அவளைப் பற்றி நல்ல விதத்திலே எண்ணினான்...

அதே சமயம் முல்லையை விடுத்து வேறொரு பெண்ணுடன் அவனின் வாழ்வை இணைத்துக் கொள் வது என்பது அவனால் முடியாத ஒன்று...

முல்லையைப் போன்ற ஒரு பெண்ணை அவன் இதுவரை சந்தித்ததுமில்லை... அவள் ஏற்படுத்திய தாக்கத்தை இதுவரை வேறு எந்த ஒரு பெண்ணும் ஏற்படுத்தியதுமில்லை... அந்தத் தாக்குதலிலிருந்து விடுபட அவன் முற்படவில்லை...

காதலுக்கு நிற்கும் பெண்ணிடமும், திருமணத்திற்கு நிற்கும் பெண்ணிடமும் உண்மையைச் சொல்ல முடி யாமல் தவித்து நின்றான் அந்தக் கம்பீர ஆண்மகன்...

எந்தக் கொம்பனாக இருந்தாலும் இந்தக் காத லெனும் உணர்வில் கடைநிலைச் சிப்பாயன்றோ...!

மகிழனும் அதே நிலையில் தானிருந்தான்...

அதுவும் இப்போது நடந்த இந்த நிகழ்வில் நிச்சயம் அபூர்வாவிடம் முல்லையைப் பற்றிச் சொல்லிப் புரிய வைப்பதென்பது முடியாத ஒன்று... ஆனால் அவனால்



இன்னமும் இந்தப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கிக் கொள்ளும் முன் இதற்கொரு தீர்வு காண நினைத்தான்.

யோசித்தவனுக்கு இதை எப்படிச் சமாளிப்பதென்ற தீர்வைத்தான் கண்டுபிடிக்க முடியவில்லை...

அவன் யோசனையை முடிக்கவும், வீடு வரவும் சரியாக இருக்க... வழியெங்கும் மௌனமாக வந்த மகிழனைக் கண்டு அபூர்வாவின் மனம் வெதும்பினாலும், ஏனோ முல்லை அவளை அடித்ததுதான்... அவள் மனதில் முன் நின்றது. மகிழனின் யோசனையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவள் கன்னத்தைத் தடவிப் பார்த்தாள்.

முல்லை அடித்த இடம் காந்தியிருக்க, அது ஏற்படுத்திய தடயம் வேறு அவளுக்குள் முல்லையின் மேல் வன்மம் மேலும் மேலும் வளரச் செய்தது... தன்னை எப்படி ஒண்ணுமில்லாத அவள் அடித்துவிட்டு நிம்மதியாக இருக்க முடியும்...? இதற்கு அவளுக்குத் தக்க பாடம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டாள்...

மகிழனின் வீடு வந்து சேர்ந்தவள் வேகமாகக் காரை விட்டு இறங்கியவள் தன் கைப்பையிலிருந்த சாவியைக் கொண்டு அவளின் காரை எடுத்து அங்கிருந்து கிளம்பி னாள்.

அவள் மகிழனிடமும் விடை பெறவில்லை. கார் சத்தம் கேட்டு வெளியில் வந்த கோகிலாவிடமும் விடை பெறவில்லை...

அபூர்வாவின் காந்திய கன்னம் இருட்டில் கோகிலா வின் கண்களில் புலப்படவில்லை...

அவள் சென்றது கூடத் தெரியாமல் யோசனையுடன் வீட்டிற்குள் வந்த மகனை நிறுத்திய கோகிலா, "என்ன ராசு... ஏன் அபூ வீட்டுக்குள்ளே வராமலே கிளம்பிட்டா... உன்கிட்டயும் எதுவுமே சொல்லலை... என்ன உங்க ளுக்குள் ஏதாவது பிரச்சனையா தம்பி...?" என அன்னை கேட்ட கேள்விக்கு...

சிந்தனையிலிருந்து விடுபட்டு, "அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... வீட்டுக்கு நேரமாச்சுன்னு கிளம் பிட்டா..." என வாய்க்கு வந்ததை உளறிவிட்டு மாடிக்குச் சென்றான்...

கோகிலா, "ஏதோ ஊடல் போலிருக்கு..." என வெகுளித்தனமாக நினைத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டார்...

ஆனால் வரவேற்பறையில் அமர்ந்திருந்த மதுரிமாவிற்கு அபூர்வாவின் செயலும், அண்ணனின் பதிலும் திருப்தியைக் கொடுக்கவில்லை...

யோசனையுடன் மாடியறைக்குச் சென்ற அண்ணனைப் பின் தொடர்ந்தாள்... கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்த தங்கையை, வரவேற்கவெனத் தன் யோசனையை ஒதுக்கிவிட்டுப் புன்னகைக்க முயன்றான்...

"வா மது... என்ன இன்னிக்கு உன் 'அவருடன்' கடலை போடலையா...?" என உற்சாகமாகக் கேட்க முயன்றான்...



அண்ணன் கேட்ட வினாவிற்குப் பதிலளிக்காமல் அவனையே உற்று நோக்கிய மதுவை,

"என்னடா இப்படி பார்க்கிற..." என்றான்.

"அண்ணா... நான் உன்னிடம் ஒன்று கேட்பேன்... பொய் சொல்லாமல் எனக்கு உண்மையை மட்டும் சொல்லுங்க..." என்றாள்.

தங்கையின் இந்தக் கேள்வியில் மகிழனின் மனம் துணுக்குற்றது.

"என்ன மது... என்ன கேட்கணும்... முதல்ல நீ வந்து உட்காரு, வா..." என அவன் அறையிலிருந்த சோபாவில் அவளை அமரச் சொல்லிவிட்டுத் தானும் இன்னொரு இருக்கையில் அமர்ந்து கொண்டான்...

"இப்போ சொல்லுடா... என்ன கேட்கணும்... உனக்கும், இளாவிற்கும் ஏதாவது பிரச்சனையா... ஏதேனும் பஞ்சாயத்துப் பண்ண வேண்டுமா...?" எனக் கேலிக் குரலில் கேட்க,

"அண்ணா... இதை நான் கேட்கணும்..." என்ற மதுவை, யோசனையாகப் பார்க்க...

"அண்ணா... உங்களுக்கும் அபூர்வாவிற்கும் ஏதேனும் பிரச்சனையா...?" என்றாள்.

"ஹே மது... அப்படி எல்லாம் ஏதுமில்லைடா... ஏன் இப்படிக் கேட்கிறாய்...?" சமாளிக்க முயன்ற தமையனை இன்னதென்று வகுக்க முடியாத பார்வையில் பார்த்தாள்.

"அண்ணா... எனக்குத் தெரியும்... உங்களுடன் இதைப் பற்றிப் பேசினால், எனக்கு எந்தப் பதிலும் கிடைக்காதென்று... இருந்தாலும் கேட்கிறேன்... உங்க ளுக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமா அண்ணா...?" நேரடியாகவே கேட்க, ஒரு நிமிடம் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தான் மகிழன்.

தங்கையின் கேள்வியில் ஒரு நொடியே தடுமாறி யவன் அடுத்த நொடி தன்னை மீட்டுக் கொண்டு தன் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல், "மது... சின்னப் பெண் மாதிரி நடந்து கொள்... இதென்ன கேள்வி இது...!" என அவளை அடக்க முற்பட,

"அண்ணா... நான் சின்னப் பெண்ணில்லை... எனக்கும் கல்யாண வயது வந்துவிட்டதாக்கும்..." எனக் கேலி போல் சொன்னவள், தமையனின் கையைப் பிடித்துக் கொண்டு, "அண்ணா... இதோ பாருங்க... எனக்கு நல்லாவே தெரியும்... உங்களுக்கு முதலில் இருந்தே அபூவைப் பிடிக்காதென்று... ஆனாலும் நீங்க எதுக்கு இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதம் சொன்னீங்கன்னு புரியல...

"ஒரு வேளை அது எனக்காக நீங்க எடுத்த முடிவா இருந்தா தயவு செய்து அந்த எண்ணத்தை மாத்திக் கோங்க.... என்னோட விருப்பத்தையும், உங்களோட விருப்பத்தையும் முடிச்சுப் போடாதீங்க... நாளைக்கு வாழப் போறது நீங்கதான்... ஒரு கல்யாணத்தின் அடிப்படை அன்பும், காதலுமாக இருக்க வேண்டுமே



ஒழிய, அதில் வற்புறுத்தலோ, தியாகமோ இருக்கக் கூடாது... அப்படி எதாவது இருந்தால் அந்தத் திருமணம் வெற்றியடையாது...

"நீங்க உண்மையாகவே அபூவை விரும்பித் திருமணம் செய்து கொண்டால் எனக்கு அது சந்தோஷம் தான்... ஆனால் அதில்லாமல் இருந்தால் இருவரின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகிவிடும்... இப்போது கூட அபூவை உங்களுக்குப் பிடிக்கலைன்னா சொல்லிடுங் கண்ணா... என்னைப் பற்றிக் கவலைப்படாதீங்க... நானும் இளாவும் எப்படியும் சேர்ந்துடுவோம்... நாங்க ஒருவரை ஒருவர் ரொம்பவும் நேசிக்கிறோம்... அந்த நேசம் எங்களைச் சேர்த்திடும்.... ஆனால்... ஹ்ம்ம்... உங்க ளுக்குத் தெரியாததில்லை... எதுவாக இருந்தாலும் யோசிச்சுச் செய்யுங்க அண்ணா..." என முடித்தாள்.

மதுவால் ஒரு நிலைக்கு மேலே அண்ணனிடம் பேச முடியவில்லை... இருந்தாலும் அவள் தன் அண்ணன் இதைப் பற்றி யோசிப்பான் என நம்பினாள்.

மகிழனோ தங்கையின் பேச்சில் பிரமித்து நின்றான்.

தான் பார்த்து வளர்த்த பெண் இவ்வளவு பெரியவளாகி விட்டாளா... என நினைக்கும்போது மகிழனின் மனம் தங்கையை எண்ணிப் பெருமை கொண்டது... அதை மறைக்காமல் வெளியிட்டான்...

"அடடே... என் செல்லத் தங்கச்சி எப்போ இவ்வளவு பெரிய பாட்டி ஆனீங்க... ஓஹோ... எல்லாம் இளா

வோட ட்ரெய்னிங்கா....” என அவள் தலையாட்டிக் கொஞ்சியவன்,

“நீ நினைப்பது போல் எதுவுமில்ல மது... நீ நிம்மதியாப் போய்க் கல்யாணக் கனவு காணு...” மதுவிற்குச் சமாதானமாக விடையளித்து அனுப்பி வைத்தான்.

மது சென்றபின் அவன் மனம் பல யோசனைகளில் தத்தளித்து நின்றது...

தன்னைவிட ஏழு வயதுச் சிறிய பெண் தான் செய்த தவறினைச் சுட்டிக் காட்டியது அவனுக்குச் சற்று குற்றவுணர்வாக இருந்தது...

மது சொன்னது சரிதானே....

அபூர்வாவுடனான திருமணத்தை அவன் ஏற்றுக் கொண்டதற்கு என்ன காரணம்... நினைத்தாலே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

திருமணப் பந்தத்தை அவன் பணத்தால் அல்லவா அளந்தான்... அவனின் அளவுகோலைத் தவறென்று இரண்டு சிறிய பெண்கள் அவனுக்கு உணர்த்தி விட்டார்களே...!

மது சொல்லிச் சென்ற வார்த்தைகள் இன்னமும் அவன் காதுகளில் ரீங்காரமிட, உறுதியுடன் ஒரு முடிவு எடுத்தான்.

எடுத்த முடிவின்படி அடுத்த நாள் காலை அவன் தகப்பனாரின் முன் நின்றான்...



## 8

நான்கு கண்ணில் இன்று ஒரு காட்சியானதே...
வானம் காற்று பூமி இவை சாட்சியானதே...
நான் உன்னைப் பார்த்தது பூர்வ
ஜென்ம பந்தம்...
நீண்ட நாள் நினைவிலே வாழும்
இந்தச் சொந்தம்...
நான் இனி நீ... நீ இனி நான்...
வாழ்வோம் வா கண்ணே...!

மதுரிமா வந்து பேசிவிட்டுச் சென்றதும் மகிழனின் மனது கேட்ட கேள்விக்கு விடையளிக்க முடியாமல் தவித்திருந்தான்...

தன் தங்கை சொன்னது போல அபூர்வாவை அவன் தியாகமாகவோ, வற்புறுத்தலாகவோ கூட மணக்கச் சம்மதிக்கவில்லையே...!

அவளைத் திருமணம் செய்து கொண்டால் தங்களின் குடும்பச் சொத்து தங்களுக்குள்ளேயே இருக்குமென்ற அற்பக் காரணத்தினால் அல்லவா ஒத்துக் கொண்டான்...

இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என மூளை அறிவுறுத்திய சமயம் அவன் மனதிற்குள் எடுத்த தீர்க்கமான முடிவுடன், அடுத்த நாள் காலை தன் தந்தையை அவர்களின் அலுவலக அறையில் சந்தித்தான்...

மகன் ஏதோ மனக் குழப்பத்தில் இருப்பதைக் கடந்த சில நாட்களாக அவன் முகத்தில் அறிந்து கொண்டிருந்த

வெங்கடராமன், மகிழனைப் பார்த்ததும், அவனை அழைத்து இருக்கையில் அமரச் சொன்னவர், "சொல்லு மகிழ்... என்ன விசயம்...?" என நேரடியாக விஷயத்திற்கு வந்துவிட்டார்.

தந்தையின் இந்தச் செயலில் மகிழனுக்கு எந்த ஆச்சர்யமும் ஏற்படவில்லை... பல ஆண்டுகள் பல்வேறு மனிதர்களைச் சந்தித்து வந்தவர் தன் மகனின் முக வேறுபாடை அறியாமலா இருப்பார்...!

"அப்பா... எனக்கும் அபூர்வாவிற்கும் நடக்க இருக்கும் கல்யாணத்தை நிறுத்திடலாம்ப்பா..." என எந்த முன்னுரையுமின்றி நேரடியாக விஷயத்திற்கு வந்து விட்டான்...

மகிழனைப் பொறுத்தவரை ஒரு முடிவெடுத்து விட்டான் என்றால் அதைச் செயலாற்ற எந்தத் தயக்கமும் கொள்ள மாட்டான்.

அதன் காரணமாகவே இப்போது அவன் நேரடியாகத் தந்தையின் கண்ணை எதிர்நோக்கிப் பேசினான்.

வெங்கடராமன் முதலிலிருந்தே விஷயம் பெரியது என யூகித்திருந்தார்தான்... ஆனால் திருமணத்தை நிறுத்தும்படி மகன் கோரிக்கை வைப்பான் என அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

இது சாதாரணமான செய்தி அல்லவே...! இதில் அவர் மகளின் வாழ்க்கையும் அடங்கியிருக்கிறதே...!

"என்ன மகிழ் விளையாடறியா....! நிச்சயத்திற்கு முன் உன்கிட்ட ஒரு முறைக்கு இருமுறை கேட்டு, நீ



சம்மதம் சொன்னதும் தானே நிச்சயம் செய்தோம்... இப்போ வந்து கல்யாணத்தை நிறுத்திவிடலாம்னு சொல்ற... இதில் நீ மட்டும் சம்பந்தப்படலை மகிழ்... உன் தங்கச்சியோட வாழ்க்கையும் சம்பந்தப்பட்டிருக்கு... எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம்னு செய்ய முடியாது..." எனச் சற்றுக் காட்டமாகச் சொன்னார்.

அவருக்குத் தன் மகனின் இந்தப் போக்கில் சற்றும் உடன்பாடில்லை. தான் தொழிலில் நலிவடைந்த சமயம் ஒன்றுமறியாத அவனின் பதின்பருவத்திலே, "உங்களுக்கு நானிருக்கிறேன் அப்பா..." என வார்த்தைகளால் தனக்கு ஊக்கமளித்த மகன், அன்றிலிருந்து இன்றுவரை அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவருக்கு இன்று மகன் சொன்ன இந்தச் செய்தி அவ்வளவு உவப்பாக இருக்கவில்லை...

"அப்பா... நான் என்னோட கல்யாணத்தை மட்டும் தான் நிறுத்தச் சொன்னேன்... மதுவிற்கும், இளாவிற்கும் நடக்கும் திருமணத்தை நிறுத்தச் சொல்லவில்லை..." என அவன் முடிக்கும் முன்னர்,

"மகிழ்... நீ என்ன பேசுறேன்னு யோசிச்சுத்தான் பேசறியா...? இளா எப்படி அவரோட தங்கையை வேண்டாம்னு சொன்ன உன்னுடைய தங்கையைத் திருமணம் செய்து கொள்வார்னு நினைக்கிற...?"

"இளா ஒத்துப்பார்ப்பா..." என அழுத்திச் சொல்ல,

"அதை எப்படி நீ அவ்வளவு உறுதியா சொல்ற...?" என வெங்கட்டும் அழுத்திக் கேட்க,

"நிச்சயம் ஒத்துப்பார்... ஏன்னா இளாவும், நம்ம மதுவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க..." அவன் சின்னச் சிரிப்புடன் சொல்ல,

கேட்ட வெங்கடராமனுக்குத்தான் அதிர்ச்சியாக இருந்தது... அதன் விளைவாக அவர் சற்று நேரம் அமைதி காக்க, மகிழ், "என்னப்பா... ஷாக்காகிட்டீங்க...?" என்க, தன் மௌனத்தைக் கலைத்துப் பேசலானார்.

"மகிழ்... நீ அபூவை வேண்டாம்னு சொல்லிட் டேன்னு உன்னைப் பழி வாங்கவென என்னோட பெண்ணை இளா வேண்டாம்னு சொல்லிட்டான்னா... ஐயோ... வேண்டாம்ப்பா... மது சின்னப் பொண்ணு... அவளால இதைத் தாங்க முடியாது..." எனப் பாசமிகு தந்தையாக வெங்கடராமன் பதற,

"அப்பா... ஜஸ்ட் ரிலாக்ஸ்... ஏன் இவ்வளவு பதட்டப்படறீங்க..." என அருகில் மேஜையிலிருந்த நீரை அவருக்கு அருந்தக் கொடுத்து விட்டு, அவர் சற்று ஆசுவாசப்பட்ட பின்னர் பேசத் துவங்கினான்.

"அப்பா... நீங்க நினைக்கிற மாதிரி இது என்ன சீரியல் கதையா... இல்லை, இளாதான் அப்படிப் பட்டவரா...? உங்களுக்கு அவரைப் பற்றித் தெரி யாதப்பா... அபூவைக் காட்டிலும் இளா எந்த விஷயத் திலும் யோசித்துச் செய்வார்... அவர்கிட்ட எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பார்..." என விளக்கமளிக்க,

"அப்படி எதுக்கு விளக்கமளிக்கணும், மகிழ்...? உனக்கு அபூகிட்ட என்னதான் பிரச்சனை... அவளுக்கு



அழகில்லையா, படிப்பில்லையா... ஏன் வேண்டாம்னு சொல்லற... ரெண்டு வாரத்துக்கு முன்னாடி உனக்குப் பிடிச்ச பொண்ணு... ஏன் உனக்கு இப்போ பிடிக்காமப் போனா? நடுவில் என்ன தானாச்சு... முதல்ல நீ எனக்கு இதுக்கு விளக்கம் சொல்லு... அதுக்குப் பிறகு நம்ம இளங்கோ கிட்ட பேசுறதைப் பற்றிப் பேசலாம்..." என முடிவாகக் கேட்க,

தந்தை இவ்வாறு கேட்டதும் மகிழனுக்கு ஒரு நொடி முல்லையைப் பற்றிச் சொல்லி விடலாமா எனத் தோன்றியது... ஆனாலும் இன்னமும் முல்லையிடம் தன் மனதைச் சொல்லும் முன் இதைப் பற்றிப் பேசித் தேவையில்லாத வேறு குழப்பங்களை உருவாக்க வேண்டாமென நினைத்தவன்...

நீண்ட ஒரு பெருமூச்சை வெளியிட்டு, "எனக்கும், அபூவிற்கும் செட்டாகாதுப்பா... அவளுக்கும் எனக்கும் நினைப்பிலும் செயலிலும் நிறைய வேறுபாடுகள். நீங்க கேட்டபோது நான் சரின்னு சொன்னேன் தான்... ஆனால் எனக்கு அப்போ இருந்த மனநிலை வேற..." என்றவனை இடையிட்டு,

"அப்போ இருந்த மனநிலைன்னா... எனக்குப் புரியல மகிழ்... அப்போ உனக்கு இப்போ என்னாச்சு...?" என்க,

அவர் கேட்ட கேள்வியை விடுத்து, "அப்பா... ப்ளீஸ்... புரிஞ்சுக்கோங்க... நானும் அபூர்வாவும் கல்யாணம் செய்துக்கிட்டோம்னா நிச்சயம் அது

சந்தோஷமான திருமண வாழ்க்கையா இருக்காது... நீங்க மதுவோட கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படாதீங்க... என்னோட தங்கச்சி கல்யாணத்தில் எந்தப் பிரச்சனையும் வராது... அதுக்கு நான் பொறுப்பு... நீங்க கவலைய விடுங்க... இன்னிக்கு நீங்க என்னோட சிவா மாமா வீட்டுக்கு வாங்க... ரெண்டு பேரும் போய்ப் பேசிட்டு வந்துடலாம்...” என முடிக்க,

இதற்கு மேல் மகனிடம் வாக்குவாதத்தில் இறங்கினால் அது தனக்குத் தோல்வியே தருமென அறிந்த வெங்கடராமன் அந்தப் பேரூர் பட்டீஸ்வரனின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுச் சிவசுப்ரமணியைப் பார்க்க ஆயத்தமானார்.

வெங்கட்டின் மூலம் விஷயமறிந்த கோகிலா வெகுவாகக் கலங்கிப் போனார்... தான் பெற்ற இரு மக்களின் திருமணச் செய்தியில் எவ்வளவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தாரோ, அதே அளவு கவலையில் மூழ்கினார்...

இரண்டு பேரின் திருமண வாழ்க்கையும் கேள்விக் குறியில் நிற்பதை எந்த அன்னையால்தான் பொறுத்துக் கொள்ள முடியும்? ஆனாலும் மகன் சொன்ன காரணத்தை அவரால் உதாசீனப்படுத்த முடியவில்லை. பொருத்தமில்லாத் தம்பதிகள் வாழ்க்கையில் வெற்றி அடைவதில்லை என்ற நிதர்சனம் உணர்ந்தார்தான். ஆனால் அதே சமயம் மகளைப் பற்றிய கவலையும் அவரின் மனதை அரித்தது.



விஷயம் அறிந்தால் தன் அண்ணனின் முடிவு என்னவாக இருக்குமென்று அவரால் யூகிக்க முடியவில்லை.

மதுரிமாவிற்கு அண்ணன் எடுத்த முடிவில் சந்தோஷமே. இப்போதாவது அவன் நல்ல முடிவு எடுத்திருக்கிறான் என்று...

“என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க மாப்பிள்ள... எல்லாம் உங்க விருப்பத்தைக் கேட்டுகிட்டுதானே நடந்துச்சு. இப்போ வந்து பிடிக்கலைன்னு சொன்னா என்ன அர்த்தம்... என் பொண்ணுகிட்ட அப்படி என்ன குறை...” எனக் கோபமாகக் கத்த,

“மாமா... நான் அபூகிட்ட குறை இருக்குன்னு சொல்லவே இல்லையே... எனக்கும் அவளுக்கும் ஒத்து வராதுன்னு தான் சொல்றேன்,” என மகிழன் தன் தந்தையிடம் சொன்ன காரணத்தையே சிவாவிடமும் சொன்னான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அபூர்வாவிற்குத் தான் உள்ளுக்குள் எரிந்தது... ‘ஓஹோ... உனக்கும் எனக்கும் ஒத்து வராதா... மவனே... என்னை வேண்டாம்னு சொன்ன நீ எப்படி நிம்மதியா இருக்கேன்னு நான் பார்க்கிறேன்...’ அப்போதிருந்தே அவள் மனதில் விரோதம் வளர்ந்தது... ஆனால் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல் இறுக்கமான முகத்துடனே இருந்தாள்.

இளாவிற்கு ஏற்கெனவே இந்தச் செய்தி மதுவின் மூலம் தெரிந்திருந்ததால் அவனுக்குப் பெரியதாக ஆச்சர்யம் ஏதுமில்லை.

ஆனாலும் ஒரு அண்ணனாகத் தன் தங்கையின் வாழ்க்கையில் இப்படியாகிவிட்டதே என்ற கவலையால் இதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

டாம் டூமெனக் கத்திக் கொண்டிருந்த சிவாவின் அருகில் வந்த மகிழ், "மாமா... கொஞ்சம் நான் சொல்றதை அமைதியாக் கேளுங்க. நீங்க எல்லாரும் விருப்பப்படுற மாதிரி உங்களுக்காக நான் அபூர்வாவைக் கல்யாணம் செஞ்சுக்கிறேன்னு வெச்சுக்கோங்க...

"நாளைக்கு எனக்கும் அவளுக்கும் ஏதேனும் பிரச்சனை வந்தா அதை நானும் அவளும் தான் சந்திக்கணும்... எங்களால உங்களுக்கும் மன வருத்தம் தான்...

"நீங்களே யோசிச்சுப் பாருங்க. உங்களோட செல்லப் பொண்ணு, புருஷனோட சண்டை போட்டுட்டு உங்க வீட்ல வந்து உட்கார்ந்தா... உங்களுக்கு அது சந்தோஷமா, சொல்லுங்க. உங்களால் உங்க பெண்ணை அப்படிப் பார்க்க முடியுமா, சொல்லுங்க..." எனச் சிவாவின் பலமறிந்து பேசினான்...

அவர் யோசனையில் இருப்பதை அவர் மௌனம் உணர்த்தியது.

ஆனாலும், "இவ்ளோ யோசிச்சுப் பேசுற நீ ஏன் மகிழ்... என் பொண்ணுக்காக விட்டுக் கொடுத்துப் போகக் கூடாது...?" என அவரும் விடாமல் கேட்க,

மகிழன், 'இது ஏதடா வம்பாப் போச்சு...' என மனதில் நொந்து கொண்டவன்...



"மாமா... ஒரு தடவை விட்டுக் கொடுக்கலாம்... இரண்டு தடவை விட்டுக் கொடுக்கலாம்... வாழ்க்கை முழுவதும் என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. இவ்வளவு கஷ்டப்பட்டு எதுக்கு இந்தக் கல்யாணம், சொல்லுங்க... அதனால எனக்கும் அபூர்வாவிற்கும் நடக்கவிருந்த கல்யாணத்தை முறிச்சுடலாம்... நம்ம அபூவிற்கு நானே ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..." என முடிக்க,

கோபத்தில் எழுந்த அபூர்வா... "இதோ பாருங்க, மகிழ்... என்னாட கல்யாணத்தில உங்களுக்கு விருப்பமில்லைன்னு சொல்லிட்டீங்க... அதோட நிறுத்திக்கோங்க. எனக்கு மாப்பிள்ளை தேடறது உங்க வேலையில்ல..." எனக் கத்திவிட்டு அவ்விடம் விட்டு வேக எட்டுக்கள் வைத்து நகர்ந்தாள்...

அவள் மனம் முழுவதும் குரோதம் வளர்ந்து நின்றது... அவன் சொன்ன அனைத்துக் காரணங்களும், அபூர்வாவின் மேலே பாய்ந்தன... அவளை ஒரு விதமாக அவனை விடத் தாழ்த்திச் சொன்னது வேறு அவளுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியது... தன்னை வேண்டாமென்று சொல்லிவிட்டுச் சென்ற அவனை எப்படிப் பழி வாங்க வேண்டுமென்று மனதிற்குள் பட்டியலிட்டுக் கொண்டிருந்தாள்.

இவை அனைத்தையும் மௌனப் பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சிதம் இப்போது வாயைத் திறந்தார்.

“நான் கொஞ்சம் பேசலாமா...?” என அனுமதி வாங்கிக் கொண்டவர்,

“இதோ பாரு, மகிழ்... உனக்கு என்னோட பொண்ணை வேண்டாம்னு சொல்றதுக்கு முழு உரிமை யிருக்கு... அதே போல எங்களுக்கும் உன்னோட தங்கச்சியை மருமகளாக்குறதில எந்த உடன்பாடு மில்லை... மொத்தமாவே இந்தச் சம்பந்தத்தை முறிச்சிட லாம்...” என முடிக்க, இப்போது அதிர்வது இளங்கோவின் வேலையானது...

‘ஹய்யோ... இது என்ன எல்லாரும் என்னோட வாழ்க்கையை வச்சு ஃபுட் பால் விளையாடறாங்க...’ என மனதிற்குள் நினைத்த இளங்கோ, மகிழனைப் பரிதாபப் பார்வை பார்க்க, அந்தச் சூழ்நிலையிலும் மகிழனுக்கு அவன் முகத்தைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது.

அவனின் உதட்டசைவில் அவனின் சிரிப்பை உணர்ந்து கொண்ட இளங்கோ அவனைப் பார்வையாலே சுட்டு வைக்க, கண்ணை மூடித் திறந்து சமாதானம் சொன்னவன் இப்போது ரஞ்சிதம் அருகில் வந்து அமர்ந்தான்...

“அத்தை... ப்ளீஸ், இந்த விஷயத்தில் மது - இளா வாழ்க்கையை நுழைக்காதீங்க... அவங்க ரெண்டு பேருக்குள்ள இருக்கும் அந்த அன்பும், காதலும் எனக்கு அபூ மேல வரவே இல்ல... ஏதோ ரெண்டு ஃபாமிலி ஒண்ணாச் சேருதேன்னுதான் நான் இந்தக் கல்யாணத் திற்கு ஒத்துக்கிட்டேன்... மத்தப்படி எனக்கு அபூ மேல எந்த



ஃபீலிங்சும் இல்லை... எனக்கு நம்ம ரெண்டு குடும்பமும் ஒண்ணா இருக்கணும் அத்தை... அது மது - இளா கல்யாணத்தாலன்னா எனக்கு அது சந்தோஷம்தான்...” சரியான அம்பை எய்துவிட அது வேலை செய்தது...

சிறிது நேர யோசனைக்குப் பின் அவரின் முகமும் சம்மதத்திற்கு அடையாளமாகப் புன்னகையைச் சிந்த, அப்போது தான் வெங்கட்ராமன், இளங்கோவிற்கு நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

அனைவரையும் அவரவரின் குணமறிந்து சரிக்கட்டிய மகிழன் குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே தங்கையின் திருமணத்தை வைக்கும்படியும் ஏற்பாடு செய்தான்...

இவர்கள் பேசிய அனைத்தையும் கேட்டுக் கொண் டிருந்த அபூர்வாவிற்கு மனம் உலைக்களம் போல் கொதித்துக் கொண்டிருந்தது.

இவன் பேச்சில் மயங்கிய வீட்டினர் மீதும் அவளின் எரிச்சல் பாய்ந்தது...

தான் பெற்ற மகளை ஒருவன் வேண்டாமெனச் சொல்லிச் சென்றிருக்கிறான்...

இவர்கள் என்னடா என்றால் அவனின் தங்கையை மருமகளாக்கப் போகிறார்களாம். நினைக்கும் போதே அவளுக்கு எரிச்சல் அதிகமானது.

இளா வீட்டில் சம்மதம் சொன்னதும், மேலும் சில ஏற்பாடுகளைப் பற்றிப் பேசிவிட்டு வீட்டுக்கு வந்த மகிழன், சந்தோஷமான மனதுடன் இருந்தான்.

தங்கள் பெண்ணின் திருமணமாவது நல்ல முறையில் நடக்கவிருக்கிறது என வெங்கடராமன் தம்பதியினர் நிம்மதியடைந்தனர்.

அன்று இரவு தூங்கும் வேளை அவன் மனம் வெகுவாகச் சோர்ந்து போயிருந்தது. இதுவரை எத்தனையோ சிக்கல்களைச் சந்தித்தவனுக்கு இன்று நடந்த விஷயங்கள் அவன் மனதை வெகுவாகச் சோர்வுற வைத்திருந்தன.

ஆனால் இத்தனை நாள் அவனுக்கு இருந்த மனக் குழப்பத்தையும் அவனின் குற்றவுணர்வையும் சரி செய்துவிட்ட நிம்மதி... அவன் சோர்வு அனைத்தையும் விரட்டியடித்தது.

மேலும் அவன் காதலியை இனி எந்தத் தடையுமின்றிச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் அன்று இரவு நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்தான்.

அவன் யாருக்காக இத்தனை காரியங்களைச் செய்தானோ அவள் இவனின் காதலை ஏற்றுக் கொள்வாளா...?

இருவரின் மனமும் ஒன்று சேருமா...?

# 9

உள்ளம் தன்னைக் கொள்ளை கொண்ட
கள்வன் இங்கு நானே நானே...
உன்னோடுதான் என் ஜீவன்...
ஒன்றாக்கினான் நம் தேவன்...



நீ தானம்மா என் தாரம்...
மாறாதம்மா எந்நாளும்...
இந்த நேசம் பாசம் நாளும் வாழ்க...!

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த இளங்கோவைத் தன்னறையில் நடை பயின்று கொண்டிருந்த அபூர்வா தீப் பார்வை பார்த்தாள்.

அவளுக்கு மகிழனின் மீதிருந்த கோபம் அனைத்தும் தன் குடும்பத்தாரின் மேலும் பாய்ந்தது.

தன் தாய் தந்தையரைக் காட்டிலும், மகிழனை ஆதரிக்கும் இளங்கோவின் மீது கொலை வெறியே எழுந்தது...

தன் தங்கையை மறுத்தவன் தங்கையை மணக்கக் காத்திருக்கும் தன் அண்ணனின் மேல் மேலும் வெறுப்பு உருவானது. அந்த வெறுப்பினை வார்த்தையால் காட்டினாள்.

"இப்போ எதுக்கு இங்க வந்திருக்க...?" கேட்ட தங்கையின் மனநிலையை உணர்ந்து,

"அபூ... உனக்குக் கஷ்டமாத்தானிருக்கும்... ஆனாலும் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளும்மா..." என இளங்கோ ஆரம்பிக்க,

கையை உயர்த்தி அவனை நிறுத்துமாறு சொன்னவள், "முதல்ல இங்கிருந்து போய்டு... ஏதோ எனக்கு முன்னாடி பிறந்துட்டேங்கிற ஒரே காரணத்திற்காகப்

பேசாம இருக்கேன்..." அடக்கப்பட்ட கோபம் அவளின் வார்த்தைகளில் தெறித்தது...

"அபூ... இப்போ எதுக்கு இவ்வளவு கோபப்படுற... எனக்கு உன்னோட கஷ்டம் புரியுது..." என எடுத்துச் சொல்ல வர,

"உனக்கு என்ன புரியுது... ஏன் இளா... நான் தெரியாமத்தான் கேட்கிறேன்... உனக்குக் கொஞ்சம் கூட வெக்கமே இல்லையா...?" உன்னோட தங்கச்சியை ஒருத்தன் வேண்டாம்னு சொல்லிட்டுப் போறான்... நீ அவனை நாலு வாங்கு வாங்காம, பல்லைக் காட்டி அவனோட தங்கச்சியைக் கல்யாணம் பண்ண நாள் குறிச்சுட்டு வந்து நிக்கிற..." எனக் காட்டமாகக் கேட்க,

இப்போது கோபமடைந்த இளங்கோ, "அபூ... திஸ் இஸ் தி லிமிட். நீ இந்த மாதிரித்தான் மகிழ் கிட்டயும் பேசியிருப்ப! அதான் அவர் உன்னை வேண்டாம்னு சொல்லிட்டுப் போறார்... உனக்கு யார்கிட்ட இருந்து இப்படி ஒரு குணம் வந்தது அபூ... முதல்ல அடுத்தவங்களை மதிச்சுப் பழகு..." எனச் சமாதானம் செய்ய வந்த தன்னையே இப்படிப் பேசும் தங்கை, நிச்சயம் மகிழனை ஏதேனும் பேசி வெறுப்பேற்றியிருப்பாள் என நிச்சயமாக நம்பினான்...

"நீயும் அவனை மாதிரி என்னை விமர்சனம் பண்ணிப் பேசினா நான் நிச்சயம் மனுஷியா இருக்க மாட்டேன். மரியாதையா வெளிய போய்டு..." என உரத்த குரலில் கத்த,



"சே... உன்னையும் ஒரு மனுஷியா மதிச்சுப் பேச வந்தேன் பாரு. என்னைச் சொல்லணும்..." எனத் தலையிலடித்துக் கொண்டு இளா அவ்விடம் விட்டுக் கதவு வரை சென்றவன், பின் திரும்பி... "இதோ பாரு அபூ... எனக்கும் மதுவுக்கும் இருப்பது இட்ஸ் ட்ரூலீ அ பியூர் லவ்... இந்தக் கல்யாண ஏற்பாடு நின்றிருந்தா கூட நான் அவளையும், அவள் என்னையும் நினைச்சுகிட்டு வாழ்ந் துடுவோம்... உனக்கு நிஜமாகவே மகிழ் மேல அந்த மாதிரி ஃபீல் இருந்திருந்தா மகிழ் நிச்சயமா இந்தக் கல்யாணத்தை நிறுத்தியிருக்க மாட்டார்... முதல்ல உன் னோட தப்பைத் திருத்திக்கோ அபூ..."

என்னதான் அபூர்வா கோபத்தில் கத்தினாலும் ஒரு அண்ணனாகத் தங்கைக்கு அறிவுரை வழங்கிவிட்டுச் செல்ல, அது அபூர்வாவை மேலும் கடுப்பேற்றியது....

மகிழும் சரி, இளங்கோவும் சரி... இருவரும் அபூர்வாவின் குணத்தைச் சுட்டிக் காட்டிப் பேசியது அவளுக்குள் இருந்த இன்னொரு மிருகத்தை வெளிக் கொண்டு வந்தது... தான்தான் ஏதோ தப்பு செய்து அவனை இப்படிச் சொல்ல வைத்ததாக இளங்கோ பேசியது... என அனைத்தும் அவளை நிலை கொள்ளாமல் தவிக்க வைத்தது...

**இ**வை எதையும் அறியாத முல்லை முன்னாள் மாலை நடந்ததையே நினைத்துக் கொண்டிருந்தாள்...

அவளுக்கு அபூவை அடித்தது ஏதும் தவறாகப் பட்வில்லை... அவள் செய்யவிருந்த வேலையை

அவளுக்கு முன்னே செய்துவிட்டாள்... அதுக்கு அவள் கோபப்பட்டுப் பேசியது ஏதும் அவள் கருத்தில் பதிய வில்லை... இது போன்று நிறையப் பேரிடம் அவள் ஊருக்குள்ளே குடுமிச் சண்டையிட்டவள் தானே! அவளைப் பொறுத்தவரை இந்தச் சம்பவம் ஒரு நிகழ்வே இல்லை...

முல்லையின் மூளையை அரித்தது... மகிழனை அவள் மாமாவென்று அழைத்தது... அவர்களுக்குள் அப்படி என்ன ஒரு உறவு எனத் தெரியாமல் அவள் மனம் குழம்பித் தவித்தது. இருவரின் உறவினை அறிந்து கொள்ள அவள் மனம் துடித்தது...

அவளை வேறு அவன் உரிமையாகத் தோளைத் தொட்டானே...! அதற்கு என்ன அர்த்தம்...?

ஒரு வேளை இருவரும் காதலர்களாக இருப் பார்களோ...! இதை நினைத்த விநாடி அவளுக்குள் ஒரு ஏமாற்றம் மனம் முழுவதும் பரவியது.

இந்த ஏமாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை அவள் யோசித்தும் அதன் பெயர் காதலென்று அவளுக்குப் புரியவில்லை...

அவனின் 'கொடி' யென்ற அழைப்பு வேறு புதிதாக இருக்க, 'இது நாள்வரை என்ற அப்பு கூட என்னைய கொடின்னு கூப்பிட்டதில்ல... இந்தத் தாடிக்காரன் எப்படி என்னைய கொடின்னு கூப்புடலாம். இதுவுமில்லாம போகும்போது தலையை வேற ஆட்டுறான்... ஆட்டுற



தலையில ஒரு கொட்டு வைக்கணும்...' எனக் கோபத்துடன் நினைத்துக் கொண்டாள்...

'இவன் நேத்து என்னத்துக்கு இங்க வந்தான்... ஏற்கெனவே இந்தப் பயபுள்ளைய நினைச்சுகிட்டு பத்து நாள் உறங்காம கெடந்தோம்... நேத்து தான் ஒரு அளவுக்கு நிதானத்துக்கு வந்தேன்... அதுலயும் நேத்து வந்து மண்ணள்ளிப் போட்டுட்டான்...' - மனதில் தோன் றியதை எல்லாம் சொல்லி அவளின் வேம்பம்மனிடம் புலம்பிக் கொண்டிருந்தாள் முல்லை...

ஏதோவொன்று தோன்ற, திரும்பிச் சுற்றியும் பார்வையிட்டாள்...

எங்கே முன்னிரண்டு முறை போன்று இன்றும் தன் பின்னால் நின்று கொண்டிருக்கிறானோ என்ற நினைப்பில் முல்லை சுற்றியும் பார்வையைச் சுழற்ற... அந்தோ பரிதாபம்! அவள் சுற்றிப் பார்த்த வேளை அங்கே அவள் நினைத்த நபர் இல்லாமல் அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது...

"ச்சே... இந்தத் தாடிக்காரன் எப்போ வருவான், எப்படி வருவான்னு தெரியாம ஒரே பீதியாக் கெடக்குதே, பெரிய இவனாட்டம் இன்னிக்கி வரேன்னு சொல்லிட்டுப் போனான்... அப்போ சொன்னா, சொன்ன மாதிரி வரணுமில்ல ஆத்தா... பாரு இன்னும் வரல... இவ னெல்லாம் என்னத்த பிச்சிநேச் மேன்..." என அவன் வராததற்கும் திட்டித் தீர்த்தாள்.

இவளின் புலம்பலைக் கேட்டு வேம்பம்மனே குழம்பி விட்டார்... அவளைக் கண்டு, "அடியே... உனக்கு அவன் வரணுமா... இல்ல வரக்கூடாதா...!" என அம்மன் ஒரு விரல் நீட்டி மிரட்டுவது போல் தோன்ற,

"ஹி ஹி... அப்படியில்ல ஆத்தா... அவன் வந்தா எனக்குச் சந்தோஷந்தேன்... ஆனாலும் பயபுள்ளைய பார்த்தா கையி வெடவெடன்னு நடுங்குது... வயித்துக் குள்ளார யாரோ பூரி மாவு பெசையிறாப்ல இருக்குது... தொண்டைக்குள்ள ஒரு கோலிக் குண்டு உருளுது...

"அவனைய பார்க்கலைன்னா கோவங் கோவமா வருது... நான் என்னாத்தா பண்ணோணும்... நீயே சொல்லுத்தா... எனக்கு உன்னைய விட்டா யாரு இருக்கா... ஏனோ அப்புச்சிகிட்ட இதைய பேச வெக்க வெக்கமா வருது..." எனச் சோகமாகச் சொல்ல,

வேம்பம்மன் தலையில் அடித்துக் கொண்டார். "அடக் கடவுளே, இவளுக்கு இனி தானாகவெல்லாம் பல்பு எரியாது போலவே! நாமளே எரிய வச்சுடுவோம்..." என யோசித்தவர் அவளுக்குக் கை நீட்டி அருள் பாலித் தார்...

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த முல்லை யின் மூளையில் முந்தின நாள் பார்த்த ஒரு காதல் படம் ஞாபகம் வந்தது...

"அட! அந்தக் ஹீரோவுக்கும் இதேபோலதான வயித்துல பட்டாம் பூச்சி பறக்கும்... பசிக்கவே பசிக் காதுன்னு சொல்லுவானே... கண்ணை மூடுனா அந்தக் ஹீரோயின் கனவு தான் வரும்னு சொல்வானே...



"அய்யய்யோ... ஆத்தா... எனக்குக் காதல் வந்துடுச்சா... அச்சோ! எனக்கு ஒரே வெக்க வெக்கமா வருதே... ஹி...ஹி..." என வாய்விட்டு ஆத்தாவிடம் புலம்பியவள் வெட்கத்தால் கையைக் கொண்டு முகத்தை மூடிக் கொள்ள,

ஆத்தாவுக்கு, "அடியே... நீ என்ன வேணா பண்ணு. ஆனா வெட்கம் மட்டும் படாதே... என்னால தாங்க முடியல..." எனப் புலம்பித் தள்ளியது...

ஆத்தாவின் மைண்ட் வாய்சைக் கேட்காமல் முல்லையின் மூளையும் மனதும் சிறகடித்துப் பறந்து விரிந்து கொண்டிருந்தது...

இப்போது அவளைச் சுற்றியிருக்கும் மரங்கள், பறவைகள், வேம்பம்மன் உள்பட அனைத்தும் மறந் திருக்க, அவள் உலகம் அனைத்தும் புகை மண்டலமாக இருக்க, முல்லை வெள்ளை உடையணிந்து நின்றிருக்க, பேக்கிரவுண்டில் "தம்தன தம்தன..." வாசிக்க...

புகை மண்டலத்திலிருந்து யாரோ ஒரு உருவம் இவளை நோக்கி வருவது போலிருக்க, காலடியோசை கேட்டுத் திரும்பிய முல்லையின் பார்வை கீழிருந்து மேல் எழுந்தது...

முதலில் அவள் கண்கள் வெள்ளை அங்கவஸ்திரம் அணிந்த ஆண் மகனைக் கண்டது. அவன் இடுப்பில்,

கையில், கழுத்தில் நகையணிந்து வெற்று மார்புடன் இருந்தவனைக் கண்டவள் பார்வை மேலும் உயர்ந்தது...

தாடி வைத்த கண்ணனைப் போல் கண்ணடித்துச் சிரித்த மகிழனைக் கண்டதும், "நாதா..." என முல்லை பாய்ந்து சென்று அவனை அணைக்கவும், டொக்கென்ற சத்தம் கேட்கவும் சரியாயிருந்தது...

அந்தச் சத்தம் அவள் தலையில் வலியைக் கொடுக்க, "ஸ்ஸ்... அம்மா..." எனத் தலையைத் தேய்த்துக் கொண்டு கனவுலகிலிருந்து மீண்டு வந்தவள் முன்னர் சின்னக்கண்ணு அவரின் பெரிய கண்ணை விரித்து முல்லையை முறைத்துக் கொண்டிருந்தார்...

நல்ல இடத்தில் கனவைக் கலைத்த தன் அன்னையின் மேல் கொலைவெறி வர, "ஏனம்மா இப்போ என்னைய கொட்டுன..." எனக் கோபமாகக் கேட்க,

"வாய் தொறந்த... இன்னும் ரெண்டு கொட்டு கொட்டுவேன்... ஏன்டி... சாயங்காலம் அஞ்சரை மணிக்கு இங்க வந்தவ மணி இப்போ என்ன தெரியுமா...? எட்டாகப் போவுது... இன்னும் என்னடி இங்க உக்காந்து கனவு கண்டுட்டு இருக்குற..." எனக் கோபமாக இறைந்து கொண்டவாறு சின்னக்கண்ணு முன்னே நடக்க,

"அச்சோ... மணி எட்டாச்சு... அப்பு சோறுதிங்காம எனக்காகக் காத்துகிட்டு கெடக்கும்... நா போற ஆத்தா... நாளை காத்தால வர்றேன்... பை..." அம்மனுக்கு ஒரு சல்யூட்டை அடித்துவிட்டு அங்கிருந்து நகர,



"ஏன்டி... உன்ற அப்பு மட்டும்தான் சோறுறங்காம இருக்குதாக்கும்... என்னைய எல்லாம் பாத்தா உனக்கு மனுஷியா காங்கலியா..." எனச் சின்னா அதற்கும் மகளிடம் சண்டைக்கு நிற்க,

"ஹி ஹி... உன்னையும் சேத்துதாம்மா நான் சொன்ன... உன்ற காதுல விழுகல... சரி சரி... வா போவலாம்..." என அன்னையின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு முன்னே நடந்தாள்...

இன்னமும் விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கும் தன் மகளை நினைத்துச் சற்றே மன வருத் தத்துடன் சின்னா நடந்தார்...

இதே போல் அடுத்து வந்த ஒரு வாரமும் மகிழனின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்... காலை முதல் மாலை வரை அவனின் கார் வருகிறதா என்று பார்க்க அவள் வீட்டின் திண்ணையிலே தவம் கிடந்தாள்...

அவள் மனதில் இப்போது 'காதல் காதல் காதல்' மட்டுமே... அதை உணர்ந்த வினாடியிலிருந்து அவளுக்கு அவன் ஒரு பணக்காரன்... அவன் எதற்கு இந்த ஊருக்கு வந்தான்.... இடத்தை வாங்கியது... அவனை மாமா வென்று அழைத்த பெண்... என எதுவும் நினைவில் இல்லை...

புதிதாகக் காதல் முளைத்த உற்சாகம் அவள் மூளை யின் சிந்தனையாற்றலை மழுங்கச் செய்திருந்தது...

எங்கும் மகிழன்... எதிலும் மகிழனாகத் தெரிந்தான்...

இரவில் கண்ணை மூடினால் அவளின் தாடிக்காரக் கண்ணன் இவளிடம் குறும்பு பேசுவது போல் தோன்றும்...

காதல் கொடுத்த சந்தோஷத்தில் வீடெங்கும் துள்ளிக் குதித்தாள்...

ஆற்றில் மீன் பிடித்து அதை மீண்டும் ஆற்றிலே விட்டாள்...

கன்றுக் குட்டிகளின் மூக்கைப் பிடித்துக் கண்ணே மணியே எனக் கொஞ்சினாள்...

அவள் அப்புவின் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு அவரைப் போலவே வேதாந்தம் பேசித் தம்பியண்ணனைச் சிரிக்க வைத்தாள்...

அவள் அன்னையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தம் கொடுத்தாள்... அவள் செயலில் வெட்கம் கொண்ட சின்னா, "சீ சீ... விடுடி..." என அவளைத் தள்ளி விட்டால், "ஹா ஹா வென" வெள்ளிச் சதங்கையெனச் சிரித்தாள்...

மகளின் இந்தச் சந்தோஷம் இவளையே உலகமாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த இரண்டு ஜீவன்களையும் சந்தோஷமாக வைத்துக் கொண டிருந்தது...

இப்படியாக இன்பமாகச் சென்று கொண்டிருந்தன முல்லையின் நாட்கள்...

ஒரு நாள் காலை வழக்கம் போல் பல்லைத் தேய்த்துக் கொண்டு அவர்கள் தோட்டத்தின் முன்பகுதியில்



நடை பயின்றாள்... அந்த இளங்காலை நேரம் சூரியன் மேகத்திற்குள் மறைந்து கொண்டு 'வரவா? வேண்டாமா?' எனப் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்த வேளை...

அந்த இதமான சூழ்நிலையை அனுபவித்தவாறே நடந்தவள், மூர்த்தியின் இடத்தில், அதாவது இப்போது மகிழனின் இடத்தில் லாரியில் வந்திறங்கிய கருங்கல், முள் வேலி அனைத்தையும் பார்த்தவள் அதிர்ந்து நின்றாள்...

இத்தனை நாள் அவள் அடைந்த சந்தோஷம் அனைத்தும் யாரோ துணி கொண்டு துடைத்தாற் போல் அழிந்து போனது...

இத்தனை நாட்கள் மகிழன் மேல் கொண்ட காதல் மட்டுமே இருந்த அவளின் நினைவில் அவனின் போளு வாம்பட்டிப் பயணம்... அவனின் உயரம், அனைத்தையும் விளக்கியது.

அவனின் நிலையும், அவளின் நிலையும் புரிந்த அடுத்த வினாடி அவள் கால்கள் பலமிழந்தது போல் இருக்க, உடல் அந்தரத்தில் மிதப்பது போலிருக்க, திடீரெனக் காணும் யாவும் இருட்டடைப்பது போலிருக்க, அப்படியே மடிந்து சரிந்தாள்...

சில நிமிடமோ பல நிமிடமோ அவள் அமர்ந்திருந்த நிலையில் அப்படியே இருந்தாள்...

திடீரென அவள் காதுக்கு அருகில் ஏதோ பட்சியின் குரல் கேட்க, ஒரு திடுக்கிடலுடன் தன்னிலை உணர்ந்த வளுக்குக் கண்கள் கரித்தன...

"ஐயோ... கடவுளே... எத்தனை முட்டாள் தனமாக நடந்து கொண்டோம்... இது எப்படிச் சாத்தியமாகும்... அவன் உயரமென்ன, தானிருக்கும் நிலையென்ன... அவன் வரும் காரே அவனின் செழுமையைப் பறை சாற்றுகிறதே... மாடத்தின் மேலிருக்கும் அவனைக் கூரையின் அடியிலிருக்கும் நாம் நினைத்துக் கொண் டிருந்தோமே...

"இதிலும் அந்தப் பெண்... நிச்சயம் அவள் அவனின் காதலியாகத் தானிருக்க வேண்டும்... ஹய்யோ! இன் னொருத்திக்குச் சொந்தமானவனையா இத்தனை நாள் நினைத்துக் கொண்டிருந்தோம்... இது எவ்வளவு பெரிய கேவலம்..." காதல் கொண்ட மனது இப்போது தான் நடப்பை உணர்ந்தது...

நிறைவேறக்கூடிய சாத்தியக்கூறுகள் ஒரு சதவீதம் கூட இல்லாத இந்தக் காதலைப் போய் இத்தனை நாட்கள் தண்ணீர் ஊற்றி வளர்த்துக் கொண்டிருந்தோமே...!

ஒரு சில நாட்கள் என்றாலும் மகிழன் மீது அவள் கொண்ட காதலின் விதை வானுயர்ந்து மரமாக வளர்ந்து நின்றிருந்தது...

இந்த நொடி யாரோ அவளின் நெஞ்சில் கையை விட்டு இதயத்தை வேரோடு பிடுங்கி எறிவது போல் வலித்தது...

அந்த வலி தாங்க முடியாமல் முல்லை ஓவென்று கதறி அழுதாள்... அவள் கண்கள் கண்ணீரை அருவி யாகக் கொட்டி அவளின் உடையை நனைத்தது.



அதைக் கூட உணர முடியாமல் தன் காதலனைத் தியாகம் செய்ய வேண்டுமே என்ற மனப்பாரத்தில் வெந்து புழுங்கினாள்...

மகிழனின் நினைவை அழிப்பது அவளுக்கு என்ன சாதாரண விஷயமா... காதலென்று உணரும் முன்பே அவனின் முழு உருவத்தைத் தன் கண்ணுக்குள் அடக்கி, நெஞ்சமதில் சுவாசித்துக் கொண்டிருந்தவள், இப்போது காதலென்று உணர்ந்த பின் அவன் தனக்குக் கிடைக்க மாட்டான் என்ற நினைப்பு அவளின் சுவாசக் குழாயை அடைப்பது போன்று மூச்சு முட்டியது...

பல மணி நேரம் அழுது கரைந்தவள் தோளில் எதையோ கனமாக உணர, அந்தக் கனத்தையே ஏதோ பாறாங்கல்லைத் தாங்கியது போல் அவள் உடல் தோய்ந்து சாய்ந்தது....

அவள் உடல் மண்ணைத் தொடு முன் தாங்கிய மகிழன் கைகள் அவளை வாரியணைத்துக் கொண்டன.

## 10

நான்கு கண்ணில் இன்று ஒரு காட்சியானதே...
வானம் காற்று பூமி இவை சாட்சியானதே...
நான் உன்னைப் பார்த்தது
பூர்வ ஜென்ம பந்தம்...
நீண்ட நாள் நினைவிலே வாழும்
இந்த சொந்தம்...

நான் இனி, நீ... நீ இனி நான்
வாழ்வோம் வா கண்ணே...

அன்று அபூர்வாவின் வீட்டில் தன் எண்ணத்தைச் சொல்லி விட்டுத் தன் தங்கையின் திருமணப் பேச்சையும் முடித்துக் கொண்டு வீடு வந்த மகிழன் அன்றைய நாளின் அதிகப்படியான மன அழுத்தத்திலும், முல்லையைப் பற்றிய கனவிலும் விரைவிலே தூக்கத்தைத் தத்தெடுத் தான்...

ஆனால் மறுநாள் அதிகாலையில் அவனின் செல்போன் வழியாக அவனுக்குப் பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது...

காலையில் ஓயாமல் அடித்த செல்போனைத் தூக்கம் கலைந்த எரிச்சலில் எடுத்த மகிழன் நம்பரைப் பார்க்காமலே ஹலோ என இரைந்தான்...

"ஹலோ சார்... நான்தான் பிரபு..." என்றவனின் குரலில் தெரிந்த வித்தியாசம் மகிழனின் தூக்கத்தை முற்றிலுமாக விரட்டியடித்தது...

"சொல்லு பிரபு... என்ன இவ்ளோ காலையிலே... என்னாச்சு..." எனக் கேட்டவாறு சுவரில் கடிகாரத்தைப் பார்க்க, அது அதிகாலை ஐந்து பதினைந்தெனக் காட் டியது...

இந்த நேரத்தில் அவன் அழைக்கிறான் என்றால் விஷயம் பெரியது என யூகித்த மகிழன், "சொல்லு பிரபு... என்ன பிராப்ளம்...?" எனத் திரும்பவும் கேட்க,



"சார்... அது வந்து... நம்ம புனே கான்ட்ராக்டை அந்தக் கம்பெனி கான்சல் பண்ணிட்டாங்க சார்... ஏற்கெனவே நாம அனுப்பின லோட்சும் திருப்பி அனுப்பி வைக்கிறேன்னு சொல்றாங்க... மொத்தமா நம்ம டீல் கான்செல் பண்ணிடச் சொல்றாங்க... அட்வான்ஸ் தொகையும் திருப்பிக் கொடுக்கணுமாம்..." என மூச்சு விடாமல் பிரபு சொல்ல,

"வாட்...!" என்ற ஒற்றை வார்த்தையில் மகிழனின் சப்த நாடியும் ஒருங்கே அதிர்ந்தது...

இந்தக் கான்ட்ராக்டில் தான் அவனின் முதலீடு அதிகமாக உள்ளது. கிட்டத்தட்டப் பல கோடிகள் கொட்டி உற்பத்தியை முக்கால்வாசி முடித்த நிலையில் இப்படி ஒரு பிரச்சனை வருகிறதென்றால் தவறு எங்கே நடந்தது என யோசிக்க ஆரம்பித்தான்...

"பிரபு... இது எப்படி... அவங்க ஏற்கெனவே நம்மகிட்ட சாம்பிள் பார்த்துட்டுத் தானே ஆர்டர் கொடுத்தாங்க... அப்படி இருக்க அவங்க எப்படி ஆர்டர் கான்சல் பண்ணலாம்... என்ன பிராப்ளம்னு விசாரிச்சியா...?"

"விசாரிச்சேன் சார்... பட் அவங்க நம்ம கார்மெண்ட்ஸ்ல குவாலிட்டி இல்லைன்னு சொல்றாங்க... நம்ம அனுப்பின கார்மெண்ட்ஸ் எல்லாம் காடா துணி மாதிரி இருக்குன்னு சொல்றாங்க..."

"வாட் த..." என்றவாறு தன் மேல் போர்த்தியிருந்த பெட்ஷீட்டை உதறிவிட்டுக் கட்டிலிலிருந்து இறங்கி

விட்டான் மகிழன். அவனின் தொழிலில் எதைக் குறை சொன்னாலும் பொறுத்துக் கொள்வான். ஆனால் அவன் தயாரிப்பில் தரமில்லை என்றால் அதை நிச்சயம் சகித்துக் கொள்ள மாட்டான்...

ஒவ்வொரு துணியும் தயாரிக்கும்போது அதை இவனே முழுதாகப் பார்வையிடுவான். ஒரு சில கம்பெனியில் அவர்களின் பொருட்களை அனுப்பும் முன் ஒரு முறை அல்லது இரண்டு முறை ஸ்டாக்கைச் சோதிப்பார்கள். ஆனால் மகிழனின் கம்பெனியில் இன்னும் ஒரு முறை சோதனை செய்த பின்னே வண்டி அவர்கள் கோடவுனை விட்டு நகரும்...

இந்த அதிகப்படியான வேலையால் ஆட்களின் தேவையும், பணமும் அதிகம் என்று உணர்ந்தாலும், மகிழன் இந்த ஒரு விஷயத்தில் ரொம்பவும் தெளிவாக இருப்பான்... அப்படி இருக்கையில் தங்கள் கம்பெனி மீது இப்படி ஒரு குற்றச்சாட்டை அவனால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்...?

"என்ன பிரபு... நம்ம கம்பெனி ரெபியூடேஷன் பத்தி அவங்களுக்குத் தெரியாதா...? ஆமா, முதல்ல உனக்கு இந்த நியூஸ் எப்போ தெரியும்...?" சற்றுப் பொறுமையை இழுத்துப் பிடித்துப் பேசினான்...

"அது வந்து..." எனப் பிரபு தயங்க,

"என்ன இழுக்கிற பிரபு... உனக்கு இது எப்போ தெரியும்...?" இப்போது குரலில் சற்றுக் கடுமை எட்டிப் பார்த்தது....



"அது வந்து சார்... நேத்து நைட் எட்டு மணிக்கு மெயில் பண்ணியிருந்தாங்க..." என அவன் முடிக்கும் முன்,

"வாட்... நேத்து நைட்டே உனக்கு விஷயம் தெரியும். ஆனால் நீ இப்போ சொல்ற... இது எவ்ளோ பெரிய விஷயம்... நீ ஆற அமரப் பொறுமையா சொல்ற..." இன்னமும் வேறு என்ன சொல்லியிருப்பானோ... அதற்குள் அவனை இடைமறித்து,

"இல்ல சார்... நான் முன்னாடியே சொல்லியிருப்பேன்... நேத்து உங்க வீட்டில் கொஞ்சம் பர்சனல் பிராப்ளம்னு கேள்விப்பட்டேன்... அதுல இதையும் சொல்லித் தேவையில்லாம உங்களுக்கு டென்ஷன் கொடுக்க வேண்டாம்னு..." என மீண்டும் இழுக்க,

இப்போது மகிழன் சற்று அமைதி காத்தான்... அவனுக்குப் பிரபுவைப் பற்றி நன்கு தெரியும்... அவன் என்னதான் தன்னிடம் சம்பளம் வாங்கும் வேலைக் காரனாக இருந்தாலும், பிரபு எப்போதும் அவன் நலம் விரும்பிதான்...

அவனே நிறைய முறை தன்னைத் தான் அவனின் ரோல் மாடல் என்று கூறி மகிழனைக் கூச்சமடையச் செய்திருக்கிறான். அதில் முதலாளிக்கு ஐஸ் வைக்கும் நோக்கமிருக்காது. அவனின் உண்மையான வார்த்தைகளில் மகிழன் நெகிழ்ந்துதான் போவான்...

பிரபுவுக்கு இந்தப் பிரச்சன்னயின் வீரியம் தெரியாமலில்லை.

ஆனாலும் அவன் தனக்காகத்தான் பார்த்திருக்கிறான் என்பதை அவன் அறியாதவனில்லை.

அவனால் அவனையே கட்டுப்படுத்த முடியாமல் தான் இன்னும் பொழுது புலராத நேரத்தில் தன்னை அழைத்திருக்கிறான் என்பதை அறிந்து கொண்டவன், உடனே கோபத்தை அவன் மேல் காட்டுவதை விடுத்துப் பிரச்சனை என்ன என்பதை முழுதாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

“ஓகே பிரபு... இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரம் ஆபீஸ் வந்துடு... உடனே யூனிட் சூபர்வைசர்ஸ் கூட மீட்டிங்குக்கு ஏற்பாடு பண்ணனும். நான் புனே கம்பெனி எம்.டி.யைக் கான்டாக்ட் செஞ்சு என்ன பிராப்ளம்னு கேட்கிறேன்...” என ஆணைகளைப் பிறப்பித்து அவன் போனை அணைத்த போது மணி ஆறு...

தொழில் பிரச்சனை என்றதும் சோர்வடையவில்லை... அவன் தொழிலைக் கையில் எடுத்துக் கொண்டதிலிருந்து இது போன்று நிறைய வழக்குகளைச் சந்தித்திருக்கிறான் தான்... ஆனால் தங்கள் தயாரிப்பில் பிரச்சனை என்பதை அவனால் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதில் எங்கயோ தவறு நடந்திருக்கிறது என்று யோசித்தவன் அது எங்கு என்று தான் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை...

ஒரு பெருமூச்சுடன் குளியலறைக்குள் நுழைந்தவன் அரைமணி நேரத்தில் தயாராகி விட்டுக் கீழே வந்தான்.



கீழே எப்போதும் போல் வெங்கடராமன் கையில் காப்பிக் கோப்பையுடன் அன்றைய நாளிதழைப் புரட்டிக் கொண்டிருக்க... கோகிலா, மதுவின் அறையில், சுப்ரபாதம் பாடிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்திலும் தன் தங்கையையும், தாயையும் நினைத்துப் புன்னகைத்தவாறே தந்தையின் முன் வந்து நின்றான்.

அதிகாலை ஆறரை மணிக்கு மகன் ஆபீஸ் கிளம்பும் உடையில் வந்து நிற்கவும், “என்ன மகிழ்... இவ்ளோ சீக்கிரம் எங்கே கிளம்பிட்ட?” என்றவாறு காப்பிக் கோப்பையை டேபிளில் வைத்து விட்டு எழுந்து நின்று கேட்க,

“ஒண்ணுமில்லப்பா... ஆபீஸ்ல கொஞ்சம் பிரச்சனை... வாங்க. அப்படியே தோட்டத்தில போய்ப் பேசலாம்...” – தந்தையுடன் நடந்தவாறு நடந்தவைகளை ஒரு தகவலாகச் சுருக்கமாக விளக்கியவன், தான் உடனே கிளம்புவதாக விடைபெற்றுக் கிளம்பி விட்டான்.

என்னதான் வெங்கடராமன் நிர்வாகத்தை முழுவதுமாக மகனிடம் ஒப்படைத்து விட்டாலும், அவர் கேட்காமலே மகிழன் தொழிலில் நடக்கும் விஷயங்களை அவரிடம் பகிர்ந்து கொள்வான். அது அவனின் கொள்கைகளில் ஒன்று.

இந்தப் பிரச்சனையை மகன் சமாளித்து விடுவான் என்று அவர் அறிந்திருந்தாலும்... இனி இந்த விஷயம்

முடியும்வரை அவனின் உணவும் உறக்கமும் கேள்விக்குறிதான் என ஒரு தந்தையாக மகனின் நலம் வருந்தினார்.

அதிகாலை ஏழு மணிக்கு அவனின் ஆபீஸ் வந்து சேர்ந்தவனை வாசலிலே வரவேற்கக் காத்திருந்தான் பிரபு.

அவனின் சிவந்த கண்களைப் பார்த்த மகிழன், அவனைத் தோளோடு அணைத்துக் கொண்டு, தனது அறைக்குச் சென்றவன்... புனேவிலிருந்து வந்த மெயிலைப் பார்த்து விட்டு, அதன் சாராம்சத்தைப் படித்துத் தெரிந்து கொண்டான்.

அதில் குறிப்பிட்டிருந்தது என்னவென்றால்... மகிழனின் கம்பெனி தங்களுக்குச் சாம்பிள் துணிகளைத் தரமுள்ளதாகக் காட்டி விட்டுத் தங்களுக்கு அனுப்பிய ஸ்டாக்குகளில் பழைய துணிகளை அனுப்பி ஏமாற்றி விட்டதாகவும், அதனால் அவர்களுடனான மொத்த ஒப்பந்தத்தையும் முறித்துக் கொள்வதாகவும், தங்களை ஏமாற்றிய காரணத்தினால் அதை ஈடு செய்ய இவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெனால்ட்டியாகச் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தனர்.

அதைப் படித்தவுடன் மகிழனின் ரத்த அழுத்தம் எக்குத்தப்பாக எகிறியது.

“என்னோட தலையில மிளகா அரைக்கப் பார்க்கிறீங்களாடா...” என நினைத்தவன் அடுத்த சில மணி நேரத்தில் யூனிட் சூபர்வைசர், ஸ்டாக் செக்கர்ஸ் என அனைவரையும் கூட்டி விசாரித்தான்.



அனைவரும் தங்களின் வேலையைச் சரியாகச் செய்திருக்கிறார்கள் என்பது உறுதியானாலும், எங்கே தவறென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவன் விசாரித்த வரையில் தங்கள் கோடவுனிலிருந்து தரமான பொருட்களே அனுப்பப் பட்டிருக்கின்றன... அப்படியென்றால் தவறு வெளியில் தான் நடந்திருக்க வேண்டும்.

பிரபுவை அழைத்துச் சரக்கை எடுத்துச் சென்ற கன்டெய்னர் லாரி டிரைவர்களை விசாரிக்க அழைத்தான். அனுப்பிய ஐந்து லாரிகளில் நான்கு டிரைவர்கள் மட்டுமே வந்திருந்தனர். அப்போதே மகிழனுக்குப் பிரச்சனையின் நூல் பிடிபட்டு விட்டது.

அவனின் ஆட்களை விட்டு, அந்த ஒருவனைத் தேடிக் கண்டுபிடித்து மகிழனின் முன் நிறுத்த... அவன் விட்ட ஒரு அறையில் சுருண்டு விழுந்தவன்... அவன் ஒரு வார்த்தை என்னவென்று விசாரிக்கும் முன்னே விஷயத்தைக் கக்கிவிட்டான்.

மகிழனின் முன்னாள் எதிரியான கே.ஆர்.மில்லின் ஓனர் மகன்தான் பிளான் செய்து கன்டெய்னரில் உள்ள பொருட்களை மாற்றி இருக்கிறான் என்பதை அறிந்து கொண்டவன் கொதித்துப் போனான்.

காரை எடுத்துக் கொண்டு படுவேகத்தில் கே.ஆர்.மில்ஸின் வாயிலில் நுழைய... அவனின் உயர்ரகக் காரின் பளபளப்பில் முதலாளியைக் கேட்க

வேண்டுமென்ற எண்ணம் தோன்றாமல், கேட்டைத் திறந்து விட்ட வாட்ச்மேனிலிருந்து அனைவரும் அவனின் வேகத்தில் மிரண்டு போனார்கள்.

வேக எட்டுகளை வைத்து அவர்கள் ஜே.எம்.டி.யின் அறைக்குள் நுழைந்தவன், அங்கே ஏதோ ஒரு பெண்ணுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த ரவியின் சட்டைக் காலரைப் பற்றிக் கொண்டு, அந்த ஆபீஸின் நடுக்கூடத்திற்கு இழுத்து வந்தான்.

முதலில் என்ன நடக்கிறது என்பதை ரவி சுதாரிக்கும் முன்னே, அவன் தன் சட்டைக் காலரை மகிழன் பற்றியிருப்பதை உணர்ந்தவன், "ஹே... விடு..." என அவனைத் தடுக்க...

அவன் தடுத்த கைகளை இழுத்து அவன் முதுகுக்குப் பின்னால் திருப்பி, அவனுக்கு மட்டுமல்லாது அங்கிருந்த அனைவருக்கும் கேட்கும் வண்ணம், "நான் உங்க மில் கோடவுனை எரிச்சது... உங்க ஆபீஸ் பியூனிலிருந்து உன் அப்பன் வரைக்கும் எல்லாத்துக்கும் தெரியும்டா... தெரிஞ்சும் எவனாலேயும் என்னை ஒண்ணும் பண்ண முடியலை!" என உறுமியவன், "ஏதாவது செய்யணும்னா... முகத்துக்கு நேராச் செய். ஏன், இப்படிப் பொட்டப் பய மாதிரி மறைமுகமா செய்யுற... உனக்கே நீ செய்தது சின்னப்புள்ளத் தனமாத் தெரியல...? இனிமேலாவது நல்லா யோசிச்சு வேற ஏதாவது ட்ரை பண்ணு..." என ஓங்கி அவன் முதுகில் ஒரு குத்து விட்டான்.



அவன் விட்ட குத்தில் ரவியின் மூச்சு அடைப்பது போலிருக்க... அப்படியே கீழே சுருண்டு விழுந்தான்.

அவன் விழுந்த அழகில் சில மணித் துளிகள் முன் அவனுடன் சிரித்துப் பேசிய அவனின் பி.ஏ. வாயை மூடிக் கொண்டு சிரிப்பது தெரிய...

அவனைச் சுற்றி அவனிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கும் ஆபீஸ் ஸ்டாஃப்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்து வைக்க...

ரவியின் முகம் அவமானத்தில் சிவந்தது.

அவமானத்தில் சிவந்த அவன் முகத்தை ஒரு திருப்தியுடன் பார்த்த மகிழன், ஒரு கை நீட்டி எச்சரித்தவாறு அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

நகர்ந்த மகிழனின் நடையில் தெரிந்த கம்பீரம், அங்கிருந்த அனைவரையும் கவர்ந்ததென்றால்... ரவியின் முகத்தில் கோபம் கொப்புளித்தது.

அவனை இதைவிடப் பெரியதாக ஊர் சிரிக்கும்படி அவமானப்படுத்திக் கதற வைக்க வேண்டுமென்ற வன்மம் அப்போதே அவன் மனதில் பதிந்து போனது.

அடுத்தடுத்து வந்த நாட்களில் மகிழன், அந்தப் புனே கம்பெனியுடன் பேச்சு வார்த்தை நடத்தி.. அவர்களைச் சமாதானம் செய்து, மீண்டும் தாங்கள் அனுப்பும் பொருட்களில் தவறிருக்காது என எத்தனையோ உறுதி மொழிகளுக்குப் பிறகு அவர்கள் ஒத்துக் கொண்டனர்.

இந்த முறை கன்டெய்னரில் ஏற்றிய பொருட்களுடன் பிரபுவையும் அனுப்பி வைத்தான்.

இந்தப் பிரச்சனைகள் அனைத்தும் முடியவே ஒரு வாரமாகி விட்டது. இந்த ஒரு வார காலத்தில் அவனுக்கு உணவும் உறக்கமும் மறந்து போயிருக்க... பிரபு தான் அவனை வற்புறுத்தி, இரண்டு வேளை உணவிற்கும், நான்கு மணி நேரம் உறக்கத்திற்கும் வழி செய்தான்.

அன்று இரவு வீடு வரும் வழியில் ஒரு மாரியம்மன் கோவிலின் முன் வேப்பிலைத் தோரணம் கட்டி... ஏதோ திருவிழா போன்று காட்சியளிக்க... அவனின் மூளையின் அடியாழத்தில் இருந்த முல்லையின் நினைவுகள் மேலெழுந்தன.

'சே... ஒரு வாரமாச்சு. என்னோட சுகர் கேன்டியைப் பார்த்து... அன்னிக்கே மறுநாள் வந்து பார்க்கிறேன்னு சொன்னேனே.... என்னோட செல்லப் பால்கோவா என்னை எதிர்பார்த்து ஏமாந்து போயிருப்பா...' என மனது அவளை நினைத்து இதமாக இருக்க...

அவனின் மூளை, 'டேய், உனக்கே இது ஓவராத் தெரியல... என்னமோ நீயும் அவளும் பல வருஷம் லவ் பண்ணிக்கிட்டு சுத்தின மாதிரி. முதல் வேலையா அவகிட்ட போய் உன்னோட லவ்வைச் சொல்லடா, மடையா!' எனத் தலையில் குட்ட,

'அட, ஆமாமில்ல... நாளைக்கே போளுவாம்பட்டி போய் கேன்டி கிட்ட என்னோட லவ்வைச் சொல்லணும்...' என நினைத்துக் கொள்ள,



'டேய் லூசு... சும்மா போய் லவ் சொல்றதுக்கு அவளுக்கு ஏதாவது கிஃப்ட் கொடுத்து லவ் சொல்லுடா...' - இப்போதும் மூளையே அவனுக்கு யோசனை சொன்னது.

'கிஃப்ட்டா! என்ன கிஃப்ட் கொடுக்க...?' - அவனுக்குள்ளேயே கேட்டுக் கொண்டான்.

'உப்ஸ்... உன்னை யெல்லாம் வச்சுக்கிட்டு... ஒரு லவ்வைக் கூடச் சரியாப் பண்ணத் தெரியல... நீ எல்லாம்...' என அவனைக் கிண்டல் செய்து விட்டு,

'மகிழா... அன்னிக்கு அவளோட தாத்தா கிட்ட பேசினியே... அப்போ அவர் என்ன சொன்னார்? அவரோட பேத்திக்கு இந்த இடத்தில திராட்சைத் தோட்டம் வைக்கணும்னு ஆசைன்னு சொன்னாரில்ல... அவளுக்குப் பிடிச்சதைச் செய்டா... ஃபாக்டரி கட்ட வந்த நீ திராட்சைத் தோட்டம் போட்டா அதைவிட அவளுக்கு வேறென்ன சர்ப்ரைஸ் இருக்க முடியும்...!' எனக் கேட்க,

'ஹுர்ரே...' எனக் காருக்குள்ளேயே கத்தியவனைப் பக்கத்தில் நின்றிருந்த பைக்காரன் முறைத்துப் பார்த்தான். அவன் பார்வையை உணர்ந்து கொண்டவன், அசடு வழிந்தவாறே கண்ணாடியை ஏற்றி விட்டு, மீண்டும் தனக்குள்ளேயே பேச ஆரம்பித்தான்.

'நீ சொல்றது நல்ல ஐடியாதான்... ஆனால் நான் தோட்டம் வெச்சு, செடி வளர்த்து, பழம் வர்ற வரைக்கும் நான் வெயிட் பண்ணணுமா! அதுவரைக்கும் என் கேன்டி கிட்ட லவ் சொல்லாம காத்துக்கிட்டு இருக்க முடியாது.

சோ... என்னோட கேன்டிக்கு டைமண்ட் ரிங் வாங்கி ப்ரபோஸ் பண்ணப் போறேன்...' எனத் தனக்குள்ளேயே பேசி முடிவெடுத்தவன்... வழியில் தெரிந்த ஒரு பிரபல நகைக் கடையில் அவள் விரலுக்கேத்த வகையில் தங்கத்தில் மூன்று கற்கள் பதித்த ஒரு மோதிரத்தை வாங்கி விட்டு உற்சாகத்துடன் வீடு வந்து சேர்ந்தான்.

நாளை போளுவாம்பட்டியில் செய்ய வேண்டிய வேலையை அதற்குண்டான ஆட்களிடம் விசாரித்து ஏற்பாடு செய்து விட்டு, இத்தனை நாள் சேர்ந்த அலைச்சலும், முல்லையின் நினைப்பிலும் சீக்கிரமே தூக்கத்தைத் தத்தெடுத்தவன்... அதிகாலையே எழுந்து, தனது போளுவாம்பட்டிப் பயணத்தைத் துவக்கினான்.

அங்கு வந்து சேர்ந்தவன், தனக்கு முன்னரே வேலையைத் துவக்கி விட்டிருந்த ஆட்களைப் பார்வையிட்டவாறு முல்லையின் வீட்டை நோக்கி உற்சாகத்துடன் நடையைப் போட...

வழியில் முல்லையின் கலங்கிய குரலும்... அதற்கடுத்து, அவள் கண்களில் வழிந்த கண்ணீரும் அவனின் உற்சாகத்தை முற்றிலும் விரட்டியடிக்க, வேக நடையிட்டு அவளை அடைந்தவன்... அவளைத் தன் கைகளில் ஏந்தித் தன் நெஞ்சில் சாய்த்தான்.

தன் மனம் கவர்ந்தவனின் ஸ்பரிசத்தில் அவளை அறியாமலேயே அவன் நெஞ்சில் சாய்ந்தவள், "நான் உன்னை விட்டுக் கொடுக்க மாட்டேன். நீ எனக்கு வேண்டும்..." என்று அரற்றியவாறு, அவனை அவளுள் புதைத்துக் கொள்வது போல் அவளின் தளிர்க் கரங்களால் மேலும் மேலும் அவனை இறுக்கிக் கொண்டாள்.



அவளின் இறுக்கத்திலிருந்து மகிழனுக்கு எதுவும் புரியவில்லை. அவளின் அழுகையின் வீரியம் மட்டுமே அவன் உணர்ந்திருக்க...

ஏதோ அவளுக்குப் பிரச்சனை என நினைத்து, "ஹே கொடி.. என்னடா ஆச்சு? எதுக்கு இப்படி அழற? அழாதேடா. ப்ளீஸ் ம்மா... அழாதே கொடி. இங்கே பாரு... என்னைப் பாரும்மா!" என அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டவன், பின் அவளின் முகத்தைப் பற்றித் தன் கண்ணைப் பார்க்க வைத்தான்.

அவன் கண்ணைப் பார்த்ததும் நடப்பு புரியத் துவங்க... அவனின் வார்த்தைகள் அவள் மூளைக்குள் சென்றடைந்த அடுத்த நொடி, முல்லையின்மனமும் மூளையும் தன் இயக்கத்தை ஆரம்பித்தது.

தன்னைப் பிடித்திருப்பது தன் மனதைக் கவர்ந்தவன் என்பதை உணரவே முல்லைக்குச் சில மணி நேரங்கள் எடுத்தன. அதுவரை தன்னைத் தாங்கிக் கொண்டிருப்பவன், தன் கனவில் வரும் கண்ணன் என நினைத்து, முல்லை தன் இயலாமையில் அவனை இறுக்கி அணைத்து, மேலும் அவளின் அழுகையைக் கூட்டிக் கொண்டிருந்தவள்... இப்போது தான் காதலித்தவன், தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து அவனை அணைத்த கையை எடுத்து, அவனைப் பிரிந்து நின்றாள்.

அவள் நகர்ந்ததும் மகிழனின் மனம் அடித்துக் கொண்டது. அவளின் அழுது சிவந்த முகமும், அவளின் அருவி போன்று நிற்காது பொழிந்த கண்ணீரும், அதை விட அவள் கண்ணில் தெரிந்த உயிர் வலியும் அவனின் காதல் மனதை வதைக்க...

அவளை மீண்டும் தன்னுடன் சேர்த்தணைத்துக் கொள்ள அவள் கையைப் பிடித்திழுக்க... வெறி வந்தவள் போல் அவன் கையைத் தட்டி விட்டு அங்கிருந்து ஓடிச் சென்றாள்.

அவள் தன்னை விட்டுப் பிரிந்ததை விட, அவள் கண்களில் தெரிந்த உயிர் வலி மகிழனின் மனதை யாரோ கசக்கிப் பிழிந்தது போல் தாங்க முடியாத வலியைக் கொடுத்தது.

## 11

தென்பாண்டி முத்தைப் போல்
தேவி புன்னகை...
வண்டு ஆடச் சொல்லுமே
செண்டு மல்லிகை...
உன்னைச் செய்த பிரம்மனே
உன்னைப் பார்த்து ஏங்குவான்...
காதல் பிச்சை வாங்குவான்...
இன்னும் என்ன சொல்ல!

**ம**கிழனைப் பிரிந்து வீடு வந்தடைந்த முல்லையின் உடலும் மனமும் தாங்க முடியாத வேதனையைச் சுமந்திருக்க... அதன் கனத்தைச் சுமக்க முடியாமல் கட்டிலில் விழுந்தாள்.



இந்த ஒரு வாரத்தில் மகிழன் என்ற மனிதனை மட்டுமே நினைத்து அவனின் பார்வையில், அவனின் பேச்சில் கவரப்பட்டு, அவன் மீது காதல் வயப்பட்டவள்... இன்று அவனின் பின்புலம் உணர்ந்த பின்... தன்னிலை உணர்ந்து வெதும்பினாள். இத்தனை நாட்கள் மூடத் தனமாய் நடப்பை உணராமல் தன் கனவு வாழ்க்கையை எண்ணிக் கண்ணீர் சிந்தினாள்.

அவளின் மனதில் பல கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக அவளைத் துரத்தின.

முதலில் தனக்குள் முளைத்தது காதலா..? இல்லை, அவனின் உருவத்திலும், கம்பீரத்திலும் உண் டான ஈர்ப்பா? இவை அனைத்திற்கும் மேல் அவனுக்கும் தன் மீது காதல் வருமா? இந்தக் கேள்விகளுக்கு அவளின் மனதே விடை சொல்லக் காத்திருந்தது.

'இல்லை, இல்லை... இது நிச்சயம் காதல்தான்...' என அவளின் முதல் கேள்விக்கு மனம் அடித்துச் சொன்னது.

அவனைப் பார்த்த முதல் பார்வையிலே, அவளுக் குள் ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு, அவளின் அடிவயிற்றில் ஏற்படுத்தியதை அவளால் இன்று கூட உணர முடிந்தது. அந்தப் புரியாத உணர்வின் பேர் காதல் இல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

மூர்த்தியின் இடத்தில் அவன் ஃபாக்டரி கட்டப் போகிறேன் என்றபோது அவளுக்குள் ஒரு ஏமாற்றம் எழுந்தது உண்மைதான்.

அந்த ஏமாற்றத்தின் காரணத்தை இப்போது நினைத்தால் முல்லையால் உணர முடிந்தது. ஆனால் அன்று அவன் கண்களில் தெரிந்த ஏதோவொன்று அவளுக்கு வேறு கதை சொன்னது. அப்போதே அவளுக்கு அவளை அறியாமலே அவனின் மீது ஒரு நம்பிக்கை எழுந்ததை அவள் உள் மனம் இன்று உணர்த்தியது.

அன்று அப்பெண்ணுடன் அவனைப் பார்த்தபோது அவனின் கண்கள் இவளையே தவிப்புடன் பார்த்ததை இன்னமும் அவளால் நம்ப முடியவில்லை. இன்று என்னை உணராத நிலையிலும் அவனின் அணைப்பை உணர்ந்ததே என் மனது... என் கண்ணில் வழிந்த கண்ணீரைக் கண்டு அவனின் வேதனை சுமந்த முகமும் இன்னமும் அவள் கண் முன்னே படமாக விரிந்தது.

ஆனால் அவனின் தவிப்புக்கும் வேதனைக்கும் என்ன காரணமாக இருக்க முடியும்? அப்போது அவனும் என்னைக் காதலிக்கிறானா! இது நிஜமா...? என ஒரு நொடி அவள் மனது சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது.

சரியான பாதையில் சிந்தித்த மனதை மேலும் மேலும் சிந்தித்துத் தன்னைத் தானே போட்டுக் குழப்பிக் கொண்டாள். ம்ஹ்ம்ம்... என் நிலையென்ன... அவன் நிலையென்ன...! ம்ஹ்ம்... இது நிச்சயம் சாத்தியமற்றது.



அவனுக்கெல்லாம் தன் மீது காதல் வர வாய்ப்பே இல்லை.

அன்று அந்தப் பெண்ணைத் தான் ஏதாவது செய்து விடுவேனோ என்ற பயத்தில்தான் அவளை அவ்விடம் விட்டு அகற்றியிருப்பான்.

ஏற்கெனவே அவனுக்குத் தான் ஒரு சண்டைக் காரியாகத் தானே அறிமுகமானேன்... அவனைப் போன்று பணவர்க்கத்திற்கு இப்படிப்பட்ட என்னை எப்படிப் பிடிக்கும்?

இன்று ஏதோ நான் அழுது கொண்டிருக்கவும்தான் என்னை அணைத்து ஆறுதல் படுத்தியிருப்பான்! அவனின் படிப்பு, பணம், அந்தஸ்து... எதிலும் தான் அவனுடன் சரி சமமில்லை. இதில் காதலாவது மண்ணாவது... ஹ்ம்ம்... இதை நினைக்கும்போதே அவள் முகத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை உதயமானது.

அவனின் பணத்திற்கும் பகட்டிற்கும் அந்தத் திமிர் பிடித்தவள்தான் சரியானவள். அவளைப் பார்த்தாலே தெரிகிறதே! அவள் மேனியின் செழிப்பில் அவளின் பணம் மட்டுமே முன்னின்றது.

'அவளின் அழகிற்கு முன்னால் தான் எந்த வகையிலும் பொருத்தமில்லை...' என இதுவரை தனக்குத் தானே பேரழகியாக நினைத்து வந்த முல்லையின் மனதில் காதல் கொடுத்த வலியில் தன்னைப் பற்றியே குறைத்து மதிப்பிட்டாள்.

அவளின் முக அழகை விடவும், அவளின் அகத்தின் அழகில் மயங்கிய அவள் காதலனின் காதல் புரியாமல், புரிந்து கொள்ள முடியாமல், குழம்பிப் போனவளின் சிந்தனைகள் தடம் புரண்டோடின.

மகிழனையும், அந்தத் திமிர் பிடித்த பெண்ணின் முகத்தையும் தன் மனக் கண் முன்னே கொண்டு வர முயன்ற முல்லையின் மனம் தாங்க முடியா வேதனையில் சுருங்கியது.

என்ன முயன்றும் இருவரின் ஜோடியை அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்க... உடனே இருவருக்கும் ஜோடிப் பொருத்தம் பார்க்கும் அந்த முயற்சியைக் கைவிட்டாள்.

அந்தக் காலத்தில் சொல்வது போல், பணம் பணத்தோடு சேர்வதுதான் நல்லது. தனக்கும் அவனுக்கும் ஏணி இல்லை, லிஃப்ட் வைத்து ஏறிப் போனாலும் எட்டாது என்ற நிதர்சனம் உறைக்க...

தன் கண்களில் வழிந்த கண்ணீரை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினாள்.

'நமக்குன்னு அந்த ஆண்டவன் கொடுத்திருப்பான். அதை வச்சுக்கிட்டு சந்தோஷப்படணும். இருக்கிறதை விட்டுட்டு பறக்கிறதுக்கு ஆசைப்பட்டா இருக்கிறதும் போயிடும் கண்ணு...' என அவள் அப்புச்சி எப்போதும் இவளிடமும் அடுத்தவரிடமும் சொல்வது அவளின் காதுகளில் இப்போது ஒலித்தது.



அது சொல்லிய செய்தியில் தன்னுள் விதைத்த இந்தக் காதலின் விதை அவள் மனதில் பூவிடும் முன்னரே அது காய்ந்து சருகானதை நினைத்துக் கலங்கினாள்.

தனக்குள் முளைத்த இந்தக் காதலைத் தன்னுள்ளே மூடி மறைத்தாள்.

இனி, அவன் மேல் எந்த நேசத்தையும் எக்காரணம் கொண்டும் வெளிப்படுத்தக் கூடாதென்ற உறுதி எடுத்துக் கொண்டாள்.

அவனின் பார்வையில் பலஹீனப்படும் தன் மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் இனி அவனைச் சந்திக்கக் கூடாதென்று முடிவெடுத்தாள்.

எடுத்த முடிவின்படி செயல்பட, அந்நொடியிலிருந்து தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள முயற்சித்தாள்.

ஆனால், இந்த முடிவைச் செயல்படுத்தும் முன்னர் அவனை ஒரு நொடி காண வேண்டுமென்று அவள் காதல் மனம் அடம் பிடிக்க, அவளால் மனதின் பிடிவாதத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

மகிழனின் தோட்டத்தில், நிறைய ஆட்கள் வேலை செய்து கொண்டிருப்பதை அவர்கள் வீட்டின் ஒற்றைப் படுக்கையறையின் ஜன்னல் வழியாக நன்றாகப் பார்க்க முடியும்.

ஆட்கள் அந்த இடத்தைச் சுற்றிலும் நீண்ட கருங் கற்களை நிறுத்தி, அதைச் சுற்றி இரும்புக் கம்பிகளால் வேலியை வேய்ந்து கொண்டிருந்தனர்.

அந்த வேலிக் கம்பிகள் அவன் கட்டும் அந்த ஃபாக்டரிக்கு என மூளை அறிவுறுத்த... மனமோ, 'ம்ஹ்ம்ம்... நிச்சயம், அவன் இந்த இடத்தில் ஃபாக்டரி கட்ட மாட்டான்...' என அடித்துச் சொல்லியது.

அதை எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய் என்ற கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடிய வில்லை.

ஆனாலும் அவளுள் ஒரு நம்பிக்கை... பார்ப்போம். இன்னும் சில நாட்களில் தெரிந்து விடும் என நினைத் தாள்.

மேலும் பார்வையை அங்கே பதிக்க... ஒரு மரத்தின் அடியில் நிறுத்தப்பட்டிருந்த காரின் மீது ஒரு காலை மடக்கிக் கையை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு சாய்ந்து நின்றிருந்த மகிழனின் முகத்தில் என்னவித உணர்வென்று முல்லையால் பகுத்தறிய முடியவில்லை.

அவனைப் பார்த்த நாள் முதல் அவன் முகத்தில் தெரியும் மலர்ச்சி, இன்று மறைந்து, முகம் சோகத்தைத் தத்தெடுத்தது போன்று முல்லை உணர்ந்தாள்.

'சே... காமாலைக் கண்ணுக்குப் பார்க்கிறதெல்லாம் மஞ்சளாத் தெரியுமாம். அவன் என்னத்துக்குச் சோகமா இருக்கணும்? நான் சோகமா இருக்கிறதால அவனைப் பார்த்தாலும் சோகமாத் தெரியுது...

'இல்லைன்னா அவன் காதலியைப் பிரிஞ்சு இங்க வந்த சோகத்துல இருப்பான். ம்ம்...அதுதான்... அவன் அந்த ஆங்காரியைத்தான் நினைச்சுக்கிட்டு இருப்பான்.'



அவனின் சோகத்தைக் கண்டு கொண்ட முல்லையின் மனம், அந்த சோக முகத்திற்குக் காரணமான அபூர்வாவை நினைத்து மறுகினாள்.

ஒரு சில நிமிடங்களுக்கு மேல் அவனின் வேதனை சுமந்த முகத்தை முல்லையினால் பார்க்க முடியவில்லை. ஓடிப் போய் அவனின் முகத்தைத் தன் மடியில் தாங்க வேண்டுமென்று அவள் காதல் மனம் துடிக்க... அதைப் பெரும்பாடு பட்டு அடக்கி ஜன்னல் கதவை அடைத்து விட்டுக் கட்டிலில் கவிழ்ந்து படுத்தாள்.

முல்லையால் அவளின் காதலையே இன்னமும் பகுத்தறிய முடியாமல் தவிக்கும்போது, மகிழனின் காதலை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? - முல்லையின் காதல் மகிழன் எனும் பணக்காரனுக்குப் பயந்து ஒதுங்கியது.

மகிழனின் கண்கள் ஆட்கள் செய்யும் வேலையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாலும், அதை மனதிலோ மூளையிலோ பதிக்கும் நிலையில் இல்லை. அவனின் நினைவுகள் முற்றிலும் முல்லையின் கண்ணீரையும், அவளின் அடிபட்ட பார்வையையும் மட்டுமே சுழன்றிருந்தன.

அவள் எதற்காக அழ வேண்டும்? என்ன காரணமாக இருக்கும்?

ஒருவேளை அவள் தாத்தா திட்டியிருப்பாரோ! அன்று ஒரு நாள் அவர் தன் முன்னால் அதட்டிப் பேசியதற்கே அவள் முகம் சுருங்கியதே! ஆனால் அந்த அற்ப காரணத்திற்காக அவள் உயிர் போகுமளவு துடித்துக்

கண்ணீர் விட மாட்டாள் என்று அவன் உள்மனம் அடித்துச் சொன்னது.

என்ன யோசித்தும் அவனுக்கு, அவன் காதலியின் கண்ணீருக்கான காரணத்தை மட்டும் அறிய முடிய வில்லை.

அவளை அணைத்தபோது தன்னுள் புதைந்தவள்... என் கண்ணைப் பார்த்ததும் அவள் என்னை உதறிவிட்டுச் சென்றதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? ஒரு ஆண் மகனின் அணைப்பில் தான் இருக்கிறோம் என்ற காரணத்தால் என்னை உதறியிருப்பாளோ!

அவன் குரலைக் கேட்டும் அவள் விலகாமல் இருந்தது... அவளின் விலகலுக்கு அந்தக் காரணமும் இல்லையென்பது புரிந்தது. அப்படியென்றால் அவளுக்கு அவளை அணைத்திருப்பது நான்தான் எனத் தெரிந்துதான் இருந்தது. அவளுடன் பேசுவது நான்தான் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

அப்படியென்றால்... ஒன்றும் ஒன்றும் இரண்டு. 'ஹுர்ரே...!' என அவன் சத்தமிட்டுக் குதித்ததில் சுற்றி வேலை செய்து கொண்டிருந்தவர்கள் அவனை, 'நீ என்ன லூசாப்பா...' என்பது போல் பார்த்தது, அவனுக்குக் கூச்சத்தைக் கொடுக்க... 'ஹி...ஹி...' என அசடு வழிந்தவாறு காருக்குள் சென்றமர்ந்து கொண்டான்.

காருக்குள் சென்றவன் திரும்பவும் அவளை அணைத்ததை மனக் கண் முன்னே கொண்டு வந்து நினைத்துப் பார்த்தான்.



அவள் தன்னை அணைத்தபோது, அவள் தன்னை உணரவில்லை என்பது புரிந்தது. அவள் கனவு என்று நினைத்துத் தன்னை அணைத்திருப்பாள். அது கனவில்லை, நினைவு என்று உண்மை புரிந்து, என்னை விலக்கி விட்டு ஓடி விட்டாள்... என்பது மகிழனின் யூகம்.

என்னதான் யூகமென்றாலும் மகிழனின் மனது அது உண்மையென்று அடித்துச் சொன்னது. அப்படியென்றால் அவளும் என்னைக் காதலிக்கிறாளா... என்றுதான் அவன் குதூகலித்தது. அவனுக்குள் இப்போது ஒரு நிம்மதி.

அவளை அடையத் தனக்கு ஏற்பாடு செய்திருந்த திருமணத்தைப் பெருமுயற்சி செய்து நிறுத்தி விட்டு வந்தவனுக்கு, அவளின் குழந்தைத் தனம் பயத்தைக் கொடுத்தது.

அவளிடம் தன் காதலைச் சொல்லி... அதை அவள் குழந்தை மனம் புரிந்து கொண்டு... அவளைத் திருமணம் செய்து கொள்வதற்குப் பல நாட்கள் காத்திருக்க வேண்டுமே என அவன் பட்ட தவிப்புக்கு ஆறுதல் போல் அவள் அணைப்பிருந்தது.

இந்த ஒற்றை அணைப்பு அவனுக்கு ஏதோ அவள் காதலைச் சொல்லி விட்டது போல் உணர்ந்தான். அவளின் இந்தச் செயலில் அவன் நினைத்த காரியம் விரைவில் கைகூடுமென நினைத்தான்.

ஆனால் இந்த ஒரு செயலில் காதலென்று உணர்ந் தவன்... அடுத்து அவள் செய்த காரியத்தில் குழம்பித் தவித்தான்.

அது அவளின் அடிபட்ட பார்வையின் அர்த்தம்! அவன் உயிர்வரை ஊடுருவிச் சென்று அவனைத் தாக்கியது அப்பார்வை...!

தன்னை அணைத்து விட்டு, அவள் அவளையே உணர்ந்தபின்... என் கண்ணைச் சந்தித்த பின் என்னை உதறிவிட்டுச் சென்றதற்குக் காரணம்... அப்போது அவள் கண்களில் தெரிந்த அந்த வலியின் காரணம்...

இத்தனை யோசித்து, யூகித்தவனுக்கு அந்த வலி யின் காரணம் பிடிபடவில்லை.

அப்போது அவளுக்கு என் மேல் ஏதேனும் வெறுப்பா! ஒருவேளை நான் இந்த இடத்தில் ஃபாக்டரி கட்டப் போகிறேன் என நினைத்து என்னை வெறுக்க ஆரம்பித்து விட்டாளா?

'ஹய்யோ...!' - எனச் சில நொடிகளுக்கு முன்னர் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்த மகிழனின் மனம் இப்போது வேதனையில் சுருங்கியது.

அவளுக்காக வாங்கிய வைர மோதிரம் அவன் பான்ட் பாக்கெட்டில் அழுத்த... அதை வெளியெடுத்துப் பார்த்தான்.

இன்று அவன் நினைத்து வந்த காரியமென்ன...

ஆனால் நடந்த நிகழ்வென்ன?

இன்று முல்லையிடம் அவனின் காதலைச் சொல்லி இதைக் கொடுக்க வேண்டுமென்று இரவின் தூக்கத்தில்



அவன் கண்ட கனவெல்லாம் வெறும் கனவாகவே போய் விடுமோ என மறுகிய மனதை அடக்கி...

"இல்லை... இல்லை. என் கொடி சின்னப் பெண். அவளுக்கு ஏதோ மனக் குழப்பம். அதைப் போக்கி அவளிடம் எப்படியாவது என் காதலைப் புரிய வைத்து விரைவில் அவளைக் கரம் பற்றுவேன். அதற்கு எத்தனை தடை வந்தாலும் என்னால் சமாளிக்க முடியும்..." எனத் தனக்குள்ளேயே ஒரு முடிவெடுத்துக் கொண்டான்.

தடைகளாக அவன் அவர்களைச சுற்றி யிருப்பவர்களைத் தான் நினைத்தான். ஆனால் அவனின் காதலுக்குத் தன் காதலியே தடையாக இருப்பாளென்று அவன் நினைக்கவில்லை.

எடுத்த முடிவின்படி, அடுத்தடுத்து வந்த நாட்களில் செயல்பட நினைத்தான். அதன் முதல் படியை அன்றே துவக்கினான்.

தன் காதலியை இங்கிருந்து போகும் முன்னர் ஒரு முறை சந்திக்க வேண்டுமென்ற உணர்வு எழ... அவன் மனதின் உணர்வை மதித்துக் காரை விட்டிறங்கி முல்லையின் வீட்டை நோக்கி நடை போட்டான்.

வீட்டு வாசலில் சின்னா அரிசி புடைத்துக் கொண்டிருக்க... தம்பி மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்தவன், அவர் அருகில் வந்து, "தாத்தா..." என்று குரல் கொடுத்தான்.

உடனே அவர் தன் கைவேலையைப் போட்டு விட்டு, "அடடே, வாங்க தம்பி... பார்த்துப் பத்து நாளாச்சு. என்னப்பா... நல்லாயிருக்கியா?" என வாஞ்சையாகக் கேட்டார்.

"நான் ரொம்ப நல்லாயிருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?" என்ற விசாரணைக்குப் பின், "என்ன தம்பி... வெரசா வேலை ஆரம்பிச்சுட்டீங்க போல... ரொம்ப நல்லது. உங்களை மாதிரி இளவட்டப் பசங்க முன்னுக்கு வந்தாத்தானே எங்களை மாதிரி ஆளுங்களும் ஆசையோட செய்வோம்..." எனத் தம்பி பாராட்ட...

"நான் எதுவுமே செய்யலை தாத்தா... எல்லாமே ஆள் போட்டுத்தான் செய்யுறேன். எனக்கு இந்த இடத்தைப் பார்த்ததுமே ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதான் எனக்கு இது எல்லாம் தெரியலை என்றாலும் முயற்சி செஞ்சு பார்க்கலாம்னு..." எனத் தம்பியண்ணனிடம் பேசினாலும் மகிழனின் கண்கள் வீட்டிற்குள் இருக்கும் அவன் தேவதையின் தரிசனத்திற்குக் காத்திருந்தன.

"வாங்க தம்பி... அப்படி உட்கார்ந்து பேசலாம்..." என அங்கிருந்த திண்ணையில் மகிழனை அமரச் சொன்னவர், சின்னாவிடம் திரும்பி, "சின்னா... தம்பி தான் நம்ம மூர்த்தி நிலத்தை வாங்கியிருக்காப்படி... குடிக்கக் கொஞ்சம் தண்ணி எடுத்தாத்தா..." என்று அறிமுகம் செய்து வைக்க,

சின்னா பார்வையாலே மகிழனை எடை போட்டவர், அவனின் முகத்தில் தெரிந்த ஏதோவொன்று அவருக்கு ஒரு திருப்தியைக் கொடுக்க... அதே திருப்தியுடன்,



"அப்படியா தம்பி... மாமா சொன்னாரு... ரொம்ப சந்தோஷம். நீங்க நினைச்ச காரியம் நல்லபடியா நடக்கும்..." என மனதார வாழ்த்தியவர், உள்ளே திரும்பி, "ஏய் புள்ள முல்லை... செம்புல தண்ணி கொண்டா..." என்ற அவரின் இரண்டு மூன்று அழைப்பிற்குப் பதிலே இல்லாமல் போகவும்...

"இந்த மடச்சி என்னத்த பண்றானு தெரியலை...!" என முல்லையைத் திட்டியவாறு உள்ளே சென்று தண்ணீரை எடுத்து வந்து மகிழனிடம் கொடுத்து விட்டுப் புடைத்த அரிசியை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றவரை...

"முல்லை எங்கே சின்னா...?" - தம்பி கேட்க...

"உங்க பேத்தி கதவை அடைச்சிட்டு இழுத்துப் போத்தித் தூங்குறா மாமா. இந்தப் புள்ளைக்கு எப்போதான் பொறுப்பு வருமோ!" என வழக்கமான புலம்பலை உதிர்த்தவாறு சின்னா வீட்டுக்குள் சென்று விட்டார்.

தம்பி உதட்டில் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு மகிழனிடம் கேள்விகள் கேட்கத் துவங்க... அவருக்கு இயந்திர கதியில் பதில் சொல்லி விட்டுத் தன் கொடியைக் காண முடியாத ஏமாற்றத்தில் மகிழன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

மகிழன் வந்ததுமே அவன் குரலை வைத்து, அவன் தங்கள் வீட்டு வாசலில் நிற்பதை அறிந்து கொண்ட முல்லை, அவன் குரலைக் கேட்டு நெகிழ்ந்து... அவனைப்

பார்க்க வேண்டுமென்று துடித்த மனதை அடக்க முடியாமல் கதவை அடைத்துக் கொண்டு, அவன் குரல் கேட்காதவாறு காதுகள் இரண்டையும் தலையணையால் அடைத்துக் கொண்டு படுத்து விட்டாள்.

இருவரும் ஒருவருக்கொருவர் தங்கள் மேல் வைத்திருக்கும் காதலைப் புரிந்து கொண்டனர். ஆனால் அந்தக் காதலைப் பகிர்ந்து கொள்ளுமுன் இருவரும் பல்வேறு குழப்பத்தில் தத்தளித்தனர்.

## 12

ஆயிரம் நிறங்கள் ஜாலமிடும்...
ராத்திரி வாசலில் கோலமிடும்...
வானம் இரவுக்குப் பாலமிடும்...
பாடும் பறவைகள் தாளமிடும்...
பூ மரங்கள் சாமரங்கள் வீசாதோ?

**கா**தலர்கள் இருவரும் தங்கள் துணையின் காதலைப் புரிந்து கொள்ள முடியாமல் வெவ்வேறு தீர்மானத்துடன் தங்களின் மீதி நாட்களைக் கழிக்க நினைத்தனர்.

முல்லை மகிழனை விட்டு விலகித் தன் காதலைத் துறக்க நினைத்தாள். மகிழன் முல்லையை நெருங்கி, அவளிடம் தன் காதலை அவளுக்கு உணர்த்த நினைத் தான்.

அந்த நாளில் மகிழன், அந்த இடத்தை விட்டுக் கிளம்பிய பின்னும், முல்லை தன் அறையை விட்டு



வெளியே வரவே இல்லை. எப்போதும் சிட்டுக்குருவியைப் போல் சிறகை விரித்துப் பறந்து, தன் தேன் குரலால் வீட்டை நிறைக்கும் தன் மகள் காலையிலிருந்து அறையை விட்டு வெளியே வராமல் இருந்தது, சின்னாவின் பெற்ற மனதைக் கவலைக்குள்ளாக்கியது.

முதலில் ஏதோ தூங்குகிறாள் என அலட்சியமாக இருந்த சின்னா, அவள் காலை உணவையும் உண்ணாமல், மதிய உணவிற்கும் வெளியே வராமல் கதவை அடைத்துக் கொண்டு அப்படி என்னதான் செய்கிறாள் என மகளைத் திட்டவெனச் சென்றவர்... கட்டிலில் தலை கவிழ்ந்து சோர்ந்து போய்ப் படுத்திருந்த மகளின் முகத்தைக் கண்டு பதறிப் போனார்.

அழுது அழுது வீங்கிய முகத்துடன் உறங்கும் முல்லையின் முகத்தைக் கண்டவர், மகளை மடியில் கிடத்தி, அவளின் முகத்தை வருடிப் பார்க்க... அவள் உடம்பு சுடுதண்ணீரைப் போல் கொதித்தது.

அம்மாவின் குரலைக் கேட்டுக் கண்ணைத் திறக்க முயன்ற முல்லைக்கு முடியாமல் போனது. அழுது சிவந்திருந்த கண்களைத் திறக்க முடியாமல் தகதகவென எரிய... எடுத்த முயற்சியைக் கைவிட்டுத் தன் அன்னை யின் மடியிலே தலை சாய்த்துக் கொண்டாள்.

அவளின் எண்ணம் முழுவதும் மகிழனே நிறைந்திருந்தான். அழுது சோர்ந்த மனம், அவனின் அணைப்பை எதிர்பார்க்க... நிதர்சனம் உணர்ந்த மூளை அவன் உனக்கு வேண்டாமென வாதாடியது.

இந்தப் பலகீனமான நேரத்திலும் மனதின் போராட்டத்தை ஏற்க முடியாமல் அதற்கும் சேர்ந்து, தன்னையே வதைத்துக் கொண்டாள்.

மருமகளின் குரலைக் கேட்டு உள்ளே வந்த தம்பி, "என்னாச்சு சின்னா? எதுக்கு இப்படிப் பதறுற?" என்றவரும் பேத்தியின் நிலையைக் கண்டு பதற்றமடைந்தவர், "ஹய்யோ... உடம்பு என்னது இப்படி நெருப்பாக் கொதிக் குது! என்ற புள்ளைக்கு என்னாச்சுன்னு தெரியலையே..." வாய் விட்டுப் புலம்பியவாறு சின்னாவிடம்,

"சின்னா, புள்ளைக்குக் குடிக்க கஞ்சி வெச்சுக் குடாத்தா... நான் போய்க் காய்ச்ச மருந்து வாங்கி வர்றேன்..." என்றதுடன் வெளியே சென்றவர் விரைவாகத் தன் சைக்கிளை மிதித்து அதில் வேகத்தைக் கூட்டினார்.

அவர் மருந்து வாங்கி வருவதற்கும் சின்னா சூடான கஞ்சியைத் தயார் செய்து எடுத்து வரவும் சரியாய் இருக்க... படுத்திருந்த பேத்தியை எழுப்பித் தன் தோளில் தாங்கிக் கொண்ட தம்பி, டம்ளரில் இருந்த கஞ்சியை மெல்ல மெல்லப் புகட்ட, கண்களை மூடியவாறே அதைப் பருகினாள்.

வயிற்றுக்கு ஆகாரத்தைக் கொடுத்தவர், கையோடு வாங்கி வந்த மாத்திரையையும் கொடுத்து, வெந்நீரைக் குடிக்கக் கொடுத்து, தன் மடியிலே பேத்தியைக் கிடத்தித் தட்டிக் கொடுக்க... அவரின் அணைப்பு, முல்லையை இளக்குவதற்குப் பதிலாக மேலும் மேலும் அவளை இறுக்கியது.



மகிழனின் மேல் காதல் வந்த நொடியில் அவளின் காதல் கண்ணை மறைக்க, இப்போது தன்னிலை உணர்ந்தபோது தான் அவளுக்குப் பல விஷயங்கள் விளங்கின.

தனக்கு ஒன்றென்றால் தன் உயிர் போகுமளவு துடிக்கும் பாட்டனார்...

தான் செய்யும் சின்னச் சின்னச் சில்மிஷங்களை உள்ளுக்குள் ரசித்தாலும் வெளியே கண்டிப்பு என்ற போர்வையில் மகளை வசை பாடியபடி தன் ஒருத்தியின் நலனை மட்டுமே, தன் உலகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை...

இவர்கள் இருவரின் அன்பையும் மகிழன் என்றவனின் மேல் கொண்ட காதல், ஒரு வாரத்தில் மறக்கச் செய்ததென்றால்... அப்படிப்பட்ட காதலே எனக்குத் தேவையில்லை என மேலும் மேலும் மகிழனை நினைக்கும் தன் காதல் மனதினை முடக்க முல்லை முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

என்ன முயற்சித்தும் பலன் என்னவோ பூஜ்யமாகத் தான் இருந்தது.

நீ வா என்றால் வாலை ஆட்டிக் கொண்டு வருவதற்கும்... போ என்றால் ஓடுவதற்கும் காதலென்ன வீட்டில் வளர்க்கும் நாய்க் குட்டியா!

மனதின் உணர்வுகளை அவ்வளவு எளிதாகக் கட்டுப்படுத்த எந்த ஞானியாலும் முடியாதபோது சாதாரண மானுடப் பிறவியான முல்லையால் எப்படி முடியும்!

அந்த நாளின் பெரும் மனப் போராட்டத்திலும், உடல் பலஹீனத்திலும் முல்லை தன் அப்புச்சியின் மடியிலே கண் அயர்ந்தாள்.

மூடிய பேத்தியின் விழிகளின் மேலிருந்த புருவத்தை நீவியபடி, மறு கையால் அவளைத் தட்டிக் கொடுத்து உறங்க வைத்துக் கொண்டிருந்த தம்பியிடம், "திடீரென்று இந்தப் புள்ளைக்கு எப்படித்தான் காய்ச்சல் வந்ததோ... விடியகாலையில கூட நல்லாத்தானே இருந்தா...?" என்ற சின்னாவை,

"இன்னைக்கு விடியல்ல தோட்டத்துல உலாத்தினாளே... ஏதாச்சு காத்து கருப்பு அண்டியிருக்கும். அந்த திருநீறு எடுத்தா சின்னா..." - கேட்ட மாமனாருக்குத் திருநீறை எடுத்துக் கொடுக்க... கடவுளை வேண்டிக் கொண்டு, பேத்தியின் நெற்றியில் பூசிவிட்டுத் தன் மடியில் இருந்த பேத்தியைப் படுக்கையில் படுக்க வைத்து விட்டு, "இன்னிக்கு நீ பாப்பா கூடயே படுத்துக்கோ சின்னா! விடியால வரைக்கும் காய்ச்ச குறையலைன்னா டவுன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போகலாம்..." என்றவர், திண்ணைக்குச் சென்று தன் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டார்.

சின்னாவும், மாமனாரின் சொல்படி, மகளின் அறையில் கீழே படுத்துக் கொண்டார்.

நடு இரவில் முல்லை, மகிழனை நினைத்து... "வேணாம், எனக்கு நீ வேணாம்..." எனத் தூக்கத்திலேயே வாய் விட்டுப் புலம்ப... அவள் குரலில் கண் விழித்த



சின்னா, அவள் சொல்வது எதுவும் புரியாமல் போக... பதற்றமடைந்தவர் மகளின் காலடியில் சின்ன இரும்புக் கம்பியையும், வீட்டைப் பெருக்கும் விளக்குமாறையும் எடுத்து வைத்து அம்மனை வேண்டி விட்டுப் படுத்துக் கொண்டார்.

அடுத்த நாள் காலை கண் விழித்த முல்லைக்கு நேற்று இருந்த உடல் சோர்வு சற்றுக் குறைந்தது போலிருந்தாலும்... அவள் மனதின் சோர்வு இன்னமும் அதிகமாக... அப்படியே படுத்துக் கிடந்தாள்.

தன் பேத்தி இன்னமும் அப்படியே படுத்திருக்கவும்... கவலையுடன் தலை வருடிய தம்பி, "கண்ணு... கண்ணு... ரொம்ப முடியலையாத்தா... நான் வேணா சேதுவை வண்டி எடுத்தாரச் சொல்லவா...! ஒரு நடை ஆஸ்பத்திரி போயாறலாம் கண்ணு..." என அன்பொழுகக் கேட்ட தன் அப்புச்சிக்காக எழுந்து அமர்ந்தவள்...

"வேண்டாம் அப்பு... நான் நல்லாத்தான் இருக்கேன்..." என அவர்களுக்காகவென எழுந்து நடமாடியவள் வீட்டை விட்டு எதற்கும் வெளியே வரவில்லை.

அந்த நாள் முழுவதும் அவள் வீட்டிலேயே அடைந்து கிடக்க... அதற்கு அடுத்து வந்த இரண்டு நாட்களில் அவளுக்குக் காய்ச்சல் சரியாகிப் போனாலும், அவள் வீட்டை விட்டு எதற்கும் வெளியே செல்லாமல் இருக்க... சின்னாவிற்கு ஏதோ உள்ளுணர்வு உறுத்த... அவர்கள் வீட்டுப் பின்பக்கமிருந்த தென்னை மர நிழலில்

துவைக்கும் கல்லின் மேல் அமர்ந்து காலைக் கட்டித் தன் முகத்தைப் புதைத்து, ஏதோ யோசனையில் அமர்ந்திருந்த மகளை நெருங்கினார்.

"முல்லை..." என்ற அவரின் அழைப்பு, அவளின் காதுகளைச் சென்றடைந்ததற்கு அடையாளமாக அவளிடம் எந்த அசைவும் தெரியாமல் போக... மகளின் தோளை அழுத்தமாகப் பற்றித் தன் பக்கம் திருப்பினார்.

சின்னாவின் இந்தத் திடீர் செயலில் திடுக்கிட்டுத் திரும்பிய முல்லை, ஒரு நிமிடம் தன் அன்னையை விநோதமாகப் பார்த்து விட்டுப் பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "ம்மா... என்னம்மா?" என அமைதியாகக் கேட்கும் மகளை மேலும் வியப்பாகப் பார்த்தார் சின்னா.

அவரின் வியப்புக்குக் காரணமுண்டு.

பின்னே... இதுவே இரண்டு நாட்களுக்கு முந்தைய முல்லையாக இருந்தால், அன்னையின் இந்தச் செயலில், "ஐயோ... என்னத்துக்கும்மா இந்த இழு இழுக்கிற... நான் என்ன நீ மேய்க்கிற மாடா...!" எனச் சண்டைக்கு வந்திருப்பாள். ஆனால், இவளோ அமைதியாக இருக்கவும் அவருக்கு வியப்புடன் சற்றுப் பதட்டமும் குடிகொண்டது.

"ஏன்டி முல்லை... உனக்கு என்னாச்சு? ஏன் ரெண்டு மூணு நாளா ஒரு மாதிரி இருக்க...! அன்னிக்கும் காலையில எல்லாம் நல்லாத்தான இருந்த... அப்புறம் எப்படித் திடீர்னு காய்ச்ச வந்தது? என்னாச்சு கண்ணு... எதையாச்சும் பார்த்துப் பயந்துட்டியாத்தா... என்னன்னு



அம்மாகிட்ட சொல்லுடா. அம்மா உன்னைய வைய மாட்டேன்... சொல்லுத்தா...!" என்று அன்பொழுகக் கேட்ட அன்னையின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல், முல்லையின் கண்கள் கண்ணீரை நிறைக்க,

அன்னையின் முன் தன் உணர்வைக் கட்டுக்குள் கொண்டு வர வெகு சிரமப்பட்டாள்.

ஒரு சில நொடிகளில், தன்னைச் சமன் செய்து கொண்டவள்... "அது எல்லாம் எதுவுமில்லம்மா... சாதாரணக் காய்ச்சல்தான். ரொம்பவும் சோர்வா இருந்தது. அதான் இப்படி உட்கார்ந்தேன்..."

அவள் சொல்வதை ஏதோ நம்பாப் பார்வை பார்த்தவர், "சரித்தா... ஆனா வீடு முழுசும் துள்ளித் திரியுற புள்ள இப்போ ரெண்டு நாளா ஓய்ஞ்சு போய்க் கிடக்கவும் மனசு கேட்கல... அதான். சரி, நான் போய்ப் பால் கறக்குறேன்... கொஞ்ச நேரமாச்சுன்னாலும் அந்தப் பாண்டிப் பய ஆளை அனுப்பிடுவான்..." எனத் திரும்பி நடந்த சின்னாவை,

"அம்மா, ஒரு நிமிஷம்..." எனத் தடுத்த முல்லை, துவைக்கும் கல்லிலிருந்து இறங்கித் தன் அன்னையிடம் வந்தவள், சற்றுத் தயங்கிப் பின், "அம்மா, நான் வேலைக்குப் போகவா?" என இத்தனை நேரம் தன் மனதில் யோசித்துக் கொண்டிருந்தவற்றைத் தன் அன்னையிடம் கேட்டு விட்டு, அவரின் சம்மதத்திற்காக அவரின் முகத்தைப் பார்க்க... சின்னாவோ கேட்ட மகளை ஆச்சரியமாகப் பார்த்தவர்,

"என்னது, வேலைக்குப் போறியா! அது எதுக்கு...? அதான் நான் கை நிறையச் சம்பாதிக்கிறேனே... அதுவே தாராளமா இருக்குது. இதுல நீ போய் நம்ம குடும்பத்தைக் காப்பாத்தணும்னு ஒண்ணுமில்ல. வயசுப் பொண்ணை வேலைக்கு அனுப்பிட்டு மடியில நெருப்பைக் கட்டிக்கிட்டு அழுவச் சொல்றியா! நீ எங்கேயும் போக வேண்டாம். நானே, உனக்கு வயசாயிடுச்சு... ஏதாவது நல்லவனாப் புடிச்சுக் கட்டிக் கொடுக்கலாம்னு பார்க்கிறேன். இவ வேலைக்குப் போறாளாம் வேலைக்கு... போல அந்தப் பக்கம்..." என வசை பாடத் துவங்க...

அன்னை சொன்ன திருமணம் என்ற செய்தியில் முல்லையின் மனம் ஏகத்துக்கு அடிக்கத் துவங்கியது. ஒரு நிமிடம் அவளின் கண் முன்னே மகிழனின் அந்த வசீகர முகம் வந்து போனது.

"என்னடி... இங்க நிக்கிற? வந்து மாட்டுக்குக் கழனித் தண்ணி கலக்கி வை. வா, வா..." எனக் கையோடு மகளை இழுத்துக் கொண்டு போக, அவரின் இழுப்புக்குப் போகாமல், தன் கையை விடுவித்துக் கொண்டவள், "அம்மா... ஒரு நிமிஷம்! சரி, நான் வேலைக்குப் போகல... நான் மேல படிக்கிறேன்... அதுக்காவது சரின்னு சொல்லும்மா..." எனக் கெஞ்ச,

"ஏலே... இத்தனை வருஷமா அதைத்தானே பண்ணிட்டு இருந்த... போதும் நீ படிச்சுக் கிழிச்சது. நீ எத்தனை இ.ஏ., பி.ஏ., படிச்சாலும் எவனையாச்சும் கட்டிக்கிட்டு சட்டியைத்தான் கழுவப் போற... அதுக்கு



இதுவே போதும். நம்ம மாராத்தாக்கா பொண்ணு எல்லாம் பன்னண்டாம் கிளாசு படிக்கும் போதே கட்டிக் கொடுத்துட்டாங்க. அந்தப் புள்ள இப்போ சிங்கக் குட்டிங்க மாதிரி ரெட்டப் பையனைப் பெத்து வச்சிருக்கா... எனக்கு என்ற பேரன், பேத்தியைப் பார்க்க ஆசை இருக்காதா...!" என ஆவேசமாகப் பேசியவர்,

"நீ ரெண்டாம் வருசம் படிச்சுக்கிட்டு இருக்கும்போதே கோவிந்தண்ணே அவர் பையன் சீர்காழிக்கு உன்னைய பொண்ணு கேட்டார். மாமா தான் உன் படிப்பு முடியட்டும்னு சொல்லித் தள்ளிப் போட்டாரு. சரி, நீயும் இப்போதான் படிப்பை முடிச்சிருக்க... இன்னமும் பத்து நாள் கழிச்சு உன்றகிட்ட பேசலாம்னு நினைச்சா... இவ படிக்கிறாளாம்..." என மெதுவாக ஒரு குண்டைத் தூக்கி முல்லையின் தலையில் போட... அவள் அப்படியே ஆணியடித்தாற் போல் சமைந்து நின்றாள்.

மகளின் உணர்ச்சிகள் துடைத்த முகத்தில் தெரிந்த மாற்றத்தில்... துணுக்குற்ற சின்னாவின் மனம் வேகமாக வேறு கணக்குப் போட்டது.

"அடியே... என்னடி யோசனை?" என அதட்ட,

"அம்மா... எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் எல்லாம் வேண்டாம்மா. நான் மேல படிக்கிறேன்..." என மேலும் ஏதோ பேச வந்தவளைத் தடுத்து, "முல்லை... அம்மா சொன்னது சொன்னதுதான். நான் ஏற்கெனவே இதைப் பத்தி யோசிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். நல்ல நாளா உன்கிட்ட பேச்சை ஆரம்பிக்கலாம்னு மாமா

சொன்னாரு... இப்போ நீ எதையோ கேட்க... இதை இப்போவே உன்றகிட்ட பேச வேண்டியதாப் போச்சு... உனக்கு எது நல்லதுன்னு எங்களுக்குத் தெரியும். நீ போய்ச் சொன்ன வேலையைச் செய்..." என அவளை அங்கிருந்து நகர்த்த... அதற்கு மேல் முல்லையால் வேறேதும் பேச முடியவில்லை.

அமைதியாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தவள் மனம் வேறெங்கோ பயணித்துக் கொண்டிருந்தது.

அவளால் எப்படி இது முடியும்... மனதில் மகிழனை நிரப்பிக் கொண்டு, வெளியில் வேறொருவருடன் வாழ்க்கையை வாழ அவளால் முடியுமா... என்ற கேள்வி, பூதாகரமாகத் தெரிய...

அவளுக்கே அவள் எண்ணங்களின் முரண்பாடு தெளிவாகப் புரிந்தது.

தனக்கு என்னதான் வேண்டும்... மகிழனின் உயரம் கண்டு அவனை வேண்டாம் என மறுக்கும் ஒரு மனம்... ஆனால் அவனின்பால் ஈர்க்கப்பட்டு அவனின் மேல் காதல் வயப்பட்ட இன்னொரு மனம்... இதற்கு இடையில் தவிக்கும் தன் உயிரை நினைத்து அவளால் கண்ணீர் மட்டுமே சிந்த முடிந்தது.

இந்த நிலையில் தனக்கு இன்னொருவருடன் கல்யாணமாம்.... ஹ்ம்ம்... நிச்சயம் இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென அவள் மனம் உள்ளுக்குள் ஓலமிட்டது. செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே



விட்டு விட்டுத் தன் அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்தாள்.

அவளுக்கிருந்த மனக் குழப்பத்தில் மகிழனின் நெஞ்சில் சாய்ந்து கத்தி அழ வேண்டுமென்று எண்ணம் எழுந்தது.

முல்லை அன்று தன் அறையின் ஜன்னலை மூடியதற்குப் பிறகு, அதை அவள் திறக்கவே இல்லை. ஆனால் வீட்டிற்குள் இருந்தே டிராக்டர்கள் வருவதும், போவதும், போர் போடும் சத்தமும், ஆட்கள் வேலை செய்யும் சத்தமும் முல்லையின் செவிகளில் தெளிவாகக் கேட்டது.

இரண்டு நாட்கள் வீட்டை விட்டு வராதவள்... தன் சுக, துக்கங்களைப் பகிரும் அவளின் வேம்பம்மனின் ஞாபகம் வர... தன் அம்மனிடம் சென்று தன் மனதின் எண்ணங்களை முறையிட நினைத்து, அங்கே செல்ல நினைத்தாள்.

ஆனால் எங்கே அந்த இடத்தில் தன் மகிழன் இருப்பானோ... என மனது அங்கே செல்லத் தயங்கியது.

காதல் கொண்ட மனமோ, அவன் அங்கிருந்தால் அவனை ஒரு முறையேனும் பார்த்து விடலாம் என்ற நப்பாசையில் கால்கள் தானாகவே அங்கே செல்ல அடியெடுத்து வைத்தன.

ஆனால் வீட்டை விட்டு வெளியே வந்ததும், அவளுக்குள் ஒரு கேள்வி. அது அவளின் அம்மன்

அங்கே வீற்றிருப்பாரா... என்றுதான்! ஃபாக்டரி கட்டுகிறேன் என்ற பெயரில் தன் கடவுளின் கோயிலை அவர்கள் இடித்து விட்டிருந்தால்...!

நினைக்கும் போதே அவளுக்கு வலித்தது. சின்ன வயதில் விளையாட்டுக்காக ஒரு கருங் கல்லுக்கு மஞ்சள், குங்குமம் வைத்துக் கடவுளாக நினைத்து விளையாடத் துவங்கியவள் பின் வளர, வளர... அந்தக் கருங்கல்லைத் தன் தெய்வமாக நினைத்துப் பூஜிக்கத் துவங்கினாள்.

அந்தத் தெய்வத்தை உண்மையான நம்பிக்கையோடு வேண்டியவள்... அவளின் நம்பிக்கை பொய்த்துப் போகாமல் இன்றுவரை வேம்பம்மன் அவளின் இன்றியமையாதவராகிப் போனார்.

நிச்சயம் தன் கடவுள் அங்கே இருப்பார் என அவள் மனம் அடித்துச் சொல்ல... ஓட்டமும் நடையுமாகத் தன் வீட்டை விட்டு வெளியே வந்தவள்... மகிழன் அந்த இடத்தில் செய்த மாற்றத்தைக் கண்டு வியந்தாள்.

மேடு பள்ளமுமாக இருந்த இடத்தை டிராக்டர் கொண்டு சமன் செய்திருந்தனர். இடத்தைச் சுற்றிலும் கம்பி வேலிகளால் வேயப்பட்டு நடுவில் பல கம்புகளை நட்டு வைத்துப் பந்தல் போடப்பட்டிருந்தது. அந்த இடத்தின் ஓரத்தில் தென்னை ஓலைகள் வேயப்பட்டுச் சிறு குடில் போல் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் இருந்த கிணற்றில் சிறு தொட்டி போல் அமைக்கப்பட்டு அதில் ஆட்கள் சிமெண்ட் போட்டுப் பூசிக் கொண் டிருந்தனர்.



அதைப் பார்த்தவுடனே முல்லைக்குப் புரிந்து விட்டது. அது மகிழன் அங்கே ஃபாக்டரி கட்டப் போவ தில்லை... என்று முல்லையின் மனம் எல்லையில்லா இன்பத்தில் திளைக்க... மனம் துள்ளிக் குத்தாட்டம் போட்டது.

தன் காதல் நாயகன்... தன் ஒரு கோரிக்கைக் காகவா இதைச் செய்திருக்கிறான்... என்று எண்ணும் போதிலே அவளின் உடலும் மனமும் சிறகு விரித்துப் பறக்கத் துவங்க... அந்தரத்தில் பறந்த கிளி சிறகொடிந்து கீழே விழுவது போல், “சே... அவன் எதற்குத் தனக்காகச் செய்யப் போகிறான்... அவனுக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? நான் சொல்லவில்லை என்றாலும் அவன் நிச்சயம் இந்த இடத்தில் ஃபாக்டரி கட்டியிருக்க மாட்டான். எந்த ஒரு இயற்கை ரசிகனும் இந்த இடத்தில் கட்டடத்தை எழுப்ப நினைக்க மாட்டான். இதே அவனுக்குத் தோன்றியிருக்கும்...” எனச் சரியாகத் தப்புக் கணக்குப் போட்டது.

இந்த வெவ்வேறு எண்ணங்களில் ஓய்ந்து போன முல்லை, ‘ஹய்யோ... எனக்கு என்னதான் வேண்டு மென்று...’ - குழப்பத்தில்... தான் சிறுவயதிலிருந்து போற்றும் தன் வேம்பம்மனிடம் சரணடைய அந்த இடத்தின் மறுகோடிக்கு ஓடினாள்.

அவளின் கடவுளின் சன்னிதானத்தில் நெருங்கிய முல்லையின் கால்கள் வேரூன்றி நிற்க... பின் அவளின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்து, கைகள் தானாக மேல் எழுந்து இரு கரத்தையும் சேர்த்து மனமார வணங்க...

அவளுடன் சேர்ந்து, அவளின் காதலனும் கண்கள் மூடி... தன்னவள் தனக்குக் கிடைக்க அருள் புரியுமாறு தன் வேண்டுதலை வைத்தான்.

## 13

நேரம் கூடி வந்த வேளை...
நீ நெஞ்சை மூடி வைத்த கோழை...
என் நெஞ்சிலே ஒரு இரக்கம் இல்லை...
கண்ணீருக்கே நான் தத்துப் பிள்ளை...
என் காதலி!

தன் நெஞ்சில் அழுந்தும் பாரங்களைத் தன் கடவுள் முன் கொட்டி விடும் முனைப்புடன் ஓடி வந்த முல்லையின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்ததன் காரணம் மகிழன்தான்.

விளையாட்டுக் கோவிலாக இருந்த வேம்பம்மன் இப்போது பூரண தெய்வப் பீடமாகக் காட்சியளித்தார்.

ஏற்கெனவே சிறு சிமெண்ட் மேடையின் மீது வீற்றிருந்த வேம்பம்மனைச் சுற்றிலும் க்ரில் கம்பிகளால் தடுப்புகளை ஏற்படுத்திப் பக்கத்திலே இன்னொரு அம்மன் சிலை வைக்கப்பட்டிருந்தது.

அதைக் கண்டவுடனே முல்லையின் சஞ்சல மடைந்த மனம் பரவசமடையத் தன் மனதிற்கினிய இஷ்ட தெய்வத்திடம் தன் மனதின் குழப்பங்களைக் கேள்விகளைக் கொட்டி விடும் நோக்கில் கண்ணை மூடித் தனக்கொரு வழி சொல்லுமாறு வேண்டுதல் வைக்க...



இரண்டு நாட்களாகத் தன் காதலியின் வரவை நோக்கி அவள் வீட்டு வாசலில் தவம் கிடந்த கண்களுக்கு... அவளின் வரவு இன்ப மழைச் சாரலை இதயத்தில் நனைத்தது.

அவள் வீட்டை விட்டு வெளியே வந்தது முதல் அவளின் முகத்தில் தெரிந்த வெவ்வேறு உணர்ச்சிகளைப் படித்த மகிழனுக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.

ஏற்கெனவே ஏதோவொரு விதத்தில், தனக்கு ஏற்பட்ட அதே பாதிப்பு முல்லையிடமும் ஏற்பட்டிருக்கிறது என்பது அவளது முந்தைய அணைப்பு வெளிப்படுத்த... இப்போது அவள் முகத்தின் உணர்ச்சிகள் அதைத் தொண்ணூறு சதவீதம் உறுதி செய்தாலும் இன்று அவளிடம் பேசி உறுதி செய்து விட வேண்டுமென்று அவள் பின்னாலே வந்தவன்...

அவளுடன் சேர்ந்து தானும் வேம்பம்மனிடம் தன் பிரார்த்தனையை வைத்தான்.

இருவரும் ஒரு சில நிமிடங்கள் ஆழ்ந்த பிரார்த்தனையில் இருக்க... முதலில் சுதாரித்தது முல்லைதான்.

தன் அருகில் தன்னை உரசியவாறு நின்றிருந்த மகிழனைக் கண்டவுடன், முல்லையின் புண்பட்ட உள்ளம் பூரித்துப் போனது.

ஒரு வாரம் அவனின் காதலில் முக்குளித்தது. இரண்டு நாட்கள் அவனின் மீதான காதலைத் துறக்க நினைத்தது... இப்போது அவள் அன்னையின் திருமணப்

பேச்சு என அனைத்தும் முல்லையின் உடலையும் மனதையும் பலவீனமாக்கியிருந்தது.

தன் மனதைக் கொள்ளை கொண்டவன், தன்னருகில் இருந்தும் அவனைக் கட்டியணைத்து ஆறுதல் தேட முடியவில்லையே என்ற தவிப்பில் கண்களில் மௌனமாகக் கண்ணீர் வழிய, இப்போது மெல்லிய அழுகை பெரிய விசும்பலாக வெடித்தது.

அவளின் விசும்பலில் கண் விழித்த மகிழன், அவள் கண்ணீரைக் கண்டு பதறியவன், ஒரே எட்டில் அவளை நெருங்கிக் கைப்பற்றி அவளின் தலையைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

முல்லை எதிர்க்கவில்லை.

அவள் எதிர்பார்த்த ஆறுதல் கிடைத்துவிட்ட நிறைவில் அவன் நெஞ்சில் சாய்ந்தாள். இதற்காகத்தானே அவள் இரண்டு நாட்கள் தவித்தது. இப்போது கிடைத்த அவனின் அணைப்பில் முற்றிலும் அவனிடம் சரணடைந்தாள்.

அவனின் அணைப்பு முல்லையின் ஏக்கங்களைப் போக்க, அவனை மேலும் நெருங்கி இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

இருவரின் அணைப்பும் நொடிக்கு நொடி இறுகிப் போக, அவர்களுக்கு நடுவே காற்று கூடப் போக முடியாத இடைவெளியில் தங்களின் இணையின் நெருக்கத்தில் இளைப்பாறினார்கள்.



இருவரும் வாய் வார்த்தையாகத் தங்கள் காதலைச் சொல்லிக் கொள்ளவில்லை என்றாலும், இந்த இறுகிய அணைப்பில் வாய்மொழி அல்லாது காதல் பரிவர்த்தனை நடந்தேறியது.

அவனின் அணைப்பில் சற்றே மனம் தேறிய முல்லை சுற்றுப்புறம் உணர்ந்து, அவனிடமிருந்து விலக நினைக்க... மகிழனோ அவளைத் தன்னிடமிருந்து விலக்காமல் அவள் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களைச் சந்தித்தான்.

ஹப்பா... அந்த ஒற்றைப் பார்வையில் எத்தனை எத்தனை உணர்வுகள்...!

முழுக்க முழுக்கக் காதலை ஏந்திய கண்களில் பத்து சதவீதம் ஏக்கம்... பத்து சதவீதம் இயலாமை... மீதிக்குக் கோபமும் பயமும் கலந்த கலவை.

முல்லை அவளின் காதலைத் தன் வாய்மொழி யல்லாமல் கண்களால் மகிழனுக்கு உணர்த்தினாள். அவளின் அந்த மௌன பாஷையை நொடியில் உணர்ந்து கொண்டவன், அவளைப் போலவே, தன் காதலையும் அவளுக்கு உணர்த்த நினைத்தவன்...

எங்கும் அவள் கண்களைச் சாட்சிக்காரனாக்கி... சிவந்த அவள் இதழைப் பத்திரமாக்கி... துடிக்கும் இவனின் இதழ்களைப் பேனாவாக்கி, அவனின் காதல் ஒப்பந் தத்தை அப்போதே, அந்த நொடியே அவள் உதட்டில் எழுதினான்.

இருவரின் வார்த்தைகளற்ற காதல் பரிமாறுதல், அவர்களின் முதல் முத்தமாக அரங்கேறியது.

ஒரு நொடியோ, பல நிமிடங்களோ தொடர்ந்த அவர்கள் முதல் முத்தத்தில் மூழ்கி முக்குளித்தவர்கள் சுற்றுப்புறம் மறந்தனர்.

இவர்களின் இந்தக் காதல் காட்சியை ஒரு ஜோடிக் கண்கள் வக்கிரத்துடன் பார்த்ததை இருவருமே உணராமல் தங்கள் சுயத்தைத் தொலைத்து நின்றிருந்தனர்.

முல்லை அவனின் நெருக்கத்தை மேலும் மேலும் வேண்டுபவள் போன்று அவனின் பாதங்களின் மீதேறி அவனை நெருங்க.... மகிழன் இந்தத் துன்பம் இப்படியே தொடர வேண்டுமென்று அவளைத் தன்னுள் புதைக்க முயன்று தோற்றான்.

இந்த நீண்ட முத்தத்தை இப்போதைக்கு முடிக்க மாட்டார்கள் என உணர்ந்த வேப்பமரத்துக் குயில் தன் குரலை உயர்த்தி, அவர்களை இவ்வுலகிற்குக் கொண்டு வர முயன்றது.

குயிலின் குரலில் தன்னிலை அடைந்த முல்லை, ஒரு சின்னத் திடுக்கிடலுடன் மகிழனைத் தன்னிடமிருந்து பிரித்தாள்.

அமுதமாகக் கிடைத்த தேனிதழைத் தன்னிடமிருந்து பிரித்த முல்லையைச் சின்னக் கோபத்துடன் பார்த்த மகிழன், மீண்டும் அவளைத் தன்னிடம் இழுக்க...

"ஐயோ! விடுங்க... என்ன பண்றீங்க?" என அவன் பற்றிய கையை விடுவிக்க முயன்றாள்.



அவளிடமிருந்து கிடைத்த ஒற்றை முத்தத்தில் சொர்க்கத்தை அடைந்த மகிழன், "கொடி, ஐ நீட் யூ... ப்ளீஸ்!" எனக் கெஞ்சும் குரலில் தாபமாகக் கேட்டு, மீண்டும் அவளின் வெற்று இடையைப் பற்றித் தன் புறமிழுக்க... அதுவே அவனுக்கு வினையாகப் போனது.

அதற்குள் சின்னாவின் குரல் அவர்கள் இருக்குமிடத்தை நெருங்கி வர, பதற்றமடைந்த முல்லை அவனிடமிருந்து வேகமாகக் கையை உருவிக் கொண்டு, அவனைத் திரும்பியும் பார்க்காமல் அங்கிருந்து ஓடி விட்டாள்.

அவளின் இந்தத் திடீர் விலகலில் ஆத்திரமடைந்த மகிழன், கால்களால் தரையை உதைத்து மண்ணை உதறித் தள்ளியவன்... போகும் அவளையே ஏக்கத்துடன் பார்த்தான்.

"எங்கடி போன...? உனக்கு ஆயிரம் தடவை சொல்லியிருக்கேன். இங்க வர்றதுன்னா சொல்லிட்டு வான்னு... உன்னைக் காணாம நான் கிடந்து தேடு றேன். வயசுப் பொண்ணை வீட்டுல வெச்சிருக்கிறதும்... நெருப்பை மடியில கட்டிக்கிறதும் ஒண்ணுன்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க..." என வழக்கம் போல் அவரின் வசைபாடலைத் துவங்க... அன்னைக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் வீட்டுக்குள் வந்தவள்... தன் அறையில் தலையணையில் முகம் புதைத்தாள்.

மகிழன் கொடுத்த முத்தத்தின் ஈரம் இன்னமும் அவள் உதட்டை நிறைக்க, தன் கைகளால் உதட்டை வருடினாள்.

'ஹப்பா... என்ன தைரியம்! அவ்ளோ தூரம் உதட்டுல தூர் வாரினது பத்தாதுன்னு இடுப்பில வேற கை வைக்கிறான். ஹ்ம்ம்... அம்மா மட்டும் அங்கே வந்திருந்துச்சு... எனக்கு அங்கேயே சமாதி கட்டியிருக்கும். ஜஸ்ட் மிஸ்டி முல்லை...' - மகிழனின் செயலைச் சிறு வெட்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

இப்போது நினைக்கும்போதும் அந்த நொடியில் இவள் அடைந்த பரவசம் உடலைச் சிலிர்க்க.. ஒருவித மோன நிலையில் படுத்திருந்தாள்.

ஒரு சில மணிநேரம் கடந்து வாசலில் ஒரு கம்பீர ஆண் குரல் கேட்க... அந்தக் குரலின் சொந்தக்காரனை நொடியில் அடையாளம் கண்டு கொண்டவள்... வாசலை நோக்கி அடியெடுத்து வைக்கத் துடித்த கால்களைக் கட்டுப்படுத்த வெகு சிரமப்பட்டுப் போனாள்.

தன் தாத்தா, அன்னையின் முன்... தன் முக உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம் என்றுணர்ந்தவள்... தன் காதுகளைக் கூர்மையாக்கி, அவனின் குரலைத் தன்னுள் நிரப்ப நினைத்தாள்.

"வாங்க தம்பி... வேலை ரொம்பவும் வெரசா நடக்குது போல..." என விசாரித்து அவனை அமரச் சொல்ல...

திண்ணையில் அமர்ந்து கொண்டு, "ஆமா தாத்தா.. வேலை எல்லாம் நல்லா நடந்துக்கிட்டு இருக்கு. இன்னும் ரெண்டு நாளில் பந்தல் ரெடியாகிடும். நான் ஆளை



ஏற்பாடு பண்ணிட்டுப் போறேன். நீங்கதான் தாத்தா கூட இருந்து பார்த்துக்கணும்... இன்னும் இருபது நாளில் கல்யாணமாச்சே... அதுக்கான வேலையை இப்போவே ஆரம்பிக்கணும்..." என மகிழன், தம்பியப்பனிடம் பேசினாலும், அவனின் கண்கள் முல்லையைத் தேடிக் கொண்டிருந்தன.

அவரோ, "அதுக்கென்ன தம்பி... நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன். நீங்க நல்லபடியா கல்யாணத்தை முடிச்சுட்டு வாங்க. நீங்க வரும்போது திராட்சைக் கொடி துளிர் விட்டிருக்கும் பாருங்க..." என உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்க... இங்கே கேட்டுக் கொண்டிருந்த முல்லைக்குத் திருமணம் என்றதில் சப்தநாடியும் ஒரே நொடியில் ஒடுங்கிப் போனது.

இந்தச் சில நாட்களில் முல்லையின் தாத்தா தம்பியப்பனுக்கும், மகிழனுக்கும் நல்ல நட்புறவு ஏற்பட்டிருந்தது. முதலில் முல்லையின் தாத்தா என்ற முறையில் அவரிடம் விவசாயம் விஷயமாகப் பேசி உறவை வளர்க்க நினைத்தவன்... இப்போது, தன் குடும்ப விஷயத்தைப் பற்றிப் பேசும் அளவிற்கு அவர்களின் நட்பு வளர்ந்திருந்தது.

அவரிடம் தன் தங்கை மதுரிமாவின் திருமணத்தைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருந்தான். அதைப் பற்றி ஏற்கெனவே அவருக்குத் தெரியுமாதலால்... அவன் மொட்டையாகத் திருமணம் என்றது... அவன் தனக்குத் தானே ஆப்பைச் செதுக்கிக் கொண்டான்.

இன்னும் இருபது நாளில் தங்கைக்குத் திருமணத்தை வைத்துக் கொண்டு, மகிழன் அடிக்கடி இங்கே போளுவாம்பட்டி வருவது அவனின் தந்தை வெங்கடராமனுக்குப் பிடிக்கவில்லை என்பதை ஒரு சில செயல்களில் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அவருக்கு மகன் ஃபாக்டரி கட்டுகிறேன் என்று வாங்க வந்த நிலத்தில், விவசாயம் செய்கிறேன் என்றதிலே விருப்பமில்லை எனும்போது... இவன் அவர்கள் மில்லில் இருக்கும் ஆயிரக்கணக்கான வேலைகளை விட்டுவிட்டு அடிக்கடி இங்கே வருவது சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதை மறைமுகமாகக் காட்டியிருக்கிறார்.

அதை உணர்ந்து கொண்ட மகிழன், ஒரு வழியாகத் தங்கையின் திருமணத்தை முடித்துக் கொண்டு இங்கே வேலையை ஆரம்பிக்க நினைத்தாலும்... அவனின் காதல் மனது வெகு விரைவில் தன் மனதுக்கினியவளின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் ஆர்வம் உந்த... இப்போதே ஆரம்பித்து விட்டான்.

ஆனால் இன்று தன்னவளின் தேனமுதில் தன்னைத் தொலைத்தவனுக்கு இப்போதே அவளை இங்கிருந்து களவாடிக் கொண்டு தன் வீடு செல்ல...

மனம் முழுவதும் ஆசையிருந்தாலும் நடப்புணர்ந்து தன் மனதின் ஆவலைக் கட்டுக்குள் கொண்டு வந்தான்.

இன்றுடன் தன்னவளை அடுத்த இருபது நாட்கள் கழித்துத்தான் பார்க்க இங்கே வருவோம். அதற்கு முன்



அவளை ஒரு முறையேனும் பார்த்து விட வேண்டுமென்று ஏங்கிய மனதிற்குப் பம்பர் பரிசாக, அவளைப் பார்த்தது மட்டுமல்லாது, அவளின் அணைப்பும் முத்தமும் கிடைத்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

அவளைப் பார்த்தவுடன், எப்படியாவது தன் காதலைச் சொல்ல நினைத்தவன், அது முடியாமல் போனாலும், எப்படியோ தன் செயலில் தன் காதலை அவளுக்கு உணர்த்தி விட்ட மகிழ்ச்சியிலும், நிம்மதியிலும் தாத்தாவிடம் விடைபெற்றவன், மீண்டுமொரு நொடி அவனின் பார்வை வீட்டின் உள்ளே சென்று மீண்டதைத் தம்பி கவனிக்கவில்லை என்றாலும், சின்னா கவனித்து விட்டார்.

'தாய் அறியாத சூல் உண்டா...?' மகள் இரண்டு நாட்களாகச் சரியில்லை என்பதிலே, அவர் ஓரளவுக்கு எதையோ யூகித்திருந்தார். இப்போது மகிழனின் தேடுதல் அவருக்கு எதையோ உணர்த்த, உணர்ந்த நொடி அவர் மனம் அதிர்ந்தது.

இதை ஏதும் அறியாத மகிழன், தன்னவளின் தரிசனத்தை எதிர்பார்த்து, அது இனிக் கிடைக்காது என்று உணர்ந்தவன், சின்ன ஏமாற்றத்துடன் தம்பியிடமும், சின்னாவிடமும் விடைபெற்றுத் தன் காரை அடைந்து அதை உயிர்ப்பித்தவன், முல்லையின் அறை ஜன்னலையே பார்த்தவன், நீண்ட ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்து கிளம்பியவனின் மனம் முழுவதும் முல்லையே நிறைந்திருந்தாள்.

அவளுக்கு முத்தம் கொடுத்த பின்னிருந்து புன்னகையில் விரிந்த அவன் இதழ்கள், வீடு வந்து சேரும் வரையிலும் அதே புன்னகையில் மலர்ந்தே இருந்தன.

அவளின் நினைவிலே வீடு வந்தவன், தன்னறைக்குச் செல்லும் வழியில் கண்டு விசாரித்த தங்கையின் தலைமுடியைச் செல்லமாகக் கலைத்துக் கண்சிமிட்டிச் சென்றவனின் உற்சாகம் மதுவையும் தொற்றிக் கொள்ள,

"அண்ணா... உன்னோட சில ஆக்டிவிட்டீஸைப் பார்த்த எனக்கு ஒண்ணு தோணுது... அதை இன்னைக்குக் கன்ஃபார்ம் பண்ணிக்கலாமா?" எனக் குறும்பாகக் கேட்டவளுக்கு...

பதில் சொல்லாமல், கண்ணை அடித்து உற்சாகச் சிரிப்புடன் தன்னறைக்குள் சென்று கனவுகளில் மூழ்கினான்.

இங்கே மகிழன் தன் கனவுலகில் மிதந்து கொண்டிருக்க, அங்கே இவன் மொட்டையாகத் திருமணம் என்றதில் ஸ்தம்பித்துப் போயிருந்த முல்லையின் மனம் வெறுமையைப் பூசிக் கொள்ள, இன்று அவன் கொடுத்த முத்தத்தில் தன்னை மறந்து நின்ற தன் மடத்தனத்தை எண்ணி நொந்தாள்.

பாவம்... இந்தக் கிராமத்துச் சிறு பெண்ணுக்குத் தன் காதலைத் தன் உள்ளம் கவர்ந்தவனிடம் சொல்லவும் பல தயக்கங்கள்... அதை உணரவும் பல தயக்கங்கள்.



சொல்லற்ற செயலால் உணர்த்தி விட்டுச் சென்ற காதலனின் மனதை அவள் உணர்ந்து கொள்ளும் முன்பே, அவனே தனக்குத் திருமணம் என அறிவித்து விட்டுப் போனதில் லேசாகத் தெளிய முனைந்த மனதை மீண்டும் அவளே குழப்பிக் கொண்டாள்.

ஆம்! அவன் 'திருமணம்' என்றதை, முட்டாள் தனமாக 'அவனுக்குத் திருமணம்' என நினைத்து நொந்தாள் அந்த முட்டாள் பெண்.

'அடப்பாவி! இன்னும் இருபது நாளில் உனக்குக் கல்யாணத்தை வெச்சிக்கிட்டு இன்னைக்கு என்னைக் கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுக்கிறியே! உனக்கெல்லாம் கொஞ்சம் கூட மனச்சாட்சியே இல்லையா...?' தன் மனதிற்குள்ளே அவனிடம் கேள்விகளைத் தொடுத்தாள்.

'இன்னொருத்தியைக் கல்யாணம் செய்யும் மனசோட நீ என்னைத் தொட்டதைக் கூடப் புரிஞ்சுக்க முடியாம நான் உன்னோட இளகிட்டு இருந்திருக்கேன். எல்லாம் என்னோட தப்புதான். ஐயோ...' எனத் தன் தலையில் அடித்துக் கொண்டு கதறினாள்.

மகிழன் அவள் கரம் பற்றி, 'ஐ நீட் யூ...' என்றதில் அப்போது வெட்கப்பட்ட மனதை நினைத்து இப்போது நொந்தாள்.

அந்த 'ஐ நீட் யூ'வை மகிழன் 'ஐ லவ் யூ...' என்று சொல்லியிருந்தால் முல்லைக்கு இந்தக் குழப்பம் ஏற்பட் டிருக்காது.

ஆனால், 'ஐ நீட் யூ' என்றவனின் வார்த்தை, முல்லைக்கு அவனை ஒரு வில்லனைப் போன்று சித்திரித்தது.

அவனை ஏமாற்றுக்காரனாக நினைத்தவள், அவன் தன்னை ஏமாற்றி விட்டதாக நினைத்து அவனை வெறுத்தாள்.

இங்கே தனது அறையில் முல்லை இப்படித் தவித்துக் கொண்டிருக்க, வீட்டிற்கு வெளியிலிருந்த சின்னா, மகளின் நடவடிக்கையை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

காலையில், திருமணம் என்றதும் வெளிறிய மகளின் முகம், மாலை, தோட்டத்தில் கண்ட முல்லையின் மலர்ந்த முகம், மகிழனின் தேடுதல் என அனைத்தையும் ஆராய்ந்தவர், ஒன்றும் ஒன்றும் இரண்டு எனச் சரியாகக் கணக்குப் போட்டவர், அந்தக் கணக்குக் கொடுத்த அதிர்ச்சியில் சில முடிவுகளை விரைவாக எடுக்க நினைத்தார்.

அதுபற்றி உடனே தன் மாமனாரிடம் கலந்தாலோசிக்க, அவரையும் சமாதானம் செய்து விட்டு, மறு நாளிலிருந்து தன் மகளின் திருமணத்திற்கு ஏற்பாட்டைச் செய்யத் துவங்கினார்.

மகிழன், முல்லையின் காதல் ஏற்கெனவே அவர்களுக்குள்ளேயே பல குழப்பத்தில் ஓடிக் கொண்டிருக்க, அதை மேலும் குழப்பும் வண்ணம், புவனா அவள் அத்தை வீட்டிற்கு விருந்துக்குச் சென்றவள், அன்று மாலைதான் அவள் வீட்டுக்கு வந்தாள்.



வந்தவளுக்கு உற்சாகம் கொடுக்கும் வண்ணம், முல்லையும் மகிழனும் அவர்கள் காதல் முத்தத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்க,

அதைப் பார்த்த முதல் நொடி புவனா அதிர்ந்தாலும், அடுத்த நொடி மனதில் ஒரு வக்கிரம் குடி கொள்ளத் தன்னிடமிருந்த கேமரா மொபைலில் இருவரையும் படம் எடுத்து வைத்தாள்.

கல்லூரியில் அவர்களுக்குள் ஏற்பட்ட சின்னச் சின்ன மோதல்கள் முல்லையையும் புவனாவையும் பகைவர்களாக்கியிருக்க, அதை மேலும் அதிகரிக்கும் வண்ணம், கல்லூரிக் கடைசி நாளில் முல்லையின் அலட்சியம் வேறு அவளை அதிகப்படியாக வெறுப்பேற்றியிருந்தது.

புவனா, அந்த வெறுப்பிற்கும் பகைக்கும் முல்லையின் காதலைப் பழி வாங்க நினைத்தாள்.

## 14

பூஞ்சோலையில் வாடைக் காற்றும் ஆட
சந்தம் பாட,
கூடாதென்று தூறல் போடும்
ஏதோ மண்ணின் மீது
ஒரே ஒரு பார்வை தந்தாலென்ன தேனே!
ஒரே ஒரு வார்த்தை சொன்னால்
என்ன மானே!
ஆகாயம் காணாத மேகம் எது கண்ணே?

அதிகாலைச் சூரியன் தன் வரவை இவ்வுலகிற்கு உணர்த்திக் கொண்டிருந்த ஏகாந்த வேளை...

பூக்களாலும், வாழைமரத் தோரணங்களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப் பிரமாண்டமான திருமண மண்டபத்தில் காதைப் பிளக்கும் மேள வாத்தியம் முழங்கியது.

தங்களுக்கு சைட் அடிக்க யாராவது இருக்கிறார்களா எனத் தேடும் இளசுகளின் பார்வையிலிருந்து தப்பிக்கும் சில கன்னிகள்...

தங்கள் வயசுப் பிள்ளைகளுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும் சிறு வாண்டுகள்... எனப் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது அந்த மண்டபம்.

கோவையின் பெரும் தொழிலதிபர் வெங்கட்ராமன் - கோகிலா அவர்களின் இளவரசி மதுரிமாவிற்கும், சிவசுப்ரமணி - ரஞ்சிதம் அவர்களின் இளவரசன் இளங்கோவனுக்கும் உற்றார், உறவினர் சாட்சியாகத் திருமணம் நடக்க இன்னும் சில கணங்களே இருந்தன.

மணமக்கள் தங்கள் துணையுடன் கை கோக்கும் முன், கடவுளிடம் எடுக்கும் சத்தியபிரமாணத்தை ஐயரின் வார்த்தையைப் பின்பற்றி சமஸ்கிருதத்தில் உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

தங்கள் பிள்ளைகளின் திருமணக் கோலத்தைக் கண்டு பூரித்த இதயத்துடன் மணமக்களை ஆசிர்வதிக்கத் தயாராக இருந்தனர் மக்களைப் பெற்றவர்கள்.



"பெரியம்மா... ஐயர் ஏதோ தட்டு கேட்கிறார், கொஞ்சம் எடுத்துக் கொடுங்களேன்... டேய் ஹரீஷ்... போய் சித்திகிட்ட வந்தவங்களுக்குத் தாம்பூலம் ரெடியான்னு கேட்டு, முன்னாலே எடுத்துட்டுப் போய் வை. பிரபு... நீ கொஞ்சம் பந்தியைக் கவனிச்சுக்கோ. ரொம்பக் கூட்டமா இருக்கு..." என மணமகளின் அண்ணனாகத் தங்கையின் திருமணத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தான் மகிழன்.

அனைவரும் முகத்தில் பூரிப்பு, புன்னகை, சந்தோஷம், உற்சாகம், பரபரப்பு எனப் பல்வேறு உணர்ச்சிகளுடன் இயங்கிக் கொண்டிருக்க, அந்த இடத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாத உணர்வுடன், ஓரமாக அமர்ந்து, நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அபூர்வா.

அவள் மனம் முழுவதும் ஏமாற்றம், பொறாமை என நெஞ்சம் முழுக்க வஞ்சகமாக, அங்கு நடந்தவைகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இங்கே நடப்பது அனைத்தையும் பார்க்கும்போது, மனது சந்தோஷம் அடைவதற்குப் பதிலாக மகிழனின் மீதான பழியுணர்ச்சி வளர்ந்து கொண்டிருந்தது.

மணமேடையில் அமர்ந்து கொண்டு கண்களால் காதல் பேசி, சின்னச் சின்னச் சில்மிஷங்களைச் செய்து தன்னவளைச் சிவக்க வைத்துக் கொண்டிருந்த இளங்கோவையும், அவனின் சில்மிஷங்களை ஆனந்த

அவஸ்தையாகப் பொறுத்துக் கொண்டு, அவனைச் செல்லமாக முறைத்து அடக்கிக் கொண்டிருந்த மதுவையும் பார்த்த போது, அவள் மனதில் பொறாமை தலை தூக்கியது.

தானும் இதுபோல மகிழனுடன் அமர்ந்து அவனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என அவள் நினைத்த கனவுகள் அனைத்தையும் தகர்த்த மகிழனையும் அவனுக்கு ஆதரவளித்த அவன் குடும்பத்தையும் தன் குடும்பத்தையும் நினைக்கும் போது, அவள் வன்மம் ஓங்கி நின்றது.

இதுவரை தான் நினைத்ததை நினைத்த கணம் அடைந்து காட்டியவள், இன்று தான் மகிழனிடம் தோற்றுப் போனதை நினைக்க நினைக்க, அவளுக்குள் ஆத்திரம் கனன்று கொண்டு வளர்ந்தது.

அவளைக் கடந்து செல்லும் மகிழனைக் காணும் போதெல்லாம், எதிலோ தோற்று விட்ட ஏமாற்றம் அவளைக் கொன்றது.

இங்கே ஒருத்தியின் பழியுணர்ச்சியைக் கண்டு கொள்ளாமல், தன் மனம் கவர்ந்தவளின் வருகைக்காகத் திருமண மண்டபத்தில் வாசலில் ஒரு கண்ணை வைத்துக் கொண்டு திருமண வேலைகளை மும்முரமாகச் செய்து கொண்டிருந்த மகிழனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவன் போளுவாம்பட்டியிலிருந்து கிளம்பும் நாள் காலை தம்பியப்பனையும், சின்னக் கண்ணுவையும் பத்திரிகை வைத்துத் திருமணத்திற்கு அழைத்திருந்தான்.



அவன் அழைப்பை ஏற்றுத் திருமணத்திற்குக் கண்டிப்பாக வருவதாகச் சொல்லி அவனுக்கு விடை கொடுத்த பின்தான் சின்னா மகளைத் தேடிப் பின்பக்கமாக வந்தது.

ஆனால், மகள் இருந்த கோலம் சின்னாவை, மகிழன் வந்த செய்தியைச் சொல்ல விடாமல், மகளின் திருமணத்தைப் பற்றி யோசிக்க வைத்தது.

ஆனால், இங்கே மகிழனுக்கு நேற்று இரவு நடந்த தங்கையின் வரவேற்பில் தன்னவளின் வருகை இல்லையெனினும், அவள் பாட்டனாராவது வருவார் என எதிர்பார்த்தவனுக்கு அவரின் வருகையும் இல்லாமல் போகவே, மனதில் எழுந்த ஏமாற்றத்தை மறைக்கத் திருமண வேலைகளில் ஈடுபட்டான்.

அனைத்துச் சடங்குகளும் முடிந்து, நல்லதொரு சுபயோக தருணத்தில் அனைவரின் ஆசிர்வாதங்களோடு இளங்கோவன் மதுரிமாவின் கழுத்தில் திருமாங்கல்யத்தைச் சூடினான்.

திருமணம் முடிந்து, அதன் பின் வந்த சடங்கு களைச் சிறப்பாகச் செய்து, மணமக்களை இளங்கோவின் வீட்டில் விட்டு விட்டு, உறவினர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டு, மகிழன் தன் பெற்றோர் மற்றும் உறவினர்களோடு தங்கள் வீடு வந்து சேர மாலையானது.

இந்த இருபது நாட்களில் தங்கையின் திரும ணத்தைச் சிறப்பாக நடத்தி விட வேண்டும் என்று ஒரு அண்ணனாக எல்லா வேலைகளையும் இழுத்துப்

போட்டுச் செய்த மகிழனுக்கு மூச்சு விடக் கூட நேர மில்லை.

திருமண வேலைகள் ஒருபுறம், அலுவல்கள் ஒருபுறம் எனப் பகல் முழுவதும் வேலை வேலை என இருந்தவனுக்கு, இரவில் வரும் முல்லையின் நினைவுகளே அவனின் அன்றைய நாள் அலுப்பின் வடிகால்.

அதுவும் கடைசி நாள் அவளிடமிருந்து கிடைத்த நெருக்கமும், அவள் உதட்டில் கிடைத்த தேனமுதும் மட்டுமே அவனின் இந்த இருபது நாள் பிரிவுக்கு அவனுக்கு மருந்தாக அமைந்தது.

இன்று ஏனோ காலை தங்கையின் திருமணத்திற்குத் தன்னவளின் வரவு சந்தேகமென்றாலும், அவளது குடும்பத்தாராவது வருவார்கள் என எதிர்பார்த்தவனுக்கு, யாரும் வராமல் போகவே மேலும் மேலும் ஏமாற்றமே மிஞ்சியது.

முல்லையின் நினைவில் தன் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தவனுக்கு, என்ன செய்தும் இன்று எழும் அவளின் நினைவுகளுக்குத் தீர்வு அவளைத் தரிசிப்பதே என நினைத்தவன், படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்து மணியைப் பார்த்தான்... கடிகாரம் மாலை ஏழு எனக் காட்ட, யோசிக்காமல் தன் கார் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

இந்த இருபது நாட்களின் சோர்வு மறைந்து, தன்னவளின் முகம் காணப் போகும் சந்தோஷத்தில்



உற்சாகமடைய, அதே உற்சாகத்துடனும் உதட்டில் சிரிப்புடனும், கையில் கார் சாவியைச் சுழற்றியபடி, மாடியறையில் இருந்து இறங்கி வந்த மகனைக் கண்டு வெங்கடராமனும், கோகிலாவும் வியப்பாகப் பார்க்க, அவர்களின் பார்வைக்கு, “அம்மா... நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்... வர லேட்டாகும்...” எனச் சொல்லி விடைபெற,

“இந்த நேரத்துல எங்க ராசு போற... காலையில போகலாமே...” எனத் தடுத்த அன்னையிடம்,

“அம்மா... ரொம்ப முக்கியமான வேலை. போயிட்டு வந்துடுறேன்... நீங்க சாப்பிட்டுத் தூங்குங்க. எனக்காகக் காத்திருக்க வேண்டாம்...” என அன்பான கட்டளையுடன் விடைபெற்றுக் கிளம்பினான்.

போகும் மகனை அன்னை கவலையுடன் பார்த்தார் என்றால், அவனின் தந்தை யோசனையுடன் பார்த்தார்.

மெல்லிய விசில் சத்தத்துடன் காரை எடுத்தவனுக்கு, இந்த இரவு வேளையில் கிராமத்திலிருக்கும் திருமண மாகாத பெண்ணைக் காணச் செல்கிறோம் என்ற நினைப்பே இல்லை. அவனது காதலியின் பிரிவில் வாடியவன், இன்று எப்படியேனும் அவள் முகத்தையாவது பார்த்து விட வேண்டும் என்ற வேகம் எழ, அது கொடுத்த வெறியில் காரை வேகமாகச் செலுத்தினான்.

அவன் கார் அவர்கள் வீட்டுக் கேட்டைத் தாண்டியதும், அவனது காரைக் கடந்து வித்தியாசமான

ஹார்ன் ஒலியுடன் ஒரு பல்சர் பைக் கடந்து போக, அதன் பின்னால், 'டோன்ட் ஃபாலோ மீ...' என்ற ரேடியம் எழுத்துகள் அந்த இரவு ஒளியிலும் நன்றாகத் தெரிய, அவனைத் திட்டியபடி காரை எடுத்தான் மகிழன்.

அவன் காரை எடுத்த சில நிமிடங்களில் மழை சாரலாகப் பொழிந்து, பின் சடசடவென வேகமெடுத்தது.

இந்த இரவு வேளையில், மழைச் சாரலின் மத்தியில், காரின் ஸ்டீரியோவில் ஒலித்த அவனுக்குப் பிடித்த பாடலுடன், தன் மனதுக்கு நெருங்கியவளின் நினைவுகளுடன் வண்டியை ஓட்டுவது ஏகாந்தமாயிருக்க, அது கொடுத்த சுகத்தில் அவனின் கார் மேலும் வேகமெடுத்தது.

மழையின் காரணத்தினால் சாலையில் அதிக வாகனமில்லாமல் இருக்க, போளுவாம்பட்டி போக எடுக்கும் ஒன்றரை மணி நேரத்தை, ஒரு மணி நேரத்தில் வந்தடைந்தான்.

முல்லையின் வீட்டு முன்பிருந்த சாலை, சேறும் சகதியுமாக இருக்க, அந்த இடத்தில் அவனது ஜாகுவாரை எடுத்துச் செல்வது சரியில்லை என நினைத்தவன், காரை ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கி, காலையில் தங்கை திருமணத்திற்குக் கட்டிய பட்டு வேட்டியை மேலேற்றி மடித்துக் கட்டி, தலைக்குத் தன் கைகளைக் குடையாகப் பிடித்து, வேகமான எட்டுக்களை வைத்துச் சாலையைக் கடந்து நடை போட்டான்.



இன்னும் சில அடிகளில் முல்லையின் வீட்டை அடைந்து விடுவோமென்ற அவனின் மனதின் உற்சாகம், நடையின் வேகத்தைக் கூட்ட, சுற்றுப்புறம் மறந்து, விரைவாக நடக்க, அவனின் பின்னால் பத்தடி தொலைவில் முகமூடி யணிந்து அவனைப் பின் தொடர்ந்து வந்தவனைச் சற்றும் கவனிக்கவில்லை.

நடக்க நடக்கச் செம்மண் பாதை சில இடங்களில் சறுக்கி விட, விழாமல் தடுமாறி நடந்தவனை நெருங்கிய அந்த ஒருவன், விநாடி நேரத்தில் அவனைத் தொட்டுத் தன் பக்கம் திருப்பி, தன் கையில் வைத்திருந்த கத்தியால் மகிழனின் வயிற்றில் குறி வைக்க, அவன் திரும்பியதில் தடுதமாறிய கால்கள் வழுக்கிச் சரிய, வயிற்றில் குறி வைத்தவனின் கத்தி, அவன் வழுக்கியதில் மகிழனின் வலது முன் தோளில் ஏறியது.

நிமிட நேரத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் வலியுடன் மகிழன் மண்ணில் சரிய, குறி தப்பியதில் திகைத்த அந்த ஒருவன், மீண்டும் மகிழனை நெருங்கி அவன் நெஞ்சில் தாக்கத் தயாராக, அவனைத் தடுத்து அவன் முகத்தைப் பார்த்து விடும் நோக்கத்தில் இடது கையால் அவன் கையைப் பிடித்தவன், அடிபட்ட வலது கையால் அவன் முகமூடியைப் பிடுங்க, அரை இருட்டில் அவன் முகம் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், அவன் கழுத்தில் தொங்கிய வெள்ளிச் சிலுவை டாலர் தெளிவாகத் தெரிந்தது.

அதற்குள், "ஐயோ... மகி..." என்ற பெண்ணின் குரல் அருகில் கேட்டதை உணர்ந்த அந்த ஒருவன், விநாடியில் மகிழனின் பிடியிலிருந்து நழுவி அங்கிருந்து ஓட, அடுத்த சில நிமிடங்களில் வித்தியாசமான ஹார்னுடன் அந்த இடத்தை விட்டு ஒரு பல்சர் பறந்தது.

ஓடியவனைப் பிடிக்கத் தோன்றாமல், கொட்டும் மழையில் விழுந்தவனை நெருங்கிய முல்லை, "ஐயோ... மகி... மகி..." எனத் தன்னவனைத் தூக்கித் தன் மடியில் கிடத்தினாள்.

"உனக்கு என்னாச்சு... ஏதாவது பேசு மகி... இங்கே பாரு... உன் கொடி வந்திருக்கேன்... இங்கே பாரு மகி... ஐயோ..." என்றவள், கொட்டும் மழையிலும், இருட்டிய இரவிலும் கரைந்த அவனது உதிரத்தை உணர முடியாமல், அவனைத் தன் நெஞ்சில் தாங்கி, அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

ஒரு சில நொடிகளில் "ம்மா..." என்ற மகிழனின் முனகல் அவள் செவிகளைத் தீண்டத் தன் உணர்வு பெற்றவள், முதலில் அவனை இந்த மழையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற நிதர்சனம் உறைக்க, அவனைத் தூக்க முயன்றாள்.

அவளின் மென்னுடலுக்கு, மகிழனின் வலுவான உடலைத் தூக்க முடியவில்லை.

தோள்களில் குத்திய கத்தி சற்று ஆழமாகத் தாக்கியிருக்க, அது கொடுத்த வலியும், இருபது நாளின் உடல் சோர்வும், கடைசி இரண்டு நாட்கள் சரியான தூக்கமின்மையும், சேற்றில் வழுக்கியதில் ஆங்காங்கே ஏற்பட்ட சிராய்ப்பும் மகிழனைச் சற்றுத் துவண்டு போகச் செய்தது.



இருந்தாலும் தன்னவளின் "மகி..." என்ற அழைப்பு அவனின் செவிகளைத் தீண்டி, அவனை மயக்க மடையாமல் செய்திருக்க, தன்னவளின் முயற்சி புரிந்து, தன் முழுப் பலத்தையும் கொண்டு வந்து முல்லையின் உதவியோடு எழுந்து நின்று, அவளது தோள்களில் இடது கையைப் போட்டு மெல்ல நடைபோட்டான்.

மெல்ல மெல்ல வந்து மகிழனைத் தன் வீட்டுத் திண்ணையில் கிடத்தியவள், மெல்லிய வெளிச்சத்தில் அப்போதுதான் அவனது வலது தோளில் வழிந்த இரத்தத்தைக் கவனித்தாள்.

"ஐயோ... மகி... இரத்தம்..." என ஓங்கிக் கதறியவளின் கதறல், அந்த மழைச் சாரலில் கரைந்து போக, அவளின் கண்ணீர்க் கதறல், மகிழனின் உடல் வலியை மீறி அவனின் மனதை வலிக்கச் செய்தது.

தன்னைத் தாக்கியதை விடவும், தன்னவளைக் கதற வைத்த அந்த ஒருவன் மட்டும் இப்போது அவனின் முன்னால் நின்றிருந்தால், அவனைத் தன் கையாலேயே கழுத்தை நெரித்துக் கொலை செய்யும் வெறியில் இருந்தான்.

ஆனால், அவன் வெறியையும் மீறி, உடல் வலியும், தன்னவளின் கதறலும் அவனை நடப்புக்கு மீட்டு

வந்திருக்க, முல்லையின் கைகளைப் பற்றி, "எனக்கு ஒன்றுமில்லையடா..." எனச் சொல்லி முடிப்பதற்குள் வலியில் கண்களை மூடினான்.

"ஐயோ... ரொம்ப வலிக்குதா? இப்போ என்ன செய்ய... ஆண்டவா!" என்றவள், நொடியில் வீட்டின் உள்ளே சென்று, ஒரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து வந்தாள்.

வந்தவள், மகிழனின் கால்களைத் தூக்கித் திண்ணையில் கிடத்தி, அவள் தாத்தா உபயோகப்படுத்தும் தலையணையை அவன் தலைக்குக் கொடுத்து விட்டு, அவன் அணிந்திருந்த பட்டுச் சட்டையின் பட்டனை விடுவித்துச் சட்டையை அகற்றியவள், அவனது வலது தோளிலிருந்து சட்டையை விடுவிக்கும்போது அவன் வலியால் முனகுவதைக் கண்டு பதறியவள், அவள் எடுத்து வந்த டப்பாவில் இருந்த கத்தரிக் கோலைக் கொண்டு சட்டையைக் கத்தரித்துக் கிழித்தெறிந்தாள்.

சட்டையை எடுத்தவுடன் குத்துப்பட்ட இடத்தில் இரத்தம் வழிந்து கொண்டிருக்க, அதைக் கண்டதும் முல்லைக்கு மயக்கமே வரும் போலிருந்தது.

கஷ்டப்பட்டுக் கண்களை மூடித் தன்னைக் கட்டுப்படுத்தியவள், இரத்தம் வழிந்த இடத்தில் கைகள் நடுங்கப் பஞ்சைக் கொண்டு துடைக்க எத்தனித்தாள்.

அவளது ஒவ்வொரு ஒத்தடத்திற்கும் அவள் கண்ணை மூடி, "ஸ்... ஸ்..." என்றது, அந்த நேரத்திலும் மகிழனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.



அவனது சிரிப்பைக் கூட மனதில் பதிய வைக்காமல், கருத்தாக அவனது காயத்தைத் துடைத்து எடுக்க, நிற்காமல் இரத்தம் வழிந்தது.

"ஐயோ... ஆண்டவா! இரத்தம் நிற்காமல் வருகிறதே... என்னங்க... ஆஸ்பத்திரிக்குப் போகலாமா... இரத்தம் நிற்கவே மாட்டேங்குது... எனக்குப் பயமா இருக்கு..." எனக் கலங்கிய முல்லையின் கையைத் தன் இடது கையால் பற்றியவன்,

"இந்த மழையில் எப்படிடா போகிறது...? நான் சமாளிச்சுக்குவேன். நீ அழாதே...!" என்றவன், அதிகமாக வெளியேறிய இரத்தத்தின் விளைவால் அவன் கண்கள் செருக, மயங்கிக் கண் மூடினான்.

அவன் மயக்கத்தைக் கண்டு மேலும் பதறியவள், எப்படியாவது அவனின் துயரத்தைப் போக்கும் உந்துதலில் நிறையப் பஞ்சுகளை வைத்து இரத்தத்தைத் துடைத்து, வெள்ளைத் துணியால் தனக்குத் தெரிந்த அளவில் கட்டுப் போட்டாள்.

மழை நின்றதும் பக்கத்தில் இருக்கும் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என நினைத்தவள், இரத்தத்தில் நனைந்த பஞ்சை அகற்றும் போது அவள் கண்கள் கசிந்தன.

வலியுடன் அனைத்தையும் ஓரங்கட்டிப் போட்டவள், உள்ளே சமையலறைக்குச் சென்று சுக்குக் காபியைத் தயாரித்து எடுத்து வந்து, தலையணையில் படுத்திருந்த வனைத் தன் தோள்களில் சாய்த்து மெல்லப் புகட்டினாள்.

மகிழன் இந்தத் தருணத்தில் வலியையும் மீறி, முல்லையின் காதலில் உருகிப் போனான். அதைக் குடித்த பின் மீண்டும் அவனைப் படுக்கையில் கிடத்தியவள், வெளியே எட்டிப் பார்க்க, மழை விடுவதற்குப் பதிலாக இன்னமும் வலுத்தது.

இந்த மழையில் மகிழனை வெளியில் திண்ணையில் படுக்க வைப்பது அவ்வளவு நல்லதாகப் படாததால், "மகி... இங்கு மழை இன்னமும் விடலை... இங்கேயே படுத்தால் ரொம்பக் குளிரும். உள்ளே வந்து படுத்துக்கோ..." என மெல்லிய குரலில் அவன் காதுகளில் சொன்னவள், அவன் கையைப் பிடித்து எழுப்பி, மெல்ல நடத்தித் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அரை மயக்கத்திலிருந்த மகிழனுக்கு, முல்லையின் ஒவ்வொரு செயலும் அந்த நேரத்திலும் அவன் ஆழ் மனதில் பதிந்தது.

அவளுடனே வந்தவன், அவள் காட்டிய படுக்கையில் படுத்துக் கொண்டான். அந்த நாளின் அதிக உழைப்பாலும், உடல் சோர்வாலும் கண் மூடினாலும், உடலில் ஏற்பட்ட காயத்தின் வலி அவனைக் கண்ணுறங்க விடவில்லை.

என்ன சமாளித்தும் நேரம் செல்லச் செல்ல உடல் வலி பெருகியதே ஒழிய, அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

வலியில் கண்ணை மூடி, "அம்மா..." என்று கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்த, அதைப் பார்த்த முல்லைக்கு அவள் நெஞ்சை யாரோ கசக்கிப் பிழிந்தது போல் வலியெடுக்க, அவனது வேதனையைக் காணச் சகிக்காமல் ஓடிச் சென்று தன் தாத்தா உபயோகப்படுத்தும் தூக்க மாத்திரையில் ஒன்றை எடுத்து வந்து அவன் வாயில் போட்டு, வெந்நீரைக் குடிக்கக் கொடுத்து, அவன் தலையை வருடிக் கொடுக்க,



அந்தச் சுகத்திலும், தன்னவளின் அருகாமையின் நிம்மதியிலும் அமைதியாகக் கண்ணை மூடினான்.

எத்தனை ஆசைகளுடன் தன்னவளைக் காண வந்தவனுக்கு, அவளின் வேதனை சுமந்த முகத்தைப் பார்க்க வைத்த அந்த முகம் தெரியாத ஒருவனை எப்படியேனும் கண்டுபிடித்து விட வேண்டுமென்ற உறுதி, அவன் கண்கள் உறக்கத்தில் மூடும் முன் பிரதிபலித்தது.

இத்தனை நாள் தன்னுள்ளிருந்த மனக் குழப்பத்தில் இருபது நாட்கள் உறக்கத்தைத் தொலைத்திருந்தாள், முல்லை. இன்று தன்னவனின் நிம்மதியான உறக்கமும், இந்த நிலையிலும் குலையாத அவன் கம்பீரமும், அவனின் நெருக்கமும் கண்டவளுக்கு, அப்போதைக்கு மனதில் எந்த எண்ணமும் இல்லை.

அவனின் இடது கையைத் தன் கைக்குள் அடக்கி அவனுடனே கட்டிலில் தலை சாய்த்து உறங்கினாள்.

நிம்மதியான உறக்கத்திலிருந்தவர்களை அதிகாலையில் வீட்டு வாசலில், "அடிப்பாவி மகளே...!" என்ற சின்னாவின் குரல் கலைத்தது.

"சீச்சீ... இன்னும் ரெண்டு நாளில் என் அண்ணனோட கல்யாணத்தை வெச்சிக்கிட்டு, ராத்திரி பூரா இன்னொருத்தனோட குடும்பம் நடத்திக்கிட்டு இருக்காளே உங்க மக... இவ எல்லாம் மானமுள்ள பொண்ணா...?" என்ற புவனாவின் குரலில் முதலில் எழுந்தது மகிழன் தான்.

சின்னாவின் குரலிலே கண் விழித்தெழுந்த மகிழன், புவனாவின் குரலில் முற்றிலும் தூக்கத்தைத் தொலைத்துக் கட்டிலை விட்டு எழுந்தவன், பக்கத்தில் குழந்தை போல் தன் கையைப் பிடித்துக் கொண்டு படுத்திருந்த முல்லையைக் கண்டு ஒரு நொடி மனம் இளக, புவனாவின் கேவலமான பேச்சு அவனை வெளியே வர வைத்தது.

## 15

திருத்தேகம் எனக்காகும்! தேனில்
நனைந்தது என் உள்ளம்!
பொன்னாரம் பூ வாழை ஆடும்
தோரணம் எங்கெங்கும்
மாலை சூடும் மங்கையிடம்...
அந்நேரம் மங்கள வாழ்த்தொலி கீதம்!

**சி**ன்னா ஏற்கெனவே யூகித்தது உண்மை என்பது, மகிழன் மற்றும் முல்லையின் சில பல நடவடிக்கைகளைக் கொண்டு உறுதி செய்தவர், அன்று இரவே தன் மாமனாரிடம் பேசி விட்டார்.



முதலில் யோசித்த தம்பி, பின்னர் தான் கண்ணை மூடும் முன் தன் பேத்திக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திருமணத்திற்குச் சம்மதித்தார்.

இருந்தாலும் பேத்தியின் விருப்பத்தைப் பற்றிக் கேட்க, "அவளுக்கு என்ன தெரியும் மாமா... அவளே சின்னப் புள்ள... உடுத்தற துணியைக் கூட நம்மைக் கேட்டுக்கிட்டுதான் போடுவா... வாழ்க்கையைப் பற்றி அவளுக்கு என்ன மாமா தெரியும்...?" எனக் கவனமாக, அவள் மேலே படிக்க விருப்பப்பட்டதை மறைத்து அவரிடம் சொல்ல,

"இருந்தாலும் சின்னா... முல்லை இந்தக் காலத்துப் புள்ள... அதுக்குன்னு ஏதாவது விருப்பம் இருக்குமில்லையா...?" என்றவரிடம்,

"அது என்ன விருப்பம்...? எம் புள்ள அப்படியெல்லாம் இல்லீங்க மாமா... ஆத்தா பேச்சைக் கேட்டு நடந்துக்குவா... நீங்க முல்லையைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாதீங்க மாமா... நான் அவ கிட்டப் பேசிக்கிறேன். முதல் வேலையா காலையிலேயே கோவிந்தண்ணன் கிட்ட பேசுவோம்... சீர்காழிக்கு இன்னும் வேற எந்த வரனும் அமையலை..." என்று அத்துடன் பேச்சை முடித்தார்.

சின்னாவுக்குத் தம்பியைப் பற்றி நன்கு தெரியும். அவர் அனைத்தையும் முற்போக்குச் சிந்தனையுடன்தான் பேசுவார். இவரின் பேச்சைக் கேட்டு மகளிடம் பேசி,

அவள் ஏதாவது ஏடாகூடமாகச் சொல்லி விட்டால்... அதன்பின் நடக்கப் போவதை அவரால் யோசனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை.

சின்னாவின் கணவர் இறந்த ஒரு சில நாட்களிலேயே அவளின் குடும்பத்தாரும், தம்பியப்பனும், சின்னாவை மறு கல்யாணத்திற்கு எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் சம்மதிக்கவில்லை. குடும்ப கௌரவம், தன்மானம், அடுத்தவர்களின் விமர்சனம் இவற்றிற்குப் பயந்தே தன் இளமையை மகளுடன் கழித்தார்.

அப்படிப்பட்டவர், தன் மகள் காதல் கீதல் என்றால், நிச்சயமாக அதன் பிறகு இங்கிருக்கும் ஊர் ஜனங்களுக்கு முன் தலை நிமிர்ந்து நடப்பது முடியாத காரியம் என்று நினைத்தார். நினைத்தபடியே மகளிடம் விருப்பத்தைக் கேட்கும் மாமனாரின் யோசனையைக் கிடப்பில் போட்டார்.

பேசியது போலவே அடுத்த நாள் காலை, அவர்களிடம் ஏற்கெனவே முல்லையைப் பெண் கேட்ட கோவிந்தனின் மகன் சீர்காழியை மகளுக்குப் பேச ஆயத்தமாயினர்.

முடிவு செய்தபடியே அடுத்த நாள் காலை சின்னாவும், தம்பியும் கிளம்பி விட்டனர். முல்லை இருந்த மனக் கவலையில், இவர்களின் இந்த ஏற்பாடு எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. தன் கேள்விகளுடனும், கவலைகளுடனும் தன் அறையில் முடங்கிக் கிடந்தாள்.

அவர்கள் நினைத்தது போலவே சீர்காழியின் தந்தை கோவிந்தனுக்கு இவர்களின் சம்மதம் பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது.



முல்லையைப் பெண் கேட்டு, இவர்கள் அவள் படிப்பைக் காட்டி மறுத்தபின், கோவிந்தன் தன் மகனுக்கு வேறு எந்தப் பெண்ணும் அமையாமல் போக, தாங்கள் முதலில் கேட்ட பெண்ணே மீண்டும் அமைவதில் அவருக்கு மிகுந்த சந்தோஷம்.

உற்சாகத்துடன் தம்பியின் கையைப் பற்றிக் கொண்டவர், "அட பாருங்க... நம்ம மகனுக்கு உங்க பேத்திதான்னு ஆண்டவன் எழுதி வெச்சுட்டான் போல... அதான் ஒரு வருஷம் தள்ளிப் போயும் ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிய இருக்குதுங்க... இதுல எனக்கு ரொம்ப சந்தோஷம்ங்கய்யா..." என்றவர், பின் மகனிடம் திரும்பி, "என்ன சீர்காழி... உனக்கு முல்லையைக் கட்டிக்கச் சம்மதமா...?" என்று கேட்க,

அவன் சிறு வெட்கத்துடன், "ம்ம்... சரிப்பா...!" எனத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

யாருக்குத்தான் அந்த அழகுக் குவியலைப் பிடிக்காமல் போகும். சீர்காழிக்குப் பார்த்த முதல் பெண்ணே தன் மனைவியாகப் போவதில் பேரின்பம்.

ஊரில் உள்ளவர்கள் அனைவரிடமும் குறும்பு பேசி அனைவரையும் கேலி கிண்டலில் சிரிக்க வைக்கும் அவளைப் பிடிக்காமல் இருக்குமா?

அவள் இருந்தாலே அந்த இடத்தில் சந்தோஷத்திற்குப் பஞ்சமிருக்காது என்பதை அறிந்தவனே. சீர்காழி இப்போதிருந்தே கல்யாணக் கனவில் மிதக்க ஆரம்பித்து விட்டான்.

மகனின் முகத்தில் தெரிந்த புன்னகையில் திருப்தியுற்ற கோவிந்தன், பின் திரும்பி தம்பியப்பனிடம், "பையனுக்கு ஏற்கெனவே ஒரு வருஷம் தள்ளிப் போயிடுச்சு... அதனால... கல்யாணத்தை வர்ற முகூர்த்தத்திலேயே வெச்சிக்கலாமுங்கய்யா..." என்றார்.

அவர் இப்படிச் சொன்னதும், தம்பிக்கு யோசனையாகிப் போனது. 'வர்ற முகூர்த்தம் என்றால் எப்படியும் அடுத்த ஒரு மாதத்தில் இருக்கும்... அதற்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட முடியுமா?' என்ற கவலையிருக்க, சின்னாவோ இந்தத் திருமணம் எவ்வளவு விரைவில் நடக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தனக்கு நிம்மதி என்று எண்ணியவர், தம்பிக்கு முன்னரே தன் பேச்சை ஆரம்பித்தார்.

"அதுக்கு என்ன அண்ணே! எப்போது இருந்தாலும் புள்ளைக்குச் செய்ய வேண்டியதைச் செய்துதானே ஆகணும்? நீங்க சொன்னது போலவே வர்ற முகூர்த்தத்துல வெச்சிக்கலாம்..." என்று கோவிந்தனிடம் ஆரம்பித்து, பின், "என்ன மாமா யோசிக்கிறீங்க... காலண்டரை எடுத்து நல்ல நாளாகப் பாருங்க..." எனத் தன் மாமனாருக்கும் சேர்த்துத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

சின்னா இந்த அளவுக்குத் தீவிரமாக இருப்பது, தம்பிக்குச் சற்று ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், சரி என்று அடுத்து வந்த இருபத்து ஐந்து நாட்களில் முல்லைக்கும், சீர்காழிக்கும் திருமணத்தைத் தங்களின் குலதெய்வக்



கோயிலில் வைப்பதாகவும், அதற்கு முந்தினம் ஊர்க் கோயிலில் உப்பு ஜவுளி மாற்றித் திருமணம் நிச்சயிக்கப்படும் என்றும் முடிவு செய்தனர்.

அவர்களிடம் பேசி விட்டு வீட்டுக்கு வரும் வழியில், "என்ன சின்னா... கல்யாணத்துக்கு இன்னும் முழுசா ஒரு மாசம் கூட இல்ல... அதுக்குள்ளாற எல்லா ஏற்பாடுகளையும் செய்ய முடியுமா?" என்று தன் கவலையைத் தெரிவிக்க,

"எல்லாம் முடியும் மாமா... நமக்கு இருக்கிறது ஒரே புள்ள... என்னோட நகை எல்லாமே அவளுக்குத்தானே! கல்யாணச் செலவுக்குப் பேங்க்ல என் கணக்குல கொஞ்சம் பணம் இருக்கு. நம்ம புள்ளை கல்யாணத்தைச் சிறப்பாகச் செஞ்சிடலாம். நீங்க எதுக்கும் கவலைப் படாதீங்க..." என உறுதியுடனும், நம்பிக்கையுடனும் சொல்ல, அதே உறுதியும், நம்பிக்கையும் தம்பியப்பனையும் தொற்றிக் கொண்டது.

அடுத்த அரை மணி நேரத்தில் அந்த ஊர் முழுவதும் விஷயம் பரவிவிட, அனைவரின் முகத்திலும் சந்தோஷம் குமிழிட்டது. அந்த ஊரில் ஒருவருக்கு ஒருவர் எப்படியேனும் மாமன் மச்சான் உறவுக்குள் வந்து விடுவார்கள். இரத்த சம்பந்தம் இல்லையென்றாலும் ஒருவரை ஒருவர் முறை வைத்து உரிமையுடன் அழைக்கும் பழக்கம் உள்ளவர்கள்.

அப்படிப் பார்த்தால் கோவிந்தன் மகன் சீர்காழி, புவனாவின் ஒன்று விட்ட அண்ணன் முறையாகிறது. தன்

அன்னையின் மூலம் முல்லை - சீர்காழியின் திருமண ஏற்பாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டவள், 'அடிப்பாவி... நேற்று ஒருத்தனைக் கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்திட்டு, இன்னிக்கு என் அண்ணனோட கல்யாணமா உனக்கு...? வெட்கங் கெட்டவளே... மவளே! மாட்டினேடி நீ...' என்று மனதில் முல்லையை வசை பாடி, சரியான நேரத்திற்காகக் காத்திருந்தாள்.

இங்கே ஒவ்வொருவரின் மன நிலையும் இப்படி இருக்க, இந்தத் திருமணத்திற்கு முக்கியமானவளோ இதை ஏதும் அறியாமல் இருந்தாள்.

மகிழன் தனக்குத் திருமணம் என்று சொல்லி விட்டுச் சென்ற அந்நாளிலிருந்து முல்லையின் உணர்வுகள் மரத்துப் போயிருந்தன. அன்றைய அவன் அணைப்பிலும், முத்தத்திலும் தன்னை மறந்து நின்றிருந்த மோன நிலையை நினைத்து சந்தோஷப்பட முடியாமல், அவன் நினைவில் உழன்று கொண்டிருந்தவள் அருகில் சின்னா சென்றமர்ந்தார்.

கண்மூடிப் படுத்திருந்த தன் மகளை நெருங்கியவர், "கண்ணு... முல்ல..." என்று அழைக்க, தன் நினைவுகளில் மூழ்கித் தன்னை அறியாமலேயே தூக்கத்தைத் தத்தெடுத்த முல்லை, அன்னையின் அழைப்பில் மெல்லக் கண் விழித்தாள்.

அன்னையை அருகில் கண்டதும், அவர் மடியில் தலை வைத்து, அவரின் இடுப்பைக் கட்டிக் கொண்டு மீண்டும் கண் மூடினாள்.



மகளின் அந்தக் குழந்தைத் தனத்தில் நெகிழ்ந்த அந்தத் தாய், அவளின் கூந்தலை மெல்லத் தடவிக் கொடுத்து, "கண்ணு முல்ல... கொஞ்சம் எழுந்திரிடா... அம்மா உன் கிட்டக் கொஞ்சம் பேசணும்..." என்றதும், அன்னையின் இந்த மென்மையான குரல் முல்லையை எழுப்பி விட்டது.

எழுந்தமர்ந்து, அன்னையின் எதிரில் காலைக் கட்டி, முகத்தில் தாடையைப் பதித்து, "சொல்லுங்கம்மா..." என்றதும், மகளின் முகம் வாடி வதங்கியிருப்பதைக் கண்டு சின்னாவின் மனம் துணுக்குற்றது.

மெல்ல விஷயத்தை ஆரம்பித்தார்.

"கண்ணு முல்ல... அம்மா சொல்றது எல்லாமே உன்னோட நல்லதுக்குன்னு உனக்குத் தெரியுமில்ல..." என மெதுவாகப் பீடிகை போட,

தன் அன்னை என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல், "இதிலென்னங்கம்மா சந்தேகம்...? எனக்கு எல்லாமே நீங்கதானே செய்யறீங்க..." என முடிக்க, அவள் பேச்சில் தெரிந்த வித்தியாசம் சின்னாவைக் கலவரப்படுத்தியது.

ஆனால், சொல்ல வந்ததைச் சொல்லி விட வேண்டும் என்ற உந்துதலில் தொண்டையைச் செருமிக் கொண்டு, "அதான்டா... உனக்கு அம்மாவைப் பற்றி நல்லாத் தெரியும். அதான் உனக்கு நல்ல எதிர் காலத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன் கண்ணு..." எனச்

சிறு இடைவெளி விட்டு, மகளின் முகத்தை ஆராய்ந்து கொண்டே ஆரம்பித்தார்.

"நம்ம கோவிந்தன் அண்ணன் மகன் சீர்காழி இருக்கிறார் இல்லையா... அந்தப் பையனுக்கு இன்னும் எந்த வரனும் அமையலை. உனக்கும் கல்யாண வயசு ஆயிடுச்சு இல்ல... அதான் நானும் உன்னோட தாத்தாவும் இன்னிக்குப் போய்ப் பேசி உறுதி செஞ்சுட்டு வந்துட்டோம்..." என்றார்.

அவர் முதலில் பேச ஆரம்பித்த போது இருந்த முல்லையின் முகமும், அவர் பேசி முடித்த பின் அவள் முகத்தில் தெரிந்த இறுக்கமும் சின்னாவின் மனதுக்குள் அவளை எப்படிச் சமாளிக்க வேண்டுமென்று இப்போதே கணக்குப் போட ஆரம்பித்தது.

"என்னம்மா இது...? இப்போ எனக்கென்ன கல்யாணத்து அவசரம்? நேத்துதானே உன் கிட்டே நான் படிக்கணும்னு சொன்னேன்... இன்னிக்குப் போய் எனக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டு வந்திருக்கே! அதுவும் என் கிட்ட ஒரு வார்த்தை கூடக் கேட்காம நீயே பேசி முடிச்சிட்டு வந்து இப்போ தகவல் சொல்லுற... கல்யாணம் உனக்கா எனக்காம்மா...?" என ஆவேசமாக முல்லை பேச்சை ஆரம்பிக்க, முதலில் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சின்னா, கடைசியாக அவள் கேட்டதில் கோபத்தின் உச்சிக்கே சென்றவர், அவள் கன்னத்தில் 'பளார்' என்று தன் விரல்களின் தடத்தைப் பதித்தார்.



"என்னடி பேச்சு இது... பெரியவங்க கிட்ட இப்படித்தான் பேசணும்னு உங்க பள்ளிக் கூடத்துல சொல்லிக் கொடுத்தாங்களா? இதோ பாரு... நீ மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இந்தப் பேச்சுப் பேசுறேன்னு எனக்குத் தெரியும்டி. உன்னோட நினைப்பு எதுவுமே நடக்காது முல்ல... ஒழுங்கா நான் சொல்றதைக் கேட்டுட்டு நட... இல்லன்னா நீ என்னோட இன்னொரு முகத்தைப் பார்க்க வேண்டி வரும். சொல்லிப்புட்டேன்.

"இதோ பாரு... இன்னும் இருபத்தஞ்சு நாள்ல கல்யாணத்துக்குப் பேசியிருக்கோம். உன்னோட தாத்தா கிட்டப் பேசி எதையாச்சும் தடுக்கலாம்னு நினைச்சா அப்புறம் நீ என்னை உயிரோடேயே பார்க்க முடியாது... தெரிஞ்சுக்கோ...!" என முதலில் ஆவேசமாக ஆரம்பித்தவர், முடிக்கும் சமயம் அழுதே விட்டார்.

அவளை ஒரு தீர்க்கமான பார்வை பார்த்து விட்டு, அவள் அறையில் விட்டுச் சென்றவர் மனதில், எப்படி யேனும் இந்தத் திருமணத்தை நடத்தியே தீர வேண்டும் என்று உறுதி எழுந்தது.

அன்னையின் இந்த ஆவேசத்தில் முல்லை மிரண்டே விட்டாள். அவள் பிறந்தது முதல் சின்னாவை இப்படி ஒரு பரிமாணத்தில் பார்த்ததில்லை.

அதே சமயம் திருமணம் என்பது அவள் காதில் சூடான இரும்புக் குழம்பை ஊற்றியது போல் அவள் உடலே தகித்தது.

மகிழனை மனதால் நினைத்து விட்டு, இன்னும் ஒரு மாதத்தில் இன்னொருவனுடன் தனக்குக் கல்யாணமா...! நினைத்தாலே அவள் நெஞ்சம் குமுறியது.

ஐயோ... அம்மா சொன்னாரே... நீ நினைத்தது நடக்காதென்று! அப்படியானால் அம்மாவுக்கு என்னைப் பற்றித் தெரிந்து விட்டதா? அதனால்தான் அவர் இந்தத் திருமணத்தை வெகு விரைவில் ஏற்பாடு செய்கிறார் என்று உறுதியாயிற்று. 'சே... நானே கெடுத்து விட்டேனே...!' எனத் தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

தன் நிலையை எண்ணிக் குலுங்கிக் குலுங்கி அழுதவளுக்கு, அன்னை சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதில் ஒலித்தன. அப்போதுதான் அவள் தாத்தாவின் ஞாபகம் வந்தவளாகத் தன் அறையை விட்டு வெளியே வந்தாள். வீட்டில் சின்னா இல்லை.

உடனே வீட்டு வாசலுக்கு வந்தவள், திண்ணையில் அவள் அப்புச்சியுடன் யாரோ பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"என்ன தம்பி... பேத்திக்கு நல்ல இடத்துல சம்பந்தம் பேசிட்டீங்க போல..." வந்தவர் கேட்க,

"அட ஆமா முருகா... புள்ளைக்கும் கல்யாண வயசாச்சில்ல... படிப்பையும் நல்லபடியா முடிச்சிட்டா. நான் கண்ணை மூடுறதுக்குள்ள அவளுக்கொரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்தாச்சுன்னா நிம்மதியாப் போய்ச் சேருவேன். இதுக்கு மேலே என்ன முருகா



வாழ்க்கை...?" என உணர்ச்சிகரமாகப் பேச, இதைக் கேட்ட முல்லையின் மனம் கசங்கியது.

இப்படிப் பேசுபவரிடம் போய்த் தான் என்ன பேச முடியும்? அதுவுமில்லாமல் அவர், ஏன் இந்தக் கல்யாணத்தை மறுக்கிறாய் என்றால் அதற்கு என்ன பதில் சொல்வது? நான் மகிழனைக் காதலிக்கிறேன் என்றா!

'அப்பு என்னைக் கண்டு சிரிக்க மாட்டாரா! அவனுக்கே இன்னும் இருபது நாளில் கல்யாணமாச்சே!' என்ற கழிவிரக்கத்தில் அவள் பூஞ்சை மனம் புண்ணானது.

மீண்டும் தன்னறைக்கு வந்தவளுக்கு, என்ன யோசித்தும் இந்தத் திருமணத்தை நிறுத்த எந்த வழியும் தோன்றவில்லை.

மகிழனை நேசித்த மனத்தில் வேறொருவனை நினைப்பதே பாவம் என்னும்போது, இன்னொருவருடன் திருமணம் என்பது சாத்தியமாகாத ஒன்று. பேசாமல் செத்து விடலாமா என்று கூட யோசித்து விட்டாள்.

அந்த யோசனை வந்தபோதே, தனக்காக உடலில் உயிரைச் சுமந்து கொண்டிருக்கும் அன்னையும், தாத்தாவும்தான் அவள் முன்னே வந்தார்கள்.

சின்னா கெட்டவரில்லை. தன் மகள் ஏதேனும் தவறான பாதையில் சென்று விடுவாளோ என்ற பயமே அவரை இப்படி எல்லாம் பேச வைத்தது என்பதைப் புரியாத பெண்ணல்ல முல்லை. ஆனாலும் இந்தத் திருமணத்தை அவளால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இதுபற்றி மகிழனிடம் பேசலாமா என நினைத்த போது, அவனை எப்படித் தொடர்பு கொண்டு என்ன பேசுவதென்று தெரியாமல் விழித்தாள்.

பல வழிகளில் யோசித்துத் தனக்கு இத்திருமணத்தி லிருந்து விடுதலை கிடைக்குமா என யோசித்தவளுக்கு, விடைதான் எதுவும் பிடிபடவில்லை.

தன்னால் இனி எதுவும் முடியாது என்பது போல், தம்பியும் சின்னாவும் உற்சாகத்துடன் திருமண வேலை யில் மூழ்கினர். அவர்கள் வேகத்தைக் கண்டு நாளுக்கு நாள் முல்லையின் தவிப்பு அதிகமாக, தான் எப்போதும் சரணடையும் வேம்பம்மனின் காலடியில் விழுந்தாள்.

நாட்கள் உருண்டோடின. அன்று இரவு முதலே முல்லையின் கண்கள் கண்ணீரைத் தாரை தாரையாகப் பொழிந்தன. விடிந்தால் மகிழனுக்குத் திருமணம். அதை நினைத்தபோதே, அவளை அப்போதே யாரேனும் கொன்று விட மாட்டார்களா என நினைத்து நினைத்துத் தன்னை வருத்தினாள்.

'நான் ஏனடா உன்னைப் பார்த்தேன்...?' என, மகிழனைப் பார்த்ததே பெரிய தவறென்று, மகிழனை முடிந்த மட்டும் தனக்குத் தெரிந்த வார்த்தைகளில் திட்டித் தீர்த்தாள்.

அவனை வேறொருத்தியின் கணவனாக நினைத்த போது, முல்லையின் மனதை யாரோ கத்தியால் குத்திக் கிழிப்பது போல் வலித்தது. அந்த மரண வலியைத் தாங்க முடியாமல் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள்.



அழுது அழுது ஓய்ந்த கண்கள், எனக்குக் கொஞ்சம் ஓய்வு கொடேன் எனக் கெஞ்சி அவளை அறியாமலேயே தூக்கத்தைத் தழுவச் செய்தன.

காலை முல்லை விழித்த போது சின்னாவும், தம்பியும் எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கிளம்பியதைப் பார்த்ததும், நின்ற கண்ணீர் மீண்டும் உடைப்பெடுத்தது. 'ஓஹோ... என் கணவரின் திருமணத்திற்குச் செல்கிறார்கள் போல...' என வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்.

ஆம்... மகிழன் எப்போது அவளுக்குக் கணவன் ஆனான்? எப்பொழுது அவன் அவள் மனதைத் தீண்டினானோ அன்றே அவனை அவள் கண னாகத் தான் நினைத்தாள். அந்த ஒரு நினைப்பே அவளை இன்று வரை உயிர்ப்புடன் வைத்தது. அவளுக்குள் ஏதோவொரு ஓரத்தில் சின்ன நம்பிக்கை இப்போதும் இருந்தது.

அன்று காலை ஏன்தான் விடிந்ததோ என எண்ணித் தவித்தவளுக்கு, உள்ளுக்குள் ஏதோவொரு உள்ளுணர்வு உறுத்திக் கொண்டிருந்தது.

விடியற்காலையிலேயே கிளம்பிய சின்னாவுக்கு, மகளின் முகத்தில் தெரிந்த வேதனை மனதை வதைத் தாலும் இறுக்கத்துடன், "முல்ல... நானும் மாமாவும் பொள்ளாச்சி மாசாணி ஆத்தா கோயில் வரை போயிட்டு, அங்கே நம்ம சொந்தத்துக்குப் பத்திரிகை வெச்சுட்டுச்

சாயந்திரமா வர்றோம். கோயில்ல ஒரு சின்னப் பூஜைக்கு ஏற்பாடு செய்திருக்கு கண்ணு... நான் போகும்போது மாராத்தாக்கா கிட்டச் சொல்லிட்டுப் போறேன்... அக்கா வந்து உனக்குத் துணையா இருக்கும்...” எனத் தகவல் கொடுக்க, முல்லைக்கு மனம் சற்று நிம்மதியடைந்தது.

‘ஹ்ம்... என் அம்மா என் புருஷனின் கல்யாணத்துக்குப் போகவில்லை...’ என்று வந்த நிம்மதி.

அதற்குப் பின் அவர்கள் இருவரும் விடைபெற்றுச் செல்ல, அவர்களுக்கு விடை கொடுக்க வீட்டுத் திண்ணையின் தூணைப் பிடித்து நின்றவள், அப்போது தான் பார்த்தாள்... விட்டத்தில் வைத்திருந்த பத்திரிகையை.

இத்தனை நாள் கண்ணுக்குத் தெரியாத பத்திரிகை இன்று அவள் கண்ணில் பட்டது. ஏதோ உள்ளுணர்வில் அதை எடுத்துப் பார்த்தாள். அந்தப் பத்திரிகையைப் பார்த்ததுமே முல்லைக்குத் தெரிந்து விட்டது அதன் செழுமை, அது நிச்சயமாகத் தங்கள் ஊரில் இருந்து வந்ததில்லை என்பது.

எடுத்துப் பார்த்தவளுக்கு, அதில் மணமக்கள் பெயர் கூடக் கண்ணில் படவில்லை. அதற்குக் கீழே மணமகளின் அண்ணன், ‘மகிழன் வெங்கட்ராமன்’ என்பதைப் பார்த்ததும், முல்லையின் சந்தோஷத்தை வார்த்தைகளால் வடிக்க முடியுமா?

அவளுக்கு வாயை விட்டு அழத் தோன்றவில்லை... கத்திக் கூப்பாடு போட முடியவில்லை. எந்த உணர்வையும் காட்ட முடியாத ஒரு சந்தோஷம் அவள் முகத்தில் தெரிந்தது.



எத்தனை அழுகையைச் சிந்தினாள்...!

அவனின் அணைப்பில் தெரிந்த காதலைக் கூட உணர முடியாமல் எத்தனை மூடத்தனமாக நினைத்துத் தன்னை வருத்திக் கொண்டு மனதினுள் அவனை வசைபாடிக் கொண்டு... எதையும் தீர விசாரிக்காமல் தான் செய்ததை நினைத்து அவளுக்கே வெட்கமாக இருந்தது.

இப்போது, ‘அவன் தன்னுடையவன்’ என்ற நினைப்பும், அது கொடுத்த சந்தோஷமும் அவளுக்கு அமைதியைக் கொடுத்தது.

மகிழனுக்குத் திருமணமில்லை என்பதை அறிந்ததும், தனக்கு நடக்கவிருக்கும் திருமணத்தைப் பற்றி அவள் சற்றும் கவலைப்படவில்லை. நிச்சயம் மகிழன் வருவான் என உறுதியாக நம்பினாள். அந்த நம்பிக்கையில் அன்று முழுவதையும் கழித்தாள்.

வெளியே சென்ற அன்னையும், தாத்தாவும் மழையில் மாட்டிக் கொண்டதாகவும், அங்கே மரங்கள் விழுந்ததில் போக்குவரத்துத் தடையாகிப் போனதால் அவர்கள் பொள்ளாச்சியிலுள்ள அவர்களின் உறவினர் வீட்டில் தங்கி விட்டு, விடியற்காலையிலேயே வந்து விடுவதாகவும் தகவல் அனுப்பினர். அதுவரை மாராத்தாவைத் துணைக்கு வைத்துக் கொள்ளுமாறு சின்னா கவலையுடன் தெரிவித்தார்.

முல்லையின் துணைக்கு இருந்த மாராத்தா, இரவு உணவைச் சமைத்து விட்டு வருவதாகச் சொன்னவர், அதிக மழையால் தன் வீட்டிலேயே தங்கி விட்டார். அவர் போனதும் திண்ணையில் அமர்ந்து மழையின் ஆர்ப் பரிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தவள் கண்ணில் பட்டது, கம்பீர நடையுடன் நடந்து வந்த மகிழன்தான்.

அவள் நம்பிக்கை பொய்க்கவில்லை என்பது போல மகிழன் அவள் வீட்டை நோக்கி வருவதைத் தன் கண்ணில் வழிந்த ஆனந்த நீருடன் பார்த்துக் கொண்டிருந்தவள், அடுத்து நடந்த சம்பவத்தில் விதிர்த்துப் போனாள்.

அதன் பின் நடந்தவை அனைத்தும் நொடியில் நடந்து விட, அன்று இரவு அவள் கண்ணுக்குத் தெரிந்தது அவள் உயிரின் உயிரான மகிழன் என்பவன் மட்டும்தான்.

இத்தனை நாள் கிடைக்காத நிம்மதியான உறக்கத்தை மகிழனின் நெருக்கத்தில் உணர்ந்தவள், தூரத்தில் எங்கேயோ அவள் காதுகளில் அவள் அன்னையின் கூச்சல் குரல் கேட்டுக் கண் விழித்தவள், முதலில் தேடியது மகிழனைத்தான். அவனைத் தன் கட்டிலில் காணவில்லை என்றதும் பயந்து சட்டென எழுந்தவளுக்கு, அன்னையின் அழுகை வாசலைத் தேடி விரைந்து வர வைத்தது.

வீட்டு வாசலில் வெற்று மார்புடன், நேற்றிரவு இவள் கட்டுப் போட்ட இடத்தில் இரத்தக் காயத்துடனும், நேற்றுக் கீழே விழுந்ததில் ஆங்காங்கே சேறு பட்ட பட்டு



வேட்டியுடனும் நின்று கொண்டிருந்த மகிழன்தான் கண்ணில் பட்டான்.

அவனுக்கு ஒன்றுமில்லை என்றதும்தான், அழுது கொண்டிருந்த அன்னையைக் கண்டவள், அதன்பின் வீட்டு வாசலில் கூடியிருந்த அத்தனை கூட்டத்தைக் கண்டு பயந்தவள், மகிழனின் முதுகுக்குப் பின்னால் மறைய, அதைக் கண்ட சின்னா வெகுண்டார்.

வேக நடையிட்டு அவர்கள் அருகில் வந்தவர், “அடிப்பாவி மகளே! இப்படி நம்ப வெச்சுக் கழுத்தை அறுத்திட்டியேடி...” என மகளின் கையைப் பற்றி முன்னாடி இழுத்து வந்து அவள் கன்னத்தில் அறையக் கையை ஓங்க, நொடியில் சுதாரித்த மகிழன், அவரின் ஓங்கிய கையைப் பற்றித் தடுத்தான்.

தடுத்த அவனைக் கண்ணில் கொதிப்புடன் பார்த்த சின்னாவின் பார்வையை நிமிர்ந்த கம்பீரப் பார்வையுடன் சந்தித்தான் மகிழன்.

## 16

வரும் வழியில் பனி மழையில்...
பருவ நிலா தினம் நனையும்!
முகிலெடுத்து முகம் துடைத்து
விடியும் வரை நடை பழகு!
வானவீதியில் மேக ஊர்வலம்...
காணும் போதிலே ஆறுதல் தரும்...
பருவ மகள் விழிகளிலே கனவு வரும்!

விடியற் காலையில் முதல் பஸ் பிடித்து வந்த சின்னாவும், தம்பியும் வீட்டை நெருங்கும் முன்னரே தங்கள் வீட்டின் முன்னர் கூட்டமாக நின்றிருந்த ஊர் மக்களைக் கண்டு வேகமாக அங்கே வந்து சேர, வீட்டுத் திண்ணையில் மாராத்தா அங்கிருந்த பெண்களிடம் ஏதோ பேசிக் கொண்டிருப்பதும், அங்கிருந்த கோவிந்தன் குடும்பத்தினரிடம் புவனா அவள் மொபைலில் எதையோ காட்டிக் கொண்டிருக்க, அதன்பின் சில நொடிகளில் அவர்கள் அனைவரின் முகமும் இறுக்கத்துடன் காணப் பட, ஏதோ விபரீதம் என்று பதட்டமாக அங்கே வந்த சின்னாவிடமும் அவள் செல்போனிலிருந்த வீடியோ காட்சி காட்டப்பட்டது.

அந்தப் படத்தைப் பார்த்துச் சின்னா தன் குரலை உயர்த்திக் கத்தவும், அதன்பின் அவர்கள் வீட்டிலிருந்து வெற்று மார்புடன் மகிழன் வரவும், அவன் பின்னாலே கலைந்த தலையுடனும், கசங்கிய உடையுடனும், கண் களில் கலையாத தூக்கத்துடனும் வந்த மகளைக் கண்டு பெற்ற வயிறு பற்றி எரிய அருகில் வந்தார் சின்னா.

வெற்று மார்புடன் இருந்த மகிழன் மட்டுமே தெரிந்த அவருக்கு, அங்கு நடந்த குழப்பத்தில் அவன் தோள் களில் போட்டிருந்த கட்டுகளும், அவன் கை, கால்களில் தெரிந்த சிராய்ப்பும் சத்தியமாகத் தெரியவில்லை.

அவர் தன் ஆத்திரத்தைத் தன் மகளிடம் காட்டும் முன்னர் அதைத் தடுத்துச் சின்னாவின் தீப் பார்வையைச் சளைக்காமல் சந்தித்த மகிழனின் நிமிர்வைக் கண்டு சின்னா ஒரு நொடி தடுமாறித்தான் போனார்.



ஆனால், அவரின் தடுமாற்றத்தைத் தடுக்கவென ஒலித்தது புவனாவின் கீச்சுக் குரல். "பார்த்தீங்களா சித்தப்பா... இந்தக் கேடு கெட்டவ செஞ்ச வேலையை...! இவ காலேஜ் படிக்கும்போதுமே ரொம்பத் திமிராத்தான் அலைவாளுங்க சித்தப்பா... ஊர்லேயே ஆம்பளை பொம்பளை வித்தியாசம் இல்லாம பாவாடையைத் தூக்கிட்டுச் சண்டைக்குப் போறவதானே இவ... சண்டி ராணி...

"அன்னிக்கு இவங்க விஷயம் தெரிய வந்தபோதே நான் உங்க கிட்டச் சொல்லியிருக்கணும்... சரி, ஏதோ வயசுக் கோளாறுல அப்படிப் பண்ணிப்புட்டா... கல்யாணம் ஆனா மாறிடுவான்னு நினைச்சேன்... ஆனாலும் இவளுக்கு எத்தனை நெஞ்சழுத்தம் இருந்தா ஒரு ஆம்பளையோட ராத்திரி பூராக் கொட்டமடிச்சிருப்பா... இதுங்களைப் பார்த்தாலே தெரியலை... ராத்திரி என்ன நடந்திருக்கும்னு..." என எரிகிற கொள்ளியில் மேலும் எண்ணெயை ஊற்றிக் கொண்டிருந்தாள்.

"அதனாலதான் இவளை நீங்க அண்ணனுக்குப் பொண்ணு பார்த்திருக்கேன்னு சொன்ன போது நான் யோசிச்சேன். கடைசியில நான் நினைச்ச மாதிரியே பண்ணிட்டாளே... எப்போடா சமயம் கிடைக்கும்னு காத்திட்டு இருந்திருப்பா போல... ஹ்ம்..." என ஏளனப் பார்வையுடன் புவனா, மகிழனையும் முல்லையையும் ஏறிட, அவள் பார்வையும், அவள் பேசும் பேச்சும் தாங்க முடியாமல் முல்லை தலை குனிந்தாள் என்றால்,

மகிழனோ, 'இன்னும் நீ எவ்வளவு பேசுவியோ பேசு...' என்பது போல் அமைதியாக இருந்தான்.

புவனா தன் வாயில் வந்ததை எல்லாம் புலம்பிக் கொண்டிருக்க, அவள் வார்த்தைகளைச் சகிக்க முடியாமல், இப்படிப்பட்ட பேச்சைத் தன்னைக் கேட்க வைத்த மகளையே கொலை வெறியுடன் பார்த்தார் சின்னா.

அந்த ஊரில் பல வருடம் போஸ்ட்மேனாக வேலை பார்த்து, அங்கிருந்த அத்தனை மக்களின் நட்பினைப் பெற்ற தம்பியப்பனுக்கு அடுத்தவர் கொடுக்கும் மரியாதை அங்கிருக்கும் அனைவரும் அறிவர். பெரியதாகச் சொத்துப் பத்து இல்லையென்றாலும் அவருக்கென்று அங்கொரு நற்பெயர் இருந்தது.

அவரைப் போலவே அவரின் ஒரே மருமகளான தன்னால் அவரின் நற்பெயருக்கு எந்தக் களங்கமும் வந்து விடக் கூடாதென்று சின்னா, தான் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் கவனத்துடன் செயல்படுவார். இத்தனை நாட்கள் சின்னக் கண்ணு என்றால் அந்த ஊரில் இருக்கும் பெரியவர்கள் முதல் சிறியவர் வரை அவரின் நல்லொழுக்கத்திற்கு நிறைய மரியாதை உண்டு.

அப்படிப்பட்டவரின் மகள், இன்று தன்னை இந்த ஊர் மக்களின் முன் கேவலப்பட்டு நிற்க வைத்ததைத் தாங்க முடியாதவராகத் தலை குனிந்து நின்றார்.

அவளையே உயிரும், உலகமுமாக நினைத்து வாழ்ந்த அவரால், இப்போது நடப்பதைச் சற்றும்



ஜீரணிக்க முடியவில்லை. தன் கோபத்தையும் காட்ட முடியாமல், அடுத்தவர் பேசும் பேச்சையும் கேட்க முடியாமல், "அடிப்பாவி! நான் உனக்கு என்னடி குறை வெச்சேன்... உன்னை என் கையில ஒப்படைச்சுட்டு உங்கப்பன் போனப்பவே நானும் போயிருந்தா இன்னிக்கு இந்த மாதிரிப் பேச்சைக் கேட்டிருப்பேனா?

"இனிமேல் நீதான் என் வாழ்க்கைக்கு ஆதாரம்... உன்னைச் சுத்தித்தான் என்னோட சந்தோஷம்னு வாழ்ந்த என்னையே இப்படித் தலை குனிய வெச்சிட்டியே நீ... ஏன்டி... ஏன் இப்படிச் செஞ்சே...?" என மடிந்து அமர்ந்து, தன் மனதின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் அழுதே விட்டார்.

அவரின் அழுகையைக் காணப் பொறுக்காத முல்லை, வேகமாக அவரை நெருங்கியவள், "அம்மா... சத்தியமா நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லம்மா... மகி... அவருக்கு நேத்து..." என அவள் ஏதோ சொல்ல வருமுன், தன் கையைப் பிடித்திருந்தவளை வேகமாகத் தள்ளி விட்டவர்,

"சீ.. வாயை மூடுடி சண்டாளி. நீ சொல்றதை எல்லாம் நாங்க அப்படியே நம்பணும்னு நினைக்கிறியா? அதான் உன் வண்டவாளம் எல்லாம் இந்த ஊருக்கே தெரிஞ்சுடுச்சே! அடியே பாதகி! நீயும் இதோ இங்கே நிற்கிறானே இந்தப் பணக்காரனும் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சிக்கிட்டதை இதோ இங்கே நிற்கிற புண்ணியவதி ஊரு பூராக் காட்டிட்டா... நேத்து உங்களுக்குள்ளே

ஒண்ணுமே நடக்கலைன்னாலும் இந்த ஊரு நம்பாதுடி மகளே... " எனத் தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

அவர் சொன்ன செய்தி முல்லையின் முகத்தில் மின்சாரத்தைத் தாக்க, அது கொடுத்த குற்ற உணர்வில் தலை கவிழ்ந்தாள்.

"நீ இந்தப் பையனைக் காதலிக்கிறேன்னு எனக்குத் தெரியாம இல்லை முல்ல... ஆனா இவங்க எல்லாம் பணக்காரங்கடி... பணக்காரங்களுக்குப் பணம் மட்டும் தான்டி சொத்து... ஆனா நம்மளை மாதிரி ஏழைப்பட்ட வங்களுக்கு மானம், மரியாதைதான்டி பெரிய சொத்து. அதையே இப்போ இழந்துட்டோமேடி..." என அழுது புலம்பியவர், வேகமாக அவளை நெருங்கி,

"இனி நீ உயிரோட இருந்து என்னடி பண்ணப் போற...? போ... போய் எங்காவது செத்துத் தொலை... நானும் மருந்தைக் குடிச்சுச் செத்துப் போறேன். போடி... போ! என் முன்னாடி நிற்காதே! எங்கேயாவது போய்த் தொலைடி!" அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள முயன்றார்.

அவருக்கு ஆதங்கம். இங்கே இத்தனை நடந்து கொண்டிருக்கிறது...

ஆனால் மகிழனோ எந்தச் சலனமும் இல்லாமல் கற்சிலை போல் நின்றிருப்பது, அவரின் மனதில் பணக் காரர்களைப் பற்றி நினைத்ததை உறுதிப் படுத்தியது.



ஆனாலும் தன் கௌரவத்தை விட்டு விட்டு அவனிடம் தன் பெண்ணுக்கு வாழ்க்கை கொடு எனக் கெஞ்ச அவர் துளியும் நினைக்கவில்லை.

அவன் வாழ்க்கை கொடுக்கவில்லை என்றால், நீ உன் வாழ்க்கையை விட்டு விடு என்ற பொருளோடு மகளைத் தள்ள, மகிழன் அவரைத் தடுத்தான்.

தடுத்தவன், கழுத்தில் கை வைத்துத் தள்ளிய சின்னாவின் பிடியிலிருந்து முல்லையைத் தன் கைகளுக்குள் கொண்டு வந்தவன், அங்கு கொடியில் மாட்டப்பட்டிருந்த ஒரு துண்டை எடுத்துத் தன் தோளைச் சுற்றிப் போட்டுக்கொண்டு, முல்லையையும் அழைத்துக் கொண்டு, அவ்வீட்டுப் படியை விட்டு இறங்கியவன், நேராகச் சென்றது முல்லை எப்போதும் சரணடையும் வேம்பம்மனின் கோயிலுக்குத்தான்.

அவன் எங்கே போகிறான் என அவன் பின்னா லேயே வந்த ஊர் மக்களின் பின்னால் சின்னாவும் திகைப்புடன் தொடர்ந்தார்.

நேராக வேம்பம்மனிடம் சென்றவன், ஆங்காங்கே வேப்ப மரத்தில் கட்டியிருந்த மஞ்சள் கயிற்றினில் ஒன்றைக் கழற்றி, முல்லையின் கண்களை நேராகச் சந்தித்த அடுத்த நொடி அவள் கழுத்தில் மூன்று முடிச் சிட்டிருந்தான்.

இந்த மாதிரி ஒரு நிகழ்வு நடந்தேறும் என்று அங்கிருந்த அனைவரும் சற்றும் எதிர்பார்க்கவில்லை

என்பதை அனைவரின் முகத்திலிருந்த திகைப்பு வெளியிட, முல்லையின் தோளைத் தன் இடது கரத்தால் வளைத்தவன், அங்கிருந்தவர்கள் பக்கம் திரும்பினான்.

அத்தனை நேரம் ஒரு வார்த்தை கூடப் பேசாத மகிழன், "இப்போ எனக்கும் முல்லைக்கும் கல்யாணம் ஆயிடுச்சு... நானும் இவளும் கணவன் மனைவி. இப்போது இது எங்களின் குடும்ப விஷயம். அதனால... எல்லோரும் உங்க வேலையைப் பார்க்க உங்க வீட்டுக்குப் போகலாம்," என முடித்தவன்,

அங்கு நடப்பதை வாயைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்த புவனாவைப் பார்த்து, "முல்லையைப் பத்தி எங்க வீட்ல சொல்லி, அதுக்கு அவங்க சம்மதிச்சு, எங்களுக்குக் கல்யாணம் நடக்க ரொம்ப நாள் வெயிட் பண்ணணும்னு நினைச்சேன். உங்க புண்ணியத்துல சீக்கிரமே முடிஞ்சிடுச்சு. ரொம்பத் தேங்க்ஸ் சிஸ்டர்..." என உற்சாகமாகச் சொல்ல, புவனாவோ எதையோ எதிர் பார்த்துக் காத்திருந்தவளுக்கு மூக்குடைப்பு கொடுத்தான்.

அதன்பின் அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவராகக் கலைந்து போக, கோவிந்தன் குடும்பமோ, "சே... எல்லாம் தலையெழுத்து..." எனத் தலையில் அடித்துக் கொண்டு, அங்கிருந்து கிளம்ப, புவனாவும் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

மகிழன் முல்லையின் கழுத்தில் தாலியைக் கட்டியபோதே அவ்விடம் விட்டு நகர்ந்த சின்னா, தன் வீட்டிற்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டார்.



முல்லையோ இன்னமும் நடந்த நிகழ்வுகளின் தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. நேற்றுக் காலை முதலே அவள் மனது வெவ்வேறு உணர்வுகளில் தத்தளிக்க, அவை அனைத்தும் ஒன்றுமில்லை என்பது போல், இன்று விடிந்தது முதல் அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளின் தாக்கம், மகிழன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியதும் மேலும் அதிகரித்தது.

இவன் செய்து வைத்திருக்கும் வேலையில் அவளுக்குக் கொஞ்சம் சந்தோஷம்தான் என்றாலும், இந்த முறையில்லாத் திருமணத்தில் அவளுக்குத் துளிக்கூட விருப்பமில்லை.

மாலை இல்லை... தோரணம் இல்லை... மேள வாத்தியங்கள் இல்லை... அட்சதை இல்லை... சொந்தங்களின் கேலி, கிண்டலில் முகம் சிவக்கவில்லை. அவ்வளவு ஏன்... தன்னை இத்தனை நாள் பெற்று வளர்த்த கண்ணுக்குக் கண்ணாக ஆதரித்த அன்னை, அப்புச்சியின் மனமார்ந்த ஆசிர்வாதம் இல்லை.

அதைவிட மிக முக்கியமான விஷயம், பல்லைக் கூட விளக்காமல் நேற்று அணிந்த அழுக்கு உடையுடன்... நினைத்துப் பார்க்கவே ஒரு மாதிரியாக இருந்தது முல்லைக்கு.

என்னதான் திருமணம் என்பது இரு மனங்களின் சங்கமம் என்றாலும், அது இரு குடும்பங்களின் சங்கமும் அல்லவா?

மகிழனைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்... அவன் பெரிய பணக்காரன் என்பதைத் தவிர...!

எங்கிருந்தோ வந்தான்... கண்களால் காதல் பேசினான்... என் மனதை என் அனுமதி இல்லாமலேயே கொள்ளை கொண்டான். இன்று அதே போல் என் அனுமதி இல்லாமலேயே என்னை அவன் மனைவியும் ஆக்கி விட்டான். இவன் யார்? எப்படிப்பட்டவன்? நினைத்த போதே அவனைப் பற்றிய எண்ணம் புதிராகத் தெரிந்தது.

இப்போது இவன் செய்த இந்த விளையாட்டுக் கல்யாணத்தில் மற்றவர்கள் நினைத்தது உண்மை என்றாகி விடாதா?

அதிரடியாக அவள் வாழ்வில் நுழைந்தவன்... அதைவிட அதிரடியாக அவளுக்கு வாழ்க்கையும் கொடுத்து விட்டான்.

எந்தப் பெண்ணுக்கும் தனக்கு நடக்கவிருக்கும் திருமணத்தைப் பற்றிய கனவுகள் ஏராளம் இருக்கும். முல்லையும் அதற்கு விதி விலக்கல்ல. ஆனால், அவளுக்கு இப்போது நடந்திருப்பதோ, அவளால் நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பது அவள் முகத்திலிருந்தே தெரிந்தது.

அதைவிட முக்கியமான விஷயம், ஏற்கெனவே இவன் மீது அன்னைக்கு நம்பிக்கை இல்லை... இதில் இப்போது இவன் செய்த இந்த விளையாட்டுக் கல்யாணத்தில் நிச்சயம் சின்னாவின் மனது அமைதியில்லாமல் தவிக்கும் என்று அவள் நம்பினாள்.



அட... இவை எல்லாவற்றையும் விட இவன் பெற்றோரைப் பற்றியாவது சிந்தித்தானா? இவன் அடுத்தவர்களின் உணர்வுகளைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல், எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செய்ததில் ஆத்திரம்தான் வெளிப்பட்டது.

இவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? திருமணம் என்ன சின்னப் பிள்ளைகளின் விளையாட்டா? அவள் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்த வேளை... மகிழனோ இன்று நடந்த திருமணத்தில் எதையோ சாதித்து விட்ட திருப்தியில் இருந்தவன்,

அவளை நெருங்கி நின்று, "ஹே... கேன்டி... வா. நம்ம வீட்டுக்குப் போகலாம். உங்க மம்மி எப்படியும் நம்மளை வீட்டுக்குக் கூப்பிட மாட்டாங்க. அவங்க போன வேகத்துல இப்போ நாம போனா நிச்சயம் அடிதான் விழும். வா, போகலாம்... ஆமா, எங்க உங்க தாத்தாவைக் காணோம்... நானும் அப்போதிருந்து தேடிக்கிட்டு இருக்கேன்... பார்க்கவே முடியலை..." என மகிழன் சாதாரணமாகப் பேசவும், முல்லைக்குக் கோபம் கொப்புளித்தது.

ஆனால், அவன் சொன்ன பிறகுதான் முல்லைக்கும் அவள் தாத்தாவை அப்போதுவரை காணவில்லை என்ற எண்ணம் எழ, மகிழனின் பிடியிலிருந்து விடுபட்டுத் தங்கள் வீட்டு வாசலுக்குச் சென்றாள்.

அவள் அன்னை அடைத்த கதவு இன்னமும் திறக்கப்படவில்லை. இனிமேல் அக்கதவுகள் தனக்காகத் திறக்காது என்பதை அவள் நன்கு அறிவாள்.

அப்புச்சி எங்கே...? அவரால் நிச்சயம் இவை அனைத்தையும் தாங்கிக் கொள்ள முடியாது. 'ஐயோ... என்னைப் பற்றி அவர் என்ன நினைப்பார்...?' என மனம் அடித்துக் கொள்ள, தன் அப்புச்சியை வீட்டைச் சுற்றிலும் தேடினாள். பின் ஏதோ தோன்றியவளாக முல்லை அவள் எப்போதும் விளையாடும் ஆற்றங்கரையோரம் ஓடினாள்.

அவள் நினைத்தது பொய்க்கவில்லை. தம்பி அங்கேதான் ஒரு பாறையின் மீது அமர்ந்திருந்தார்.

முகத்தில் அதிகப்படியாகத் தெரிந்த வேதனை முல்லையின் மனதைப் பிசைந்தது.

"அப்புச்சி..." என்ற கூவலுடன் அங்கே விரைந்தவள், பாறையில் அமர்ந்திருந்தவரின் கையைப் பற்றி, "அப்பு... அப்பு... என்னை மன்னிச்சிரு அப்பு. நான் சத்தியமா எந்தத் தப்பும் பண்ணலை அப்பு. எனக்கு அவரைப் பிடிக்கும்தான்... ஆனால், அவங்க எல்லாரும் சொல்ற மாதிரி நான் எந்தத் தப்பும் செய்யலை... என்னை நீயாச்சும் நம்பு அப்பு..." எனக் கதறித் துடிக்க,

அவரோ ஒரு வார்த்தையும் பேசாமல் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவளது அழுகை ஒரு கட்டத்திற்கு மேல் கட்டுப் படுத்த முடியாமல் போக, பாறையின் மீதிருந்து எழுந்தவர், "எல்லாம் சரியாகக் கொஞ்சம் நாள் எடுக்கும்மா... அதுவரைக்கும் நீ காத்திருக்கணும்..." என்ற ஒற்றை வரியுடன் அங்கிருந்து அகன்று விட்டார்.



முல்லைக்கோ மனது பெரும் பாரமாக இருந்தது. தன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அறிந்த தன் அப்புச்சியிடமாவது தன் மனதிலிருப்பதைச் சொல்லியிருந்தால், இன்று நடந்திருக்கும் இந்த நிகழ்வினைத் தடுத்திருக்கலாமே என்ற குற்றவுணர்வு அதிகமாவதை அவளால் என்ன செய்தும் தடுக்க முடியவில்லை.

அதுவரை தன் பாட்டனாரிடம் கெஞ்சிக் கொண்டிருந்த முல்லையை ஓரமாக நின்று பார்த்த மகிழன், இப்போது அவரும் அவளை விட்டு விட்டுப் போகவே, அவனுக்குக் கோபம் சுறுசுறுவென ஏறியது.

இப்போது என்ன நடந்து விட்டதென்று அனைவரும் இப்படி நடந்து கொள்கிறார்கள் என அவனுக்குப் புரியவேயில்லை.

சொல்லப் போனால் இவனுக்குத்தான் அனைவரின் மீதும் கோபம் வர வேண்டும்.

புவனா அப்போதே புலம்பியதில், மகிழனுக்கு ஒன்று புரிந்தது.

அது, இன்னும் இரண்டு தினங்களில் முல்லைக்கு வேறொருவருடன் கல்யாணம் என்பதுதான்.

முதலில் இதைக் கேட்டபோதே அவனது கோபம் முல்லையின் மீதுதான் பாய்ந்தது.

தான் அவளைக் காதலிக்கிறோம் என்பதை உணர்த்திய பின்பும், அவள் எப்படி வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள்?

அப்படி அவள் அன்னை அவளைக் கட்டாயப்படுத்தியிருந்தால், அதை உடனே அவனிடம் தெரிவித்திருக்க வேண்டுமல்லவா? தான் மட்டும் நேற்று இரவு வரவில்லை என்றால், இன்னும் இரண்டொரு நாளில் வேறொருவனை மணந்திருப்பாளா! எப்படித் தன் முல்லையால் அது முடியும்? - எனச் சில கணங்கள் அவன் எண்ணம் தறிகெட்டு ஓடியது.

ஆனால், அவனது சிந்தனை ஓட்டத்தைக் கலைக்கவெனச் சின்னாவின் புலம்பலும், புவனாவின் பழிச்சொல்லும் அவனை மற்றதைச் சிந்திக்க விடாமல் செய்து, முல்லையைத் தன் வசம் வைத்துக் கொள்ளும் எண்ணம் மேலெழவும்தான் அவன் அதிரடியாக இத் திருமணத்தைச் செய்தது.

ஆனால், அவன் செய்த இந்தக் காரியத்தில் அங்கிருந்த எவரது முகத்திலும் சிரிப்பைக் காணவில்லை என்பதை அவன் அறிந்திருந்தான்தான். ஆனால், அவன் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

மற்றவர்களை விட முல்லையின் முகத்தில் ஒரு துளி கூடச் சிரிப்பைக் காணவில்லை என்பது அவனை என்னவோ செய்தது. அப்படியானால் அவள் என்னைக் காதலிக்கவில்லையா?

இந்த நினைப்பு எழுந்தபோதே நேற்றைய தனக்கான அவளது கண்ணீரையும், பரிதவிப்பையும் பார்த்தவன், அவளின் காதலின் ஆழத்தை உணர்ந்து கொண்டான்.



இப்படி இருவரின் எண்ணங்களும் இரு வேறு துருவங்களைக் கொண்டிருக்க, அடுத்து இவர்கள் வாழ்வில் என்ன நடக்கப் போகிறது என்பதை இருவருமே அறியவில்லை.

தன் சிந்தனையின் பிடியிலிருந்தவனை முல்லையின் விசும்பல் இவ்வுலகத்திற்கு மீட்டு வர, அவளை அவசரமாக நெருங்கினான்.

“கொடி... முதல்ல இங்கிருந்து நாம கிளம்பலாம். எல்லாம் கொஞ்ச நாளில் சரியாகிவிடும்... வா...!” என அவளைக் கை கொடுத்து எழுப்பினான்.

முல்லை, அப்போது தன் உற்றவர்களின் புறக்கணிப்பில் வெதும்பிக் கொண்டிருக்க, மற்றச் சிந்தனைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மகிழனின் கைகளில் அடங்கி, மெல்ல அடியெடுத்து வைத்தாள்.

மகிழனுக்கும் நேற்று ஏற்பட்ட கத்திக் குத்து, அதற்குச் சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ளாதது, காலை எழுந்தது முதல் ஏற்பட்ட மன உளைச்சல் என அனைத்தும் சேர்ந்து அவன் தோள்களில் வலியையும், சோர்வையும் கொடுத்தது.

எப்படி இங்கிருந்து வீட்டுக்குப் போவது என யோசித்தாலும், இப்போது இருக்கும் சூழ்நிலையில் யாரிடம் தன் நிலைமையைச் சொன்னாலும், அது வேறு பல பிரச்சனைகளை உருவாக்கும். எப்படியாவது சமாளித்து வீட்டுக்குச் செல்ல வேண்டும் என நினைத்தவன், முல்லையுடன் நேற்று நிறுத்திய இடத்திலிருந்த தன் காரை

அடைந்து, அவளை அமர வைத்துத் தானும் அமர்ந்து கொண்டான்.

நேற்று மழையின் காரணமாகக் காரின் டேஷ் போர்டில் வைத்து விட்டுப் போன அவன் செல்போனை எடுத்துப் பார்த்தான்.

கிட்டத்தட்ட முப்பது, நாற்பது மிஸ்ட் கால்கள் அவன் வீட்டிலிருந்து... அம்மா, அப்பா, பிரபு... ஏன், மது, இளங்கோவிடமிருந்து கூட கால்கள் வந்திருந்தன.

'ஷிட்...' எனத் தலையில் அடித்துக் கொண்டவன், உடனே அன்னைக்கு அழைத்தான்.

முதல் ரிங்கிலேயே எடுத்த கோகிலா, "ராசு... என்னய்யா... எங்கப்பா இருக்க...? உனக்கு எதுவும் இல்லையே! நீ நல்லாத்தானே இருக்க...? என்னாச்சு தம்பி?" எனப் பதட்டமாகக் கேட்ட அன்னையிடம், "அம்மா... அம்மா... ரிலாக்ஸ்... கொஞ்சம் மூச்சு விட்டுக்கோங்க...எதுக்கு இவ்ளோ டென்ஷன்?" என்றான்.

"என்ன ராசு... எப்படிப்பா டென்ஷன் இல்லாம இருக்க முடியும்? நேத்து ராத்திரி போனவன்... என்னாச்சு ஏதாச்சுன்னு தெரியாம எல்லோரும் பதட்டத்தோட இருக்கோம். நீ என்னடான்னா..." என்றபோதே,

அதற்குள் மகிழனின் மொபைலில் சார்ஜ் காலியாகி பீப் ஒலி கேட்டது.

"அம்மா... என்னோட மொபைலில் சார்ஜ் காலி. நான் இப்போ வீட்டுக்குத்தான் வந்துக்கிட்டு இருக்கேன்.



வந்து எல்லாத்தையும் சொல்றேன். நீங்க டென்ஷன் இல்லாம இருங்க..." என முடிக்கவும், அவன் மொபைல் அதன் உயிரிழக்கவும் சரியாக இருந்தது.

மொபைலை வைத்தவன், "ஊப்ஸ்..." எனப் பெருமூச்சு விட, அதுவரை அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த முல்லையின் இதழ்கள் சிரிப்பில் விரிந்தன.

"ஹ்ம்ம்... இதையே உங்களால் சமாளிக்க முடியலையே... என்னை என்னன்னு சொல்லி உங்க வீட்ல அறிமுகப்படுத்துவீங்க?" என ஏளனமாகக் கேட்க,

"என்ன கேள்வி கொடி இது? இப்போத்தானே நமக்குக் கல்யாணமாச்சு... யூ ஆர் மை வொய்ப்..." என்றதும்,

முல்லை, "ம்ம்... ஓ.கே... ஓ.கே... நம்ம கல்யாணம் எந்த மாதிரி நடந்துச்சுன்னு அதையும் சேர்த்தே சொல்லுங்க..." என்றதுடன் முகத்தைத் திருப்பிக் கொள்ள, அவளை யோசனையுடன் பார்த்தவாறு காரை எடுக்க, அவன் தோள்களில் ஏற்பட்ட காயம் வலியைக் கொடுக்க, "ஸ்... ஆ..." என அவன் வேதனையில் கண்களைச் சுருக்க, அவனது வேதனையைப் புரிந்து கொண்டவள், உடனே காரை விட்டிறங்கி, அவனது பக்கம் வந்து, "ம்ம்... நகருங்க..." என அதட்ட,

"உனக்குக் கார் ஓட்டத் தெரியுமா?" என வியப்பாகக் கேட்டவனை முறைத்து, "ம்ச்... தள்ளிக்கோங்க..." என அதட்டல் போட, அவன் நகர்ந்து சென்றாலும், "கொடி...

இது ஜகுவார்...” எனத் தயங்கிச் சொல்ல, அவனை முறைத்து விட்டு, டிரைவர் சீட்டில் அமர்ந்து, சீட் பெல்ட்டைப் போட்டுக் கொண்டவள், “வழி சொல்லுங்க...” என்றதும், அவள் கையில் கார் வேகமெடுத்தது.

## 17

தேனில் வண்டு மூழ்கும் போது
பாவம் என்று வந்தாள் மாது!
நெஞ்சுக்குள் தீயை வைத்து மோகம் என்றாய்
தண்ணீரில் மூழ்கிக் கொண்டே தாகம் என்றாய்!
தனிமையிலே... வெறுமையிலே...
எத்தனை நாளடி இளமையிலே...?

நேற்று இரவு போன மகன் இன்னமும் வீடு வந்து சேரவில்லை என்ற கவலையுடன் வீட்டு வாசலில் கண்ணை வைத்துக் காத்திருந்த கோகிலாவுடன் வராண் டாவில் அமர்ந்திருந்த வெங்கடராமனும் சற்றுப் பதற்ற மாகத்தான் காணப்பட்டார்.

அவர்களுடனே பிரபுவும் அமர்ந்திருந்தான். அதி காலையில் பாதி உறக்கத்திலிருந்து எழுந்து வந்திருக் கிறான் என்பது அவன் கலைந்த தலைமுடியிலேயே தெரிந்தது.

அவர்களை மேலும் காக்க வைக்காமல், மகிழனின் கார் அவர்கள் வீட்டுக் கேட்டைத் தாண்டி போர்டிகோவில் வந்து நிற்கவும், கோகிலா சந்தோஷத்துடன் கீழே இறங்கி வரவும் சரியாக இருந்தது.



கோகிலா ஆர்வமாக டிரைவர் சீட்டை நெருங்கும் முன்னர், அதன் எதிர்த் திசையிலிருந்து இறங்கிய மகனின் தோற்றத்தைக் கண்டு கோகிலா கதறியே விட்டார்.

“ஐயோ... ராசு...” என மகனின் தோள்களில் கட்டுகளுடன், அவன் உடலில் ஏற்பட்ட சிராய்ப்பில் அந்தத் தாயின் மனது, தானே அடிபட்டது போலத் துடித்துப் போனது.

வெங்கடராமனுக்கும் இது அதிர்ச்சிதான் என்றாலும், மகனின் முகத்தில் தெரிந்த அதிகப்படியான களைப்பும், அவன் தோளில் கட்டியிருந்த வெள்ளைத் துணியின் வழியாக வழிந்த இரத்தமும் அவரைக் குலைத்தாலும், நிதானித்தவராக மனைவியிடம் திரும்பி, “கோகி... முதல்ல மகிழை உள்ளே கூட்டிட்டு வா... பிரபு... உடனே டாக்டரைக் கூப்பிடு... வாப்பா...” என மகனைத் தன்னுடன் உள்ளே அழைத்துச் செல்ல முயல...

“அப்பா... ஒரு நிமிஷம்...” என இவன் முடிக்கவும், காரின் அந்தப் பக்கம் இருந்த கதவின் வழியாக முல்லை இறங்கவும் சரியாக இருந்தது.

இது அனைவருக்கும் பெரிய அதிர்ச்சியே!

அனைவரும் குழப்பத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள, பிரபு சற்றுத் தெளிந்திருந் தான். இது அவன் ஓரளவிற்கு எதிர்பார்த்ததுதான் என்றாலும், இப்படி ஒரு சூழ்நிலையில் அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் இதில் அவனது கருத்து

எதுவுமில்லை என்பதால், நடப்பதை அமைதியாக நின்று வேடிக்கை பார்த்தான்.

முதலில் சுதாரித்தது வெங்கட்தான். அதிர்ச்சியை உள்ளுக்குள்ளே மறைத்து, தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டு, "யாருப்பா இது...? உன்னோட பிரெண்டா...?" அப்படி இருக்காது என்று தெரிந்தேதான் கேட்டார்.

"பிரெண்ட் இல்லப்பா... என்னோட வொய்ப்..." என முல்லையை நெருங்கி நின்று தன்னுடன் அழைத்து வந்து பெற்றோரின் முன் நிறுத்தினான்.

அப்போதுதான் முல்லையின் கழுத்தை நிறைத்த மஞ்சள் தாலியை இருவரும் கண்டனர்.

"மகிழ்..." என்று வெங்கட்டும், "ராசு..." என்று கோகிலாவும் அயர்ந்து நிற்க, அந்த நேரத்தில் இளங்கோவின் குடும்பமும் அங்கே வந்து சேர்ந்தது.

அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்து விட்டு மகிழன் சாதாரணமாக நின்றான் என்றால், முல்லையோ தலை குனிந்து நின்றாள். அவளது கண்கள் கண்ணீரை நிறுத்தாமல் பொழிய, தன்னைக் கட்டுப்படுத்த அவள் பெரிதும் சிரமப்பட்டாள்.

"நீ என்ன சொல்ற மகிழ்...? இதிலென்ன உனக்கு விளையாட்டு...?" என வெங்கட் சற்றுக் குரலை உயர்த்திக் கேட்க,

"அப்பா... இதில் விளையாட என்ன இருக்குப்பா... நிஜமாகவே முல்லை என்னோட வொய்ப்தான். எங்க



ரெண்டு பேருக்கும் கல்யாணமாகி ஜஸ்ட் டூ ஹவர்ஸ்தான் ஆச்சு..." என்று கூலாகச் சொல்ல, அவனின் அலட்சியம் அங்கிருந்த அனைவரின் பி.பி.யை உச்சத்திற்கு எடுத்துச் சென்றது.

வெங்கட் மேலும் பேசும் முன்னர், "மாமா... முதல்ல ரெண்டு பேரையும் உள்ளே கூட்டிட்டுப் போங்க. மகிழுக்கு ப்ளீட் அதிகமாகுது. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்..." என இளங்கோ சொல்ல, தன் மாப்பிள்ளையின் குடும்பத்தார் முன்பு இப்படி நிகழ்ந்து விட்டதே என வெங்கட் தலை குனிந்தாலும், இதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம் என அங்கிருந்து வீட்டின் உள்ளே சென்று விட்டார்.

கோகிலா அதற்கு முன்னரே அங்கிருந்து உள்ளே சென்றிருந்தார். இளங்கோ டாக்டருக்கு கால் செய்து விட்டு, மகிழனின் தோள் தொட்டு உள்ளே அழைத்துச் செல்ல, அவனின் கண்ணசைவுக்கு மதுவும் முல்லையை அழைத்துக் கொண்டு வீட்டின் உள்ளே வந்தனர். அவர்களின் பின்னாலேயே இளாவின் பெற்றோரும் உள்ளே வர, அவர்கள் முகத்தில் என்ன உணர்வென்று அவர்களாலேயே கண்டு கொள்ள முடியவில்லை.

மகிழனை அவனது அறையில் விட்டு விட்டு, அவனது ஆடைகளைக் களையப் பிரபு உதவி செய்து. அவனை அறையில் படுக்க வைக்கவும், அவர்களின் குடும்ப டாக்டர் வரவும் சரியாக இருந்தது.

"என்னய்யா மகிழா... உனக்கு மாசத்துக்கு ஒருத்தனுடன் சண்டை போடலைன்னா சும்மா இருக்க

முடியாதா? இந்தத் தடவை யாரோட சண்டை?" என்றவாறு உள்ளே நுழைந்தார், டாக்டர் ரமணன். அவரைப் புன்னகையுடன் வரவேற்ற இளங்கோவின் தோளில் தட்டியவர்,

மகிழனிடம் திரும்பி, "புது மாப்பிள்ளை பொண்டாட்டியைக் கொஞ்சாம உன்னைக் கவனிச்சுக் கிட்டு இருக்கான். ஹ்ம்... எல்லாம் அவன் நேரம்யா..." எனக் கிண்டல் செய்ய, அந்த இறுக்கமான சூழ்நிலையில் அனைவரின் முகத்திலும் மெல்லிய புன்னகையின் சாயல்.

"அங்கிள்... இளா மட்டும் புது மாப்பிள்ளை இல்லை... நானும்தான்..." என அந்த நேரத்திலும் மகிழன் நக்கலடிக்க, பிரபுவும் இளாவும், 'அவர் இப்போ உன்னைக் கேட்டாரா?' என்பது போல் பார்த்து வைக்க,

அவர்களை அலட்சியம் செய்து விட்டு, "அங்கிள்... உங்களுக்கே தெரியும்... எப்பவும் நானா யார் வம்புக்கும் போக மாட்டேன். நேத்தும் நான் எதுவும் செய்யலை. எவனோ ஒரு பொறம்போக்கு என்னைப் போட்டுத் தள்ள வந்திருக்கான்... கோழை நாய். நேராச் சண்டை போடாம ராத்திரி வந்து அதோட வாலை ஆட்டிட்டுப் போயிருக்கு. அவன் என் கையில மாட்டாமலா போவான்? அப்போ இருக்கு அவனுக்குக் கச்சேரி..." எனக் கர்ஜிக்க,

அவன் சொல்லி முடிக்கவும், கோகிலா உள்ளே வரவும் சரியாக இருந்தது. "ஐயோ ராசு... யாருக்குடா உன்னைக் கொலை பண்ண மனசு வந்தது... அவன் எல்லாம் நல்லா இருப்பானா...?" எனப் புலம்ப ஆரம்பிக்க,



"ஐயோ, கோகிலா... முதல்ல நீ இங்கிருந்து வெளியே போ. உன் பையனுக்கு ட்ரீட்மெண்ட் செய்ய வேண்டாமா? இளா... வெளியே கூட்டிட்டுப் போ!" என ரமணன் கூறவும், அவரை இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

பிரபுவின் உதவியுடன் டாக்டர் ரமணன், மகிழனுக்கு ட்ரீட்மெண்டைத் துவக்கினார்.

இங்கே மதுரிமாவின் அறையில் முகத்தை மூடி அழுது கொண்டிருந்த முல்லையைப் பார்க்க மதுவுக்கு ரொம்பவும் பாவமாக இருந்தது. உள்ளே வந்ததிலிருந்து கண்ணீரைச் சிந்துபவளிடம் எப்படிப் பேச்சைத் துவக் குவது என்றும் அவளுக்குப் பிடிபடவில்லை.

ஒரு வழியாகத் தன் தயக்கத்தை உதறித் தள்ளி, "அ... அண்ணி..." என அழைக்க, அது முல்லையின் காதுகளில் எட்டவே இல்லை.

அவளின் தோளை அழுத்தமாகப் பற்றி, "அண்ணி... கொஞ்சம் என்னைப் பாருங்களேன்..." எனக் கட்டாயப்படுத்தித் தன் முகத்தைப் பார்க்க வைத்தாள்.

மதுவின் முகத்தைப் பார்த்ததுமே அவளுக்குத் தெரிந்து விட்டது, அவள்தான் மகிழனின் தங்கை என்று. புதுப் பெண் என்பது அவள் முகத்தில் தெரிந்த பொலிவு அறிவிக்க,

அவள் முகத்தில் தெரிந்த சாந்தமும் முல்லையின் அழுகையைச் சற்றே மட்டுப்படுத்தியது.

"அண்ணி... முதல்ல நீங்க போய்க் குளிச்சிட்டு வாங்க... அப்புறம் உட்கார்ந்து அழலாம்," என அவள் கையைப் பிடித்துக் குளியலறையின் உள்ளே அனுப்பி வைத்தாள்.

"உள்ளே என்னோட டிரெஸ் இருக்கு... புதுசுதான். அதையே போட்டுக்கோங்க... நான் இங்கேயே வெயிட் பண்றேன்!" என அனுப்பி வைக்க, அவளின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுச் சொன்னதைச் செய்து வந்தாள்.

அவள் வரவும், அவளை அழைத்துக் கொண்டு ஹாலுக்கு வர, வெங்கட்டும் கோகிலாவும் ஒரு சோபாவில் அமர்ந்திருக்க, அவர்களுக்கு எதிரில் ரஞ்சிதாவும் சிவாவும் அமர்ந்திருக்க, இன்னொரு ஒற்றை சோபாவில் இளங்கோ அமர்ந்திருந்தான்.

இவர்களும் அங்கே வந்து சேர்ந்த சில நிமிடங்களில் டாக்டர் ரமணன் கீழே வந்தார்.

அங்கிருந்த அனைவரின் முகத்திலும் தெரிந்த அசாத்திய மௌனம் எதையோ உணர்த்த, தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"நேத்து ராத்திரி யாரோ கத்தியால குத்தியிருக்காங்க. சரியான பார்ஸ்ட் எய்ட் பண்ணாததால ப்ளீடிங் நிற்கலை. லைட்டா சீழ் பிடிக்க ஆரம்பிச்சிருக்கு. குத்துன வேகத்துல தோள்பட்டை எலும்பில் சின்ன ஹேர் லைன் ப்ராக்சர். கையில, கால்ல சின்னச் சின்னச் சிராய்ப்பு.

"எல்லாத்தையும் க்ளீன் பண்ணி டிரெஸ்ஸிங் பண்ணியிருக்கேன். வலது தோளைக் கொஞ்ச நாள்



அசைக்காமல் பார்த்துக்கோங்க... வலிக்கு மாத்திரை எழுதி பிரபுகிட்டே கொடுத்திருக்கேன். நாளைக்கு வந்து திரும்ப டிரெஸ்ஸிங் பண்றேன். அவனை யாரும் கொஞ்ச நேரம் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். சரியான தூக்கம் இல்லாமல் இருக்கான்..." என ரமணன் ஒரே மூச்சாகச் சொல்லி முடிக்க, அவருக்கு நன்றி சொல்லக்கூட வெங்கட்டால் முடியவில்லை.

இளங்கோதான் எழுந்து அவரை வழியனுப்பி விட்டு வந்தான்.

அவர் சென்றவுடன் அனைவரின் பார்வையும் முல்லையிடம் பாய்ந்தது.

முல்லை இந்த நிலையை முற்றிலும் வெறுத்தாள். அங்கிருக்கும் ஒருவரைக் கூட முல்லை இதற்கு முன் பார்த்ததில்லை. அவள் அந்த வீட்டில் இருப்பதற்கு ஆதாரமே அவள் கணவன்தான். ஆனால், அவனும் இப்போது அவளருகில் இல்லாமல் போக, ஏதோ தனித் தீவில் இருப்பதைப் போல் உணர்ந்தாள்.

இப்போது இவர்கள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கண்ணீர் பொழிந்தாள். இப்படியே இங்கிருந்து ஓடி விடலாமா என்று கூட நினைக்கத் தோன்றியது.

அவளை மேலும் தவிக்க விடாமல், மகிழனே பிரபுவுடன் கீழிறங்கி வந்தான்.

அவனைப் பார்த்ததும்தான் முல்லைக்கு உயிரே வந்தது போல், பார்வையை மறைத்த கண்ணீரை உள்ளிழுக்க முயல, மகிழன் அவளருகில் வந்து தன் னுடன் சேர்த்து அங்கிருந்த மற்றொரு சோபாவில் அமர்ந்து கொண்டு, அவளையும் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

அவனின் தோரணையே, யாருக்கு என்ன கேட்கணுமோ ஆரம்பிங்க என்பது போலிருக்க, முதலில் ஆரம்பித்தது ரஞ்சிதம்தான்.

"ஏனப்பா மகிழா... இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் என் மகளை வேண்டாம்னு சொன்னியா...?" எனக் கூர்மையாகக் கேட்க,

இந்த நேரத்தில் ரஞ்சிதமிடமிருந்து இப்படியொரு கேள்வியை யாரும் எதிர்பார்க்கவில்லை.

"கரெக்ட்டா சொல்லிட்டீங்க அத்தை... அடுத்து..." எனச் சளைக்காமல் சொல்ல, ரஞ்சிதம் அப்போதைக்கு அவரின் உள்ளே ஏற்பட்ட உணர்வை முகத்தில் தெரியாமல் மறைக்கப் பெரும்பாடு பட்டார்.

"கொஞ்சமாவது பொறுப்பாப் பேசு மகிழ்..." என வெங்கட் குரலை உயர்த்திக் கேட்க,

"அப்பா... இப்போ நான் என்ன பொறுப்பில்லாமல் நடந்துக்கிட்டேன்? எனக்குப் பிடிச்ச பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இதில் என்ன தப்பு இருக்கு...?" என்றான்.



இளங்கோவுக்கோ, இவன் ஏன் இப்படிப் பேசித் தொலைக்கிறான் எனக் கோபம்தான் வந்தது.

"உனக்குப் பிடிச்ச பொண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பில்லை. ஆனால், அதை உன்னைப் பெத்தவங்க கிட்டே தெரியப்படுத்தணும்னு உனக்குத் தோணலையா? இல்லை, அதைத் தெரிஞ்சுக்கிற அளவுக்கு எங்களுக்குத் தகுதியும், உரிமையும் இல்லைன்னு நினைச்சிட்டியா?" வெங்கட் கேட்க,

"அப்பா... நீங்க ஏன் இந்த விஷயத்தை ரொம்பக் காம்ப்ளிகேட் பண்ணிக்கிறீங்க... இதை நானே எக்ஸ்பெக்ட் பண்ணலை. எல்லாமே சடனாத்தான் நடந்தது. உங்களுக்கு முதல்ல இருந்து சொன்னாத்தான் புரியும்..." என்றவன், முல்லையைப் பார்த்த நாள் முதல், அவளிடம் காதல் கொண்டது, முல்லையை மனதில் வைத்துக் கொண்டு அபூர்வாவைத் திருமணம் செய்து கொள்ள மனம் ஒப்பாமல் திருமணத்தை நிறுத்தியது, அதன் பின் நேற்று நடந்தது, இன்று காலை புவனா செய்த கலகம், அதனால் நடந்த இந்த அவசரக் கல்யாணம் என அனைத்தையும் சொல்லி முடிக்க, அங்கிருந்த அனைவரும் அசாத்திய அமைதியில் இருந்தனர்.

யாருக்கும் நடந்ததைப் பற்றிக் கருத்துச் சொல்ல முடியவில்லை. ஆனால், நடந்ததை யாராலும் ஜீரணிக் கவும் முடியவில்லை.

சிவா, "இளா... இது அவங்களோட குடும்ப விஷயம். இதில் நாம தலையிட முடியாது. நாம கிளம்பலாம். உன்

பொண்டாட்டிக்கு இங்கே இருக்கணும்னா இருந்துக்கச் சொல்லு... ஆனால், நீ இப்போ என்னோட வந்தாகணும்..." என அமர்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்க, ரஞ்சிதமும் எழுந்தார்.

இளாவுக்கு இப்படி ஒரு சூழ்நிலையில் இங்கிருந்து கிளம்ப மனமில்லை என்றாலும், பெற்றவர்களின் மனநிலையும் புரிந்துதான் இருந்தது. அதே சமயம் மதுவின் மனதையும் புண்படுத்த முடியவில்லை. இரு பிரிவினருக்கு இடையில் அவன் தவித்திருக்க, மகிழன் மதுவிடம் திரும்பி, "மது... நீ உங்க வீட்டுக்குக் கிளம்பு... எனக்கு உடம்பு சரியானதும் நானும் உன் அண்ணியும் உன்னை மறுவீட்டுக்கு அழைக்க வாறோம்..." என்றான்.

அவனின் இந்தப் பேச்சு ரஞ்சிதத்திற்குச் சற்றும் பிடிக்கவில்லை என்பதால் உடனே அங்கிருந்து வெளியே வந்து விட்டார். அவர் பின்னாலேயே சிவமும் சென்று விட்டார்.

இளங்கோ, மகிழனிடம் நெருங்கி, "மகிழ்... நீ நினைக்கிற மாதிரி இது பிசினஸ் டீல் இல்லை... ரொம்ப சென்சிட்டிவான விஷயம். அப்பா கிட்ட கொஞ்சம் பொறுமையாப் பேசு. இதே மாதிரிப் பேசி எதையும் உளறி வைக்காதே. அதே சமயம், இப்போதைக்கு நீ மட்டும்தான் இந்தப் பொண்ணுக்கு ஆதரவு. இரண்டு பக்கமும் பாதிப்பு ஏற்படுத்தாமல் பார்த்துப் பேசு..." என ஒரு நண்பனாக அவனுக்கு மெல்லிய குரலில் அறிவுரை வழங்க, அவனுக்கு ஒரு புன்னகையைப் பதிலாகக் கொடுத்து,



"நான் பார்த்துக்கிறேன் இளா... நீ மது கூட சந்தோஷமாக இரு..." என்றான்.

"சரி, நான் கிளம்புறேன். போன் பண்றேன்..." எனத் தன் மனைவியைக் கூட்டிக் கொண்டு இளங்கோவும் கிளம்பி விட, அங்கிருந்த பிரபுவும் அவர்கள் குடும்பப் பிரச்சனைக்குள் தானிருப்பது உசிதமில்லை என, அவனும் விடைபெற்றுக் கிளம்பினான்.

அனைவரும் சென்று விட, இத்தனை நேரம் தன் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த கோகிலா வெடித்துக் கண்ணீர் சிந்தினார்.

அவரின் கண்ணீரைக் காணப் பொறுக்காத கணவனாய், "நீ இப்போ எதுக்கு அழற, கோகி... அழுகையை நிறுத்து... செய்யறது எல்லாம் செய்துட்டு அவனே கூலா உட்கார்ந்திருக்கான். உனக்கு எதுக்கு அழுகை?" என அதட்டல் போட,

"என்னங்க... இவன் பண்ணிய காரியத்தால நம்மோட பொண்ணு வாழ்க்கையே கேள்விக் குறியா நிற்கிறதே... எதையும் யோசிக்காமல் இப்படிச் செய்துட்டு வந்து நிற்கிறானே! இனி மது அந்த வீட்டில் என்ன கஷ்டப்படப் போறாளோ... ஆண்டவா!" என நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்.

"அம்மா... என்ன பேசுறீங்க...? என்னோட கல்யாணத்துக்கும், மதுவோட வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்? எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடுறீங்க...?" என்று கேட்டவனை,

“நீ புரிஞ்சுதான் பேசுறியா மகிழ்... ஏற்கெனவே நீ அவங்க பொண்ணை வேண்டாம்னு சொன்னதுக்கு அவங்க கோபத்தில இருந்திருப்பாங்க. அப்படியும் அவங்க மதுவோட கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதே பெரிய விஷயம்.

“ஆனால், நீ இந்த மாதிரி ஒரு பொண்ணுக் காகத்தான் அவங்க பொண்ணைத் தவிர்த்திருக்கேன்னு தெரிஞ்சா அவங்க மனசு தாங்குமா? நீ பண்ணின காரியத்தால் உன் மேலே இருக்கிற கோபத்தை உன் தங்கச்சியிடம்தான் காட்டுவாங்க...” வெங்கட் உச்ச கோபத்தில் வெடிக்க,

“அப்பா... அந்த மாதிரி எதுவும் ஆகாது. உங்களுக்கு இளாவைப் பற்றித் தெரியாதா...?” என்றான்.

அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று வெங்கட்டுக்குச் சுத்தமாகப் பிடிபடவில்லை.

“வேண்டாம் மகிழ்... இப்போது இதைப் பற்றிப் பேச வேண்டாம். நீ உன் ரூமுக்குப் போ!” என வெங்கட் பொறுமையாகச் சொல்ல, அவனுக்கும் அதுதான் சரியாகப் பட்டது.

வெங்கட் சொன்ன ‘இந்த மாதிரி ஒரு பொண் ணுக்கு...’ என்ற வார்த்தையில் தன் தரம் தாழ்ந்தது போல் தலை குனிந்து அழுது கொண்டிருந்த முல்லையை ஒரு கையால் பற்றித் தன்னுடன் சேர்த்து நடத்தித் தன் னறைக்குச் செல்ல நடந்தவனைத் தடுத்தது வெங்கட்டின் குரல்.



“ஏன் மகிழ்... நீ எல்லாமே மணி மைன்ட்லதானே பார்ப்பே. அப்படி இருக்க உனக்கு எப்படி இந்தப் பெண்ணைப் போய்ப் பிடிச்சது? உன்னோட காதல் உண்மையானதுன்னு நீ சொன்னால் அதைச் சத்தியமாக என்னால் நம்ப முடியாது...” என ஏளனமாகக் கேட்க,

மகிழனுக்கே தன் தந்தையின் வாயால் இந்த வார்த்தையைக் கேட்க ஒரு மாதிரியாக இருந்தது என்றால், முல்லைக்கோ யாரோ ஒரு லாரி நெருப்பைத் தலையில் கொட்டியது போல் உடல் தகித்தது.

அவரிடம் ஒரு மௌனப் பார்வையைச் செலுத்தி விட்டு முல்லையுடன் தன்னறைக்கு வந்து சேர்ந்தவன், அழுது கொண்டிருந்த முல்லையைச் சமாதானப்படுத்த அவளை ஒரு கையால் அணைக்க முயல, அவள் இருந்த மன நிலையில் அவனது அணைப்பை ஏற்றுக் கொள்ள முடியாமல், “சே... என்னை விடுங்க...” எனத் தள்ளிவிட, அவன் அடிபட்ட தோள்களில் சுரீரென்ற வலியுடன் கட்டிலில் விழுந்தான்.

“ஹே... லூசாடி நீ...” என வலியில் கேட்டு விட,

“ஆமாய்யா... நான் லூசுதான்... லூசேதான். அதனால்தான் நீ செய்த எல்லாக் காரியத்திற்கும் அமைதியாக இருந்திருக்கேன்...” எனக் கோபமாகக் கத்த,

“இப்போ எதுக்குக் கத்துற...? நான் அப்படியென்ன செய்துட்டேன்னு எல்லோரும் என்னையே குறை சொல்றீங்க... அப்போ உனக்கு என்னைக் கல்யாணம்

செய்துகிட்டதில் இஷ்டமில்லையா? உனக்கு என்னைப் பிடிக்கலையா?" என இவனும் கோபத்தில் கத்த,

இவனின் கேள்வியில் துவண்டவள், அப்படியே தரையில் சரிந்து, "அய்யோ... எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்குமே! அதனால்தானே வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் இந்த ஒரு மாதமாக நடைபிணமாக வாழ்ந்துகிட்டு இருந்தேன்," என வெடித்து அழ, மகிழனுக்கு அவளது அழுகை அவன் உயிர் வரை சென்று தாக்கியதென்றால், அவளின் வார்த்தைகள் அவனது காதல் நெஞ்சில் பூமாரி பொழிந்தன.

## 18

பெண்ணின் வீட்டில் நீ செய்த யாகம்...
கண் மூடிப் பார்த்தேன் எங்கும் இன்பம்!
அன்பென்னும் ஆற்றில் நீராடும் நேரம்...
அங்கங்கள் யாவும் இன்னும் என்னும்...
இன்றைக்கும் என்றைக்கும்
நீ எந்தன் பக்கத்தில்...!

மகிழனின் கேள்வியில் துவண்டவள், அப்படியே தரையில் சரிந்து, "அய்யோ... எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்குமே! அதனால்தானே வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் இந்த ஒரு மாதமாக நடைபிணமாக வாழ்ந்துகிட்டு இருந்தேன்," என வெடித்து அழ, மகிழனுக்கு அவளது அழுகை அவன் உயிர் வரை சென்று தாக்கியதென்றால், அவளின் வார்த்தைகள் அவனது காதல் நெஞ்சில் பூமாரிப் பொழிந்தன.



ஆனால், அவனுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகப் புரியவில்லை. அவள் தன்னை விரும்புகிறாள்... தானும் அவளை மனதார விரும்புகிறோம். அப்படி இருந்தும் எதற்கு இந்த அழுகை. அது புரியாமல் அவளிடமே கேட்டு விட்டான்.

"இதோ பாரு கொடி... உனக்கும் என்னைப் பிடிச்சுதானே இருக்கு... அப்படி இருக்கும்போது, எதுக்கு இந்த அழுகை? சொல்லப் போனால் நான்தான் அழ ணும். ஏன்டி... நீயும் என்னைக் காதலிக்கிற, நானும் உன்னைக் காதலிப்பது உனக்கு நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் எதுக்குடி இன்னொருத்தனைக் கல் யாணம் செய்ய ஒத்துக்கிட்ட...? என்னைப் பார்த்தா உனக்குக் கேனையன் மாதிரித் தெரியுதா?" எனச் சூடாகக் கேட்க,

வந்ததே முல்லைக்குக் கோபம். தரையில் அமர்ந் திருந்தவள், வேகமாக எழுந்து அவனருகில் வந்து, "யோவ்... ஏதாச்சும் பேசின... அப்படியே கொலை பண்ணிடுவேன். நான்தான் என் அம்மா கிட்டே எனக்குக் கல்யாணம் பண்ணி வையுங்க, பண்ணி வையுங்கன்னு கெஞ்சின மாதிரிப் பேசுற? நீ அவங்க முன்னாடி என்னத்தைச் செய்து தொலைச்சியோ... அவங்களே கண்டு பிடிச்சிட்டாங்க. லூசு... லூசு..." என இரு கரங்களையும் அவனின் கழுத்தை நோக்கி நீட்ட, அவளது இரண்டு கைகளையும் அவனது இடது கையில் பற்றித் தன்னருகில் அமர வைத்து, "கூல் பேபி... கூல்..." எனக் கூலாகச் சொல்ல,

"சே... என்னை விடு..." எனத் திமிறி, அவனிட மிருந்து இரண்டு அடி தள்ளி அமர்ந்தாள்.

"ம்ம்... அதுவும் நல்லதுதான். நீ கொஞ்சம் தள்ளியே இரு... இப்போதைக்கு என் உடம்பு இருக்கிற நிலையில உன்னை..." என இழுக்க,

"சீச்சீ... பேச்சைப் பாரு... இந்த நிலையிலேயும் உனக்குக் கொழுப்பு ஜாஸ்திதான்யா..." எனச் சூடாகச் சொல்ல,

"சே... என்ன பேச்சு இது? யோ யோன்னு... கொஞ்ச மாவது புருஷனுக்கு மரியாதையே கொடுக்கணும்னு இல்லை...? இதே மாதிரி அப்பா, அம்மா முன்னாடி பேசிடாதே... அதுவும் என் அம்மா... அவங்களுக்கு நான் என்றால் ரொம்ப இஷ்டம்..." என்று சொல்ல,

"நான் இப்படித்தான் பேசுவேன். என்னைப் பற்றித் தெரிஞ்சுதானே என் கழுத்தில தாலி கட்டினே... இப்போ மட்டும் என்னவாம்? இதோ பாரு, நீ பேச்சை மாத்தாதே!" என முல்லையின் கோபம் மீண்டும் உச்சத்தைத் தொட்டது.

"சரி... உனக்கு இப்போ என்னதான் பிரச்சனை?" என மகிழன் தன் விளையாட்டுத் தனத்தைக் கைவிட்டுச் சீரியசாகக் கேட்க,

"என்ன பிரச்சனையில்லை... எல்லாமே பிரச்சனை தான். நீ என்னைக் காதலிக்கிறேன் காதலிக்கிறேன்னு சொன்னியே... இதுவரைக்கும் எப்பவாவது, ஒரு தடவை



யாவது என் கிட்டே வாயைத் திறந்து சொல்லியிருக்கியா? சும்மா கண்ணாலேயே கதை பேசி, என்னை மயக்கி உன் பின்னாடி சுத்த வெச்சுட்டு, ஒண்ணுமே சொல்லாம உனக்குக் கல்யாணம்னு போவே... நான் உன்னையே நினைச்சுட்டுத் தினம் தினம் சாகணும். அப்படித்தானே...! ஹப்பா... இந்த இருபது நாள் நான் பட்ட துன்பம் உனக்குத் தெரியுமா? தினம் தினம் செத்துச் செத்துப் பிழைச்சேன் தெரியுமா...?" என்றவளின் கண்ணீர் நிற்காமல் கரை புரண்டோடியது.

"என்னது...? எனக்குக் கல்யாணமா? நான் எப்போ உன் கிட்டே அப்படிச் சொன்னேன்? சரி, நான்தான் அப்படிச் சொல்லிட்டுப் போயிட்டேன். என்னோட காதலில் தான் உனக்குச் சந்தேகம்... அட்லீஸ்ட் என் கண்ணுல கூடவா உனக்குத் தெரியலை? அன்னிக்கு உன்னைக் கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்தேனே... அதுல என்னோட உரிமை உனக்குத் தெரியலையா?" என அதிர்ச்சியும், ஆதங்கமுமாகக் கேட்க,

"அன்னிக்கு நீ அப்புச்சி கிட்டே கல்யாண வேலையா இருபது நாள் வரமாட்டேன்னு சொன்னியே... அதை நான் கேட்டேன். அப்புறம், அன்னிக்கு ஒரு நாள் அந்தப் பொண்ணோட தோட்டத்துக்கு வந்தியே... அப்போ அந்தப் பொண்ணை உரிமையா தொட்டுக்கூடப் பே...சி...னி...யே..." என முதலில் ஆவேசமாகத் துவக்கியவள், பின் மகிழனின் முகத்தில் கடுமை பரவ, அவள் குரல் தோய்ந்து வார்த்தைகள் தடுமாறி வெளியே வந்தன.

"அப்படியே விட்டேன்னா ஒண்ணு... உங்க வீட்ல பத்திரிகை வெச்சு உன் தாத்தா கிட்டே என்னோட தங்கச்சிக்குக் கல்யாணம்னு தெளிவாச் சொன்னேன். எல்லாத்தையும் அரையும் குறையுமா கேட்டுட்டுப் பேசு. அன்னிக்குப் பாத்தியே அந்தப் பொண்ணு... அவளைத்தான் எனக்கு நிச்சயம் பண்ணினாங்க. உன்னை முதல் நாள் உங்க ஊர்லே பார்த்தேனே... அன்னிக்குத்தான், எனக்கும் அவளுக்கும் நிச்சயம் முடிச்ச பின்னாடிதான் அங்கே வந்தது..." என அவள் கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்க,

"ஹே... அந்தப் பொண்ணையா உனக்கு நிச்சயம் பண்ணினாங்க...? அந்தப் பொண்ணு எவ்வளவு அழகா இருந்தது! அவளையே வேண்டாம்னு சொல்லிட்டியா? ஏன்...?" என ஆர்வமாகக் கேட்க,

அவள் ஆர்வத்தின் அழகில் மயங்கியவன், "ம்ம்... அவளை விட அழகான, அறிவான, துடிப்பான ஒருத்தி என்னோட நெஞ்சுக்குள்ள புகுந்துட்டா. அதனால அந்த அழகியை வேண்டாம்னு சொல்லிட்டேன்..." எனக் காதலுடன் சொல்லி முல்லையை நெருங்க,

இதைச் சொன்ன போதும் முல்லையின் காதுகளில் வெங்கட் சொன்ன வார்த்தைகள் ரீங்காரமிட்டன.

அது கொடுத்த தாக்கத்தில் சில நொடிகள் நின்ற கண்ணீர் மீண்டும் உடைப்பெடுக்க, அவளின் கண்ணீரைக் கண்டு இப்போது மகிழனுக்குக் கோபம்தான் வந்தது.



"கொடி... இப்போ எதுக்குச் சும்மா சும்மா அழுதுகிட்டு இருக்கே. இப்போ என்ன நடந்து போச்சு? அதான் ரெண்டு பேருக்கும் நல்லபடியாக் கல்யாணம் முடிஞ்சுதில்ல..." என்றதும்,

"ஆமா... நல்லா முடிஞ்சுது. இந்தக் கல்யாணத்தில் யாருக்காவது சந்தோஷம் இருக்கா? என்னோட அம்மா என் முகத்தைக் கூடப் பார்க்காமல் கதவை அடைச்சிட்டாங்க. என் அப்பு... இதுவரைக்கும் என்னை எதுக்காகவும் கோவிச்சுக்காது. இன்னிக்கு அதோட கண்ணுல தெரிஞ்ச வலி என்னைக் கொன்றே போட்டுடுச்சு தெரியுமா? அப்புறம், உன்னோட அப்பா, அம்மா என்னை ஏதோ தீண்டத்தகாதவளைப் போலப் பார்க்கிறாங்க. இத்தனை பேருக்கும் கஷ்டத்தைக் கொடுத்த கல்யாணம் எனக்கு நடக்காமலேயே இருந்திருக்கலாம்..." என வேதனையுடன் சொல்ல,

அப்போதுதான் மகிழனுக்கு அவள் சொல்ல வருவது புரிந்தது. ஆனாலும் காலையில் இருந்த சூழ்நிலையில், இவனால் என்ன செய்திருக்க முடியும்? அதை அவளிடமே கேட்டு விட்டான்.

"கொடி... எனக்கு நீ சொன்னது புரியுதுதான். ஆனால், நீயே கொஞ்சம் யோசிச்சுப் பாரு... அங்கிருந்த எல்லாரும் என்னையும் உன்னையும் எப்படி எல்லாம் பேசினாங்க? உன்னை எவ்வளவு கேவலமாகப் பேசிச்சு அந்தப் பொண்ணு... உன்னோட அம்மா கூட, என்னமோ நீ கெட்டுப் போன மாதிரியும், நான் உன்னைக் கற்பழிச்சு

ஏமாத்தின மாதிரியுமில்ல பேசினாங்க. அப்போ மட்டும் நான் இப்படிச் செய்யாமல் ஒதுங்கிப் போயிருந்தால் அது எனக்கு எவ்வளவு பெரிய கேவலம்...!"

"அதுவுமில்லாமல் இன்னும் இரண்டு நாளில் உனக்குக் கல்யாணம் ஏற்பாடு பண்ணியிருக்காங்கன்னு தெரிஞ்சும் என்னால எப்படிச் சும்மா இருக்க முடியும்னு நீ எதிர்பார்க்கிறே...?" எனத் தன்னிலையை விளக்க, அவனது விளக்கத்தை முல்லையால் கேட்க மட்டுமே முடிந்ததே தவிர, அவளால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை.

இன்னமும் ஏதோவொரு நெருடல் அவளுள் இருந்தது. அது வெங்கட்டின் பேச்சால் விளைந்ததுதான்.

"இருந்தாலும் இந்தக் கல்யாணம் என்னோட மானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் விமர்சனம் செய்யுதே மகி... என்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியலை..." என்றவாறு அவ்விடம் விட்டு நகர்ந்து, மற்றொரு கதவு வழியாகப் பால்கனிக்குச் சென்று தரையில் அமர்ந்து தன் நிலையை எண்ணி மனதுடைந்து அழுதாள்.

அவள் காதுகளில், 'இந்த மாதிரிப் பெண்ணை நீ எப்படிக் காதலிச்சே? உன்னோட காதல் உண்மைன்னு நீ சொன்னா, அதை நிச்சயமா என்னால நம்ப முடியாது...' என்ற வெங்கட்டின் இவ்வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலிக்க, தன் காதுகளைப் பொத்திக் கொண்டு கண்ணை மூடி வேதனையுடன் அமர்ந்திருந்தாள்.



அவளின் மனதில் பல கேள்விகள், குழப்பங்கள்... மகிழனைப் பார்த்த முதல் நாளிலிருந்து யோசித்துப் பார்த்தாள். 'இருவரும் சந்தித்தோம்... ஒருவரை ஒருவர் காதலித்தோம்... அந்தக் காதலை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ளும் முன்பே இருவருக்குள்ளும் ஏகப்பட்ட குழப்பம். இப்போது, அக் குழப்பத்தைத் தீர்க்கும் முன்னரே இருவருக்கும் திருமணமே நடந்து முடிந்து விட்டது...'

இப்படி யோசித்தவள், இன்னொரு தீர்மானம் மனதிலே எடுத்துக் கொண்டாள்.

இதுவரை நடந்ததுதான் தன்னை மீறி நடந்தேறியது. இனிமேல் நடக்கப் போவதாவது தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்று நினைத்தாள்.

அவளுக்கு ஏற்பட்ட இந்த அவச் சொல்லிலிருந்து விடுபட்டுத் தங்களின் காதலை இரு வீட்டுப் பெற்றோர் களுக்கும் உணர வைத்து, அவர்களின் ஆசிர்வாதத் தோடுதான் தங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்ற உறுதி அப்போதே அவள் மனதில் ஊறிப் போனது.

இங்கே கட்டிலில் அமர்ந்திருந்த மகிழனுக்கோ அவள் சொன்னது நிச்சயமாகப் புரியவில்லை. 'என்ன சொல்கிறாள் அவள்? அவள் மானத்திற்கு எந்த இழுக்கும் வந்து விடக் கூடாது என்றுதானே அந்நிலையில் அவளைத் திருமணம் செய்து கொண்டான். இவளானால் இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறாள்...' இந்த எண்ணமே அவனுக்கிருந்தது.

இப்படி யோசித்தவனின் கண்கள், ரமணன் கொடுத்த மருந்தின் தாக்கத்தால் சுழல, அப்படியே கட்டிலில் சரிந்து உறங்கியே விட்டான்.

கீழே கவலையுடன் அமர்ந்திருந்த கோகிலாவின் அருகில் வந்தமர்ந்த வெங்கட், மனைவியிடம், நடந்தவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆறுதலில் இறங்கிக் கொண்டிருந்தார்.

இதைச் சொன்ன அவருக்கே நடந்தவைகளை ஜீரணிக்க முடியவில்லைதான். ஆனாலும் நிதர்சனம் என்று ஒன்று இருக்கிறதே! அதைப் புரிந்து கொண்டு அடுத்த கட்டத்திற்குத் தயாராகும்படி மனைவியின் கவலையைப் போக்க முயன்று கொண்டிருந்தார்.

இங்கே அனைவரும் தங்கள் எண்ணங்களில் மூழ்கியிருக்க, இன்னொரு பக்கம் இளங்கோவின் வீட்டில், அபூர்வாவின் அறையில் ரஞ்சிதம், தன் மகளிடம் மகிழனின் வீட்டில் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் ஒப்பித்துக் கொண்டிருந்தார்.

அவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அபூர்வாவின் முகம், உணர்ச்சிகளைத் துடைத்து வைத்ததைப் போலிருக்க, ரஞ்சிதம்தான் ஆதங்கத்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

"அந்த நாட்டுப்புறத்துக்கிட்ட என்ன இருக்குன்னு அந்த மகிழ் உன்னை வேண்டாம்னு சொன்னான்னு தெரியலை அபூ... உன்னோட அழகுல பாதி கூட இல்லாத அவளைப் போய்க் கல்யாணம் செஞ்சிக்கிட்டு



வந்து நடு வீட்ல இருக்க வெச்சிருக்கான். அது நீ இருக்க வேண்டிய இடம் அபூ... எனக்கு அவளைப் பார்க்கப் பார்க்கப் பத்திக்கிட்டு வருது..." என ரஞ்சிதம் தன் போக்கில் புலம்பிக் கொண்டிருக்க, ஏற்கெனவே அவர் சொன்ன செய்தியில் அவள் கோபம் எல்லையைக் கடந்திருக்க, இப்போது இவரின் புலம்பல் கோபத்தோடு சேர்த்து எரிச்சலைக் கொடுத்தது.

"அம்மா... ஜஸ்ட் ஸ்டாப் இட்..." எனக் கத்தியவள், "அம்மா... லிஸன்... என்னிக்கு அவன் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டமில்லைன்னு சொன்னானோ, அன்னிக்கே அவனை என்னோட லைஃப்ல இருந்து நான் தூக்கி எறிஞ்சுட்டேன். என்னை வேண்டாம்னு சொல்லிட்டு எப்போ அந்தப் பட்டிக்காட்டை நினைச்சானோ, அப்போவே அவனோட திங்கிங் எந்த அளவுக்குக் கீழ்த்தரமா இருக்குன்னு எனக்கு நல்லாவே புரிஞ்சுடுச்சு. இந்த மாதிரி ஒரு மட்டமான டேஸ்ட் இருக்கிறவனோட நான் சேர்ந்திருந்தா, என்னோட லைஃப் நிச்சயம் நல்லா இருந்திருக்காது. எப்படியோ நான் தப்பிச்சிட்டேன். சோ, மகிழனைப் பற்றி இனிமேல் என்னோட பேசாதீங்க..." என முடிக்க,

ரஞ்சிதத்திற்கு மகள் புரிந்து கொண்டு பேசியதில் ஆறுதல்தான் என்றாலும், தன் மகளைப் போய் மகிழன் வேண்டாமென்று சொல்லி விட்டானே என்ற ஆதங்கம் இருக்கத்தான் செய்தது.

"நீ என்ன சொன்னாலும் என் மனசு ஆறலை அபூ. உன்னை வேண்டாம்னு சொன்ன அவன் நிச்சயம் நல்லாவே இருக்க மாட்டான். அவனை மயக்கிக் கல்யாணம் செய்துகிட்டாளே அந்தப் பட்டிக்காடு... அவளும் இவனோட சேர்ந்து நாசமாத்தான் போவா...!" எனச் சாபம் போல் புலம்ப,

இவர்கள் நடத்திக் கொண்டிருந்த உரையாடல், அந்தப் பக்கம் சென்ற மதுவின் காதுகளையும் தீண்ட, தன் அண்ணனைப் பற்றிய தரக்குறைவான விமர்சனத்தைப் பேசுபவர்கள்... அது தன் கணவனின் அம்மா, தங்கை என்றாலும் தட்டிக் கேட்க வேண்டும் என்ற உந்துதலில் அபூர்வாவின் அறைக்குள் செல்லக் காலெடுத்து வைத்த மதுவின் கையைப் பிடித்துத் தங்கள் அறைக்குள் அழைத்துச் சென்றான் இளங்கோவன்.

"என்ன பண்றீங்க... விடுங்க... அத்தை என்னவெல்லாம் பேசறாங்க தெரியுமா?" எனக் கோபமாகக் கத்திய மனைவியின் வாயை அடைத்தவன்,

"டேய் ரிமா... என்னது, நீயும் இப்படி நிலைமை புரியாமப் பேசிக்கிட்டு இருக்க... அம்மா ஏதோ தன் மகளை நினைச்சுப் புலம்பிக்கிட்டு இருக்காங்க. அவங்க எதையும் மனசுல இருந்து பேசியிருக்க மாட்டாங்க ரிமா... புரிஞ்சுக்கோ...!" எனக் கெஞ்சுதலாகக் கேட்க,

"என்னது... அவங்க சாபத்தைப் புலம்பல்னு சொல்றீங்களா...? இப்போதான் என் அண்ணன் செத்துப் பிழைச்சு வந்திருக்கான்... அதுக்குள்ளே இப்படி ஒரு



பேச்சைக் கேட்டால் எனக்கு எப்படி இருக்கும்? விடுங்க... அவங்களை நாலு வார்த்தை கேட்டாதான் எனக்கு ஆறுதலா இருக்கும். விடுங்க என்னை..." என அண்ணனின் பாசத்தில், புகுந்த வீட்டில் சண்டைக்குத் தயாரானாள் மதுரிமா.

இப்போது இளாவுக்குக் கோபம் வந்தது. இப்படி ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் குடும்பம் குடும்பமாக இருக்காது என்பதை உணர்ந்தவன், பற்றியிருந்த மதுவின் தோள்களை உதறி, "போடி போ... நேத்துதான் உனக்கும் எனக்கும் கல்யாணம் ஆகியிருக்கு... இப்போ போய் அவங்களோட சிண்டப் பிடிச்சிக்கிட்டு சண்டை போடு... நம்ம வாழ்க்கை விளங்கிடும்..." எனக் கத்தியவனை, மிரட்சியுடன் பார்த்தாள்.

அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்த நாள் முதல் இதுவரை ஒரு முறை கூடக் கடிந்து பேசாத கணவன், இன்று இவ்வளவு கோபமாகப் பார்த்ததும், மதுவின் கண்கள் கண்ணீரைத் தத்தெடுக்கக் கேவிக் கேவி அழுதாள்.

கட்டியவளின் கண்ணீரைக் கண்ட இளங்கோவின் கோபம் நொடியில் பறந்து போக, அவளை நெருங்கி அணைத்து ஆறுதலாக முதுகை வருடி, "அழாதேடா மது... ஐயாம் வெரி சாரி... ப்ளீஸ்..." எனக் கொஞ்சி, அவளின் அழுகையைச் சமாதானம் செய்தவன்,

"ரிமா... நீயாவது என்னைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோயேன். எனக்கு உன் குடும்பம் வேற, என் குடும்பம் வேறன்னு இல்லை... ரெண்டுமே ஒரு

குடும்பம்தான். ரெண்டு குடும்பத்துல இருக்கிறவங்க சந்தோஷமும் எனக்கு ரொம்ப முக்கியம். இப்போதைக்கு ரெண்டு குடும்பத்துக்குள்ளே எந்தப் பிளவும் வந்துடக் கூடாதுன்னுதான் நான் பொறுமையாப் போகச் சொல்றேன்..." என்றவன், அவளைத் தன்னை விட்டு விலக்கி, "இங்கே என்னைப் பாரு..." என்று அவள் முகம் பற்றித் தன் கண்ணோடு கண் சேர்த்து, "நான் சொன்னா நீ கேட்பேதானே...!" எனக் காதலாகக் கேட்க, மதுவின் தலை தானாக ஆடியது.

"ம்ம்... தட்ஸ் குட். இதோ பாருடா... நீ என்னோட மனைவி. நான் சொன்னா நீ கேட்பே. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. ஆனால், அம்மா அப்படியில்லை. அவங்க எனக்கு மட்டும் அம்மா இல்லை, அபூவுக்கும்தான் அம்மா. அவங்களுக்கு, அவங்க பொண்ணை உன் அண்ணன் வேண்டாம்னு சொல்லிட்டானேன்னு ஆதங்கம். அதை இப்படி வெளிப்படுத்துறாங்க. எல்லாம் போகப் போகச் சரியாயிடும். கொஞ்ச நாள் எனக்காகப் பொறுத்துப் போ மது..." எனக் கொஞ்சலாக, கெஞ்சலில் சொல்ல, அவனின் குரலில் மயங்கித்தான் போனாள் மது.

"உங்களுக்காகத்தான்..." எனக் கணவனை அணைக்க, ஆறுதலாக முத்தமிட்டுக் கொஞ்சினான்.

இங்கே இவர்கள் இப்படியிருக்க, அபூவின் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த அபூவின் மனது உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிருந்தது.



அன்னை சொல்லி விட்டுச் சென்ற செய்தியைக் கேட்டபின், ஏற்கெனவே மகிழனின் மேலிருந்த கோபம் எகிறியதென்றால், அன்று தன்னை அடித்தவளைத்தான் அவன் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான் என்ற செய்தியில் அவளின் மனம் எரிமலையின் சீற்றத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

அன்னையிடம் அவள் மகிழனை மறந்து விட்டாள் என்று சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதான் என்றாலும், அவனின் மேலிருந்த வன்மம் குறைய வில்லை. சொல்லப் போனால் இப்போது அது மேலும் அதிகரித்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கேவலம் ஒரு கிராமத்துப் பெண்ணிடம் தான் தோற்றுப் போனதாக நினைத்தவள், தன்னைத் தோற்கடித்த மகிழனைக் கொன்றே விட வேண்டுமென்ற வெறியில் இருந்தாள்.

ரஞ்சிதம் இப்போது மகளிடம் புலம்பியது போதாதென்று சிவத்திடம் தன் மீதி ஆதங்கத்தைக் கொட்ட, அவர் அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

## 19

நீங்காத பாரம் நெஞ்சோடுதான்...
நான் தேடும் சுமைதாங்கி நீயல்லவா!
நான் வாடும் நேரம் உன் மார்போடுதான்...
நீ என்னைத் தாலாட்டும் தாய் அல்லவா!
ஏதோ ஏதோ ஆனந்த ராகம்...

எத்தனை நேரம் முல்லை தன் சிந்தனையின் பிடியில் அமர்ந்திருந்தாளோ, அதைக் கலைக்கவென அவள் வயிறு பசியில் கூக்குரலிட்டது.

நேற்று மதியம் உண்ட உணவு. அதன்பின் நடந்த குளறுபடிகள் அவள் உணவை மறக்கச் செய்தன.

மெதுவாக, அமர்ந்திருந்த இடத்தை விட்டு நகர்ந்து உள்ளே வந்தாள். மகிழன் அமைதியான ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

அவனை நெருங்கி நின்றாள். அவனைக் கண்ட நாள் முதல் அவன் செய்த விஷயங்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தாள்.

நினைத்தவளுக்குச் சிரிப்புதான் வந்தது. அவனிடம் குனிந்து, அவன் தாடியின் ரோமங்களை அவனுக்கு உறுத்தாமல் நீவி விட்டு, "நீ நல்லவன்தான் மகி... ஆனால், உன்கிட்ட இருக்கிற இந்த அவசர புத்திதான் எல்லா வினையும் தேடி வைக்குது. எதிலேயும் அவசரம், எல்லாவற்றிலும் வேகம். உன்னை வெச்சிக்கிட்டு..." என எதையோ செய்ய அவனிடம் குனிந்தவள்,

"சே..." எனத் தன் தலையில் தட்டிக் கொண்டு அவனை விட்டு நகர்ந்தவள், அவன் அறையை நோட்டம் விட்டாள்.

'ம்ம்... நல்ல பெரிய அறைதான்...' முல்லையின் வீட்டுக் கூடத்தையும், அவள் அறையையும் சேர்த்தால் இவனின் ஒரு அறை. சகல வசதிகளுடன் நவீன



மாக்கப்பட்ட அறை. அறையின் ஒரு ஓரத்தில் சுவரில் வரிசையாக நிறையப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன.

அங்கே சென்று ஒவ்வொரு படமாகப் பார்த்தாள். சின்ன வயதிலிருந்து எடுக்கப்பட்ட மகிழனின் படங்கள்.

ஒவ்வொன்றிலும் மிக மிக அழகாக இருந்தான்.

குண்டுக் கன்னங்களுடன் தவழும் மகிழன். அநேகமாக அது அவன் பிறந்து ஒரு வருடத்தில் எடுக்கப்பட்ட படமாக இருக்க வேண்டும். தலையில் ஒற்றைக் கொம்பு ஜடையுடன், கண்களில் மை தீட்டி, அந்தக் கார்மேகக் கண்ணனைப் போல் காட்சியளித்தான்.

இதை நினைக்கும்போதே அவள் கனவும் நினைவு வந்து, அவளின் முகத்தில் வெட்கப் பூவைப் பூக்கச் செய்தது.

அதன் பின் அவள் பார்த்த ஒவ்வொரு படத்திலும் பேரழகனாக அவள் கண்ணுக்குக் காட்சியளித்தான்.

ஐந்து வயதில் சைக்கிளில் பெடலடிக்கும் குறும்புக் கார மகிழன்...

பத்து வயதில் கையில் கிரிக்கெட் மட்டையுடன் போஸ் கொடுக்கும் விளையாட்டுத்தனமான மகிழன்...

பதினைந்து வயதில் பைக்கில் அமர்ந்து கொண்டு, வசீகரச் சிரிப்புடன் பார்ப்பவரைக் கவரும் மகிழன்...

இருபது வயதில் காலேஜ் பட்டமளிப்பு உடையுடன், கண்களில் ஒளியுடனும், எதையோ சாதித்து விட்ட சந்தோஷத்திலும் இருந்த மகிழன்...

இருபத்தைந்து வயதில் தோளில் தங்கையுடன், முகத்தில் தாடி மறைக்காத மகிழன் மிக மிக அழகாக இருந்தான்.

அதைப் பார்த்ததும், 'அச்சோ... தாடியில்லாம பய புள்ள எத்தனை அழகா இருக்கு... முதல்ல தாடியை எடுக்கச் சொல்லணும். எப்போ பாரு, முகத்தை முடிக் குள்ள ஒளிச்சு வெச்சுக்கிட்டு...' என மனதில் நினைத்துக் கொண்டு, அடுத்த படத்திற்குப் பார்வையைப் பதித்தாள்.

கடைசியாக அவனது அம்மா, அப்பா, தங்கை யோடு பொறுப்பான மகனாக, அன்பான அண்ணனாக என அனைத்திலும் மிக மிக அழகாகக் கம்பீரமாக இருந்தான் அவள் கணவன்.

அந்தக் குடும்பப் படத்தைப் பார்க்கும்போதே, அதில் தானும் இப்போது ஒரு உறுப்பினர் என்ற நினைப்பும் எழுந்தது. கூடவே ஒரு கேள்வியும் பிறந்தது.

அது... தன்னையும் ஒருத்தியாக இவன் குடும்பத்தில் அனுமதிப்பார்களா என்றுதான்! அதை நினைக்கும்போதே கண்கள் குளமாகத் தயாராக இருந்தன.

அதைத் தடுக்கவென வந்தது மகிழனின் குரல். "ஹே சுகர் கேன்டி... என்ன, சைட் அடிச்சு முடிச் சிட்டியா...?" என்ற குறும்பான குரலில்.

அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், தன்னை நொடியில் சமாளித்துக் கொண்டு, "ஹ்ம்ம்... ஆமாமா... இவர் பெரிய ஆல் இல் ஆல் அழகுராஜா... நாங்க சைட் அடிக்கிறோம்... போய்யா..." என நொடித்துக் கொள்ள,



"ம்ம்... அந்த நொடிக்கிற கழுத்துல... அப்படியே என் உதட்டை வெச்சி..." என மகிழன் இழுக்க...

"சீச்சீ... உனக்கு எப்போதுமே இதே நினைப்பு தானா...?" எனக் கோபமாகக் கேட்க,

"ஹே... எனக்குக் காலையிலதான்டி கல்யாண மாகியிருக்கு. இந்த நினைப்பு வரலைன்னாதான் தப்பு. எனக்கு மட்டும் இப்போ கை சரியா இருந்துச்சு... உன்னை என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது," எனக் காதலாகச் சொல்ல,

இப்படிப் பேசும் இவனிடமிருந்து இனி வரப் போகும் நாட்களை எப்படிக் கடத்துவதென்ற கேள்விக் குறியுடன் நின்றவளை, "கேன்டி... எனக்கு ரொம்ப ரொம்பப் பசிக்குது... கீழே போய்ச் சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வாயேன்..." என்றான்.

அவன் சொன்னதும்தான் மறந்த பசி முல்லைக்கும் வந்தது. ஆனால், அவள் எப்படிக் கீழே தனியாகச் செல்வது? அங்கே இவனின் பெற்றோர்களும் இருப்பார்களே...! அவர்களை எப்படி எதிர்கொள்வது?

"நானா...?" எனக் கேள்வியாகக் கேட்க,

"ஆமா... நீதான். எனக்குச் சாப்பாடு கொண்டு வர இன்னொரு பெண்ணையா கல்யாணம் பண்ணிக்க முடியும்? ஒரு கல்யாணத்துல நடக்க வேண்டியது எதுவும் நடக்கல..." எனக் குறும்பு பேச,

"ஆனாலும் உனக்கு இந்த நிலையிலேயும் திமிரு ஜாஸ்திதான்யா...!" என அவனின் வார்த்தைக்கு வழக்

காடினாலும், தனியாகக் கீழே செல்ல ஒரு மாதிரியாக இருந்தது.

"ஹ்க்கும்... இப்போதான் எனக்குத் திமிரு அதிகம்னு உனக்குத் தெரிஞ்சுதா? போ கேன்டி... எனக்கு ரொம்பவே பசிக்குது. நேத்து நைட் சாப்பிட்டது..." என வயிற்றைப் பிடித்துக் கொண்டு சொல்ல, முல்லைக்கு ஒரு மாதிரியாகிப் போனது.

"நீயும் வர்றியா மகி... எனக்குக் கீழே தனியாப் போக ஒரு மாதிரி இருக்கு..." எனத் தயக்கமாகச் சொன்ன வளிடம்,

"ஹே... எதுக்குத் தயக்கம்? இது உன் வீடுடா. இங்கே யாரும் உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. நானும் உன்னோடேயே வந்துடுவேன். ஆனால், நேத்து விழுந்ததில் கால் கொஞ்சம் வலியெடுக்குது. வீக்கமா இருக்கு," எனவும், அவள் வேகமாக அவன் பெட்ஷீட்டை விலக்கிப் பார்க்க, கால் நிஜமாகவே வீக்கமாகத்தான் இருந்தது.

"ஹய்யோ... இது என்ன இப்படி வீங்கியிருக்கு... நீ அந்த டாக்டர் கிட்டே சொல்லலையா?"

"நான் எங்கே சொன்னேன். அவரே என்னைத் தரோவா செக் பண்ணிட்டார். ஒரு ஆயின்மென்ட் கொடுத் திருக்கிறார். அதை அப்புறமா தடவிக்கலாம். நீ போய்ச் சாப்பாடு எடுத்துட்டு வா..." என்றான்.

அவளோ, "இது எல்லாம் என்னால்தானே மகி... நீ மட்டும் நேத்து என்னைப் பார்க்க வரலைன்னா உனக்கு



எதுவும் நடந்திருக்காது. இன்னிக்கும் இப்படி ஒரு சிக்கல் நடந்திருக்காது," என உண்மையான வருத்தத்துடன் சொல்ல,

அவளை முறைத்தவன், "இப்படிப் பேசுறதை முதல்ல நிறுத்து. நீ இப்படிப் பேசினா எனக்கென்னவோ நான் உன்னைக் கட்டாயக் கல்யாணம் பண்ணிக்கிட்டது மாதிரி தோணுது..." எனக் கோபமாகச் சொன்னவனைச் சமாதானப்படுத்தும் நோக்கோடு,

"சரி, சரி... விடு. இரு, நான் உனக்குச் சாப்பாடு எடுத்துட்டு வர்றேன்..." என்றவள், தயக்கமாகவே கீழே சென்றாள்.

கீழே வெங்கட் ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண் டிருந்தவர், மேலிருந்து இவள் வருவதைக் கண்டும் காணாதவர் போல் அமர்ந்திருந்தார்.

அவரின் புறக்கணிப்பு முல்லை எதிர்பார்த்ததுதான். தலை குனிந்தவாறு நடந்து சென்றவள், அந்தப் பெரிய வீட்டில் எது எங்கிருக்கிறது என அவளுக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

மாடிப் படிக்கட்டுக்கு வலது பக்கம் சாப்பாட்டு மேஜையிருக்க, அதை ஒட்டித்தான் கிச்சன் இருக்கும் என்ற அனுமானத்தில் உள்ளே செல்ல, அது ஸ்டோர் ரூமாக இருந்தது.

"ப்ச்..." என்ற சலிப்புடன் அக்கதவை அடைத்து விட்டுத் திரும்ப, அதற்கு நேர் எதிரில் இருந்த அறையின்

வாயில் வழியாக வந்த அவ்வீட்டு வேலைக்காரார் ஆறுமுகம், இவளைக் கண்டவுடன் கொஞ்சம் பதட்டமாகத் தெரிந்தார்.

அவருக்குள், முல்லையுடன் பேசலாமா கூடாதா என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்தது.

காலையிலிருந்து அங்கே நடந்தவற்றை ஓரமாக நின்று கவனித்தார்தான். அதனால்தான் அவருக்கு இப்போது என்ன செய்வதென்று புரியவில்லை.

இதுவரை கோகிலாவும் வெங்கட்டும் அவளுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இவரிடமும் அவளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. தானாக வலியப் பேசினால், அதனால் ஏதேனும் பிரச்சனையாகி விடப் போகிறதென்று மௌனமாகவே அவ்விடம் விட்டு நகர முற்பட,

முல்லைக்கு, அவரின் தோற்றத்தில் அவர் அவ்வீட்டு வேலைக்காரார் என்பது தெரிந்தாலும், தன்னைத் தவிர்ப்பவரிடம் என்ன கேட்பது என்று தயங்கி நின்றாள்.

அவளின் தயக்கத்தை உடைக்கவென அவள் வயிறு உள்ளுக்குள் பேரலையை ஏற்படுத்த, "அண்ணா... அவருக்குச் சாப்பிட ஏதாவது..." எனத் தயங்கிக் கேட்க,

அவர் ஒன்றும் சொல்லாமல் உள்ளே சென்று ஒரு தட்டில் சாப்பாட்டுடன் வந்தவர், அவள் கையில் கொடுத்து விட்டு மீண்டும் உள்ளே சென்று விட்டார்.

கையில் தட்டை வாங்கிய முல்லைக்கு, வேகமாகச் செல்லும் அவரிடம் எனக்கும் பசிக்கிறதென்று கேட்க



மிகவும் சங்கடமாக இருந்தது. அதே சமயம் தனக்கேற்பட்ட இந்நிலையை அவள் முற்றிலும் வெறுத்தாள்.

அதே வெறுப்புடன் வந்தவள், சாப்பாட்டு மேஜையிலிருந்த ஜக்கில் தண்ணீரை எடுத்து முழுவதும் வாய்க்குள் சரித்துக் கொண்டு, மகிழனுக்காக வாங்கிய சாப்பாட்டை எடுத்துக் கொண்டு மேலே சென்றாள்.

மேலே வந்த முல்லையின் ஆடையில் தண்ணீர் சிந்தியிருப்பதைக் கண்டு குழப்பமான மகிழன், அவள் கையிலிருந்த ஒரு தட்டைக் கண்டவனுக்கு இப்போது புரிந்து போனது.

முல்லை அவன் அருகில் வர வர, எவ்வளவு முயன்றும் அவளால் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

சாப்பாட்டுத் தட்டை அருகிலிருந்த மேஜையின் மேல் வைத்து விட்டு, அங்கிருந்து செல்லத் திரும்ப, மகிழனின் இரும்புப் பிடியில் தயங்கி நின்றாள்.

"உனக்குச் சாப்பாடு எடுத்துட்டு வரலையா?" எனக் கோபமாகக் கேட்க, ஒரு சில நொடி அவளின் மௌனத்திற்குப் பின் மீண்டும் அக் கேள்வியைக் கேட்க, "எனக்குப் பசியில்லை..." எனக் கரகரப்பான குரலில் அவள் பதிலளிக்க,

வேகமாகப் படுக்கையை விட்டு எழுந்தவன், அவளையும் இழுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

"எங்கே போறே...? அதான் கால் வலிக்குதுன்னு சொன்னியே... இங்கேயே சாப்பிடு மகி..." என அவன் பிடியைத் தளர்த்த முயல,

அவனோ கோபமாகத் தத்தித் தத்தி நடந்து, அவளையும் இழுத்துக் கொண்டு வீட்டு ஹாலுக்கு வந்து, "ஆறுமுகம்..." என்ற அவனின் குரலில் சோபாவில் அமர்ந்திருந்த வெங்கட் எழுந்து நிற்க, அறைக்குள் முடங்கியிருந்த கோகிலா பதற்றத்துடன் வெளியே வர, ஆறுமுகமும் அங்கே வேகமாக ஓடி வந்தார்.

ஆறுமுகம் வந்தவுடன், "வெளியே தோட்டக்காரர், டிரைவர், வாட்ச்மேன் எல்லோரையும் கூப்பிடுங்க..." என்றதும், நொடியில் அனைவரும் அவன் முன்னே ஆஜராகினர்.

"இங்கே இருக்கிற எல்லோருக்கும் சொல்றேன்... இவள், முல்லை. என்னோட மனைவி. இனிமேல், இந்த வீட்டில் எனக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதைவிட அதிகமான உரிமையும், மரியாதையும் முல்லைக்குக் கொடுக்கணும். இனிமேல் அவள்தான் உங்களுக்குச் சம்பளம் கொடுக்கப் போகிற முதலாளி. என்ன... எல்லாருக்கும் புரிஞ்சுதா...?" எனக் கர்ஜனையாக வார்த்தைகளை வெளியிட,

அனைவரும் பவ்வியமாக அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டு அங்கிருந்து நகர, சென்ற ஆறுமுகத்தை நிறுத்தியது மகிழனின் குரல்.

"எனக்கும் முல்லைக்கும் சாப்பாடு எடுத்து வையுங்க..." எனச் சொல்லி, அவளை அழைத்துக் கொண்டு சாப்பாட்டு மேஜைக்குப் போக, முல்லைக்குத் தான் ஏதோ தெரியாத வீட்டில் விருந்துண்ண வந்ததைப் போன்ற உணர்வில் தொண்டையடைக்க, அவனுடன் சென்றாள்.



அகோரப் பசியில் இருந்தவள், இப்போது நடந்த இந்நிகழ்வில் அவளின் பசி பின்னுக்குத் தள்ளப்பட்டு, மனதில் வெறுமை கூடிக் கொண்டிருந்தது.

ஆறுமுகம் வைத்த உணவில் ஒரு கவளம் கூட உள்ளே செல்ல மறுக்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்த மகிழனுக்கு, அவளது உணர்வுகள் ஓரளவுக்குப் புரிந்தன.

அவனாலும் அவனது வலது கையை அசைக்க முடியாமலிருக்க, அவளின் எண்ணத்தைத் திசை திருப்பும் பொருட்டு, "கேன்டி... எனக்குக் கை வலிக்குது. நீயே ஊட்டி விடேன்..." எனச் சாதாரணமாகச் சொல்ல, வெறுமையில் இருந்தவள் திகைப்புடன், "என்னது... நானா...?" என மீண்டும் கேட்டு வைக்க,

"ப்ச்... என்ன, எல்லாத்துக்கும் நானா நானான்னு கேள்வி கேட்டுகிட்டு... சொன்னதைச் செய்..." என அதட்ட, அவனது அதட்டலுக்குப் பயந்து இல்லையென்றாலும் அவனின் நிலையும், பசியும் உணர்ந்து அவனுக்கு உணவூட்டினாள்.

முதலில் தயக்கமாக ஆரம்பித்தவள், பின் இயல்பாக ஊட்ட, மகிழன், "நீயும் சாப்பிடு... ம்ம்..." என அவளையும் சேர்த்து உண்ண வைக்க, ஹால்

சோபாவில் அமர்ந்து இங்கே நடப்பதை ஓரப் பார்வையால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தன் தந்தையைப் புன்னகையுடன் பார்த்தான்.

முல்லை இயந்திர கதியில் உணவை முடித்துக் கொண்டு மகிழனுடன் மேலே செல்ல, அவனைப் படுக்கையில் வசதியாகப் படுக்க வைத்து விட்டு, மீண்டும் அவனை விட்டுப் பால்கனிக்குச் செல்ல முயன்றாள்.

அவளைத் தடுத்து, "ஹே... சும்மா சும்மா ஏன் அங்கேயே போறே? நான்தான் இங்கே இருக்கேனே... இங்கேயே இரு. இனிமேல் இது நம்ம ரூம்..." எனக் கையைப் பிடித்துக் கேட்க, அவள் மௌனமாக அருகில் அமர்ந்து கொண்டாள்.

அவள் மௌனம் அவனை என்னவோ செய்தது. முதல் நாள் இவன் பார்த்த முல்லைக்கும், இன்று இவன் பார்க்கும் முல்லைக்கும் எத்தனை வித்தியாசம்! அதை அவளிடமே கேட்டான்.

"கொடி..." என்ற அழைப்புக்குப் பதில் இல்லாமல் போகவும், "கொடிஈஈ..." என அவள் காதில் கத்த,

"ஐயோ... எதுக்கு இப்போ கழுதை மாதிரிக் கத்துற...?" எனக் காதைத் தேய்த்துக் கொள்ள,

"ஹான்... கழுதையா...! அம்மா தாயே... இந்த மாதிரி வெளியே சொல்லிடாதே... அப்புறம் வெளியில இருக்கிறவங்க கிட்ட என்னோட கெத்தே குறைஞ்சுடும்..." எனப் பாவமாகச் சொல்ல,



"நான் அப்படித் தான் சொல்வேன்... என்னால எதையும் மாத்த முடியாது..." என அவளும் அதே கெத்துடன் சொல்ல...

"ஹம்ம்... இத... இத இந்த வாயாடி முல்லையைத் தான் எதிர்பார்த்தேன்... எப்போ பாரு உம்மணா மூஞ்சி மாதிரி அழுது வழியுற அந்த முல்லை எனக்கு வேண்டாம்..." என அவள் கன்னங்களைப் பற்றிச் சொல்ல,

அவன் கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்து ஒரு பெருமூச்சை வெளியிட்டாள்...

"இப்போ திரும்பவும் என்னம்மா...?" எனக் காதலாகக் கேட்டவனை... மௌனமாக ஏறிட்டுத் தலை குனிய,

"இதோ பாருடி கேன்டி, நீ உன்னோட மனசுல என்ன இருக்குன்னு சொன்னாத் தான் புரியும். ப்ளீஸ்டா, ஏதாவது பேசு. உனக்கு ஏதாவது என்னிடம் கேட்கணுமா, கேளு. பேசினாத் தானே ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முடியும்...?" என விளக்க,

அவனின் கேள்விக் குரலில் தன் தயக்கத்தைத் தகர்த்தெறிந்து, "மகி... மகி..." என அவனின் நெஞ்சில் சாய்ந்து கதறியழுதாள்.

அதே அழுகை... அன்று அவன் மனதை உலுக்கிய முல்லையின் அழுகை... அன்று அவளின் கண்ணீரைத் துடைக்க முடியவில்லை.

ஆனால் இன்று...

"கொடி... ப்ளீஸ்டா... தயவு செய்து அழாதேம்மா... என்னால உன்னோட அழுகையைப் பார்க்க முடியல. அழாதேடா..." என முடிந்த மட்டும் அவளைத் தன்னோடு இறுக்கி ஆறுதலளிக்க முயன்றான்.

அவனின் ஆறுதலுக்குச் செவி சாய்த்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்று, "நடந்தது எல்லாம் சரியா மகி..." எனக் கேவலுடன் கேட்க,

அவளின் கேள்வியில் குழம்பியவன், "ஏன்டா... ஏன் இப்படிக் கேட்கிற..." என்றவன், அவளின் கண்ணோடு கண் சேர்த்து, "நடந்தது எதுவும் உனக்குப் பிடிக்கலையா கொடி...?" என வேதனையுடன் கேட்க,

மீண்டும் அவன் நெஞ்சில் சாய்ந்தவள், "அப்படி யில்ல... எதுவுமே முறையா நடக்காமல்... ஏதோ சூழ்நிலைக் கைதிகளைப் போல்... நடந்த இந்த விசயத்தில் நமக்கு நெருக்கமானவங்களோட புறக்கணிப்பைத்தான் என்னால் ஏத்துக்கவே முடியல..." எனத் தன் நெஞ்சில் இருந்தவைகளை அவனிடம் பகிர்ந்து கொள்ள,

"எனக்குப் புரியுதும்மா... இது மட்டும் இன்று நடக்கலைன்னா நீ எனக்குக் கிடைச்சிருக்க மாட்டியே கொடி..." என்க, அவன் குரலில் வழிந்த காதலில் உருகி அவன் நெஞ்சம் சாய்ந்தாள்.

"கொஞ்சம் கஷ்டமாத்தானிருக்கும்... போகப் போக எல்லாம் சரியாகிடும்டா..." என்க, அவள் மௌனமாக



அவனின் நெஞ்சிலே படுத்திருக்க, அவனும் அவளுக்கு ஆதரவாகத் தன் அணைப்பை இறுக்கினான்.

அவர்களின் நிலையைக் கலைக்கவென அவனின் செல்போன் ஒலியெழுப்பியது.

சின்னச் சலிப்புடன் எடுத்துப் பேசியவன், "சார்... நான் பிரபு... கீழே உங்களைப் பார்க்க இன்ஸ்பெக்டர் சத்தியமூர்த்தி வந்திருக்கார்..." எனவும்,

"ஹம்ம்... அதுக்குள்ள அப்பா போலீஸ்க்கு கம்ப்ளைன்ட் பண்ணிட்டாரா....! சரி, இரு. இதோ வரேன்..." எனச் சலிப்புடன் மனைவியை மனமே இல்லாமல் விலக்கிக் கொண்டு அவளின் கைப்பிடியில் கீழே வந்தான்.

**கே.**ஆர். மில்ஸ் எம்.டி அறையில் கேசவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவரின் முகத்தில் ஏகப்பட்ட குழப்பம், கேள்விகள். அதைவிடப் பயம் கலந்திருந்தது...

அவரின் யோசனையைக் கலைக்கவென ரவி உள்ளே வந்தான்.

"என்ன டாடி... கூப்பிட்டிருந்தீங்க..." என அறைக்குள் வந்த மகனைக் கோபமாகப் பார்த்தவர்,

"உட்காரு... உன்னிடம் கொஞ்சம் பேசணும்..." என தானும் அவனின் எதிரில் அமர்ந்து கொண்டார்.

அமர்ந்தவர் செல்போனை நோண்டிக் கொண் டிருந்த மகனிடம், "மகிழனை யாரோ கொலை செய்ய

முயற்சி செஞ்சிருக்காங்க... கத்தியால் குத்திட்டாங்களாம்... உனக்குத் தெரியுமா...?" எனக் கூர்மையாகக் கேட்க,

"என்னது...? மகிழனைக் கொலை பண்ண முயற்சியா...! யாருப்பா அது...?" எனத் திகைப்பாகக் கேட்க, மகனின் திகைப்பில் கேசவனும் யோசனைக் குள்ளானார்.

## 20

பாறை ஒன்றின் மேலே...
ஒரு பூவாய் முளைத்தாயே...
உறவுக்கு உயிர் தந்தாயே...
நானே எனக்கு நண்பன் இல்லையே...
உன்னால் ஒரு சொந்தம் வந்ததே...

**கே**சவன் சொன்ன செய்தியில் ரவி திகைத்ததைக் கண்டு அவர் மிகவும் குழம்பிப் போனார்.

அன்று ரவிக்கும், மகிழனுக்கும் ஏற்பட்ட மோதலில் அவனைச் சும்மா விடக்கூடாது... ஏதாவது செய்து அவனைப் பழிவாங்க வேண்டுமென்று சீறிக் கொண் டிருந்த மகனை, மகிழனின் பலத்தைப் பற்றிப் பேருரை யாற்றி அவனை அடக்கப் பெரும் பாடுபட்டார்...

ஆனால் அது நடந்து முழுதாக ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் இன்று மகிழன் குத்துப்பட்டுக் கிடக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும், கேசவனுக்கு முதலில் சந்தேகம் வந்தது, தான் பெற்ற மகனின் மேல் தான்...



ஆனால் ரவியின் திகைப்பு அவரின் சந்தேகத்தை யோசிக்க வைத்தது... மகன் ஏதேனும் பொய் உரைக் கிறானோ எனக் கூர்மையாக ரவியைப் பார்க்க, அவனோ யோசனையுடன் அமர்ந்து கொண்டிருந்தான்.

"ரவி... பொய் சொல்லாமல் உண்மையைச் சொல்லு... உனக்கும் மகிழனின் இந்த நிலைக்கும் ஏதும் சம்பந்தம் இருக்கிறதா...? எதாக இருந்தாலும் சொல் லிடுடா... அவனைப் பற்றி உனக்குத் தெரியாது... தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு இரண்டு கண்ணும் போகணும்னு நினைக்கிற ஆள்... அப்பாகிட்ட மறைக்காமல் சொல்லிடு ரவி... அவன் எழுந்து நட மாடுவதற்குள் ஏதாவது செய்து உன்னைத் தப்பிக்க வைக்கிறேன்..." எனக் கேசவன் நிறுத்தாமல் பேசிக் கொண்டே போக,

"அப்பா... ஜஸ்ட் ஸ்டாப் இட்... என்னமோ அவன் பெரிய டான் மாதிரி இவ்வளவு பில்ட் அப் கொடுக் கறீங்க... நீங்க இப்படி பேசப் பேசத்தான் எனக்கு அவன் மேல் கொலை வெறியே வருது..." என எரிச்சலாகச் சொல்ல,

"என்னது...? கொலைவெறியா... டே மகனே... அப்போ நீதான் அதைப் பண்ணினதா..." எனப் பீதியுடன் கேட்க,

"ஐயோ! இல்லப்பா... நான் அவனைப் போட ணும்னு பிளான் பண்ணினேன் தான்... ஆனால் எனக்கு முன்னாடி யார் முந்தினான்னுதான் தெரியல... எனக்கு

அவன் நிலைமையே இப்போ நீங்க சொல்லிதான் தெரியும்..." என்க,

"நிஜமாவா ரவி...?" எனக் கவலையுடன் கேட்ட தந்தையை,

"அப்பா... ஏன்ப்பா படுத்துறீங்க... சத்தியமா எனக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... நம்புங்க..." என்றவன், தன் செல்போனில் சில நம்பர் களைத் தட்டி அது எடுக்கப்படுவதற்காகக் காத்திருந்தான்...

அந்தப் பக்கமிருந்தவரிடம் சிலவற்றைக் கேட்டுக் கொண்டு போனை அணைத்தவன், தந்தையிடம், "அப்பா... எனக்குத் தெரிந்த சில குரூப்ஸ்கிட்ட விசாரிச் சேன்... அவங்களுக்கும் இது பற்றி எதுவும் தெரியல... யார் இதைப் பண்ணிருப்பாங்கன்னு ஒரு க்ளூவும் கிடைக்கலையே..." எனத் தாடையைத் தடவிக் கொண்டு சொல்ல...

"சரிடா... விடு. ஆனால் ரவி... மகிழனைப் போடணும்னு பிளான் போட்டிருக்கேன்னு சொன்னியே.... அதை இப்போவே ட்ராப் பண்ணிடு... இப்போ மகிழன் அடிபட்ட வேங்கை. முன்னை விட ரொம்பவே அலர்ட்டா இருப்பான்... ஏதாவது நீ பண்ணி அவன் மட்டும் உன்னைக் கண்டுபிடிச்சுட்டான்னு வை.... அப்புறம் உன்னையும் சரி, நம் கம்பெனியையும் சரி... உருத் தெரியாமல் அழிச்சுடுவான்... எதுக்கும் ரொம்பவே ஜாக்கிரதையா இரு...." என எச்சரிக்கையாகச் சொல்ல...

"சே... போங்கப்பா..." எனக் கோபத்துடன் அறையை விட்டு வெளியே சென்று விட்டான்....



மகிழனின் வீட்டில் இன்ஸ்பெக்டர் சத்யமூர்த்தி எவ்வளவு கேட்டும் அவனின் பதில், "தெரியாது!" என்பது தான்...

அவனுக்கு உண்மையாகவே தன்னைக் கொலை செய்ய வந்தவனைப் பற்றித் தெரியாதுதான். ஆனாலும் அவனின் அங்க அடையாளங்களைக் கூடச் சொல்ல மறுத்துவிட்டான்...

சத்யமூர்த்தி இதை எதிர்பார்த்துதான் வந்தார். ஆனாலும் வெங்கட்டின் புகாரின் பெயரில் மகிழனை விசாரிக்க, அவனோ தனக்குத் தெரியாது என்ற ஒற்றை வார்த்தையைத் தவிர வேறு எதுவும் சொல்லவில்லை....

அவனுக்கு யாரின் மீதாவது சந்தேகமா என்ற கேள்விக்கும், "தெரியாது..." என்றே கூறினான்...

முல்லைக்கோ, 'இவன் ஏன் இப்படிச் சொல்கிறான். இவனைக் குத்திய இடத்திலிருந்து வீதி விளக்கு ஐம்பதடி தள்ளித் தானிருந்தது. குத்தியவனின் முகம் சரியாகத் தெரியவில்லை என்றாலும் அவனின் நிழல் உருவமாவது தெரிந்திருக்க வேண்டுமே. தூரமாக ஓடி வந்த அவளுக்கு அந்தப் புதியவன் மிகவும் ஒடிசலான உருவமாகத் தெரிந் தானே...!' என யோசிக்க,

அவளின் யோசனையைக் கண்ட இன்ஸ்பெக்டர், "என்னம்மா... உனக்கு எதாவது ஐடியா இருக்கா...?" என்க,

"ஆமா சார்... அவன் ரொம்ப ஒல்லியா இருந்த மாதிரி இருந்ததுங்க.... எப்படியும் இருபது, இருபதைந்து

வயதுக்குள்ள இருக்கும்னு நினைக்கிறேனுங்க... மத்தப்படி மழை வேறயா... ஸ்ட்ரீட் லைட் விட்டு விட்டு எரிஞ்சதுல சரியாத் தெரியல... அப்புறம் மகியை அந்த நிலையில பார்த்ததும் எனக்கு வேற எதுவுமே தோணல..." என கவலையாகச் சொல்ல,

மகிழன் முல்லையை முறைத்துப் பார்க்க, சத்ய மூர்த்திக்கோ தனக்கு இதுவே போதும் என்பது போல், "சரிம்மா.... அவனைப் பற்றி உனக்கு வேறு ஏதேனும் ஞாபகம் வந்தா எனக்குக் கண்டிப்பா தெரியப்படுத்துங்க...." என்றவர், மகிழனிடமும் வெங்கட்டிடமும் விடைபெற்றுச் செல்ல,

அவர் செல்வதற்காகவே காத்திருந்தது போல், "இப்போ எதுக்கு அந்த இன்ஸ்பெக்டர்கிட்ட இவ்ளோ டீடெய்ல்ஸ் கொடுத்த...?" எனக் கோபமாகக் கேட்டவனை,

"நீ என்ன லூசாய்யா... உன்னைக் குத்தினவனை அடையாளம் கேட்டா சொல்ல வேண்டியதுதானே... தூரத்தில இருந்து பார்த்த எனக்கே அவனை அடை யாளம் தெரிஞ்சுது. குத்தப்பட்ட உனக்குத் தெரிய லையா... நானே எதையோ அரையும் குறையுமா பார்த் துட்டுச் சொல்லிருக்கேன்... அதை வச்சு போலிஸ் கண்டு பிடிக்குமான்னு வேற எனக்குச் சந்தேகமா இருக்கு. அது சரி. அன்னிக்கு காரைக் கொண்டாந்து என் மேல மோதின. இன்னிக்குக் கண்ணுக்கு முன்னாடி இருந் தவனை அடையாளம் தெரியலன்னு சொல்ற.... உனக்குக் கண்ணு குருடுன்னு இப்போ எனக்கு கன்ஃபார்மே



ஆகிடுச்சு..." எனக் கோபமாகச் சொல்ல, பக்கத்திலிருந்த பிரபு பக்கெனச் சிரித்துவிட்டான்....

அவனைப் பார்த்து முறைத்துவிட்டுத் திரும்பிய மகிழனுக்குத் தன் தந்தையும் வரும் சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தது நன்றாகவே தெரிந்தது.

"இவளை வைச்சுக்கிட்டு..." என மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டு,

"பிரபு... ஒரு ஒன் வீக் கம்பெனியைப் பார்த் துக்கோ... ஏதாவது முக்கியமான விஷயம்னா மட்டும் எனக்குக் கால் பண்ணு....." என்றவன்,

முல்லையிடம், "நீ முதல்ல மேல வா...." என அவளைத் தள்ளிக் கொண்டு மேலே சென்றான்.

மேலே இழுத்துக் கொண்டு வந்தவனை, "என்னய்யா.... குத்தினவனைக் காப்பாத்தினா உனக்கு ஏதாவது தியாகிப் பட்டம் கொடுக்கிறாங்கன்னு சொல்லி யிருக்காங்களா...?" என மீண்டும் சண்டைக்குத் தயாரா னவளை, இழுத்தணைத்து அவள் துடிக்கும் உதடுகளைச் சிறை செய்தான்.

நீண்ட நாட்களுக்குப் பின் மகிழனின் இந்த முத்தம் முல்லையைத் தன் வசம் இழக்கச் செய்தது.

அன்றைக்குப் பின் தினம் தினம் கனவில் வந்து இவளை ஏங்கச் செய்த அதே முத்தம் இன்றும் அவளை அவனிடம் சரணடையச் செய்தது...

நிற்காமல் வாயடித்தவளைத் தன் முத்தத்தால் அடக்கிய மகிழன், மயங்கிய அவளைத் தன் நெஞ்சோடு சாய்த்துப் படுக்கைக்கு அழைத்து வந்தான்....

வானம், மாலைச் சூரியனுக்கு விடை கொடுத்து. இரவு நிலவு மகளை வரவேற்றுத் தன் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்த அவ்வேளையில் அழகிய புது மனைவியும், அவளிடமிருந்து கிடைத்த இதழ் முத்தமும் அவனை நிதானமிழக்கச் செய்தது...

தானிருக்கும் நிலையும் மீறி உணர்ச்சிகள் அவனை வெல்ல, மயங்கிய மனையாளைத் தன்னுள் அடக்க அவனின் கைகள் அதன் வேலையைத் துவங்கின.

முல்லைக்கும் இப்புதிய ஸ்பரிசம் அவளின் பெண்மையின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட அவனிடம் மயங்கிக் கிடந்தாள்...

மெல்ல மெல்ல முன்னேறிய மகிழனின் கைகள் ஒரு கட்டத்திற்கு மேல் அவனுக்கு ஒத்துழைக்க மறுக்க...

"ஸ்ஸ்...." என முனகி விட, மயங்கிய மங்கை விழித்துக் கொண்டாள்....

நொடியில் அவனின் பிடியிலிருந்து விலகிய முல்லை, தன்னை நினைத்து வெட்கியவளாய், "என்னது, மகி...?" எனக் கோபமாகக் கேட்க,

அவளின் கோபம் புரியாமல், புது மனைவியை ஆள முடியாமல் இருக்கும் தன் நிலையை எண்ணி வெறுத்தவனாக, 'ப்ச்.... யாருக்கும் இந்த நிலை வரவே



கூடாது.... புதுக் காதல் மனைவியைக் கட்டிப் பிடிக்கக்கூட முடியாத நிலை...." என ஏக்கத்துடன் சொன்னவன்,

"என்னைக் குத்தினவன் மட்டும் இப்போ என் கையில் கிடைச்சான்.... அவனுக்கு அன்னிக்குத்தான் அது கடைசி நாள்...." என இத்தனை நேரம் காதல் மன்னனாக இருந்தவன், இப்போது காட்டின் சிங்கம் போன்று கர்ஜனையாகச் சொல்ல, முல்லைக்கே அவனின் இக் குரல் சற்றுப் பயப்படுத்தியது...

"என்ன நீ... இப்போ இப்படி சொல்ற... அப்போவே அந்தப் போலிஸ்கிட்ட உனக்குத் தெரிஞ்சத சொல்லி யிருக்க வேண்டியது தானே..." எனக் கேள்வியாகக் கேட்க,

"சொல்லி...?"

"சொல்லியிருந்தா அவனைப் பிடிச்சு அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருப்பாங்கல்ல..."

"என்ன.... ஒரு வருஷமோ ரெண்டு வருஷமோ அவன் நோகாம ஜெயில்ல இருந்துட்டு வருவான்... நான் அவனை அப்படியே விட்டுட்டு இருக்கணுமா...?" என்றவனைக் குழப்பமாகப் பார்த்து.

"என்ன புரியலையா....?" எனக் கண்ணடித்துக் கேட்டவன், "மை ஸ்வீட் கேன்டி.... உனக்கு விவரமா சொன்னாத்தான் புரியும்..... இங்க வா..." என்றவன்,

விலகியவளை, மீண்டும் தன்னருகில் இழுத்து அமர்த்தி, "அதாவது கேன்டி... என்னை ஒருத்தன் குத்திட்டு அவன் அவ்வளவு சுலபமா தப்பிக்க முடியாதுடா கொடி...

அவன் ஏன்டா இந்த மகிழன் மேல் கை வைச்சோம்னு இந்த வாழ்நாள் முழுவதும் ஃபீல் பண்ணி அழணும்... அந்த அளவுக்கு அவன் என்கிட்டயிருந்து வாங்கணும்.... அப்போ தான் அவனுக்கு என்னைப் பத்தி புரியும்....

"அதனாலதான் போலிஸ்கிட்ட எதுவும் சொல்லல... இப்போ போலிஸ் எதுக்கு அவனைப் பத்தி என்கிட்ட விசாரிச்சாங்கன்னு நினைக்கிற... என் அப்பா குத்திய வனை எங்கிட்டயிருந்து காப்பாத்தத்தான் போலிஸ்கிட்ட புகார் பண்ணியிருக்கார்...." என்க,

அவன் சொன்னவற்றை அனைத்தையும் திகைப் புடன் கேட்டுக் கொண்டிருந்த முல்லை, "நீ என்ன இப்படி எல்லாம் பேசுற....?" எனத் திகிலாகக் கேட்க,

"எப்படி...?" எனப் புன்னகையுடன் கேட்டவனை,

"ம்ம்... ர...ரவுடி மாதிரி...." எனத் தயக்கமாகச் சொன்னவளை,

"ஹா ஹா ஹா... நான் அப்பப்போ ரவுடியா ப்ரொமோட்டாகிடுவேன்..." எனக் கிண்டலாகச் சொன்ன வனை,

"ப்ச்.... எனக்குத் தூக்கம் வருது.... எங்க படுக்க....?" கேள்வியாகக் கேட்டவளை....

"இங்கதான் படுக்கணும்... வேற எங்க...?"

"இங்கயா...!"

"ஏன்.... இங்கதான்.... இது என்ன கேள்வி கொடி... நவ் யூ ஆர் மை வைஃப்...." என உரிமையான குரலில் சொன்னவன்,



"அது சரி. ஆனாலும்..." என இழுத்தவளை,

"பேசாமல் இங்கேயே படுடி..." என அவளை இழுத்துத் தன்னோடு படுக்கையில் சரித்தான்.

முல்லை, பல நாட்கள் சரியாக உறங்காததால், படுக்கையில் படுத்தவுடன் தன்னைக் குறுக்கிக் கொண்டு உறங்கி விட்டாள்...

மகிழன் மதியம் நன்றாக உறங்கி விட்டதால் அவனுக்கு இப்போது உறக்கம் தூரச் சென்றது.

அருகில் அழகிய மனைவியை வைத்துக் கொண்டு, அவளை அனுபவிக்க முடியாமல் அவனின் தவிப்பு அதிகமானது.

தனது இடது பக்கம் படுத்திருந்தவள் அருகில் மெல்ல மெல்ல நகர்ந்து, அவளின் முகத்தைத் தன் விரலால் வருடிக் கொண்டிருந்தான்.

அவனின் மெல்லிய ஸ்பரிசத்தில் தூக்கத்தில் மெல்ல அசைந்தவள் அவனின் விரலைத் தன் கழுத் தடியில் வைத்து அழுத்திக் கொள்ள, மகிழனுக்கோ அது மேலும் சுகமான வதையாக இருந்தது. அவளிடமிருந்து தன் கைகளை மெல்ல உருவிக் கொண்டவன் மீண்டும் விரல்களை உலாவவிட, அவள் அனுமதியில்லாமலே கைகள் அவளின் அங்கங்களில் பதிய, நன்கு உறக்கத் திலிருந்தவள் தன்னுணர்வு பெற்றுப் பதறி எழுந்தாள்...

"என்ன மகி பண்ற...?" எனத் தன்னைக் குறுக்கிக் கொண்டு அமர,

"கொடி.... என்னால சுத்தமா முடியல.... இந்த மாதிரி ஒரு பொண்ணோட இதுதான் முதல் முறை.... சின்ன வயசுல இருந்து பார்த்து, படிச்சது எல்லாம் இப்போ ஒண்ணா ஞாபகம் வருது..." எனக் குரலில் ஏக்கத்துடன் சொன்னவனை...

"உனக்கு இந்த நிலையில இது தேவையா மகி...?" என அவனைத் தவிர்க்க நினைத்துச் சொல்ல,

அவளின் அக்கறையில் கரைந்தவன், "நான் மெதுவா ஆரம்பிக்கிறேன்டா...." என மேலும் அவளை நெருங்க,

"ப்ச்... எனக்கு இது பிடிக்கலை..." என உடனே கட்டிலில் இருந்து இறங்க,

அப்போதுதான் தன் நிலையிலிருந்து வெளியே வந்தவன், அவனும் எழுந்தமர்ந்து, "ஏன் பிடிக்கலை...? உரிமையோடு தானே உன்னைத் தொடறேன்.. நேத்தும் நீயும் நானும் ஒண்ணா ஒரே அறையில் தானே இருந் தோம்... அப்போ இந்த மாதிரி நான் நடந்துகிட்டேனா...?" எனக் கோபமாகக் கேட்டவனை,

"நீ மட்டும் அப்படி நடந்திருந்தா என்னை இப்போ நீ உயிரோடவே பார்த்திருக்க முடியாது மகி...!" எனத் தீவிரமான குரலில் சொன்னவளை,

"முட்டாள்... என்னடி பேச்சிது.... நான் தொட்டால் நீ செத்துப் போயிடுவியா....? அப்போ நீ என்னைக் காதலிக்கிறேன்னு சொன்னது எல்லாம் பொய்யா...!"



"எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடற மகி...? காதலுக்கும் என் தன்மானத்துக்கும் நிறைய வித்தியாச மிருக்கு..."

"புரியல..." எனக் கூர்மையாகக் கேட்டவனுக்கு,

"நான் உன்னை என் உயிராத்தான் நினைக்கிறேன் மகி.... உனக்காக என்னைக் கொடுக்கிறதுல எனக்கு எந்தத் தயக்கமும் இல்ல.... ஆனா அதுக்கு முன்னாடி சில விஷயங்களை நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்குப் புரிய வைக்கணும்...." எனத் தீர்மானமாகச் சொன்னவளை,

"எதை...?"

"ம்ம்... என்னைப் பற்றி உன் அப்பா, அம்மா நினைச்சுகிட்டு இருக்கிற அபிப்ராயத்தை மாத்தணும்..."

"உன்னைப் பற்றி என் அப்பா, அம்மா என்ன நினைக்கிறாங்கனு நீ சொல்ற...?"

ஒரு பெருமூச்சை வெளியிட்டு, "நா.... நான்.... உ.... உன்னை ம...மயக்கி, ஏமாற்றிக் கல்யாணம் செய்துகிட்டேன்னு அவங்க நினைக்கிறாங்க...." எனத் தயங்கித் தயங்கிச் சொன்னவளை,

"என்ன உளறல் இது..." கோபமாகக் கேட்டவனை,

"உளறல் இல்ல... நிஜம்...." எனச் சொல்லி முடிக்கும் போதே அவள் குரல் தழுதழுத்தது....

"எது நிஜம்... அவங்களையே நீ இப்போதான் பார்த்த! பார்த்த கொஞ்ச நேரத்துல உனக்கு அவங்க மனசுல இருக்கறது தெரிஞ்சுடுச்சா....?"

"ஏன் தெரியாது.... எதிரில் இருக்கறவங்க நம்மளை எந்தப் பார்வையில பார்கிறாங்கன்னு புரிஞ்சுக்க முடியாத குழந்தையா நான்...?" என்றவளை,

"ஹா ஹா ஹா....குட் ஜோக் கொடி...." எனச் சத்தமாகச் சிரித்தவனைக் கோபமாகப் பார்த்து. "இப்போ எதுக்குச் சிரிக்கிற...?"

"ம்ம்... இல்ல... நீ சொன்னதைக் கேட்டுச் சிரிச்சேன்..." என மீண்டும் நிற்காமல் சிரித்தவனை,

"ப்ச்... சும்மா கடுப்பேத்தாதே மகி...." என விரல் நீட்டி மிரட்டியவளின் கையைப் பற்றித் தன் பக்கமிழுத்து,

"பின்னே சிரிக்காமல் என்ன செய்ய... பார்த்த பத்து நிமிஷத்தில என் அப்பாவின் பார்வையில் அவர் என்ன நினைக்கிறார்னு சொல்றியே... அப்படிப்பட்டவ நான் உன்னைக் காதலிக்கிறேன்னு உனக்கு உணர்த்திட்டுப் போனேனே.... அது புரியாமல் நான் வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணப் போறேன்னு நினைச்சவளுக்கு எப்படி என் அப்பா மனசு புரிஞ்சுது...?" என ஏளனமாகக் கேட்க,

அவனின் பிடியிலிருந்து நழுவி, "நீ கேட்கிறது சரிதான் மகி.... அது உண்மையும் கூட... ஆனால், இது எல்லாருக்கும் இருக்குற குழப்பம்தான்... மனசுக்கும், மூளைக்கும் நடக்கும் போராட்டம்.... இந்த உணர்வு காதலிப்பவர்கள் அனைவருக்கும் வரும்.... இது எல்லாக் காதலர்களுக்கும் இருக்கும் பயம்... நாம் காதலிச்சவர் நமக்குக் கிடைப்பாங்களா மாட்டாங்களான்னு எல்லாருக்கும் இருக்கும் பயம்.... அதுதான் எனக்கும் இருந்தது..." எனத் தெளிவாகச் சொல்ல, மகிழன் அதை ஒத்துக் கொண்டான்....



அவனும் அந்த உணர்வைத் தாண்டித் தானே வந்தான்...

"சரி எனக்குப் புரியுது... என் அப்பா அப்படி நினைக்கிறார்னே வச்சுப்போம்.... அதுக்கும், நமக்குள் தாம்பத்தியம் நடப்பதற்கும் என்ன சம்பந்தம்...?"

"சம்பந்தமிருக்கு மகி,... நீயும் சரி, நானும் சரி,... ஒருவரை ஒருவர் நேர்மையா நேசிச்சோம்... நேசிச்ச காலம் குறைவுனாலும் நேசிச்ச நெஞ்சம் உண்மை. நம்ம உண்மைக் காதலைப் புரிஞ்சிக்காமல் எல்லோருமே நம்மைத் தப்பான பார்வை பார்ப்பது எனக்குச் சுத்தமாப் பிடிக்கல...

"நமக்கு எதுவுமே முறையா நடக்கல மகி... காதலும் சரி... கல்யாணமும் சரி... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் எவ்வளவு குறுகிப் போனேன்னு உனக்குத் தெரியுமா...? உன் அப்பா அங்கேயே தானிருந்தார்... ஆனால் ஏன் என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கல... இதுவே முறையோடு வந்திருந்தா எனக்கு இந்த அவமானம் நடந்திருக்குமா...?" என வேதனையுடன் சொன்னவள், கண்ணீரைப் பொழிய,

"சரி, இப்போ என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்க...?" என இறுக்கத்துடன் கேட்டவனை,

"கொஞ்ச நாள் போகட்டும் மகி... என் மேல உங்க வீட்ல நம்பிக்கை வந்ததுக்குப் பிறகு மத்ததைப் பார்க்க லாம்..." என முடிக்க,

"நீ சொல்ற கான்செப்ட்டே எனக்குப் புரியல... நம்ம ரெண்டு பேரும் பிரிஞ்சிருந்தா அவங்களுக்கு எப்படி நம்ம மேல நம்பிக்கை வரும்..." என்க,

"வரும்... நிச்சயமா வரும்... என் அம்மா இத்தனை வருஷமா அவங்க இளமையின் உணர்ச்சிகளை எல்லாம் புதைச்சுகிட்டு எனக்காகவே தன்மானத்தோட வாழ்ந்தாங்க. அவங்களோட பொண்ணு என்னை ஊர்ல எல்லாரும் மானங்கெட்டவள்னு சொல்லும்போது எங்கம்மாவுக்கு எவ்வளவு வலிச்சிருக்கும்...? இப்போ அதையே தான் உன் அப்பாவும் நினைக்கிறார்... அந்த நினைப்போட நான் உன்னோட வாழ்ந்தா அந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமேயில்ல மகி..." என முடிக்க...

மகிழன் அவளின் உணர்ச்சிகரமான பேச்சில் மனம் மாறினாலும், அவனுக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது.

"உன் இஷ்டம்..." என்றதோடு படுக்கையின் ஓரத்தில் படுத்துக் கொண்டான்.

முல்லையும் ஒரு சில நிமிட மௌனத்திற்குப் பின் படுக்கக் கீழே படுக்கையை விரிக்கப் போனவள், மகிழனின் தோள்கள் இறுகுவதைக் கண்டு மீண்டும் கட்டிலில் மறு ஓரத்தில் படுத்துக் கொண்டாள்.



## 21

ஆண் என்றால் ஒரு வீடு...
பெண் என்றால் இரு வீடு...
தாய்நாட்டுப் பண்பாடு தடைபோடுமே...
பொங்குதே... கண்ணீரும் பொங்குதே...
கிளை எங்கு போனாலும்...
என் வேர்கள் இங்கே தான்...

அதிகாலைச் சூரியன் திரைச் சீலையை மீறிக் கொண்டு அறைக்குள் தன் வெளிச்சத்தைப் பரப்ப முயன்று கொண்டிருந்த அவ்வேளையில் மெல்லத் துயில் களைந்து எழுந்தாள் முல்லை...

அருகில் அவள் கணவன் தன்னிடம் ஒண்டவா, வேண்டாமா என்ற நெருக்கத்தில் படுத்திருந்தான்... அவனின் கலைந்த தலையை மேலும் கலைத்து அவன் நெற்றியில் அவள் இதழினை மெல்ல ஒற்றி எடுத்தவள் படுக்கையை விட்டு எழுந்து தன் காலைக் கடனை முடித்து விட்டுக் கீழே சென்றாள்...

அவள் வரவும் வேலைக்காரர் ஆறுமுகம் அவளுக்குக் காப்பி தயாரித்துக் கொண்டு வரவும் சரியாக இருந்தது...

"அச்சோ... எனக்குக் காபி போட்டுட்டீங்களா அண்ணே... இன்னிக்கி வெள்ளிக் கிழமை... நான் காலையில் எதுவுமே சாப்பிட மாட்டேன்... நேத்தே சொல்லணும்னு நெனச்சேனுங்க... மறந்தே போச்சு..." எனவும்,

“சரி, பரவாயில்ல சின்னம்மா... ஒரு சொம்புத் தண்ணியாச்சும் குடிச்சுக்கோங்க... வெறும் வயித்துல இருக்கப்படாது...” என ஆறுமுகம் கரிசனையாகச் சொல்ல,

அவர் சொல்லுக்குப் பணிந்து தண்ணீரைக் குடித்துக் கொண்டு பூஜையறைக்குள் சென்றாள்...

அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த ஆறுமுகத்திற்கு இந்தப் பத்து நாட்களில் முல்லையின் பேச்சு வார்த்தையும், அவளின் நடவடிக்கைகளும் அவளின் நற்குணத்தைப் பிட்டுப் பிட்டு வைத்திருந்தன.

முதல் நாள் மகிழனின் கட்டளைக்குப் பின் மறு நாள் விடியலிலிருந்து அவ்வீட்டு வேலைக்காரர்கள் முல்லையிடம் ஒரு பயத்துடனே நெருங்கினர்... ஆனால் முல்லையின் பேச்சும் அவளின் கலகலப்பும் அவர்கள் அனைவருக்கும் அவளுடன் ஒரு நட்புணர்வு ஏற்படச் செய்திருந்தது...

முக்கியமாகத் தோட்டக்காரன் பழனி அவளின் தீவிர ரசிகனாகி விட்டான்... சின்ன வயதிலிருந்தே தோட்டக்கலையில் மிகவும் ஆர்வமாயிருந்த முல்லைக்கு மகிழனின் வீட்டுத் தோட்டம் மிகவும் பிடித்துப் போனது... பல வண்ண மலர்களும், மரங்களும் இந்தப் பத்து நாட்களில் அவளின் நண்பர்களாகிப் போயினர்.

மகிழன் மாத்திரையின் உதவியோடு உறங்கும் நேரங்களில் தோட்டம்தான் அவளின் தனிமையின் வடிகால்...



அந்த வீட்டில் எல்லா இடத்திலும் அவள் சுதந்திரமாக வலம் வந்தாள்... அவளுக்கு யாரும் தடை விதிக்க வில்லை... ஆனாலும் முல்லை இதுவரை வெங்கட்ராமன், கோகிலாவின் அறைப் பக்கம் சென்றதில்லை.

என்னதான் வேலைக்காரர்கள் அவளைப் புரிந்து கொண்டாலும், அவ்வீட்டின் முக்கியத் தலைகள் இன்னமும் அவளைக் கண்டு கொள்வதாயில்லை.

இவள் எதிரில் வந்தாலே விலகிச் செல்லும் கோகிலாவையேனும் ஏதோவொரு வகையில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இவளைக் கண்டாலே ஏளனப் பார்வையுடன் கூடிய ஒரு அலட்சியப் பார்வையை வீசும் வெங்கடராமனைத் தான் எப்படி நெருங்குவதென்று அவளுக்குப் பிடிபடவில்லை.

அவர் வாய் வார்த்தையாக அவளைக் குத்திக் காட்டினால் கூட அதற்கு இவள் பதில் கொடுத்து விடு வாள்... ஆனால் அவரின் நக்கல் பார்வையைத்தான் அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை...

நடுவில் ஒரு நாள் மதுரிமா அவள் கணவனுடன் வந்து முல்லைக்குத் தேவையான ஆடை அணிகளை வாங்கிக் குவித்து விட்டு, அவளுக்கு ஆறுதலாகச் சில மணிநேரம் பேசிவிட்டுச் சென்றிருந்தாள்.

மதுவைப் பார்த்ததும் கதறிக் கொண்டு அழுத கோகிலாவின் பயம் முல்லைக்குப் புரிந்துதானிருந்தது. அவரின் அழுகையைக் கண்டவளுக்கு இது தன்னால் தானோ என்ற குற்றவுணர்வும் எழுந்தது.

ஆனால் கோகிலாவின் பயத்தையும், முல்லையின் குற்றவுணர்ச்சியையும் போக்கும் விதமாக இருந்தது இளங்கோவின் பேச்சு... அவனின் ஆறுதலான பேச்சும், எதையும் யோசித்துப் பேசும் முதிர்ச்சியும், கோகிலாவிற்கு மகளின் நல்வாழ்வைப் பற்றிய கவலையைச் சற்றுக் குறைத்திருந்தாலும், பெற்ற மனது இளங்கோவின் வீட்டிலிருக்கும் மற்றவர்களை எண்ணிக் கலங்கியது...

இளாவும், முல்லையை அவனின் சொந்தத் தங்கையைப் போல் அனுசரணையாகப் பேசியது அவளின் புண்பட்ட மனதிற்குப் பெரிதும் ஆறுதலாக அமைந்தது.

இப்படி அனைவரிடமும் தன்னால் முடிந்தளவு தன்னிலையை, தன் உரிமையை நிலை நாட்டிக் கொண்டிருந்த முல்லைக்குக் கணவனின் ஒதுக்கம்தான் பெரிதும் வேதனையாக இருந்தது.

அன்று அவளின் பேச்சிற்குப் பிறகு மகிழன் அவளைப் பார்வையால் கூடத் தீண்டவில்லை... அது அவளுக்குச் சந்தோஷம் தான் என்றாலும், மகிழன் முற்றிலும் அவளை ஒதுக்கியது தான் அவளுக்குப் பெரும் வலியைக் கொடுத்தது.

அவன் அவளோடு பேசினான், சிரித்தான், கலகலத்தான், ஆனால் அதில் ஒரு ஒதுக்கம் இருப்பது போலவே தோன்றியது.

அவள் உணவெடுத்து வந்தாள். அதை அவன் உண்டான்தான்... ஆனால் அவன் பார்வை அவள் முகத்தைத் தீண்டாது உணவை அள்ளி வாயில் அடைத்துக் கொள்வான்.



அவனின் கை, கால் வலிக்கு ரமணன் கொடுத்த மருந்தைத் தடவ உதவினால் மறுப்பான்.

அவள் இவனிடம் தனிமையில் இருக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள, பிரபுவின் மூலமாக ஆபீஸ் ஃபைல்களை வீட்டிற்கு வரவழைத்துப் பார்த்துக் கொண்டு நேரத்தைக் கழிப்பது என அவனின் ஒதுக்கம் நீண்டு கொண்டேபோனது.

அவன் ஒதுக்கம் புரிந்த முல்லை தானாக வலியச் சென்று தான் செய்ய வேண்டியதை ஒரு மனைவியாக அவனுக்குச் செய்து வந்தாள்.

அவள் தான் அவனை ஒதுக்கி வைத்தாள்... ஆனால் அது இப்படிப்பட்ட ஒதுக்கமல்ல... அவள் கணவன் வீட்டில் தனக்கொரு அங்கீகாரம் கிடைத்த பிறகு தன் மணவாழ்வைத் துவங்குவதென அவள் எடுத்த முடிவில் எந்தத் தவறும் இருப்பதாக அவள் நினைக்கவில்லை...

அதைத் தான் மகிழனிடம் அவள் பகிர்ந்து கொண்டாள். அவனும் அவளின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து அவளிடம் ஒதுங்கி இருந்தான். இருவரின் தரப்பிலும் எந்தத் தவறும் இருக்கவில்லை தான்...

அவன் தன்னருகில் இருந்தும் அப்பெரிய வீட்டில் ஏதோவொரு தனிமையை உணர்ந்தாள்.

இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டு ஒதுங்கும் அவனிடம் என்ன காரணமென்று கேட்டால், "நீதானே ஒதுங்கி இருக்கச் சொன்னே, அதான் விலகியிருக்கேன்..." என்று ஒரே வரியில் வாயடைத்து விட்டான் என்றால், அதை அவளால் நிச்சயமாகத் தாங்க முடியாது.

முல்லை என்ன எதிர்பார்க்கிறாள் என்று அவளுக்கே புரியவில்லை...

இப்படியாகப் பத்து நாட்கள் நொடியில் கரைந்தன.

மகிழனுக்கும் அவனின் கைக் காயம் சற்று ஆறியிருக்க, இன்று டாக்டர் ரமணன் வந்து கட்டுப்பிரித்து விடுவதாகத் தெரிவித்திருந்தார்.

அவன் எழுமுன் அவள் வழக்கமாகச் செய்யும் வேலைகளை முடித்துவிட்டு அவனுக்குக் குளிக்க உதவ வேண்டுமென நினைத்தவள், விரைவாகப் பூஜையை முடித்துவிட வேண்டுமென எண்ணி வந்தவள், பூஜை யறையில் கடவுளை அலங்கரிப்பதில் லயித்துப் போனாள்.

அவளுக்கு எப்போதுமே கடவுள் என்றால் மிகவும் பிடித்தம்... அதுவும் மகிழன் வீட்டுப் பூஜையறையில் அழகாக வீற்றிருந்த லக்ஷ்மி சிலையைக் கண்டதும் அவளின் மனதுக்கு முதலில் ஞாபகம் வருவது அவளின் வேம்பம்மனே....

ஒவ்வொரு வெள்ளியும் காலையில் தன் அன்னை யுடன் சேர்ந்து விரதமிருந்து, காலையில் வேம்பம்மனைக் குளிப்பாட்டி, அலங்கரித்து முடித்தாளென்றால் அடுத்த



ஊர்க் கோவிலில் அங்காள பரமேஸ்வரியைத் தரிசித்து விட்டு, கோவிலில் கொடுக்கும் சர்க்கரைப் பொங்கலுக்கு இன்று மனமேங்கியது...

ஏங்கிய மனதை அடக்கித் தன் திருமண வாழ்வு நன்றாக அமைய வேண்டுமென்ற வேண்டுதலை வைத்து விட்டு, ஆறுமுகத்திடம் காபியை வாங்கிக் கொண்டு மாடி யேறினாள்....

அறையில் படுக்கை காலியாக இருக்க, மகிழனைத் தேடியவள், அவன் குளியலறையில் இருப்பது தெரிந்து காப்பியை டீபாய் மேல் வைத்துவிட்டு, அவனுக்கு உதவச் சென்றாள்....

பாதி மூடியிருந்த கதவைத் தட்டியவள் அது தானாகத் திறந்து கொண்டதும், உள்ளே செல்ல எத்தனிக்க, மகிழன் தோளில் சுற்றிய துண்டுடன் அவன் தாடியைச் சவரம் செய்ய ஷேவ் ஜெல்லைத் தேய்த்துக் கொண்டிருந்தான்.

ஆர்வக் கோளாறில் முல்லை, "ஹை.... ஷேவ் பண்ணப் போறீங்களா மகி.... சூப்பர் சூப்பர்... நீங்க தாடியில்லாம எவ்வளவு அழகா இருப்பீங்க, தெரியுமா...? நானே சொல்லணும்னு இருந்தேன்..." என்க,

அவள் குரலில் திரும்பிப் பார்த்த மகிழன், கதவில் ஒன்றி நின்று கொண்டிருந்தவளை வைத்த கண் எடுக் காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரத்தச் சிவப்பு நிறத்தில் சேலை அணிந்து, காது களில் சிறிய கல் பதித்த தங்கத் தோடு, இரு கைகளிலும்

இரு ஜோடி வளையல், கழுத்தில் இவன் கட்டிய மஞ்சள் தாலி, நீர் சொட்டும் முடிக்கற்றை அவள் முன்னெற்றியை நனைத்துக் கொண்டிருக்க, அவள் வகிட்டின் நடுவே அரக்கு நிறக் குங்குமம் வைத்து ஒரு தேவதையைப் போலக் காட்சியளித்தாள்.

காலை வேளையில் கட்டிய புது மனைவியை இப்படி ஒரு கோலத்தில் பார்த்தால், எந்த ஆணுக்குத்தான் ஆசை வராது. மகிழனும் அந்நிலையிலே இருந்தான். அவளைப் பார்வையாலே தன்னுள் நிறைத்துக் கொள் பவனைப் போல் தீனமான பார்வையை அவள் மீது வீசினான்.

அவன் பார்வையின் குறுகுறுப்பு முல்லையின் உடலைச் சிலிர்க்க வைத்தது. அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

ஒரு சில கணங்கள் கழித்துத் தன் உச்சந்தலையில் சூடான மூச்சுக் காற்றுப் படும் ஸ்பரிசம் உணர்ந்து பார்த்த முல்லை, திகைத்துப் போனாள்.

மகிழன் அவள் அருகில், அவளை உரசியவாறு, அவளை எங்கும் நகர விடாமல் கைது செய்திருந்தான். அவனின் பார்வையும், அவனின் மூச்சுக் காற்றுமே உரைத்தது, அவனைத் தன்னால் இன்று கட்டுப்படுத்த முடியாதென்று....

முல்லைக்கு உணர்வுகளின் ஆர்ப்பரிப்பை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பிடிபடவில்லை... மகிழன் பார்வையும் மாறுவதாயில்லை...



அவளின் இதயம் படபடவென அடிக்க, கண்களை இறுக மூடிக்கொண்டு, அவனின் தாக்குதலுக்குத் தயா ரானாள்.

மகிழன் அவனது இடைவெளியைக் குறைத்துக் கொண்டு முல்லையிடம் நெருங்கி வந்தான். அவனின் இடது கை அவளின் இடுப்பை வளைத்து அவள் சேலை மடிப்பைத் தன் விரல்களால் அளைந்து கொண்டிருந்தன.

அவனின் ஒவ்வொரு விரலும், அவளின் இடையில் வீணை மீட்ட அவனின் ஸ்பரிசத்தில் முல்லை தன் னிலையை முற்றிலும் தொலைத்திருந்தாள்.

அவனின் சின்னத் தீண்டல் அவளின் ஆசையை யும் தூண்டி விட்டிருக்க, அவளாலும் அவள் எடுத்த முடிவினைக் காப்பாற்ற முடியாது எனத் தோன்றவே, அவளின் உடல் இறுகியது.

கண்களை மூடி அவனின் தாக்குதலை எதிர் கொள்ளத் தயாரானாள். வெகு நேரம் காத்திருந்தும் அவன் ஏதும் செய்யாமல் இருக்கவும், கண்களை மெல்லத் திறந்தாள்.

சூடான மூச்சுக் காற்றை வெளியிட்டு அவன் முன்பு நின்றிருந்ததைப் போலவே நின்றவன் கண்கள் சிவந்தி ருந்தன. அது கோபத்தில் உருவானது என்பது முல்லைக்கு நன்றாகவே விளங்கியது...

இவள் கண்களைத் திறந்ததும் அணைத்திருந்த கையை விலக்கி அவள் தோள்களைப் பற்றிக் கட்டிலில்

தள்ளிவிட்டுக் குளியலறைக் கதவை அறைந்து மூடி விட்டுச் சென்றான்.

அவன் தள்ளிவிட்டதும், திகைத்து அமர்ந்திருந்த முல்லைக்கு இவனின் செயல் எதுவும் விளங்கவில்லை.

அவள் யோசனையில் அமர்ந்திருந்த சமயம் யாரோ கதவைத் தட்ட, தன்னுணர்வு பெற்ற முல்லைக்கு அவளை அறியாமலே கன்னங்கள் நனைந்திருந்தன.

தான் அழுதது உணர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டு, கதவைத் திறக்க, வெளியே ஆறுமுகத்துடன் ரமணன் நின்றிருந்தார்.

அவரை வரவேற்று அமர வைத்த முல்லை, குளியலறைக் கதவைத் தட்டச் செல்லவும், மகிழன் வெளியே வரவும் சரியாக இருந்தது.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த முல்லையைத் தவிர்த்து, "வாங்க டாக்டர்... உட்காருங்க...." என்ற மகிழனை முறைத்த ரமணன்,

"கொஞ்சம் உடம்பு சரியானதும் குளிக்கணுமா, மகிழ்...? இன்னும் காயமே சரியாகல... தண்ணி பட்டு ஏதாச்சும் ஆச்சுனா அப்புறம் கையை எடுத்தாகணும்..." என அவர் கேலியாகப் பேசவும்,

அதற்குள் முல்லை அவர் அங்கு அறையில் இருப்பதையும் மறந்து, "ப்ச்... நான்தான் உடம்பு தொடச்சு விடறேன்னு சொன்னேனில்லை. அதுக்குள்ள குளிக்கப் போகலைன்னா என்ன...! உங்களுக்கு என்னதான்



பிரச்சனை...." எனக் கோபமாகப் பேசிக் கொண்டிருந் தவளை, அருகில் இழுத்துத் தன் இடது கை வளைவில் நிறுத்திக் கொண்டு,

"நீங்க ஆரம்பிங்க டாக்டர்..." எனக் கட்டிலில் முல்லையுடன் சேர்ந்து அமர்ந்து கொண்டான்.

ரமணன் உதட்டில் உறைந்த புன்னகையுடன் அவனுக்குக் கட்டுகளைப் பிரித்து மருந்திட்டு வேறொரு புதுக்கட்டைப் போட்டு முடித்தபின், "ம்ம்... கை இப்போ ஓரளவுக்குப் பரவாயில்ல. வலது கைக்கு அதிகமான வேலை கொடுக்காமல் பார்த்துக்கோ. மத்தப்படி இனி எந்தப் பிரச்சனையுமில்ல..." என்றவர், இன்னும் சில அறிவுரைகளைக் கூறி விடைபெற்றார்.

அவர் செல்லவும், அவரை வழியனுப்ப எனப் பின்னே சென்ற முல்லை, மேலும் சில கேள்விகள் கேட்டு அவள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டு அவள் மேலே வரவும் மகிழன் உடை மாற்றியிருந்தான்.

எப்போதும் போல் டி-ஷர்ட் அணியாமல் இன்று பேன்ட் சட்டை அணிந்து வெளியே எங்கோ செல்லக் கிளம்பிக் கொண்டிருந்தவனை முறைத்த முல்லை, "இப்போ எங்க போறீங்க, மகி...?" என்ற கேள்விக்கு அவனிடம் விடை கிட்டவில்லை.

கண்ணாடியைப் பார்த்துத் தலை வாரிக் கொண் டிருந்தவனை நெருங்கியவள் அப்போதுதான் கவனித் தாள்.. அவன் இன்னமும் தன் தாடியை எடுக்காதது!

அவளுக்கும் இப்போது கோபம் வந்தது.

"யோவ்... நானும் பார்த்துடே இருக்கேன்... ரொம்ப தான் பண்ற... நீ மட்டும்தான் எனக்கு எல்லாமேனு இந்த வீட்டுக்குள்ள அடியெடுத்து வைச்சிருக்கேன்... நீயும் இப்போ என்னை ஒதுக்கி வைச்சா நான் என்னதான் செய்யணும்... உனக்கென்னதான் வேணும்...?" எனக் கோபமாகக் கத்தியவள், அப்போதுதான் புரிந்தவளாக, "சரி, வா..." என அவன் கையைப் பிடித்துக் கட்டிலுக்கு இழுத்துச் சென்று அடுத்து அவள் ஏதோ செய்யுமுன் கையை உதறிய மகிழன்,

"சே... என்னை என்ன அவ்வளவு கேவலமான வன்னு நெனச்சியா... எனக்கு அதுதான் முக்கியம்னா அதை எப்படி வேணா எடுத்துக்க முடியும்..." எனக் கத்தியவன், அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறி யிருந்தான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த முல்லைக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

எல்லோராலும் ஒதுக்கப்பட்டால் அவளும்தான் என்ன செய்வாள்?

வெளியே வந்த மகிழன் வேகமாக அவன் கார் சாவியை எடுத்துக் கொண்டு போக, அவனைத் தடுத்த வெங்கட், "மகிழ்... எங்க போற...?"

"ப்ச்... எங்கப்பா போவாங்க... ஆபீஸ்க்குதான் போறேன்..." எனச் சலிப்புடன் சொன்னவனை,



"என்னப்பா இப்பவே சலிப்பா... கல்யாணமாகிப் பத்து நாள்தானாச்சு..." என அவர் இரு பொருள்படப் பேச...

மகிழனுக்கு அவர் சொல்ல வருவது புரிந்து, "அப்பா... என்ன சொல்ல வறீங்க..." என்றவனிடம்,

"நான் என்னப்பா சொல்லப் போறேன்... ஹ்ம்ம்... நீ எதைப் பார்த்து அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தியோ... அந்தத் தேவை இப்போ முடிஞ்சிடுச்சுன்னா அந்தப் பொண்ணுக்கு ஏதாவது கொடுத்து அனுப்பி விட்டுடு.... கே.பி.ஆர். அவரோட பொண்ணை உனக்குக் கொடுக்க ரொம்பவும் விருப்பப் படறார். நீ பண்ணி வைச்ச வேலை எல்லாம் தெரிஞ்சே அவர் பொண்ணைக் கொடுக்க ஆசைப்படறார். அவரோட அத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசு மகிழ்... நீ கேட்ட டையிங் ஃபேக்டரியை அவரே கட்டித் தர்றா ராம்... சீக்கிரம் அந்தப் பொண்ணைக் கழிச்சுவிடு... மேல ஆக வேண்டிய வேலையைப் பார்க்கலாம்..." என நக்கலாக ஆரம்பித்துத் தீவிரமான குரலில் முடித்தார்.

மகிழன் ஏதோ சொல்லும்முன் மெல்லிய விசும்பல் ஒலி கேட்க, நிமிர்ந்து பார்த்தவன் கண்ணுக்கு... அங்கிருந்து ஓடிச் செல்லும் முல்லை தான் கண்ணில் பட்டாள்.

இத்தனை நாட்கள் அவளின் கோரிக்கையை வெறும் உளறல் என நினைத்து மனம் வெந்தவனுக்கு, இன்று தான் தந்தையின் இந்த வார்த்தைகளைக் கேட்டு

மனது வலித்தது. முல்லையின் உணர்வுகளும், அவள் கேட்கும் நியாயமான கோரிக்கையும் அவனுக்கு இப்போது முழுதாகப் புரிந்தன.

"அப்பா... உங்களுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பதுன்னு எனக்குப் புரியல... ஆனால் நிஜமாவே முல்லையை நான் விரும்புறேன். அவளை நான் விருப்பப்பட்டு அவளுக்காக.... அதாவது அவளோட குணத்துக்காகத்தான் கல்யாணம் பண்ணிகிட்டேன். எனக்குப் பணம் முக்கியம்தான். ஆனா அதையும் மீறி வாழ்க்கையில முக்கியமான விஷயமிருக்குன்னு அவளோட சின்னச் சின்னச் செயல்கள் எனக்குப் புரிய வைச்சிருக்கு. நீங்க என்னை என்ன வேணும்னாலும் பேச உங்களுக்கு முழு உரிமையிருக்கு. ஆனால் முல்லை... அவள் எனக்கு மட்டுமே சொந்தம்... இதுக்கு மேல நீங்க முல்லையை இப்படிக் கேவலமாப் பேசுறதை என்னால பொறுத்துக்க முடியாது..." என நிறுத்தியவன்,

"இனிமேல் இது போல என்னோட கல்யாணம் அது இதுன்னு பேச வேண்டாம்... எனக்குப் பிடிச்ச பொண்ணோட கல்யாணம் முடிஞ்சுடுச்சி... முல்லை என்னோட மனைவி. இனி அவளுக்கடுத்து என் வாழ்வில் வேற எந்தப் பொண்ணுக்கும் இடமில்லை..." என நீண்ட விளக்கத்துடன் அங்கிருந்து அகல...

அப்போதுதான் வீட்டிற்க்குள் நுழைந்த அபூர்வா இவன் சொன்ன அந்தக் கடைசி வார்த்தைகளை மனதில் பதித்துக் கொண்டவள் முகத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை மலர்ந்தது.



தன் எதிரில் வந்த அபூர்வாவைக் கண்டு, ஒரு நொடி திகைத்தாலும் அடுத்த நொடி தன்னைச் சமாளித்துக் கொண்டு, அவனும் ஒரு புன்னகையுடன் கூடிய தலை யசைப்பைக் கொடுத்து விட்டு வெளியேறினான்.

அவன் காருக்குச் செல்ல... பின்னாலே வந்த டிரைவர், "ஐயா... நீங்க வண்டி ஓட்ட வேண்டாங்க. இப்போ தானே கொஞ்சம் உடம்பு சரியாகியிருக்கு... நான் வண்டி எடுக்குறேனுங்க..." எனத் தயக்கமாகச் சொல் லவும், வண்டிச் சாவியை அவரிடம் கொடுத்து விட்டுப் பின் சீட்டில் சாய்ந்து கொண்டான்.

மகிழன் இதுவரை அவன் ஜாகுவரை யாரிடமும் கொடுத்ததில்லை. அவன் மிகவும் விருப்பப்பட்டு வாங்கிய வண்டி.

இதுவரையிலும் யாரும் அதைத் தொட விட்ட தில்லை. அன்றுதான் முதல் முறை முல்லை அவன் வண்டியை ஓட்டியது.

அந்த நாள் ஞாபகத்தில் மகிழனின் உதடுகள் சிரிப்பில் விரிந்தன.

"அவளுக்கு எப்படி வண்டியோட்டத் தெரியும்னு கேட்கவே யில்லையே... ஹ்ம்ம்... எல்லாப் பிரச்சனையும் முடியட்டும்..." என மனதிலே முல்லையிடம் பேசிக் கொண்டு வந்தவன், சாலையில் எழுந்த வித்தியாசமான ஒலியில் தன் கவனம் கலைந்தான்.

மீண்டும் அந்த ஒலி அவன் நினைவை முற்றிலும் மீட்டிருக்க, “அந்த வண்டி.... அந்த வண்டியை ஃபாலோ பண்ணு முருகா.... சீக்கிரம்...” என டிரைவரைத் துரிதப் படுத்த,

“ஐயா.... சிக்னலுங்க... முன்னாடி நெறைய வண்டி யிருக்கு,” என்ற முருகனை முறைத்து விட்டு “ஷிட்...” என சீட்டில் அடித்தவன், காரைத் திறந்து அவ்வண்டி நம்பரைப் பார்க்க முயல, அதற்குள் அவ்வண்டி மின்னல் வேகத்தில் பறந்திருந்தது.

## 22

பித்துப் பிடித்ததைப் போல
அடி பேச்சுக் குழறுதே...
வண்டு குடைவதைப் போலே
விழி மனசைக் குடையுதே...
காதலின் திருவிழா... கண்களில் நடக்குதே...
குழந்தையைப் போலவே...
இதயமும் தொலையுதே...
வானத்தில் பறக்கிறேன்...
மேகத்தில் மிதக்கிறேன்...

“அடடே... வாடா அபூ... என்ன ரொம்ப நாளா ஆளைக் காணோம்...?” என உற்சாகமாக வரவேற்ற வெங்கடராமனை உள்ளுக்குள் குதறிக் கொண்டு வெளியில் தன் பல்லைக் காட்டிச் சிரித்து வைத்தாள் அபூர்வா...



“மாமா... நீங்க எப்படி இருக்கீங்க? அத்தை எப்படி யிருக்காங்க...? எங்க அவங்களைக் காணோம்...?” என்றவளின் இயல்பான பேச்சு வெங்கட்டைச் சற்று அமைதிப் படுத்தியது.

மகிழனின் திருமணச் செய்தியை அன்று வீட்டில் வைத்துப் பேசிய பின், சிவாவும் சரி, ரஞ்சிதமும் சரி, இது வரை இவர்கள் வீட்டுப் பக்கம் வரவில்லை... போன் மூலமாகக் கூடப் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள வில்லை.

நிலை இப்படியிருக்க, ‘இந்த விஷயத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட அபூர்வா இன்று அவளே வீடு தேடி வருகிறாள் என்றால் ஏதேனும் பிரச்சனை செய்யவா...!’ என்ற அவரின் கவலையைத் தான் உற்சாகமாக மாற்றி அவளை வரவேற்றார்.

ஆனால் அவள் இயல்பாகப் பேசவும் அவருக்குச் சற்று நிம்மதி பரவியது.

“அத்தை உள்ளேதான்டா இருக்கா... நீ போய்ப் பாரு... எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு... நான் போயிட்டு வந்துடுறேன். நீ இங்கயே இரு... லஞ்ச் சாப்பிட்டுட்டுத்தான் போகணும்...” என்ற உபசரிப்புக்கு,

“நிச்சயமா மாமா... நான் அத்தை கையால் சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு. நீங்க போயிட்டு வாங்க...” என்றவள், கோகிலாவைப் பார்க்க அவர் அறையைத் தேடிச் சென்றாள்.

தனது அறையில் உறங்கிக் கொண்டிருந்த கோகிலாவை அபூர்வா சென்று அவரின் தலையைத் தடவிக் கொடுக்க...

கண்விழித்து எழுந்தவர் தன் முன்னே அமர்ந்திருந் தவளை ஏதோ அதிசயப் பிறவியைப் போலப் பார்த்தார்.

"அபூ... நீயா...!"

"ஆமா அத்தை... நானேதான்... அதிலென்ன உங்களுக்கு அப்படி ஒரு ஆச்சரியம்...? சரி, என்ன... இந்த நேரத்தில் படுத்திருக்கீங்க... இன்னிக்கு வெள்ளிக் கிழமையாச்சே... இந்நேரம் நீங்க பூஜையறையில் இருப்பீங்கன்னு நினைச்சேன்..." என்றவளை,

"ஹம்ம்.. ஒண்ணுமில்லைடா... எப்பவும் போல மூட்டு வலிதான்... அதான் படுத்துட்டேன்," என்றவர், சற்று இடைவெளி விட்டு, "நீ தனியாவா வந்திருக்க அபூ... அம்மா, அப்பா வரலையா...?" என்க...

"அம்மா, அப்பாவுக்கு இன்னமும் கோபம் அத்தை. அவங்களை விடுங்க... ஏதாவது சாப்பிட்டீங்களா...? மூட்டு வலித் தைலம் எங்கே...?" என்றவள், அதை அங்கிருந்த டிராயரில் தேடிக் கோகிலாவின் கால்களில் தடவி விட்டாள்.

"ஏன் அத்தை... மூட்டு வலின்னா தைலம் தடவ வேண்டியதுதானே... இப்படியே படுத்திட்டு இருந்தா வலி சரியாகிடுமா...?" எனச் செல்லமாகக் கோபித்துக் கொள்ள,

அவளின் கோபத்தில் நெகிழ்ந்தவராய், "எங்க அபூ... மது இருந்தவரைக்கும் அவ எனக்குத் தேய்ச்சு



விடுவா... அவளும் போன பிறகு யாருடா பண்ணு வாங்க...?" என ஒரு பெருமூச்சை வெளியிட,

புருவத்தை உயர்த்திய அபூ, "ஏன் அத்தை... அதான் இப்போ புதுசா வந்திருக்காங்களே.! அவங்க... அதான் உங்க மருமக... இதையெல்லாம் செய்ய மாட் டாங்களா...?" என்றவளின் குரலில் வழிந்த நக்கலை மறைத்தவாறு உரைக்க,

"ம்க்கும்... நீ வேற ஏன்...? அபூ... அந்தப் பொண்ணுகிட்ட இது வரைக்கும் நான் ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லை... அவ எப்ப பாரு, மகிழோட ரூம்ல தானிருப்பா... எப்பவாவது கீழே வருவா, ஒண்ணு மில்லாதப்பவே இந்தத் திமிரு... எல்லாமிருந்தா அவ எங்களையெல்லாம் வீட்டை விட்டு அடிச்சுத் துரத்தி விட்டுருவா. இந்த மகிழ் பையனும் அவளோட முந்தா னையைப் பிடிச்சுகிட்டு சுத்தறான். எப்போதான் இந்த வீடு பழைய மாதிரி கலகலப்பா இருக்குமோ...?" என இத்தனை நாள் தனிமையைப் பகிர்ந்து கொள்ள ஆள் கிடைக்காமல், இன்று கிடைத்த அபூவிடம் தன் ஆதங்கத்தை வார்த்தை தவறி வெளியேற்றிக் கொண டிருந்தார்.

அபூவிற்கு இதுவல்லவா தேவை...!

"என்ன அத்தை இப்படி எல்லாம் சொல்றீங்க... நம்ம மகிழ் மாமா அந்த மாதிரியில்லையே...!" என சூசகமாகப் பேச்சை ஆரம்பிக்க,

"உன்னை மாதிரித்தான் அபூ நானும் நினைச்சுகிட்டு இருந்தேன்... ஆனா பாரு... என் பையன் இந்த மாதிரி யெல்லாம் நடந்துப்பான்னு நான் கனவுல கூட நினைச்சுப் பார்த்ததில்ல... என்ன காதலோ கண்றாவியோ..." என்க,

"சரி, விடுங்க அத்தை... நடந்தது நடந்து போச்சு... இனி இதையெல்லாம் மனசுல போட்டுக் குழப்பாதீங்க, சரி, நீங்க ஏதாவது சாப்பிட்டீங்களா...?" என்றவளை,

"என்கிட்ட அக்கறையா கேட்க நீயாவது இருக்கியே அபூ. சாப்பிட்டேன்டா... ஆறுமுகம் வந்து கொடுத்துட்டுப் போனான்..." என்க,

"சரி, வாங்க... இப்படியே ரூம்ல அடைஞ்சு கிடந்தா மனசு இப்படித் தானிருக்கும்... வாங்க, வெளிய போக லாம்... மாமா என்னை லஞ்சுக்கு இருக்கச் சொன்னார். நம்ம போய் ஏதாவது ஸ்பெஷலா செய்யலாம்..." என்று கோகிலாவைக் கூடத்திற்கு அழைத்து வந்தவள், மதியச் சமையலுக்கு ஆறுமுகத்திடம் ஸ்பெஷலாகச் சமைக்கச் சொல்லிவிட்டுக் கோகிலாவுடன் நேரத்தைப் போக்கினாள்.

கோகிலாவிற்கு இத்தனை நாளிருந்த தனிமையைப் போக்க அபூவிடம் பேசப் பேச அவரின் மனதில் இவள் என் வீட்டிற்கு மருமகளாக வந்திருக்கலாமே என்ற எண்ணம் தோன்றியது.

அப்படித் தோன்ற வைத்தாள் அபூர்வா...

அதை அவர் வாய் வார்த்தையாக வெளியிடவும், அபூவின் மனதில், "இத... இதைத்தான் எதிர்பார்த்தேன்..." என்ற குரல் கேட்டது...



"விடுங்க அத்தை... எல்லாருக்கும் எதுன்னு கடவுள் அமைச்சிருக்கானோ அதுதான் அமையும். விதியை மாற்ற நம்மால முடியுமா...?" எனத் தத்துவம் பேசி, மேலும் கோகிலாவைத் தன் வசப்படுத்தினாள்...

இவர்கள் வெகு நேரம் வளவளத்துக் கொண்டி ருந்தாலும், அபூவின் பார்வை அடிக்கடி மாடியறையைப் பார்த்துக் கொண்டிருந்தது... அவளின் பொறுமை எல்லையைக் கடக்கும் நிலையில், "என்ன அத்தை... அந்தப் பொண்ணை இன்னமும் கீழே காணோம்...?" என்று அவளே வாய் விட்டுக் கேட்டுவிட்டாள்.

"நான்தான் சொன்னேனே, அபூ... அவ எப்பவும் மேலயேதான் அடைஞ்சு கிடப்பா..." என்ற கோகிலாவிடம்,

"இருங்க அத்தை... நான் போய்க் கீழே கூட்டிட்டு வரேன்..." சென்றவளைத் தடுத்து,

"நீ எதுக்கும்மா போகணும்.... ஆறுமுகத்திடம் சொல்லிவிடு... அவள் உன்னை அடிச்சிருக்காளாமே... அவகிட்ட எதுக்கு நீ போய்ப் பேசுற...?" என்றதும்,

அபூவிற்கு அந்த நாள் ஞாபகம் வந்து அவள் கண்களைச் சிவக்கச் செய்தது...

தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டு, "இல்ல.... பரவாயில்ல அத்தை... அன்னைக்கு ஏதோ தெரியாம செஞ்சிருப்பா... நானே போறேன். எனக்கு அந்தப் பொண்ணைப் பார்க்கணும் போலிருக்கு..." என்றவள், உடனே மேலே சென்று விட்டாள்.

கோகிலாவிற்கு, 'ச்சே... இந்த அபூ மாதிரி நல்ல குணம் யாருக்கு வரும்...? அவள் இவளை அடிச்சிருக் கான்னு தெரிஞ்சும் அவளைப் பார்க்க இவ்ளோ ஆர்வமாப் போறா... ஹ்ம்ம்..." என வாய்விட்டுப் புலம் பியதைக் கேட்டுக் கொண்டே தான் சென்றாள்.

மேலே சென்ற அபூர்வா மகிழனின் அறைக் கதவிற்கு முன் ஒரு சில நொடி நின்று தன் மனதின் குமுறலைக் கட்டுப்படுத்திக் கொண்டு கதவைத் தட்டி னாள்...

அவளை வெகு நேரம் காக்க வைக்காமல் கதவைத் திறந்து வெளியே வந்த முல்லையின் கண்கள் சிவந் திருப்பதைக் கண்டு அபூர்வாவின் மனது யோசனையில் ஆழ்ந்திருந்தால்... முல்லையின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

பின்னே அன்று தன்னிடம் அடி வாங்கியவள் இன்று அவள் கண் முன்னே... அதுவும் தன் கணவனைத் திருமணம் செய்து கொள்ள இருந்தவள் இன்று தன் அறையின் கதவைத் தட்டுவாள் என அவள் சற்றும் நினைத்துப் பார்த்ததில்லை...

முல்லை இங்கு ஆச்சர்யத்தில் நின்றிருந்த வேளை அபூர்வா தன் சிந்தனையிலிருந்து விடுபட்டு முல்லையை அளந்து கொண்டிருந்தாள்.

பத்து நாட்களின் திருமண வாழ்க்கை முல்லையைச் சற்று மெருகேற்றியிருந்தாலும், அவளின் கண் சிவப்பு



முல்லையின் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தாமல் வேறொரு செய்தி சொன்னது...

அதை முழுதாக அறிந்து கொள்ளும் பொருட்டு முல்லையிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள்...

"ஹாய் முல்லை... எப்படியிருக்கீங்க...?" எனக் கேட்டவளின் குரலில் நட்பு வழிந்தோடியது.

அபூர்வாவிடமிருந்து முல்லை இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்கவில்லை... பின்னே இருவருக்கும் ஆரம்பமே சரியில்லாதபோது, அதன் பின் நடந்தவை அனைத்தும் அடுத்தடுத்து அபூர்வாவிற்கு எதிரானவை யல்லவா...? நடந்தவைகளுக்கு முல்லைக்கு முழுப் பொறுப்பில்லை யெனினும், அவளும் ஒரு காரண மல்லவா...!

அப்படி யிருக்கையில் அபூவின் இந்தப் பேச்சு முல்லையை ஆச்சர்யமடையச் செய்ததில் ஏதும் தவறில்லையே....!

தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்த முல்லையைக் கண்டு மனதிற்குள் கரித்துக் கொட்டினாலும், அதை வெளிக் காட்டாது, "என்ன அவ்வளவு ஆச்சர்யமா பார்க்கறீங்க... எப்படியிருக்கீங்கன்னு கேட்டேன்..." என்றாள், மீண்டும் அதே குரலில்...

"ஹான்... நா... நான் ந...நல்லாயிருக்கேன்..." என்ற முல்லையின் குரலில் தெரிந்த சிறு தடுமாற்றம் அபூர்வா வின் தலைக் கனத்தை மேலும் கனமாக்கியது.

பின்னே முல்லை அவளைக் கண்டு பயப்படுகிறாள் என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறாள்...

"நான் வந்து ரொம்ப நேரமாச்சு... நீங்க இதுவரை கீழே வரலைன்னு நானே உங்களைப் பார்த்துட்டுப் போக லாம்னு வந்தேன். கீழே வர்றீங்களா...? பேசலாம்... அத்தை தனியா இருக்காங்க. பாவம்! அவங்களுக்கு மூட்டு வலி..." என்றவள் குரலில் இந்த வீட்டில் கோகிலாவிடம் தனக்கிருக்கும் உரிமையை வெளிப்படுத்த நினைத்தாள்...

ஆனால் முல்லை இருந்த மனநிலையில் அவளின் இந்த நினைப்பு ஏதும் அவளைச் சென்றடையவில்லை...

மீண்டும் முல்லை நின்ற நிலையிலே இருக்கவும், இப்போது அபூவிற்குக் கோபம் வந்தாலும், அதை வெகு சிரமப்பட்டு அடக்கி,

"ஓஹோ... உங்களுக்கு என்னோட பேச இஷ்ட மில்லை போலவே..." எனப் பாவமாகச் சொல்ல,

இப்போது தன்னிலை பெற்றவள், "ஐயோ! அப்படி யெல்லாம் இல்லைங்க... நான் ஏதோ யோசனையில்... நீங்க எப்படியிருக்கீங்க...?"

"ம்ம்... நான் நல்லாயிருக்கேன்... நீங்க கீழே வர்றீங்களா...! அத்தை தனியா இருக்காங்க..." மீண்டும் அவளின் உரிமையை நிலைநாட்ட,

இப்போது முல்லைக்குக் குற்றவுணர்வு எழுந்தது.

"இதோ... போகலாம்... ஒரு நிமிஷம்..." என உள்ளே சென்று விட, வெளியிலிருந்த அபூவிற்குக் கோபம் புசு புசுவென ஏறியது...



பேச்சுக்குக் கூடத் தன்னை அறைக்குள் அழைக் காமல், வெளியே நின்று பேசினாள் என்றால் இப்போது தன்னை வெளியே காக்க வைக்கும் அவளுக்கு எத்தனை திமிரென்று குமைந்தவள், கீழே செல்லத் திரும்பியவள்,

உள்ளிருந்த இன்னொரு மனமோ, "அபூ... என்ன பண்ற... கொஞ்சம் பொறுமையாப் போ... இப்படி அடிக்கடி நீ கோபப்பட்டேனா அப்புறம் நீ நினைச்சது எதுவும் நடக்காது...!" எனக் குரல் கொடுக்க, அப்படியே அறை வாசலில் உள்ளக் கொதிப்போடு நின்றாள்...

முல்லை அவளின் கொதிப்பை அதிகமாக்காமல் தன் முகத்தைக் கழுவி வந்தாள்.

இருவரும் கீழே சென்றனர்.

முல்லையின் கள்ளமில்லா மனம் அன்று அவளை அடித்ததில் இன்று இவளாக வந்து பேசியதில் இளகி, "சாரிங்க... அன்னிக்கு... ஏதோ தெரியாம..." எனத் தயக்க மாகச் சொல்லவும்,

இதை எதிர்பார்த்த அபூ, "ஐயோ... அதை இன்னுமா நினைச்சுட்டு இருக்கீங்க... அன்னிக்கே நான் அதை மறந்துட்டேன்... பழசை எதுவும் நினைக்க வேண்டாம்... இனிமேல் நம்ம நல்ல ஃப்ரெண்ட்சா இருப்போம்..." என கை நீட்டிச் சொல்ல, இந்த வீட்டில் அவள் மட்டும் தனித் தீவாக இருந்தவள், இன்று தனக்கொரு இணை கிடைத்த சந்தோஷத்தில், "ஓ... கண்டிப்பா..." என உடனே ஆமோ தித்தாள்...

பேசியவாறு கீழே வந்திருந்த இருவரையும் எதிர்கொண்ட வெங்கடராமன், "உன்னைத்தான் அபூ இப்போ தேடிக்கிட்டு இருந்தேன். எங்கே லஞ்ச் முடிக்காமல் வீட்டுக்குப் போய்ட்டியோன்னு நினைச்சு உனக்கு கால் பண்ணலாம்னு இருந்தேன்..." என்றவர், மறந்தும் முல்லையின் பக்கம் திரும்பவில்லை...

"மேல தான் மாமா போயிருந்தேன். இவங்க ரொம்ப நேரமா கீழேயே வரலையா... அதான் நானே போய்க் கூப்பிட்டு வந்தேன்..." என அட்க்கமாகச் சொல்ல,

"ப்ச்... உனக்கு எதுக்கு இந்த வேலையெல்லாம் அபூ... ஆறுமுகத்துக்கிட்ட சொல்லி விட்டிருக்க வேண்டி யதுதானே..." எனக் கடிந்தவரின் வார்த்தைகளில், 'நீ போய் இவளைக் கூப்பிடுவதா...' என்ற ஏளனம் தொக்கி யிருப்பதை முல்லை கண்டு கொண்டாளென்றால்,

அபூவின் மனது அவளுக்கே சபாஷ் போட்டுக் கொண்டது... இதையல்லவா இவள் எதிர்பார்த்து வந்தது.

காலையிலிருந்து முல்லையின் மனது வெங்கட்டின் பேச்சில் குமுறிக் கொண்டிருக்க, இப்போதும் இவரின் இந்த ஏளனப் பேச்சு அவளை மேலும் குறுகச் செய்தது...

இதே வார்த்தைகளை வேறு யாரேனும் கொடுத் திருந்தால் அவளின் பதிலடியே வேறாக இருந்திருக்கும். ஆனால் அவளின் இப்போதைய ஒரே உறவான மகிழனின் தந்தையைத் தான் எதிர்த்துப் பேசி அதனால் தந்தை - மகனுக்குள் ஏதேனும் பிரச்சனை உருவாகி விட்டால், பின் அந்தக் குற்றவுணர்விலிருந்தும் அவளால் மீள முடியாது... முடிந்தவரை பொறுமையாகப் போக வேண்டுமென்பதை அவள் மனதில் உருப்போட்டுக் கொண்டிருந்தது, இப்போது அவளுக்கு உபயோகமாக இருந்தது.

ஆனால் அவளின் வேதனையை மேலும் கூட்டாமல் அவளுக்குத் துணையாக வந்து சேர்ந்தான் மகிழன்...

வீட்டிற்குள் வந்தவுடனே அவனின் பார்வை முதலில் சந்தித்தது அபூர்வாவைத் தான்...

காலையில் அவனிருந்த மன நிலையில் அவளைப் பார்த்தும் பார்க்காமல் சென்றவனுக்கு, அவள் இன்னமும் தன் வீட்டில் இருப்பது அவனின் புருவத்தைச் சுருக்கச் செய்தது...

கூடவே அவள் அருகில் முல்லை தலை குனிந் திருப்பதைக் கண்டவன் நொடியில் அவளின் மன நிலையை உணர்ந்தவன் போல் வேக நடையிட்டு முல்லையை நெருங்கி அவள் தோள்களை அணைத்து நின்று, "ஹே அபூ... எப்படியிருக்க... பார்த்து ரொம்ப நாளாச்சு... என்ன இந்தப் பக்கம்..." என்ற அவனின் தொடர் கேள்வியில் உனக்கு இங்கென்ன வேலை என்ற கேள்வி தொக்கி நின்றது...

பின்னே அபூவைப் பற்றிப் பூரணமாக இல்லை யெனிலும், சிறிதளவிலாவது அறிந்திருப்பவன் ஆயிற்றே!

"ஹாய் மாமா... ஏன்... நான் இந்த வீட்டுக்கு வரக்கூடாதா...? இந்த வீட்டுக்கு வர எனக்கு உரிமை

யில்லையா...?" என அவளின் கேள்விக்கு மகிழன் பதில் கொடுக்கு முன்,

"உனக்குத்தான் இந்த வீட்டில் முழு உரிமையும் இருக்கு அபூம்மா... இந்த வீட்டுக்கு நீ எப்போ வேணா வரலாம், போகலாம்..." என முடித்த வெங்கட்ராமன்...

"வாடா அபூ... லஞ்ச் சாப்பிடலாம்..." என்றவர், கோகிலாவையும் அழைத்துக் கொண்டு சாப்பாட்டு மேசைக்குப் போக, மகனையும், மருமகளையும் ஒரு பொருட்டாகக் கூட நினைக்கவில்லை...

அவர் மதிக்காததை இவன் மதிக்காமல் தன் தோளில் ஆறுதலாகச் சாய்ந்து கொண்டிருந்த மனைவி யின் முகத்தை நிமிர்த்திப் பார்த்து அவள் கண்களில் வழிந்த அதிகப்படியான வேதனையைக் கண்டு கொண டவன் போல், "வாடா, சாப்பிடப் போகலாம்..." என்று அழைக்க,

அத்தனை நேரம் சிங்கத்தின் குகையில் தனித்து நின்றவளுக்குக் கிடைத்த ஆறுதலாகச் சாய்ந்திருந்த முல்லைக்குக் காலையில் அவன் தந்தையின் கீழ்த் தரமான பேச்சுக்குப் பதில் கொடுக்காத கணவனை நினைத்துக் கோபம் வந்தது...

"ச்சு... விடு... எனக்கு இந்த வீட்டிலிருந்து ஒண்ணும் வேண்டாம்... நான் இப்படியே பட்டினியா கெடந்து செத்துப் போறேன்..." எனக் குரலுயர்த்தித் தன் கோபத்தை வெளிப் படுத்த....



அவளின் கோபத்தைப் புரிந்து கொண்டவன், அவளை அப்படியே மேலே கூட்டிச் சென்றான்....

தங்கள் அறைக்குள் முல்லையை அழைத்து வந்தவன், அவளைக் கட்டிலில் அமரச் செய்து, தானும் அவளுடன் சேர்ந்தமர்ந்து அவளின் கைகளைத் தன்னுள் அடக்கி, "கொடிம்மா... காலையில் அப்பா பேசினது ரொம்ப தப்புதான்டா... அவருக்காக நான் உன்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்.... அவர் ஏதோ ஆதங்கத்தில் இப்படியெல்லாம் பேசுறார். உன்னோட அம்மாவும் என்னை என்னவெல்லாம் பேசினாங்க. எல்லாப் பெத்த வங்களுக்கும் இருக்கிற கோபத்தைத்தான் அப்பாவும் காட்டறார். ஆனால் இவரோடது கொஞ்சம் எக்ஸ்ட்ரீம்... எல்லாமே கொஞ்ச நாள்ல சரியாகிடும்..." என எடுத்துச் சொல்ல,

"அவரோட கோபத்தைக் காட்ட அவருக்கு எல்லா உரிமையுமிருக்கு மகி... எனக்கும் அவரோட கோபம் புரியுது... ஆ... ஆனா... அவர் ஒவ்வொரு தடவையும் என்னோட கேரக்டரைத் தப்பா சொல்லும் போது அது எந்தளவுக்கு எனக்கு வலியைக் கொடுக்கும்னு உனக்குப் புரியுதா... காலையில அவர் அப்படிப் பேசுறார்... நா... நான் அப்படிப்பட்டவளா மகி... காதலிச்சவனையே கல்யாணம் செய்துகிட்டது அவ்வளோ பெரிய குத்தமா... உன்னைக் காதலிச்சுட்டு என்னால எப்படி மகி... அடுத் தவனைக் கல்யாணம் பண்ணியிருந்தா அப்போ தானே நான் கேவலமானவ..." எனக் கேவலுக்கிடையே பேசியவள்,

"ம...மகி... அன்னிக்கு மட்டும் நீ வரலன்னா, நீ கல்யாணம்னு சொன்னது உன் தங்கச்சிக்குன்னு எனக்குத் தெரியாம இருந்திருந்தா சத்தியமா அடுத்த நாள் நான் செத்துப் போயிருப்பேன், தெரியுமா..." என்றவள் முடிக்கு முன் கைகள் தன்னவளை இறுக்கக் கட்டிக் கொண்டன...

"சீ.. பைத்தியக்காரி... என்னடி பேச்சிது... இனிமேல் இப்படிப் பேசின, நானே உன்னைக் கொன்னுடுவேன்..." என்றவனின் அணைப்பு மேலும் மேலும் இறுகி அவனின் காயத்தில் வலியை ஏற்படுத்தினாலும் அதை விட அவளின் பேச்சு அவனின் மனதைக் காயப்படுத்தி யிருந்தது...

காலையில் அவன் தந்தையுடன் பேசிவிட்டுச் சென்றவனுக்கு அலுவலகத்தில் இருந்த முழு நேரமும் அவன் செய்த ஒவ்வொரு தப்பையும் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது அவனின் நியாய மனம்...

சரியான வகையில் தன் காதலைச் சொல்லாமல் சென்றது, அவளிடம் காதலைச் சொல்லும் முன் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டது, அதன் பின்னும் தங்கையின் திருமண வேலையில் இவளை வந்து ஒரு தடவையேனும் பார்க்காமல் விட்டது, சின்னாவின் பேச்சில் ரோஷப்பட்டு, முல்லையைத் திருமணம் செய்து கொண் டாலும், அதன் பிறகும் அவளின் விருப்பத்திற்கு முக்கியத் துவம் கொடுக்காமல் சுயநலமாகச் சிந்தித்தது... என அவனின் தப்பின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போனது...



அவன் யோசித்த வரையில் தன்னை நம்பி வந்தவளுக்கு நியாயம் சேர்க்க எண்ணிச் சில முடிவு களை எடுத்து வந்திருந்தான்...

அதை முல்லையிடம் உடனே சொல்லியும் விட்டான்...

"கொடி... இனிமேல் உனக்கு இந்தக் கஷ்டம் வேண்டாம்டா... இனிமேலும் உன்னை அடுத்தவங்க இந்த மாதிரிப் பேச விடமாட்டேன்... நீ மகிழனோட மனைவி... எனக்கிருக்கிற அதே உரிமையும், மரியாதை யும் உனக்கும் கிடைக்கணும்... இங்கிருந்தா உனக்கு மேலும் மேலும் மனக்கஷ்டம்தான்..." என்றவன், பேசிக் கொண்டே போக, முல்லை அவனை விநோதமாகப் பார்த்து வைத்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிற... நான் சொல்றது எல்லாமே நிஜம்... இனிமேலும் உன்னை இந்த மாதிரி பேச்சைக் கேட்க விடுவேன்னு நீ நினைக்கிறியா...?" என்றவன்...

"நம்ம வேற வீட்டுக்குப் போயிடலாம்டா... இனிமேல் இங்கு ஒரு நிமிஷம் கூட இருக்க வேண்டாம்... நீ உடனே கிளம்பு..." எனத் துரிதப்படுத்த...

இத்தனை நேரம் இவன் பேசியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தவள், இப்போது, "யாரைக் கேட்டு இந்த முடிவை எடுத்தீங்க மகிழ்...?" எனக் கோபத்துடன் வாயைத் திறந்தாள்...

# 23

உன் ஆசை காதில் சொன்னால்
நிறைவேற்றுவேன்...
உனக்காக வெயிலைக் கூட மழையாக்குவேன்...
உன் பெயரைச் சொல்லிச் சொல்லி
உதடுகள் தேய்ந்ததே...
உனக்கின்று யார் சொல்வது...?

**"யா**ரைக் கேட்கணும்... இது நம்ம ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயம்..." என்றவனை,

"ஏன் மகிழ்... ஏன் உங்களுக்குப் புத்தி இப்படிப் போகுது...?" எனத் தலையில் கை வைத்து அமர்ந் தவளைக் கண்டு, இப்போது மகிழனுக்குக் கோபம் வந்தது.

"ஹே, இப்போ என்ன தப்பா சொன்னேன்...?"

"ம்ம்... என்ன சொல்லணும்... உங்களுக்கு ஏன் இப்போ இந்த வீட்டை விட்டுப் போகணும்னு எண்ணம் வந்துச்சு...?"

"ஏன்னா என்ன கேள்வி இது... உனக்காகத்தான்... நீ இங்க யார்கிட்டயும் பேச்சு வாங்க எனக்குப் பிடிக்கல. அதான்... நம்ம இங்கிருந்து போயிட்டா யாருக்கும் தொல்லையில்லை... நம்மளும் சந்தோஷமா இருக்க லாம்..." என்றவனை,

"ஏற்கெனவே இங்க எல்லாரும் நான்தான் உன்னை ஏமாத்திக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு என்னைக் கரிச்சுக் கொட்டிக்கிட்டு இருக்காங்க... இதுல கல்யாண மாகிப் பத்தே நாள்ல நம்ம தனிக் குடித்தனம் போனா,



நான்தான் உங்களுக்குத் தலையணை மந்திரம் ஓதினேன்னு பேசுவாங்க மகி..." எனக் கேவியவளைக் கண்டு மகிழனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.... அதை அவளிடமே கேட்டு விட்டான்...

"சரி... இப்போ என்ன தான் செய்யலாம்னு சொல்ற, முல்லை. இங்கேயே இருக்கணும்... இருந்து எங்கப்பா, அம்மாவோட ஆசிர்வாதம் வாங்கணும்னு நீ நெனைச்சு கிட்டு இருக்கறது எதுவுமே நடக்காத விஷயம்..." எனக் கோபமாகச் சொன்னவனுக்குப் பதில் சொல்ல முல்லை யால் முடியவில்லை...

"இதோ பாரு... நீ என்னைத்தானே காதலிக்கிற... உனக்கு நான்தானே முக்கியம்... அப்போ இனிமேல் நான் சொல்லறதைக் கேளு... முதல்ல இங்கிருந்து கிளம்பற வழியைப் பாரு..." என்றான்.

முல்லை இருந்த இடத்தை விட்டு நகராமல் அப்படியே அமர்ந்திருக்கவும், "ச்சே... ஏன்டி என்னை ஆள் ஆளுக்குப் பந்தாடறீங்க... நீயும் நான் சொல் றதைக் கேட்க மாட்டேன்னா...? இனிமேல், அப்பா அதைச் சொல்லிட்டாங்க... அம்மா இதைச் சொல்லிட்டாங்கன்னு என்கிட்ட வந்து மூக்கை உறிஞ்சாதே... என்னமோ பண்ணிக்கோ..." என்றதும், அத்துடன் பேச்சு முடிந்தது போல், அவன் அறையை விட்டு வெளியேறப் போக...

"எங்கே போற மகி... சாப்பிட்டுட்டுப் போ... வா. நான் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்..." என்றவள், பேசிக் கொண்டே அவனையும் அழைத்துக் கொண்டு உணவுக் கூடத்திற்கு வந்துவிட்டாள்.

அங்கே ஏற்கெனவே வெங்கட்ராமன், கோகிலா, அபூ அனைவரும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க, மகிழனும் ஒரு சேரில் அமர்ந்து கொண்டான்...

அவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்த ஆறுமுகத்தைச் சமையலறைக்குள் அனுப்பி விட்டு மகிழனுக்குத் தட்டில் சாதத்தைப் போட்டுப் பரிமாறியவள், அடுத்திருந்த கோகிலாவின் தட்டில் வைத்து ரசத்தை ஊற்றவும், கோகிலா வாயைப் பிளந்து அமர்ந்திருந்த வேளையில் வெங்கட்ராமனின் உணவில் ரசத்தை ஊற்றினாள்...

அவளின் செயலில் மகிழன் உட்பட அனைவரும் ஒரு நொடி திகைத்து அமர்ந்திருக்க, வெங்கட்ராமன் கோபத்துடன் கையை உதறிக் கொண்டு எழுந்து செல்ல முயல, "மாமா... எங்கே போறீங்க... உட்கார்ந்து சாப் பிட்டுட்டுப் போங்க..." என்று அதட்டியது முல்லையே தான்...!

தன்னையே அதட்டும் முல்லையைத் திரும்பி முறைத்த வெங்கட்ராமனை, "இப்போ எதுக்கு இந்த முறை முறைக்கறீங்க... இதோ பாருங்க. இப்போ சொல்றேன், எல்லாரும் கேட்டுக்கோங்க... இந்த வீட்டுக்கு நான்தான் மருமகள்... நான் வந்த முறை வேணா தப்பா இருக்கலாம்... ஆனால் நான் மகிழனைக் காதலிச்சதோ, இல்லை, அவரைக் கல்யாணம் செய்துகிட்டதோ எந்தத் தப்புமில்லை... என்னைத் திட்டவோ, அதட்டவோ உங்க எல்லாருக்கும் உரிமையிருக்கு... ஆனா இனிமேல்



என்னோட கேரக்டரைத் தப்பா சொன்னா இனிமேல் நான் பொறுத்திருக்க மாட்டேன்..." என்றாள்.

இவள் சொல்வதை ஒரு அலட்சிய பாவத்துடன் கேட்டுக் கொண்டிருந்த வெங்கட் திரும்பி நடக்க,

"மாமா... இன்னிக்கு நீங்க சாப்பாடு வேண்டாம்னா போங்க... இனிமேல் தினமும் மூணு நேரமும் நான்தான் உங்க எல்லாருக்கும் பரிமாறுவேன்... இங்க எனக்குன்னு இருக்கற உரிமையை நீங்க யாரும் எனக்குக் கொடுக்க வேண்டாம்... நானே எடுத்துக்கிறேன்..." என்றவள், ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்த மகிழனின் தட்டில் பொரியலை வைத்து, "சீக்கிரம் சாப்பிடு மகி..." என்ற ஒரே அதட்டலில் ஆனானப்பட்ட மகிழனே உணவை அள்ளி வாயில் அடைத்துக் கொண்டான்....

அதன் பின் வெங்கட்ராமன் அங்கிருந்து சென்று விட, கோகிலாவும் உணவைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு சென்றுவிட, இதை எல்லாம் இதழ்களில் ஏளனச் சிரிப் புடன் பார்த்துக் கொண்டிருந்த அபூவிற்கு, 'இன்னும் நீ எவ்வளவு தூரம் போவியோ போடி... எனக்கு இந்தக் குடும்பம் பண்ணின துரோகத்திற்கு உங்க எல்லாரையும் சும்மா விடமாட்டேன்...' எனக் கறுவிக் கொண்டவள் தானும் உணவை முடித்து எழுந்து கூடத்திற்குச் சென்றாள்...

அவளுக்குப் பின் சாப்பிட்டு எழுந்த மகிழன் பின்னே சென்று, அவன் கை துடைக்க டவலைக் கொடுத்தவளின் சேலைக் கொசுவத்தைப் பற்றித் தன் பக்கமிழுத்தவன், "ஹே ஊசிப் பட்டாசு... என்னடி இப்படிப் பொரியற...

அப்பாவே ஒரு நிமிஷம் அரண்டுட்டார்... இப்படிப் போச்சுன்னு வை. என்னை மாதிரியே இந்த வீட்ல எல்லாரும் உன்கிட்ட பிளாட் தான்..." என்றவன், அவள் திமிறத் திமிற அவளின் இடையில் கவிதை எழுதினான்...

அவனின் லீலைகளில் நெகிழ்ந்த முல்லை, "மகி... வி... விடு... இது பப்ளிக் ப்ளேஸ்... யாராவது வந்துடப் போறாங்க..." என்று முணுமுணுக்க,

"எதுடி பப்ளிக் ப்ளேஸ்... இதுவா...?" என அவள் இடையைத் தொட்டுக் காட்டி, "இது எனக்கே எனக்கு உரிமையான ப்ளேஸ்..." எனத் தன்னுடன் இழுத்துக் கொண்டவன்...

"டே கேன்டி... அது வேணா நீ உன் சபதத்தை நிறைவேற்றின பிறகு வைச்சுக்கலாம்..." என்று இழுத் தவன், அவள் உதடுகளைத் தன் விரலால் வருடி,

"ஆனா அடிக்கடி எனக்குச் சில்லறை வியாபாரம் செய்யணும்... அதுக்கு உன்னோட பர்மிஷன் நான் கேட்கவே மாட்டேன்... அதுவும் இல்லாமல் இந்தப் பத்து நாள் நான் ரொம்பவே கஷ்டப்பட்டுட்டேன்டா... ப்ளீஸ்... நான் சுத்த சைவமில்ல... அப்பப்போ நான்-வெஜ் சாப்பிடணும்..." எனக் கண்களில் காதலோடு சொல்ல,

முல்லைக்கு அவன் உணர்வுகள் புரிந்து, "என்னமோ செய்யுங்க... ஆனா இப்படி நடு வீட்ல எதுவும் செய் யாதீங்க... இப்போ என்னை விடுங்க..." என அவனிட மிருந்து சிரமப்பட்டுத் தன்னைப் பிரித்து அங்கிருந்து நகர்ந்தாள்.



முகத்தில் வெட்கப் புன்னகையுடன் வந்த முல்லையைக் கண்டு, அபூவின் மனம், "ஹோ... ரொமான்சா... நடக்கட்டும், நடக்கட்டும்..." என வன்மமாக நினைத்தவள் வந்த முல்லையிடம் மேலும் சிலவற்றை நட்புடன் பேசி அவளை நம்ப வைத்தாள்...

சில நிமிடங்கள் கழித்து அவள் கிளம்புவதாகச் சொல்லவும், அவளை அன்புடனே பேசி வழியனுப்பி வைத்ததைப் பார்த்த மகிழனுக்கு எந்த ஆச்சரியமு மில்லை... அவனுக்கு முல்லையின் குணம் அத்துப்படி யல்லவா...!

எவ்வளவுக்கு எவ்வளவு கோபமுண்டோ அதைவிட அதிகமாக அன்பு காட்டுபவள்...

ஆனால் அடி வாங்கிய பூனை இன்று முல்லை யிடம் இப்படி அன்பொழுகப் பேசுவதுதான் அவனுக்குச் சற்றுச் சந்தேகத்தை விளைவித்தது...

ஆனால் அவன் அதைப் பெரிய பொருட்டாக எண்ணவில்லை... அவள் என்ன செய்துவிடப் போகிறாள் என்ற எண்ணமும் அவனுள் இருந்தது.

நாட்கள் அதன் போக்கில் சென்று கொண டிருந்தன...

முல்லையும் மகிழனும் அவர்களின் ஒவ்வொரு நாளையும் அனுபவித்து வாழ்ந்து வந்தனர். அவர்க ளுக்குள் உடலால் எந்த உறவும் ஏற்படவில்லை யெனினும், மனதால் அவர்கள் ஒன்றிப் போயினர்.

தினமும் காலை மகிழன் கண் விழிக்கும் தருணத் திலிருந்து அவனுக்கு முல்லை தேவைப்பட்டாள்.

சின்னச் சின்னச் சீண்டல்கள், கேலி கிண்டல் என அவர்களின் வாழ்க்கை ரம்மியமாகச் சென்று கொண் டிருந்தது. மகிழனும் முல்லையின் மனதின் உணர்வுகளை மதித்து நடந்து கொண்டான்.

அவனின் தோள் காயமும் மெல்ல மெல்ல ஆறிக் குணமடைந்திருந்தான்.

இதுவரை மகிழனைக் குத்தியவன் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இன்ஸ்பெக்டர் சத்ய மூர்த்தி யும் தனக்குக் கிடைத்த தகவலை வைத்து விசாரித்துக் கொண்டுதானிருக்கிறார்.

மகிழனின் பழைய எதிரி முதல், புதிய எதிரி ரவி வரை அனைவரிடமும் விசாரித்ததில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை...

மகிழனிடம் மீண்டும் விசாரிக்க அவன் குத்திய வனைப் பற்றிய எந்தத் தகவலும் கொடுக்க மறுத்ததோடு இல்லாமல், தன் தந்தை கொடுத்த கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கவும் சொல்லி விட்டான்...

முல்லையின் விஷயத்தில் அவ்வீட்டில் பெரியதாக எந்த முன்னேற்றமில்லை யெனினும், முன்பு போல் வெங்கட் முல்லையை வார்த்தைகளால் சாடவில்லை... அவர் சாடும் அளவிற்கு முல்லை நடந்து கொள்ளவும் இல்லை.



அப்படி ஏதேனும் ஒரு தருணத்தில் அவர் இவளை ஏதாவது பேசினால், உடனுக்குடன் பதிலும் கொடுத்து விடுவதால், அவர் அமைதி காத்து வந்தார்.

ஆனால் அவர் கோபம் குறைந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

கோகிலாவும் முல்லையைத் தவிர்க்கவில்லை. இவர் சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தால் அவர் கேட்காமல் இவளே சென்று உதவினாள்.

தினமும் காலையும் மாலையும் அவரின் மூட்டு வலிக்கு மருந்து தேய்த்து விட்டாள்.

முதலில் சில நாட்கள் மறுத்து வந்த கோகிலா அவளின் தொடர் படையெடுப்பில் அவளை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

மூட்டு வலிக்கு மருந்திடும் சாக்கில் முல்லை தன்னைப் பற்றி ஏதேனும் சொல்லி அவரைப் பேச வைக்க முயற்சிப்பாள்.

முதலில் தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டிருந்த கோகிலா, அவளின் பேச்சில் வழியும் கேலியில் ஒரு நாள் வாய்விட்டுக் கண்ணீர் வருமளவு சிரித்து வைத்தார்.

அவரின் சிரிப்புச் சத்தத்தில் மகிழன் அறைக்கே ஓடி வந்துவிட்டான்.

மகிழனைக் கண்ட கோகிலா, "ஹய்யோ ராசு... இந்தக் குறும்புக்காரி கூட எப்படித்தான் சமாளிக்கிறியோ...

ஹப்பா... என்ன வாய்... என்ன வாய்... பட்டாசு மாதிரிப் பேசுறா தம்பி...” என மேலும் சிரிக்கத் துவங்கியவரை மகிழன் விழி விரியப் பார்த்தான்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகப் பேசாத அன்னை இன்று தன்னிடம் பேசியது மட்டுமில்லாமல் அவர் மட்டுமே அழைக்கும், “ராசு” என்ற அழைப்பில் அவனின் மனம் நெகிழ்ந்து, “அம்மா...” என்ற கூவலுடன் அவரைக் கட்டியணைத்துக் கொண்டான்.

“அம்மா... நீங்க என்னோட பேசிட்டீங்கம்மா... பேசிட்டீங்க... எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா...! அம்மா என்னை மன்னிச்சுட்டீங்களாம்மா...?” எனக் குழந்தை போலக் கேட்டவனின் தலையை வருடியவர் கண்களிலும் சந்தோஷக் கண்ணீர் உருண்டோடியது...

மெல்லிய குரலில், “யாரும் செய்யாத தப்பை நீ செய்யல ராசு... ஆனாலும் அதை நீ என்கிட்ட சொல்லியிருந்தா அம்மாவே உங்க கல்யாணத்தை விமரிசையா செஞ்சிருப்பேன்... நீ திடீர்னு ஒரு பொண்ணோட வீட்டுக்கு வந்தா எங்களுக்கு எப்படியிருக்கும், சொல்லு... மத்தப்படி எனக்கு உன்மேல எந்தத் தனிப்பட்ட கோபமுமில்லை தம்பி...” என்றவர்,

பக்கத்திலே தலைகுனிந்து அமர்ந்திருந்த முல்லையைத் தன் பக்கமாக நிறுத்திக் கொண்டவர், அவளிடம், “அவரை மாதிரி நானும் உன்னை ரொம்பத் தப்பா நினைச்சுட்டேன்ம்மா... எங்க உன்னால இந்த வீட்டு



மானம், மரியாதை பறி போயிடுமோன்னு ரொம்பப் பயந்து போயிட்டேன். ஆனா, நான் நினைச்சது தப்புன்னு இப்போ எனக்குப் புரியுது...” என்றவர்...

மகனையும் மருமகளையும் ஒன்றாக நிறுத்தி, “ரெண்டு பேரும் இதே போல ஒண்ணா, ரொம்ப சந்தோஷமா... நீண்ட நாள் வாழணும்னு ஆண்டவனை வேண்டிக்கிறேன்...” என மனமார வாழ்த்தியவரின் காலில் பணிந்த முல்லையைத் தொடர்ந்து மகிழனும் அன்னையின் காலில் விழுந்து வணங்கினான்...

இருவரையும் மனதார ஆசிர்வதித்த கோகிலாவிடம் மகிழன், “அம்மா... அப்பாவும்...” என்க,

அதைப் புரிந்து கொண்டவராய், “எனக்கே மூணு மாசமாச்சு... உங்க அப்பாவுக்கு எப்படியும் மூணு வருஷமாகும்... அது வரைக்கும் பொறுத்திருங்க...” - அவர் சொன்னதும்,

“ஐயோ! அம்மா...” என மகிழன் அலறி, ‘இவ சபதம் தெரியாம அம்மா மூணு வருஷம்ன்றாங்களே...’ என மனதில் புலம்பிக் கொண்டான்.

இதையறியாத கோகிலா, “சீக்கிரமா ஒரு பேரனோ பேத்தியோ பெத்துக் கொடுத்துடு, முல்லை... ஒரு குழந்தையைப் பார்த்தா உன் மாமா கண்டிப்பா பிளாட்டாகிடுவார்...” எனக் கிண்டல் போலத் தன் விருப்பத்தைச் சொல்ல, முல்லை வெட்கப் புன்னகையுடன், தலை குனிந்து கொண்டாள்.

கோகிலாவின் அறையிலிருந்து வெளியே வந்த முல்லை, மகிழனின் முகத்தில் சந்தோஷத்தையும் மீறிய ஒரு நிம்மதி...

அதுவும் முல்லை, தான் எடுத்திருந்த முடிவில் முதல் படியைக் கடந்துவிட்ட திருப்தி அவளின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிய, அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்தன.

அவளைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டு தங்கள் அறைக்குள் வர, முல்லை மகிழனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவளின் சந்தோஷத்தின் அளவு அவளின் இறுகிய அணைப்பில் தெரிய, மகிழனே இவளின் இந்த அணைப்பில் திகைத்துப் போனான்.

முல்லையைச் சிரமப்பட்டுத் தன்னிடமிருந்து பிரித் தெடுத்த மகிழன் அவளின் கண்களைச் சந்திக்க, அதில் தெரிந்த அளவு கடந்த சந்தோஷமும், தன்னை இந்த வீட்டில் ஒருவராவது ஏற்றுக் கொண்டாரே என்ற நிம்மதியைப் பிரதிபலிக்க, அந்த நிம்மதி மகிழனை என்னவோ செய்தது.

"ஹே கொடி... என்ன இதுக்கே இவ்வளவு சந்தோஷப்படற...!"

"பின்னே... இது எவ்வளவு பெரிய விஷயம், என்னையும் ஏத்துக்கிட்டு, இத்தனை நாளுக்குப் பிறகு நம்ம ரெண்டு பேரையும் ஒரு ஜீவன் ஆசிர்வதிக்



கறாங்கன்னா... அது... அது எனக்கு எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா...? நம்ம கல்யாணம் அத்தையால அங்கீகரிக்கப்பட்டுருச்சு மகி..." எனக் குதூகலித்தாள்...

அவளின் குதூகலிப்பு மகிழனுக்குள் சில யோசனைகளை வரவைத்தது...

அவனை மேலும் யோசிக்க வைக்காமல், முல்லை அவனின் நெஞ்சில் சாய்ந்து, "மகி... மகி..." எனக் கொஞ்சும் குரலில் அழைக்க,

அவளின் குரல் மகிழனுக்கு ஏதோ செய்தியைச் சொல்ல, அவனும் அதே குரலில், "ம்ம்... சொல்லுடா..." என்றான்.

"அது வந்து..."

"ம்ம... வந்து..."

"அது..."

"அடுத்ததைச் சொல்லுடி..." என அவள் கன்னம் வருட...

"அது வந்து... அத்தை... சீக்கிரமாகவே ஒரு பேரனோ, பேத்தியோ பெத்துக் கொடுக்கச் சொன்னாங் கல்ல..." - சிறு வெட்கத்துடன் சொல்ல,

"ம்ம.. ஆமாம்... அதுக்கென்ன..." எனப் புரியாதவன் போல் கேட்டவனை...

"ப்ச்... யோ... இந்த நடிக்கிற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம்... சொல்லிட்டேன்..." என விரல் நீட்டி மிரட்டியவளை,

"ஹே... இப்போ நான் என்னடி நடிச்சேன்... நீதான் எனக்குப் புரியாததை எல்லாம் பேசிகிட்டிருக்க... தெளிவாச் சொல்லு..." என்றவனை,

"ம்ம்... தெளிவாச் சொல்லணுமாக்கும்... போய்யா..." என முகத்தைத் திருப்பிக் கொண்டு கட்டிலில் சென்றமர்ந் தவளை,

"ஏன்டி... இதோ பாரு... நீ சொல்றதைத் தெளிவாச் சொன்னாத்தானே எனக்குத் தெரியும்... இந்தப் பொண் ணுங்களே இப்படித்தான்... எல்லாத்தையும் மனசு லேயே வச்சுகிட்டு, நாங்களே எல்லாத்தையும் கண்டு பிடிக்கணும்னு நினைக்கறது... இப்போ நீ சொல்லப் போறியா, இல்லையா?" எனக் கறாராகக் கேட்டவனின் கையைச் சுண்டி இழுத்துக் கட்டிலில் சாய்த்து அவளும் அவன் மேல் விழுந்தாள்...

அவளின் இந்தத் திடீர்த் தாக்குதலில் தடுமாறி விழுந்தவன், "ஹே... ராட்சசி... என்னடி இது..?" சிரிப் புடனே கேட்டவனை...

"போதும்டா நடிச்சது... அப்படியே ஒண்ணுமே தெரியாத பாப்பா... நான் வேண்டாம் வேண்டாம்னு சொல்லும்போது வந்து என்னைச் சீண்டி விளையாட வேண்டியது... இப்போ சரின்னு சம்மதம் சொன்னா ஓவரா சீன் போட வேண்டியது.... சரி... தெளிவாவே சொல்லறேன்... ம்ம்... உனக்கு வேணும்னா என்னை எடுத்துக்கோ..." என முடிப்பதற்குள் முல்லையின் முகம் மகிழனின் நெஞ்சில் புதைந்திருந்தது.



மகிழனுக்கு இவள் இதைத்தான் சொல்லப் போகி றாள் என்பது முதலிலேயே தெரிந்தாலும், அவளிடமே இதைக் கேட்க விரும்பினான்...

கேட்டபின் அவனுக்கு அவளின் தேவையை நிறை வேற்றத் தோன்றவில்லை... அதற்குக் காரணமும் இருந்தது...

"ம்ம்ம்... அதான் அத்தை சொன்னாங்களே... ஒரு குழந்தை வந்தா நம்மளை எல்லாரும் ஏத்துப்பாங் கன்னு..."

"நினைச்சேன்..." என்றவன் கட்டிலிலிருந்து எழுந்து, "போய் எனக்குச் சாப்பாடு எடுத்து வை... ஆபீஸ் கௌம்பணும்... இன்னிக்கி ஒரு மீட்டிங் இருக்கு..." என்ற துடன் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

முல்லைக்கு மகிழனின் செயல் விந்தையாக இருந்தது. "இவன் என்ன... வேணாம்னு சொன்னா வேணும் வேணும்னு படுத்தறான். வேணும்னு சொன்னா வேண்டாம்னு போறான்..." எனக் குழம்பிய முல்லை அடுத்து வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

அதன் பின் வந்த நாட்கள் அனைத்தும் அதன் போக்கில் செல்ல, கோகிலாவின் அன்பைத் தவிர அந்த வீட்டில் வேறெந்த மாற்றமும் நிகழவில்லை...

அபூவின் வருகையும் நாளுக்கு நாள் அதிகரிக்க, முல்லை அவளுடன் நட்புடன் பழகுவதால் மகிழனுக்கும் அவர்கள் இருவரின் நடப்பில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை...

தினமும் போனில் அரட்டையடிப்பது... வெளியே ஷாப்பிங் செல்வதென இருவரும் நெருங்கிய தோழிகளாக மாறிப் போயினர்.

எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்தது. அன்று காலை மகிழனின் செல்போனில் முல்லையைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்கும்வரை...

## 24

பனியாக உருகி நதியாக மாறி...
அலை வீசி விளையாடி இருந்தேன்...
தனியாக இருந்தும் உன்
நினைவோடு வாழ்ந்து...
உயிர்க் காதல் உறவாடிக் கலந்தேன் இன்று...
இது எந்தன் வாழ்வில் நீ போட்ட கோலம்...
கோலம் கலைந்ததே புதுச் சோகம் பிறந்ததே...

**போ**னில் கோகிலா சொன்ன செய்தியைக் கேட்டு மகிழன் அதிர்ந்து நின்றான். அவனால் இதைச் சற்றும் நம்பவே முடியவில்லை...

"என்னம்மா சொல்றீங்க...? முல்லை இங்கிருந்து கிளம்பி ரெண்டு மணி நேரத்துக்கு மேலாச்சும்மா..." அதிர்ச்சியாகச் சொல்ல...

"ஆனா இன்னும் வீடு வந்து சேரலையே ராசு...!"

"அம்மா... எங்காவது ஷாப்பிங் போயிருப்பா... நீங்க அவ நம்பருக்குக் கூப்பிடுங்க... அது கிடைக்கலைன்னா ட்ரைவர் நம்பருக்குக் கூப்பிடுங்க..." என்றவனை,



"டிரைவர் பழனிதான் ராசு, அவளைக் காணோம்னு சொன்னான்... வீட்டுக்கு ஏதோ வாங்கணும்னு காந்திபுரம் போயிருக்கா... ஒரு மணி நேரத்துக்கு மேலயும் வெளியே வரலைன்னு பழனி ஸ்டோர் முழுசும் தேடியும் ஆளைக் காணோம்னு போன் பண்ணிப் பார்த்தா போனைக் கார்லயே விட்டுட்டுப் போயிருக்காளாம் ராசு... எனக்கு ரொம்ப பயமாயிருக்குப்பா... ஏற்கெனவே உன்னை வேற கொலை பண்ண வந்திருக்காங்க... அப்பவே யாரு என்னன்னு விசாரிச்சிருந்தா இப்போ இப்படி நடந் திருக்குமா... நீ உடனே கிளம்பி அங்கே போ... பழனி இன்னமும் அங்கதானிருக்கானாம்..." நிற்காமல் புலம்பித் தன் கவலையை வெளிப்படுத்த,

"இதோ கிளம்பிட்டேன்ம்மா... என்ன எதுன்னு விசாரிச்சுட்டு நான் போன் பண்றேன்... நீங்க எதுக்கும் பயப்படாதீங்க..." என்றவன், உடனே பிரபுவைத் தன் அறைக்கு வரச் சொன்னவன், அவனிடம் சில ஆணை களைப் பிறப்பித்து விட்டு, அங்கிருந்து கிளம்பிவிட்டான்...

காரில் போகும் போது மகிழனின் மனம் முழுவதும் அவனின் முல்லை நிறைந்திருந்தாள்...

இதுவரை தன்னைப் பார்க்க ஆபீஸ் வராத முல்லை இன்று தான் அவனைக் காண ஆபீஸ் வந்தது மட்டுமில்லாமல் அவனுக்கு உணவெடுத்து வந்திருந்தாள்.

சற்று நேரம் முன் நடந்தது இப்போதும் அவன் கண் முன்னே விரிந்தாடியது.

தன் ஆபீஸ் அறையில் கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்த மகிழனைக் கலைத்தது இன்டர்காமின் ஒலி...

"பாஸ்! உங்களைப் பார்க்க உங்க வைஃப் வந்திருக்காங்க..." என ரிசப்ஷனிஸ்ட் சொன்னதும், மகிழனின் மனதிலும், உடலிலும் பரபரப்பு தொற்றிக் கொண்டிருந்தது...

"சென்ட் ஹேர் இன்சைட்..." என்றவனுக்கு,

"ஓகே பாஸ்..." என்ற வரவேற்பாளினி, "பாஸ்... யுவர் வைஃப் லுக்ஸ் வெரி ப்ரிடி..." எனவும்,

மகிழனின் மனம் துள்ளி, "தேங்க்ஸ்..." என்றவன், கையில் வைத்திருந்த கோப்பை மேசையின் மீது வைத்து விட்டுத் தன்னை ஒரு முறை சரி செய்து கொண்டான்.

தினமும் பார்க்கும் மனைவி என்றாலும் முதல் முறை தன்னைப் பார்க்கத் தன் ஆபீஸ்க்கு வந்திருக்கும் மனைவியை எதிர்கொள்ள அவன் மனம் டீன்ஏஜ் பையனைப் போன்று பரபரத்தது...

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த முல்லையைக் கண்கொட்டாமல் பார்த்த மகிழன், "ஹே... கேன்டி... வெரி ஸ்வீட் சர்ப்ரைஸ்..." என்று புன்னகையுடன் வரவேற்ற மகிழன் தன் இருக்கையிலிருந்து எழுந்து வந்தவன் அவளை அணைக்க முற்பட,

"ஹே ஹே... இது ஆபீஸ் மகி... தள்ளிப் போ..." என விலகிய முல்லையை இழுத்து,



"ஆபீஸா இருந்தாலும் என் பெர்மிஷன் இல்லாமல் யாரும் வரமாட்டாங்க கேன்டி... யூ டோன்ட் வொர்ரி..." என அவன் சீண்டல் வேலையைத் துவங்க...

"ஹய்யோ விடு..." எனத் தள்ளிவிட்டவள், "ஏதோ மீட்டிங் இருக்கு... இன்னிக்கு சாப்பிட வீட்டுக்கு வர மாட்டேன்னு சொன்னே... இங்கே பார்த்தா வெட்டியா உக்காந்துட்டு இருக்க..." என்றவளை,

"அடிப் பாவி... என்னைப் பார்த்தா வெட்டியா இருக்கற மாதிரி இருக்கா... மீட்டிங்குக்குத் தயாராகிட்டு இருந்தேன்... அதுக்குள்ளே தேவி தரிசனம் கிடைக் கும்ன்னு நான் என்ன கனவா கண்டேன்... என்னடி இது ஒரு போன் கூடச் செய்யாமல் வந்திருக்க..." என வியந்து கேட்டவனை,

"ஹ்ம்ம்... நீ எனக்குத் தெரியாம உன்னோட லேடி செக்ரெடரி கூட ஜல்சா பண்றதா எனக்கு உளவுத்துறை ரிப்போர்ட் வந்தது... அதைக் கண்டுபிடிக்கத்தான் இந்த திடீர் விசிட்..." எனச் சிரிக்காமல் சொன்னவளை,

"ஓஹோ... மேடம் சி.ஐ.டி. வேலை பார்க்குறீங்களா... சூப்பர்... ஹ்ம்ம்... பட் உங்க விசாரணையில நான் குற்றவாளி இல்லைன்னு நிரூபணமாகிடுச்சா...?" கிண்ட லாகக் கேட்டவனை,

"இன்னிக்கி எலி மாட்டலை... நிச்சயமா இன்னொரு நாள் பொறி வச்சுப் பிடிச்சுடுவேனாக்கும்..." என்றவளை அணைத்து, "ஹ்ம்ம்... பிடி பிடி..." என அவள் கழுத்தில்

கவிதை எழுதத் துவங்கியவனைக் கலைத்தது இன்டர் காம்...

அவள் கழுத்திலிருந்து முகத்தை எடுத்து அவளை யும், இன்டர்கமையும் பார்த்தவன், "இப்போ தான் ஆரம் பிச்சேன்... அதுக்குள்ள எவனுக்கோ மூக்கு வேர்த் துடுச்சு..." என வெறியாகச் சொன்னவன், அடித்துக் கொண்டிருந்த போனை எடுத்து, "யா... ஒரு ஃபைவ் மினிட்ஸ் கழிச்சு என் கேபினுக்கு வரச் சொல்லுங்க..." என இணைப்பை வைத்துவிட்டு,

"டே கேன்டி... பாம்பே கிளைண்ட்ஸ் வந்துட் டாங்கடா... நீ ஒரு ஒன் ஹவர் வெயிட் பண்றியா... இல்ல வீட்டுக்குப் போறியா...? இங்கே உனக்கு போர் அடிக்கும்..." என்றான்.

"எனக்கு ஒண்ணும் பிரச்சனையில்ல... அத்தை தான் வீட்ல சும்மா இருக்க... போய் ராசுவுக்குச் சாப்பாடு கொடுத்துட்டு வான்னு துரத்தி விட்டாங்க..."

"ஹா ஹா... சரி, இரு..." என்றவன் மீண்டும் ஒரு போன் செய்து பிரபுவை வரச் சொன்னவன், அவன் அறைக்குள் வந்ததும்,

"கொடி... நீ பிரபுவோட மில்லைச் சுத்திப் பாரு... நான் மீட்டிங் முடிச்சுட்டுக் கூப்பிடறேன்..." என அனுப்பி வைக்க, அவர்கள் வெளியே செல்லவும், அறைக்குள் அவன் எதிர்பார்த்த வாடிக்கையாளர் வரவும் சரியாக இருந்தது...



அவர்களை ஆங்கிலத்தில் வரவேற்ற மகிழனின் அழகை முல்லையின் மனம் ரசிக்க... தனக்காகக் காத் திருந்த பிரபுவிடம், "நான் இங்கயே இருக்கவா...?" எனக் கண்களைச் சுருக்கிக் கேட்க,

அவன் சிரித்துவிட்டு, "சரி. இருங்க..." என அவளை மீண்டும் அறைக்குள் அழைத்துச் சென்று,

"சார்... உங்க வைஃப்க்கு உங்களோடவே இருக் கணும்னு ஆசை போல..." எனத் தமிழில் சொல்லிவிட்டு அவளை அங்கேயே விட்டுச் சென்றான்...

புன்னகையுடன் ஒரு தலையசைப்பைக் கொடுத்து அவளை அங்கிருந்த சோபாவில் அமரச் சொல்லிவிட்டு வந்திருந்த வாடிக்கையாளரிடம் தன் பேச்சைத் துவக்கி னான்...

அடுத்து வந்த ஒரு மணி நேரத்தில் வந்திருந்த வாடிக்கையாளர்களிடம் அவர்கள் கம்பெனியின் வரலாற்றைச் சொல்லித் தங்கள் பொருளின் தரத்தைப் பறைசாற்றி, சில சாம்பிள்களைக் காட்டி, இருபக்கத்திற்கும் சமமான தொகையைப் பேரம் பேசி, அவர்கள் கேட்ட தொகையை விட லாபகரமாகப் பேசி முடித்து ஒப்பந் தத்திலும் கையெழுத்து வாங்கி விட்டிருந்தான்...

ஆரம்பம் முதல் அவர்கள் பேசியது அனைத்தும் ஆங்கிலத்திலிருக்க, உன்னிப்பாகக் கேட்டுக் கொண் டிருந்த முல்லை, மகிழனின் வியாபார யுக்தியைக் கண்டு வியந்து போனாள்...

அவர்களை வழியனுப்பி விட்டுச் சோபாவில் அமர்ந்திருந்த முல்லையின் அருகில் அமர்ந்தவன், அவள் தோளைச் சுற்றி அணைத்து, "எப்படி ஐயாவோட டேலன்ட்..." எனச் சட்டைக் காலரைத் தூக்கி விட்டவனை,

"செம டேலேன்ட் தான் போங்க..." என அவன் கன்னத்தில் முத்தமிட்டவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து அரை மணி நேரத்தில் முடிக்க வேண்டிய மதிய உணவை ஒரு மணி நேரமாக நீட்டித்து அவளை மனமேயில்லாமல் வீட்டுக்கு அனுப்பி முழுதாக இரண்டு மணி நேரம் கூட முடியவில்லை...

அதற்குள் அவளைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்ட மகிழன் தன்னைச் சுற்றிலும் வெறுமை சூழ்ந்து கொண்டதைப் போன்று உணர்ந்தான்.

தன் நினைவிலே காந்திபுரம் சென்றவன் அங்கே குறிப்பிட்ட அக்கடையின் முன் பழனி அங்கிருந்து யாரோ ஒருவருடன் விசாரித்துக் கொண்டிருக்கவும், அவசரமாக காரைப் பார்க் செய்துவிட்டுப் பழனியின் அருகில் சென் றான்...

"என்னாச்சு பழனி... முல்லை எங்கே...?" எனக் குரலுடைந்து கேட்டவனுக்குப் பதில் சொல்ல முடிய வில்லை அவனால்...

அவனுக்கும் முல்லையைக் காணோம் என்றதும், அவனின் மனம் ஏகத்துக்குத் துடிக்க ஆரம்பித்துவிட்டது.

அவனுக்கு மகிழனின் வாழ்வில் முல்லையின் பங்கு என்னவென்று தெரியுமல்லவா...!



"தெரியலங்கய்யா... வீட்டுக்குக் காய் வாங்கணும்னு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுன்னு சொன்னாங்க... சரிம்மா... நீங்க வாங்கிட்டு வாங்க... நான் காரை பார்க் பண்ணிட்டு வெயிட் பண்றேன்னு சொன்னேன்... பத்து நிமிஷத்துக்கு மேல ஒரு மணி நேரமாகியும் காணோம்னு கடை ஃபுல்லா தேடிட்டேனுங்க... எங்கேயும் காணோம்... எனக்கு என்ன பண்றதுன்னே புரியலைங்கய்யா..." எனக் குரலுடைந்து சொன்னவனுக்குப் பதில் சொல்ல முடி யாமல் அந்தக் கடைக்குள் பாய்ந்து மகிழனும் ஒரு முறை அலசிப் பார்த்து விட்டான்...

முல்லையை எங்கு தேடியும் காணவில்லை... கடைசியில் அந்தக் கடை மேனேஜரிடம் விசாரித்து சி.சி.டி.வி. கேமராவில் பார்க்கலாம் என மனம் சொல்ல, உடனே அங்கே விரைந்து செல்ல... அவனின் செல் போன் ஒலியெழுப்பியது...

எடுத்துப் பார்த்தவனுக்கு அது அவனின் தந்தை யின் எண்ணாயிருக்க... உடனே எடுத்தவனை, "மகிழ்... முல்லையைக் காணோம்னு இப்போதான் கோகி சொன்னா... எங்கடா போனா.... உன்னைப் பார்க்கத்தான் வந்தாளாமே..." எனப் பரபரப்பாகக் கேட்டவரின் மாற்றம் மகிழன் இருந்த மன நிலையில் அவனுக்குப் புரிய வில்லை.

"தெரியலயேப்பா... என்னைப் பார்க்கத்தான் வந்தா... நான்தான் அவளை அனுப்பி வைச்சேன்... கடைக்கு வந்தவளை எங்கே தேடியும் கிடைக்கலப்பா...

எனக்கு ரொம்பப் பயமா இருக்குப்பா... அவளுக்கு என்னாச்சுன்னு தெரியல..." என உடைந்த குரலில் சொல்ல,

"சரி மகிழ்... நீ முடிஞ்சளவுக்குத் தேடு... நான் சத்யமூர்த்திகிட்ட சொல்லி அந்த சரௌன்டிங்கில் பார்க்கச் சொல்றேன்..." என்றவர், உடனே அதைச் செயலாற்றவும் செய்தார்...

மகிழனும் அந்தக் கடையின் சி.சி.டி.வி.யில் பார்க்க அங்கு முல்லை வந்ததற்கான எந்த அறிகுறியும் தென் படவில்லை.

அவனுக்கு இப்போது பழனியின் மீதுகூடச் சந்தேகம் வந்தது... எங்கே இவன் வேண்டுமென்றே பொய் சொல் கிறானோ என்று சந்தேகத்தில் அவன் முகம் பார்க்க... அவனோ மிகத் தீவிரமாக அங்கிருந்த ஊழியர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தான்.

பல வருடமாகத் தங்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் பழனியைச் சந்தேகப்படுவது தவறென்று அவன் மனம் இடித்துரைத்தாலும், அவனிருக்கும் நிலை யில் பார்ப்பவர்கள் அனைவரையும் சந்தேகமாகத்தான் பார்க்கத் தோன்றியது.

இதற்கு மேலும் இங்கிருந்தால் தனக்கு விடை கிடைக்காது என்று தோன்றவே, பழனியை அழைத்து அங்கேயே காத்திருக்கும்படி சொன்னவன்... உடனே அங்கிருந்து கிளம்பிக் காரை வந்தடைந்து, பிரபுவிற்கு அழைத்து, "பிரபு... குணாவோட ஆள் ஒருத்தனை இங்க



கடைகிட்ட அனுப்பச் சொல்லு... இங்க சிட்டியைச் சுத்தியும் தேடச் சொல்லு... யாருக்கு எந்தத் தகவல் கிடைச்சாலும் உடனே எனக்குப் போன் பண்ணிச் சொல்லு..." என்றவன், அங்கிருந்து கிளம்பி வழி நெடுகிலும் தேடினான்...

அவனின் இப்போதைய தேடலுக்குத் தேவையான விடை கிடைக்கவில்லை எனிலும்... அவனின் பல நாட்களின் தேடலுக்கு விடை கிடைத்துவிட்டது...

ஆம்... அன்று அவனைத் தாக்கியவனின் பைக் சாலை ஓரத்துப் பார்க்கிங்கில் நின்றிருக்க, மகிழன் அங்கேயே அவனின் காரைச் சில அடி தூரம் தள்ளி நிறுத்தி விட்டுக் காத்திருந்தான்...

அன்றைய சம்பவத்திற்கும் இன்றைய சம்பவத் திற்கும் முல்லையின் கடத்தலுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவே தோன்றியது. முல்லை கடத்தப்பட் டிருக்கிறாள் என்பதை உறுதியாக நம்பினான் மகிழன்.

தனக்கு யாரோ கண்ணுக்குத் தெரியாத விரோதி இருக்கிறார்கள் என்பது அவனுக்கு நூறு சதவீதம் உறுதி யாயிற்று. ஆனால் அது யாரென்று தான் அவனால் யூகிக்க முடியவில்லை.

ரவி நிச்சயம் இதைச் செய்திருக்க மாட்டான் என்பது அவனுக்கு நூறு சதவீதம் உறுதியான விஷயம்... அன்றைய ரவியுடன் உண்டான பிரச்சனையிலிருந்து அவனை இந்த மூன்று மாதங்களாக மகிழன் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறான்... அப்படியிருக்கையில்

அவனின் அடுத்த நடவடிக்கை எப்படியும் மகிழனுக்கு அத்துப்படி.

தொழில் துறை நண்பர்கள் நேரடியாகத் தன்னிடம் மோதுவார்களே ஒழிய, இப்படி முல்லையை வைத்து விளையாட மாட்டார்கள் என்பதும், அதற்கு அவசிய மில்லை என்பதும் அவன் அறிந்ததே... அப்போது இதை யார் செய்திருப்பார்கள் என்றுதான் அவனால் கணிக்க முடியவில்லை.

அவன் யோசித்துக் கொண்டிருந்த வேளை... அந்த பைக்கின் அருகில் யாரோ வருவதும் அதில் அமர்ந்து அவன் முகத்தைக் கைக்குட்டையால் மறைப் பதும் தெரிய, மகிழனால் அவனின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

எனினும் இப்போது ஜன நெருக்கடியில் அந்த நபரை அடைவது சரியில்லை என்பது தெரிய அவன் வண்டியைத் தொடர முடிவு செய்தான்...

எடுத்த எடுப்பிலே ஒரு வித ஒலியுடன் அவ்வண்டி புறப்பட்டுச் செல்ல, மகிழனின் காரும் வேகமெடுத்தது... போகும் வழியிலே பிரபுவிற்கு அழைத்து ஆட்களை அனுப்புமாறு பணித்தவன், அடுத்து வந்த புறவழிச் சாலையில் ஆள் அரவமற்ற இடத்தில் அந்த பைக் நபரை அடைந்து அவனின் வண்டியை இடித்துத் தள்ளியவன் நொடியில் காரை விட்டிறங்கி விழுந்த அவனின் விலாவில் எட்டி மிதித்து, அவன் கட்டியிருந்த கைக்குட்டையைக் கழற்றி வீசினான்.



மகிழன் இதுவரை அவனை எங்கும் பார்த்த தில்லை... பார்ப்பதற்கு ஏதோ காலேஜ் படிக்கும் பையனைப் போன்று தோற்றமளித்தவனை அவன் எதிர் பார்க்கவில்லை.

அவனைத் தவறாகத் தாக்கி விட்டோமோ என்ற சந்தேகத்தில் அவன் கழுத்தை ஆராய, அதே சில்வர் செயினில் டாலர் தொங்கிக் கொண்டிருக்க, தான் சந்தே கித்தது சரியென்று நினைத்தவன், விழுந்திருந்தவனைச் சட்டைக் காலரைப் பற்றி எழுப்பி, “யார்டா நீ...?” என கர்ஜனையுடன் கேட்க,

அந்த அவன், “நீ யாருடா...?” என எகிற,

அவன் குமட்டில் ஓங்கிக் குத்திய மகிழன், அவன் அம்மாவெனக் கீழே விழவும், “ஐயாக்கு என்னை யாருன்னு தெரியலையா....? மவனே... எவ்வளவு தைரியமிருந்தா என் மேலயே கை வைச்சிருப்ப... ராஸ்கல்...” என்று ஒரு உதை விட, அதற்குள் மகிழனின் ஆட்களும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

கீழே கிடந்த அவனைத் தூக்கி நிறுத்திய மகிழனின் குண்டர்களிடம், “இவனைக் கோடவுனுக்கு அழைச்சுட்டுப் போய் விசாரிங்க... நான் பின்னாடியே வரேன்...” எனவும் அந்த பைக்காரனை வந்தவர்கள் அள்ளிக் கொள்ள, அவர்களில் ஒருவன் அந்தப் பைக்கை ஓட்டிக் கொண்டு பின்னேயே செல்ல, மகிழனும் அவர்களைத் தொடர்ந்தான்.

மகிழனுக்கு இப்போது உறுதியாகத் தெரிந்தது...

இவனை விசாரித்தால் முல்லை எங்கிருக்கிறாள் என்ற விஷயம் தெரிந்து விடுமென்று.

கோடவுன் சென்றவர்களுக்கு முன்னரே அங்கு காத்திருந்த பிரபுவையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்ற மகிழன் அந்த பைக்காரனை விசாரிக்கத் துவங்க, அவன் சொன்ன ஒவ்வொரு விஷயத்திலும் அனைவரும் அதிர்ந்து நின்றனர்.

அவர்கள் அதிர்வதற்குக் காரணமிருந்தது. அவன் முதலில் சொன்னது, 'அவனொரு என்ஜினீயரிங் கல்லூரி மூன்றாமாண்டு மாணவன்' என்பது...

அடுத்து அவன் சொன்னது மகிழனைக் கொலை செய்தால் அவனுக்கு ஒரு ஐ-போன் வாங்கித் தருவதாகச் சொன்னார்களாம்.

இதைக் கேட்டதும் அங்கிருந்த அனைவருக்கும் அதிர்ச்சியுடன் கூடிய சிரிப்பொன்று உதிர்ந்தது...

"அடப் பாவி... கேவலம் ஒரு ஐ-போஃன்க்கா எங்க சாரைக் கொல்லப் பார்த்தே... நீ கேட்டிருந்தா சாரே ஒண்ணு வாங்கிக் கொடுத்திருப்பாருடா மடையா..." எனப் பிரபு சிரித்துக் கொண்டே சொல்ல.

மகிழனும் சிரித்துக் கொண்டே, "அது சரி... யாரு உன்கிட்ட இப்படியொரு கேவலமான ப்ரொபோசலைச் சொன்னது. ஏன்டா... உங்க எல்லாருக்கும் என்னோட உயிரோட மதிப்பு வெறும் ஐம்பதாயிரம் ரூபாதானா... கேட்டதும் கேட்ட... கொஞ்சம் பெருசா கேட்டிருக்கக் கூடாது..." என அந்த ரணகளத்திலும் அவன் ஆதங்கமாகக் கேட்க...



மகிழனுக்கு அந்தப் பையனைப் பார்க்கும்போதே தெரிந்தது, அவன் நிச்சயம் சின்னப் பையன் என்று.

அதுவும் அவன் சொன்ன கொலைக்கான காரணம் கண்டு, அவனை நினைத்துப் பாவமாக இருந்தது.

நம் நாட்டின் எதிர்காலம் இப்படிப்பட்ட இளைஞர்களின் கையில் இருக்கிறது என்பதை நினைத்த நொடி அவனின் நெஞ்சம் உண்மையாகவே வருத்தம் கொண்டது.

"சரி சரி... யாரு அந்த மகாப் பிரபு உனக்கு ஐ-ஃபோன் வாங்கித் தரேன்னு சொன்னது..." எனப் பொறுமையாகக் கேட்டான்.

அதற்கு அவன் சொன்னதுதான், அங்கிருந்த அனைவருக்கும் அடுத்த மிகப் பெரிய அதிர்ச்சி.

அது அவனை அனுப்பியது அபூர்வாவின் தந்தை சிவசுப்ரமணி என்பதுதான் அவர்களின் அதிர்ச்சிக்குக் காரணம்.

## 25

பெண்ணெனும் வீட்டில் நீ செய்த யாகம்...
கண் மூடிப் பார்த்தேன் எங்கும் இன்பம்...
அன்பென்னும் ஆற்றில் நீராடும் நேரம்...
அங்கங்கள் யாவும் இன்னும் என்னும்...

இன்றைக்கும் என்றைக்கும்
நீ எந்தன் பக்கத்தில்...
இன்பத்தை வர்ணிக்கும்
என்னுள்ளம் சொர்க்கத்தில்...

ஒரு போன் வாங்கித் தருவதாகச் சொல்லித் தன்னைக் கொல்ல ஆள் அனுப்பியது சிவசுப்ரமணிதான் என்பதைக் கேட்ட மகிழன் மிகவும் அதிர்ந்து போனான்.

தன்னைக் கொல்லும் அளவிற்கு அவன் மீது அப்படி என்ன அவருக்குக் கோபம் என்பதை நினைத்த பொழுது அவனது எண்ணத்தில் உதித்தது அபூர்வா.

அவர் பொண்ணை வேண்டாம் என்று சொன்ன தற்கா தன்னைக் கொல்ல நினைத்தார்...

அடக் கடவுளே! அவர் பெண்ணின் நல்வாழ்விற்குத் தானே அவளை வேண்டாமென்றது... முல்லையை நினைத்துக் கொண்டு அபூர்வாவைத் திருமணம் செய்து குடும்பம் நடத்தியிருந்தால் அவர் சந்தோஷப்பட்டிருப் பாராம்!

அபூர்வா கெட்ட குணமுள்ளவள் என்பது மகிழன் அறிந்ததே... ஆனால் அவளின் இந்தக் கேடு கெட்ட குணத்திற்குக் காரணம் சிவசுப்ரமணிதான் என்று நினைக்கும் போதே அவன் மனம் கசங்கியது.

தன் சிந்தனையில் வயப்பட்டிருந்தவனைக் கலைத் தது பிரபுவின் தொடுகை.



"என்ன சார், அப்படியே உக்காந்துட்டு இருக்கீங்க. இப்போ எல்லா விஷயமும் நல்லாவே புரிஞ்சுடுச்சு சார். அவர் பொண்ணை வேண்டாம்னு சொன்னதால தான் அவர் உங்களைக் கொல்ல ஆள் அனுப்பியிருக்கார். இப்போ முல்லையைக் கடத்தியிருப்பதும் அவராத் தானிருக்கும். நம்ம சீக்கிரமே எதாவது செய்யணும்... ஒரு கொலையே செய்யத் துணிஞ்சிருக்காங்கன்னா இப்போ அதுக்கு மேலே என்ன வேணும்னாலும் செய் வாங்க..." என நிதர்சனத்தை உரைக்க,

மகிழன் தன்னை நிதானத்திற்குக் கொண்டு வந்து, அந்தப் பையனிடம் மேலும் சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்பட்டான்.

அவனின் தோள் மீது கை போட வந்தவனை அடிக்கத்தான் வருகிறான் என்று பயந்த அந்தப் பையனைத் தன்னிடம் நெருக்கி அணைத்து, "சிவா மா... ம்க்கும்... முழுசா சொல்லு தம்பி... அந்தச் சிவா உன்கிட்ட வந்து என்ன சொன்னார்... நீ எப்படி அவர் கிட்ட மாட்டினே. எல்லாமே விவரமா சொல்லு. இப்போ என்னோட வைஃப் அவங்க கையில இருக்காங்க..." எனப் பொறுமையாகப் பேச -

அதற்குள் அங்கிருந்த குண்டர்களுள் ஒருவன், "என்ன பாஸ் இப்படிப் பொறுமையாக் கேட்டுகிட்டு இருக்கீங்க. செவுள்ளயே நாலு விட்டு உண்மையைச் சொல்லுடான்னா சொல்லப் போறான்..." என எகிற, அவனை ஒரு பார்வையில் அடக்கி, "நீ சொல்லுப்பா..." என்றான்.

மகிழனின் அணுகு முறையில் பயம் தெளிந்த அப்பையன், "நான் படிச்ச அதே என்ஜினியரிங் காலேஜ்ல தான் அபூர்வா எனக்கு சீனியராப் படிச்சாங்க... நான் ஜூனியரா இருந்தாலும் எனக்கு சீனியர்ஸ்கிட்ட எப்பவும் ஒரு பயமிருக்கு. நான் ஃபர்ஸ்ட் இயர் படிக்கிறப்ப என்னை ராக் பண்ணின ஒரு சீனியரோட மண்டையை உடைச்சுட்டேன்... அப்போயிருந்து ஷங்கர்ன்னா எல்லோருக்குமே பயம்..." என்றவனை இடையிட்டு,

இன்னொரு குண்டர், "அடே... உன்கிட்ட உன் சுய சரிதையைக் கேட்கல... எங்க பாஸ் கேட்டதுக்குப் பதில் சொல்லுடா வெண்ணெய்..." எனத் திட்டியவனைப் பிரபு அடக்கினான்.

"ஓஹோ... உன் பெயர் சங்கரா...?" மகிழன் கேட்க,

அவன் தலையை மேலும் கீழுமாக ஆட்டினான்...

"சரி, சொல்லு..." என எடுத்துக் கொடுக்க,

"அப்போயிருந்து காலேஜ்ல எல்லாரும் என்னைப் பார்த்தாலே அலறுவாங்க சார்... முக்கியமா சீனியர் பசங்க... அதனாலயே எனக்கு கேர்ள்ஸ்கிட்ட ஒரு ஹீரோ இமேஜ் க்ரியேட்டாயிடுச்சு... சீனியர் ஜூனியர் பொண்ணுங்க எல்லாருமே எனக்கு ஃப்ரெண்ட்ஸ். அப்போ தான் நாலஞ்சு மாசத்துக்கு முன்னாடி அபூ அக்கா என்கேஜ்மென்ட்டுக்கு என்னைக் கூப்பிட்டாங்க. என்னால வர முடியல. லேட்டாத்தான் வந்தேன்... நான் கரெக்ட்டா உங்க வீட்டு கேட்டுக்குள்ள நுழையும்போது ஒரு ஜாகுவார் வெளியே போச்சு... அந்தக் காரையே



பார்த்திட்டு இருந்த என்னை அபூ அக்கா மறைச்சு, நீங்க எங்க போறீங்கன்னு ஃபாலோ பண்ணச் சொன்னாங்க..." என நிறுத்த,

மகிழன் மனதில், "ஓஹோ... அப்பனும் பொண்ணும் என்னை அப்போயிருந்தே வாட்ச் பண்ணிக்கிட்டு இருந்தீங்களா...!" என நினைக்க...

"அன்னிக்கி நடந்தது எல்லாமே அபூ அக்காவுக்குத் தெரியும். நீங்க ஒரு பொண்ணை இடிச்சது, அவங்க உங்களோட சண்டை போட்டதுன்னு... எல்லாமே அவங்களுக்குத் தெரியும்... அதுக்கு அப்புறம் தான் அக்கா ஒரு நாள் உங்களோட அந்த ஊருக்கு வந்த பிறகு நடந்த பிரச்சனைக்கு அப்புறம் நீங்க அவங்களை வேண்டாம்னு சொன்னதும்... உங்களை ஃபுல் டைமா தொடர்ந்து என்னை வாட்ச் பண்ணச் சொன்னாங்க... அப்போ தான் ஒரு நாள் நீங்களும் அன்னிக்கிப் பார்த்த பொண்ணும் கட்டிப் பிடிச்சு நின்னதை நான் பார்த்துட்டு அப்போவே அவங்களுக்குப் போட்டோ எடுத்து வாட்ஸ்-அப் பண்ணினேன்..." என மீண்டும் நிறுத்த,

"அடப் பாவிப் பசங்களா! டெக்னாலஜியை எப்படி எல்லாம் யூஸ் பண்றீங்க..." பிரபு மனம் தாங்காமல் வாய்விட்டுப் புலம்பி விட்டான்...

"அன்னிக்கி அபூ அக்கா ரொம்பவே கோபமா இருந்தாங்க... வெறி பிடிச்சவங்க போலக் கத்தினாங்க... தான் ஏமாந்து போயிட்டோம்... தோத்துப் போயிட்டோம்னு

ரொம்பவே அலறினாங்க... இது எல்லாமே சிவா அங்கிளுக்கு முதலிலேயே தெரியும். ஆனா அந்த நாள் அபூவோட கோவத்தைப் பார்த்துட்டு, சிவா அங்கிள் ரொம்பவே ஆத்திரப்பட்டாங்க... கேவலம் ஒரு கிராமத்துப் பொண்ணுகிட்ட நாம தோத்துட்டோம்னு அங்கிளும் கோவமா அபூ கிட்ட, 'உன்னை வேண்டாம்னு சொன்ன அவன் உயிரோடவே இருக்கக் கூடாது. அவனைக் கொன் றாலும்...' அப்படி இப்படின்னு பேசினாங்க...

"அப்புறம் அபூ அக்கா தான் அவனை மட்டும் கொல்லக் கூடாது. அவனோட மொத்தக் குடும்பமும் சேர்ந்துதானே அவனோட ஜால்ரா தட்டினாங்க, அவங் களையும் சேர்த்துப் பழி வாங்கணும்னு சொல்லி... உங்க சிஸ்டர் மேரேஜ் முடிஞ்சதும் கொல்லணும், அப்போ தான் மகனையும் பறிகொடுத்துட்டு, மகளையும் வாழா வெட்டியாப் பார்க்க முடியும்னு சொன்னாங்க...

"அவங்க சொன்ன மாதிரியே கரெக்ட்டா உங்க சிஸ்டர் மேரேஜ் முடிஞ்ச நைட் நீங்க வெளியே கிளம் பினதைப் பார்த்துட்டு அவங்களுக்கு நான் தகவல் கொடுத்தேன். அப்போதான் சிவா அங்கிள் என் கிட்டே ரொம்பவும் ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டாங்க. அவங்க நான் காலேஜ் படிக்கும்போது எனக்கு நிறைய ஹெல்ப் பண்ணியிருக்காங்க...

"உங்களைப் பாலோ பண்ண ஆரம்பிச்சதிலிருந்து நான் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து நிறையப் பணம் கொடுத்தாங்க. உங்களைக் கொன்னா எனக்கு எந்தப் பிரச்சனையும் வராமப் பார்த்துக்கிறேன்னு சொல்லி, நான்



ரொம்ப நாளாகக் கேட்ட ஐ-போன் வாங்கித் தர்றேன்னு சொன்னாங்க. நானும் சரின்னு ஒத்துக்கிட்டு வேலையில இறங்கிட்டேன்.

"ஆனால், இந்த மாதிரி முதல் தடவை பண்றதால எனக்கு ரொம்பவும் பதட்டமாக இருந்தது. அதுவும் நீங்க என்னை விட ரொம்பவும் பெரிசா இருந்தீங்களா... உங்களைச் சமாளிக்க முடியாமல் குறி தவறிடுச்சு... அங்கிருந்து தப்பிச்சாப் போதும்னு ஓடிட்டேன். அதுக்கு அப்புறம் பத்து நாள் நான் ஈரோட்ல இருக்கிற என்னோட ஃபிரெண்ட் வீட்டுக்குப் போயிட்டேன். என்னோட செல் போன் எல்லாமே ஸ்விட்ச் ஆப் செஞ்சுட்டேன்.

"அதுக்கு அப்புறம்தான் தெரிஞ்சுது நீங்க ரொம்பப் பெரிய ஆள் என்று. கண்டிப்பாக என்னைத் தேடி போலீஸ் வருவாங்கன்னு நினைச்சேன். ஆனால், நான் நினைச்ச மாதிரி நடக்காததால, தைரியமாக வெளியே சுத்த ஆரம்பிச்சுட்டேன். நடுவில ஒரு நாள் சிவா அங்கிள் என்னைக் கூப்பிட்டுப் பேசினாங்க. ஆனால், நான் பயந்துட்டு, இனிமேல் எனக்கும் உங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை... என்னை எதுக்கும் கூப்பிடாதீங்கன்னு விலகிட்டேன்..." என முழுதாகச் சொன்னதும், அங்கிருந்த அனைவரிடமும் ஆழ்ந்த அமைதி நிலவியது.

தன்னைக் கிட்டத்தட்ட ஐந்து மாதங்களாக ஒருவன் பின் தொடர்ந்திருப்பதை அறிந்து கொள்ளாமல் முட்டாள் தனமாக இருந்த தன்னையே நினைத்து வெறுத்தான் மகிழன்.

எதிரியைக் கூடவே வைத்துக் கொண்டு, ஊர் முழுவதும் தேடிக் கொண்டிருந்த தன் மடமையை எண்ணித் தலையிலடித்துக் கொண்டான்.

அவனது எண்ணமறிந்து அருகில் வந்து சமாதானம் செய்த பிரபுவிடம், "எவ்வளவு அழகா பிளான் பண்ணி அப்பனும் மகளும் எங்களை ஏமாத்திட்டு இருந் திருக்காங்க பார்த்தியா பிரபு. துரோகியை வீட்டுக்குள் ளேயே வெச்சுக்கிட்டு, அவ கிட்டேயே என் முல்லையைப் பறிகொடுத்திருக்கிறேன். ஹய்யோ...! இப்போ அவ எங்கே இருக்கா... எப்படி இருக்கான்னு ஒண்ணுமே தெரியலையே...!" எனப் புலம்ப ஆரம்பிக்க,

"பாஸ்... அழாதீங்க. ஆள் அவன்தான்னு தெரிஞ் சிடுச்சுல்ல... நீங்க கவலையை விடுங்க... இன்னும் ரெண்டு மணி நேரத்துல அண்ணி வீட்ல இருப்பாங்க. டேய் சேகர்... போய் வண்டியை எடுடா..." என குணா குரல் கொடுக்க, அங்கிருந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற ஆட்கள் படை கிளம்பியது.

மகிழன் இன்னமும் நடந்ததை ஜீரணிக்க முடியாமல் நின்ற நிலையிலேயே இருந்தான். நல்லது நினைத்த தனக்கே துரோகம் செய்த அவர்களின் கேவலமான புத்தியை நினைக்க நினைக்க அவனுக்கு அருவருப்பாக வந்தது. இப்படிப்பட்ட குடும்பத்தில் தன் தங்கையைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம் என்ற எண்ணம் எழ, "ஹய்யோ பிரபு... மது... மதுவை ஏதாவது பண்ணிடப் போறாங்க. அவ இப்போ எப்படி இருக்கா...? நான் உடனே அவளைப் பார்க்கணும். கிளம்பு..." எனத் துரிதப்படுத்த,



"சார்... ரிலாக்ஸ்... மதுவுக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. அவங்களை இளா பார்த்துப்பாரு..." என்ற பிரபுவை வெற்றுப் பார்வை பார்த்த மகிழன்,

"ஹ்ம்... குடும்பத்தில் அப்பனும் பொண்ணுமே சரியில்லை... அவன் பெத்த பையனை மட்டும் நம்பச் சொல்றியா? நான் போறேன்... எனக்கு என் தங்கச்சி வாழ்க்கை ரொம்பவும் முக்கியம்..." எனக் கிளம்ப,

"பாஸ்... இந்தப் பையனை என்ன செய்ய...?" போனவனைப் பிரபு தடுத்துக் கேட்க,

சிறிது நேரம் நின்று யோசித்த மகிழன், "அவனுக்கு ஒரு ஐ-போன் வாங்கிக் கொடுத்து அவனோட டீடெய்ல்ஸ் எல்லாமே வாங்கிட்டு, வெத்து ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து வாங்கிட்டு அனுப்பிடு..." என்றதுடன், அங்கிருந்து கிளம்பத் திரும்பியவன்,

மீண்டும் அங்கு வந்து, "தேங்க்ஸ் சங்கர்... உன்னாலதான் எனக்கு நல்லவங்க யாரு, கெட்டவங்க யாருன்னு தெரிஞ்சுது. இனிமேலும் இந்த மாதிரி முட்டாள்தனமா எதையும் செஞ்சு வைக்காதே! ஒரு போனுக்காகக் கொலை பண்ணத் துணிஞ்சிருக்கியே... அதுக்கு அப்புறம் உன்னோட லைஃப் பத்தி யோசிச்சியா? உன்னோட பேரண்ட்ஸ் பத்தி நினைச்சுப் பார்த்தியா? நல்ல வேளை எனக்கு எதுவும் ஆகலை! எனக்கு மட்டும்

ஏதாவது ஆகியிருந்தது... நிச்சயம் என்னோட அப்பா உன்னையும் சும்மா விட்டிருக்க மாட்டார்... உன்னை ஏவி விட்டவங்களையும் சும்மா விட்டிருக்க மாட்டார்...

"நீயே பார்த்திருப்பியே... இதே ஊர்ல படிப்பில்லாம, நல்ல துணிமணி இல்லாம... ஏன், அடுத்த வேளைச் சாப்பாட்டுக்குச் சாப்பாடு இல்லாம எத்தனையோ குழந்தைங்க அநாதையாகச் சுத்திக்கிட்டு இருக்காங்க... பட் உனக்கு... நல்ல பேரண்ட்ஸ், நல்ல படிப்பு... இதுக்கு மேலே ஒரு மனுஷனுக்கு என்னடா வேணும்? உன் லைஃபை நீயே கெடுத்துக்காதே!" என நீண்ட உரையுடன் அங்கிருந்து கிளம்பினான்.

மகிழனுக்கு இன்று நடந்த எதையுமே நம்ப முடியவில்லை. தன் ஆசை மனைவி கடத்தப்பட்டிருக் கிறாள்... அவளைக் கடத்தியவர்கள் தன் தங்கை குடும்பம்... அதற்கும் மேலே ஒரு சிறிய பையனை ஏவி விட்டுத் தன்னைக் கொலை செய்யப் பார்த்திருக்கிறார்கள் எனக் கேட்ட ஒவ்வொரு செய்தியும், அவனின் மூளையின் செல்களைச் செயலிழக்கச் செய்திருந்தது.

இப்போது அவனது மனம் முழுவதும் தன் மனைவி யும், செல்லத் தங்கையும் நன்றாக இருக்கிறார்கள் என்பதைக் கண்ணால் கண்டாலே அவனின் மீதி உயிர் திரும்பி வரும் என்ற நிலையிலிருக்க, அந்த ஷங்கரை அவனால் மிரட்டக் கூட முடியவில்லை.

மனம் யோசிப்பதைச் செவ்வனே செய்து கொண்டிருந்தாலும், கைகள் விரைவாகச் செயல்பட்டு, அபூவின் வீட்டிற்கு வந்தடையச் செய்திருந்தது.



வண்டியை நிறுத்தியதும் தன்னுணர்வு பெற்ற மகிழன், காரை விட்டு நொடியில் இறங்கி வேக நடையுடன் வீட்டிற்குள் நுழைந்தான்.

"ஹேய் அபூ... வெளியே வாடி..." எனக் கர்ஜனையாகக் கத்த, அப்போதுதான் ஆபீசிலிருந்து வந்திருந்த இளங்கோ, இவனின் கத்தலில் பதறியடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வர,

சத்தம் கேட்டுக் கிச்சனிலிருந்து வந்த ரஞ்சிதம், "மகிழ்... என்னது, என் பொண்ணை வாடி போடின்னு மரியாதை இல்லாமப் பேசிக்கிட்டு..." எனக் கோபமாகக் கத்த,

"சீ... அவளை மாதிரி கேடு கெட்டவளுக்கு என்ன மரியாதை? இந்த மாதிரி ஒரு பொண்ணைப் பெத்தது மட்டுமில்லாம அவளை ஒழுங்கா நல்ல புத்தி சொல்லி வளர்க்காம ஊர் மேய விட்ட உங்களைச் சொல்லணும்..." என்றவனை,

"மகிழ்... திஸ் இஸ் தி லிமிட்... என்னோட தங்கச்சியை இப்படி நீ தரக்குறைவாகப் பேசிக்கிட்டிருக் கிறதைப் பார்த்துட்டு நான் சும்மா இருப்பேன்னு நினைக் காதே!" என இளங்கோ கோபத்தில் பேச,

"ஆமாடா... ஆமா... உன் தங்கச்சி பண்ணின வேலைக்கு அவளைத் தங்கத் தட்டில வெச்சுப் பூஜை பண்ணணும். சீ... அவளும் ஒரு பொண்ணு... அடங்காப் பிடாரியா ஆடுற அவளை அடக்கத் துப்பில்லை... என்னைப் பேச வந்துட்ட... எங்கடா என் தங்கச்சி...?

அவளை இன்னமும் உயிரோட வெச்சிருக்கீங்களா... இல்லை, கொன்னு உங்க வீட்டுத் தோட்டத்துல புதைச்சிட் டீங்களா...?" இன்னமும் கோபம் குறையாமல் கேட்ட வனை,

"மகிழ்... உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பைத்தியம் மாதிரி பேசிக்கிட்டு இருக்கே...?" என இளங்கோ இடைமறிக்க,

"அண்ணா... என்னண்ணா... ஏன் இவ்வளவு கோபமாகப் பேசுறீங்க...?" என மாடியிலிருந்து சோர்வாக இறங்கி வந்த மதுரிமாவை நொடியில் அடைந்த மகிழ், "மது... மதும்மா... என்னாச்சுடா...? ஏன் இவ்ளோ சோர்வாக இருக்கே? உன்னை இந்தப் பாவிங்க ஏதாவது பண்ணிட்டாங்களா...? என்னாச்சுடா... அண்ணன் கிட்டே சொல்லும்மா..." எனப் பதட்டமாகக் கேட்க,

"ஹய்யோ... அண்ணா... எனக்கு ஒண்ணு மில்லை... நான் நல்லாத்தானிருக்கேன். உங்களுக்கு என்னாச்சு? ஏன் நீங்க மட்டும் தனியா வந்திருக்கீங்க? அண்ணி எங்கே? நீங்க அவங்களோடதானே வீட்டுக்கு வர்றேன்னு சொன்னீங்க..." என மது இடைவிடாமல் கேட்க,

அத்தனை நேரம் தங்கையின் எண்ணத்தில் இருந்தவன், மனைவியைப் பற்றி விசாரிக்கவும், "ஹையோ மது... அண்ணியைக் காணோம்டா... அவளை இன்னிக்கு மதியத்திலிருந்து காணோம்... அவளை என்ன பண்ணினாங்கன்னே தெரியலை... இதோ, இந்த வீட்ல



இருக்கிற ரெண்டு பிசாசுங்கதான் அண்ணியைக் கடத்தி வெச்சிருக்காங்க... அவங்க மட்டும் என் கையில கிடைச்சாங்க... அவங்களுக்கு என் கையாலதான் சமாதி..." என இன்னமும் கோபம் குறையாமல் கத்தியவனை,

"ப்ச்... புரியற மாதிரி சொல்லு மகிழ். வந்ததிலிருந்து ஏதேதோ பேசிட்டிருக்க... விஷயத்தைச் சொன்னாத்தானே தெரியும்..." என இளங்கோ பொறுமையிழந்து கத்த,

"என்னடா சொல்லணும்...? என்ன சொல்லணும்...? அதான் என் குடும்பத்தையே நாசம் பண்ணணும்னு உன் தங்கச்சியும், அப்பாவும் கங்கணம் கட்டிக்கிட்டு அலையுறாங்களே... அவங்களைப் போய்க் கேளு. எங்கேடா அவ... எங்கே உன் தங்கச்சி...? அவளை இன்னிக்குக் கொல்லாம விடமாட்டேன்..." என்றவனிடம்,

"உனக்கென்ன மூளை குழம்பிப் போச்சா மகிழ்... எதுக்கு இப்படி உளறிட்டு இருக்கே...?" இளா அவன் நிலைமை புரியாமல் கத்த, இப்போது மகிழனின் கோபம் இளாவின் மீது பாய...

அவனைத் தடுக்க ரஞ்சிதமும், மதுவும் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவின. அவனிருந்த நிலையில் அவனை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அபூவின் மீதும் அவள் தந்தையின் மீது மிருந்த கோபத்தை அவர்களிடம் காட்டத்தான் வந்தான்.

அவர்கள் இங்கு இல்லை என்றதும் கோபம் இளாவின் மீது பாய்ந்தது.

அவன் மேலும் ஏதும் செய்யும் முன், "மகி..." என்ற அழைப்பு, மகிழனின் கைகளைச் செயலிழக்கச் செய்தது.

சத்தம் வந்த திசையில் முல்லை கலைந்த தலையுடன், கிழிந்த நாராக இருப்பதைக் கண்ட மகிழனின் இதயம் சுக்கு நூறாக உடையக் காத்திருந்தது.

தன் முல்லைக்கு என்னவோ ஏதோ... அவள் எப்படி இருக்கிறாள்... என்று எதுவும் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தவனின் தவிப்பைப் பூர்த்தி செய்வது போல் முல்லையின் குரல் அவனுக்கு உயிர் மீட்டுத் தந்தது.

"கொடி..." என்ற அழைப்புடன் முல்லையை நெருங்கியவன், தன்னவளை இத்தனை நேரம் காணாமல் தான் தவித்த தவிப்பையும், அவளுக்கு ஒன்றும் ஆகவில்லை என்பதையும் அறிந்து, அவள் உச்சந் தலையிலிருந்து முகர்ந்து, தன் இறுகிய அணைப்பில் அவள் நலனைத் தேடினான்.

## 26

வானவில்தானே நம் சொந்தங்கள்...
வாழ்வினில் ஏனோ அதில் துன்பங்கள்!
ஆறுகள் சேரும் கடல் எல்லைகள்...
யாரிடம் சேரும் உள்ளங்கள்!
வலை தேடி நீயே நீயே அதில் வீணாக
விழாதே! நீ விழாதே!

வந்து விட்டாள் மகிழனின் முல்லை.



முல்லையைக் காணவில்லை என்றதும் மகிழன் எவ்வளவு துடித்தான்...! அவன் துடிப்புக்கு உயிர் கொடுக்க வந்து விட்டாள் அவனின் உயிர்த் தீ.

அரை நாளில் ஒருத்தி இப்படி இளைத்துப் போக முடியுமா? இதோ... அவனது உயிருக்கினியவள் வதங்கிய கொடியைப் போல் தெரிகிறாளே...!

சிறிது நேரத்துக்கு முன் அவளின் புன்னகை முகத்தில் புத்துணர்வடைந்த மகிழன், இப்போது அவளின் மகி என்ற அழைப்பில் உயிர் பெற்றான்.

இருவரும் உலகம் மறந்து, சுற்றுப்புறம் மறந்து, தங்களின் வேதனையை ஒருவரின் அணைப்பில் ஒருவர் போக்கிக் கொள்ள முயன்று கொண்டிருந்தனர்.

முல்லை வந்ததில் முதலில் மகிழன் சந்தோஷமடைந்தான் என்றால், அவளைப் பார்த்ததும் ரஞ்சிதத்தின் மனம் திகிலடைந்தது.

சுற்றி நின்று கொண்டிருந்த இளாவுக்கும், மதுவுக்கும்தான் இங்கு நடப்பது ஏதும் விளங்கவில்லை. என்ன நடக்கிறது என்பதைக் கேட்டும் அறிந்து கொள்ள முடியாமல், நடப்பதை வேடிக்கை பார்க்கும் வேலையைச் செய்து கொண்டிருந்தனர்.

வெகு நேரமாகியும் இருவரும் அதே நிலையில் இருக்க, நடந்து கொண்டிருப்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் மதுதான் அவர்களின் நிலையைக் கலைக்க முன்வந்தாள்.

"அண்ணா... என்னண்ணா... என்னாச்சு? அண்ணி, எங்கிருந்து வந்தீங்க? ஏன் இப்படி இருக்கீங்க அண்ணி? எங்கேயாவது கீழே விழுந்துட்டீங்களா?" அவளிருந்த ஆர்வத்தில் இருவரிடமும் கேள்விகளைக் கோத்தாள்.

ஆனால் எங்கே...? அவளுக்கு விடைதான் கிடைக்கவில்லை.

பதில் சொல்ல வேண்டிய இருவரும் இன்னமும் அவர்கள் வேதனையிலிருந்து வெளி வரவில்லையே!

அரை நாளென்றாலும் தன் இணை எப்படி, என்ன நிலையில் இருக்கிறார் என்றறியாமல் துன்பப்பட்ட நிமிடங்கள் கொஞ்ச நஞ்சமா?

அவ்வளவு எளிதில் அதிலிருந்து அவர்களால் வெளி வந்துவிட முடியுமா?

முல்லையின் அழுகை ஓய்ந்து, அது விசும்பலாக முடியும் தறுவாயில்தான் அவள் எங்கிருக்கிறாள் என்பதை முதலில் உணர்ந்தாள்.

உணர்ந்தவள் முதலில் பார்த்தது அவளுக்கு நேரெதிரே இருந்த ரஞ்சிதத்தைத்தான்.

அவரைக் கண்டதும் பரபரப்புடன், "மகி... வா மகி... நாம இங்கிருந்து போயிடலாம். வா மகி..." எனத் தன்னை அணைத்திருந்த மகிழனைப் பிரித்தெடுத்துக் கண்களில் பயத்துடன் அவனை அழைத்தாள்.

அவளின் அழைப்பைக் கேட்ட மகிழனும் தன் மனைவியின் இந்தப் பயத்திற்குக் காரணமானவர்களைக்



கொன்றே விட வேண்டுமென்ற வெறியுடன், "கொடி... இவ்வளவு நேரம் நீ எங்கிருந்தே? நீ இப்போ எங்கிருந்து வர்றே? யாருடா உன்னைக் கடத்தியது? நான் உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா...?" என அவளைக் காணாமல் தான் துடித்த துடிப்பை வார்த்தைகளால் வடித்து விசாரிக்க,

முல்லையின் குரல் எழும்பவில்லை. கணவனின் துடிப்பைக் கண்டு அவளது தொண்டைக் குழிக்குள் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன.

"சொல்லும்மா... உன்னை யார் என்ன பண்ணினாங்க? சொல்லு... சொல்லுடா... எங்கேம்மா இருந்தே... உன்னைக் காணாமல் நான் செத்தே போயிட்டடேன்டி... எங்கேடி என்னைத் தனியா விட்டுட்டுப் போனே? சொல்லு..." மீண்டும் கேட்க, அவனின் உடைந்த குரலில் முல்லையின் கைகள் தானாக உயர்ந்து ரஞ்சிதத்தைக் காட்டின.

நின்ற நிலையில் திரும்பி, ரஞ்சிதத்தைப் பார்த்தவன், "இவங்களா...?" என அவ்வீடு அதிரக் கத்த...

அவனின் கத்தலில் ரஞ்சிதத்தின் உடல் சில்லிட்டது.

முல்லை ஆமென்று ஆமோதிப்பாகத் தலையாட்டியவள், உடனே, "ஏதும் பிரச்சனை வேண்டாம் மகி... இவங்க என்ன வேணும்னாலும் செய்வாங்க. நீ வா மகி... இங்கிருக்க வேண்டாம். மது, நீயும் வா... இங்கே இருக்காதே!" என முல்லை மகிழனை மட்டுமல்லாது, மதுவையும் சேர்த்தழைக்க, இப்போது மதுவுக்கும் குழப்பத்துடன் கோபமும் வந்தது.

என்னதான் அவள் மகிழனின் தங்கை என்றாலும், இன்றைய நிலையில் அவள் இளங்கோவிற்கு மனைவி யும்தானே!

வந்தது முதல் கணவனும் மனைவியும் காரணத் தைச் சொல்லாமல், தன் கணவன் குடும்பத்தைச் சரமாரி யாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தால் அவளும்தான் என்ன செய்வாள்?

"ஐயோ... முதல்ல என்ன விஷயம்னு சொல்லுங்க. வந்ததிலிருந்து ரெண்டு பேரும் விஷயத்தைச் சொல்லாமல் எதுக்கு இப்படிக் கத்திக்கிட்டிருக்கீங்க...?" என்ற மதுவை வெறித்துப் பார்த்த மகிழனின் கண்களில் என்ன செய்தி யென்று அவளுக்குப் புரியவில்லை.

ஆனால், அவனின் கண்களின் தீர்க்கம் அவளை அசைத்துப் பார்க்க, "அண்ணா... என்ன ஆச்சு? விஷயத்தைச் சொல்லு... அண்ணி, நீங்க ஏன் அத்தையைக் கை காட்டறீங்க? என்னாச்சு? சொல்லுங்க அண்ணி..." என்று மெல்லிய குரலில் கேட்க,

"இன்னும் என்னடா மது நடக்கணும்... இந்த மொத்தக் குடும்பமும் சேர்ந்து நம்ம குடும்பத்தை நாசம் பண்ணணும்னு முடிவு பண்ணி, என் வாழ்க்கையையும் உன் வாழ்க்கையையும் சேர்த்து அழிக்க முடிவு பண்ணிட்டு அலையறாங்கடா..." என விஷயத்தைச் சொல்ல...

மது, "அண்ணா... தெளிவாச் சொல்லு. நீ யாரைச் சொல்லுற...?" என்று குழப்பத்துடன் கேட்க, மகிழன்



அவளுக்கு நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தான்.

கேட்டுக் கொண்டிருந்த முல்லை, "அய்யோ மகி... இவங்க மகளா உங்களைக் கொல்ல நினைச்சது...?" எனத் தலையில் அடித்துக் கொண்டு சொல்ல,

"ஆமாடா...! உன்னை எப்படி இவங்க... நீ எப்படி இவங்க கிட்டே மாட்டினே...?" என நடந்ததைக் கேட்டான்.

அவனால், ரஞ்சிதமும் இப்படிப்பட்ட இழிசெயலைச் செய்வார் என நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அப்பனும் மகளும்தான் புத்தி கெட்டுப் போய் நடந்து கொண்டார்களானால், இவருமா என்றிருந்தது அவனுக்கு.

"நா... நான் வீட்டுக்குத் திங்ஸ் வாங்க ஸ்டோருக்குப் போனேன் மகி... நான் உள்ளே போறப்போ இவங்க வெளியே வந்தாங்க. இவங்கதான் என்னை முதல்ல பார்த்தாங்கன்னு நினைக்கிறேன்... இவங்களாகத்தான் வந்து என் கிட்டே பேசினாங்க..." என நடந்ததை மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தாள்.

முல்லை காரை விட்டு இறங்கியதும், பழனி காரை பார்க் செய்யச் சென்று விட, அவள் வெளியே நின்றிருந்த பூக்காரியிடம் பூ வாங்கிக் கொண்டிருந்த வேளையில் ஸ்டோரை விட்டு வெளியே வந்த ரஞ்சிதம் முல்லையைப் பார்த்து விட்டார்.

அவர் மனது வேகமாகக் கணக்குப் போட, தன் மகளின் வாழ்வைப் பறித்துக் கொண்ட முல்லையை ஒரு

நாளேனும் கலங்க வைக்க வேண்டுமென்ற வன்மமான எண்ணத்துடன் அவளை நெருங்கினார்.

"எப்படிம்மா இருக்கே...?" குரல் வந்த திசையில் முல்லை திரும்பிப் பார்த்தவள், ரஞ்சிதத்தை அங்கே எதிர்பார்க்கவில்லை.

அன்று அப்படிப் பேசியவர், இன்று வலிய வந்து பேசியதும் அவளுக்கு எப்படிப் பேசுவது என்று தெரிய வில்லை.

தடுமாற்றத்துடன், "நா... நான் நல்லாயிருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க அ... அ..." என நிறுத்த,

"அம்மான்னே சொல்லும்மா... அதுதானே முறை..." எனப் புன்னகையுடன் சொல்ல, முல்லைக்கு அதற்கு மேல் எதுவும் தேவைப்படவில்லை.

தானாக வந்து நட்புக்கரம் நீட்டுபவரிடம் விரோதம் காட்டத் தெரியாதவள், அவருடன் உற்சாகமாகப் பேச ஆரம்பித்தாள்.

அவளின் உற்சாகத்தைக் கண்டு ஏளனப் புன்னகை யுடன், வெளியே, "அன்னிக்கு ரொம்பக் கோபத்தில் அப்படிப் பேசிவிட்டேன்மா... அப்படிப் பேசினதுக்கு மன்னிச்சிக்கோ..." என்றதும்,

"சேச்சே... என்னம்மா இப்படி எல்லாம் பேசிக்கிட்டு... நான் உங்க இடத்துல இருந்தாலும் அப்படித்தான் பேசியிருப்பேன். அதை மறந்துடுங்க..." என முடிக்க,



"நான் மறந்துடறேன். ஆனால், நீயும் என்னை மன்னிச்சிட்டதுக்கு அடையாளமா இப்போ நீ என்னோட வீட்டுக்கு வந்து ஒரு கப் காபி சாப்பிட்டுட்டுத்தான் போகணும்..." என்றார்.

"அய்யோ... இப்போவா? இப்போ முடியாதே. இன்னொரு நாள் நானும் மகியும் சேர்ந்து வர்றோம்..." என்று முல்லை மறுக்க,

"அதுக்கென்ன முல்லை... இன்னொரு தடவை ரெண்டு பேரும் சேர்ந்து வந்துட்டுப் போங்க. இப்போ நீ மட்டும் என்னோட வா. நீ இப்போ வரலைன்னா என்னை மன்னிக்கலைன்னுதான் எனக்கு மனசு உறுத்தும்..." என விடாப்பிடியாகக் கேட்க,

"சரி, இருங்க. நான் எங்க கார்ல வந்திருக்கேன்... அதிலேயே வந்திடறேன்..." என்றதும்,

"அட... என்னோட கார்லேயே போய்க்கலாம். டிரைவருக்குப் போன் பண்ணி வரச் சொல்லிடு..." எனக் கையைப் பிடித்து இழுத்துச் செல்ல,

"அம்மா... என்னோட போன் கூட கார்ல தானிருக்கு..." என அவள் சொல்வதைக் கூடக் காதில் போடாமல் முல்லையைப் பிடித்துக் காருக்குள் தள்ள, அவர் தள்ளியதில் கார் கதவின் நுனி முல்லையின் தலையைப் பதம் பார்க்க மயக்கத்தில் சரிந்தாள்.

அதன் பின் நடந்தவை ஏதும் முல்லைக்கு நினை விலில்லை.

அவள் கண் விழித்துப் பார்த்த நேரம், அவள் நான்குக்கு நான்கடி என்ற இருட்டறையில் அமரக் கூட முடியாமல் இருக்க, பக்கத்து அறையில் நாய்கள் குரைக்கும் சத்தம் காதைக் கிழித்தது.

முல்லைக்கு நடந்ததை நினைவில் கொண்டு வரவே பத்து நிமிடங்களுக்கு மேலானது.

நினைவு வந்ததும்தான் அவள் கடத்தப்பட்டிருக் கிறாள் என்பதை அவள் உணர்ந்தாள்.

அவள் இருந்த அறை இரும்புக் கதவாய் இருக்க, மேலே மட்டும் க்ரில் கம்பிகளால் மூடியிருக்க, அதை அவளால் திறக்கவும் முடியவில்லை. வெளியே மூடப் பட்டிருந்தது.

அவள், "ஹெல்ப்... ஹெல்ப்..." என்று கத்தியது அனைத்தும் நாயின் குரைக்கும் சத்தத்தோடு கரைந்து போனது.

தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்தியதுதான் மிச்சம். உதவ ஒருவரும் வரவில்லை. பின்னர்தான் அந்த க்ரில்லின் வழியாக உற்றுக் கவனித்த போது, அது ஒரு வீட்டின் பின்புறத் தோட்டம் என்று புரிந்தது.

தோட்டம் என்றால் நிச்சயமாக யாராவது வரக்கூடும் என்ற அவளின் நினைப்பு பொய்யாகவில்லை.

அவள் அங்கிருந்த நேரம் முழுவதும் மகிழன்... மகிழன்... மகிழன்... மட்டுமே அவளின் ஐம்புலன்களையும் ஆக்கிரமித்திருந்தான்.



வெகு நேரம் கழித்து அவ்வீட்டின் காவல்காரன் சீருடையில் யாரோ ஒருவர் வர, தன்னால் முடிந்த மட்டும் தன் சத்தத்தை உயர்த்திக் கத்த, நாயின் கத்தலோடு கத்தலாக அவளின் கதறலும் அவருக்குச் சென்றடைய, அவர் வந்து அறையில் க்ரில் கம்பி வழியாக எட்டிப் பார்க்க, முல்லை அக்கதவை வேகமாகத் தட்டினாள்.

அப்பெரியவர் தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு அக்கதவைத் திறக்க, அவ்வறையை விட்டு வெளியே வந்தவள் இருந்த நிலை, அந்த வயதானவரையே உலுக்கிப் போட்டது.

வெளியே வந்த முல்லை, மூச்சுக்கே சிரமப்படு பவள் போல் மூச்சை இழுத்து இழுத்து வெளியே விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

பின்னர்தான், அவள் உடனே அவ்விடத்தை விட்டுக் கிளம்ப வேண்டுமென்ற எண்ணம் எழ, எதிரில் நின்றிருந்த அப்பெரியவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டு, "ரொம்ப நன்றிங்கய்யா... ரொம்ப ரொம்ப நன்றி..." என்றவள், ஒரு நொடி கூடத் தாமதியாமல் உடனே அங்கிருந்து வேக எட்டுக்கள் வைத்து முன்னேறியவள், அப்போதுதான் அவ்வீட்டு போர்டிகோவில் நின்றிருந்த மகிழனின் காரைக் கவனித்தாள்.

அந்தக் காரைப் பார்த்ததும்தான் அவளின் போக விருந்த உயிர் மீண்டும் வந்தது.

தான் இத்தனை நேரம் வேண்டிய கடவுள் தன்னைக் கைவிடவில்லை என்ற நினைப்பில் ஆண்டவனுக்கு

மீண்டுமொரு நன்றியை உதிர்த்து விட்டு, அவள் கால்கள் முடிந்த அளவு வேகத்துடன் அக் காரை நெருங்கி அவனைத் தேட, அப்போதுதான் மகிழனின் குரல் கர்ஜனை யாக அவளது காது வழியாக மனதைத் தீண்டியது.

ஒரு நாழிகை கூடத் தாமதிக்காமல் அவ்வீட்டிற்குள் வந்தவளின் கண்களுக்கு, மகிழனைத் தவிர, வேறு யாருமே கண்ணில் படவில்லை.

நடந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்து, அங்கிருந்தவர்கள் அனைவரையும் பார்க்க, மகிழன் ருத்திர மூர்த்தியாக நின்றிருந்த கோலம் அனைவரையும் சில்லிடச் செய்தது.

முல்லை சொல்ல ஆரம்பித்த போதே ரஞ்சிதம் அங்கிருந்து அகன்று அவரின் அறைக்குள் சென்று கதவை அடைத்திருந்தார்.

ஆனால், அவரின் போதாத காலம், அவர் வாங்க வேண்டிய அடியை அப்போதுதான் வெளியே சென்று விட்டு வீட்டிற்குள் நுழைந்த அபூர்வா வாங்க வேண்டியதாகிப் போனது.

கேட்ட செய்தியில் ஆழ்ந்த அதிர்ச்சியிலிருந்த இளாவும், மதுவும், தாங்கள் இப்போது கேட்டது அனைத்தும் உண்மையா என்ற நிலையிலிருக்க, அவர்களும் அபூர்வா வந்ததைக் கவனிக்கவில்லை.

கையில் கார் சாவியைச் சுழற்றியபடி உள்ளே வந்த அபூ, "ஹாய் மாமா..." என முடிக்கும் முன் அவளின்



கன்னங்கள் இரண்டும் மகிழனின் கைகளுக்கு இரை யானது.

அவளை மாறி மாறி அறைந்தவன், "சீ நாயே...! உன்னால தான்டி எல்லாமே... துரோகி..." என அவள் கழுத்தைப் பிடித்து நெரிக்கத் துவங்கினான்.

இவை அனைத்தும் நொடியில் நடந்தேறி விட, அவன் மேலே முன்னேறும் முன், "மகி... என்ன பண்றீங்க... விடுங்க... அய்யோ விடுங்க..." என முல்லை தடுக்க, அவளின் குரலில் சுதாரித்த இளாவும் மதுவும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சில வேலைக்காரர் களும் வந்தும் கூட அவனைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

"என்னை விடுங்கடா... விடுங்க. என்னையும், என் குடும்பத்தையும் நாசம் பண்ண நினைச்சவளை நான் கொல்லாமல் விட மாட்டேன். விடுங்கடா என்னை..." எனக் கையையும் காலையும் உதைக்க, அவன் துள்ளியதில், அவனைப் பிடித்திருந்த மது நிலை தடுமாறிக் கீழே விழுந்து மயங்கினாள்.

அவ்வளவுதான்... அங்கு நடந்த களேபரத்துக்கு மது முடிவுரை கட்ட, அவள் விழுந்ததைக் கண்டு, "அய்யோ மது..." என அலறித் துடித்து அவளின் அருகில் ஓடினான் இளா.

மயங்கியவளின் தலையைத் தூக்கித் தன் மடியில் போட்டுக் கொண்டவன், "தண்ணீர்... யாராச்சும் தண்ணீர்

கொண்டு வாங்க..." எனக் கத்த, அவ்வீட்டின் சமையல்கார அம்மாள் ஓடிச் சென்று தண்ணீர் எடுத்து வந்தார்.

தண்ணீரை வாங்கி மதுவின் முகத்திலடித்து, அவளை நினைவுக்குக் கொண்டு வந்த இளாவுக்கு, அவள் கண் விழித்ததும்தான் உயிர் வந்தது.

"மதும்மா... உனக்கு ஒண்ணுமில்லையே..." என மதுவிடம் கேட்டு உறுதிப்படுத்தியவன், பின்னர் அங்கிருந்த அனைவரையும் பார்த்து,

"சே... நீங்க போட்ட சண்டையில இவளுக்கும், இவ வயித்துல இருக்கிற என் குழந்தைக்கும் மட்டும் ஏதாவது ஆகியிருந்தது, உங்கள் யாரையும் உயிரோடவே விட மாட்டேன்..." என கர்ஜித்த இளா, மதுவுக்கே புதியவனாகத் தெரிந்தான்.

முல்லைக்கும் மகிழனுக்கும் அப்போதுதான் இளா சொன்னது புரிந்தது. புரிந்ததும் இப்போது நடந்தவை அனைத்தும் பின்னுக்குப் போக, தங்கள் குடும்ப வாரிசே முன்னுக்கு வந்தது.

ஆனால், அந்தச் சந்தோஷத்தை முழுவதுமாக உணர முடியாமல், "என் மேலேயே கையை வெச்சிட்டேல்ல... உனக்கு நான் யாருன்னு காட்டறேன்டா..." எனத் தன் வாயாலேயே சூனியம் வைத்துக் கொண்ட அபூர்வாவை மகிழன் ஏதும் செய்யும் முன்னர், தன் மடியில் கிடந்த மனைவியை முல்லையிடம் ஒப்படைத்து விட்டு வேகமாக எழுந்தவன், அபூவைச் சரமாரியாக விளாசித் தள்ளி விட்டான்.



"வாயை மூடுடி நாயே! நீயெல்லாம் ஒரு பெண்ணா? உன்னை எல்லாம் என் தங்கச்சின்னு சொல்லிக்கவே எனக்கு நாக்குக் கூசுது," என்றவன்,

"அம்மா... வெளியே வாங்க..." என்று கர்ஜிக்க, அறையில் முடங்கியிருந்த ரஞ்சிதம், மகனின் குரலுக்கு அடிபணிந்து வெளியே வந்தார்.

அவர் வந்ததும், "உடனே உங்க புருஷனுக்குப் போன் போட்டு பத்து நிமிஷத்துல வரச் சொல்லுங்க..." என உத்தரவு போட,

அதை உடனே செயலாற்றினார் ரஞ்சிதம். அவன் விதித்த பத்து நிமிடத்திற்குள் சிவசுப்ரமணி வீடு வந்து சேர்ந்திருந்தார்.

மனைவியின் நடுங்கிய குரலில் என்னமோ ஏதோவென்று வந்த சிவா, வீட்டிற்குள் நடந்த அத்தனை களேபரமும் கண்ணில் பட, அதைவிட இரண்டு ஆண் சிங்கங்களின் கர்ஜனையோடு, கண்களில் வெறியோடு நின்றிருந்த மகியையும், இளாவையும் கண்டது அவருக்குச் சற்றுக் கிலியை ஏற்படுத்தியிருந்தது.

சிவாவைப் பார்த்ததும், அபூ, "டாடி..." என ஓடிச் செல்ல, மகளின் கன்னத்தில் பதிந்திருந்த விரல் தடத்தைக் கண்டவர் கொதித்துப் போனார்.

யாருக்காக இத்தனையும் செய்யத் துணிந்தாரோ, அவளே இப்போது அடிபட்டிருப்பதைப் பார்த்ததும், "யாருடா என் பொண்ணை அடிச்சது...?" என இருவரையும் பார்த்துக் கேட்க,

"அடிச்சதா... அவ பண்ணின காரியத்திற்கு அவளைக் கொன்னே போட்டிருக்கணும்... இதோட விட்டிருக்கனேன்னு சந்தோஷப் படுங்க..." எனப் பதில் தந்தது இளா.

"அப்படி என்னடா பண்ணினா என் பொண்ணு...?" சிவாவிற்குத் தன் பெண்ணை மகன் காயப்படுத்தியதைத் தாங்க முடியவில்லை.

"ஏம்பா... உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே இல்லையா? ஒரு குடும்பத்துக்கே துரோகம் நினைச்சிட்டு எப்படிப்பா உங்க பொண்ணுக்காகப் பேசுறீங்க...?" என்ற இளாவால், இன்னமும் தன் குடும்பம் மொத்தமும் இப்படிப்பட்ட செயலைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

"அப்படி என்னடா செஞ்சுட்டோம்... இவனெல்லாம் என் பொண்ணை வேண்டாம்னு சொல்லுவான்... அதை நான் பொறுத்துக்கிட்டுச் சும்மா இருக்கணுமா? அப்படி என்ன இந்தப் பொண்ணை விட என் பொண்ணு தகுதியில குறைஞ்சு போயிட்டா? அப்படி இவனுக்குப் பிடிக்கலைன்னா, பிடிக்கலைன்னு சொல்லியிருக்கணும்... எல்லாம் பேசி, இவனோட சம்மதத்தோடதானே நிச்சயத்துக்கு ஏற்பாடு பண்ணினோம்... எல்லாம் முடிஞ்சு, என் பொண்ணு மனசுல ஆசையை வளர்த்துட்டு, நல்ல நாள் குறிச்ச பிறகு இவன் இன்னொருத்தியை லவ் பண்றேன்னு போவான்... அதை நான் பார்த்துட்டுச் சும்மா இருக்கணுமா?" எனச் சிவா தன் தரப்பை நியாயமாகச் சொல்ல,



"நான் பண்ணினதிலேயே மிகப் பெரிய தப்பு அதுதான்..." என இப்போது வாயைத் திறந்தான் மகிழன்.

"ஹா... இப்போதாவது நீ செஞ்சது தப்புன்னு புரியுதே...!" எனச் சிவா ஏளனமாகச் சொல்ல,

"ஹ்ம்ம்... ஆமா... நான் பண்ணினதிலே பெரிய தப்பு, உங்க பொண்ணோட குணம் தெரிஞ்சும் அவளைக் கல்யாணம் செஞ்சுக்க ஒத்துக்கிட்டேன், பாருங்க... அதைவிடப் பெரிய தப்பு இவளையும் ஒரு பொண்ணா நினைச்சது..." என்றவன், அபூவிடம் திரும்பி, "ஏன் அபூ... இதுவரைக்கும் நான் உன்னை லவ் பண்றேன்னு எப்பவாவது சொல்லியிருக்கேனா... இல்லை, உனக்கு ஆசையைத் தூண்டும்படி ஏதாவது செஞ்சிருக்கேனா...?" எனக் கேட்டதற்கு அவள் அமைதி காத்தாள்.

அவன் அவளை விடுத்து, "ஏங்க... உங்க பொண்ணை நான் வேண்டாம்னு சொன்னது மட்டும் தானே உங்களுக்குப் பெரிய விஷயமாகத் தெரியுது... ஆனால், நான் முல்லையைப் பார்த்த பிறகு, உங்க பொண்ணையும் ஏத்துக்க முடியாமல், முல்லையையும் தவிர்க்க முடியாமல் நான் பட்ட தவிப்பு உங்களுக்குத் தெரியுமா?

"இதனால உங்க பொண்ணு மனசு கஷ்டப்படும்னு தெரிஞ்சிருந்தும் முல்லையை மனசுல வெச்சிக்கிட்டு இவளைக் கல்யாணம் செஞ்சு, அதுக்கு அப்புறம் வாழ்நாள் முழுசும் ரெண்டு பேரும் உண்மையாக வாழாமல் நரகத்துல வாழறதுக்கு, இந்த வேதனை ஒரு

நாள்தான்னு நான் நினைச்சது பெரிய தப்புன்னு சொல்றீங்க... அப்படித்தானே..." எனத் தன்னிலை விளக்கம் கொடுத்தவன்,

"உங்க பொண்ணுதான் விஷயம் புரியாம பேய் மாதிரி ஆடினான்னா, நீங்களும் அவளுக்கு ஈக்வலா கிறுக்குத்தனமா நடந்திருக்கீங்க... என்னைக் கொல்ற தாலோ, இல்லை முல்லையைக் கொல்றதாலோ, உங்க ஆதங்கம் தீர்ந்துடுமா... அப்படிக் கொல்றதால உங்க ளுக்கு நிம்மதிதான் கிடைச்சிடுமா?

"உங்க பொண்ணை வேண்டாம்னு சொன்ன என் முன்னாடி, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்து, 'பாருடா... என் பொண்ணுக்கு உன்னை விட நல்ல மாப்பிள்ளையைக் கட்டி வெச்சிருக்கேன்'னு என் முன்னாடி உங்க பொண்ணை நீங்க நல்லபடியா வாழ வெச்சிருந்தீங்கன்னா... அப்போ நீங்க ஒரு நல்ல அப்பா, அம்மா... அதை விட்டுட்டுப் பழி வாங்கறாங்களாம் பழி...

"பெத்தவங்க பொண்ணு மேலே பாசம் வைக்கலாம். ஆனால், இந்த மாதிரி கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது. நான் இல்லைன்னா இந்த உலகத்துல வேற ஆம்பளையே இல்லையா... இல்ல, உங்க பொண்ணுக்கு ஏதாவது பிரச்சனையா? என் தலையில கட்டலைன்னு இவ்வளவு வருத்தப்படுறீங்க..." என நக்கலாகக் கேட்க, அவனது கேள்வி ஒவ்வொன்றும் சிவாவையும் ரஞ்சிதத் தையும் உலுக்கியது.



அவன் சொல்லச் சொல்லத்தான், தாங்கள் எந்த அளவுக்கு முட்டாள்தனமாக நடந்து கொண்டுள்ளோம் என மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்திருந்தது.

ஆனாலும் சிவாவின் மனதில் உறுத்திக் கொண் டிருந்ததைக் கேட்டுவிடும் நோக்கத்தோடு, "எல்லாம் சரி மகிழ்... நீ என் பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்க நினைச்சதுக்கு முதல் காரணம் எங்க பணம்தானே!" எனக் கேட்டு விட, மகிழனின் பார்வை ஒரு நொடி முல்லையைச் சந்தித்துப் பின் சிவாவைப் பார்த்தது.

"சொல்லு மகிழ்... நீ மட்டும் என்ன ஒழுக்க சிகாமணியா? இப்போ மட்டும் இப்படி முத்து முத்தாப் பேசுறியே... காதல் காதல்ன்னு சொல்லுற... என் பொண் ணுக்கு அளவுகோல் பணம்... அதே போல இந்தப் பொண்ணுக்கு எது அளவுகோல்...?" என இவர் இப்போது நக்கலாகக் கேட்க,

மகிழன் தயங்காமல், "ஆமாங்க... உண்மைதான்..." என்றவன், ஒரு நொடி முல்லையைக் கண்டு தாமதித்து, "உங்க பொண்ணை விட எனக்கு உங்க பணம்தான் கவர்ச்சியாகத் தெரிஞ்சுது. ஆனால், உங்க பொண் ணையும், என் முல்லையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், எனக்கு முல்லைதான் அழகிலும், குணத்திலும், அதைவிட அவளின் அன்பிலும், என் மேலான காதலிலும் கவர்ச்சி யாகத் தெரிந்தாள்... இதைச் சொல்வதற்கு எனக்குக் கொஞ்சம் கூடக் கூச்சமில்லை... அவளோட அழகு என்னைக் கவரவில்லை என்றால்தான் தப்பு," என நேர்படப் பேச,

அதற்கு மேல் அங்கிருந்தவர்களுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. அனைவரும் அமைதி காக்க,

மகிழனே மேலும் தொடர்ந்தான்.

"நீங்க எங்க குடும்பத்துக்குப் பண்ண நினைச்சதுக்கு உங்க எல்லோரையும் கொன்னு போடணும்னு வெறியிலதான் வந்தேன். ஆனால், நீங்க செஞ்ச பாவத் திலேயும் புண்ணியம் இளாவை நல்ல மனுஷனா வளர்த்தது..." என்றவன்,

இளாவிடம் திரும்பி, "இளா... உங்க குடும்பம் செஞ்சது எல்லாத்தையும் நான் மறந்துடறேன். எனக்கும் உன்னோட பெத்தவங்களுக்கும் இனி எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால், இவங்க பண்ணின துரோகத்தை என்னைக்குமே நான் மன்னிக்க மாட்டேன். அதனால் உன் கிட்டேயிருந்து எனக்கொரு உறுதி வேண்டும்..." என்றதும்,

"இவங்க செஞ்சது எல்லாமே எனக்கும் தலை குனிவுதான் மகிழ். என்னைப் பெத்தவங்க இப்படி எல்லாம் செய்வாங்கன்னு நான் கனவில் கூட நினைச்சுப் பார்க்கலை. அவங்க சார்பாக உனக்குத் தொந்தரவு கொடுத்ததுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். என்ன செய்யணும், சொல்லு..." என இளாவும், தன் குடும்பம் செய்த தவறுக்கு உரியவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

"எனக்கு என் தங்கச்சி வாழ்க்கை ரொம்பவே முக்கியம். அதுவும் அவ இப்போ இருக்கிற நிலையில



அவளுக்கு என்ன நடந்தாலும் நான் பொறுத்துக்க மாட்டேன். அதனால நீயும் மதுவும் எங்க வீட்டுக்கு வந்து தங்கிக்கோங்க... இல்லை, உனக்கு அது கௌரவப் பிரச்சனைன்னா நான் உன் பேர்ல ஒரு வீடு வாங்கித் தர்றேன்... தயவு செய்து அங்கே போயிடுங்க. இந்த மாதிரி மனுஷங்க இருக்கிற நரகத்துல எங்க வீட்டு வாரிசு பிறக்கக் கூடாது..." எனத் தீர்க்கமாகச் சொல்ல,

இளாவும் புரிந்து கொண்டு, "என் அப்பா அம்மாவேயானாலும் இந்த மாதிரிக் குறுக்குப் புத்தியோட நடந்துகிட்டதை என்னாலேயும் ஏத்துக்க முடியலைதான். எனக்கும் என் பிள்ளை இந்த மாதிரி எண்ணம் கொண்டவங்க மத்தியில பிறக்கிறது பிடிக்கலை. நான் இதுக்கு வேற ஏற்பாடு பண்றேன். மது என்னோட உயிர். அவளுக்கு எதுவும் ஆக நான் விட மாட்டேன். நீ என்னை நம்பலாம்..." என உறுதி கொடுக்க, அதற்குப் பிறகு அந்த வீட்டில் ஒரு நொடி கூட இருக்க விருப்ப மில்லாமல், அருகிலிருந்த முல்லையைக் கூட்டிக் கொண்டு தன் காருக்குச் சென்றான்.

அவ்வீட்டை விட்டு வெளியே வரும்வரை மகிழனின் கைப்பிடியிலிருந்தவள், வெளியே வந்ததும், கையை உருவிக் கொண்டு அமைதியாகக் காரில் ஏறி சீட்டில் சாய்ந்து கண் மூடினாள்.

அவளின் கோபம் உணர்ந்து மகிழன் சின்னச் சிரிப்புடனே வண்டியைக் கிளப்பினான்.

## 27

நான் சிறு குழந்தை என்று நினைத்தேன்...
உன் வருகையினால் வயதறிந்தேன்!
என்னை மறுபடியும்
சிறு பிள்ளையாய்ச் செய்வாயா?
கட்டிலிடும் வயதில் தொட்டிலிடச் சொன்னால்
சரியா சரியா...?
கட்டிலில் இருவரும் குழந்தைகளானால்
பிழையா பிழையா...?

**கா**ரில் வந்த இருவரும் தங்களுக்குள் பேசிக் கொள்ளவில்லை. அவரவர் எண்ணங்களின் பிடியில் லயித்திருந்தனர்.

நடந்து முடிந்தவை எதையும் நம்பவும் முடியாமல் அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், தங்களுக்கு நடந்த இந்த நம்பிக்கைத் துரோகத்தை நினைத்துக் கொண்டே முல்லையும் மகிழனும் வீடு வந்து சேர்ந்தனர்.

நடந்தவைகளைக் காட்டிலும் முல்லைக்கு, மகிழன் மீது ஒரு சின்னக் கோபமிருந்தது. அந்தக் கோபத்தை அறிந்து கொண்ட கணவன் அவளைச் சமாதானப்படுத்த, அவன் நீண்ட காலமாக எண்ணி வைத்திருந்த திட்டத்தை உடனே செயலாற்ற நினைத்தான். அதை முல்லைக்கு இன்ப அதிர்ச்சியாகக் கொடுக்க எண்ணினான்.

அதன்படி அடுத்து நடக்க வேண்டிய காரியங்களை மனதிற்குள் பட்டியலிட்டு வந்தவனை, முல்லை அவன்



தன்னை இன்னமும் புரிந்து கொள்ளவில்லையே என மனதிலே திட்டிக் கொண்டிருந்தாள்.

கலவையான மனதோடு வீடு வந்து சேர்ந்த இருவரையும் கவலையான முகத்தோடு வரவேற்றனர் வெங்கடராமனும், கோகிலாவும்.

அபூவின் வீட்டில் நடந்தவை அனைத்தையும் மது சற்று முன்னர்தான் போனில் அழைத்துக் கூறியிருந்தாள்.

நடந்த பிரச்சனையில், சந்தோஷமாகக் கொண்டாட வேண்டிய மதுவின் தாய்மையைக் கோகிலா கண்ணீரோடு வாழ்த்த வேண்டியதாகிப் போனது.

தாங்கள் மனதார நம்பிய குடும்பம், தங்களைச் சீரழிக்க நினைத்ததை எண்ணி இருவருக்கும் கோபம் வருவதை விட, தாங்கள் அவர்களுக்கு என்ன தீங்கு நினைத்தோமென்று மொத்தக் குடும்பமும் தங்களைப் பழி வாங்க நினைத்தது எனக் கழிவிரக்கம் தான் வந்தது.

அவர்களுக்கும் இப்போதைய ஒரே ஆறுதல் இளாவின் நற்குணம். அவனை நம்பி மட்டுமே மதுவை இப்போதும் அங்கேயே இருக்க அனுமதித்திருந்தனர்.

வீட்டு போர்டிகோவில் காரை நிறுத்திய மகிழன், தாய் தந்தையின் மனவுணர்வுகளை அவர்கள் முகத்திலேயே படித்துக் கொண்டான். அவர்களுக்கும் இந்தச் செய்தி எத்தனை பெரிய அதிர்ச்சி என்பதை அவன் அறிந்து தான் இருந்தான்.

வாசல்வரை வந்து வரவேற்ற அன்னையைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டவன், அவர் கண்ணில்

வழிந்த கண்ணீரைத் தன் கரங்களால் துடைத்து விட்டவன், "அம்மா... எதுக்கு அழறீங்க... கண்ணைத் துடைங்க..." என அன்பான அதட்டல் போட,

"அவ எப்படி அழாம இருப்பா, மகிழ்... நம்ம குடும்பத்தையே நாசம் பண்ண நினைச்சிருக்காங்க... அன்னிக்கு மட்டும் உனக்கு ஏதாவது ஆகியிருந்தால்..." என வெங்கடராமன் கவலையோடு சொல்ல,

"அப்பா... நடந்ததை விடுங்க. இனிமேல் இந்தப் பேச்சு நமக்கு வேண்டாம். நான் இளா கிட்டே சொல்லியிருக்கேன்... மதுவை அவன் வேற வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடுவான்.

"அதுக்கப்புறம் நமக்கும் சிவசுப்ரமணி குடும்பத் துக்கும் இனி எந்தச் சம்பந்தமும் கிடையாது. இவ்ளோ நடந்த பிறகும் அவங்க நம்மகிட்ட வெச்சுக்க மாட் டாங்கன்னு நினைக்கிறேன். அதையும் மீறி அவங்க நடந்துகிட்டாங்கன்னா அப்புறம் அவங்க விதியை யாராலும் மாத்த முடியாதுன்னு அவங்களுக்கு நிச்சயம் தெரியும்..." என்றவன்,

"நீ சொல்றதும் சரிதான் மகிழ்... இனிமேலும் அவங்க நம்ம விஷயத்தில் தலையிட மாட்டாங்கன்னு நினைக்கிறேன்... பார்க்கலாம்... ஆமா... எங்கடா என் மருமகள்...?" என வெங்கடராமன் கேட்டதும், மகிழனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"அப்பா... நீங்களா... நீங்களா முல்லையைப் பற்றிக் கேட்கிறீங்க...?" என ஆச்சரியமாகக் கேட்டவனை,



"நானேதான்டா... நான் எப்பவோ முல்லையைப் பற்றிப் புரிஞ்சுகிட்டேன். அதை நீ கவனிக்கிற நிலையில் இல்லை. சரி... எங்கே என் மருமகள்...? பெரிய தெலுங்குப் பட வில்லன் மாதிரி நீ அத்தனை குண்டர் களோடு சுத்தியும் அவளைக் கண்டுபிடிக்க முடியலை. அவளே தப்பிச்சு வந்திருக்கா... பாவம், பொண்ணு என்ன கஷ்டப்பட்டாளோ...!" என்று கவலையோடு கேட்க,

"ஆமாம்ப்பா... ரொம்பக் கஷ்டப்பட்டுட்டா... ரொம்பக் கசங்கிப் போயிருந்தாப்பா..." பேசியவாறு காரின் மற்றொரு புறம் வந்து கதவைத் திறக்க, முல்லை அங்கே துயில் கொண்டிருந்தாள்.

"உங்க மருமகளுக்கு அதுக்குள்ள தூக்கம் வந்துடுச்சு. தூங்கிட்டாப்பா..." சிரித்துக் கொண்டே சொன் னவன், "அப்பா... நீங்க மட்டும் இப்போ அவளைக் கேட்டது தெரிஞ்சுது... எனக்கு இன்னிக்குச் சரியான பரிசு மழைதான்... அவ ரொம்ப சந்தோஷமடைஞ்சிருப்பா..." என்றவன், முல்லையைக் காரிலிருந்து மெல்லத் தன் கைகளில் ஏந்தித் தூக்கிக் கொண்டு உள்ளே செல்ல, அவன் பின்னாலேயே வந்த கோகிலா, அப்போதுதான் அவள் தலையில் அடிபட்டிருப்பதைப் பார்த்தார்.

"அய்யோ... ராசு... இங்கே பாரு, முல்லைக்கு அடிபட்டிருக்கு. நீ பார்க்கவேயில்லையா...?" எனப் பதறியபடியே கேட்க,

"எங்கம்மா...? எங்க...? அய்யோ... நான் பார்க்கவே இல்லைம்மா..." என்றவன், வேக எட்டுகள் வைத்துத்

தனது அறைக்குள் சென்று முல்லையைப் படுக்கையில் கிடத்தினான்.

ஏற்கெனவே முல்லையின் கசங்கிய கோலத்தில் கசங்கிய அவன் மனது, இப்போது தன்னவளின் நெற்றியில் வடிந்த இரத்தத்தை இத்தனை நேரம் கண்டு கொள்ளாமல் இருந்த தன் மடத்தனத்தை எண்ணித் தன்னையே திட்டிக் கொண்டவன், முல்லையின் கைப்பிடித்து அமர்ந்து கொண்டான்.

அதற்குள் வெங்கடராமன், ரமணனுக்கு அழைப்பு விட்டிருந்தார்.

அரை மணி நேரத்திற்குள் வீடு வந்து சேர்ந்திருந்த ரமணன், “ஏன்டா... பொண்டாட்டிக்கும் புருஷனுக்கும் வேற வேலையே இல்லையா? எங்கேயாவது போய் விழுந்து வாங்கிட்டு வர்றீங்க. உங்களுக்கு வைத்தியம் பார்க்கிறதே எனக்கு ஃபுல் டைம் ஜாப்பா போச்சு...” என அலுத்துக் கொண்டவர்,

முல்லைக்கு முதல் உதவி செய்து பரிசோதனை செய்து விட்டு, “காயம் ஒண்ணும் பெரிசா இல்லை... சின்ன அடிதான்... பயப்பட எதுவுமில்லை,” என்றவர் சில மாத்திரைகளை எழுதிக் கொடுக்க,

“எதுவுமில்லைன்னு சொல்றீங்க... ரொம்ப நேரமா மயக்கத்துல இருக்கா...” எனக் கவலையாகக் கேட்ட மகிழனிடம்,

“மகிழா... என்னை நம்பு. நான் ஒரு எம்.பி.பி.எஸ். படிச்ச டாக்டர். அதிக மன அழுத்தத்தாலதான் மயக்கமாக இருக்கா. உனக்கு நம்பிக்கை இல்லேன்னா நாளைக்கு நல்ல ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய் உன் பொண்டாட்டியைக் கவனிச்சுக்கோ!” என ரமணன் ஆவேசப்பட,



“ஹப்பாடி... அடிக்கடி சொல்லிக்கங்க டாக்டர்... அப்போதான் நீங்க டாக்டர்னு எனக்குத் தெரியும்...” மனைவிக்கு ஒன்றுமில்லை என்றதும் மகிழனின் பேச்சு இயல்பானது.

“இந்த வாய்க்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை... இவ்ளோ பேசுறவன் எதுக்குப் பொண்டாட்டியைக் கீழே விழ விடணும்...?” எனக் கிண்டலடிக்க, அப்போதுதான் நடந்தது அனைத்தையும் வெங்கடராமன் சொல்லி முடித்தார்.

“சே... இந்தச் சிவா குடும்பம் இப்படியெல்லாம் பண்ணுவாங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. ஒரு பொண்ணைப் பெத்து வெச்சுக்கிட்டு இன்னொரு பெண்ணைத் துன்பப்படுத்த எப்படித்தான் மனசு வந்ததோ...?” என அவரும் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்த,

“விடுங்க அங்கிள்... எல்லாமே நம்மை மீறி நடந்து போச்சு. இனி என் வாழ்க்கையில் இந்த மாதிரி ஒரு அத்தியாயம் நடந்ததையே நான் மறக்கணும்னு நினைக்கிறேன்...” என்றவனின் தோளில் தட்டிய ரமணன்,

“தட்ஸ் மை பாய். சரி, முல்லையை நல்லபடியாகக் கவனிச்சுக்கோ... உன்னைக் கல்யாணம் பண்ணியதில் இருந்து முல்லை ரொம்பவே கஷ்டப்பட்டுட்டா. பெத்த

அம்மாவை விட்டுட்டு, வளர்த்த தாத்தாவை விட்டுட்டு உன்னையே நம்பி வந்திருக்கா... இனிமேலாவது அவளுக்கு எந்தக் கஷ்டமும் வராம பார்த்துக்கோ. சரி, நான் இப்போ கிளம்பறேன்..." என ரமணன் விடைபெற, அவருக்கு விடை கொடுத்து அனுப்பியவன், அவர் கேலி யாகச் சொன்னதையே மனதில் ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவர் என்னவோ கேலியாகத்தான் சொன்னார். ஆனால், அது மகிழனின் மனதில் வேறு விதமாகச் சென்று தாக்கியது.

ரமணன் சென்றதும் கூடத்திலிருந்த பெற்றோரிடம், "அம்மா... அப்பா... உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்..." என்றவன், சில விஷயங்களைப் பேசிவிட்டு மேலே வர, அப்போதுதான் முல்லை மெல்ல மயக்கத்திலிருந்து கண் விழித்தாள்.

மயக்கம் தெளிந்தவள் ஏதோ பேச முயலவும், அவளைத் தூக்கித் தன் நெஞ்சில் கிடத்தி, அன்னை கொடுத்த பாலை அவளுக்குப் புகட்டி விட்டுத் தன் நெஞ்சிலே போட்டுத் தட்டிக் கொடுக்க, அன்றைய நாளின் அதீத அலைச்சலில் இப்போது மயக்கத்திலிருந்து தூக்கத்துக்குத் தாவினாள்.

முல்லை, கணவனின் அணைப்பை அரணாகக் கருதி, அவன் நெஞ்சிலே துயில் கொண்டாள்.

அவளுக்குக் கேட்க ஆயிரம் கேள்விகள் அணி வகுத்துக் காத்து நின்றன. அவனுக்கும் அவளுக்கு விளக்கம் கொடுக்க ஒரு பட்டியலே நீண்டிருந்தது. ஆனால்,



நடந்த சம்பவங்களை எல்லாம் பின்னே தள்ளி வைத்து விட்டு, இப்போது கணவனின் அணைப்பை மட்டுமே நாடிய மனைவியாக, மனைவியின் அருகாமையை நாடிய கணவனாக இருவரும் தங்கள் உலகத்தில் லயித் திருந்தனர்.

மனைவியை நெஞ்சில் தாங்கிய மகிழனுக்கு முல்லையைச் சந்தித்த முதல் நாள் கண் முன்னே விரிந்து நின்றது.

அன்றைய நாளில் முல்லையின் கண்களில் துடிப்பும், இரு ஆண்களின் முன்னே கொம்பைச் சீவிய பெண் காளையாய் நின்று வார்த்தைகளால் விளையாடிய அவளின் வார்த்தை ஜாலமும், சமூகத்தின் மேல் அவள் கொண்ட அக்கறையும், அதை விட மேலாக மிச்சப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்ற அவளின் பொறுப்புணர்ச்சியும்... இதை நினைத்தபோது அவனது உதடுகள் புன்னகையில் விரிந்தன.

'மை ஸ்வீட் கேன்டி... என்னோட மிச்சப் பணத்தை நீ இன்னும் எனக்குக் கொடுக்கவேயில்லையே! இரு... மொத்தத்தையும் சேர்த்து வசூல் பண்ணிடறேன்...' என மனதில் எண்ணிக் கொண்டான்.

அன்றைய ஒரே நாளில் முல்லையைப் பற்றிய வெவ்வேறு முகத்தைக் கண்டவன், மனைவியின் இப்போதைய விருப்பத்தையும் அறிந்துதான் இருந்தான்.

ஆனால், அவள் விருப்பத்தை நிறைவேற்ற அவன் எடுத்துக் கொண்ட கால தாமதத்தினால், அடுத்தவர்கள்

முன்னால் தன் மனைவி தலை குனிந்து நின்றதை நினைத்து அவனுக்கு வேதனையாக இருந்தது.

இனிமேலும் காலம் கடத்தாமல் அவளது விருப் பத்தை நிறைவேற்றத் தான் நினைத்து வைத்திருந்ததைச் செயல்படுத்தும் நேரம் நெருங்கி விட்டதையும் உணர்ந் தான்.

அதிகாலையில் சூரியன் விழிக்கும் முன் கண் விழித்த முல்லை, முதலில் கண்டது பெட்டியில் துணியை அடுக்கிக் கொண்டிருந்த மகிழனைத்தான்.

குளித்து முடித்து ஈரத் தலையில் நீர்த்துளிகள் சொட்டச் சொட்ட உடையை மாற்றிக் கொண்டு, பெட்டியில் அவசரமாகத் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த மகிழனைக் குழப்பமான பார்வையுடன் ஏறிட்டவள், "மகி... எங்கே போறே...? அதுவும் இவ்வளவு காலையில்..." என்றவள் மணியைப் பார்க்க, அது அதிகாலை நான்கு மணி நாற்பத்தைந்து நிமிடங்களைக் காட்டியது.

"ஒரு இம்பார்ட்டன்ட் மீட்டிங் முல்ல... நேற்று நைட்தான் கன்ஃபார்ம் ஆச்சு... நான் இப்போ உடனே புனே கிளம்பியாகணும்... வரப் பத்து நாள் ஆகும்..." சொன்னவாறு துணியை அடுக்கிக் கொண்டிருக்க,

"என்னது... பத்து நாளா? மகி... என்ன சொல்ற நீ...?" என அதிர்ச்சியாகக் கேட்டவள், உடனே படுக்கையில் இருந்து எழுந்து விட்டாள்.

நேற்று இரவு படுத்தது... தலையில் பட்ட அடி வேறு இன்னமும் விண் விண்ணென்று வலிக்க, அதோடு



வேகமாக எழுந்தவளுக்குத் தலை சுற்ற, பிடிமானம் ஏதுமின்றி மீண்டும் கட்டிலிலேயே தொப்பென விழுந்தாள்.

அதைப் பார்த்தவன், "ப்ச்... அப்படி எதுக்கு அவசரமாக எழுந்துக்கிற...? பார்த்து எழக்கூடாதா...?" என வார்த்தைகளை எரிச்சலாக வெளியிட, முல்லைக்கு அவனின் இந்தக் கோபப் பேச்சால் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஆனால், அவளுக்கு இப்போது அதுவல்லவே விஷயம்... தன் கணவன் தன்னை இந்த வீட்டில் தனியாக விட்டு விட்டுப் பத்து நாள்கள் வெளியூர் செல்கிறான். அவன் இல்லாத இந்த வீட்டில் தான் எப்படித் தனியாக இருக்க முடியும்? அவன் பேச்சால் வெளியே வரத் துடித்த கண்ணீரை உள்ளே இழுத்துக் கொண்டு, "மகி... என்னப்பா என்னைத் தனியா விட்டுட்டுப் போறே... நானும் வரவா...? ப்ளீஸ்..." எனக் கெஞ்சலாகக் கேட்க,

"என்னமோ உன்னை அத்துவானக் காட்டில் விட்டுட்டுப் போற மாதிரிப் பேசுற... இங்கே வீட்டிலேதானே விட்டுட்டுப் போறேன்... இங்கே இருக்கிறவங்களைப் பார்த்தா உனக்கு மனுஷங்களாகத் தெரியலையா?" எனக் காட்டமாகக் கேட்க,

"ஏன் மகி இப்படிப் பேசுற...?" என்றவளின் குரல் உடைந்து அழக் காத்திருந்தது.

"என்ன... எப்படிப் பேசுறாங்க. உன்னால் எனக்கு ஏற்கெனவே நிறையப் பிரச்சனை. இப்போ உன்னை பிசினஸ் செய்யுற இடத்துக்குக் கூட்டிட்டுப் போய்

அங்கேயும் ஏதாவது பிரச்சனை வந்தா... நான் இப்போ இருக்கிற நிலையில அதை எல்லாம் சமாளிக்க முடியாது. பேசாம இங்கேயே இரு. நான் இப்போ கிளம்புறேன்... நேரமாச்சு...” என வெறுப்பாகப் பேசிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

‘என்ன சொல்லிட்டுப் போகிறான்... என்னால இவனுக்குப் பிரச்சனையாமே... அப்படி என்ன இவனுக்கு நான் செய்து விட்டேன்...? இப்படி வெறுத்துப் போய்ப் பேசுகிறான்... நேற்றுத் தனக்கு எத்தனை பெரிய விஷயம் நடந்திருக்கிறது... அதை எல்லாம் கொஞ்சமும் நினைத்துப் பார்க்காமல் இன்று எங்கோ பணம் சம்பாதிக்கக் கிளம்பி விட்டான்.

அதானே... அப்போதே அவன் அப்பா சொன்னதையும், நேற்று சிவசுப்ரமணி சொன்னதையும் உண்மை என்று நிரூபிக்கிறானே... இவனுக்குப் பணம்தான் முற்றுமுதல் காரியம். தான் எல்லாம் இரண்டாம் பட்சம்தானே! சே... ஒரு வார்த்தையாவது உடம்புக்கு எப்படி இருக்குதுன்னு கேட்டானா?’ என மனதிலே மகிழனை நினைத்துப் பொரும ஆரம்பித்தாள்.

அவளுக்கு நேற்று சிவசுப்ரமணி சொன்னது மட்டுமே இப்போது நினைவிலாடியது. அதற்கு மகிழன் கொடுத்த விளக்கமெல்லாம் செலக்டிவ் அம்னீஷியாவைப் போல் மறந்து போனது.

அதுவும் தன் நலனைக் கூடக் கேட்காமல் பெட்டியைக் கட்டிக் கொண்டு கிளம்பிய கணவனைக் கண்டதும், அவளின் மனது மகிழனை எப்படி எல்லாம் திட்டலாமெனக் காரணத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டிருந்தது.



அவன் சென்றபின் அந்த வீட்டிலே தான் தனியாக இருப்பதைப் போல் உணர்ந்தாள்.

ஏற்கெனவே அவள் அவ்வீட்டின் வேண்டாத விருந்தாளி என்ற எண்ணம் இன்னமும் அவள் மனதிலே உறுத்திக் கொண்டிருக்கும் விஷயம்.

கோகிலா வந்து அவளுடன் பேசினார்தான். ஆனாலும் அவளுக்குள் ஒரு சின்னத் தயக்கம் உழன்று கொண்டிருந்தது.

வெங்கடராமன் இன்னமும் அந்த அன்னியப் பார்வையுடனே முல்லையை ஏறிட்டார்.

‘சே... நான் செத்துப் பொழச்சு வந்திருக்கேன். இப்பவும் இவரு இப்படியே பார்த்து வைக்கிறாரே... இவர் பையன் பண்ணின தப்புக்கு என்னையே இப்படிப் பார்த்தா நான் என்ன செய்வேன்... இப்போ கூட பாரு... ஒரு நாள் முழுசா முடிஞ்சுது... ஒரு போன் உண்டா... நீயே பண்ணல இல்ல... நானும் உனக்குப் போன் பண்ண மாட்டேன். மவனே, நீ ஊரிலிருந்து வாடா. உனக்கிருக்கு கச்சேரி...” என வெங்கட்ராமனின் பார்வைக்குத் தன்னை இப்படித் தனியாக விட்டுச் சென்ற மகிழனைக் கொன்றே விடவேண்டுமென்று ஆத்திரம் மேலோங்க அவன் வருவதற்காகக் காத்திருந்தாள்.

அவள் மட்டும் போன் செய்து பார்த்திருந்தால் தெரிந்திருக்கும்... ஆனால் இங்கே இவளின் வேம்பம்மன் மகிழனுக்குத் துணை யிருக்கிறார்.

மகிழன் சென்ற மறுநாள் இரவு கீழே உணவருந்த வந்த முல்லையிடம், "முல்லை... காலையில நேரமே கிளம்பிடுடா. நம்ம குலதெய்வக் கோவில்ல பொங்கல் வைக்கணும். ஏற்கெனவே மதுவோட கல்யாணம் முடிஞ்சதும் வைக்க வேண்டியது. ஆனால் எங்கே... நடந்த பிரச்சனையில எதுவும் முடியலை. இப்போ வேற மது உண்டாகியிருக்கா... எனக்கு அங்கே போயிட்டு வந்தாத்தான் நிம்மதி. மதுவும் இளாவும் இப்போ இங்கதான் வந்துட்டு இருக்காங்க. அதனால நீ நாளைக்கு நேரமே எழுந்து கிளம்பிடு... சரியா?" என,

"நான் மட்டுமா அத்தை... மகி இல்லையே... அவர் இல்லாம நான் மட்டும் தனியா..." என இழுக்க,

உணவருந்திக் கொண்டிருந்த வெங்கட் முல்லையை ஒரு பார்வை பார்த்து விட்டு, மீண்டும் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தார்.

அவரின் பார்வையின் அர்த்தம் புரியாமல், "நான் தனியா வரல அத்தை..." எனத் தயங்கிய முல்லையை,

"ப்ச்... என்ன முல்லை இது... எனக்கு மனசுக்கு ஒரு மாதிரி இருக்கும்மா... நான் என்னோட வேண்டுதலை நிறைவேற்றாமல் இருப்பதாலதான் நம்ம குடும்பத்துக்கு இந்தக் கஷ்டம்னு என் மனசு சொல்லுது. நீ வரலைன்னு



சொன்னா எப்படி... ஏன், உன் புருஷன் இல்லன்னா நீ எங்கேயும் வர மாட்டியா?" எனச் சற்றே கோபமாகக் கேட்க,

"சேச்சே... அப்படியெல்லாம் இல்ல அத்தை... முதல் முதலா... சரி, விடுங்க. நான் காலையில ரெடியா இருக்கேன்..." என்றவள், இரண்டு இட்லியை மனமே இல்லாமல் வாயில் அடைத்துக் கொண்டு, கையைக் கழுவ, மதுவும் இளாவும் வந்து சேர்ந்தனர்.

வந்தவர்கள் பழையதைப் பற்றிப் பேசி ரணத்தைக் கிளப்பாமல் தாங்கள் தனி வீடெடுத்துத் தங்கிய விவரத்தைக் கூறி, மேலும் சிலவற்றைப் பேசிக் கொண்டிருக்க... முல்லை அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு தனது அறைக்குள் சென்று மறைந்தாள்.

அறையில் மேசையின் மேல் வைத்திருந்த மகிழனின் புகைப்படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, 'ஏய் தாடிக்காரா... ஏன்டா என்னை இப்படித் தனியா விட்டுட்டுப் போனே...? நாளைக்கு நீயில்லாமல் உங்க ஊருக்கு நான் மட்டும் போகப் போறேன். அங்கே எல்லோரும் கேட்கிற கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்லப் போறேன்... அவங்களுக்கு நம்ம கல்யாணம் எப்படி நடந்துச்சுன்னு கேள்விப்பட்டு, அவங்க வாய்க்கு நான் அவலாகப் போகிறேன். ஹய்யோ... அங்கே நீ யில்லாமல் எப்படிச் சமாளிப்பேன்? எல்லாமே உன்னாலே தான்...' என வெகுநேரம் புலம்பியவாறே கட்டிலில் சரிந்து உறக்கத்தைத் தழுவும் நேரம் யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

தூக்கத்திலேயே நடந்து சென்று கதவைத் திறந்தவள், வெளியே கோகிலாவைப் பார்த்ததும், "என்ன அத்தை... அதுக்குள்ள விடிஞ்சிடுச்சா...?" எனக் கண்ணைக் கசக்கிக் கொண்டே கேட்க,

"ஆமா... நல்ல கதையா இருக்கு... மணி நாலாச்சு... நீ சீக்கிரம் இந்தப் புடவையைக் கட்டிக்கிட்டுக் கிளம்பு. மது குளிச்சிட்டு உன் ரூமுக்கு வருவா, நீயும் போய்க் குளி..." எனத் துரிதப்படுத்த,

கோகிலாவின் அவசரம் முல்லையைச் சென்றடையவே யில்லை.

நேற்று இரவு முழுவதும் மகிழனை நினைத்துக் கொண்டு தூக்கத்தைத் தொலைத்தவளுக்கு இப்போது கண்கள் எரிந்தன.

இன்னும் கொஞ்ச நேரம் தூங்கேன் எனக் கண்கள் செருக, கட்டிலில் சரிந்தவளை, "ஹய்யோ... அண்ணி... என்ன இன்னமும் தூங்கிட்டு இருக்கீங்க? சீக்கிரம், சீக்கிரம்... நேரமாச்சு... நாம இங்கிருந்து அஞ்சு மணிக்குக் கிளம்பணும்..." என அவசரமாகச் சொல்ல,

"அண்ணி... எனக்குத் தூக்கம் தூக்கமா வருது. இன்னும் கொஞ்சமே கொஞ்ச நேரம் தூங்கவா?" எனக் கண்கள் செருகக் கேட்டவளை வெகு சிரமப்பட்டுக் குளியலறைக்குள் தள்ளி விட்டாள்.

குளியலறையிலிருந்து புது மலராக வந்தவளுக்குத் தாமரை நிறத்தில் சேலையைச் சுத்திவிட்ட மதுவிடம்,



"என்னண்ணி... இந்த சாரி இவ்வளவு கிராண்டா இருக்கு... கோயிலுக்குப் போக எதுக்கு இந்தச் சேலை...?" என்றவளை,

"எனக்கேதும் தெரியாது. உங்களுக்கு ஏதாவது டவுட்னா அம்மாவைக் கேட்டுக்கோங்க..." எனப் பேசியவாறு சேலையை உடுத்தி முடித்தவுடன் கோகிலா கொடுத்த நகையை அணிவித்தாள்.

"அண்ணி... இது எல்லாம் என்ன வைரமா? எதுக்கு இவ்ளோ? எனக்கு வேண்டாமே... நீங்க போட்டுக் கோங்க..." என ஒரு நெக்லஸை எடுத்து மதுவின் கழுத்தில் அணிவிக்கப் போக,

"அய்யோ... காரியமே கெட்டுச்சு. இது எல்லாம் எனக்கில்லை... உங்களுக்குத்தான். அண்ணா... ம்ம்... அம்மா கொடுத்தாங்க. போட்டுக்கோங்க... எனக்கு வேற இருக்கு," எனத் திக்கியவளை,

"என்னது... அண்ணாவா? ஓஹோ... இளா அண்ணா உங்களுக்குத் தனியா வாங்கிக் கொடுத்திருக் காங்களா? சூப்பர்... சூப்பர்... எஞ்ஜாய்..." என்ற முல்லையிடம், "ஹீ... ஹீ... ஆமா, ஆமா..." என்ற மது மனதில், 'உங்கண்ணன் வாங்கிக் கொடுத்திட்டாலும்...' என நொடித்துக் கொண்டாள்.

அதன் பின் முல்லை கேட்கும் கேள்விகளுக்குத் திக்கித் திணறிப் பதில் கூறி, அவளையும் கிளப்பி, தானும் கிளம்பி, இருவரும் கீழே வரச் சரியாக ஒரு மணி நேரமானது.

மாடியிலிருந்து இறங்கி வந்த முல்லையைக் கண்ட கோகிலா, "அப்படியே தேவதை மாதிரி இருக்கேடா..." எனக் கன்னம் வழிக்க,

"அத்தை, இங்கே பாருங்க... அண்ணி எனக்கு மணப் பொண்ணு மாதிரி அலங்காரம் செஞ்சு விட்டிருக்காங்க. இங்கே பாருங்க... எதுக்கு இவ்வளவு நகை...? நான் இது வரைக்கும் இவ்வளவு போட்டதே இல்லை..." எனச் சங்கடமாகச் சொல்ல,

"ம்ம்ம்... என் மருமகளுக்குப் போட்டுப் பார்க்க எனக்கு ஆசை. உனக்கென்ன... நீ பேசாம வா... மாப்பிள்ளை, வண்டியை எடுங்க... நேரமாச்சு..." என மேலும் முல்லை ஏதும் கேட்கும் முன்னர் அனைவரும் வண்டியில் ஏறிப் பயணத்தைத் துவக்கினர்.

காரில் ஏறியதுதான் தாமதம், முல்லை அதற்குள் கண்ணை மூடி ஆழ்ந்த நித்திரைக்குத் தாவியிருந்தாள்.

அதைக் கண்ட மது, "அம்மா... அண்ணி அதுக்குள்ள தூங்கிட்டாங்க... அவங்களுக்கு என்ன நடக்கப் போகுதுன்னு கூடத் தெரியாம இப்படித் தூங்கிட்டே இருக்காங்க," என அன்னையின் காதில் கிசுகிசுக்க,

"ச்சு... சும்மா இரு மது. முல்லைக்குக் கேட்டுடப் போகுது. நல்ல வேளை அவ தூங்கிட்டா..." என அடக்கிய கோகிலாவிற்கும் மனதில் சந்தோஷமே.

சீரான வேகத்துடன் சென்று கொண்டிருந்த காரில் துயில் கொண்டிருந்த முல்லைக்குக் கனவு வந்தது.



அந்தக் கனவில் மகிழன் வந்தான்.

அதே மாயக் கண்ணனின் உடையில்... சுற்றிலும் வெள்ளைப் புகையுடன்... விண்ணுலகில்... கையில் புல்லாங்குழலுடன் அழகாக நின்றிருந்தான்.

ஆனால், இந்த மகிழனுக்கு முகத்தில் தாடியில்லை.

கையில் மாலையுடன் தன்னை நோக்கி வந்த மகிழனை, முல்லை விழி விரியப் பார்த்துக் கொண் டிருக்க,

அவள் கண்களை ஊடுருவி, அவள் நெஞ்சிற்குள் நுழைந்து, அதில் தன் காதல் சிம்மாசனத்தில் நிமிர்ந்து அமர்ந்தான்.

அவள் கண்களைச் சந்தித்தவாறு மகிழன் முல்லை யின் கழுத்தில் மாலை அணிவிக்க, தங்கள் மேல் விழுந்த அர்ச்சனையில் நிமிர்ந்து பார்த்த முல்லை, தன்னெதிரில் கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் நின்று கொண்டு தங்களை வாழ்த்திய அன்னை, தாத்தாவைப் பார்க்கவும், கார் குலுங்கி நிற்கவும் சரியாக இருந்தது.

கார் குலுக்கலில் கனவிலிருந்து மீண்டவள், நினைவுலகில் கண்டதை நம்ப முடியாமல் மேலும் கண்களைக் கசக்கிப் பார்க்க...

தன் எதிரில் நிற்பவர்கள், நடப்பவர்கள், சிரிப்ப வர்கள் அனைவருமே கனவோ என எண்ணி விழி விரித்தாள்.

## 28

என்னையே தந்தேன் உனக்காக
ஜென்மமே கண்டேன் அதற்காக!
சுந்தரி... கண்ணால் ஒரு சேதி...
சொல்லடி இந்நாள் நல்ல தேதி!
நான் உன்னை நீங்க மாட்டேன்...
நீங்கினால் தூங்க மாட்டேன்...
சேர்ந்ததே நம் ஜீவனே!

**கா**ர் நின்ற வேகத்தில் தன் கனவுலகிலிருந்து மீண்டு வந்த முல்லையின் கண்கள் அகல விரிந்து, தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தின.

காரில் வந்த போது கண்ட கனவு இன்னமும் தொடர்கிறதா என்ற சந்தேகத்தில் மீண்டும் தலையைக் குலுக்கிக் கண்களை விரித்து நோக்கிய பின்னும் தன் எதிரில் நிற்பவர்கள் யாரும் மறையாமல் இருக்கவே, தான் காண்பது நிஜம்தான் என்ற உண்மை உறைத்தது.

உறைத்த உண்மையிலிருந்து மீண்டு வராமல் நின்றிருந்தவளை, "முல்லை..." என்ற சின்னாவின் குரல் கலைக்க முயன்றதைத் தொடர்ந்து, "கண்ணு... என் சாமி... எப்படிடா இருக்கே?" என்ற தம்பியின் குரல் முழுதாக மீட்டுக் கொண்டு வர, "அ... அம்மா... அப்பு..." எனத் தடுமாற்றத்துடன் கூடிய அழைப்பில் அவள் குரல் உடைந்து, கண்கள் கண்ணீரைச் சொரிய...

"எதுக்குடி ராசாத்தி அழற...? அழாதேடா கண்ணம்மா... அம்மா உன்னை நிறையவே அழ



வெச்சுட்டேன்..." என அன்னை அவளை ஆறுதலாகத் தன் தோளோடு அணைத்துக் கொள்ள, இத்தனை நாள் தனது உலகமான அன்னையையும், தாத்தாவையும் சந்தித்த மகிழ்ச்சி அவளது கண்களை ஆனந்த ஊற்றாகப் பெருக்கெடுக்க வைக்க, இந்த இன்பமான நொடியை முழுதாக அனுபவித்தாள்.

அவளைச் சில நொடிகள் அழ விட்ட அன்னை, அதற்குப் பின்னும் இந்நாளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, "முல்லை... போதும்டா நீ அழுதது. நீ செய்யாத தப்புக்கு அம்மா உன்னை ரொம்பவே வருத்திட்டேன். இனிமேலும் நீ அழக் கூடாதுடா. இன்னிக்கு உன் வாழ்க்கையிலே ரொம்ப முக்கியமான நாள். கண்ணைத் துடைச்சிட்டு வா..." என மகளை வரவேற்றவர், "வாங்க சம்பந்தி... வாங்க சம்பந்திம்மா..." என வெங்கடராமன், கோகிலாவைத் தொடர்ந்து மதுரிமாவையும், இளங்கோவையும் அழைத்துக் கொண்டு நடந்தார்.

சின்னாவைத் தொடர்ந்து தம்பியப்பனும் முறை யாகத் தங்கள் சம்பந்தி வீட்டாரை வரவேற்றுத் தங்கள் ஊர்க் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர்.

முல்லை நடப்பதை எதையும் உணர முடியாமல், தன் அன்னையும் பாட்டனாரும் தன்னை ஏற்றுக் கொண்ட மகிழ்வில் இருந்து இன்னமும் மீள முடியாமல், அவர்கள் அழைப்பிற்குக் கட்டுப்பட்டு நடந்தாள்.

அவர்கள் பின்னே அவர்கள் சொந்தங்களும் ஊர் மக்களும் நடந்து வர, ஒரு கூட்டமாக அனைவரும் தங்கள் ஊர்க் கோயிலுக்குள் சென்றனர்.

முல்லையின் உடையும், அவள் அணிந்திருந்த நகையின் மதிப்பும் அவளின் வாழ்க்கைச் செழிப்பைச் சொல்ல, அதைக் கண்டு மெச்சியவர்களும், அவளின் செழுமையைக் கண்டு பொறாமைப்பட்டவர்களும் அக்கூட்டத்தில் இருந்தனர்.

அதில் புவனாவும் அடக்கம். ஆனால் பொறாமைப் பட்டவர்கள் கூட்டத்தில் அல்ல, அவளின் அழகை மெச்சிய கூட்டத்தில்!

அவளுக்கும் முல்லைக்கும் பெரிதாகக் குடும்பப் பகை எதுவும் கிடையாது.

கல்லூரிக் காலத்தில் ஒருவருக்குள் ஒருவர் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்ள ஏற்பட்ட போட்டி, நாட்கள் செல்லச் செல்ல முல்லையின் வளர்ச்சியிலும், அவள் மேல் ஆசிரியர்கள் கொண்ட நன்மதிப்பிலும் போட்டி, பொறாமையாக மாறி, அது கல்லூரிக் கடைசி நாட்களில் முல்லை அவமதித்ததில் பழியாக மாறி, அதைத் தீர்த்துக் கொள்ளவே அன்று முல்லையைப் பற்றி அதிகப்படியாகப் பேசியது.

ஆனால், அன்ற நடந்ததற்குப் புவனா குற்ற உணர்வில் வெந்து போனாள். அதன் விளைவால்தான் அவளின் இன்றைய இந்த மாற்றம்.



அன்னையின் கைப்பிடியில் கோயிலுக்குள் வந்து சேர்ந்த முல்லையை அவள் பின்னாலிருந்து தோளைத் தொட்டு அழைத்தவளை, "ஹே புவனா... எப்படிடி இருக்கே...?" எனக் கல்மிஷமில்லாமல் கேட்ட முல்லையைக் கண்ட புவனாவின் மனம் குற்ற உணர்வில் வெந்து புழுங்கியது.

அதன் விளைவால் அவள் கண்கள் கண்ணீரைச் சொரிய, "முல்லை... என்னை மன்னிச்சிடு. நான் அன்னிக்கு உன்னை ரொம்பப் பேசிட்டேன்..." என்று உண்மையான வருத்தத்தில் சொல்ல,

அவள் தோள் பற்றிய கையைத் தன்னோடு வைத்துக் கொண்டு, "அதையெல்லாம் நான் அன்னைக்கே மறந்துட்டேன் பூவி... நானும் சில தப்பு செஞ்சிருக்கேன். அன்னிக்கு நீயா என்னோட பேச வந்தும், நான் உன்னை அவமதிச்சது என்னோட தப்புத்தான். அந்த இடத்தில் நான் இருந்திருந்தாலும் நானும் உன்னைப் போலத்தான் நடந்திருப்பேனோ என்னவோ! நீ அதையே நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே!" என்று இயல்பாகச் சொல்ல,

அவள் பேச்சில் தன் குற்ற உணர்விலிருந்து மீண்ட புவனா, "நீ எல்லாம் அந்த மாதிரி ஒரு நினைப்பை எப்பவும் மனசுல வெச்சுக்க மாட்டே முல்லை. உன்னோட இந்த மனசுதான்டி எல்லாரையும் கவர்ந்திழுக்குது. நீ நல்லாயிருப்பே முல்லை..." என்ற புவனாவை, பிரபுவின் இரு ஜோடிக் கண்கள் ஆசையாய் நோக்கின.

புவனாவுடன் பேசிய பின்தான், தான் எங்கிருக்கிறோம்... தன்னைச் சுற்றி எதற்கு இத்தனை பேர் நிற்கிறார்கள்...?

தன்னைப் பெற்றவளும், வளர்த்தவரும் எப்படித் தன்னை ஏற்றுக் கொண்டார்கள்?

தன்னை வெறுக்கும் மாமனார், எப்படி இந்தச் சின்ன ஊரில் வந்து இத்தனை கூட்டத்திற்கு மத்தியில் பொறுமையாக நின்று கொண்டிருக்கிறார்...? என்ற ஆயிரம் ஆயிரம் கேள்விகள் புடை சூழ, குழப்ப ரேகையின் தீண்டலோடு நின்றிருந்த முல்லையின் கழுத்தில் மது மலர் மாலையைப் போட, அதைத் தொடர்ந்து மங்கள வாத்தியம் முழங்கவும், கூட்டங்கள் விலகிக் கோயிலின் மத்தியில் போட்டிருந்த மணமேடைக்கு வழி வகுக்க, முல்லையின் கண்கள் மேலும் ஆச்சரியத்தில் மூழ்கின.

'மகிழன்... என் மகிழனா இது? அவனா இவை அனைத்திற்கும் காரணம்... அட... அவன் முகத்தில் தாடியைக் காணவில்லையே! கடவுளே... நான் கண்ட கனவு பலித்து விட்டதா? அதே மாயக் கண்ணனாக அல்லவா காட்சியளிக்கிறான்...' என நினைத்தவள், தான் ஆசைப்பட்ட தோற்றத்தில் கணவனைக் காணவும், அவள் மனதில் எழுந்த கேள்விக்குப் பதில் கிடைத்த நிமிடத்திலும், மனம் வேகமாக அவனின் பால் ஓடிச் செல்ல, மனதின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கால்கள் தரையில் வேரூன்றி நின்றன.



அவளின் மனதைப் படித்த கணவனாக, மகிழன் கண்களால் தன் மனைவிக்கு அழைப்பு விடுக்க, அதைப் புரிந்து கொண்ட மனையாள் மெல்ல அடியெடுத்து வைக்க, அவளுக்கு உதவும் வண்ணம் மது ஒருபுறம், புவனா மறுபுறமென முல்லையை அழைத்துச் செல்ல, முல்லைக்கு இப் புது வுணர்வு சொல்ல முடியாத ஆனந்தத்தைக் கொடுத்தது.

கண்களால் காணும் யாவும் நடக்கவிருப்பதை உணர்த்தினாலும், அது தனக்கு ஏற்கெனவே நடந்திருந் தாலும், இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில், சொந்தங்கள் புடைசூழத் தனக்குச் சொந்தமானவனே தன்னை மீண்டும் சொந்தமாக்கிக் கொள்ளப் போகிறான் என்ற நினைப்பு அவளுக்குத் தித்திப்பைக் கொடுத்தது.

என்னதான் அவள் முதல் திருமணம் அவளின் இஷ்ட தெய்வமான வேம்பம்மனின் முன் நடந்திருந்தாலும், தன் வாழ்வின் நிஜத் தெய்வமான அன்னையின் வாழ்த்தையும், பாட்டனாரின் ஆசிர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளாமல் திருமண பந்தத்தில் உறுப்பினரான தன் நிலையை எண்ணி அவள் மறுகாத நாளில்லை.

இத்தனை நாள் அவள் பட்ட துன்பங்களுக்கு வடிகாலாகக் கணவன் எடுத்திருந்த இம்முயற்சியை எண்ணிய அவள் மனமும், கண்களும் ஒரு நொடி கூடத் தன்னவனை விட்டு நீங்கவில்லை.

மனைவியின் உணர்வினை அவள் உடலுக்குள் ஊடுருவி, அவள் மனதைப் படித்த கணவனாகப்

புன்னகை முகத்துடனே அவளின் மென்னடையை ரசித்துக் கொண்டிருந்தான்.

நீண்ட பயணமெனக் கடந்த அந்தப் பத்தடி தூரத்தைக் கடந்து வந்த முல்லையை, மகிழனின் அருகில் அமர்த்திய மது, "ஹப்பா... இவங்க என்ன கண்களாலேயே ஒருவரை ஒருவர் விழுங்கிடுவாங்க போல... மூணு மாசம் ஒண்ணாக் குடும்பம் நடத்திய பின்னும் இப்பவும் புதுப் பெண், பையனைப் போல இவங்க பார்த்துக்கிறது இருக்கே... தாங்கலைடா சாமி..." என்ற சீண்டல் அவர்களைச் சென்றடைந்ததாகத் தெரிய வில்லை.

தங்கள் உலகில் சஞ்சரித்தவர்களைத் தங்கள் முன் அமர்ந்திருந்த ஐயர், இதைச் செய்... அதைச் செய்... எனத் தங்கள் நிமிடங்களை விரையமாக்கிக் கொண்டிருந்ததைக் கண்டு உள்ளுக்குள் கடுப்பானாலும், மகிழனின் மனது இப்புதுவுணர்வை ரசிக்கவே செய்தது.

மதுவின் கிண்டல் பேச்சுகளில் தன்னுள் எழுந்த பரவசத்தை மறைத்துக் கொண்டு தலை குனிந்து அமர்ந்திருந்தாலும் மகிழனின் முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும், அதைத் தொடர்ந்து அவனின் கடுப்பையும் ஓரக் கண்ணால் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த முல்லைக்கு, 'இதற்காகத்தானே... இந்த சுகத்துடன் கூடிய திருமணத்திற்குத்தானே நாம் ஆசைப்பட்டோம்... அதை உணர்ந்து கொண்டு தனக்காகத் தன் விருப்பத்தை மதித்து இத்தனை செய்த கணவனுக்கு என்ன செய்தாலும் தகும்...' என நினைத்த முல்லையின் மனம் சந்தோஷ மடைந்தது.



ஐயரின் கணீர்க் குரலில் கெட்டிமேளம் முழங்க, தோழிகளின் கிண்டல் கேலிகளுடன், சொந்தங்களின் ஆரவாரத்துடன், பெற்றோர்களின் ஆனந்தக் கண் ணீருடன் கூடிய ஆசிர்வாதத்துடன், தன் கண்ணான மனைவியைத் தன் உரிமையாக்கிக் கொண்ட மகிழனும், தன் கணவன் கொடுத்த தாலியைத் தலை குனிந்து ஏற்றுக் கொண்ட முல்லையும் அந்தத் தருணத்தின் ஒவ்வொரு நொடியையும் தங்கள் வாழ்க்கைப் பொக் கிஷத்தில் சேகரித்தனர்.

காதலும் கவிதையுமான சங்கமம்!
நேசித்த மனங்கள் வாழ்வின் துவக்கம்!
இனிய விடியலில் திருமண விழாக்கோலம்!
இனி நாளும் வாழ்வே விழாக் காணும்!

புரிதலும் அறிதலும் ஒன்றாகி
அன்பும் காதலும் தினம் பெருகி
ஒருமித்த எண்ணத்தில் நறுமண வாழ்வாகி
உருவாகிடும் கவிதையே மழலையாகி
சீரும் சிறப்பும் வாழ்வுமாகி
வாழ்வில் இன்ப ஊற்றாகி
ஆலம் விழுதாய்க் குலம் தழைத்திடுவீர்!

தங்கள் சொந்தங்களின் ஆசிர்வாதத்தோடு தன் மனைவியை இன்னொரு முறைமனைவியாக்கிக் கொண்ட

மகிழன், ஐயர் சொன்ன இன்னும் சில சடங்குகளைச் செய்தபின், முல்லையைத் தன் கை அணைப்பிலேயே வைத்துக் கொண்டிருந்தான்.

அவனின் செயலைக் கிண்டல் செய்த பிரபு, இளா, மதுவைக் கண்டு கொள்ளாது மனைவியின் கைகளை ஒரு நொடி கூட விடாமல் பிடித்திருந்தவனைக் கண்டு முல்லைக்குக் கூச்சமாகிப் போனது.

"மகி... கையை விடுங்க. அண்ணனும் அண்ணியும் ரொம்பக் கிண்டல் பண்றாங்க..." என்ற முல்லையின் கெஞ்சல் அவனைச் சென்றடையவேயில்லை.

சின்னாவும், தம்பியும் முல்லையின் முறையான திருமணத்தில் உள்ளம் பூரித்து, கூடியிருந்த உறவினர்களுக்குப் பந்தியை ஆரம்பிக்க, முறையான மரியாதையுடன் சம்பந்தி வீட்டாருக்கும், புதுமணத் தம்பதியினருக்கும் விருந்து கொடுத்துத் தங்களின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர்.

தங்கள் வீட்டருகில் வர வரக் கண்களில் தெரிந்த மாற்றம் முல்லையை விழி விரியச் செய்தது. அதைக் கண்ட மகிழன், "காலையிலிருந்து இந்த முட்டைக் கண்ணை எத்தனை முறை திறப்பே...? கண்ணு தெறிச்சு வெளியே வந்துடப் போகுது..." எனக் கிண்டல் செய்ய,

இத்தனை நேரம் தங்களைச் சுற்றி நிறையப் பேர் இருந்ததால் வாயைத் திறக்காத மகிழன், இந்த நாளில் முதல் முறையாக வாயைத் திறக்கவும், அவனிடம் கேட்க நினைத்த கேள்விகள் ஒவ்வொன்றாகப் படையெடுத்தன.



ஆனால், அவள் கேள்விக் கணைகளைத் தொடுக்க முடியாமல் வீடு வந்து சேர, கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் கழித்துத் தங்கள் வீட்டுக்குக் கணவனுடன் சென்ற முல்லையின் மனம், கேள்விகளை மறந்து, மீண்டும் புது உணர்வுகளின் பிடியில் சிக்கித் தவித்தது.

பெண், மாப்பிள்ளைக்கு முறையாகப் பாலும், பழமும் கொடுத்த சின்னாவும், தம்பியப்பனும் அடிக்கடி வெங்கடராமனையும், கோகிலாவையும் ஓடி ஓடிக் கவனிக்க, முல்லைக்கு அன்னை, தாத்தாவின் மனதில் இருப்பதை உணர முடிந்தது.

மகிழனுக்கும், காலையிலிருந்து தன் மாமியாரும் தம்பியும் தன் பெற்றோர்களை அதிகப்படியான கவனத் துடன் எதிர்கொள்வது புரியத்தான் செய்தது. ஆனாலும் இந்த விஷயத்தில் அவனால் ஏதும் செய்ய இயலாத நிலையிலிருந்தான்.

ஆனால், அவன் அன்னையோ, "அண்ணி... எதுக்கு எங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் சிரமப்படுறீங்க...? முல்லையும் எங்க பொண்ணு மாதிரிதான்... நீங்க எப்படி எங்களை அதிகப்படியா கவனிக்கிறதைப் பார்த்தா ரொம்பவும் சங்கடமாக இருக்கு... சாதாரணமா இருங்க. இதுவும் எங்க வீடுதான்..." என உண்மையான வார்த்தைகளை உதிர்க்க...

மனைவியை ஆமோதிப்பவராக வெங்கடராமனும், "ஆமாம்மா... நாங்க எதையாவது தப்பா எடுத்துக்கு வோம்னு நீங்க அதிகக் கவனமாக நடந்துக்கிறது எங்க

மனசுக்கு ரொம்பவும் கஷ்டமா இருக்கு. இயல்பா இருங்க... கோகி சொன்ன மாதிரி முல்லை எங்க பொண்ணு மாதிரியில்ல... எங்க பொண்ணேதான்..." என ஆமோதிக்க...

கேட்ட சின்னா, தம்பியின் மனம் குளிர்ந்ததென்றால் முல்லையின் கண்கள் மீண்டும் விரியக் காத்திருந்தன.

"கொடி, ஸ்டாப் ஸ்டாப். திரும்பவும் உன் முட்டை முழியைத் திறக்காதே. பேசியது என் அப்பாவேதான். கேட்டது நீயேதான். அவருக்கு இந்த மாற்றம் எப்பவோ வந்துடுச்சு. ஐயாதான் உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்க அவரை அப்படியே மெயின்டெயின் பண்ணச் சொன்னேன்..." எனக் காலரை உயர்த்திச் சொல்ல, முல்லை கணவனைக் காதலாக நோக்கினாள்.

அதன்பின் சொந்தங்களின் வருகையில், முல்லை மகிழனின் பேச்சைத் தடை செய்ய... முல்லை அறைக் குள் அழைத்துச் செல்லப்பட்டாள். மகிழன் அந்த ஊர்ப் பெருசுகளின் கேலி கிண்டலுக்கு ஆளாக்கப்பட்டான்.

புதுத் திருமண ஜோடிகள் இருவரின் தனிமையும் பறிபோன துக்கத்தில் இருக்க... அதைப் புரிந்து கொள்ளாமல் பழைய ஜோடிகள் தங்களின் ஜோடிப் பொருத்தத்தைப் பெருமிதமாகச் சொல்லிக் கொண் டிருந்தன.

ஏற்கெனவே திருமணம் முடிந்து மூன்று மாதங் கள் முடிந்திருந்தாலும், இன்னமும் இல்லற வாழ்வில்



அடியெடுத்து வைக்காத இளம் ஜோடிகள் தங்களின் தனிமையை எண்ணிக் கனவுகளுடன் பொழுதைக் கழித் தனர்.

இருவர் எதிர்பார்த்த அம் மாலை வேளையும் வந்தது. முல்லையை அவள் அறையில் அலங்கரித்து முடித்த மது, மிகவும் சோர்வாகக் காணப்பட்டாள்.

அதைக் கண்ட முல்லை, "அண்ணி... காலை யிலிருந்து உங்களுக்கு ரொம்ப அலைச்சல். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க. இந்த நிலையில் இப்படி இருக்கக் கூடாது..." என அக்கறையாகச் சொல்ல,

அவள் அக்கறையில் நெகிழ்ந்த மது, "என்னண்ணி இது... என்னோட அண்ணன் கல்யாணத்தில் நான் செய்யாம வேற யார் செய்வா? எல்லாமே இன்னிக்கு ஒரு நாள்தானே... இந்த நாளை எல்லாருமே எவ்வளவு சந்தோஷமா கழிச்சோமில்ல... இதைத் தவிர நமக்கென்ன வேண்டும், சொல்லுங்க. நீங்களும் அண்ணாவும் சந்தோஷமா இருங்க. இப்போ நாங்க எல்லோரும் கிளம்பு றோம். நாளைக்குச் சாயந்திரம் அத்தை விருந்துக்கு வரச் சொல்லியிருக்காங்க. நாளைக்கு வர்றோம். சரியா?" எனப் புன்னகையுடன் வாழ்த்தி வெளியே அழைத்து வந்தாள்.

அறையிலிருந்து வெளிப்பட்ட முல்லையைக் கன்னம் வழித்து, ஆசிர்வதித்த கோகிலா, "ரெண்டு பேரும் இனிமேலாவது வாழ்க்கையை நல்லபடியாத் துவக் குங்க... இனி உங்களுக்குள்ள சந்தோஷம் மட்டுமே நிலைச்சிருக்கணும்..." எனவும்,

அவரைத் தொடர்ந்து வெங்கட்டும், "சாரிம்மா... உன்னோட அருமை புரியாம நானும் உன்னை ரொம்பவே கஷ்டப்படுத்திட்டேன். நீ மட்டும் அன்னிக்கு இல்லைன்னா என்னோட பையனை நான் இப்போ உயிரோடவே பார்த்திருக்க முடியாது. நான் மகன் மேல வைச்ச அதிகப்படியான பாசம்தான் என்னை அப்படியெல்லாம் நடந்துக்க வைச்சுது. நான் செஞ்சதுக்கு ரொம்பவே வருத்தப்படறேன்..." என உண்மையான வருத்தத்துடன் சொல்ல,

"ஐயோ... மாமா, என்ன இது... தயவு செஞ்சு இப்படி எல்லாம் பேசாதீங்க. எனக்கு உங்க நிலை புரிஞ்சுது... இப்படி எல்லாம் பேசி என்னைக் கஷ்டப்படுத்தாதீங்க..." என்றவளை அவரும் வாழ்த்தினார்.

மகளிடம் நிறையப் பேச வேண்டியதிருந்தாலும், இது பேசுவதற்கான தருணமில்லை என்று உணர்ந்த சின்னா தங்கள் மகளிடம் ஒன்றும் பேசாமல் அவள் நெற்றியில் இதழொற்றி ஆசிர்வாதத்தை வழங்கினார்.

அனைவரிடமும் ஆசிர்வாதத்தை வாங்கிய பின் முல்லையின் கண்கள் தன் அப்புச்சியைத் தேட,

"முல்லை... உன்ற அப்புவைத் தேடுறியா! ஆம்பளைங்க நாலு பேரும் ஏதோ திருட்டுத்தனம் செஞ்சு வைச்சிருக்காங்க... அதை நீயே தெரிஞ்சுக்கோ..." எனவும்,

வெளியிலிருந்து பிரபு, இளாவுடன், மகிழனின் தோளில் கை போட்டவாறு நடந்து வந்த தன் அப்புச்சியை, "அப்பு... எங்க போயிருந்தீங்க, எல்லாரும்...?" என்றாள்.



"அதை நீ உன் புருஷன்கிட்டயே கேட்டுக்கோ தங்கச்சி..." என இளா தன் மனைவியைத் தள்ளிக் கொண்டு போக, அவர்களைத் தொடர்ந்து கோகிலா, வெங்கட்டுடன் பிரபுவும் அங்கிருந்து கிளம்பினான்.

அவர்கள் சென்றபின் சின்னா, "முல்லை... நீ மாப்பிள்ளையோட போடா..." என அனுப்பி வைக்க,

"இந்த ராத்திரியில் எங்கம்மா போகச் சொல்ற?" என முல்லை குழப்பமாகப் பார்க்க...

"கேள்வி கேட்காம மாப்பிள்ளையோட போ, முல்லை..." என்று விரட்ட,

"அதானே பார்த்தேன்... கொஞ்ச நேரம் நீ என்னை அதட்டாமல் இருந்ததும், இது சின்னக் கண்ணாவான்னு எனக்கே டவுட் வந்துடுச்சு..." என முல்லை கிண்டல் செய்ய,

"உனக்கு இன்னமும் இந்த வாய் குறையாதபோது நான் எப்படித் திருந்துவேன்... நல்ல நேரம் முடியறதுக் குள்ள சீக்கிரம் போடி..." என விரட்டவும்,

"ச்சே... நீ வா மகி... இந்த அம்மா ரொம்ப மோசம். நாம நம்ம வீட்டுக்குப் போகலாம்," எனக் கையைப் பிடித்துச் செல்ல,

"ஆமாடி செல்லக் குட்டி... வா. நாம நம்ம வீட்டுக்குப் போகலாம்..." என முல்லையின் இடுப்பில் கையைக் கொடுத்து நடத்திச் செல்ல...

"மகிழ் தம்பி... ஆல் தி பெஸ்ட்..." எனத் தம்பியின் குரலில், "அப்பு... நீயுமா!" என்ற ரீதியில் பார்த்து விட்டு, முல்லை மகிழனுடன் நடந்து சென்றாள்.

அன்னையிடம் வீம்புக்குச் சொல்லி விட்டு வந்து, வெளியே இருந்த கும்மிருட்டைப் பார்த்ததும், "மகி... இந்த நேரத்தில் எங்க போகப் போறோம்? நம்மளை விட்டுட்டு எல்லாரும் கார்ல போயிட்டாங்களே..." எனக் கவலையாகச் சொன்ன முல்லையை...

"போனாப் போகட்டும்..." எனத் தோளைக் குலுக் கியவனை, "ஹே, லூசு... என்ன நீ இப்படி இருக்கே! இந்த ராத்திரியில, எங்கடா... ம்ம்... இந்தச் செம் மண்லயா..." என எதையோ சொல்ல வந்து, பின் நிறுத்திய மனைவியின் அழகைக் கையில் இருந்த டார்ச் லைட்டின் ஒளியில் பார்த்தவனுக்கு அவளை அப்படியே அள்ளிப் பருக வேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

"ஹே... இப்போ என்ன சொன்ன... சொல்லி முடி..." என உந்த,

"சீ! போ மகி... இப்போ எங்க போறோம்... அதைச் சொல்லு!" - தான் சொல்ல வந்ததை மறைத்து வேறு பேச்சைத் துவங்க...

அதற்குள் அவளின் இஷ்ட தெய்வத்தின் சந்நிதிக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

தன்னால் உருவாக்கப்பட்டு, தன்னால் பூஜிக்கப்பட்ட அம்மனுக்குத் தனக்குக் கிடைத்த இந்த நல்வாழ்வுக்கு நன்றி கூறி முடிக்கவும், அவளுடன் சேர்த்துத் தானும்



அம்மனை வேண்டிய மகிழன், சில நொடிகளுக்குப் பின் தன் மனைவியைக் கைகளில் ஏந்தினான்.

கணவனின் இந்தத் திடீர்ச் செயலில் திகைத்த முல்லை, "மகி... என்ன பண்ற... ஹய்யோ விடு... சேலை கலையப் போகுது..." என இறங்க முயல,

"ஹா... ஹா..." சத்தமாகச் சிரித்த மகிழன், "சேலை கலையப் போகுதா? இன்னிக்கு நீயே கலையப் போறேடி என் பொண்டாட்டி... ஹா...ஹா..." என மேலும் சத்தம் போட்டுச் சிரிக்க....

"ஹய்யோ... எதுக்குடா, இந்த அர்த்த ராத்திரியில இப்படிச் சத்தம் போட்டுச் சிரிக்கிற? மெதுவா... மெதுவா. ஆமா, நீ என்ன பழைய பட வில்லன் நம்பியார் ரேஞ் சுக்குப் பேசுற... என்னடா செய்யப் போற என்னை...?" எனக் குழப்பமாகக் கேட்டவளை,

"அச்சோ... இவ பச்சப் புள்ள... நமக்கு இப்போ நடக்கப் போறது ஒண்ணுமே தெரியாது பாரு... அடிங்க... உன்னை இரு, வச்சுக்கிறேன்..." என்றான்.

"ச்சே மகி... எங்கே போறோம், சொல்லு!" எனக் காலை உதறிக் கொண்டு துள்ளியவளைச் சமாளித்துத் தூக்கி வந்தவன், ஒரு இடத்திற்கு வந்ததும்... அவளைக் கீழே இறக்கிவிட்டு, "சர்ப்ரைஸ்..." என்று கத்தவும், பலூன் வெடித்தது. வண்ணப் பேப்பர்கள் விழவும், வெளிச்சம் பரவவும் சரியாக இருந்தது.

முதலில் வந்த திடீர்ச் சத்தத்தில் மருண்ட முல்லை, கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஒண்டி நின்ற

முல்லை, அதற்குப் பின் தன் கண் முன்னே தெரிந்த அழகைத் தன் விழிகளில் நிரப்ப முடியாமல் தடுமாறி னாள்.

## 29

உன்னாலே மெய் மறந்து நின்றேனே...
மை விழியில் மையலுடன் வந்தேனே...
இடைவிடாத நெருக்கங்கள்...
தொடருமா உயிரே!
மொழியில்லாமல் தவிக்கிறேன்...
மௌனமே இங்கே...

**"ம**கி, என்னது இது எல்லாம்! எப்போ... எப்படி?" - கண்கள் அகலக் கேட்ட மனைவியை, "ஹோ கேன்டி... காலையில் இருந்து எத்தனை முறை உன் முட்டைக் கண்ணைத் திறப்ப? கண்ணைச் சுருக்கு. ப்ளீஸ்..." எனக் கிண்டல் செய்யத் துவங்கிய மகிழனை அவன் விலாவில் குத்தியவள்,

"மகி, என்னது இது? எப்படி இதெல்லாம்! இது யாருது? நீபாட்டுக்கு என்னைக் கூட்டிட்டு வந்துட்ட?" எனக் கேள்விக் கணைகளை வீசியவளை,

"ஸ்டாப் ஸ்டாப்... ஸ்டாப். உன்னோட எல்லாக் கேள்விக்கும் பதில் சொல்றேன். பட், அதுக்கு முன்னாடி இந்தா... இந்த சிஸரை வாங்கி ரிப்பனை வெட்டி, உன் வலது காலை எடுத்து வைச்சு உள்ளே போ..." என்றவனை விசித்திரப் பார்வை பார்த்து விட்டு அவன்



சொன்னதைச் செய்ய, அதற்கு எதிரொலியாக மகிழன் கைதட்டித் தன் மகிழ்வை வெளிப்படுத்தி, "வெல்கம் ஸ்வீட்டி..." என்றான் ஆர்ப்பாட்டமான குரலில்.

"ச்சூ... இப்போவாவது சொல்லேன். இது யார் வீடு? எதுக்கு என்னை இங்கே கூட்டிட்டு வந்திருக்கே? அதுவும், இந்த நேரத்தில...!" என்றவளை,

"அடியே புத்தூ... இன்னுமா உனக்குப் புரியலை! இது நம்ம வீடுதான். நம்மதை விட உன் வீடு. இந்த வீடு மட்டுமில்லை, இங்க சுத்தியிருக்கு பார்... இந்தத் திராட் சையும், வாழைத் தோட்டமும்... எல்லாமே உனக்கே உனக்கு மட்டும்தான்... இந்த அன்பான 'என் கண்ணா ளுக்கு...' இந்த அடியேனின் சின்னப் பரிசு..." எனக் குனிந்து மேற்கத்திய பாணியில் சொன்னவன்...

தொடர்ந்து, "ம்ம்... வலது காலை எடுத்து வெச்சு உள்ளே வாங்க, மேடம்..." எனத் திகைத்திருந்தவளின் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்.

ஒரு சில நொடிகளில், தன் திகைப்பிலிருந்து மீண்டவள், "என்ன சொல்ற மகி...! இது எனக்கா... ஏன்?" என ஒற்றை வார்த்தையில் கேள்வி கேட்க,

"என்னது... ஏன்? இது உனக்குத்தான்டி என் செல்ல ராட்சஷி... ஏன் இவ்வளவு ஆச்சரியமா கேட்கிற?" என அவளின் திகைப்பின் அர்த்தம் தெரியாமல் கேட்டவன்... அவள் மேலும் ஏதும் கேட்குமுன், "உன்னோட கேள்வியை அப்புறம் கேட்கலாம். அதுக்கு முன்னாடி வீட்டைச் சுற்றிப்

பாரு..." என்றவன், அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு ஒவ்வொரு அறையாகக் காட்டினான்.

கிட்டத்தட்ட அறுபது ஏக்கரில் சுற்றிலும் கம்பி வேலிகள் சூழப்பட்டு ஒரு பக்கம் பந்தலிட்டு, அதன் மீது திராட்சைக் கொடிகள் படர்ந்திருக்க... இப்போதுதான் இளம்பச்சை வண்ணத்தில் தலையைத் தூக்கித் துளிர் விட்டுக் கொண்டு காணவே அழகாக இருந்தது.

இன்னொரு பக்கம் வாழை இடுப்பளவு உயர்ந்து வளர்ந்திருந்தது. நடுநடுவே தென்னைக் கன்றுகளும் ஊன்றப்பட்டு, அதுவும் மூன்று அடிக்கு மேல் வளர்ந்து நின்றிருந்தன.

இரு தோட்டத்திற்கும் நடுவில் ஒரு ஏக்கர் காலியிடத்தில் போர் போட்டுத் தண்ணியைச் சேமிக்கப் பெரிய தொட்டி கட்டப்பட்டு அதற்குச் சற்று இடைவெளி விட்டுக் கட்டப்பட்டிருந்த அவ்வீட்டின் அழகைக் கண்டு தான் முல்லை ஆச்சரியத்தில் விழி விரித்தது.

அது நகரத்தில் இருப்பது போன்று பல மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பல்ல...

ஓடுகள் வேயப்பட்டு, முன்னால் இரு பக்கமும் திண்ணையுடன், மரத் தூணால் அலங்கரிக்கப்பட்டுக் கிராமத்து இலக்கணத்தில் பார்க்கவே கம்பீரமாகத் தோன்றியது.

வெளியே பார்க்கும்போதே இத்தனை அழகைக் கொண்ட அவ்வீடு உள்ளே செல்லச் செல்ல முல்லையை மயக்கியது என்றுதான் சொல்ல வேண்டும்.



உள்ளே நுழைந்ததும் நீண்ட வராண்டா... அதைத் தொடர்ந்து நீண்டதொரு முற்றம். அதன் இரு பக்கமும் இரண்டிரண்டு அறைகள். வலது பக்கம் சமையலறை, அதை ஒட்டிய சின்னப் பூஜையறை. அதன்பின் மற்றொரு சின்ன அறை. இடது பக்கம் இரண்டு பெரிய படுக்கை யறைகள். ஆனால் அப்படுக்கை அறைக்கென்று தனி யாகக் குளியலறை.

முற்றத்தைக் கடந்து சென்று பின்பக்கக் கதவைத் திறந்து விட்ட மகிழனைத் தொடர்ந்து சென்ற முல்லை, அதில் தெரிந்த அழகில் மயங்கி விழாமல் இருந்ததே பெரிய விஷயம்.

பின்னே அவள் ரசித்து விளையாடும் ஓடையில் இருந்த தண்ணீர் அவள் கால்களைக் கழுவிச் செல்ல, மெல்லிய வெளிச்சத்தில் சுத்தமான தண்ணீரின் சலசலப்பு வைரத்தைப் போல் மின்னியது.

இந்த அழகிற்கு ஈடு இணை இவ்வுலகில் வேறேதும் உண்டா என்ன...?

மகிழன் தான் இந்த இடத்தை வாங்கினான். அவன்தான் இந்தக் கம்பிவேலிகளைப் போட்டிருந்தான் என அனைத்தையும் அவள் அறிந்தவளே...!

ஆனால் நடந்த சம்பவங்களின் தாக்கத்தால் இந்த இடம் பராமரிப்பின்றிக் கிடக்கும் என்று நினைத்த முல்லையின் நினைப்பு, காலையில் இங்கே வந்ததும் பொய்யாகிப் போனது.

ஆனால், இந்த அழகிய வனத்திற்குள் இன்னொரு ரம்மியமான சோலைவனம் இருக்குமென்று அவள் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

கண் முன்னே விரிந்து நின்ற அழகில் மயங்கிய முல்லை, தன்னை மறந்து பின்னே சாய... மகிழன், தன் மனதுக்கினியவளைத் தன் நெஞ்சோடு சாய்த்துக் கொண்டு, "இதுவரைக்கும் நான் இதை உன்கிட்ட சொன்னதில்ல... அதற்கான வாய்ப்பு அமையாமலே நமக்குள்ள என்னென்னவோ நடந்துடுச்சு. ஆனால் அப்போ எல்லாம் சொல்ல முடியாததுக்குக் காரணம் இந்த மாதிரி ஒரு அழகான தருணத்தில்தான் உன்னிடம் சொல்லணும்னு இருந்திருக்கு..." என்று முல்லையின் காதில் கிசுகிசுப்பாகப் பேச ஆரம்பித்த மகிழன்,

பின்னர் அவளைத் தன் புறம் திரும்பி நிற்க வைத்ததும், அவளின் பிறைநெற்றியில் இதழொற்றி, நிற்காமல்... அலை பாய்ந்த கருவிழிகளை நேராகச் சந்தித்து, "என் கண்ணான கண்ணாளை நான் உளமார நேசிக்கிறேன். நான் உன்மீது கொண்ட காதலுடன் எனது மீதி நாட்களை உன்னுடன் மட்டுமே கழிக்க விரும்பு கிறேன். இதுவரை என்னை அறியாமல் நான் செய்த தவறை மன்னித்து, என்னை ஏற்றுக் கொள்வாயா, முல்லைக்கொடி...?" எனக் கேள்வியாக நிறுத்தி, முல்லை யின் பதிலுக்காக அவள் முகம் பார்த்துக் காத்திருந்தான்.

இதைவிட ஒருவன் நேர்மையாக, உண்மையாகக் காதலை எப்படிச் சொல்ல முடியும்!



வழக்கமான ஆங்கிலத்தில் சொல்லும் அம்மூன்று வார்த்தைகளைச் சொல்லியிருந்தால் கூட, அது முல்லையைச் சென்று தாக்கியிருக்காது.

ஆனால், இவன் சொன்ன இந்தக் காதல் மொழி, அவளின் மனதை ஊடுருவி, ஏற்கெனவே அவன் மீது இருந்த காதலைப் பன்மடங்காகப் பெருக்கி, அவளை நிலைகுலையச் செய்தது.

"மகி..." என்ற அழைப்புடன், மகிழனை இறுக்கி அணைத்துக் கொண்டவள், அவளின் சந்தோஷத்தைக் கண்ணீரால் வெளிப்படுத்தினாள்.

அவளின் இந்தத் திடீர் அழுகை மகிழனைப் பயப்படுத்த... "டேய், ஏன்டா அழற? திரும்பவும் ஏதாவது சொதப்பிட்டேனா...? ப்ளீஸ் அழாதேம்மா. நான் ஏதாவது தப்பு செஞ்சிருந்தா... சாரிடா!" எனப் பதட்டமாகச் சொல்ல,

அவன் இப்படிச் சொன்னதும் முல்லை பழைய துள்ளலுடன் மனதிற்குள், 'மவனே... என்னை ரெண்டு நாளா எப்படி எல்லாம் அழ விட்ட...? கொஞ்ச நேரம் நீயும் கஷ்டப்படு!' என நினைத்துச் சிரித்துக் கொண்டவள், அதை உடனே செயலாற்றும் பொருட்டு அவனிடமிருந்து வேகமாக விலகி நடக்க ஆரம்பித்தாள்.

தன் மேலிருந்த மனைவி திடீரென விலகிச் செல்லவும், பதட்டமடைந்த மகிழன், "ஹே... ஹே... எங்க கேன்டி போற? இந்த நேரத்துல எதுக்குடி கோபப்படற? ஏற்கெனவே மூணு மாசம் பிரம்மசாரியா வாழ்ந்துட்டேன்டி. பார்க்கிறவன் எல்லாம் என்னைக் கிண்டல் பண்றான்.

இந்த இளாவைக கூட விடு. இந்தப் பிரபு பையன், அவன் என்னமோ கல்யாணம் பண்ணி மூணு பிள்ளையைப் பெத்தவன் மாதிரி என்னைப் பார்த்துக் கேலியாச் சிரிக்கிறான்... நான் ரொம்ப பாவம்டா... கொஞ்சமா கருணை காட்டேன்..." எனப் புலம்பிக் கொண்டே பின்னே நடக்க...

அவளோ, அவன் புலம்புவதைக் கேட்டு மனதினில் சிரித்துக் கொண்டு, கோபமாக இருப்பது போல் நடித்து ஓடையை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த படிக்கட்டுகளின் மேல் அமர்ந்து கொண்டு, அதில் காலை நனைத்தவாறு அமர்ந்து கொண்டாள்.

பின்னால் வந்த மகிழனும், அவள் அருகில் அமர்ந்து கொண்டு, "சுகர் கேன்டி... ப்ளீஸ்டி. உன்னோட கோபத்தை எல்லாம் நாளைக்குக் காலையில வச்சுக்கக் கூடாதா! இந்த நாளுக்காக மாமன் பல லட்சத்தைச் செலவு பண்ணியிருக்கேன்..." எனக் கெத்தாகச் சொல்ல, அதுவே அவனுக்கு வினையாகிப் போனது.

அவன் பணத்தைப் பற்றிப் பேசியதும், ஆவேசம் கொண்ட முல்லை, "நான் உன்கிட்ட கேட்டேனா... கேட்டேனா... கேட்டேனா... எனக்கு இந்த மாதிரி செலவு பண்ணுன்னு நான் கேட்டேனாடா..." எனக் கத்தியவளை,

"ஐயா, சும்மா இருந்த டைனோசரை நானே சொறிஞ்சு விட்டுட்டேனா... இன்னிக்கும் உனக்கு ஃபர்ஸ்ட் நைட் நடக்காது போலவேடா, மகிழா!" என மானசிகமாகத் தலையில் கை வைத்துக் கொண்ட மகிழன்,



"நோ, அப்படி மட்டும் நடக்க விடவே மாட்டேன். மகிழா, இனி நோ கெஞ்சல்... ஒன்லி ஆக்ஷன்..." என்றவன், எழுந்து நின்று அமர்ந்திருந்த முல்லையைப் பார்த்தவன், தன் கையை இரண்டு முறை மடக்கி, மடக்கி எடுத்தவனை விசித்திரமாகப் பார்த்த முல்லை... அடுத்து அவள் சுதாரிக்கும் முன்னே அலேக்காகத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றவன், மூடியிருந்த ஒரு அறையின் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே சென்று முல்லையைப் படுக்கையில் கிடத்தி, அவள்மீது இவனும் சரிந்தான்.

அவன் போட்ட வேகத்தில், "ஐயோ... ஏன்டா இப்படிப் போடறே? என் இடுப்பே போச்சு..." எனக் கத்தியவளை,

"உனக்கா... உன்னைக் கை வலிக்கத் தூக்கிட்டு வந்த எனக்குத்தான் கை மரத்துப் போச்சு. பார்க்கத்தான்டி நீங்க எல்லாரும் ஜீரோ சைஸ். தூக்கினா திமிசுக் கட்டை மாதிரி என்ன கனம் கனக்கிறீங்க..." எனத் தெரியாமல் உளறி வைக்க...

"ஓஹோ... அப்படியா! அப்போ சார் இதுவரைக்கும் எத்தனை பொண்ணைத் தூக்கி டெஸ்ட் பண்ணியிருக்கீங்க? அப்போ என்கிட்ட பொய் சொல்லியிருக்கியா?" எனப் பொரிந்தவளை,

"ஐயோ கொடி! எல்லாமே ராங் டைமிங்கா இருக்கு... நான் ரொம்ப உளர்றேன். ப்ளீஸ்டி... என்னைப் பார்த்தாப் பாவமா இல்ல!" என அப்பாவியாக முகத்தை வைத்துக்

கொண்டு கேட்க, அசராமல் இருந்த முல்லை, "இல்ல... என்னை ரெண்டு நாளா எவ்வளவு அழ விட்டே... அதுக்குத் தண்டனையா இன்னிக்கு ஃபர்ஸ்ட் நைட் கட்..." என்றாள்.

"ஹ்ம்ம்... அப்படிங்கிற... சரி. அப்புறம் உன் பாடு..." என்றவன், அடுத்து ஆவேசமாக அவளின் இதழ்களைச் சிறை செய்ய... முதலில் சில நொடிகள் திமிறிய முல்லை, அதன்பின் அவனின் பின்பக்கச் சட்டையை இறுக்கப் பற்றி அவனுடன் ஒன்றினாள்.

அதன் பின் அங்கே பேச்சுக்களுக்குத் தடை விதிக் கப்பட்டு, சிணுங்கலுக்கும், கொஞ்சலுக்கும் மட்டுமே வழிவகுத்தது.

இரவின் நிசப்தத்தில், நிலவின் மெல்லிய ஒளியில், அழகிய சோலைவனத்தில் மகிழன் - முல்லையின் சங்கமும் இனிதே நடந்தேறியது.

காதல் கடலில் முக்குளித்து, காமத்தின் ஆடையை உடுத்தி, இனிய இல்லறத்தில் முதல் அத்தியாயத்தைத் துவக்கிய இருவரும் தூக்கத்துக்குத் தத்துப்பிள்ளை யாகினர்.

மகிழன், தன் மனைவியின் நியாயமான கோரிக்கையை வெறும் பேத்தல் என நினைத்து, அவளைக் கோபித்துக் கொண்டது எத்தனை பெரிய தவறென்று முழுதாக உணர்ந்து கொண்டதன் விளை வாகத்தான் இப்போது அவளின் ஆசையை நிறைவேற்ற இத்தனை முயற்சிகள்...



உண்மையான காதலுடன், இத்தனை நாட்கள் காத்திருந்து இருவரும் ஆசைப்பட்டாற் போன்று பெரியவர் களின் ஆசிர்வாதத்தோடு, இல்லறம் துவக்கிய மகிழனும், முல்லையும் அதில் இருந்த உண்மையான சந்தோஷத்தை நொடிக்கு நொடி அனுபவித்தனர்.

வெகு நேரம் சென்று புரண்டு படுத்த மகிழன், அருகில் மனைவியை அணைக்க அவளைத் தேட, இடம் காலியாக இருக்கவே, தூக்கத்தை முற்றிலுமாக விரட்டி எழுந்து அமர்ந்து பார்க்க... தனக்கு எதிரில் இருந்த ஜன்னலின் அருகில் அமர்ந்திருந்த முல்லை, அந்நில வொளியில் கலைந்த ரவிவர்மனின் ஓவியமாகக் காட்சியளித்தாள்.

உதட்டில் உறைந்த புன்னகையுடன் போர்வையை எடுத்துக் கொண்டு, மனைவியை நெருங்கிய மகிழன், அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்துத் தானும் அவள் அருகில் அமர்ந்து கொண்டு, "ஹே ஸ்வீட்டி... இங்க என்ன பண்ற? தூக்கம் வரலையா!" என்றான்.

கணவனின் தோள் சாய்ந்து கொண்டவள், "ம்ச் வரல..." என்றாள்.

"என்னது? தூக்கம் வரலையா? நான் உன்னை அவ்ளோ வேலை வாங்கியும் உனக்குத் தூக்கம் வரலையா?" எனக் கேலியாகக் கேட்டவனை,

"ஹய்யோ... ச்சீ போ மகி!" என அவன் நெஞ்சிலே முகம் புதைத்துக் கொண்டவளை, மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டான்.

பின் விளையாட்டைக் கைவிட்டு, "என்னம்மா... நான் ஏதாவது உன்னைக் கஷ்டப்படுத்திட்டேனா...?" எனக் கவலையாகக் கேட்க, அவனை விட்டு விலகி எழுந்தமர்ந்தவளை அடிபட்ட பார்வை பார்த்த மகிழனின் முகத்தைக் கைகளால் ஏந்தி, "ஹே, சின்னப் பையா... அப்படி எல்லாம் எதுவுமே இல்லை... உனக்குத் தெரியுமா! இன்னிக்கு நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன்னு... இந்தச் சந்தோஷத்துக்கு முழுக்க முழுக்க... நீ மட்டும்தான் காரணம்..." என உண்மையாகச் சொல்லி, அவன் நெற்றியில் இதழ் பதிக்க...

"அப்புறம் நீ ஏன் ஒரு மாதிரி இருக்க?" எனக் குழந்தைத்தனமாகக் கேட்டவனைப் பார்க்கும்போது முல்லைக்கு ஒரு வாரத்திற்கு முன் கம்பெனியில் அமர்ந்து கொண்டு கட் அண்ட் ரைட்டாகப் பேசிய மகிழன் எனும் வியாபாரியாகத் தெரியவில்லை.

தன் வீட்டுப் பசுமாட்டிடம், பசிக்காகத் தாயைத் தேடி ஓடும் சின்னக் கன்றாகவே தெரிந்தான்.

அவனின் கையைத் தன்னுள் அடக்கி, "உனக்கு வெறும் அடியாள் எல்லாம் வைச்சு ரவுடித்தனம் தான் பண்ணத் தெரியும்னு நினைச்சேன்... உனக்குப் பொண்டாட்டி மனசை எல்லாம் கூடப் படிக்கத் தெரியுமான்னுதான் ஆச்சரியத்தில் உட்கார்ந்துட்டு இருந்தேன்..." என உண்மையைக் குறும்பாகச் சொல்ல...

"ஹ்ம்ம்... மனசுக்குப் பிடிச்சவளோட மனசில் என்ன இருக்குன்னு இவ்வளோ லேட்டாப் புரிஞ்சுக்கிட்டியேடா மடையான்னு என்னைக் கேலி பண்ற மாதிரியே



இருக்கு..." எனச் சிரிப்புடன் சொல்ல, அவளும் அவனுடன் சிரிப்பில் இணைந்து கொண்டாள்.

"ஆனால் கொடி... நான் ஒரு உண்மையை உன்கிட்ட சொல்லணும்டா... நிஜமாக உன்னோட ஆசையில இருக்கிற சந்தோஷம் இன்னிக்குத்தான் எனக்குப் புரிஞ்சுது..."

"இன்னிக்கு அத்தை முகத்திலேயும், என் அம்மா முகத்திலேயும் தெரிந்த சந்தோஷத்தைப் பார்த்தியா! அம்மாவைக் கூட விடு. அத்தை... தன்னோட ஒரே பொண்ணு கல்யாணம்னு எவ்வளவு பரபரப்பா இருந்தாங்க. தம்பித் தாத்தா... இந்த வயசுலேயும் பேத்திக்குக் கல்யாணம்னு வயசை மறந்து ஓடி ஓடி வேலை செஞ்சதைப் பார்க்கும் போது எனக்கு உண்மையாவே அவங்களோட சந்தோஷத்தை உணர முடிஞ்சுது. அன்னிக்கு நான் ஒரு நிமிஷம் யோசிச்சுச் செஞ்சிருந்தா இத்தனை பேர் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டாம்..." என வருத்தத்துடன் சொல்லியவன், வாயைத் தன் விரல்களால் மூடியவள்...

"ம்ம்... நிஜம்தான். ஆனால் இதனாலே அன்னிக்கு நீ செஞ்சதைத் தப்புன்னு மட்டும் சொல்லாதே மகி... அத்தனை பேர் சுற்றி நின்னு நம்மளைத் தூற்றும்போது நீ அப்படிச் செய்யாமல் இருந்திருந்தாலும், அதுக்கு இந்த உலகம் நம்மைத் தப்பாத்தான் பேசும். பேசுறவங்க பேசிட்டுத்தான் இருப்பாங்க. அது எல்லாம் நிரந்தரமில்லை. ஆனால், நம்ம பெத்தவங்களுக்குன்னு ஒரு மரியாதை இருக்கு. அதைத்தான் நான் கொடுக்கணும்னு

நினைச்சேன். அந்த ஆசையை நீ இன்னிக்கு நிறை வேச்சி வைச்சிட்ட... எனக்கு அதுதான் ரொம்ப ரொம்பச் சந்தோஷம்..." என அவளின் தரப்பைச் சொல்ல...

"ஹ்ம்ம்... எப்படியோ, இன்னிக்கி எல்லோரோட முகத்திலயும் சந்தோஷத்தைப் பார்த்தாச்சு. உன்னையும் என் சொந்தமாக்கியாச்சு..." என ஆசையாகச் சொன்னவன் வாய் அடுத்த வேலையைப் பார்க்கத் துவங்க... அதற்குள் மூளை அடுத்த கேள்வியைக் கேட்க வைத்தது.

"ஹே... கேன்டி... உன்கிட்ட நான் ஒண்ணு கேட்கணும். அப்படியே ஒரு நாலு மாசத்துக்குப் பின்னாடி போ. நீ அபூவை அடிச்ச ஒரு வாரத்திற்குப் பின்னே... அன்னிக்கு ஏன்டி நீ அப்படி அழுதே! நீ அழுததைப் பார்த்து என் நெஞ்சே வெடிச்சிடும் போல இருந்துச்சு. அதை விட உன்னோட கண்ணுல தெரிஞ்சுதே வலி... ஹப்பா... என்னால அதைப் பார்க்கவே முடியல!" என அன்று நடந்ததை நினைத்ததால் இப்போதும் மகிழனின் உடல் ஒரு நிமிடம் துடித்து அடங்கியது.

முல்லைக்கும் அந்த நாளில் அவள் பட்ட துன்பம் மீண்டும் நினைவுக்கு வர, ஒரு நொடி தாமதித்துப் பின்... "நீ எனக்குக் கிடைக்க மாட்டியோன்னு பயத்திலதான்..." என மெல்லிய குரலில் மொழிய...

"அடிப் பாவி. அப்போவே என்னை நீ நேசிக்க ஆரம்பிச்சுட்டியா! அப்படி உயிர் போற மாதிரி அழுததற்குப் பதிலாக் காரணத்தைச் சொல்லியிருந்தா... அப்போவே உன்னைப் பொண்ணு கேட்டு வந்திருப்பேன்..." எனக் கவலையாகச் சொல்ல,



"ஹான்... எப்படிச் சொல்ல முடியும்? நீ எவ்வளவு பெரிய பணக்காரன்! உன் மனசுல என்ன இருக்குன்னே தெரியாமல் நான் சொல்லி, அதுக்கு அப்புறம் நீ என்னைத் தப்பா நினைச்சுட்டா... அதுவும் அன்னிக்கி அந்த அபூவை வேற கூட்டிட்டு வந்தே... உங்க ரெண்டு பேரையும் ஜோடியாப் பார்த்து, நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்னு எனக்குத்தான் தெரியும்..." என்றவள்,

"இவ்வளவு பேசுறியே... கண்ணாலேயே என்னை விழுங்குற மாதிரி மொறச்சு மொறச்சுப் பார்த்தியே... நீ வாயைத் திறந்து சொல்ல வேண்டியதுதானே! அதுக்கு முன்னாடியே கிஸ் அடிச்சுப் பெரிய வேலையெல்லாம் பண்ணி... எல்லாமே உன்னாலதான். போடா..." என ஆதங்கமாகச் சொன்னவள்...

"நான் என் காதலை உணர்ந்த அந்தத் தருணத்தில் ராத்திரி முழுசும் எனக்கு ஒரே கனவுதான். அதுவும் நீ தாடி வெச்ச மாயக்கண்ணனா வருவே தெரியுமா! உன்னைத் தாடியில்லாமல் பார்க்கணும்னு நான் எவ்வளவு ஆசைப் பட்டேன் தெரியுமா! அதே மாதிரி இன்னிக்கு உன்னை மணவறையில் பார்த்ததும், அப்படியே என் மனசு துள்ளிக் குதிச்சு உன்கிட்ட ஓடி வந்துடுச்சு. சைலன்ட்டா எவ்வளவு வேலை செஞ்சிருக்க நீ... திருடா!" என அவனைப் பிடித்துத் தள்ள...

அவன் தடுமாறிப் பிடிப்புக்காக... அவளை இசகு பிசகாகப் பிடித்துக் கொள்ள... "சீச்சீ... கையை எடுடா. கூச்சமா இருக்கு..." என வெட்கத்துடன் சொல்லியவளின்

முகச் சிவப்பை ரசித்தவாறு, "நீதானேடி என்னைத் தள்ளி விட்ட... இங்கே இடம் சரியில்லை. நீ பெட்க்கு வா..." எனக் கையைப் பிடித்திழுக்க,

"ஹய்யோ... நான் வரமாட்டேன் போ. நீ அங்க போனா என்ன வேலையெல்லாம் செய்வேனு எனக்குத் தெரியும்..." என, அவளின் மறுப்பை உதறித் தள்ளி, அவளைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்று, தன்னுள் அடக்கிக் கொண்டான்.

"போனாப் போகுதுன்னு உன்னை விடறேன். இப்படிச் சும்மா சும்மா என்னைத் தூக்கிட்டு வந்தே... அப்புறம் பார்த்துக்கோ. எனக்குக் கராத்தே எல்லாம் தெரியும். சொல்லிட்டேன்..." என எச்சரிக்கை விடுக்க,

அதை ரசித்த மகிழன், "ஹா...ஹா... என்னடி செய்வ... என்ன செய்வ?" என அவளின் செல்லம் கொஞ்சிய இதழைக் கொஞ்சிவிட்டு, "உனக்கு எப்படி கராத்தே, கார் டிரைவிங் எல்லாம் தெரியும்...?" என அவனின் நீண்ட நாள் சந்தேகத்தைக் கேட்க,

"இப்போ நான் இப்படி இருக்க முழுக்க முழுக்க என் அப்புதான் காரணம் மகி... கிராமத்தில் பிறந்து வளர்ந்த என் அம்மாவின் பிற்போக்குச் சிந்தனையுடன் சண்டை போட்டு, என்னைச் சின்ன வயசில இருந்தே தைரிய மாகவும், நேர்மையாகவும் வளர்த்தார். சின்ன வயசில இருந்து ஒரு பொண்ணுக்கு என்ன எல்லாம் தெரிய ணுமோ, அதை எல்லாமே எனக்குச் சொல்லிக் கொடுத் தார். எனக்கு அவர்தான் காட்ஃபாதர்.



"உண்மையா சொல்லணும்னா... அவர் மட்டு மில்லைன்னா... இந்த ஊரில் இருக்கிற மத்த பொண் ணுங்க மாதிரிதான் நானும் பதினெட்டு வயசில கல்யாணம் பண்ணிக்கிட்டு இந்த நேரத்தில் கையில் ஒண்ணு, இடுப்பில் ஒண்ணுன்னு வச்சுக்கிட்டு இருந்திருப்பேன். இப்போ இருக்கிற இந்தத் தன்னம்பிக்கையும், தைரியமும் என்னோட அப்புவோட வளர்ப்புதான்..." எனப் பெருமை யாகச் சொன்னவள்,

அதன் பின், "ஆனா... அவரே அன்னிக்கு மத்தவங்களோட சேர்ந்து என்னைப் புறக்கணிச்சது தான் மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது..." எனக் கவலையாகச் சொல்ல,

"அடியே, என் முட்டாள் பொண்டாட்டி... உன்னோட அப்புவைப் பற்றி இவ்வளவு பெருமையாச் சொல்லிட்டு, இன்னமும் அவரைப் புரிஞ்சுக்காம இருந்திருக்க, பார்த் தியா! இன்னிக்கு நடந்ததே... அது எல்லாமே உன்னோட தாத்தாவோட முயற்சி. அவர் மட்டுமில்லைன்னா... இது எதுவுமே நடந்திருக்காது...

"இன்னமும் உனக்கு விளக்கிச் சொல்லணும்னா, அன்னிக்கு நீ அம்மா உன்னை ஏத்துக்கிட்டதுக்கே நீ அவ்வளவு சந்தோஷப்பட்டே இல்ல... பல நாட்களாப் பேசாத என் அம்மா அன்னிக்கு என்னை 'ராசு...'ன்னு கூப்பிட்டதும், எனக்கு எப்படி இருந்தது தெரியுமா! அன்னிக்குத்தான் எனக்குள்ள முழு மாற்றம் வந்தது. அப்போதான் உன்னோட நியாயமான ஆசையும் புரிந்தது.

அதைப் பார்த்துதான் என்னால எழுந்த பிரச்சனைக்கு நானே முடிவு கட்டணும்னு தான் என்ன நடந்தாலும் பரவாயில்லைன்னு தம்பித் தாத்தாவை வந்து பார்த்தேன்.

"ஆனால் கொடி... பெரியவங்க எவ்வளவுக்கு எவ்வளவு கோபப்படறாங்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு பாசமானவங்க. சின்னவங்க செஞ்ச தப்பை நொடியில் மறக்குற புரிதல் அவங்ககிட்ட இருக்கு. அந்தப் புரிதல்தான் இன்னிக்கு நம்மளோட சந்தோஷத்துக்குக் காரணம். அதே புரிதல்தான் தம்பித் தாத்தாவையும், அத்தையையும் நம்மை ஏற்றுக்கொள்ள வைச்சது...

"உன்னோட அப்புச்சிக்கு உன் மேல எந்தக் கோபமுமில்ல. திடீரென்று நடந்த அந்தச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ள அவருக்குச் சற்று நேரம் எடுத்திருக்கு. என்ன இப்படி நம்பாமல் பார்க்கிற... உனக்குச் சந்தேகம்னா... நீயே தாத்தாகிட்ட கேளு..." என்றான்.

அதன்பின் முல்லை சமாதானமடைந்தாள்.

அதன் பின் மகிழன், ஏதோ ஞாபகம் வந்தவனாக, "கொடி... நம்ம முதல் நாள் மீட்டிங் அப்போ நீ எனக்கு மீதிப் பணம் தரணுமே... அதை இன்னமும் எனக்குத் தரல..." எனக் கணக்கில் கண்ணாகக் கேட்க,

"ஹே கஞ்சூஸ்... இன்னுமா அதை ஞாபகம் வச்சுக் கேட்கிற! அந்தப் பணம் என்கிட்ட இருக்கு. ஆனா, நான் தர மாட்டேன்..." என்றாள்.

"ஏன்?"



"தர முடியாதுன்னா முடியாது. நான் கொடுக்கிற அந்த முன்னூற்றி எழுபதில தான் உங்க மில்லு ஓடப் போகுதாக்கும்... போய்யா!" எனக் கெத்தாகச் சொன்னவளை...

"பணம் தர முடியாதுன்னா அதுக்குத் தண்டனையா உன்னைக் கொடு. என்ன, இன்னொரு ரவுண்டு போகலாமா?" எனக் கிறக்கமாகக் கேட்டவனை,

"அடி பிச்சு... எனக்குத் தூக்கம் வருது. பேசாம நீயும் தூங்கு..." எனக் கண்டிப்பாகச் சொன்னவளை எளிதில் சமாளித்துத் தனக்குள் சிறை செய்தான்.

காலையில் முதலில் கண் விழித்தது மகிழன்தான். நேற்று இவன் படுத்திய பாட்டில் சோர்வான முகத்துடன் தன் நெஞ்சைத் தலையணையாக்கி உதட்டில் உறைந்த புன்னகையுடன் அழகாக உறங்கிக் கொண்டிருந்த முல்லையைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து, அவனது செல்போன் அலற... மனைவியின் தூக்கத்தைக் கலைக்காமல் எடுக்க எண்ணியவனின் எண்ணம் தோற்றுப் போக, "படுத்துக்கோடா குட்டிம்மா!" என மீண்டும் அவளை அணைத்துக் கொண்டு... அலறிய செல்போனை ஆன் செய்து, "சொல்லுங்க அத்தை..." என மெல்லிய குரலில் பேசினான்.

அந்தப் பக்கமிருந்த சின்னா, "மன்னிச்சுக்குங்க மாப்பிள்ளை! கோவிலுக்குப் போகணும். அதான்..." எனத்

நயங்கியவாறு சொல்ல, "ஹோ... அப்படியா அத்தை! முல்லை ரொம்ப டயர்டா தூங்குறாளே... நேத்து நைட் தூங்க ரொம்ப லேட்டா..." என அவன் வேறு ஏதோ சொல்ல வரவும்,

அவனிடமிருந்து செல்போனை வேகமாகப் பிடுங்கி, "அம்மா, நான் எழுந்துட்டேன். இதோ அரைமணி நேரத்துல கிளம்பி வரேன்ம்மா..." என்றவள், அதன் பின், "சரி, சரி... சரி..." என மூன்று சரிகளை இடைவெளி விட்டுச் சொன்னவள், ஒரு பெருமூச்சுடன் போனை அணைத்து, "ஹே லூசு... உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா! அம்மா என்ன நினைச்சிருப்பாங்களோ... லூசு, லூசு..." எனச் சரமாரியாக அவனை அடிக்கத் துவங்கினாள்.

"இப்போ எதுக்குடி இந்த அடி அடிக்கிற? அவங்க தானே நமக்கு ஃபர்ஸ்ட் நைட்க்கு ஏற்பாடு பண்ணி னாங்க... அவங்களுக்குத் தெரியாதா! நீதான்டி லூசு..." என...

'லூசு...' என்ற அவள் உதட்டைக் கடித்து வைத் தான்.

அவனிடமிருந்து சிரமப்பட்டு விலகியவள், "என்னை விடு... நான் குளிக்கப் போறேன். ஆமா, எனக்கு டிரஸ் எங்கே? நான் எதைப் போட...?" எனப் போர்வையைச் சுற்றிக் கொண்டு எழுந்த மனைவியை,

"இன்னிக்குமா பாத்ரூம்ல குளிக்கப் போற... வா. நான் உனக்கு ஸ்விம்மிங் பூல் காட்றேன். இந்தா இதைக் கட்டிக்கோ..." என அவனின் பட்டு வேட்டியைக் கொடுக்க, அதை உடலில் சுற்றிக் கொண்டு அவன் பின்னால் நடந்தவள்... அவன் வீட்டிற்குப் பின் இருந்த ஓடையைக் காட்டவும்,



"இங்கயா... வேண்டாம் மகி! வெட்டவெளியா இருக்கு. யாராவது வந்துடப் போறாங்க..." எனத் தயக்க மாகச் சொல்ல,

"ஹே... இதுக்கு முன்னாடி நீ இங்க குளிச்ச தில்லையா! சின்ன வயசுல இங்கதான் இருப்பேனு தம்பித் தாத்தா சொன்னாங்க. ப்ளஸ் இது ஃபுல்லா நம்ம இடம். ப்ரைவேட் ப்ளேஸ். சுற்றிலும் வேலி போட்டிருக் கேன். யாரும் வரமாட்டாங்க. நீ தைரியமாக் குளிக்க லாம்..." எனவும், அடுத்த நொடி முல்லை தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தாள்.

வேம்பம்மனோடு இந்த ஓடையும் அவளின் நெருங்கிய தோழியல்லவா...! சின்ன வயதில் கண்ட சந்தோஷத்திற்கு வளர வளரத் தடை வர, அவளின் ஆசை எல்லாம் வெறும் காலை நனைப்பதோடு நின்று போனது.

இன்று கணவன் தனக்காக ஏற்படுத்திய இந்த அரண்மனை... அதனுடன் கூடிய நீச்சல் குளத்தில், பட்டத்து ராணியாக நீராடினாள்.

வெகுநேரம் வரை நீந்தியவள், கணவன் இன்னமும் கரையிலே நிற்கவும், "நீயும் வா மகி! சூப்பரா இருக்கு.

ம்ம்... வா வா. சீக்கிரம்..." என உற்சாகத்துடன் சொல்லி, நீரை அவன் மீது விசிறியடிக்க...

"ம்ஹூம்... நான் வரல..." என மறுத்தவனை,

"ஹே ரௌடி... உனக்கு நீச்சல் தெரியாதா?" எனக் கேலிக் குரலில் கேட்டவளை...

"ஹே... உனக்கெப்படித் தெரியும்!" என ஆச்சரியமாகக் கேட்டவனை, "ஆமா... இது தங்கமலை ரகசியம். பொண்டாட்டி இவ்வளவு அழகா நீந்திட்டு இருக்கேன்... அதைக் கரையில் உட்கார்ந்து ரசிக்கிறேன்னா, காரணம் அதுவாதானே இருக்கணும்..." எனக் கேலியாகச் சொன்னவள்...

"சரி, சரி. வா. நான் உனக்கு நீச்சல் சொல்லித் தர்றேன்..." என, அவன் மறுக்க மறுக்க... அவனை வம்படியாகக் கையைப் பிடித்திழுத்து அவனுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க, அங்கே இருவரின் சந்தோஷக் குரலுக்கு இணையாகக் குயில்கள் தங்கள் மென்குரலில் இசை எழுப்பின.

ஒரு வழியாக, இருவரும் நீராடி விட்டுக் கிளம்பிச் சின்னாவின் வீட்டிற்கு வந்ததும், அங்கே ஏற்கெனவே இருந்த சொந்தங்களின் கூட்டம் மகிழனைக் கேலிப் பொருளாக்கி அவனைத் திணறடித்தனர்.

மகளின் முகத்தில் தெரிந்த பூரிப்பு, பெற்ற அன்னையை நிம்மதி கொள்ளச் செய்ய... அதன்பின் உறவினர்களின் படையெடுப்போடு மணமக்கள் கோவில்



சென்று வந்ததும், மாப்பிள்ளை விருந்தென மகிழனைத் திணற வைத்தனர்.

மாப்பிள்ளைக் கவனிப்பில் மகிழன் படும் பாட்டை ஓரக் கண்ணால் ரசித்து, அவனைக் கேலி செய்த முல்லையை ஏதும் செய்ய முடியாமல் அமர்ந்திருந்தான் மகிழன்.

மாலையானதும், மகிழனின் வீட்டினர் வந்ததும், அவர்களுக்கென்று தடபுடலாக விருந்துக்கு ஏற்பாடு செய்ய, அவர்களும், சின்னா, தம்பியின் கவனிப்பில் திணறிப் போயினர்.

அனைவரும் வயிறு நிறைய உண்டுவிட்டு, வீட்டுத் திண்ணையில் இளைப்பாறி அமர்ந்து கொண்டிருக்க, பெண்கள் அனைவரும் ஒரு கூட்டமாகவும், ஆண்கள் ஒரு கூட்டமாகவும் அமர்ந்து கதையடித்துக் கொண்டிருந்தனர்.

பேச்சுவாக்கில் மகிழன், இந்தத் தோட்டத்தை உருவாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றித் தம்பி பேச ஆரம்பிக்கவும்தான் அங்கே பிரச்சனை ஆரம்பித்தது.

ஆண்களுக்கு வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்து வந்த முல்லையின் காதுகளில் தம்பி சொன்னது கேட்டது.

"இந்தக் காலத்துல மகிழன் தம்பி மாதிரி விவசாயத்துல அக்கறையான பிள்ளையைப் பார்க்கறது ரொம்பக் கஷ்டங்க சம்பந்தி... அந்த வகையில நான் மகிழ் தம்பியை ரொம்பவே பாராட்டறேன்..." எனவும்,

"என்ன சம்பந்தி சொல்றீங்க... எனக்கெல்லாம் இது தேவையில்லாத வேலைன்னுதான் தோணுது. உங்களுக்கே தெரியுமில்ல... நம்ம மில்லுல இருக்கிற ஆட்களுக்கு ஒரு மாசச் சம்பளம் கொடுக்கிற அளவுக்குக் கூட இந்த விவசாயத்துல லாபம் வராது. ஆனா, இந்தப் பய இந்த இடத்தை வாங்கிப் பல இலட்சங்களைக் கொட்டி எதுக்கு இந்தச் செலவெல்லாம்... சொல்லுங்க! நான் இவனை ஃபேக்டரி கட்ட இடம் பார்த்துட்டு வாடான்னு சொன்னா... இவன் என்னமோ விவசாயம் பண்ண இடத்தைப் பிடிச்சிட்டு வந்திருக்கான்... " என வெங்கட்ராமன் அங்கலாய்ப்பாகச் சொல்ல,

கேட்டுக் கொண்டிருந்த தம்பிக்கும், மகிழனுக்குமே ஒரு மாதிரி இருந்ததென்றால் முல்லையின் நிலை...

வந்ததே முல்லைக்குக் கோபம்!

கையில் வைத்திருந்த தாம்பாளத்தைப் பட்டெனக் கீழே வைத்தவள், "எது மாமா வெட்டி வேலை... இல்லை, தெரியாமத்தான் கேட்கிறேன். எது வெட்டிவேலை? இந்த விவசாயமா! நீங்க நடத்தறீங்களே, அந்த மில்லு... அதுக்கு மட்டும் பருத்தி கிடைக்கலைன்னா உங்க மில்லைப் பத்தே நாள்ல இழுத்து மூடிட வேண்டியதுதான். அவ்வளவு ஏன்... நாம தினமும் வாய்க்கு ருசியாச் சாப்பிட றோமே... அதுவும் இந்த மண்ணுல விளைஞ்சதுதான்...

"விவசாய நாடான நம்ம இந்தியாவைப் பிரிட்டிஷ்காரன் சிறைப் பிடிச்சதே எங்கே நாம விவ சாயத்துல முன்னேறி அவனுங்களைத் தோக்கடிச்சிரு வோம்னு பயத்தாலதான்... அப்படி இருந்த நம்ம நாடு,



இப்போ கப்பல்ல அரிசியை விளைவிக்கிறதைப் பற்றியும், பிளாஸ்டிக்கில் அரிசியைத் தயாரிக்கிறதைப் பற்றியும் ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கு...

"வீட்டுக்கு ஒரு மரம் வளருங்கன்னு இங்கே ஒருத்தன் உயிரைப் பிடிச்சுக் கோஷம் போடுவான். அந்தப் பக்கம் இன்னொருத்தன் ஒரு மணி நேரத்துல நூறு மரத்தை வெட்டிக் காசு பண்ணுவான்... இதுதான் இப்போதைக்கு நம் நாட்டின் நிலவரம்...

"முதல்ல எல்லாரும் இந்த எண்ணத்தை மாற்றுங்க. நீங்க கம்ப்யூட்டர் முன்னே உட்கார்ந்து பல லட்சம் சம்பாதிச்சாலும் கடைசியில பசிக்குச் சாப்பாட்டைத்தான் சாப்பிடணும். விவசாயம் என்பது வறுமையின் மொழியல்ல. அதுதான் இந்த நாட்டின் பெருமை. அதை முதல்ல உணர்ந்து நடந்துக்கங்க... இப்போ இருக்கிற இந்த நிலத்தைக் காப்பாத்தினாத்தான் நாளைக்கு அப்புறம் நமக்குப் பின் வர்ற சந்ததிகள் வாழ முடியும்...

"எத்தனை கிராமங்கள் அழிஞ்சு வருதுன்னு தெரியுமா! ஒரு நாளைக்கு எத்தனை விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட்டா மாறிகிட்டு வருதுன்னு தெரியுமா! இல்லை, இதே நாட்டில எத்தனை விவசாயிகள் வாழ வழியில்லாமல் இறந்திருக்காங்கன்னாவது தெரியுமா? ஒவ்வொரு விவசாயியின் உயிரும் தங்கம், வைரத்தை விட உயர்ந்தது.

"அந்த ஒவ்வொரு உயிரின் மதிப்பும், நூறு மக்களின் சாப்பாட்டுக்கு வழி செஞ்சிருக்கும். ஆனால்

அதை எல்லாம் நாம் ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்திருப்போமா! போறது நம்ம உயிர் இல்லையே... நமக்கு நமது இப்போதைய தேவைதானே முக்கியம்... உலகத்தில பிறந்த எல்லா உயிரினமும், இந்த உலகத்தில உருவானதுக்கு ஏதாவதொரு தடயத்தை விட்டுட்டுப் போகுது. ஆனால் இந்த மனுஷ ஜென்மம் மட்டும்தான், நாமும் வாழாமல் மற்றவர்களையும் வாழ விடாமல்... இயற்கையை அழிச்சு... கடவுள் கொடுத்த பரிசைச் சுயநலமா உபயோகப்படுத்துறோம்..." என மூச்சு வாங்கப் பொரிந்து தள்ளிய முல்லையின் உரையை அங்கே அனைவரும் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டு அமர்ந் திருந்தனர்.

அவளின் பேச்சில் இருந்த உண்மை அங்கிருந்த அனைவரின் மூளையைத் தட்டி எழுப்ப... அங்கே ஊசி விழுந்தால் கூடச் சத்தம் எழுப்பும் அளவுக்கு நிசப்தமாக இருந்தது.

இந்த நாட்டில் நடக்கும் அவலங்களைக் கண்டு, ஒரு தனி மனுஷியாகத் தன்னால் ஏதும் செய்ய முடியாத இயலாமையை, இத்தனை நாள் அவளுள் இருந்த நெருப்பை இன்று வாய்ப்புக் கிடைத்ததும் முல்லை கொட்டி விட்டாள்.

பேசிய பின்தான், தான் மிகவும் அதிகப்படியாகப் பேசியது உறைத்தது.

'ஹய்யோ... எத்தனை பெரிய தவறு செய்து விட்டோம்...' என வருந்தி, "மாமா..." என அவள் ஆரம்



பிக்க, அவளை ஒரு கை நீட்டித் தடுத்தார், வெங்கட ராமன். அடுத்த நொடி அவரிடமிருந்து பலத்த கைதட்டல் எழுந்தது.

அவரைத் தொடர்ந்து, மது, இளா, பிரபு, சின்னா உள்பட அனைவரும் கரகோஷங்களை எழுப்ப... முல்லைக்கு என்னவோ போலானது.

அனைவரின் கைதட்டலும் ஓய்ந்த பிறகு, மருமகளை நோக்கி வந்த வெங்கடராமன், "நான் ரொம்பத் தவறாப் பேசிட்டேன். என்னை மன்னிச்சிடும்மா..." எனக் கை யெடுக்க,

பதறிய முல்லை, "ஹய்யோ... மாமா, ப்ளீஸ்! நான் ஏதோ ஆதங்கத்துல... நான்தான் மாமா மன்னிப்புக் கேட்கணும்... பெரியவங்க..." எனத் தயங்கியவளை,

"ச்சே... ச்சே... நீ பேசிய அத்தனை வார்த்தைகளும் நூற்றுக்கு இருநூறு சதவீதம் உண்மை. சில பேருக்கு அடிச்சுச் சொன்னாத்தான் மூளையில உறைக்கும். எனக்கும் அப்படித்தான். நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும், நாம இந்த நாட்டுக்காகங்கறதைவிட, நம்ம வாழ்ந்த இந்த மண்ணுக்காக என்ன செஞ்சோம்னு கேள்விதான் எழுது. இனிமேலாவது இந்த வாழ்க்கையை உபயோகமா வாழணும்னு தோணுதுடா... எனக்கு இப்படி ஒரு மருமக கிடைச்சது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா! உன்னைய விட, உன்னை இந்த மாதிரிச் சமூக சிந்தனையோட வளர்த்தவங்களுக்குத்தான் அந்தப் பெருமை சேரும்..." என உளமாரச் சொன்னதும்,

தங்களின் செல்லச் சீமாட்டியைத் தம்பியும், சின்னாவும் பெருமையாகப் பார்த்தனர்.

அதன்பின் அனைவரிடமும் விடைபெற்று மகிழன் வீட்டினர் கிளம்ப, முல்லையும் அவர்களுடன் கிளம்பினாள்.

போன முறை இந்த ஊரை விட்டுப் போன போதும், இந்த முறை விடைபெறும் போதும் இருக்கும் மனநிலையை எண்ணிக் கிளம்பியவள், பாதி வழியில் தான் கணவன் தன்னிடம் பேசாததை உணர்ந்தாள்.

'அச்சோ... மாமாகிட்ட நம்ம ரொம்பப் பேசிட்டோம்னு கோபமா இருக்கானோ... ஆமா, ஆமா. கோபம்தான்... எல்லாரும் கைதட்டும் போதும் மகி அமைதியாதானே இருந்தான்...' என மனதில் நினைத்தவள், "மகி, சாரிப்பா... நான் ஏதோ தவறாப் பேசிட்டேன். என்னோட பேசுப்பா..." எனக் கெஞ்சியவளை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காமல் காரை ஓட்டுவதில் கவனமாக இருந்தவனை, முல்லை அதன் பிறகு தொந்தரவு செய்யவில்லை.

மகிழன் வீட்டுக்கு வந்ததும், கோகிலா முறையாகப் புது மணமக்களை வரவேற்று, உள்ளே அழைத்துச் செல்ல... மகிழன் இறுக்கத்துடனே காணப்பட்டான்.

அவன் தன் மேல் கோபமாக இருப்பது புரிந்ததும், அவனை மேலும் சென்று தொந்தரவு செய்யாமல் பேசாமல் படுத்துக் கொண்டாள்.

நேற்றைய இரவுக்கும், இன்றைய இரவுக்கும் உள்ள வித்தியாசம் அவளை வதைக்க... கண்ணீருடனே கண்ணை மூடினாள்.



காலையில் யாரோ தன்னை உலுக்கி எழுப்பவும், திடுக்கிட்டு எழுந்தவள் முன்னே நின்ற மகிழன், "சீக்கிரம் கிளம்பு... உங்க ஊருக்குப் போகணும்... உன்னோட திங்ஸ் எல்லாத்தையும் பேக் பண்ணி வை..." என நேற்றைய இறுக்கத்துடன் சொல்ல, முல்லை அவன் சொன்னதைச் செய்தாள்.

அவள் மனம் மகிழன் நேற்று அவன் தந்தையை அவமதித்துப் பேசியதில் தன் மீது கோபம் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டது.

'ஆனால் இந்தச் சின்ன விஷயத்திற்கு எதற்கு இப்படிக் கோபம் கொள்ள வேண்டும்... அது மட்டுமில்லாமல் என்னுடைய பொருட்களை எல்லாம் எடுத்து வைக்கச் சொல்கிறான்... ஹோ... நேத்துக் கல்யாணம். இன்று டைவர்சா!' - சிறு இடைவெளியில் அவள் மனம் கோயம்புத்தூரிலிருந்து காஷ்மீருக்குப் பயணம் செய்தது.

ஆனால் அவளின் எண்ணவோட்டத்தைத் தடுக்கும் வகையாக மகிழன் துரிதப்படுத்த அதன் பின் மௌனமாகவே அவர்களின் பயணம் தொடர்ந்தது.

போளுவாம்பட்டி வந்ததும், மகிழன் தன் தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்லாமல் பண்ணை வீட்டுக்கு அழைத்துச் செல்லவும், குழப்பமான முல்லை மகிழனைத் தொடர்ந்தாள்.

வீட்டை வந்தடைந்ததும் பெட்டிகளை எடுத்து வீட்டு முற்றத்தில் வைத்து விட்டு முல்லையை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

அவனின் செயலில் தடுமாறி, அதன்பின் சுதாரித்த முல்லை, "ஹே, திருட்டு ராஸ்கல்... நேத்து ராத்திரியில இருந்து என்னைக் கொன்னுட்டேடா... சே, எப்படி எல்லாம் என்னைப் பயப்படுத்தின? என்னை விடு... விடுன்னு சொல்றேன் இல்ல..." எனத் திமிறிய முல்லையைத் தன் கைக்குள் அடக்கி,

"பின்ன... என்னடி பண்ணச் சொல்ற? ஹப்பா... என்னமா பொரியுற! அப்பாக்கு மட்டுமில்ல... எனக்கும் சேர்த்து நல்லாப் பாடமெடுத்துட்டடா... இத்தனை நாள் என்னடா வாழ்க்கை நீ வாழ்ந்திருக்கேனு கேட்காமல் கேட்ட பாரு... யூ ஆர் கிரேட் முல்லை... இதுதான்டி... இதுதான்... இந்தச் சுயநலமில்லாத எண்ணம்தான் என்னை உன்கிட்ட காதல் கொள்ளச் செய்தது..." என முத்தமழை பொழிய...

அவனுக்கேற்றவாறு ஈடு கொடுத்த முல்லையும் கணவனின் கவனிப்பில் சொக்கித்தான் போனாள்.

"சரி... இப்போ எதுக்கு என்னை இங்க கூட்டிட்டு வந்திருக்க...?" என்றவளுக்கு,

"இனிமேல் நாம இங்கதான் இருக்கப் போறோம்..." எனச் சாதாரணமாகச் சொன்னவனை...

"வாட்... என்ன விளையாடுறியா?"

"நோ கேன்டி... ஐ அம் வெரி சீரியஸ். இனிமேல் நம்ம வீடு இதுதான். நான் இங்கிருந்துதான் ஆபீஸ் போகப் போறேன். நீ இங்கிருந்து இந்தத் தோட்டத்தைக் கவனிக்கிறதுதான் உன்னோட வேலை..." எனப் பட்டிய லிட,



"மகி... இது ஒண்ணும் விளையாட்டுக் காரிய மில்லை. செல்போன் சிக்னல் கூட இங்க சரியாக் கிடைக்காது. இந்த மாதிரி இடம் உனக்குச் சுத்தமா சரி வராது. அவசரத்தில் முடிவெடுத்துட்டு அப்புறம் ஃபீல் பண்ணாதே..." என நிதர்சனத்தை உரைக்க...

"நான் எல்லாத்தையும் யோசிச்சுத்தான் இந்த முடிவை எடுத்திருக்கேன். எல்லார்கிட்டயும் பேசியாச்சு. நோ மோர் ஆர்கியூமெண்ட்ஸ். எனக்குப் பசிக்குது... சீக்கிரம் போய் லஞ்ச் ரெடி பண்ணு..." என அவள் முதுகில் கை வைத்து விரட்ட...

அதன்பின் இருவரின் தனிக்குடித்தனம் போளுவாம் பட்டி என்றானது.

சுயநலமில்லாத முல்லையின் காதல், மகிழனை எந்தளவுக்குப் பாதித்ததோ அதே அளவிற்கு அவளின் சமூகச் சிந்தனையும் அவனை மட்டுமல்லாது அவனின் குடும்பத்தாரின் எண்ணத்தையும் மாற்றியது.

விவசாயத்தின் மேல் அவள் வைத்திருக்கும் மதிப்பை நாம் அனைவரும் கடைப்பிடித்தால் நம் நாடு சொர்க்க பூமியாகக் காட்சியளிக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

காணி நிலம் வேண்டும் பராசக்தி!
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் நன்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே

ஓர் மாளிகை கட்டித் தர வேண்டும் – அங்கு
கேணியருகினிலே தென்னைமரக் கீற்றும் இளநீரும்

பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர் போலே நிலாவொளி
முன்பு வரவேணும் – அங்கு
கத்தும் குயிலோசை சற்றே வந்து
காதிற் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே நன்றாய்
இளந்தென்றல் வரவேணும்.

பாட்டுக் கலந்திடவே அங்கே
ஒரு பத்தினிப் பெண் வேணும் – எங்கள்
கூட்டுக் களியினிலே கவிதைகள் கொண்டு
தர வேணும் – அந்தக்
காட்டு வெளியினிலே அம்மா நின்றன்
காவலுற வேணும் – என்றன்
பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்!


உயிரால் உனை
எழுதுகிறேன்...
வெண்ணிலா சந்திரா